வெளியீடு 01-04-2004

Issued 01-04-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 7, 2003 – தொகுதி 48

Wednesday the 7th May, 2003 — Volume 48

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...ve Assembly Secretariat, Fort St. George,
Chennai - 600 009

[Price Rs. 3.00

V.31 ... 487 185075

**7-5-2003**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. அறிவிப்பு—** | |
| பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம் | 1-2 |
| **2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 2,3-4 |
| (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 4 |
| (இ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 5 |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 2-3 |
| **4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்— தொடர்ச்சி** | |
| (அ) கோரிக்கை எண் 12 — கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 5-54,59-67 72-119 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. ப. மோகன் | 6,16,17,19 33-34,36,39, 40-41, 46,74, 75,77,78,79, 81,92-93, 96-114 |
| *டாக்டர் பி. வள்ளல் பெருமான் | 16-23 |
| *திரு. வெ. ஏழுமலை | 23-30 |
| *திரு. க. பாரமலை | 30-41 |
| திரு. மே.ப. காமராஜ் | 44-54 |
| திரு. வி.ஏ. செல்லையா | 59-67 |
| திரு. கே.சி. கருணாகரன் | 72-85 |
| திரு. சோ. இராஜேந்திரன் | 85-88,91-95 |
| (ஆ) கோரிக்கை எண் 17 — கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை — கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்<br>(இ) கோரிக்கை எண் 42 — சிறு தொழில்கள் துறை | 119-235 |
| (ஈ) கோரிக்கை எண் 16 — கைத்தறி, கைத்திறன் துணிநூல் மற்றும் கதர்த் துறை — கைத்தறி மற்றும் துணிநூல் | 130-235 |
| மாண்புமிகு திரு. ஆர். வடிவேல் | 119,124,137, 161,162, 214-227 |


185075




| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம் | 130,137-138, 139,140-142 151,153,163-164,165,166, 167,178,179-180,182,184,191, 193,194,197-213 |
| *திரு. இரா. இராம் பிரபு | 138-139,143, 148-155 |
| *திரு. க. தவமணி | 155-160 |
| *திரு. டி.கே. இராஜா | 160-169 |
| *திரு. ஏஸ்.எஸ். ரமணீதரன் | 171-176 |
| செல்வி க. பாலபாரதி | 177-184 |
| *திரு. ஏ.எஸ். கண்ணன் | 185-192 |
| திரு. கே.என். இலட்சுமணன் | 192-197 |
| **5. விதி 110-ன் கீழ் அறிக்கை**— | |
| அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் குறித்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை | 54-59 |
| **6. விதி 110-ன் கீழ் அறிக்கை அளித்தபின் விதிக்கு முரணாக அதன்மீது பேச முனைதல்**— | 67-72 |
| **7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 235-237 |

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன். |
| 2. பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் | ..**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள். |
| 3. நிதி அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 4. சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல். |

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள

6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



10. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

12. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**
மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

14. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**
வணிக வரிகள்.

15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப. மோகன்:**
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** கால்நடை பராமரிப்பு.

18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப் பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

21. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.



22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு.

23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** கைத்தறி மற்றும் துணித் தொழில்.

24. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மீன்வளம்

25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | - | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | - | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | - | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | - | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | - | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Health and Education** - **The Hon. Thiru S. Semmalai:**
Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Backward Classes** - **The Hon. Thiru A. Papasundaram:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities.

8. **Minister for Labour** - **The Hon. Thiru A. Anwer Rhazza:**
Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

9. **Minister for Agriculture** - **The Hon. Thiru R. Jeevanantham:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

10. **Minister for Social Welfare** - **The Hon. Tmt. B. Valarmathi:**
Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

11. **Minister for Adi-Dravidar Welfare** - **The Hon. Thiru C. Karuppasamy:**
Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.



12. **Minister for Transport** - **The Hon. Thiru R. Viswanathan:**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

13. **Minister for Electricity and Industries** - **The Hon. Thiru Nainar Nagenthran:**
Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.

14. **Minister for Commercial Taxes** - **The Hon. Thiru Se.Ma. Velusamy:**
Commercial Taxes.

15. **Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** - **The Hon. Thiru P. Mohan:**
Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics.

16. **Minister for Local Administration** - **The Hon. Thiru M.C. Sampath:**
Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply.

17. **Minister for Animal Husbandry** - **The Hon. Thiru P.V. Damodaran:**
Animal Husbandry.

18. **Minister for Rural Industries** - **The Hon. Thiru R. Vadivel:**
Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

| | | |
|---|---|---|
| 19. Minister for Forests and Environment | – | **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control. |
| 20. Minister for Housing and Urban Development | – | **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority |
| 21. Minister for Dairy Development | – | **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development. |
| 22. Minister for Information and Publicity | – | **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control. |
| 23. Minister for Handlooms and Textiles | – | **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles. |
| 24. Minister for Fisheries | – | **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries. |
| 25. Minister for Tourism | – | **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation. |



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

*28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | | |
|---|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | - | கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | - | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - | துணைச் செயலாளர் |
| திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | - | துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |



| | | |
|---|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - | குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | - | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | - | குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - | தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - | சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - | சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - | சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - | தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - | தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - | தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆகு.சி. | - பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | - செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்ப்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. - அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஒசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்



88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆவா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. க. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி

110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்.
115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்
121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. - மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி



132. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு
133. நடராஜன், திரு. அ. - குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். - நாட்றாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. - இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி - போளூர்
140. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. - குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
147. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)



175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர். மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பு. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ - சிவகாசி

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 24, சுபானு—திருவள்ளுவர் ஆண்டு 2034**

**2003 மே 7, புதன்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது"

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசி என்னும் கொடிய நோய் அணுகுவது இல்லை.

[**குறிப்பு**: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்பு

### பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவைகள் மற்றும் மாநில நூலகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் நியமனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவைகளுக்கும், மாநில நூலகக் குழுவிற்கும் அவற்றின் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக நியமனத் தாள்கள் வரப்பெற்றுள்ளன. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை; அறிவிப்பு முடியட்டும்.

**சென்னைப் பல்கலைக்கழகம்**
**உறுப்பினர்கள்**

**ஆட்சிமன்றப் பேரவை—**

திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு
திரு. ஏ. பூவராகமூர்த்தி
திரு. சி.வி. சண்முகம்
திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்
திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி
திரு. ஜெ. அன்பழகன்

அறிவிப்பு

[பேரவைத் தலைவர்] [2003 மே 7

**மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்**
**உறுப்பினர்கள்**

**ஆட்சிமன்றப் பேரவை—**

திரு. ஆர்.டி. கணேசன்

திரு. லா. சந்தானம்

திரு. ஆ. ராஜகோபால்

திரு. டி.பி.எம். மைதீன்கான்

**பாரதிதாசன் பல்கலைக்கழகம்**
**உறுப்பினர்கள்**

**ஆட்சிமன்றப் பேரவை—**

திரு. ப. இராஜரெத்தினம்

**மாநில நூலகக் குழு—**

**உறுப்பினர்**

திரு. செ.கு. தமிழரசன்

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள நியமனத் தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், மேற்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள், அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லிவிடுகிறேன். அதாவது, சிறப்புக் கவன ஈர்ப்போ, ஒத்திவைப்புத் தீர்மானமோ, நாட்கள் சுருக்கமாக இருப்பதால் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமை இல்லை. நான் அங்கீகரித்தவற்றிற்கு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அரசுத் தரப்பிலே இருந்து பதில் அனுப்பி வைக்கப்படும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து அமைச்சர் பின்னர் சொல்வார். (குறுக்கீடுகள்) அமைச்சர் சொல்வார்.

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (அ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (இ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ரூ. 8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.9,19,12,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 572, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5377, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6084, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 748, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4509, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5098, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், இதையெல்லாம் சுருக்கமாகச் சொல்கிறார். பேச்சை சீக்கிரம் முடிக்கமாட்டேன் என்கிறாரே! (சிரிப்பு)

வெட்டுத் தீர்மானம் எண் 5522, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5617, திரு. கி. பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5909, திருமதி காசாம்பு பூமாலை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7033, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7147, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8011, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8389, டாக்டர் ஆர். கோவிந்தசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8526, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8755, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4264, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6054, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4964, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6723, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7086, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7481, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9057, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4682, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி தொகுதியில் தட்டான்வயல், காரணிக்காடு ஆகிய கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6153, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் உள்ள சக்கரமல்லூர், தொர்திவாடா, கொண்டாபுரம், தாசிரெட்டிசண்டிகை, அடிக்கல்பட்டு, செஞ்சிமதுராகண்டிகை ஆகிய கிராமங்களில் பகுதி நேர நியாய விலைக் கடைகள் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6336, திரு. கே.வி. முரளிதரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4340, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்ட மொத்த கூட்டுறவு நுகர்வோர் பண்டகசாலை சத்துவாச்சாரியில் உள்ள சுயசேவைப் பிரிவை மூடி வைத்துள்ளதை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 425, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கூட்டுறவுத் துறையின் வளர்ச்சியை முன்னிட்டு முறையாக, கூட்டுறவுத் தேர்தல் நடத்தி நிர்வாகிகளை தேர்வு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4986, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களைப் புனரமைக்க, விவசாய மறுநிதி கழகத்தின் மூலம் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7943, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'செங்கற்பட்டு தொகுதியில் மகளிருக்கான சிறு வணிகக் கடன் அதிகமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7641, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேளாண்மை விவசாய சங்கங்களின் மூலம் நுகர்பொருள் விநியோகத்தைச் சிறப்பாக செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 468, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டத்தில் குடும்ப அட்டைக்கு கூடுதலாக வழங்கப்படும் 4 கிலோ அரிசியை 10 கிலோவாக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6971, திருமதி எஸ். மகேஸ்வரி.

***திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நியாயவிலைக் கடைகளில் 10 கிலோ அரிசி மட்டும் ரூ.3.60-க்கும், 10 கிலோவிற்கு மேல் ரூ. 6/- என அதிக விலைக்கு விநியோகிக்கப்படுவதை மாற்றி மொத்த அரிசியும் ரூ3.60-க்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7623, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சி, மேச்சேரி பேரூராட்சி, மல்லிகுந்தம் ஊராட்சி, தொளசம்பட்டி ஊராட்சி, முத்துநாயக்கன்பட்டி, துருக்கல்வாடி, பாப்பம்பாடி, ஆரூர்பட்டி, மானத்தாள் ஆகிய ஊராட்சிப் பகுதிகளுக்கு மண்ணெண்ணெய் பங்குகள் மூலம் விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5331, செல்வி க. பாலபாரதி இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6870, திரு. ஆ. ராஜகோபால்.

***திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி தொகுதியில் குடும்ப அட்டைகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4554, திரு. கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5991, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

***திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உணவுப் பொருள்கள் வாங்க நியாயவிலைக் கடைகளுக்குச் செல்ல சில இடங்களில் மூன்று, நான்கு கிலோ மீட்டர் தொலைவு நடந்து சென்று வாங்க வேண்டியுள்ளதால், அப்பகுதியில் பகுதிநேர கடைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.9,19,12,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பெற்று, மாமன்ற உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலுள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே 7 உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இன்று பிற்பகலிலேயே பதில் சொல்லி முடிக்க வேண்டியிருக்கிறது. மதியம் இரண்டு அமைச்சர்களுடைய மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. ஆகவே, பேசுகின்ற உறுப்பினர்கள் 7 மணித்துளிகள் பேசுமாறு, அனைத்து உறுப்பினர்களையும், அன்போடு, பணிவோடு, கனிவோடு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் பி. வள்ளல் பெருமான்.

***டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையிலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறையானது, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கிய பங்காற்றி வருகிறது. ஏழையெளிய மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு ஒரு முக்கிய கருவியாக கூட்டுறவுத் துறை விளங்கிக் கொண்டிருக்கிறது.

@ 239 முதல் 329 வரையிலான பக்கங்களில் இணைப்பு—I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



கிராம வளர்ச்சிக்கு—கிராமப் பொருளாதார வளர்ச்சிக்குத் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. தமிழகத்திலே இருக்கின்ற 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே, கிட்டத்தட்ட 1,152 தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் நட்டத்தில் இயங்குவதாகத் தெரிய வருகிறது. 1,157 கோடி ரூபாய் அளவிற்கு நட்டம் இருப்பதாகவும், அதைச் சரிசெய்ய வேண்டும் என்றால், 1,500 கோடி ரூபாய் தேவைப்படுவதாகவும் தெரிய வருகிறது. எனவே, இவ்வாறு நட்டத்தில் இயங்கக்கூடிய 1,152 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் கலைக்கப் போவதாக தமிழக அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் நட்டத்தில் இயங்குவதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போல...(குறுக்கீடு)

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சங்கங்கள் எல்லாம் கலைக்கப்பட இருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். மேலும், அவர்கள் அந்த நட்டத்திற்குக் காரணங்கள் என்ன என்பதைப்பற்றி இங்கே சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது நாடறிந்த உண்மை. கடந்தகால ஆட்சியில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் கட்டிலிலே இருந்தபோது, அதிகமான பணியாளர்களை நியமித்து, பல்வேறு முறைகேடுகளைச் செய்த காரணத்தால், கூட்டுறவுத் துறை சீரழிந்தது என்பதை நான் இந்த அவைக்குப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 27 ஆண்டுகளில் 4 ஆண்டுகள் போக மீதி 23 ஆண்டுகளாக அரசு அதிகாரிகள்தான் அந்தக் கூட்டுறவு வங்கிகளின் நிர்வாகத்தை நடத்தி வந்தார்கள். ஆகவே, அந்த ஸ்பெஷல் ஆபிஸர்களின் திறமை இல்லாத நிர்வாகத்தை ஒரு காரணமாகக் கருதுகிறேன். அதைப்போல, அடிக்கடி அரசு அறிவிக்கும் விவசாயக் கடன் மற்றும் வட்டி தள்ளுபடியின் காரணமாகவும், நிர்வாகிகள் சுரண்டல் காரணமாகவும், வங்கிப் பணம் வசூலித்ததை கடன் மற்றும் வட்டிகளை முறையாக, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலே செலுத்தாமல் அதைப் பல்வேறு வழிகளிலே தவறாகச்

செலவு செய்ததன் காரணமாகவும், இதுபோன்ற நிர்வாகச் சீர்கேடுகளின் காரணமாகவும் நட்டம் ஏற்பட்டுள்ளது. நட்டம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களாக இவற்றை நான் கருதுகிறேன். இதையெல்லாம் போக்குவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும்.

மக்கள் எவ்வளவு சிரமப்பட்டு இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்கின்றார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அவற்றைக் கட்டிக் காக்க வேண்டுமேயொழிய, கலைப்பதற்கு முயற்சி எடுக்கக்கூடாது என்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் வங்கிகளில் ஏற்பட்டுள்ள நட்டத்தைச் சரி செய்திட ஒரு சில கருத்துகளை இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே வைப்பு நிதியைச் சேகரிப்பதற்கு கூட்டுறவுப் பதிவாளர் ரூ.25 இலட்சம் வங்கிக் கணக்கில் சொந்தமாக இருந்தால்தான், வைப்பு நிதியைச் சேகரிக்க முடியும் என்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். இந்த Share Capital ஆனது 10 சதவீதம் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 10 சதவீதம் Share Capital அதாவது 25 இலட்சம் ரூபாய் இருக்க வேண்டுமென்றால், இரண்டரை கோடி ரூபாய் அளவுக்குக் கடன் கொடுத்திருக்க வேண்டும், ஒவ்வொரு தொடக்கக் கூட்டுறவு வங்கியும்; இரண்டரை கோடி ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்க வேண்டுமென்றால், அந்த வங்கியினுடைய எல்லைவரையறைக்குள் போதிய விவசாய நிலம் இருப்பதில்லை. ஆகவே, இரண்டரை கோடி ரூபாய் அளவுக்கு எல்லா வங்கிகளின் மூலமாகவும் கடன் கொடுக்க முடியாது. ஆகவே, இந்த வைப்பு நிதியை, டெபாசிட்டை அதிகமாகச் சேர்த்தால்தான், money rotation இருக்கும். அதன் மூலமாகப் பயனாளிகளும் பயனடைவார்கள்; விவசாயிகளும் பயனடைவார்கள். அதுபோல, வங்கிகளுக்கும் போதிய வருவாய் கிடைக்கும். ஆகவே, இந்த Share Capital-ஐ, 10 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாகக் குறைத்து, atleast 25 இலட்சம் ரூபாய் என்று இருப்பதை, ரூ.15 இலட்சமாகவாவது குறைக்க வேண்டுமென்று தமிழக அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கூட்டுறவு வங்கிகளிலே விவசாயத்திற்கு வழங்கப்படும் கடன்களுக்கான வட்டி விகிதம் குறைக்கப்பட வேண்டும். இதர வங்கிகள் நுகர்வோர்களுக்காக 10 சதவீதம் கொடுக்கிறது. ஆனால், கூட்டுறவு-(குறுக்கீடு)



**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியதன்படி, வைப்புத் தொகை வாங்குவதிலே பல்வேறு பிரச்சினைகள் இருந்ததை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் மிக நன்றாக அறிவார்கள். இருந்தாலும், அந்த வைப்புத் தொகை, டெபாசிட் தொகைகளையெல்லாம் வாங்கியதற்குப் பின்னால், கடந்த ஆட்சியிலே பல்வேறு தவறான நடவடிக்கைகள் இருந்தன என்பதை, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியதற்குப் பின்னால், இன்றைக்கு 25 இலட்சம் ரூபாயாக அந்த வைப்புத் தொகையினுடைய உச்சவரம்பு இருந்ததை, 20 இலட்சம் ரூபாய் சொந்த நிதியுள்ள வைப்புத் தொகையாகச் சேகரிக்கலாம் என்று உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** நன்றி. ரூபாய் 20 இலட்சத்தில் மேலும் 5 இலட்சத்தை குறைத்து ரூபாய் 15 இலட்சமாக வைப்பு நிதி வைத்தால் நிச்சயம் நன்றாக இருக்கும். டெபாசிட் செய்வதற்கும் டெபாசிட்தாரர்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்று நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கூட்டுறவு வங்கியிலே வட்டி வீதத்தைக் குறைக்கவேண்டும் ரிசர்வ் பேங்க் 7 சதவீதத்திற்குக் கொடுக்கிறது. அதை வாங்கி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 11 சதவீதத்திற்கு கொடுக்கின்றது. மாவட்டக் கூட்டுறவு வங்கிகள் அதைப்பெற்று தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் 13 சதவீதத்திற்கு பயனாளிகளுக்கு வட்டிக்குக் கொடுக்கின்றன. ஆக, இந்த வட்டி வீதங்களைச் சரி செய்து குறைக்க வேண்டும். அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல வங்கி ஊழியர்களுக்கு சம்பளம் மிக அதிகமாகக் கொடுக்கப்படுகின்றது. எனவே, 1-1-1996 முதல் 30-6-2001 வரையில் இருந்த ஊழியர்கள் சம்பள சம்பந்தமான செட்டில்மென்ட் காலாவதியாகிவிட்டது. அதற்குப்பிறகு 18(1) செட்டில்மெண்ட், நிர்வாகமும் பணியாளர்களும் சேர்ந்து போட்டதால், அதிக சம்பளத்தை அவர்கள் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் ஓரளவு நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. அந்த நஷ்டத்தை சரி செய்வதற்கு நிர்வாகம்,

பணியாளர்கள், அரசுத் தொழிலாளர் நல அலுவலர்கள் சேர்ந்து கூடிய விரைவிலே 12(3) செட்டில்மென்ட் போட்டால், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மூலமாக தவறுதலாக அதிக சம்பளத்தைப் பெறுகின்ற அந்தப் பிரச்சினையைச் சரி செய்யலாம். இதன்மூலமாக ஓரளவு வங்கிக்கு ஏற்படுகின்ற நஷ்டத்தைத் தடுக்கலாம் என்று கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, அந்த 12(3) செட்டில்மென்ட்டை மிக விரைவிலே செயல்படுத்திட தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல மறு முதலீட்டு நிதியுதவி-Re-finance-மத்திய, மாநில அரசாங்க நிதியுதவி ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டி இருக்கின்றது. மற்ற மாநிலங்கள் அந்த மறு முதலீட்டு நிதி உதவியை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆந்திரா, மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், மற்றும் இதர மாநிலங்கள் எல்லாம் பெற்றுக்கொண்டு இருக்கும்போது, தமிழக அரசு அதை ஏன் பெறவில்லை என்ற கேள்வியை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசாங்கம் 600 கோடி ரூபாயும், மாநில அரசாங்கம் 400 கோடி ரூபாயும் சேர்ந்து ஆயிரம் கோடி ரூபாய் வர இருக்கின்றது. அதை உடனடியாக தமிழக அரசு பெற்றுத் தந்து, இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மேலும் சிறப்பாகச் செயல்பட உங்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த மறு முதலீட்டு நிதி உதவி பெற வேண்டுமென்றால், பல்வேறு நிபந்தனைகளை மத்திய அரசாங்கம் விதித்திருக்கின்றது. அந்த நிபந்தனைகளிலே, கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டால், உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு நிர்வாகம் வரவேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இப்போது, கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டு, அதிகாரிகள் தலைமையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, உடனடியாக கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்திட வேண்டுமென்று தமிழக அரசை வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, Model Co-operative Act.



**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடத்துவதற்குத் தயாராக இருக்கிறது. இது நீதிமன்றத்திலே இருக்கின்ற காரணத்தால், அதை நடைமுறைப்படுத்த முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** அடுத்து மாதிரி கூட்டுறவுச் சட்டம், அதாவது Model Co-operative Act-ஐ அமல்படுத்திட வேண்டும். மற்ற மாநிலங்களைப் போல, தமிழகத்திலும் அந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அமல்படுத்திட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பணி செய்கின்ற பணியாளர்களைப் பார்க்கும் போது, இட ஒதுக்கீடு முறை அங்கே கடைப்பிடிக்கப்படவில்லை. குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்குப் போதிய இட ஒதுக்கீடு அதிலே கொடுக்கப்படவில்லை என்று பல காலங்களாக பல நேரங்களிலே இங்கே பேசப்பட்டிருக்கின்றது. வங்கிகளிலே 'A' Class வங்கி, 'B' Class வங்கி, 'C' Class வங்கி என்று மூன்று வகைகளாக இருக்கின்றன.

அதிலே, 'A' Class வங்கியிலே 7 பேர் பணியாளர்களாக இருக்கிறார்கள். Secretary, Asst. Secretary, Cashier, முதுநிலை எழுத்தர், உதவியாளர், ஏவலர், உர விற்பனையாளர்; அதேபோல 'B' Class வங்கியிலே 5 பேர்; 'C' Class வங்கியிலே 3 பேர் இருக்கிறார்கள். மொத்தம் கூட்டிப் பார்த்தால், பல ஆயிரக்கணக்கான பணியாளர்கள் பணி செய்து கொண்டிருக்கிறார்கள். அதிலே 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், 1 சதவீதம் பழங்குடியின மக்களுக்கும் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அதை முறையாக இதுவரை கொடுக்கவில்லை; இனிமேலாவது, தமிழக அரசு வருகின்ற காலங்களிலே அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

அதேபோல கூட்டுறவுப் பதிவாளரின் கட்டுப்பாட்டிலே இயங்கி வருகின்ற தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், மத்தியக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், ஊரக வளர்ச்சி வங்கிகள், கூட்டுறவு நகர வங்கிகள், கூட்டுறவுப் பண்டகசாலைகள் மற்றும் இதர வகை கூட்டுறவுச் சங்கங்கள் ஆகிய 11,159 கூட்டுறவுச் சங்கங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏழையெளிய மக்களுடைய துயரைத் துடைப்பதற்கு பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. இதிலே ஆதிதிராவிட மக்களுக்கான குறிப்பிட்ட இட ஒதுக்கீடு சதவீதத்தை அனைத்து சங்கங்களிலும், அது பணியாளர்களாக இருந்தாலும் சரி, அல்லது நிர்வாகமாக இருந்தாலும் சரி, இட ஒதுக்கீட்டைக் கடைப்பிடித்திட வேண்டுமென்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பொது விநியோகத் திட்டம்; இதன்கீழ் அத்தியாவசியப் பொருள்களைத் தங்குதடையின்றி வழங்க ரூ.1,240 கோடி அளவிற்கு மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு கிடைக்க ரூ.2,460 கோடி அளவிற்கு கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக நுகர்பொருள் விற்பனைக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவ்வளவு தொகைக்குண்டான நுகர்பொருள்கள் கிடைப்பதற்கு இன்னும் சரியான அளவிலே அனைவருக்கும் உணவுப் பொருள் வழங்கும் குடும்ப அட்டை —Family Ration Card—முறையாகக் கொடுக்கப்படவில்லை. புதிதாகக் குடும்பம் அமைத்திருக்கிறவர்கள் பல்லாயிரக்கணக்கான அளவில் உணவு அட்டை பெறுவதற்காக தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்ற பல்வேறு அதிகாரிகளைச் சந்திக்க தினமும் நடந்து கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, கூடிய விரைவிலே அவர்களுக்கு உணவு வழங்கும் அட்டை—Ration card—கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கிற அந்த குடும்பங்களைக் கண்டறிவதில் பல்வேறு குளறுபடிகள் கடந்த காலங்களிலே ஏற்பட்டன. அந்தக் குளறுபடிகளையெல்லாம் போக்கி, உண்மையிலே யார் எல்லாம் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கிறார்களோ, அவர்களை உரிய முறையிலே கண்டறிந்து, அவர்களுக்கு உரிய அந்த



Family Ration Card வழங்குவதற்கு தமிழக அரசு பெரும் முயற்சி எடுத்து கூடிய விரைவிலே அனைவருக்கும் Ration Card வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மீண்டும் இந்த அரசை நான் வலியுறுத்துவது எல்லாம், அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களிலும் குறிப்பாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே கட்டாயம் அந்த ரிசர்வேஷனைக் கடைப்பிடித்து, இதுவரை நிரப்பப்படாமல் இருக்கின்ற அந்தக் குறிப்பிட்ட சதவீதத்திற்கு ஒரு Special Recruitment வைத்து, தமிழக அரசு கூட்டுறவுத் துறையின் மூலமாக எடுக்க வேண்டும். அதுசம்பந்தமாக எவ்வளவு பேர் பணி செய்கிறார்கள், எவ்வளவு இட ஒதுக்கீடு கொடுக்க வேண்டும், ஏன் கொடுக்கப்படவில்லை என்று தமிழக அரசு ஒரு வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்தால் நிச்சயமாக இந்த அரசு ஆதிதிராவிட மக்களுக்கு ஆதரவாகச் செயல்படுகிறது என்று மக்கள் அறிவார்கள். இந்த அரசுக்கு ஆதிதிராவிட மக்கள் அதிக வாக்குகள் அளித்ததன் காரணமாகத்தான் இன்றைக்கு நீங்கள் ஆட்சிக் கட்டிலிலே இருக்கிறீர்கள். அதற்கு நன்றிக் கடனாக அவர்களுக்கு இந்த ஏற்பாட்டைச் செய்து இட ஒதுக்கீட்டை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. ஏழுமலை.

***திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு'

என்ற குறளுக்கிணங்க, சுற்றிவரும் பகை முடிக்கும் சுடர் ஒளியாய், ஆவது அறிகின்ற ஆற்றல்மிகு அறிவு, இயற்றுதல், ஈட்டுதல், காத்தல், காத்தவற்றை வகுத்தல் ஆகியவற்றை இயல்பாகப் பெற்றுள்ள மாண்புமிகு முதல்வர், நான் வணங்கும் அன்னை, நடமாடும் மனித தெய்வம், அம்மா அவர்களை வணங்கி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

வரலாற்று காலத்திற்கு ஒரு அசோகர்; பைபிள் காலத்திற்கு ஒரு சாலமன்; முகலாயர் காலத்திற்கு ஒரு அக்பர்; இந்தியாவிற்கு ஒரு நேரு. இது கடந்தகால வரலாறு. இந்திய உபகண்டம், எத்தனையோ முதல்வர்களைக் கண்டுள்ளது. வரலாற்றில் மட்டுமல்லாமல் மக்கள் மனதில், நிலைத்து நிற்கும் ஒரு முதல்வர் இருக்கிறார் என்றால் அவர்தான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

வரலாற்றைக் கடந்து ஒப்பாரும், மிக்காரும் இல்லாத அளவுக்கு தன்னலமற்ற தலைவியாய் தமிழகத்தை இந்தியாவிலேயே எல்லாத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக மாற்றித் திருவேன் என்று உறுதி பூண்டு, இரவு, பகல் பாராமல் தன்னை வருத்திக்கொண்டு பாடுபடும் எங்கள் அருந்தவத் தலைவியே, ஆதார சக்தியே, பணிவான என் வணக்கத்தைத் தங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

முற்பகல் 10-25

'கூட்டுறவே நாட்டுயர்வு. கூடும் உறவே கூட்டுறவு. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' ஆகியவற்றின் அடிப்படைதான் கூட்டுறவு.

கடந்த தி.மு.க. ஆட்சியின் திறமையற்ற நிதி நிர்வாகத்தினால் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் நிதி நிலைமை சீர்கெட்டு இருந்தாலும், தன்னை நம்பி வாக்களித்த விவசாயப் பெருங்குடி மக்களின் துயரத்தைத் துடைக்கும் வகையில் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் விவசாயிகள் கூட்டுறவு கடன் மீதான வட்டி மற்றும் அபராத வட்டி சுமார் ரூ.311 கோடியைத் தள்ளுபடி செய்து இருக்கிறார்கள். இதன்மூலம் விவசாயிகளின் இல்லங்களில் இன்று ஒளி விளக்காய்த் திகழ்கிறார்.

நபார்டு வங்கியைக் காரணம் காட்டி ஜப்தியைச் செய்தவர்கள்தான் முந்தைய தி.மு.க. ஆட்சியாளர்கள். ஆனால் இன்று விவசாயிகளுக்காக அவர்கள் . நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். இதற்குச் சான்று; இதே பேரவையில் அன்றைய தினம் உறுப்பினர்களாக இருந்த திரு. ஆர். பொன்னப்ப நாடார், திரு. ஏ.என். சுப்பிரமணியம், திரு. கே.என். குமாரசாமி, திரு. எஸ். அழகர்சாமி, திரு. ஏ.ஆர். மாரிமுத்து, திரு. ஏ.கே. சுப்பையா உள்ளிட்ட 11 உறுப்பினர்கள் 1973 ஆம் ஆண்டு ஆகஸ்ட் ஏழாம் நாள் கொண்டு வந்த ஓர்



ஒத்திவைப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்த அன்றைய முதல்வர், இன்றைய பேரவை உறுப்பினர் கருணாநிதி அவர்கள், ரிசர்வ் வங்கியைச் சுட்டிக்காட்டி விவசாயிகளின் மீதான 'ஜப்தி' நடவடிக்கையை நியாயப்படுத்தினார் என்பதை இந்தப் பேரவை நன்கு அறியும். இதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் அரசு பெண் இனத்திற்கே பெருமை சேர்க்கும் அரசாகத் திகழ்கிறது. பெண் சிசுக் கொலையைத் தடுக்க தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் கல்வி பெற ஆதிதிராவிட பெண்களுக்கு இலவச சைக்கிள் திட்டம், பெண்களுக்கு வேலை கிடைத்திட மகளிர் சுய உதவிக் குழு, மகளிர் மாண்பு போற்றிட மகளிர்க்கென காவல் நிலையம், மகளிர்க்கென நீதிமன்றம்; இதுமட்டுமல்ல மகளிருக்குக் கடுமையான நிதி நெருக்கடியிலும்கூட, கூட்டுறவு வங்கியில் வழங்கும் முன்னுரிமை கடன்களுக்கு 1 சதவீதம் வட்டி குறைப்பு, உழைக்கும் மகளிர் மற்றும் மகளிர் தொழில் முனைவோர் கடனுக்கு 1 சதவீதம் வட்டி குறைப்பு; சிறு வணிகக் கடனுக்கு 3 சதவீதம் வட்டி குறைப்பு. இது மட்டுமல்ல இந்தியத் திருநாட்டில் எந்த மாநிலத்திலுமே இல்லாத அளவுக்கு மகளிர் பேறுகாலக் கடன், அதன்படி வறுமையில் வாடும் கருவுற்ற மகளிருக்கு 12 சதவீதம் வட்டியில் ரூ.2,000/- வரை கடன் வழங்கி மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பெண் இனத்திற்கே பெரும் அரணாக விளங்குகிறது என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்கள் சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டதற்குக் கடந்தகால தி.மு.க. ஆட்சியில் முறைகேடான தேர்தல், அளவுக்கு அதிகமாக பணியாளர்கள் நியமனம், ஊதிய உயர்வுதான் காரணம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போலி ரேஷன் கார்டுகள் கணக்கில் அடங்காத அளவிற்கு இருந்ததால், ரேஷன் பொருட்கள் எளிதாக மாநிலம் விட்டு மாநிலம் கடத்துவதற்கு ஏதுவாக இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ரேஷன் பொருட்கள் பயனாளிகளுக்குத் தங்கு தடையில்லாமல் குறித்த காலத்தில் கிடைக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொண்டு அரிசிக்கான குடும்ப அட்டையைப் பெற்றுள்ள குடும்பங்களில் அரிசி மட்டும் வாங்குவோருக்கு கூப்பன்களை வழங்கி, அரிசி வழங்கி வருவதால்

கடத்தலுக்கு மட்டுமல்ல, போலி ரேஷன் கார்டுகளுக்கும் நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது மக்களுக்கு வழங்கப்படும் அரிசி தரமானதாக இருக்க வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் சம்பா பருவத்தின்போது நெல் கொள்முதல் செய்யும்போது 18 சதவீதம் முதல் 22 சதவீதம் வரை ஈரப்பதம் கொண்ட நெல்லைக் கொள்முதல் செய்யலாம் என்றும், விவசாயிகள் விடுத்த கோரிக்கைகளைத் தாயுள்ளத்தோடு பரிசீலித்து மாண்புமிகு அம்மா அவர்கள், 3 வகையான நெல்லைக் கொள்முதல் செய்ய உத்தரவிட்டு பாதிக்கப்பட்ட விவசாயிகள் வயிற்றில் பாலை வார்த்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

முந்தைய தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் வேறு எங்கும் நெல்லை எடுத்துச் செல்ல முடியாதபடி தடைகள் விதித்திருந்தார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இத்தடைகளை நீக்கினார்கள் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது விநியோகத் திட்டத்தில் புழுத்த அரிசி, பழுப்பு அரிசி, கருப்பு அரிசி இவற்றை அறிமுகம் செய்தவர்கள் கடந்த கால ஆட்சியாளர்கள் என்பதை நாம் மறந்திருக்க முடியாது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது பேசிய மாமன்ற உறுப்பினர்களும், இந்த மானியத்தின்மீது பேசிய மாமன்ற உறுப்பினர்களும், அவர்கள் இந்த ஆட்சியில், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், எங்கும் பழுப்பு அரிசியைக் கண்டதாகவோ, புழுத்த அரிசியைப் பார்த்ததாகவோ, கருப்பு அரிசியைப் பார்வையிட்டதாகவோ யாரும் எடுத்துச் சொல்லவில்லை. ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியில் லாரிகளிலும், container-களிலும் அரிசியைக் கடத்தியதை கடந்த கால பேரவை உறுப்பினர்கள் பேரவையிலே பேசியதை நான் பேரவைக் குறிப்புகளிலே பார்த்திருக்கிறேன்.



கடைசியாக, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி டாக்டர் அம்மா அவர்கள் என்னுடைய விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தந்து, ரூபாய் 236 கோடியே 27 இலட்சம் மதிப்புடைய நலத் திட்டங்களை வழங்கியதற்காக என்னுடைய மாவட்டத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும், மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியின் சார்பிலே சில கோரிக்கைகள். மொடையூர், திருவம்பட்டு, கல்லாவிபட்டு சாலை மிகவும் பிரதானமான சாலை, பழுதடைந்துள்ளது. அதைப் பழுதுநீக்கம் செய்யவேண்டும். வல்லம், ஆவியூர், மேல்ஒலக்கூர் சாலையையும் பழுதுநீக்கம் செய்ய வேண்டும். வெள்ளிமேடுபேட்டை, ஆர்கிபாக்கம், வெண்பாக்கம் சாலை மிகவும் மோசமாக உள்ளது. அந்தச் சாலையையும் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செஞ்சி வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னரே இடிக்கப்பட்டு மீண்டும் கட்டப்படாமல் உள்ளது. அதனை இந்த நிதி ஆண்டே கட்டித்தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் வராக நதி என்ற ஒரு நதி இருக்கிறது. அந்த நதியிலிருந்து நீர் வந்தால் ஏறக்குறைய 15 ஏரிகள் நிரம்பி, 15 கிராமங்களில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் பயனடைவார்கள். அந்த வராக நதியைத் தூர் வாரித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சங்கராபரணி ஆறு ஓடுகின்றது. மழைக் காலங்களில் இந்த ஆற்றில் வருகின்ற நீர் வீடூர் அணைக்குச் சென்று, பாண்டி கடற்கரையை அடையும். இந்த ஆற்றின் குறுக்கே, செஞ்சி அருகே, மொடையூர் அருகே தடுப்பணை கட்டப்பட்டிருக்கின்றது. இந்த அணை பழுதடைந்துள்ளது. அதையும் பழுது நீக்கம் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே பணிவாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களில் என்னுடைய கோரிக்கையை வைத்து, என்னுடைய முடிவுரையாக ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

சிக்லிப் என்று மீன் இனம் ஒன்று உள்ளது. அந்த மீன் தான் இடும் முட்டைகளை தன் வாய்க்குள்ளேயே வைத்துக்கொண்டு குஞ்சு பொரிக்கும். பொரித்த குஞ்சுகளை நீரில் நீந்த வைத்து உடனிருந்து பாதுகாக்கும். குஞ்சுகளுக்கு ஆபத்து வந்தால், குஞ்சுகளைத் தன் வாய்க்குள்ளேயே இழுத்துக்கொண்டு, ஆபத்து நீங்கியதும் மீண்டும் தண்ணீரில் நீந்த விடும். அதுபோல மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள் நம்பியவர்களைக் காப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். இன்னொரு மீன் இனம் சக்கர் மீன். இந்த சக்கர் மீன் இனம் சுயமாக உணவு தேடி உயிர் வாழ முடியாது. அடுத்தவர் உழைப்பில் மட்டுமே பிழைப்பு நடத்தி, சுறா மீனின் முதுகில் ஒட்டிக்கொண்டு, பிழைப்பு நடத்தும். இரை தேடும்போது சுதந்திரமாகத் திரியும். ஆபத்து வந்தால் சுறா முதுகில் வெட்கம் மறந்து ஒட்டிக்கொள்ளும். சந்தர்ப்பவாத சக்கர் மீன்களுக்கு உழைக்கத் தெரியாது. பிறர் முதுகில் சவாரி செய்ய மட்டுமே தெரியும். தமிழக அரசியலில், ஏன், தேசிய அரசியலில்கூட சக்கர் மீன் இனம் இருக்கின்றது. அம்மா அவர்களே, தங்களை நம்பாமல் விட்டுப் போனவர்கள், விலகிப் போனவர்கள் முகவரி இழந்த முகங்களாய் இருக்கின்றார்கள் என்பதை இந்தியத் திருநாடே நேற்றல்ல, இன்றல்ல, என்றும் அறியும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழர் தம் வாழ்வே தன் வாழ்வு என்று பல்வேறு கால கட்டங்களில் பேச்சோடு மட்டுமின்றி, செயல்படுத்தி வரும் உலகெங்கும் வாழும் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமே, இந்திய உபகண்டத்தின் நாளைய விடிவெள்ளியே, தங்களை நினைத்தால் தமிழர்க்குப் புத்துணர்வு, தங்களைப்பற்றி பேசினால் தமிழர்க்குப் புதுவாழ்வு. தமிழர் தம் தலைவியே, இந்தியத் திருநாட்டின் இணையில்லாத் தலைவியே! கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றியைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்ற—

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை.



**திரு. வெ. ஏழுமலை:** ஒரே ஒரு நிமிடம். கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகின்ற செயலாளர்கள் என்று பணியில் சேருகிறார்களோ, அன்றிலிருந்து அவர்கள் வேலையை விட்டுச் செல்கின்ற வரை, அதே வங்கிகளில் தொடர்ந்து பணி செய்வதால், பல்வேறு முறைகேடுகள் அந்த வங்கிகளில் நடைபெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, அவர்களை மாற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்வதோடு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை அவர்கள் பேசுவார்கள்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றியா? திரு. பாரமலை, இருங்கள். அவர் நன்றி சொல்லிவிடுவார்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செஞ்சி கோட்டையில் ஏறியது போதும். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் தேர்தல் சமயத்திலே எல்லோருக்கும் Gas loan மத்திய கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்பட்டது. என்னுடைய தொகுதி, செஞ்சியில் இயங்குகின்ற மத்திய கூட்டுறவு வங்கி, செஞ்சி கிளையில்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். செஞ்சி கோட்டையில்தான் ஏறிவிட்டீர்களே, முடியுங்கள்.

**திரு. வெ. ஏழுமலை:** ஏறக்குறைய 4 ஆயிரம் பேருக்கு Gas loan வழங்கப்பட்டிருக்கிறது. அந்த loan-ஐ வாங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினருடைய கையெழுத்து, ஒன்றியச் செயலாளருடைய கையெழுத்து இருந்தால்தான் அது தரப்பட்டது. அதில் பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்றன. மத்திய கூட்டுறவு வங்கியில்

இப்பொழுது நடவடிக்கை எடுப்பதாகத் தெரிகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் முறையாக விசாரணை செய்து தவறு செய்தவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு, நுகர்வோர் பாதுகாப்பு ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய நண்பர் குறிப்பிட்டுச் சொன்னதைப் போல, கூட்டுறவு இயக்கம் ஒரு புனிதமான இயக்கம்; நாட்டில் இருக்கிற மக்களுக்கெல்லாம் சேவை செய்கின்ற இயக்கம். இந்த இயக்கம் தோன்றி நூறு ஆண்டுகள் முடியப் போகின்றன. 1904 ஆம் ஆண்டு புதிய கூட்டுறவுச் சட்டம் தொடங்கிய காலத்தில்தான் கூட்டுறவு இயக்கம் நமது நாட்டிலே தொடங்கப்பட்டது. இப்போது 2003 ஆம் ஆண்டிற்கு வந்திருக்கிறோம். ஏறக்குறைய கூட்டுறவு இயக்கத்தினுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிற இந்த நேரத்தில் இதிலே பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு என்று சொன்னால், இந்தியாவிலேயே இந்த நூறு ஆண்டுகளில் மிக வலுவான கூட்டுறவு இயக்கங்கள் மகாராஷ்டிரா, பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய இந்த மாநிலங்களில்தான் செயல்பட்டு வந்தன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், சென்னையில் இருக்கிற T.U.C.S. Triplicane Urban Co-operative Society. அதைப்போல திரூர் கூட்டுறவுச் சங்கம், திண்டுக்கல்லில் இருக்கிற Urban Co-operative Bank இவையெல்லாம் ஒரு காலத்திலே Role model என்று சொல்வார்களே, அதைப்போல வெளிநாட்டிலேயிருந்து வருகின்றவர்கள், வெளி மாநிலங்களிலேயிருந்து வருகின்றவர்கள் எல்லாம் அவற்றைப் பார்த்துச் செல்லுகின்ற அளவுக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆனால் இன்றைக்கு, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற மக்கள் சாசனம் பக்கம் 1-லே சொல்லியிருக்கிறார்கள். பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உறுதியான மற்றும் ஆற்றல் வாய்ந்த கருவியாக உலகெங்கிலும் கூட்டுறவுகள் விளங்குகின்றன. பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவுகள் செயல்படாத முக்கியத் துறை



எதுவுமில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அத்தனைத் துறைகளிலும் கூட்டுறவு இயக்கம் பங்கேற்றிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், விவசாயம், கோழி வளர்ப்பு, பால் உற்பத்தி, மீன் வளர்ப்பு, கைத்தறி, வங்கித் தொழில்கள், சர்க்கரை, நூற்பாலைகள், நுகர்வோர் கூட்டுறவு மற்றும் பல்வேறு துறைகளில் அதனுடைய சேவை இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட கூட்டுறவு இயக்கம் பற்றி இன்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற ஒரு கண்ணோட்டம் என்ற குறிப்பிலே, 'பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையிலோ அல்லது நட்டத்திலோ இயங்கி வருகின்றன என்பது கவலை அளிப்பதாக இருக்கிறது' என்று சொல்லியிருக்கின்றார்கள். 'அரசு பெரு முயற்சிகள் மேற்கொண்டபோதிலும், சில நலிந்த கூட்டுறவுச் சங்கங்கள் மீட்க இயலாத நிலையில் இருக்கின்றன' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10-40

பொதுவாக, கூட்டுறவுக் கடன்கள் வழங்கும் வங்கிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் பல ஆண்டுகளாகப் பல்வேறு நஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டு, நஷ்டத்திலே ஓடிக்கொண்டிருக்கின்றன; செயல்படாமல் இருக்கின்றன. அவற்றைக் கண்டறிந்து, அவற்றைப் புனரமைப்பது பின்னர் வலுப்படுத்துவது அரசின் தார்மீகக் கடமையாகும் என்ற குறிப்பைச் சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப் புனரமைக்க முடியாத நிறுவனங்களைத் தொடர்ந்து அனுமதிப்பதைவிட அவற்றைக் கலைத்துவிடுவதே சிறந்ததாகும் என்ற குறிப்பும் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, கூட்டுறவு இயக்கம், சிறப்பான இயக்கம். நாடு முழுவதும் அதனுடைய சேவை அவசியமாகிறது. குறிப்பாக வறட்சிக் காலங்களில், பஞ்ச காலங்களில் அந்தச் சங்கங்களுடைய சேவை மிகத் தலையாயது; முக்கியமானது.

கூட்டுறவு இயக்க வரலாறே அப்படித்தான் தோன்றியிருக்கிறது. 19 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் ஜெர்மனியில் தோன்றிய பஞ்சம், பட்டினி, அதன்காரணமாகப் பெரிய கோடீஸ்வரர்கள், பணக்காரர்கள் எல்லாம், விவசாயிகளின் வீடுகள், நிலங்கள் ஆகியவற்றை வாங்கிக்கொண்டு மக்களைப் பரிதவிக்கவிட்ட காலத்திலேதான் ஜெர்மனியிலே இந்த இயக்கம் தோன்றியது. இன்று

பஞ்சங்கள் இருக்கின்ற காலங்களில் தமிழ்நாட்டில் அந்த ஒரு சூழ்நிலை வருவது தவிர்க்கப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். குறிப்பாக இதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. கூட்டுறவு அமைப்புகள் அழிந்ததற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று கூட்டுறவு இயக்கங்கள் தனியார் துறை மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் போட்டியைத் தவிர்க்க இயலாத சூழ்நிலை. சந்தைப் பொருளாதாரத்திற்கு ஏற்றவகையில் தன்னைத் தயார்படுத்திக் கொள்ளாத நிலை; மத்திய அரசிடமிருந்து சலுகைகள் மற்றும் உதவிகள் கிடைக்காத ஒரு சூழ்நிலை. இதுவெல்லாம் இந்த இயக்கங்கள் சரிவர நடக்காமல் இருந்ததற்குக் காரணங்கள் ஆகும்.

அதோடு மத்திய அரசு கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டுறவு நிதி உதவிகளைக் குறைத்துக்கொண்டு வருகிறது. உலகச் சந்தையோடு போட்டியிடுகின்ற டெக்னலாஜிக்கல் திறனை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பதும் அதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. கடந்த 30 ஆண்டுகளாகத் தேர்தல் நடைபெறவில்லை. தேர்தல் நடத்தாததற்குக் காரணம் என்ன என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். தேர்தல் நடந்து நிர்வாகம் நடந்தபோதும் நிர்வாக ஊழல் மற்றும் நிர்வாகத் திறமையின்மை காரணமாகவும் பெரும் நஷ்டம் இந்த இயக்கத்திற்கு ஏற்பட்டிருக்கிறது. முதலிலே நான் சொல்லிக்கொள்வது, நிர்வாகம் இருந்தாலும் அது சிறப்பான முறையில் இருக்க வேண்டும் என்று மகாத்மா காந்தி அவர்களே சொல்லியிருக்கிறார்கள்—

"People were starved not for want of food, but for want of co-operative effort. The secret of success of co-operative effort is that, the members must be honest and know the great merit of co-operation and it must have the definite progressive goal."

என்று சொல்லியிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இருந்தாலும் அவர்கள் நல்லவர்களாக, யோக்கியமானவர்களாக இருந்தால்தான் கூட்டுறவு இயக்கம் சிறப்பாக நடக்க முடியும். அந்த வகையிலே இந்தப் பெரிய இழப்பைக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கு முக்கியமான காரணம், நான் சொன்ன காரணங்கள் இருந்தாலும், கூட்டுறவுத் தேர்தல் நடத்தாமல் இருப்பது ஒரு முக்கியமான காரணம். தேர்தல் நடத்தாததற்கு-- நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் -- நீதிமன்றத்தில்



இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய அரசு சிறப்பான, பொறுப்பான கூட்டுறவு அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்கு ஓர் ஆணை வழங்கியபோது, அதை எதிர்த்து நீதிமன்றத்திற்குச் சில பேர் சென்றிருக்கிறார்கள். அந்த நீதிமன்றத்திலே வழக்கு இருக்கிறபோதே நீதிமன்றம் ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. அந்த ஆணையிலே சொல்லியிருக்கிறார்கள்—

"Admission of new members is permitted, subject to the result of main writ petition. New members are entitled only to enjoy the benefits of the society, not entitled to vote or participate in the election."

என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதற்குப் பின்னாலே 9-4-2002 அன்று ஓர் ஆணையை உயர் நீதிமன்றம் வழங்கியிருக்கிறது. அதிலே "I refer it to the Larger Bench" என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஏறக்குறைய ஒரு வருடம் முடிந்துவிட்டது. I do not know, whether Larger Bench has been constituted or not. We do not know. சாதாரண வழக்குகளுக்குக்கூட நாம் Fast-track Courts என்று ஆரம்பிக்கிறோம். தனிப்பட்ட சில நபர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதனால் சமுதாயத்திலே பாதிப்பு ஏற்படுகிறது என்பதற்காக Fast-track Courts ஆரம்பிக்கிறோம். ஆனால் இந்த நாட்டு மக்களிலே 90 சதவீதம் இந்தக் கூட்டுறவினாலே பயன்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் சமுதாயம் சார்ந்த ஒரு மிகப் பெரிய பிரச்சினையிலே ஒரு வருடம் முடிந்தும் இந்த Larger Bench ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதா என்றுகூடத் தெரியவில்லை என்று சொன்னால் நாம் எல்லாம் மெத்த வருத்தப்படவேண்டும். ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, இந்தப் பிரச்சினையிலே அரசு பெருமுயற்சி எடுத்துக்கொண்டு...

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் கூறுகிறபோது கூட்டுறவுச் சங்கங்களுடைய தேர்தல்களைப் பற்றி, வழக்கு மன்றத்திலே வழக்கு இருப்பதைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். இந்தப் பிரச்சினையே அவர் சொல்வதிலேதான் இருக்கிறது என்பதை உறுப்பினரும் மிக நன்றாக அறிவார்கள். அங்கே சேர்க்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள்

முறையான உறுப்பினர்கள் அல்ல. அதற்குப் பின்னாலே இப்போது உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டாலும் அவர்களுக்கு அந்த வங்கிகளிலே நடைபெறுகிற தேர்தல்களில் வாக்குரிமை இல்லை என்ற நிலைப்பாட்டை இன்றையதினம் உயர் நீதிமன்றம் எடுத்திருக்கிறது. அதற்காக 9-4-2002 ஆம் நாளைய தீர்ப்பின்படி வழக்குகளை நீதிபதிகள் குழுவிற்கு அனுப்பியுள்ளது என்ற நிலைமையை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சொன்னார்கள். அதைத்தான் நானும் சொல்லிக் கொண்டிருக்கிறேன். ஒரு வருடமாகிவிட்டது. இது நாட்டு மக்களுடைய பிரச்சினை.

***திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதிலளிக்கிற நேரத்தில், நீதிபதிகள் குழு என்று சொன்னார்கள். நீதிபதிகள் குழு என்றால் உள்ளபடியே எனக்குப் புரியவில்லை. ஆகவே, கொஞ்சம் விளக்கம் அளித்தால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, That is Larger Bench.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** Bench is much different from குழு. என்பது கமிட்டி குழு அதனாலே Bench-க்கு அது அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூத்த உறுப்பினர் அவர்கள் ஒரு சிறிய விஷயத்தை மிக நன்றாகச் சுட்டிக்காட்டினார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். நீதிமன்றத்தில் இருக்கிற இந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி, நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கு முன்முயற்சிகளை எடுக்கும் என்பதை இந்தநேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து இந்த Model Co-operative Act என்ற ஒரு சட்டம் பற்றி எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் மாண்புமிகு



உறுப்பினர் வள்ளல் பெருமான் அவர்கள்கூடச் சொன்னார்கள். அந்த Model Co-operative Act-ஐ மத்திய அரசாங்கம் கொண்டு வந்த சட்டத்தை, ஆந்திரப் பிரதேசம், ஒரிசா, மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் மற்றும் கர்நாடகம் போன்ற மாநிலங்கள் நிறைவேற்றி இருக்கின்றன. கூட்டுறவு என்பது அதனுடைய உண்மையான அர்த்தத்தில் செயல்பட வேண்டும் என்பது தான் Model Co-operative Act- உடைய இலட்சியம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பொதுவாக அதில் பல சீர்திருத்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. 'Restriction on holding of office in a number of Co-operative societies simultaneously'—ஒரே நபர் பல கூட்டுறவு இயக்கங்களில் தலைவராய் இருப்பதைத் தடுப்பது அல்லது ஒரே நபர் அவர் ஆயுள் உள்ளவரை பல சங்கங்களிலே தலைவராக இருப்பது போன்ற அந்த நிலையை எல்லாம் தடுக்கும் விதி அந்த Model Co-operative Act-ல் இருக்கிறது. நான் சென்ற முறை பேசியபோதுகூட அதைக் குறிப்பிட்டேன். அதாவது ஒரு கூட்டுறவு இயக்கத்திற்குத் தலைவராக வந்துவிட்டால் அவர் ஒன்று இறந்துவிட வேண்டும், இல்லையென்றால் வழக்குகளிலே சிக்கி, கையாடல்களிலே சிக்கி, ஜெயிலுக்குப் போக வேண்டும். அதில் எது முந்துகிறதோ அதுவரை அவர்தான் தலைவர். இந்த நிலையை மாற்றுவதற்கு இந்த Model Co-operative Act-லே இடம் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு; 'பெஞ்ச்' என்பதற்குத் தமிழில் 'குழு' என்றுதான் பொருள் (குறுக்கீடு) 'குழு' என்பதுதான் பொருள். ஆட்சிச் சொல் அகராதியை வைத்துக் கொண்டுதான் உங்களுக்குப் பதில் சொல்கிறேன்.

*முற்பகல் 10-50*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** அகராதியிலே குழு என்று இருக்கலாம். ஆனால், பொதுவாக 'பெஞ்சு' என்று சொன்னால், தமிழிலேயும் 'பெஞ்ச்' என்றுதான் அழைக்க வேண்டும். 'குழு' என்றால் கமிட்டி. 'குழு' என்று சொன்னால் கமிட்டியே தவிர...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றுக்கு மேற்பட்டால் 'குழு' என்றுதான் பொருள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய கோர்ட்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிபதிகள் குழு.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நீதிமன்றம் - ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் அடங்கிய.... (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருவருக்கு மேற்பட்டவர்கள் அமர்ந்தால் அது குழுதான். பெஞ்ச் என்பது வேறு ஒரு மொழி. தமிழிலே குறிப்பிட வேண்டுமென்று சொன்னால் 'குழு' என்பதுதான் பொருத்தம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு. ஆட்சிச் சொல் அகராதி பொது என்பதை வைத்துத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் ஏதாவது போடுவதாக இருந்தால் 'எஸ்.ஆர்.பி. புது அகராதி' என்றே நீங்கள் போடலாம். (சிரிப்பு)

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனாலே இந்த Model Co-operative Act-ஐ அமல் நடத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறப்பான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம், வேறு ஒன்றுமல்ல. சுருக்கமாகச் சொல்லப் போனால், ஒரு காலத்திலே கூட்டுறவுப் பதிவாளர் பற்றிச் சொல்வார்கள். Registrar is the Brahma, Vishnu of the Co-operative institution என்று சொல்வார்கள். அதை எப்படி மாற்ற வேண்டுமென்று சொன்னால்; The Registrar should function as a Friend, Philosopher and Guide of the Co-operative movement என்று சொல்லவேண்டும். அந்த அளவிற்குக் கூட்டுறவுத் தத்துவங்களைப் பிரதிபலிக்கின்ற கூட்டுறவு இயக்கங்களாக மாற வேண்டுமென்று சொன்னால், இந்த Model Co-operative Act-ஐ விரைவில் அமல் நடத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு சிறிய வேண்டுகோள், அமைச்சர் அவர்களுக்கு. அரசு பெருமுயற்சி மேற்கொண்டபோதிலும் மீட்க இயலாத நிலையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பெரும் அளவு பங்குகள் அரசுக்குச் சொந்தமாக இருந்தால் அவ்வகையான கூட்டுறவுச் சங்கங்களைத் தனியார்மயமாக்கிவிடலாம் என்று அரசு ஒரு முடிவு எடுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மிக முக்கியமான முடிவு என்று சொன்னாலும், நான் பணிவோடு தெரிவித்துக்கொள்வது, கூட்டுறவு இயக்கத்திலே பொதுவாக self-help through mutual aid என்று சொல்வார்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15 நிமிடங்கள் ஆகின்றன. இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. க. பாரமலை:** ஐந்து, ஆறு கோரிக்கைகள் வைக்க வேண்டும். சொல்லிவிடுகிறேன். 'Self-help through mutual aid' என்று சொல்வார்கள். அதேபோல, 'Each for All and All for Each' என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட புனிதமான கூட்டுறவு இயக்கத்தைச் சிறப்பாக நடத்துவதற்கு நல்ல முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். தொடர்ந்து அப்படி முயற்சி எடுக்க வேண்டுமே தவிர தனியாருக்குத் தாரைவார்க்கின்ற முயற்சியைத் தயவுசெய்து செய்ய வேண்டாம்; மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஒரு வேண்டுகோள். கூட்டுறவு இயக்கங்களுக்குத் தேர்தல் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டும். அப்படி தேர்தல் பஞ்சாயத்துகளுக்குத் தேர்தல் நடத்துவதற்கு நடத்தப்படுகிறபோது எப்படிச் சட்ட வரைமுறைகள் இருக்கின்றனவோ அதைப்போல, சட்ட ரீதியாகவே தேர்தல் நடத்துகிற அந்த ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய சில கோரிக்கைகள். 1983 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சட்டத்திலே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அன்றைய கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தார்; அவருடைய தலைமையிலிருந்த Select Committee on Co-operation-ல் நானும் ஒரு உறுப்பினராக இருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாரமலை, ஒரு மூன்று நிமிடங்களில் பேசி முடித்துவிடுங்கள், ஒரு பெரிய file-ஐயே தூக்கியிருக்கிறீர்கள்.

**திரு. க. பாரமலை:** இல்லை, ஒரு கோரிக்கைதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**திரு. க. பாரமலை:** அதிலே செக்ஷன் 74/1ல் Recruitment Bureau என்ற, செக்ஷன் 75-லே Constitution of Common Cadre and Common Posts என்ற முக்கியமான—அந்தக் கூட்டுறவு இயக்கத்திலே பணியாளர்களுக்குப் பாதுகாப்பு வழங்கக்கூடிய இரண்டு பிரிவுகளைச் சேர்த்திருந்தோம். அது 1988 ஆம் ஆண்டு அந்த ரூலிலே அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இதுவரை அது அமல்

நடத்தப்படவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவந்து, அமைச்சர் அதை அமல் நடத்த வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில், மேலாண்மைப் பயிற்சி பெற்ற வேலை நாடுனர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திலே ஒரு குறிப்பிட்ட பதவிக்குத் தேவையான அளவு இல்லை என்ற காரணத்தினாலே ஏறக்குறைய 210 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு அரசே பணம் கொடுத்து, 210 பேருக்கு training கொடுத்தோம் அதாவது Higher Diploma in Co-operation - H.D.C. - கொடுத்தோம். இடம் இருக்கிறது, அதற்காகத் தயார் பண்ணுவதற்கு அரசாங்கமே பணம் கொடுத்துப் படிக்க வைத்தது. ஆனால், அவர்களுக்கு வேலை இன்னும் கொடுக்கவில்லை. அதை மனதிலே வைத்துக்கொண்டு, அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

அடுத்து ஒரு கோரிக்கை. தங்க நகைத் தொழிலாளர்களுக்கு என தொழிற் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததற்காக இந்த அரசுக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த நிதிநிலை அறிக்கையில் இந்த அமைப்புக்காக ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு செய்திருந்தீர்கள். அந்தப் பணம் இதுவரை வந்து சேரவில்லை. அதை விரைவாகக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதை வழங்குவதோடு அந்தத் தொகையை ஒரு கோடியாக உயர்த்தவேண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பெரு மனது வைத்து உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கூட்டுறவு இயக்கங்களிலே, பாதிக்கப்பட்ட பகுதிகளிலே, அதாவது வறட்சிப் பகுதிகளிலே நாம் வட்டியை எப்படித் தள்ளுபடி செய்கிறோமோ அதைப்போல Co-operative Housing Society, Land Development Bank ஆகியவற்றில் வாங்கிய கடன்களுக்கும், அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, வால்பாறை மலைப் பகுதியில் உள்ள ரேஷன் கடைகளில் பல இடங்களில் தரமான அரிசி வழங்கவில்லை என்ற ஒரு புகார் வந்திருக்கிறது. உங்கள் கவனத்திற்கு இதைச் சொல்கிறேன். அதைப் பார்த்து நல்ல முறையில் தரமான அரிசி வழங்க....

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தரமான அரிசியைப் பற்றிச் சொன்னார்கள். நீங்கள் பொதுவாக இன்றைய தினம் நியாயவிலைக் கடைகளிலே, மனசாட்சியோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், தரமான அரிசி, சிறப்பான அரிசி தரப்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை மிக நன்றாக அறிவீர்கள். அடிக்கடி இப்போது தீவிர பரிசோதனைகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன. அப்படி இருக்குமேயானால் தக்கதொரு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே எந்த ஒரு குடும்ப அட்டைதாரரும் அத்தியாவசியப் பண்டங்கள் பெறுவதற்கு 2 கி.மீ. நடக்கக் கூடாது. அதனால், அவ்வளவு விரைவாக அந்தப் பகுதியிலே கடைகள் திறக்கப்பட வேண்டுமென்றும், திறக்கும் என்றும் அரசு அங்கீகாரம் கொடுத்திருக்கிறது. அதைப்போல விருதுநகர் மாவட்டத்திலே, என்னுடைய தொகுதியிலே விருதுநகர் மாவட்டம், நரிக்குடி ஒன்றியத்தில் குரவக்குளம் என்று ஓர் ஊர் இருக்கிறது. அது சகல தகுதியும் பெற்றிருக்கிறது. அதிலே தனியாக ஒரு நியாயவிலைக் கடை தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நியாயவிலைக் கடைகள் விற்பனை நேரத்தைப்பற்றி இதிலே. சிட்டிசன் சார்ட்டரிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு இடத்திலே புறநகர்ப் பகுதியிலே காலை 9 மணியிலிருந்து 1-00 மணி வரை, 2-00 மணியிலிருந்து 6-00 மணி வரை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே நான் கேட்டுக்கொள்வது, கிராமங்களிலே வாழ்கின்ற மக்கள் வேலைக்குச் சீக்கிரமாகச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அந்தக் கடையை முன்கூட்டியே திறக்க வேண்டும். அதை 7½ மணிக்குத் தொடங்கி 11 மணிக்கு முடித்து விடலாம். மதியம் வேலைக்குப் போய்விட்டு வந்து 4-00 மணிக்கு வந்து 8-00 மணிக்கு கடையை அடைக்கலாம். அப்படி மாற்றிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல வறட்சி நிவாரணங்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள், Rural Development Banks பொறுத்தவரை நாம் வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி பண்ணினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பண்ணிக்கொடுத்தார்கள். L.D. பேங்கிலே கடன் வாங்கியவர்களுக்கும் அதை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சிறு வணிகர்களுக்காகவும் சிறு விவசாயிகளுக்காகவும் கடன்பட்டிருக்கிறார்கள் என்பதற்காகக் கொடுக்கப்படுவது. பெரிய விவசாயிகளுக்கு அந்தச் சலுகைகள் இல்லை என்பதால்தான் நிலவள வங்கியிலே தரப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு மணித்துளியில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. க. பாரமலை:** நிலவள வங்கிகளில் விவசாயம் சார்ந்த கடனுதவி வாங்கியவர்களுக்கு அது applicable ஆவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, வட்டி வீதத்திலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரமலை, தேடிப் பார்த்து அப்புறம் கொடுக்கலாம்.

**திரு. க. பாரமலை:** பொதுவாக மற்ற வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி கொடுக்கிற வட்டி 9 சதவீதம். அந்தக் காலத்திலே நமக்கு 7 சதவீதத்தில் கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இன்று மற்ற வங்கிகளிலே கடன் வட்டி வீதம் குறைக்கப்பட்டாலும்கூட, கூட்டுறவு வங்கிகளிலே வட்டி குறைக்கப்படவில்லை. அதைக் குறைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியபடி நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை விவசாயிகளுக்கு வட்டிக் குறைப்பை ஏற்கெனவே செய்திருக்கிறார்கள். இருந்தாலும், மீண்டும் இங்கே சில அறிவிப்புகளை அறிவிக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள்



சொல்லியிருக்கிறார்கள். நான் பேசுகிறபோது, அந்த அறிவிப்பில் அந்தச் சலுகைகள் பற்றி அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. பாரமலை, பேச்சை நிறைவு செய்துவிடுங்கள்.

**திரு. க. பாரமலை:** அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்றே ஒன்று. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், இவற்றிலே உள்ள வட்டி வீதம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாகத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே மனை வாங்குவதற்கு வட்டி வீதம் 19 சதவீதம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கூட்டுறவு நகர வங்கிகளிலே கடன் வாங்கினால் 13 சதவீதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது, நகரத்திலே இருப்பவர்களைக் காட்டிலும், ஏழ்மையில் வாழ்ந்துகொண்டிருக்கிற கிராம மக்கள் கடன் வாங்குகிற போது இந்த 19 சதவீதம் என்பது குறைக்கப்படவேண்டும் அதைவிட கூட இருப்பது சரி இல்லை என்பதைச் சொல்லி, அதை மாற்றித் தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டு, பேசுவதற்கு இந்த வாய்ப்பை அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி, சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'Division Bench' - It is before a Division Bench- இரண்டு பேர் அடங்கிய Bench-க்குப் பெயர் Division Bench. அது ஆட்சிச் சொல்லகராதியிலே 'பகுதி நடுவர் ஆயம்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** It is before a Full Bench.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ்.ஆர்.பி., அதாவது, 'ஆயம்' என்பது அருந்தமிழ்ச் சொல். ஆயம் என்பதற்கு எளிய தமிழ்ச் சொல் 'குழு' என்பதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டச் சொல்லகராதியைத் தான் படித்தீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'ஆயம்' என்றால்...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சட்டச் சொல்லகராதியில் 'ஆயம்' என்கிற சொல்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'முழு நடுவர் ஆயம்'...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'ஆயம்' என்றால் 'குழு' என்றுதான் பொருள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 'பகுதி நடுவர் ஆயம்' 'முழு நடுவர் ஆயம்' என்ற சொற்கள்தான் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. 'நீள் இருக்கை விசிப்பலகை' என்ற சொற்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதிலே 'நடுவர் ஆயம்', 'பகுதி நடுவர் ஆயம்' என்பது 'Division Bench'. 'முழு நடுவர் ஆயம்' என்பது Full Bench இதுதான் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'ஆயம்' என்பது சங்கத் தமிழ்ச் சொல். 'குழு' என்பதுதான் பழகு தமிழ்ச் சொல். அந்தச் சொல்லைத்தான் அமைச்சர் அவர்கள் பயன்படுத்தினார்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இருக்கிற சொல்தான் கணக்கே தவிர, பயன்படுத்தினார் என்று சொல்வது சரி அல்ல.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அதைக் கொடுங்கள். உரிமை மீறல் பிரச்சினை கொண்டு வந்துவிடுவீர்கள். கொடுங்கள்; அதிலே 'குழு' என்று இருக்கிறது. 'குழு' என்பது அதிலேதான் இருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** நான் கண்டிப்பாகக் கொண்டு வரமாட்டேன். நான் கொண்டுவருவதாக இல்லை. சரியாக நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அது நான் கொடுத்தது.



**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** 'பகுதி நடுவர் ஆயம்' என்றும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, அந்தப் புத்தகமே நான்தான் உங்களுக்குக் கொடுத்தது. அதிலே நானே எடுத்து தருகிறேன், கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவர் அவர்களே...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Division Bench என்று சொன்னால் 'பகுதி நடுவர் ஆயம்' High Court-லே இரண்டு Bench-கள் இருக்கின்றன. ஒன்று, Division Bench இன்னொன்று Full Bench; அதாவது Larger Bench; Larger Bench-க்கு இதிலே பொருள் போடவில்லை. 'பகுதி நடுவர் ஆயம்' என்பது Division Bench. Full Bench என்பது 'முழு நடுவர் ஆயம்'. இந்த இரண்டும் தான் இருக்கிறதே தவிர, இவை தவிர வேறு பொருள் தரப்பட இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதற்குத்தான், விளக்கம் சொல்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிட்டிருக்கிறார்; நீங்கள் சொல்கிறீர்கள். அதுவும் இருக்கிறது. வேறு பொருள் நீள் இருக்கை விசிப்பலகை' என்றும் இருக்கிறது. அந்தப் பொருள்தான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. எஸ்.ஆர்.பி. அவர்களே, உட்காருங்கள். நான் நீண்டகாலம் தமிழாசிரியராக வேலை பார்த்தவன், அதனாலே சொல்கிறேன். 'ஆயம்' என்பதற்குக் 'குழு' என்பதுதான் பழகு தமிழ்ச் சொல்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** ஆனால், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற சொல்லைத்தான் நான் சொல்கிறேன். வேறு பல பொருட்கள் இருக்கலாம். இது சட்டச் சொல்லகராதி. இந்தச் சட்டச் சொல்லகராதியிலே என்ன சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் நான் சொல்கிறேன்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர்.பி. அவர்கள் ஒரு அகராதியை நம்புகிறார். ஆட்சிச் சொல்லகராதியை நான்

கையிலே வைத்திருக்கிறேன். இதிலே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆட்சிச் சொல்லகராதி பக்கம் 33-லே 'Bench' என்பதற்கு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கூறியவாறு, 'நீள் இருக்கை; விசிப்பலகை; நடுவர் ஆயம்' என்று கூறிவிட்டு, 'Bench' என்பதற்கு 'நீதிபதிகளின் குழு' என்றும் கூறப்பட்டிருக்கிறது. இதுதான் சரியான விளக்கம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். அடுத்து, திரு. மே.ப. காமராஜ்.

*முற்பகல் 11-05*

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004ஆம் ஆண்டிற்கான கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதே நேரத்தில் எங்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவரும், மக்கள் காவலருமான டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமை தாயகத்தினுடைய தலைவர் சின்ன அய்யா அவர்களுக்கும் எங்கள் கட்சியினுடைய தலைவர் திரு. ஜி.கே. மணி, எம்.எல்.ஏ. அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் என்னுடைய கருத்துகளைத் தெரிவிக்கின்றேன்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள் மக்கள் சாசனம் என்று ஒரு புதிய புத்தகமாக இந்தத் துறையின் செயல்பாடு குறித்து எடுத்துக் கூறியது முன்னுதாரணமானது. தமிழகத்தில் உள்ள பலதரப்பட்ட பெரும்பான்மை மக்களின், குறிப்பாக நலிந்த பிரிவு பாட்டாளி ஏழை மக்களின் வாழ்க்கைத் தரம் உயர பொருளாதரக் கடனுதவி வழங்குவது கூட்டுறவுத் துறை. அந்தத் துறை தொய்வின்றிச் செயல்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். கூட்டுறவே நாட்டுயர்வு என்ற நிலை போய் கூட்டுறவு not உயர்வாக இருப்பது தற்போதைய நிலையாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றேன்.

அரசு, மக்களுக்கு வழங்கும் கடன் தள்ளுபடி, இவற்றால் ஏற்படும் நிதி இழப்பை உடனடியாகக் கூட்டுறவுத் துறைக்கு வழங்கப்பட வேண்டும் என்பது முக்கியம். அப்போதுதான் கூட்டுறவு நிறுவனங்கள்



நலிவடையாமல் செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் மேம்பாடு கருதி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் மூலம் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுகிறது. ஆனால் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்ட கடன் பல கோடி ரூபாய் வசூலாகாமல் உள்ளது. திறமை இல்லாத நிர்வாகம், அரசு அறிவிக்கும் கடன் தள்ளுபடி, நிர்வாகிகள் சுரண்டல் போன்ற பல காரணங்களாலும், இன்றைக்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் பணியாற்றுகின்ற செயலாளர்களின் போக்கின் காரணமாகவும்; அவர்கள் மட்டும் வசதி வாய்ப்பைப் பெருக்கிக் கொண்டும், இன்றைக்குத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். எனவே, இப்போது இந்தத் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பெரும் நஷ்டம் ஏற்பட்டு அவை கோமா நிலையை அடைந்துள்ளன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டுகின்றேன். இதற்கெல்லாம் காரணம் பெரும்பாலான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றிக்கொண்டு இருக்கக்கூடிய செயலாளர்கள் இடம் மாற்றம் செய்யப்படாமல் அதே இடத்தில் அவர்களைப் பணி அமர்த்துவதுதான். அதன் காரணமாக பல்வேறு குறைகள், பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு அந்த வங்கிகள் எல்லாம் நஷ்டம் அடைகிற நிலை இருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

தற்போது, தமிழகத்தில் 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1,152 வங்கிகள் திவால் ஆகி உள்ளதாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடு குறித்த உயர்மட்டக் குழு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளதாகச் செய்தி வந்துள்ளது. எனவே, இம்மாதிரி வங்கிகளைத் தலை நிமிர வைக்க வேண்டுமானால் சுமார் 1,500 கோர்டி ரூபாய் நிதி ஒதுக்கித் தர வேண்டும். இல்லையென்றால் அவற்றையெல்லாம் கலைத்துவிட்டு நன்றாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அருகில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் இணைத்துச் செயல்பட வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டுமானால் உடனடியாக கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தலுக்கான கால அட்டவணையைத் தெளிவாக வரையறை செய்து மாநிலம் முழுவதும் ஒரே மாதிரி நடைபெறச் செய்ய வேண்டும். பொதுத் தேர்தல் நடத்த

கடுமையான சட்டங்கள் உள்ளது போல ஆறு மாதத்திற்குள் கூட்டுறவுத் தேர்தல்களை நடத்தியே ஆக வேண்டும் என்கின்ற சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அரசு நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதைச் சுட்டிக்காட்டியே காலம் தாழ்த்தாமல் சிறப்புத் திட்டத்தை வகுத்துத் தேர்தல் நடத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைத் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. அரசுச் சொத்தைப் பாதுகாக்க வேண்டும்; உருவாக்க வேண்டுமே தவிர, இருப்பதைத் தனியாருக்குக் கொடுப்பதை எந்தச் சூழ்நிலையிலும் ஏற்க முடியாது. சாரம் கூட்டுறவு நூற்பாலை பாதுகாக்கப்பட வேண்டும். அதேபோல சேலம் கூட்டுறவு நூற்பாலை மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளையும் புனரமைக்க வேண்டும்; புத்துயிர் ஊட்ட வேண்டும்; மூடிய நூற்பாலைகளைத் திறக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு கடந்த ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் நாள் பல மாநில கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருந்தும் வகையில் Model Co-operative Society Act என்பதை, மாதிரி கூட்டுறவுச் சட்டத்தினை அமலுக்குக் கொண்டு வந்துள்ளது. தமிழகத்தில் கடந்த 1976 ஜூன் மாதம் முதல் சுமார் 27 ஆண்டுகளாகக் கூட்டுறவு நிறுவனங்கள் அனைத்தும் தனி அதிகாரிகள் கட்டுப்பாட்டிலேயே செயல்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-10

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளிடமிருந்து எங்களுடைய துறையிலே இருக்கிற 16 மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கும் வரவேண்டியது 115 கோடி ரூபாய்; அந்த நூற்பாலைகள் எல்லாம் செலுத்தவேண்டிய கடன்பாக்கிகள் வசூலிக்கப்பட முடியாமல் சென்ற அரசிலே நிலுவையிலே இருந்தன. அவற்றை எல்லாம் இப்போது கடுமையான நடவடிக்கைகளின் மூலமாக வசூல் செய்கின்ற ஒரு நிலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. சுமார் 4 ஆண்டு காலம் மட்டுமே கூட்டுறவு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளின்கீழ் இயங்கி வந்தன. மீதம் உள்ள 23 ஆண்டுகள், அரசு அதிகாரிகள் நிர்வாகப் பொறுப்பை ஏற்று வந்தனர். இதனால் அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களும் சீரழிந்த



நிலையில் உள்ளதால் கூட்டுறவு வங்கிகளில் 40 விழுக்காடு வங்கிகள் நட்டத்தில் இயங்கி வருகின்றன. பல மாநிலங்கள் இப்புதிய சட்டத்தை அமல்படுத்தியுள்ளன. எனவே, தமிழக அரசு கூட்டுறவு வங்கிகளைக் காக்கவும், ஜனநாயகத்தை மலரச் செய்யவும் மாதிரி கூட்டுறவுச் சட்டத்தைத் தமிழகத்தில் உடனடியாக அமல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுத் துறையில் உள்ள பதவிகளுக்குக் கூட்டுறவுப் பயிற்சி முடித்தவர்கள், பட்டதாரிகள் விண்ணப்பிக்கும்போது அவர்களுக்கு வயது வரம்பு நிர்ணயம் செய்வதை இரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க, முக்கியமாக வருவாய் ஈட்டிக் கொடுப்பது நகைக் கடன். மத்திய கூட்டுறவு வங்கிகளில் நகை மதிப்பீட்டாளர்களாக உள்ள படித்த இளைஞர்கள், கூட்டுறவு பட்டயப் பயிற்சி படித்தவர்கள் தினக்கூலி அடிப்படையில் பகுதி நேரப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் அந்த வேலை மட்டும் செய்யாமல், அனைத்து வேலைகளையும் அந்த வங்கிகளிலே செய்து வருகின்றனர். எனவே, இவர்களை முழுநேரப் பணியாளர்களாக நியமனம் செய்ய வேண்டும் என சேலம் தொழிலாளர் ஆய்வாளர் அளித்த 31-10-2002 தீர்ப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளதை நிறைவேற்றி அரசு பணி நிரந்தரம் செய்ய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு உத்தரவிட வேண்டும் என அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

கூட்டுறவுச் சங்கங்கள், வீட்டுவசதிச் சங்கம் போன்றவை விதி முறைகளைத் தளர்த்தி வட்டி விகிதத்தைக் குறைத்து கடன் வழங்க வேண்டும். அப்போதுதான் பிற வணிக வங்கிகளோடு போட்டியிட முடியும். இதைச் சரி செய்யாவிட்டால் பெருத்த நஷ்டம் ஏற்படும். ஏனென்றால் ரிசர்வ் வங்கியே வட்டி விகிதத்தை 5.5 சதவீதமாகக் குறைத்துள்ளது. வணிக வங்கி 8.5 சதவீதம் என்ற அடிப்படையில் வீட்டு வசதிக் கடன் கொடுத்து வருகின்றார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவு வங்கிகளில் வட்டி 14.5 சதவீதம் முதல் 18 சதவீதம் வரை இருப்பதற்குக் காரணம் என்ன? வட்டி விகிதத்தைக் குறைக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன? நியாய விலைக் கடைகளின் மூலம் மாதாமாதம் விநியோகிக்கப்படும் அரிசியின் அளவு என்ன? ஓர் ஆண்டுக்கு சராசரியாக அரிசியின் தேவை

என்ன? அரசாங்கத்திடம் இன்றைய நிலையில் எவ்வளவு அரிசி இருப்பு உள்ளது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** அரசு நேரடியாக நெல் கொள்முதல் செய்யாமல் மத்திய அரசுக்காகவே கொள்முதல் செய்வதால் மாநில அரசுக்கு, நிதி வகையில் ஆண்டுக்கு எவ்வளவு மிச்சம்? இலாபம் எவ்வளவு? மைய அரசின் பங்காக சுமார் 4.9 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மாதந்தோறும் கிடைக்கிறது. இதில் நியாய விலைக் கடைகள் மூலம் சுமார் 2.25 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி வழங்கப்படுகிறது. மீதமுள்ள 2.65 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசிக்கு மைய அரசின் பொருளாதார விலைக்கும், விநியோக வழங்கல் விலைக்கும் உள்ள வித்தியாசத் தொகையை மைய அரசு மாநில அரசுக்கு வழங்குவதால் தமிழக அரசுக்கு என்ன வருமானம் கிடைக்கிறது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டுகிறேன்.

1-7-2002 முதல் நியாய விலைக் கடைகளில் அரிசி வழங்குவதில் புதிய முறை, கூப்பன் முறை, பின்னால் குடும்பத் தலைவர் கையொப்பமிடுதல் முறை, கடைப்பிடிக்கப்படுவதால், நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை ஆகும் அரிசியின் அளவு குறைந்துள்ளது. இதனால் உணவு மானியம் வழங்குவதில் அரசுக்கு என்ன மிச்சம்?

வறுமைக் கோட்டிற்குக் கீழ், வறுமைக் கோட்டிற்கு மேல் என்ற வகைப்பாடு எந்த அளவுகோலை வைத்து, எந்த அலகு குறியீடுகளைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது?

விவசாயிகளின் துணைத் தொழில் பால் உற்பத்தியாகும். உற்பத்தி செய்யப்படும் பாலுக்கு 90 நாட்கள் முதல் 120 நாட்கள் வரை பணம் பட்டுவாடா செய்ய காலதாமதமாகிறது. ஆனால், விவசாயிகளிடமிருந்து பெறப்படும் பாலுக்கு, பால் கூட்டுறவு ஒன்றியம் அன்றே பணத்தை பொதுமக்களிடமிருந்து, பால் நுகர்வோரிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. எனவே, பால் கூட்டுறவு ஒன்றியம் தனது நிர்வாகச் செலவைக் குறைத்து, மாதா மாதம் பால்



உற்பத்தியாளர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்ய அரசு உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களுக்கு நூறு நாட்கள் பால் பணம் பட்டுவாடா காலதாமதமாகி இருப்பதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோன்று இப்போது தமிழகத்தில் எங்கும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சில இடங்களில், 40 நாட்கள் முதல் 50 நாட்கள் வரை பட்டுவாடா செய்யவேண்டியிருக்கக்கூடிய இடங்களில், அந்த ஒன்றியங்களே வங்கிகள் மூலமாகக் கடனைப் பெற்று பட்டுவாடா செய்வதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதுவும் இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. என்னுடைய சேலம் மாவட்டத்திலே ஒரு சில இடங்களில் அப்படி இருக்கிறது. அதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியங்களிலேயிருந்து, சங்கங்களுக்குத் தரக்கூடிய அந்த வாரக் கணக்குகளிலே வேண்டுமானால் அவர் சொல்கிற அந்த 90 நாட்கள், 100 நாட்கள் இருக்கலாம். உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்படுகிற பால் பணம் பட்டுவாடா எங்கும் அதுபோல இல்லை.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கோரிக்கைகளை மட்டும் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** இரண்டே இரண்டு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய திட்டமான அனைத்து கிராம மகளிருக்கும் சுகாதாரக் கழிப்பிட வசதித் திட்டம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதை நான் இங்கே சுட்டிக்காட்டி என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன் *(மேசையைத் தட்டும் ஒலி)*.

இதிலே ஒரு சில இடங்களில் தண்ணீர் வசதி இல்லாமல் பூட்டி வைத்திருக்கின்றார்கள். அதற்கு உடனடியாகத் தண்ணீர் வசதி செய்து அதைத் திறந்து பொதுமக்கள் பயன்படுத்த ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதேபோலப் பெண்களுடைய.....

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் கழிப்பிட சுகாதார வளாகங்களிலே தண்ணீர் வசதி இல்லையென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். தற்போது வறட்சி நிலைமை; மிகப் பெரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு உடனடியாக அந்தத் தண்ணீர்ப் பிரச்சினைக்கு உண்டான வழிவகைகள் செய்து தரப்பட்டு, பூட்டி வைத்து இருக்கின்ற கழிப்பிடங்களை உடனடியாகத் திறப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய இந்த அரசு கவனத்தில் கொண்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்து அமர்கிறேன்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்களை நான் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்திருக்கிறேன். இதுவரை ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட இத்தகைய சுகாதார வளாகங்கள் மகளிருக்காகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் 170 வளாகங்கள் மட்டுமே தண்ணீர் வசதியின்றிப் பூட்டி வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கழிப்பிட வளாகங்களுக்கும், சுகாதார வளாகங்களுக்கும் தண்ணீர் வசதி செய்து தர உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கோரிக்கை. பெண்களுடைய கோரிக்கையை ஏற்று நிறைவேற்றிய நீங்கள்—ஆண்களுடைய கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு, ஆண்களுக்காகக் கழிப்பிட வசதியை ஏற்படுத்த சுகாதாரக் கழிப்பிடம் கட்டித்தர அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஆணையிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கோரிக்கை எழுந்து, இப்போது



முதல் கட்டமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆண்களுக்கும் சுகாதார வளாகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. படிப்படியாக அனைத்து மாவட்டங்களுக்கும் இந்தத் திட்டம் விரிவாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி). ஆனால் அதற்கும் சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்துதான் நிதியை எடுத்துக்கொள்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் நிதியில் கிராம ஊராட்சிக்கு மட்டும் என்று இல்லாமல், பேரூராட்சிகளுக்கு ஒதுக்கப்படுகிற அந்த சுகாதார கழிப்பிட வசதிக்கு ஒதுக்குகிறபோது, அதற்கும் அரசு ஆணை வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தாரமங்கலம் தொகுதியில் 3 இடங்களில் பிற்பட்டோர் விடுதி கட்டவேண்டியிருக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக எதுவும் தேர்வு செய்யப்படவில்லை. இந்த வருடம் தேர்வு செய்யவிருக்கின்றார்களா எனத் தெரியவில்லை. ஏன் என்றால், தாரமங்கலத்திலுள்ள பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் சுமார் 50 பெண்கள் தனியார் விடுதியில் பாதுகாப்பற்ற முறையில் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களுக்காக இந்த நிதியாண்டில் அங்கே B.C. Hostel ஒன்றைக் கட்டித்தர வேண்டுமாய் நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

***மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டுகூட பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாகவும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாகவும் 100 ஹாஸ்டல்களை கட்ட உத்தரவிட்டுள்ளார்கள். ஆனால் தாரமங்கலத்தில் ஏற்கெனவே விடுதி ஒன்று இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைபபட்டிருக்கிறேன். அதேபோல, தாரமங்கலத்திலுள்ள மாணவர் ஹாஸ்டலிலே காம்பவுண்ட் சுவரைக் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் அனுமதித்திருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் ஒரேயொரு கோரிக்கை; மிக நீண்டகாலக் கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதை எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை, இல்லை. ஒரேயொரு கோரிக்கை; ஒரேயொரு கோரிக்கைதான். என்னுடைய தாரமங்கலம் தொகுதியில் மேச்சேரி பேரூராட்சியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் 1956 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களே தாரமங்கலத்துக்காரர்.

**திரு. மே.ப. காமராஜ்:** இந்த ஒரேயொரு கோரிக்கைதான் இருக்கிறது. இது நீண்டகாலக் கோரிக்கை. 1½ ஏக்கர் நிலம் கொண்ட அந்த இடம் ஊராட்சி ஒன்றிய ஊரக மருத்துவமனையாக இருந்து, பின்பு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு, இன்றுவரை எந்தவித கட்டட விஸ்தரிப்பும் இல்லாமல் உள்ளது. எனவே, இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அதிகப்படியான மக்கள் மருத்துவ வசதிக்காக வருகின்றனர். இங்கே தினசரி புற நோயாளிகள் சுமார் 260 பேர் வருகிறார்கள். வருடத்திற்கு 93 ஆயிரத்து, 476 பேர் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்ற கணக்கு உள்ளது. இது சேலம் மாவட்டத்திலேயுள்ள 70 ஆரம்ப சுகாதார நிலையங்களிலே இரண்டாவது இடத்திலே உள்ளது. குழந்தைப் பிறப்பு விகிதத்திலே பார்க்கிறபோது, 1996 ஆம் வருடம், மாதக் கணக்கிலே சுமார் 48 ஆகவும், வருடக் கணக்கிலே பார்க்கிறபோது 571 ஆகவும் உள்ளது. இப்போது 2002 ஆம் வருடத்தினுடைய கணக்கைப் பார்க்கிறபோது, மாதத்திற்கு 35 குழந்தைகளும், வருடத்திற்கு 419 குழந்தைகளும் பிறப்பதாகக் கணக்கு இருக்கின்றது. எனவே, இந்த எண்ணிக்கையில் பார்க்கிறபொழுது மாநிலத்திலேயே மூன்றாவது இடத்திலே, குழந்தை பிறப்புக் கணக்கிலே இருக்கின்றது. எனவே, இவ்வளவு பேர் அங்கே வருகின்றனர். அங்கே குழந்தை பிறப்பதற்காக ஒரேயொரு அறைதான் இருக்கிறது. எனவே, ஒரு குழந்தை பிறந்தால் அடுத்த 4 மணி



நேரத்திற்குள்ளாக அவர்கள் அங்கேயிருந்து காலிசெய்யப்பட்டு உடனடியாக அடுத்தவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், அதோடு உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் கணக்கில் கொண்டுதான் மாண்புமிகு உறுப்பினர் காமராஜ் அவர்கள் இங்கே புள்ளிவிவரக் கணக்கைச் சொன்னதைப்போல, மேச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் சேலம் மாவட்டத்திலேயே அதிகப் பிரசவங்கள் பார்க்கப்படுகிற ஆரம்ப சுகாதார நிலையம் என்ற பெயரைப்பெற்று, மாநிலத்திலேயே மூன்றாவது வரிசையிலேயும் அது இடம் பெற்றிருக்கிறது. மேலும் அதிகப்படியான வெளிப்புற நோயாளிகள் அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திலே வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அந்த அடிப்படையில்தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையிலே உதித்த, அதாவது அவர்களுடைய Brain Child என்று சொல்லப்படுகிற, அந்த தரம் உயர்த்தப்படுகிற, 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக ஆக்கப்பட வேண்டுமென்ற அந்த சீரிய திட்டத்தின் அடிப்படையில் இந்த ஆண்டு மட்டும் தமிழகத்திலே 35 ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதிலே ஒன்றாக மேச்சேரியும் சேர்ந்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மே.ப. காமராஜ்:** தலைவர் அவர்களே........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உரையை முடித்துக்கொள்ளுங்கள், அவ்வளவுதான்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் (குறுக்கீடு) அவ்வளவுதான், முடித்தாயிற்று. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சீரிய திட்டத்தை ஏற்படுத்தி, அதிலே எங்களுக்கு முன்னுரிமை கொடுத்ததற்காக நன்றி தெரிவித்து, இந்த அளவுக்குப் பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கு நன்றிகூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. விதி 110-ன்கீழ் அறிக்கை

### அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் குறித்த மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-25

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு பேரவை விதி 110-ன்கீழ் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன்.

கடந்த 10, 12 நாட்களாக அரசு, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் விஷயத்தில் எவ்வளவு பொறுமையாகச் சகிப்புத் தன்மையோடு நடந்து கொண்டது என்பதைத் தாங்களும் அறிவீர்கள். இந்த மன்றமும் நன்றாக அறியும். ஆனால், இங்கே பேசுகிற எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவரும், இந்த அரசைக் குறை சொல்ல முயல்கிறார்களே தவிர, அந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற மாணவர்களுக்குத் தங்களுடைய வேண்டுகோளாக எதையும் வைத்ததாகச் செய்திகள் இல்லை. எனவே, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற மாணவர்கள் வற்புறுத்தி வருகிற ஒரு விஷயத்தில் அரசுக்கு இருக்கிற அதிகாரத்தை இந்த மன்றத்திலே விளக்குவது என்னுடைய கடமையாகும்.



போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு மற்றும் பயிற்சி மாணவ, மாணவிகள் தங்கள் கோரிக்கைகளை அரசிடம் சொல்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துகிற வகையில், சென்னை உயர் நீதிமன்றம் 01-05-2003 ஆம் தேதிக்குள் மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு, வகுப்புகளுக்குத் திரும்ப வேண்டும் என்ற அறிவுரையையும், ஒரு வார காலத்திற்குள் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட உதவித் தொகை மற்றும் கல்விக் கட்டணம் பற்றிய பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அரசுக்கு ஆலோசனையையும் வழங்கி உத்தரவு பிறப்பித்தது.

மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் மாணவர்களோடு நிபந்தனையின்றி அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மாணவர்கள் தங்களுடைய போராட்டத்தைக் கைவிடாத நிலையிலும்கூட அரசு இதில் கௌரவம் பார்க்காமல், பிடிவாதம் இல்லாமல் திறந்த மனதோடு மாணவப் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தியது. இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி நானும் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டேன். சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றிப் பேசத்தான் உயர் நீதிமன்றம் சொன்னது என்றாலும், தனியார் மருத்துவக் கல்லூரி தொடங்க அரசு அனுமதிக்கக்கூடாது என்பதை மட்டுமே மாணவப் பிரதிநிதிகள் வற்புறுத்தினார்கள். அப்போது இந்த விஷயத்தில் அரசுக்கு இருக்கிற அதிகார வரம்பை நாங்கள் தெளிவாக எடுத்துச் சொன்னோம். மத்திய அரசின் அதிகார வரம்பிற்குட்பட்ட பிரச்சினை இது என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்தினோம்.

The policy in the matter of establishment of a new medical or dental college now rests with the Central Government alone. The State Government's role has been limited to examining the desirability and feasibility of the location of the proposed medical college.

இந்த அதிகார வரம்புகள் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளன. கிருபானந்தவாரியார் மெடிக்கல் எஜுகேஷனல் அண்டு சேரிட்டபிள் டிரஸ்ட் தொடுத்த வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் இது தெளிவாக்கப்பட்டுள்ளது. Hindustan Dental College Trust தொடுத்த வழக்கில் மாநில அரசு Essentiality Certificate கொடுக்காத பட்சத்தில்கூட Dental Council can decide otherwise என்றும் சென்னை

உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. Chennai Meenakshi Ammal Trust, Essentiality Certificate பெற்றதுகூட சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி சான்றிதழை வழங்கச் சொல்லி அரசுக்கு உத்தரவிட்டு, அதை இந்த அரசு எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் S.L.P. யை தாக்கல் செய்து, அதுவும் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், உச்ச நீதிமன்றமே மேற்படி Essentiality Certificate வழங்க வேண்டும் என்று சொல்லப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் பெறப்பட்டது ஆகும். The State Government was compelled by the orders of the Supreme Court to issue the Essentiality Certificate.

இந்த நிலையில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் துவங்கக் கூடாது; அதற்கு மாநில அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று சொல்லி இந்த அரசை எதிர்த்து மாணவர்கள் போராடுவதில் அர்த்தமே இல்லை. அவர்கள் போராட வேண்டும் என்று சொன்னால், உத்தரவு பிறப்பித்த உச்ச நீதிமன்றத்தையோ அல்லது மைய அரசையோ எதிர்த்துத்தான் போராட வேண்டும்.

In the recent Judgement of the Supreme Court comprising of 11 Judges reported in 2002, Volume 8. Supreme Court cases, page 481 (1) it has been held that the right to establish educational institution is a fundamental right flowing under Article 19, Sub-clause (6) and (26) (A) of the Constitution even for the non-minorities while the said right for minority is found under Article 30 also.

*முற்பகல் 11-30*

மேலும் The Indian Medical Council Amendment Act, 1993, Section 10 (a)(i)-ன்படி தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசுக்கு மட்டும்தான் உள்ளது. புதிய தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி அளிக்கின்ற அதிகாரத்தை தன் கையில் வைத்துள்ள மத்திய அரசை எதிர்த்துப் போராடுவதை விட்டுவிட்டு, மாநில அரசை எதிர்த்து மாணவர்கள் போராடுவது அர்த்தமற்றது. இதில் மாநில அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்ற உண்மை, எல்லாம் தெரிந்த மாணவர்களுக்குப் புரியாதது அல்ல. இருந்தும் அவர்கள் போராடுகிறார்கள் என்றால் மாணவர்களை யாரோ சிலர் தூண்டுகிறார்கள் என்பதுதான் உண்மை.



1998 ஆம் ஆண்டு அரசு ஆணை எண் 347, நாள் 18-06-1998-ன்படி புதிய சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பல் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி மறுக்கப்படுகின்றது என்று முந்தைய தி.மு.க. அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால், அந்த அரசு ஆணை செல்லத்தக்கதல்ல, It is null and void என்று சென்னை உயர் நீதிமன்றம் 03-03-1999 அன்று தீர்ப்பு அளித்துவிட்டது. அதற்குப் பிறகு, டாக்டர் லலிதா காமேஸ்வரன் அவர்கள் தலைமையில் கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டி அளித்த பரிந்துரையின்பேரில் "New Medical colleges have to be established in unserved areas preferably 100 kilo metres away from the existing medical college and private trusts which can shoulder the responsibility could be entrusted with the task" என்ற ஷரத்தோடு அரசு ஆணை எண் 442, நாள் 27-09-1999-ல் தி.மு.க அரசால் பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசு ஆணை நடைமுறையில் இருந்தபோது, இதே மாணவர்களும், இவர்களுக்கு ஆதரவு கொடுக்கும் மருத்துவர்களும்—இந்த P.G. மாணவர்கள்தான்—அன்றைக்கு undergraduate மாணவர்களாக இருந்தார்கள்—ஏன் இந்த அரசு ஆணையை எதிர்த்து அன்றைக்கு அவர்கள் போராடவில்லை?

அதே அரசு ஆணையின் ஷரத்துகளோடு, 100 கிலோ மீட்டர் தூரத்திற்கு மட்டும் விதிவிலக்கு அளித்து, இந்த அரசு பிறப்பித்த அரசு ஆணை எண் 211, நாள் 13-8-2001-ஐ மட்டும் இரத்து செய்ய வேண்டுமென்று கூறுவதில் இருந்தே, இந்த அரசு எதைச் செய்தாலும் எதிர்க்க வேண்டுமென்ற அரசியல் பின்னணியோடு இந்தப் போராட்டம் சிலரால் மறைமுகமாக மாணவர்களை முன்னிறுத்தி நடத்தப்படுகிறது என்பது தெளிவாகிறது. அப்படி 100 கிலோ மீட்டர் தூரத்தை இந்த அரசு தளர்த்தவில்லை என்று சொன்னால், இன்றைக்கு தேனியிலும், வேலூரிலும், கன்னியாகுமரியிலும் மருத்துவக் கல்லூரி ஆரம்பித்திருக்க முடியாது. காரணம் இந்த இடங்களிலிருந்து 100 கிலோ மீட்டர் தூரத்தில் ஏற்கெனவே மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளான கூடுதல் உதவித் தொகை, கல்விக் கட்டணக் குறைப்பு, சில படிப்புகளுக்கு அங்கீகாரம், திருச்சி மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் போன்றவற்றை கருணையுடன் பரிசீலிப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எப்போதும் தயாராக இருக்கிறது.

திருச்சி கல்லூரிக்கு அங்கீகாரம் மற்றும் பல ஆண்டுகளாக பெறப்படாமல் இருந்த பட்ட மேற்படிப்புகளுக்கு அங்கீகாரம் இவற்றிற்கு, இந்திய மருத்துவக் கழகம் மூலமாக ஆய்வுக்கு ஏற்பாடு செய்து, நடவடிக்கை எடுத்திருப்பதே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாணவ, மாணவியர்கள் போராட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டும். தங்களது படிப்பையும், பயிற்சியையும் தொடர வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பெற்றோர்களும், சேவை மனப்பான்மை உள்ள டாக்டர்களும் இது பற்றித் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மஹாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் மட்டும் கிட்டத்தட்ட 60 தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அங்கு மாணவர்களோ, டாக்டர்களோ இதற்கு எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை. தமிழ்நாட்டில் இருக்கின்ற மாணவர்கள் அந்த மாநிலங்களுக்குச் சென்று, படிப்பதை இன்றைக்குப் போராடுகிற மாணவர்களாலோ அல்லது டாக்டர்களாலோ தடுத்து நிறுத்திவிட முடியுமா என்பதை நாமெல்லாம் சிந்தித்து பார்க்க வேண்டும். மேலும் அங்கு படித்துவிட்டு, தமிழ்நாட்டில் வந்து அவர்கள் தொழில் செய்வதை இவர்களாலே தடுத்து நிறுத்திவிட முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தப் போராட்டத்திற்கு அரசு டாக்டர்கள் சங்கம் ஆதரவு தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசு இதற்கு இணங்கவில்லை என்றால் பணிகளைப் புறக்கணிக்கப் போவதாக அரசு டாக்டர்கள் சங்கம் தெரிவித்திருக்கிறது. அரசு டாக்டர்களுக்கும் இந்தப் பிரச்சினைகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய பிரச்சினை இதில் எதுவும் சம்பந்தப்படவில்லை. சம்பந்தமில்லாமல் அவர்கள் இப்படிப்பட்ட போராட்டத்தில் இறங்கினால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் என்பதை மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மக்களை பாதிக்கின்ற எந்தச் செயலையும் இந்த அரசு வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருக்காது. அரசு டாக்டர்கள், தங்களுடைய பணி இன்றியமையாத பணி என்பதை உணரவேண்டும். அதை உணர்ந்து அவர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடக்கூடாது. மாணவர்களின் போராட்டத்தையும் எந்த வகையிலும் அவர்கள் தூண்டிவிடக்கூடாது.



அப்படி பொதுமக்களை பாதிக்கக்கூடிய சட்டவிரோதமான எந்தச் செயலில் ஈடுபட்டாலும், இந்த அரசு அத்தகைய போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக அவர்கள்மீது E.S.M.A. சட்டம் பாயும். அதைப் பயன்படுத்துவதில், பொதுமக்கள் நலன் கருதும் இந்த அரசு எந்தவிதத் தயக்கமும் காட்டாது என்பதைச் சொல்லி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஏ. செல்லையா. (குறுக்கீடுகள்) 110-வது விதியின்கீழே விவாதத்திற்கு இடம் கிடையாது. (குறுக்கீடு) புதிய மரபை, புது விதியையெல்லாம் கொண்டுவராதீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், (குறுக்கீடுகள்), திரு. வி.ஏ. செல்லையா.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அனுமதிக்க முடியாது. திரு. செல்லையா, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதிக்க முடியாது. 110-வது விதியின்கீழ் வைக்கப்படக்கூடிய அறிக்கையின்மீது விவாதத்திற்கு இடம் கிடையாது. அதற்கு விதிமுறையில் இடம் கிடையாது. பேச அனுமதிக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள் (குறுக்கீடுகள்)

## 4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—தொடர்ச்சி

**திரு. வி.ஏ. செல்லையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இந்த ஆண்டு சிறப்பான, அனைத்து தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிதிநிலை அறிக்கையை அளித்து, மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்று வருகின்றது.

இன்று கூட்டுறவு மானியக் கோரிக்கை விவாதத்தில் என்னைப் பேச வாய்ப்பளித்த இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அமைச்சர்... (குறுக்கீடு)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அனுமதிக்காமல் பேசியது எதுவும் அவைக்குறிப்பிலே ஏறாது.

**திரு. வி.ஏ. செல்லையா:** என் நன்றியைத் தெரிவித்து என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன். ஒரு சாதாரணத் தொண்டனான என்னை 2 முறை வையம்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளராக ஆக்கி, மருங்காபுரி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, எத்தனையோ அறிஞர் பெருமக்கள் அமர்ந்த இம்மாமன்றத்தில் என்னையும் அமர்த்தி, பேசவைத்து அழகுபார்த்துக்கொண்டிருக்கும் எங்களின் அன்புத் தாய், தமிழக மக்களின் தமிழ்த் தாய், கழகத்தைக் கட்டிக் காத்துவரும் வீரத்தாய், (மேசையைத் தட்டும் ஒலி), வருங்கால பாரதம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழக முதல்வர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி அம்மாவின் பொற்பாதத்தில் என் நன்றியினைக் காணிக்கையாக்குகின்றேன். எனது தொகுதியில் தேர்தல் பிரசாரத்தின்போது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்து ஓட்டு கேட்டார்கள். அதன் பின்பு பொதுமக்களிடம் நாங்கள் ஒரு சின்ன வாக்குறுதிகூடச் சொல்லி ஓட்டு கேட்கவில்லை. என்ன சொல்லி ஓட்டு கேட்டோம் என்றால் (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முதலில் உட்கார்ந்த மாதிரி உட்காருங்கள்.

**திரு. வி.ஏ. செல்லையா:** ஆண்டுகொண்டிருந்த தி.மு.க. காரர்கள் நமது இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு 5 ஆண்டுகளாக எந்த அளவிற்குத் தொல்லைகளையும், உண்மைக்குப் புறம்பான வழக்குகளையும், எத்தனை ஊழல் குற்றச்சாட்டுகளையும் சொல்லி,



இதய தெய்வம் அம்மாவையும், நமது கழகத்தையும், அழிக்கவும், ஒழிக்கவும் நினைத்துச் செயல்பட்டார்கள் என்பதைத் தமிழகத்தில் உள்ள பொதுமக்களாகிய நீங்கள் நன்கு அறிந்திருக்கின்றீர்கள்.

[பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள்]

இனிமேலும் இந்த அநியாயக்காரர்கள் ஆட்சி வேண்டுமா? சதிகாரர்கள் ஆட்சி வேண்டுமா? என நீங்கள் சிந்தித்துப் பாருங்கள். தில்லுமுல்லுக்காரர்கள் தமிழகத்தை 5 ஆண்டுகளாகச் சீரழித்துக் கொண்டு இருக்கின்றார்கள். இவர்களை விரட்டியடிக்க, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் ஆட்சி, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் மீண்டும் தமிழகத்தில் மலர நீங்களெல்லாம் இரட்டை இலைக்கு வாக்களியுங்கள் என்று மட்டும்தான் சொல்லி ஓட்டு கேட்டோம். வேறு எந்தக் காரணத்தையும் சொல்லியும் நாங்கள் ஓட்டு கேட்கவில்லை. அன்றைக்கு என்ன தீர்ப்பை மக்கள் அளித்தார்கள்? அம்மாவின் சிறந்த நல்லாட்சிதான் மீண்டும் வரவேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிர்வாகத்தைச் சரியான முறையில் செய்யாமல், ஒரு துறையிலாவது நன்றாக செய்து இருந்தார்கள் என்று எவரும் சொல்லும் அளவிற்கு இல்லாமல், நிர்வாகச் சீர்கேட்டைச் செய்து, கடுமையான நிதிநிலை நெருக்கடிக்குத் தமிழக அரசை ஆளாக்கிவிட்டுச் சென்றார்கள். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எதைச் செய்தாலும், எந்த நல்ல திட்டத்தைக் கொண்டு வந்தாலும், நிதிநிலை நெருக்கடியைத் தீர்ப்பதற்கு, நிர்வாகச் சீர்திருத்தம் செய்யும் அனைத்தையும் குறை கூறிப் பேசுவதும், வேண்டுமென்றே திட்டம் போட்டு வெளிநடப்புச் செய்வதும்தான் அவர்களின் கடமை என்று கருதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலுள்ள அரசியல் தலைவர்களில், அறிவில், ஆற்றலில், சிறந்தவர்கள் தி.மு.க.-வினர் மட்டும்தான், வேறு யாரும் இல்லை என்று நினைத்துப் பேசிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் கட்சியில் உள்ளவர்கள் பேசுவதற்கும், அறிக்கை விடுவதற்கும், செயல்பாட்டிற்கும் எங்கள் இதய தெய்வம் அம்மா ஒருவர் மட்டுமே பதிலடி கொடுத்தும், இன்னும் புத்தி வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) என்னமோ இவர்கள்

மட்டும்தான் பொதுநோக்கத்தோடு, அரசியல் செய்வதாக நினைத்துக்கொண்டு, பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், ஏழை எளியோர், உழைக்கும் வர்க்கத்திற்கும், விவசாயிகளுக்கும் அம்மா ஆட்சியில் எதுவும் செய்யவில்லை என்றும், எல்லோருக்கும் பாதிப்பை ஏற்படுத்தி விட்டதாகவும் உண்மைக்கு மாறாகவே பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

*முற்பகல் 11-40*

தி.மு.க.-வினருக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். உங்களைவிட எங்கள் அம்மாவிற்கு பொதுநோக்குப் பார்வை அதிகம் இருந்ததால்தான், தமிழக மக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், ஏழை எளியோர், உழைக்கும் வர்க்கத்திற்கும், விவசாயிகளுக்கும் கடந்த 1991-1996 ஆண்டு ஆட்சிக் காலத்தில் வாரி வாரி சலுகைகளை வழங்கி, பொற்கால ஆட்சி செய்தார்கள் என்பதை மறந்து விட்டார்கள். அந்தப் பொற்கால ஆட்சியைத் தொடர்ந்து நடத்தவிடாமல், மக்களிடம் எங்கள் அம்மா மீது உண்மைக்கு மாறாகச் சொல்லி மக்களை ஏமாற்றி, ஓட்டு வாங்கி, ஆட்சி அமைத்து அவர்களும், அவர்களைச் சார்ந்தவர்களும், வாழ்க்கை முழுவதும் நன்றாக வாழ வழிவகை செய்துகொண்டு ஆட்சி நிர்வாகத்தை, குறிப்பாக நிதி நிர்வாகத்தைச் சீர்குலைத்துவிட்டார்கள்.

எங்கள் அம்மா அவர்கள் வந்தவுடன் தி.மு.க. ஆட்சியில் செய்த சீர்கேட்டை, குறிப்பாக, நிதிநிலையைச் சரிசெய்ய வேண்டியிருப்பதால், எல்லாத் தரப்பினருக்கும் கூடுதல் சலுகைகளைக் கொடுக்கமுடியாத சூழ்நிலை என்றாலும், இன்றைக்கு புதிய, நல்ல பயனான திட்டங்களால் பயன்பெறுவோர் ஏராளம். வருகின்ற காலங்களில், அம்மாவின் நிர்வாகத்தில் இன்னும் என்னென்ன நன்மைகள் நடக்கப் போகின்றன என்பதை நாட்டிலுள்ள அனைவரும் அறியத்தான் போகின்றார்கள். வரும் காலத்தில் தி.மு.க.-வின் தரம்கெட்ட செயல்பாட்டை வெறுத்து தமிழகத்தின் ஒட்டுமொத்த மக்களும் அவர்களை அடியோடு வெறுத்து விரட்டியடிக்கும் காலம் விரைவில் வந்து கொண்டிருக்கின்றது என்பதைக் கூறிக்கொள்கிறேன். அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் அம்மாவின் சிறப்பான ஆட்சிக்கு எதிராக செயல்பட்டு, குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென நினைத்து, அனைத்துத் தரப்பினரையும் தூண்டிவிட்டு போராட்டம் செய்யவிட்டுப் பார்க்கிறார்கள். ஆனால், அனைத்துப் போராட்டங்களையும், இதய தெய்வம் அம்மா அவர்கள் மிகச் சாமர்த்தியமாக சமாளித்து, உண்மையை மக்களுக்குப் புரிய வைத்து வருகின்றார்கள்.



இதய தெய்வம் அம்மா ஆட்சியில் இப்போது என்ன சாதனையைச் செய்துவிட்டார்கள் என்று ஐந்து ஆண்டு காலம் ஆட்சி புரிந்து கஜானாவை காலி செய்தது மட்டுமில்லாமல், தமிழக அரசை நம்பி ஒரு ரூபாய்கூட யாரும் கடன் கொடுக்கமுடியாது என்று சொல்லும் அளவிற்கு தமிழகத்தை ஆளாக்கிவிட்டுச் சென்ற தி.மு.க.-காரர்கள் மனசாட்சி இல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அவர்கள் என்ன சாதனை செய்துவிட்டார் என்பதற்கு உதாரணம் வெளிநாட்டினர் தமிழகத்தில் முதலீடு செய்து தொழில் செய்ய முன்வந்துள்ளார்கள். அதேபோல, உலக வங்கி எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் தமிழகத்திற்குக் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லும் அளவிற்கு இரண்டு ஆண்டுகளில் நிர்வாகத்தை சீர்படுத்தி சாதனை செய்துள்ளார்களே, இது சாதனை இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்திடுவேன் என மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் உறுதி பூண்டு இடைவிடாது பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகளை கணினிமயமாக்கி, தமிழக மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கிகளின் கிளைகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தினை அறிமுகப்படுத்தி பொதுமக்களுக்கு சீரிய சேவைகளைச் செய்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த தி.முக. அரசு கட்டுப்பாடின்றி பணியாளர்களை நியமித்ததால், இன்றைக்கு பல கூட்டுறவுச் சங்கங்கள் அதிக பணியாளர்களைக் கொண்டு நிதிநிலை பாதித்திடும் வகையில் செயல்பட்டுள்ளது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் மூலம் நடந்த முறைகேடுகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் அதிகக் கட்டணங்களில் Gas இணைப்பு அளித்ததில் முறைகேடுகள், சத்துணவுத் திட்டத்திற்காகக் கூட்டுறவு மூலம் பருப்பு கொள்முதல் செய்ததில் முறைகேடுகள் ஆகியவை கடந்த தி.மு.க. ஆட்சியில் இந்தத் துறையில் நடந்திட்ட அவலங்களாகும்.

கூட்டுறவுத் துறை மூலம் குறுகிய மற்றும் நடுத்தரக் கடன்கள் வழங்கும் பணியில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மகளிர் நலன் காத்திடும் வகையில் புதிய தொழில் முனைவோர்க் கடன் திட்டம் 19-10-2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கடன் திட்டத்தின்கீழ் 31-03-2003 வரை 414 மகளிர் தொழில் முனைவோருக்கு ரூ.290.27 இலட்சம் கடனாக வழங்கியுள்ளது. கர்ப்பிணிப் பெண்களுக்கும் பேறுகாலக் கடனாக ரூ.2000/- வரை கடன் அளிக்கப்படுகிறது. 31-3-2003 வரை இத்திட்டத்தின்கீழ் 7,626 கர்ப்பிணிப் பெண்கள் 150.51 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளனர்.

2002-2003 ஆம் ஆண்டு வறட்சியின் காரணமாக 28 மாவட்டங்களில், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக, சிறு மற்றும் குறு விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்கள் சேதமடைந்திருந்தால் அப்பயிர்க் கடனுக்கான வட்டி அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும் என 28-03-2003 அன்று இப்பேரவையில் அம்மா அவர்கள் அறிவித்து, விவசாயிகளின் துயரைப் போக்கியுள்ளார்கள்.

முற்பகல் 11-45

தற்போது நிலவுகின்ற, வரலாறு கண்டிராத வறட்சியால், வேலையின்றி இருக்கும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, தூர் வாரும் பணிகளை எடுத்துச் செய்ய அம்மா அவர்கள் ஆணையிட்டு நடத்தி வருவதால், இன்று விவசாயத் தொழிலாளர்கள் அனைவருக்கும் வேலை கிடைத்து வருகிறது. கடும் வறட்சியால் பொதுமக்களுக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை வந்துவிடக்கூடாது என்று முன்னெச்சரிக்கையாக அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கையில் எனது தொகுதிக்கு மட்டும் 300 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

அம்மா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்கள் அனைத்தும் நல்ல திட்டங்களாக இருக்கின்றன. அம்மா அவர்கள் ஆட்சியில் அம்மா அவர்கள் அறிவிக்கும் அனைத்துத் திட்டங்களும் ஆக்கபூர்வமான திட்டங்கள்; மக்கள் பாராட்டுகின்றார்கள். எதிர்க்கட்சியினர் எப்படிச் சொன்னாலும் மக்களிடம் எதுவும் எடுபடாது. நாட்டில் உள்ள நல்லோர்கள் அனைவரும் அம்மா அவர்களின் திட்டங்களைப் பாராட்டுகின்றார்கள்; போற்றுகின்றார்கள். அம்மாவின் ஆட்சியில் எதைச் செய்தாலும் குறை சொல்லிக்கொண்டே இருக்கும்



எதிர்க்கட்சியினர் மட்டும்தான் குறை சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்; சொல்லிக்கொண்டே இருக்கட்டும். அம்மாவின் தீவிர திட்டச் செயல்பாடுகளை நாம் மக்களுக்கு எடுத்துச் சொல்லி நம் பணியைத் தொய்வின்றிச் செய்வோம் எனக் கூறிக்கொண்டு எனது தொகுதியில் நடைபெற்று வருகின்ற ஒருசில பணிகளைக் கூறிக் கொண்டு, செய்ய வேண்டிய ஒரு சில பணிகளைச் சொல்லிவிட்டு மற்றவற்றையெல்லாம் அம்மா அவர்களிடம் எழுதிக் கொடுத்து விடுகிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

வையம்பட்டி ஒன்றியத்தில் 7 கிலோ மீட்டர் தூரம் உள்ள வையம்பட்டி-எலமணம் சாலை மிக மோசமாக உள்ளது என்று அம்மா அவர்களிடம் மனு கொடுத்திருந்தேன். அதற்கு அம்மா அவர்கள் 50 இலட்சம் ரூபாய் நிதி வழங்கி வேலை நடந்து முடிந்துவிட்டது. அதற்கு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நன்றியினைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே சாலையில் பாலம் ஒன்று கட்டுவதற்கு இந்த ஆண்டு 50 இலட்சம் ரூபாய் நிதி வழங்க ஒப்புதல் அளித்து, டெண்டர் நடைபெற உள்ளது. அதேபோல, புத்தாநத்தம்-கல்பட்டி சாலையைப் புதுப்பிக்கவும், அதில் உள்ள மூன்று பாலங்கள் இந்த ஆண்டில் கட்டவும் 2 கோடி ரூபாய் நிதி வழங்க ஒப்புதல் அளித்து, டெண்டர் நடைபெற உள்ளது எனத் தெரிவித்துக்கொள்வதுடன் அம்மா அவர்களுக்கு நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மணப்பாறை, மருங்காபுரி ஒன்றியத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் 75 கோடி ரூபாய் திட்டத்தில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டம் கடந்த கால ஆட்சியில் டெண்டரை மட்டும் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நிதி ஒதுக்கீடு கொடுத்துத் துரிதமாக வேலை நடந்து வருகிறது. அதற்காக அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், வையம்பட்டியில், ஆரம்ப துணை சுகாதார மையத்தை அரசு சுகாதார மையமாகத் தரம் உயர்த்தி, முதல் பணியாக 30 படுக்கை வசதிக்கான கட்டடத்திற்கு டெண்டர் விடப்பட்டு, வேலை நடைபெற்று வருகின்றது. அதற்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் துணை சுகாதார மையங்களுக்கு 14 கட்டடங்கள் கட்டப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் திருச்சிக்கு வந்தபோது, திறப்பு விழா நடைபெற்றது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வையம்பட்டிக்கு துணை மின் நிலையம் அமைக்க வேண்டும் என அம்மா அவர்களிடம் மனு கொடுத்திருந்தேன். அதற்கு அம்மா அவர்கள் உத்தரவிட்டு, இப்பொழுது டெண்டர் விடப்பட்டு, வேலை தொடங்கிவிட்டது. அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியை பொற்பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

எனது தொகுதிக்குச் செய்ய வேண்டிய ஒருசில பணிகளைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வையம்பட்டி ஒன்றியம் வீரப்பூரில், வரலாற்றில் இடம் பெற்ற பொன்னர் சங்கர் கோயில் உள்ளது. இங்கு பல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்லையா, மற்றவற்றை எல்லாம் எழுதிக் கொடுத்துவிடலாம்.

**திரு. வி.ஏ. செல்லையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டே இரண்டு கோரிக்கைகளை மட்டும் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. வி.ஏ. செல்லையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வையம்பட்டி ஒன்றியம், வீரப்பூரில் வரலாற்றில் இடம் பெற்ற பொன்னர் சங்கர் கோயில் உள்ளது. இங்கு பல மாவட்டங்களிலிருந்தும் தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். இந்தக் கோயில் மிகவும் பிரசித்தி பெற்று விளங்குவதால், திருவிழாக் காலங்களில் இலட்சக்கணக்கானவர்கள் வந்து செல்கிறார்கள். அங்கு தங்குவதற்கு எந்தவிதமான அரசுக் கட்டடங்களும் இல்லை. எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சுற்றுலாத் துறை மூலமாக தங்கும் விடுதிகள் கட்டித் தரவேண்டும் எனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மணப்பாறை ஒன்றியத்தில் 1995-96 ஆம் ஆண்டில் பொதுப் பணித் துறை மூலமாக கருப்பூர் ஊராட்சி, ஒத்தக்கடை அருகில் புதிய பாசன ஏரி அமைக்க அன்றைய மதிப்பீடு ரூ.56 இலட்சத்திற்கு



டெண்டர் விடப்பட்டு, 13 இலட்சம் ரூபாய்க்கு வேலை நடைபெற்று நிலத் தகராறு காரணமாக பணி நடப்பது நின்றுவிட்டது. தற்போது நிலத் தகராறு பிரச்சினை தீர்ந்துவிட்டது. இன்றைய திருத்திய மதிப்பீடு ரூ.1.8 கோடிக்கு தற்போது ஒப்புதலுக்காக அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு நிதி ஒதுக்கித் தருமாறு அம்மாவைத் தாழ்பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

வையம்பட்டி ஒன்றியத்தில் பொன்னணை ஆறு அணை உள்ளது. அணையில் உள்ள பூங்கா, அதேபோல வையம்பட்டி பாலவிடுதி சாலையிலிருந்து அணைக்குச் செல்லும் 4 கிலோ மீட்டர் சாலைக்கும், பராமரிப்புக்கு கடந்த கால அரசு நிதி ஒதுக்கீடு தராமல் முழுவதும் அழிந்த நிலைக்கு ஆளாகிவிட்டது. அதைச் சீர்செய்ய அம்மா அவர்கள் நிதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்திலிருந்து கடலூர் ஒன்றியம், வையம்பட்டி ஒன்றியத்திலுள்ள அனைத்துக் கிராமங்களுக்கும், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்குவதற்காக ஆய்வுப் பணிகள் நடந்து முடிந்து, மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு விரைவில் பணம் ஒதுக்கி, பணி நடைபெற அம்மா ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொண்டு, இம்மாமன்றத்தில் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 6. விதி 110–ன்கீழ் அறிக்கை அளித்தபின் விதிக்கு முரணாக அதன்மீது பேச முனைதல்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக, இந்த அவையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அன்புடன் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், நானோ அல்லது அமைச்சர்களோ இந்தப் பேரவையின் விதி 110-ன்கீழ், [illegible] அறிக்கையை இந்த அவையில் தந்தாலே, உடனே [illegible] தகராறு செய்து, வெளிநடப்புச் செய்வதை ஒரு [illegible]

வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒரு தவறான முன்மாதிரியை ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விதி 110 என்ன சொல்கிறது? பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி, ஓர் அமைச்சர், பேரவைத் தலைவரின் இசைவுடன் அறிக்கை ஒன்றை அளிக்கலாம். அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது என்று இந்த விதி 110-இல் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால், ஒவ்வொரு முறையும், நானோ அல்லது ஓர் அமைச்சரோ, இந்த விதி 110—ன்கீழ், ஓர் அறிக்கையை வாசித்து முடித்தவுடன், சில எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தவறாமல் எழுந்து, அதன்மீது கேள்விகள் கேட்க வேண்டும்; அதன்மீது விவாதம் நடத்த வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். விதிகளின்கீழ் அதை அனுமதிக்க முடியாது என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் கூறும்போது, அவர்கள் உடனே வெளிநடப்புச் செய்கிறார்கள். பின்னர் வெளியே சென்று பத்திரிகையாளர்களிடம், 'எங்களைப் பேச அனுமதிப்பதில்லை; மக்கள் பிரச்சினைகள் குறித்து, பொதுப் பிரச்சினைகள் குறித்து கேள்விகள் கேட்க அனுமதிப்பதில்லை' என்று குறைபட்டுக்கொள்கிறார்கள்.

இதே பொருள்களைப்பற்றி பல சந்தர்ப்பங்களில், மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சந்தேகங்களை எழுப்பியிருக்கிறார்கள்; கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். நாங்களும் பதில் அளித்திருக்கிறோம். விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கையை வாசித்து முடித்தவுடன், நீங்கள் கேள்விகளைக் கேட்டால், பதில் சொல்ல முடியாது என்று கூறுகிறோமே தவிர, வேறு சந்தர்ப்பங்களில் அதே கேள்விகளை எழுப்பினால், நாங்கள் பதில் கூறத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

எத்தனையோ சந்தர்ப்பங்களில், கேள்வி நேரத்தின்போது, அல்லது கேள்வி நேரம் முடிந்தவுடன், 'Zero Hour' வருகின்றபோது, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இதுபோன்ற பல பிரச்சினைகளை எழுப்பியிருக்கிறார்கள். நாங்களும் தவறாமல் பதில் கூறி வருகிறோம். ஆகவே, இனியும் உங்களுடைய கேள்விகளுக்கு நாங்கள் பதில்கூறத் தயாராக இருக்கிறோம்; அதுதான் எங்களுடைய கடமை என்பதை உணர்கிறோம் என்பதை உங்களுக்குத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, விதி 110-ன்கீழ் அறிக்கை வாசித்து முடித்தவுடன், நீங்கள் கேள்வி கேட்க எழுந்தால்தான், விதிகளின்கீழ் நாங்கள் பதில்



கூற இயலாது. இதையே நீங்கள் சற்று நேரம் விட்டுவிட்டு, பிற்பகல் நடைபெறுகின்ற கூட்டத் தொடரின்போதோ அல்லது நாளைக்கோ இதே கேள்விகளை கேட்டால், நாங்கள் பதில் கூறுவோம்; கூறுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் இப்போது சொன்னார்கள், மறுபடியும் நீங்கள் எழுந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) 110-வது விதி என்ன என்பது எல்லோருக்கும் தெரியும் (குறுக்கீடுகள்) திரு. ஜி.கே. மணி அவர்கள் உட்காருங்கள். 110-வது விதி என்ன என்பது தெரியும். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் விளக்கினார்கள். 110-வது விதியின்கீழ், பேரவையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ, அமைச்சர் அவர்களோ, ஓர் அறிக்கை வைக்கிறபோது, அந்த அறிக்கைமீது விவாதம் கூடாது என்பதுதான் அந்த விதி. அந்த விதியைத் தாங்களும் படித்திருப்பீர்கள், இல்லாவிட்டால், நான் அந்த விதியைத் தனியாக எழுதி, உங்களுக்கு 'ஃபிரேம்' போட்டு வேண்டுமானாலும் கொடுக்கிறேன். (சிரிப்பு) (குறுக்கீடுகள்) அந்த விதியின் மேலே பேசக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 'வேறு நேரத்திலே நீங்கள் பேசுங்கள்' என்று சொன்னார்கள். அன்றைக்கும் மருந்துவக் கல்லூரி பிரச்சினை வந்தது; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதுபோல, வேறு நேரத்திலே பிரச்சினை வருகிறபோது பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கிறார்கள். 110-வது விதியின்கீழ் அறிக்கை வைத்ததற்குப் பிறகு அதை விவாதத்திற்கு இழுப்பது என்பது விதிக்கு மாறுபட்டது; மரபுக்கு மாறுபட்டது. தயவுசெய்து அத்தகைய முன்னுதாரணத்தைத் தங்களைப் போன்ற முன் வரிசையிலே இருக்கிற தலைவர்கள் ஏற்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். திரு. கருணாகரன். (குறுக்கீடுகள்) திரு. கருணாகரன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** இது முக்கியமான பிரச்சினை: **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போதுமே முக்கியமான பிரச்சினையைத்தான் 110-வது விதியின்கீழ் சொல்வார்கள். திரு. கருணாகரன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** **

*முற்பகல் 11-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் வைக்கப்படக் கூடிய அறிக்கையின்மீது விவாதம் கூடாது. மற்ற நேரத்தில் நீங்கள் ஏதாவது கேளுங்கள். அதற்கு அப்புறம் விளக்கம் சொல்வதற்குத் தயாராக இருப்பார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் விவாதம் கூடாது (குறுக்கீடு) விவாதமே கூடாது; அதுதான் பிரச்சினை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் கேட்கக் கூடாது; அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே நீங்கள் இதிலே கொண்டு வந்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அன்றாடம் இதே பிரச்சினையா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்துவக் கல்லூரி மாணவர்கள் போராட்டம் குறித்துப் பலமுறை பல மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் கேள்வி எழுப்பி, அதற்கு சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் பலமுறை பதில் அளித்து இருக்கிறார். ஆகவே, இது ஒன்றும் புதிய பிரச்சினை அல்ல. இன்றைக்கு விதி 110-ன்கீழ் ஓர் அறிக்கை கொடுத்ததற்குக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



காரணம் மருத்துவர்களுக்கு—அரசு மருத்துவர்களுக்கு-ஒரு தெளிவான செய்தியை இந்த அரசு தெரிவிக்க விரும்புகிறது; அதற்காகத்தான் இந்த அறிக்கை. அதன்மீது விவாதம் வேண்டாம் என்றுதான் கூறுகிறோம். ஏற்கெனவே இந்தப் பிரச்சினையை நீங்கள் பலமுறை எழுப்பி இருக்கிறீர்கள். இனியும் எழுப்பலாம். அப்போது நிச்சயமாக நாங்கள் பதில் கூறுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Speaker Sir....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், உட்காருங்கள். இதன்மேல் விவாதம் கூடாது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது ஹேமச்சந்திரன் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. கருணாகரன், பேசுங்கள். (குறுக்கீடுகள்).

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் அவர் படித்த அறிக்கையைத் தொடர்ந்து பேசி இருப்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது; (குறுக்கீடுகள்) உட்காருங்கள். கருணாகரன். (குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தொடர்ந்து 3 நாட்களாக நீங்கள் பேசி இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லி இருக்கிறார்கள். இனியும் நீங்கள் பேசுங்கள்; விளக்கம் சொல்லலாம்; 110-வது விதியின்கீழ் அறிக்கை வைக்கிறபோது மட்டும் விவாதம் கூடாது என்கிற விதியைத்தான் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். திரு. கருணாகரன். (குறுக்கீடுகள்)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசுவதை அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். திரு. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தாங்கள் பேசுவதை அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அனுமதியில்லாமல் பேசக் கூடாது; தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது; உட்காருங்கள். திரு. கருணாகரன்.

## 4. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 12—கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை—தொடர்ச்சி

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துகளைச் சொல்வதற்கு முன்னால்—ஏனென்றால், நான் பேசி முடிக்கும்போது, கடைசியில் டிமாண்ட் வைத்து பிரயோஜனம் இல்லை; அதனால்—தொடக்கத்திலே சில கோரிக்கைகளைச் சொல்லிவிடலாம் என்று நினைக்கிறேன். இதுவரைக்கும் தனிப்பட்ட முறையில் தொகுதிக்காக நான் எந்தக் கோரிக்கையையும் வைத்தது இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், இது என்ன? நேற்றுகூட சிங்காநல்லூரில் கால்நடை நிலையம் வேண்டும் என்று கேட்டீர்கள், அமைச்சர் பதில் சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, மூடப்பட்ட ஆலைகள் சம்பந்தமாகச் சொல்லி இருக்கிறேன் அதெல்லாம் நடக்கவில்லை. சாதாரணமாக இந்த ஏரி, குளம் தூர் எடுப்பது சம்பந்தமாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரிடம் 3 தடவை விண்ணப்பித்து இருக்கிறேன். சின்னவேடப்பட்டி ஏரியைத் தூர்வாரி கட்டாயம் செப்பனிடவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கருணாகரன், கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் தாங்கள் பேச வேண்டுமா, வேண்டாமா?

**திரு. கே.சி. கருணாகரன்:** கோரிக்கை வைப்பதற்கு எல்லோருக்கும் அனுமதிக்கிறீர்கள். சரி, அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி, எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் இருக்கும் ரோடுகளைக் கொஞ்சம் செப்பனிட்டுக் கொடுக்க வேண்டும். அதுபற்றியும் கொடுத்து இருக்கிறேன். அந்த இரண்டையும் செய்து கொடுக்க வேண்டுமென்று முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்தத் துறை சம்பந்தமாகச் சில முக்கியமான கருத்துகளை எங்களுடைய கட்சியின் சார்பில் நான் தெளிவுபடுத்துகிறேன். அதற்கு முன்னதாக எனக்கு முன்னாலே பேசிய சில உறுப்பினர்கள் 'மாதிரி கூட்டுறவுச் சட்டம்' பற்றிப் பேசி இருக்கிறார்கள். அதையே நானும் வலியுறுத்துகிறேன். இந்தத் துறையை முறைப்படுத்துவதற்கு, இந்த மாநிலத்தில் முறையாக அதை நடத்திக் கொண்டு செல்வதற்கு அந்த மத்திய மாதிரி சட்டம் பயன்படும் என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன்; அதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். அதேமாதிரி கூட்டுறவுக்கான தேர்தல், நீதிமன்றத்தில் இருப்பதனால் நின்று போய் இருக்கிறது என்பது பதிலாக பலமுறை சொல்லப்படுகிறது. அதை வேகமாக நடத்துவதற்கு, சீக்கிரம் தீர்ப்பு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படி நடக்கின்றபோது, ஒரு தனி தேர்தல் ஆணையம் கூட்டுறவுக்கு என்று அமைப்பது அவசியம் என்று நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம். உறுப்பினர்கள் உண்மையானவர்களாக இருந்து அதில் வாக்களிப்பதற்கு வாய்ப்பு....

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இங்கே தேர்தலைப் பற்றிச் சுட்டிக்காட்டினார்கள். அதிலேயும் முறையாக நடைபெற வேண்டும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எதையுமே முறையாகச் செய்வதுதான் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் நடைபெற்றது தேர்தல் காலத்திலே என்பதை தேர்தலா அது என்று எண்ணுகிற அளவில், அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசிலே இருந்தது என்பதைத் தாங்களும் அறிவீர்கள். எனவே, அப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் ஏற்படாத வகையில், நீதிமன்றத்திலே இருந்து நல்லதீர்ப்பு வழங்கப்பட்டவுடன், மிகச் சிறப்பான தேர்தல், கூட்டுறவுத் துறையிலே மிகச் சிறப்பான கூட்டுறவாளர்கள் தலைவர்களாக வரக்கூடிய அளவுக்கு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. கட்டாயம் அப்படி நடைபெற வேண்டும் என்பதைச் சொல்லி, போலிகளும், கள்ள வாக்காளர்களும் வராமல் தடுக்கின்ற வகையிலே சங்க உறுப்பினர்களுக்குப் புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டையை வழங்குவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தப் பணி நிரந்தரம் சம்பந்தமாக; கூட்டுறவு நிறுவனங்களில் 480 நாட்கள் பணியாற்றிய அனைத்து ஊழியர்களையும் பணி நிரந்தரப்படுத்திட 12-3-2001 ஆம் நாளன்று அரசாணை எண் 86, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் வெளியிடப்பட்டது. அரசாணையினை அமலாக்காமல் ஊழியர்களை வெளியேற்றிட நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில் சுமார் 7 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயர் நீதிமன்றம் சென்றார்கள். இந்த வழக்கின் தீர்ப்பு 24-10-2002-ல் வழங்கப்பட்டது. பணி வரன்முறைபடுத்தாத ஊழியர்களின் எண்ணிக்கை 23,728 பேர் என்று தீர்ப்பில் சொல்லப்பட்டது. அதனுடைய விவரங்களைப்



பொறுத்தவரையில் 9-7-1980 ஆம் நாள் முதல் 24-4-1990 ஆம் நாள் வரை, 5,790 பேரும், 25-4-1990 ஆம் நாள் முதல் 31-12-1995 நாள் வரை 9,317 பேரும், 1-1-1996 முதல் 11-3-2001 வரை 861 பேரும் அதற்குப் பிறகு மற்றவர்களும் என்ற நிலையில் 23,728 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதில் 5 ஆண்டுகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கழித்துக்கொண்டால், எஞ்சியுள்ள காலங்களில் உள்ள 18 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் நம்முடைய ஆட்சிக் காலத்தில்தான் வெளியிலே நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பணிநிலைத் திறன், ஊதியம் உள்ளிட்ட சலுகைகள் உறுப்பினர்களுக்கு முறையாகத் தெரிவிக்கப்படாமல் ஒப்புதல் பெறப்பட்டதாகக் கையொப்பம் பெறப்பட்டு, பணிநிலைத் திறன், ஊதியம் நிர்ணயிக்கும்போது அரசாங்கத்தாலே வெளியிடப்பட்ட அரசாணைகள் அப்பட்டமாக நம்முடைய நிர்வாக அமைப்பாளர்களால், துறை அதிகாரிகளால் மீறப்பட்டு உள்ளன என்ற தகவல் இருக்கிறது. அரசாணை மட்டுமல்ல, நீதிமன்றத்தின் தீர்ப்பும் மீறப்பட்டு இருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. கூட்டுறவுத் துறையின்...

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பணியாளர்களுக்கு நீங்கள் பரிந்து பேசுவதாக எண்ணி, தயவுகூர்ந்து, அவர்களுக்குக் கெடுதல் செய்துவிட வேண்டாம் என்று நான் பணிந்து கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே நீங்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிலைப்பாட்டை எதிர்பார்த்து பணியாளர்கள் சங்கங்கள் எல்லாம் என்னிடத்திலேயும், துறையினுடைய அதிகாரிகளிடத்திலேயும் பல்வேறு கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பரிசீலனையிலே சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றன. மாடத்திலே இருந்துகூட பணியாளர்கள் சங்கத்தினுடைய நிர்வாகிகள் எல்லாம் இதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, நீதிமன்றம் சொல்லியபடி செய்ய வேண்டுமா அல்லது மனிதாபிமானத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பதை உறுப்பினர் அவர்களிடத்திலிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-05*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கோபப்பட்டுவிட்டார்கள் என்று கருதுகிறேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், வரம்புகளை மீறியோ, விதி நடைமுறைகளை மீறியோ, சலுகைகளைக் காட்ட வேண்டும் என்று ஒருபோதும் கம்யூனிஸ்ட்கள் குரல் எழுப்பியது இல்லை. இப்போதும் எழுப்பவில்லை. நிர்வாகத் துறை தவறாக நடந்து இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறபோது, அதனுடைய உண்மைகளை ஆராய வேண்டுமென்று நான் மிகுந்த பணிவன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையின் தன்னிச்சையான நடவடிக்கைகளினால் ஊழியர்கள் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்று நான் சொல்லுகிறேன். அது உண்மையா, இல்லையா என்று ஆய்வு செய்வதற்கும்--நாங்கள் சொல்வது தவறாக இருந்தால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கிறோம். அவ்வாறு இல்லையென்றால்--நியாயம் வழங்குவதற்கும் அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையினுடைய நடவடிக்கைகளை எதிர்த்து ஊழியர்கள் உயர் நீதிமன்றம் சென்றதன் விளைவாக உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் 8-1-2003 தேதியன்று ரிட் பெட்டிஷன் நெம்பர் 44744/2002 என்ற அடிப்படையில் தீர்ப்பு வழங்கி உள்ளது. நான் அதைத்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன். உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. அது பெஞ்சாக இருந்தாலும் என்னவாக வேண்டுமானாலும் இருக்கட்டும். ஆய்வு வைத்து விவாதம் நடத்துங்கள், பெஞ்சா, குழுவா, குழுமமா, ஆய்வகமா என்று. எஸ்.ஆர்.பி. அவர்கள் வெளியே போய் இருக்கிறார். திரும்ப இங்கே வந்து நம்முடைய நேரத்தை பிடித்து விடுவாரோ என்று பயமாக இருக்கிறது. அது ஏதுவாக இருந்தாலும் வைத்துக்கொள்ளுங்கள். மீண்டும் பணிநிலைத் திறன், ஊதியம் உள்ளிட்டவைகளை நிர்ணயிக்கும்போது அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டு உள்ளது. அரசாணையை அந்தத் துறை அமல்படுத்த வேண்டுமென்று நீதிமன்றம் சொல்கிறது. அப்போது நீதிமன்றம் சுட்டிக்காட்டுகிற அளவுக்கு அரசாணை வயலேஷன் ஆகி இருக்கிறது, மீறப்பட்டு இருக்கிறது என்றுதானே அர்த்தம்? ஊதியம் உள்ளிட்டவைகளை நிர்ணயிக்கும்போது அரசாணைகள் பின்பற்றப்பட வேண்டுமென உத்தரவு இடப்பட்டுள்ளது. மேலும் பணிநிலைத் திறன் உள்ளிட்டவைகளில்



திருத்தங்களை மேற்கொள்ளும்போது தொழிற் சங்கங்களோடு கலந்து ஆலோசிக்க வேண்டுமென *29-12-2002* அன்று உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பு வழங்கியது. ஆனால் கூட்டுறவுத் துறை, உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்ச் தீர்ப்புகளை மீறி அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களுக்கும் பணிநிலைத் திறன் நிர்ணயிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அதுமட்டுமல்ல, அரசாணைகளை மீறி தன்னிச்சையாக ஊழியர்களின் எண்ணிக்கைகளைக் குறைத்து அதிலும் மாநிலம் முழுமைக்கும் ஒரே நிலையை எடுக்காமல் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நிலை எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது. அவற்றைக் கண்காணித்து முறைப்படுத்த வேண்டுமென்று மாத்திரம் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த, நியமன விஷயத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் கனிவோடுதான் நடந்துகொண்டு இருக்கிறார்கள். அறிவிப்பு வருகிறபோது எந்த அளவுக்குத் தாயுள்ளத்தோடு அம்மா அவர்கள் அதைப் பரிசீலித்து இருக்கிறார்கள் என்பதைப் பணியாளர்களும், உறுப்பினர் அவர்களும் அறிந்துகொள்வார்கள் என்பதை மாத்திரம் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அது மாதிரி *15-9-1996*-ல் Dindigul Urban Bank தேர்தலில் அன்றைய தி.மு.க. ஆட்சி -- அந்தத் தேர்தலில் எப்படி முறைகேடாக நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும்; அங்கேயும் தவறு நடந்து இருக்கிறது; மோசடி நடந்திருக்கிறது என்று சொல்லி, உயர் நீதிமன்றத்திற்கு வழக்கு போகிறது. உயர் நீதிமன்றம் அதை விசாரணை செய்யச் சொல்லி உத்தரவிடுகிறது. துறையும் விசாரிக்கிறது. 7 ஆண்டுகளுக்குப் பிறகு *16-4-2003* ஆம் தேதி அன்றைக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படுவதாக அறிவித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்போது அந்த case சம்பந்தப்பட்டவர்கள்மீது எந்த நடவடிக்கையும் வருவதற்கு வாய்ப்பு இல்லையா? தேர்ந்தெடுக்கப்பட்ட சபை இல்லை; ஆகையினால் அது இல்லை என்று பதில் சொல்லப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. எனவே, திண்டுக்கல் தேர்தல் மோசடி மீது வழக்குத் தொடுத்த நிர்வாகம் இல்லை; ஆகவே, தீர்ப்பும் இல்லை என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. மோசடித் தேர்தலை நடத்தி வெற்றி பெற்று அன்றைக்குப் பொறுப்புக்கு வந்தவர்கள் அந்த அர்பன்

வங்கியில் எவ்வளவு மோசடி செய்தார்கள் என்ற விவரமும் வெளி உலகத்திற்குத் தெரியாமல் போவதற்கு வாய்ப்பும் இருக்கிறது. அவர்கள்மீது நடவடிக்கைகள் வராமல் போய்விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய அந்த வழக்குகளிலும் பல்வேறு நடவடிக்கைகள் நிச்சயமாக இந்த அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அது மாத்திரம் அல்ல, அதற்கு மேலும், சில மாதங்களுக்கு முன்னால் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு ஊழல்கள், பல்வேறு முறைகேடுகள்மீதும் சில மாதங்களிலே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு....

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, ஐந்து மணித்துளிகள் தயவுசெய்து கொடுங்கள். இரண்டு, மூன்று முக்கியமான விஷயங்கள் இருக்கின்றன. நான் சொல்லி முடித்து விடுகிறேன். முடிந்தவரைக்கும் சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய நண்பர் ஏழுமலை பேசினார் அங்கே Gas Supply-ல் நடந்த முறைகேடுகள்பற்றி. அதெல்லாம் உண்மை. அதே தொகுதியிலிருந்து எனக்கு ஒரு விவரம் கிடைத்திருக்கிறது. அது அரசின் கவனத்திற்கும் வந்திருக்க வேண்டும். விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி; அந்த வங்கியில் சாதாரண விவசாயிகள் deposit பண்ணியிருக்கிறார்கள். 40 இலட்சம் ரூபாய் வரைக்கும் அவர்களுக்குப் பணம் திருப்பித் தரவேண்டியிருக்கிறது. 150 பேர் கிட்டத்தட்ட இருப்பர். அதிலே 10 ஆயிரத்திலிருந்து, 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வரைக்கும் அந்த



deposit தொகை என்பது வருகிறது. பட்டியல் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். முதிர்வு அடைந்ததற்குப் பிறகும் அந்தப் பணம் அவர்களுக்குத் திருப்பிக் கிடைக்கவில்லை. அவர்கள் சாதாரணமான விவசாயிகள். அதிகாரிகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு, கூட்டுறவுத் துறை உயர்மட்ட அதிகாரிகளுக்குப் புகார் மனு 2-10-2002, 18-11-2002-ல் தொடுத்தும் நடவடிக்கை இல்லை. அவர்களுக்கு அந்தப் பணம் கிடைக்கவில்லை என்கிற புகார் இருக்கிறது. அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைப்பதற்கு முதலாவது நடவடிக்கையும், இதில் கையாடல் செய்யப்பட்டு இருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கையும் எடுப்பதற்கு அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்....

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்ஒலக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில், விழுப்புரம் மாவட்டத்தில் இருக்கிற அந்தச் சங்கத்தில் 17.45 இலட்சம் ரூபாய் அளவிற்கு முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன என்பது உண்மை. அதனுடைய தலைவர், இன்றைக்கு வக்கணையாகப் பேசிக்கொண்டிருக்கிற தி.மு.க. கட்சியினுடைய தலைவர் என்பதை நான் இந்த நேரத்திலே பகிரங்கமாக எடுத்துச்சொல்லி, அவர்மீது நடவடிக்கைகளுக்கு ஏற்பாடுகள் செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நன்றி. இதேபோல, எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றியம், சிங்காநல்லூர் தொகுதிக்குள் வையம்பாளையம் கூட்டுறவுத் தொடக்க வேளாண்மை வங்கி இரண்டு வருடங்களாகத் தொடர்ந்து பிரச்சினையில் இருக்கிறது. நானே complaint பண்ணியிருக்கிறேன். 1 கோடி ரூபாய் கிட்டத்தட்ட, அங்கு மோசடி நடந்து, ஊழல் நடந்து, அந்தப் பணம் திருப்பிக் கிடைக்காமல் இருக்கிறது. இதேமாதிரி கடந்த கால தி.மு.க., ம.தி.மு.க., இப்படி பல்வேறு கட்சிகள். இருக்கலாம் அதிலே. அது யார் எந்தக் கட்சி என்பதைப்பற்றிப் பிரச்சினை இல்லை. யாராக இருந்தாலும், நாங்களாக இருந்தாலும், தாட்சண்யமற்ற முறையில் நடவடிக்கையைக் கடுமையாக எடுக்க வேண்டும்.

இன்றைக்குக் கூட்டுறவுத் துறை இந்த அளவுக்குப் பலவீனப்பட்டுப் போனதற்குக் காரணம் அதிலே இருக்கும்படியான புரையோடிப் போயிருக்கும்படியான ஊழலும், இலஞ்சமும், இதர நடவடிக்கைகளும், நிர்வாகத் திறமையற்ற ஏற்பாடுகளும்தான் என்பதை நான் இங்கே

பதிவு செய்ய விரும்புகிறேன். அதிலே கறாராக இருக்கவேண்டும் என்பதை மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதேமாதிரி பல கோடிக்கணக்கான ரூபாய் பிடித்தம் செய்யப்பட்டு கூட்டுறவுத் துறைக்கு வராமல் இருக்கிறது. மில்களில், பெரிய பெரிய கம்பெனிகளிலே அந்தத் தொழிலாளிகளிடம் கூட்டுறவுச் சங்கங்களுக்காகப் பிடித்தம் செய்யப்பட்டு அந்தப் பணம் கூட்டுறவு அமைப்புகளில் கட்டப்படுவதில்லை. அதனால் அந்த அமைப்புகள் கடனாளிகளாக இருக்கின்றன. இப்போது அவிநாசியில் ஒரு சொசைட்டி இருக்கிறது. பஞ்சு சப்ளை பண்ணுகிற சொசைட்டி. கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் அந்த அமைப்புக்குப் பணம் வெளியிலேயிருந்து வராமல் இருக்கிறது என்ற தகவல் இருக்கிறது. அப்புறம் அந்தத் துறைகள் நட்டத்தில் இயங்காமல் என்ன செய்யும்? ஆகவே, இதன்மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநில அளவிலே இந்தக் கூட்டுறவுத் துறையைக் கண்காணிப்பதற்கு அல்லது ஆலோசனை சொல்வதற்கான முறையில் அரசு அனைத்துக் கட்சிகளைக் கொண்டிருக்கக்கூடிய Advisory Board ஒன்று அமைப்பது பொருத்தமாக இருக்கும் என்று எங்கள் கட்சி கருதுகிறது. இந்த ஆலோசனையைத் தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி புதிய ரேஷன் கார்டுகள் விநியோகிப்பதில் இருக்கக்கூடிய காலதாமதம். பல ஆயிரக்கணக்கான பேருக்கு புதிய ரேஷன் கார்டுகள் வழங்கப்படுவதில் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மண்ணெண்ணெய் தேவையான அளவுக்கு விநியோகிக்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பொது விநியோக முறையைக் கண்காணிக்க ஏற்கெனவே நம்முடைய அரசாங்கம் 5 பேர் கொண்ட, எம்.எல்.ஏ.க்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அவர்கள் அரிசி, மற்றவை எல்லாம் எப்படி இருக்கிறது என்று பார்ப்பதற்காகப் போய்விட்டு வந்தார்கள். அவர்கள் ஏதோ அறிக்கைகூடக் கொடுத்ததாகச் சொன்னார்கள். அந்த அறிக்கையினுடைய நிலைகளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்வது அவசியம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து ஒரு முக்கியமான விஷயம் என்னவென்று சொன்னால், ரேஷன் கடைகளில் கட்டுப்பாடற்ற பொருட்களை விற்க வேண்டுமென்று அரசு ஏதாவது ஆணையிட்டிருக்கிறதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஓர் ஆணை அரசால் விதிக்கப்படவில்லை என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரே ஒரு ஆதாரம் இருக்கிறது. பதிவாளர் அவர்கள் கடிதம்; கோயம்புத்தூர் மாவட்டப் பதிவாளர் அவர்கள் கடிதம்' ந.க.எண் 2227/2003, நாள் 17-4-2003. 'கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளில், பதிவாளர் அவர்கள்' திட்டம் ஒரு இலட்சம்' என்ற திட்டத்தினை செயல்படுத்துவதற்காக ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் ரூபாய் ஒரு இலட்சத்திற்குக் கட்டுப்பாடற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று அறிவுரைகள் வழங்கப்பட்டிருந்தும், அதில் போதிய முன்னேற்றம் இல்லை. ஒவ்வொரு பொது விநியோகத் திட்ட களப் பணியாளரும் தங்களது கட்டுப்பாட்டில் செயல்படும் ஒவ்வொரு நியாய விலைக் கடைக்கும் இணைக்கப்பட்ட குடும்ப அட்டை ஒன்றுக்கு மேற்சொன்ன குறியீட்டின்படி—ஒரு கார்டுக்கு எத்தனை ரூபாய்க்கு விற்க வேண்டுமென்று சொல்லி—கட்டுப்பாடற்ற பொருளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்; குறியீட்டினை எந்தப் பணியாளர் நிறைவேற்றவில்லையோ, அந்தப் பணியாளர்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது' என்று அந்தப் பதிவாளர்...

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசால் அப்படி எந்தவிதமான அறிவிப்பும் செய்யப்படவில்லை. அது அரசாணையே இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஏதாவது செய்யப்பட்டிருக்குமானால், அது கூட்டுறவுத் துறையினுடைய அதிகாரிகளைக் கேட்டு உடனடியாகக் களையப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருணாகரன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரே ஒரு முக்கியமான விஷயம். களையப்படும் என்பதல்ல. அவர் ஜனங்களைக் கட்டாயப்படுத்துகிறார். ஊழியர்களை அச்சுறுத்துகிறார். அது கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, முக்கியமான விஷயம் என்னவென்று சொன்னால், மக்கள் சாசனம், முதல் பக்கத்தில், முன்னுரையில் முதல் பாராவில், 'தமிழகக் கூட்டுறவு இயக்கம் கடந்த பத்தாண்டுகளில் பொருளாதாரத்தில் பல்வேறு வகைப்பட்ட பகுதிகளில் கணிசமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவுகள் செயல்படாத முக்கியத் துறை எதுவுமில்லை. வேளாண் கடன், நகைக் கடன், சந்தைத் தலையீடு, கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகள் மூலம் வேளாண்மைப் பொருட்களுக்கான ஆதரவு விலை மற்றும் பொது விநியோகத் திட்டம் போன்ற பல முக்கிய கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கான கருவியாகக் கூட்டுறவுகள் கருதப்படுகின்றன' என்று இதன் பெருமை சரியாகவே சொல்லப்பட்டிருக்கிறது.

அதைப்போல கொள்கை விளக்கக் குறிப்பில் (மணியடிக்கப் பெற்றது) இது ரொம்ப முக்கியமான விஷயம். சீக்கரம் சொல்லி முடித்துவிடுகிறேன். அதிகம் ஒன்றுமில்லை. கொள்கை விளக்கக் குறிப்பில் இருப்பதைச் சொல்லி முடித்துவிடுகிறேன். கொள்கை விளக்கக் குறிப்பில் இருப்பதைத்தான் சொல்கிறேன். அத்தியாயம் 1, பாரா 13-ல், 'தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு இவ்வரசு மேற்கொண்டு வரும் தளராத முயற்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆக்கபூர்வமான பங்கினைக் காட்டும் வகையில் இத்துறையின் செயல்பாடுகள் இருக்கும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெருமையோடு அங்கீகரிக்கிறோம், வரவேற்கிறோம்.

அதிலே பாரா 2.2 சொல்கிறது. 'கூட்டுறவுச் சங்கங்கள் சீராக நடைபெற வேண்டுமெனில், அவற்றின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதற்கு நிதியுதவி அளிப்பது அவசியம் என்பதையும் அரசு உணர்ந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய நீதி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு கூட்டுறவு ஒரு சிறந்த அமைப்பு என்ற கொள்கையை அரசு கடைபிடித்து வருகின்றது' என்று கூறிவிட்டு, பாரா 2.6-ல், இவ்வளவு சிறப்பு வாய்ந்த இந்தத் துறையை—7-வது வரியிலிருந்து 12-வது வரி வரை, 'எனவே கூட்டுறவுச் சங்கங்களில் பெருமளவு பங்குகள் அரசுக்கு சொந்தமாகயிருந்தால் அவ்வகையான கூட்டுறவுச் சங்கங்களைத் தனியார்மயமாக்கிவிடலாம் என



அரசு முடிவு செய்துள்ளது. இது தற்போதைய அரசு எடுத்துள்ள மிக முக்கியமான கொள்கை முடிவாகும். இக்கொள்கை முடிவினைச் செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வது; இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கவேண்டுமென்று முதல் பக்கத்தில் சொல்லிவிட்டு, கடைசியில் அதைத் தனியாருக்குக் கொடுக்கின்ற நிலை வந்தால், நான் வருத்தத்தோடு நினைவுபடுத்துகிறேன், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகமான எண்ணிக்கையில் இந்தத் துறைகள் தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்ற ஒரு முதன்மைப் பட்டியலில் தமிழகம் வந்துவிடக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை, பொதுத் துறை, அரசுத் துறை (மணியடிக்கப் பெற்றது) ஆகிய மூன்று துறைகளும் மிக முக்கியமானவை. இந்தத் துறைகள் நம்முடைய அரசின்கீழ் முறையாகச் செயல்படுவது ஒன்றுதான் இந்த மக்களுக்குச் செய்கின்ற சரியான சேவையாக இருக்க முடியும். அந்த வகையிலே தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாக வளர்ந்தால் அதை மகிழ்ச்சியோடு நாங்கள் ஏற்றுக்கொள்வோம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையாக இருந்தாலும், பொதுத் துறையாக இருந்தாலும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டு இருக்கின்ற நிறுவனங்களைத் தனியார்மயமாக்கினால்தான் நஷ்டத்தைக் கட்டுப்படுத்தி, இழப்பைச் சரிக்கட்டி இந்த அரசு முன்னேற முடியும். அப்பொழுதுதான் இந்த மாநிலத்தை முதலிடம் நோக்கி நாம் கொண்டு செல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-20

**திரு. கே.சி. கருணாகரன்:** நீங்கள் ஒரு கொள்கைபூர்வமாக முடிவெடுத்து விட்டதற்குப் பிறகு நாங்கள் என்ன சொன்னாலும் அதை நியாயப்படுத்தித்தான் பேசுவீர்கள் என்பதை...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால்,

கூட்டுறவு நூற்பாலைகளில் ஒட்டுமொத்த இழப்பு என்பது--Accumulated Loss--445.88* கோடி ரூபாய். இதை எந்தக் காலத்தில் எப்படி ஈடு செய்ய முடியும்? இது நடக்காத காரியம். எப்போதுமே தொழில் ரீதியாகக்கூட ஒன்றைச் சொல்வார்கள். எந்தத் தொழிலில் ஒருவர் ஈடுபட்டாலும், அந்தத் தொழிலில் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால், You must cut your losses என்பதைச் சொல்வார்கள். அது ஒரு அடிப்படைச் சித்தாந்தம்; அடிப்படைத் தத்துவம். ஆகவே, தொடர்ந்து இந்தக் கூட்டுறவு நூற்பாலைகள் நஷ்டத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பதால், அந்த நஷ்டம் இப்போதே 445.88* கோடி ரூபாயை மிஞ்சிவிட்டதால், இதற்கு மேல் இந்த இழப்பைச் சரிக்கட்ட முடியாது என்ற முடிவுக்கு வந்துதான், இவற்றைத் தனியார்மயமாக்க வேண்டுமென்று இந்த அரசு முடிவெடுத்து இருக்கிறது. இந்த முடிவில் எந்தத் தவறும் இல்லை. இப்படிப்பட்ட இழப்புகளை நாம் ஈடு செய்ய முடியாமல் இருக்கிற ஒரு நிலையிலிருந்து விடுபட்டால்தான் இந்தத் தமிழ்நாடு மாநிலம் முன்னேற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நடைமுறையிலே பார்க்க வேண்டியது. ஆனால், கூட்டுறவுத் துறையிலே நூற்பாலைகளிலே நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இதர துறைகளிலே... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** முடித்துவிடுகிறேன். இதர துறைகளிலே இலாபம் இருக்கிறது என்று சொன்னால் Compensate செய்துகொள்ள முடியும்; அல்லது ஒட்டுமொத்த நஷ்டத்திலிருந்து பாதுகாப்பதற்கு என்ன வழியோ அதைச் செய்யலாம். இல்லையென்று சொன்னால்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கூட்டுறவுத் துறையிலே இலாபம் வருகிறபோது அந்த இலாபத்தை எடுத்து இன்னொரு கூட்டுறவுத் துறைக்குச் சட்ட ரீதியாக மாற்றம் செய்ய முடியாது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குப் புரியாதது அல்ல. கூட்டுறவு நூற்பாலையிலே ரூபாய்

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



445.88* கோடிக்கு மேல் accumulated loss இருக்கிறபோது, தொடர்ந்து அதை நாம் நடத்த வேண்டுமென்றால், மக்கள் மீது வரியைப் போட வேண்டும். அதற்கு நாங்களும் தயாராக இல்லை; நீங்களும் ஒத்துக்கொள்ளமாட்டீர்கள். மறைமுகமாக மக்கள் மீது வரியைப் போட்டு மக்களுக்குத் தண்டனை தந்து; இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை நடத்துங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கூறுகிறாரோ என்னவோ புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன். (குறுக்கீடு) இல்லை, கருணாகரன் பேச்சை முடித்துவிடுங்கள். 20 நிமிடங்களுக்கு மேலாகிவிட்டது. திரு. இராசேந்திரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகாறும் சொல்லப்பட்டிருக்கக்கூடிய விஷயங்களில் சிலவற்றில் எங்களுக்கு முரண்பாடு இருக்கிறது. அதை முறைப்படுத்த வேண்டும் என்பதை மாத்திரம் சொல்லி, கடைசியாக... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவ்வளவுதான், திரு. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட, அதுவும் குறிப்பாக தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கிட்டத்தட்ட 1970 ஆம் ஆண்டு வரை இலாபத்திலே இயங்கி வந்தன. சிறந்த கூட்டுறவாளர்கள் அன்று கூட்டுறவுச் சங்கங்களிலே நிர்வாகப் பொறுப்புகளிலே பொறுப்பை ஏற்றுச் செயல்பட்டதன் காரணமாக அன்று அனைத்து கூட்டுறவுச் சங்கங்களும் தொடர்ந்து மிகுந்த இலாபத்தை ஈட்டிக் கொடுத்ததுடன், தமிழகத்திலே இந்தக் கிராமப் பொருளாதாரத்திலே முக்கிய அங்கம் வகிக்கக்கூடிய வேளாண்மை, பால் உற்பத்தி, நெசவுத் தொழில், ஊரகத் தொழில்கள் ஆகியவற்றிலே முழுமையான

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

வளர்ச்சியை 1975 ஆம் ஆண்டு காலம் வரை இருந்து வந்த அந்த கூட்டுறவுச் சங்கங்கள், 1976 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 23 ஆண்டுகள் தனி அதிகாரிகள் என்ற நியமனத்தின் பேரிலே இடைப்பட்ட காலத்திலே ஒரு நான்கு ஆண்டுகள் கழித்தாலும்கூட கிட்டத்தட்ட 23 ஆண்டுகள் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் கூட்டுறவு அதிகாரிகள் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு, அவர்களது கட்டுப்பாட்டிலே இயங்கி வந்த இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களது நிருவாகத் திறமையின்மையின் காரணமாக, இலஞ்ச ஊழல் பெருக்கெடுத்ததன் காரணமாக, படிப்படியாக நஷ்டத்திலே இயங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதேபோல இந்த அரசு, முதலமைச்சர் அவர்கள்கூடத் தற்போது அறிவித்தார்கள். கூட்டுறவு நூற்பாலைகளில் மொத்த நஷ்டம் என்பது 445.88* கோடி அளவிலே இருக்கிறது என்ற அடிப்படையிலே ஒரு அறிவிப்பை இங்கே அறிவித்தார்கள். இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளும் அதோடு இணைந்த வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும் நஷ்டம் அடைவதற்கு முக்கிய காரணம் கூட்டுறவு மில்களிலே கொள்முதல் செய்யப்பட்ட துணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை என்பது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் காலத்தே துரிதமாக வழங்கப் படாததன் காரணமாக கூட்டுறவு மில்கள் நஷ்டத்திலே இயங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது.

பிற்பகல் 12-25

அதேபோலப் பல்வேறு வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தங்கள் பஞ்சைக் கூட்டுறவு மில்களுக்கு விற்பனை செய்ததன் மூலமாக, முறையாக அந்த வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு, காலத்தே அந்தப் பஞ்சு விற்பனைக்குண்டான தொகை வழங்கப்படாததன் காரணமாக இன்று வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பல்வேறு மாவட்டங்களிலே, பல்வேறு இடங்களிலே நட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக அவினாசி வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு பல்வேறு நூற்பாலைகளுக்குக் கொடுக்கப்பட்ட பஞ்சுக்கு வர வேண்டிய பணம் என்பது கிட்டத்தட்ட 4 கோடியே 19 இலட்சம் ரூபாய் என்ற அடிப்படையிலே இருக்கிற சூழ்நிலையில், கூட்டுறவு மில்களிலிருந்து பெறப்பட வேண்டிய அந்தத் தொகை நிலுவையாக இருக்கின்ற அந்தச் சூழ்நிலையில் இன்று அந்தச் சங்கம்...

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினைக்கும், திரு. கருணாகரன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கும் எப்பேர்ப்பட்ட மாறுபாடு இருக்கிறது என்பதை அவை உணர வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் பஞ்சைத் தருகின்றன நூற்பாலைகளுக்கு. கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பணம் வரவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள். கூட்டுறவு நூற்பாலைகள் 445.88* கோடி ரூபாய் accumulated loss என்று தொடர் நட்டத்தில் இயங்குகிறபோது, இப்படி விவசாயிகளும் பாதிக்கக் கூடாது என்பதற்காகத்தான், அந்தக் கூட்டுறவு நூற்பாலைகளை ஒருவேளை தனியாருக்குக் கொடுத்துவிட்டால் விவசாயிகளையேனும் காப்பாற்றலாம் என்ற நோக்கோடுதான் இந்தக் கொள்கை. தவிர்க்கமுடியாமல் நட்டத்திலே தொடர்ந்து இயங்குகிற நூற்பாலைகளை எல்லாம் கூட்டுறவுத் துறையிலிருந்து தனியாருக்குக் கொடுப்பது பொருளாதார ரீதியாகத் தவறான ஒன்று இல்லை என்பதை மறைமுகமாக நீங்களே ஆதரிக்கிறீர்கள். உங்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் கூற வந்த கருத்து அதுவல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்மயமாக்குவது என்பதில், அவர்களுக்கு இன்னும் நாம் அரசாங்கத்திலிருந்து சில விதிமுறைகளை, கட்டுப்பாடுகளை விதிக்கப் போகிறோம், அது வேறு. தனியார் நடத்தினால் நட்டம் வராதா? நட்டம் வருவதற்கு என்ன காரணங்களோ, அதைக் கண்டறிந்து, அதற்கு நடவடிக்கை எடுத்து புனரமைக்க வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு நாம் போய் எல்லாமே தனியார்மயம் என்று சொன்னால்....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகிறபோது நட்டம் ஏற்பட்டால் மக்கள் மீது வரி போட்டு நாம் அந்தச் சுமையை ஏற்க வேண்டியதில்லை. அது தனியார் படுகிற பாடு. அதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர், கம்யூனிச இயக்கம், தனியாருக்கு நட்டம் என்று நீங்கள் கவலைப்படுவது விந்தையாக இருக்கிறது.

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

**திரு. ஜி. பழனிசாமி:** அப்படி என்றால், இஷ்டம் போல அவர்கள் விலைகளை உயர்த்திக் கொண்டே போவார்கள், அதற்கு நாம் அனுமதி வழங்குவதாக அர்த்தமாகும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை, தனியார் மளிகைக் கடைகள் எல்லாம் இலாபம் சம்பாதித்து, பெரிய அளவிற்கு Departmental Stores-கடைகளாக develop ஆகலாம். நம்முடைய பொது விநியோகத் துறை சேவை நோக்கத்தின் அடிப்படையிலே செய்கிறபோது அங்கே இலாபம் வராது என்பது உண்மை என்பது புரியவேண்டும். அது நம் சமூகத்தோடு இணைந்திருக்கக்கூடிய பொது விநியோகத் திட்டம் என்பதை ஒரு சேவையாகக் கொள்கிறோம். ஆகவே அதை compare பண்ணுவது என்பது, மற்றதோடு தனியார்களோடு compare பண்ணுவது என்பது சரியாக இருக்காது.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைக் கூறினார்கள். நான் சொல்ல வந்த கருத்து அதுவல்ல. தொடர்ச்சியாக அரசு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையை காலதாமதமாக வழங்குவதன் மூலமாகவும், படிப்படியாக கூட்டுறவு மில்களுக்கு விற்பனை செய்த பஞ்சுக்கு, அந்த அளவுக்குத் தேவையான தொகை வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வராததன் காரணமாக, தொடர்ச்சியாக கூட்டுறவு மில்கள், வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்திலே இயங்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது என்ற அடிப்படையிலே நான் சுட்டிக்காட்ட விரும்பினேன். அமைச்சர் அவர்கள் கூறியதுபோல இந்த நாட்டிலே உள்ள விவசாயிகளைத் தனியார்கள் ஆள வேண்டிய சூழ்நிலை ஏற்படுமா என்பதை நான் வினவ விரும்புகிறேன். அதேபோல கூட்டுறவு தேர்தல்..

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்களுக்கு நான் பதில் கூற விரும்புகிறேன். பொது விநியோக முறையின்கீழ் நீங்கள் மளிகைப் பொருட்களை வழங்குகின்றபோது அதனால் நட்டம் வரும் என்று தெரியாதா, அதைச் செய்கிறீர்கள், சேவை மனப்பான்மையுடன் செய்கிறீர்கள், அதையே கூட்டுறவு நூற்பாலைகள் விஷயத்தில் ஏன் செய்யக்கூடாது என்று கேட்கிறார். எல்லாவற்றிலும் அரசு அப்படிச் செயல்பட முடியாது. தனியார் துறை எந்தெந்தப் பணிகளை, எந்தெந்தச் சேவைகளை மக்களுக்கு



வழங்க முன்வராதோ அவற்றை செய்வதுதான் இந்த அரசினுடைய கடமையாகும். இந்த மாநில மக்கள் உணவுப் பொருட்களை தங்குதடையின்றிப் பெற வேண்டும். அதைக் குறைந்த விலையில் பெற வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம்; இந்த அரசின் கொள்கை. தனியார் துறையில் மளிகைக் கடை வைத்திருப்பவர்கள் யாரும் மானிய விலையில் நஷ்டப்பட்டு மக்களுக்கு உணவுப்பொருட்களை, உணவு தானியங்களை வழங்கமாட்டார்கள். அதனால்தான் அரசு அந்த இழப்பை ஏற்றுக்கொண்டு அந்த மானியச் சுமையை ஏற்றுக்கொண்டு, பொது விநியோக முறையின்கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் ஏழையெளிய மக்களுக்கு நியாய விலையில், குறைந்த விலையில் உணவு தானியங்களை வழங்கி வருகிறது. ஆனால், கூட்டுறவு நூற்பாலைகளைப் பொறுத்தவரையில், நூற்பாலைகள் என்பன தனியார் துறையிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனியார் துறையோடு போட்டிப் போட்டுக்கொண்டு நூற்பாலைகளை நடத்த வேண்டுமென்ற கட்டாயம் ஒன்றும் அரசுக்குக் கிடையாது. அதில் பெருத்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, பெரிய இழப்பை ஏற்றுக்கொண்டு அதை நடத்த வேண்டுமென்று எந்தக் கட்டாயமும் அரசுக்கு இல்லை. ஆகவேதான், எது இன்றியமையாததோ அதைச் செய்ய வேண்டியதுதான் இந்த அரசின் கடமை. ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகளையும், சர்க்கரை ஆலைகளையும் பெருத்த நஷ்டத்திற்கிடையே, பெரிய இழப்பை ஏற்றுக்கொண்டு நடத்த வேண்டுமென்ற கட்டாயம் இந்த அரசுக்கு இல்லை. நடத்த முடியாத சூழ்நிலையில் இந்த அரசு இருக்கிறது. தனியார் துறையுடன் உற்பத்தித் துறையில் போட்டி போட வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது. அது அரசினுடைய கடமையும் இல்லை, பணியும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-30

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றன என்ற ஒரு வாதம் பல நாட்களாக நாட்டிலே இருந்துகொண்டிருக்கிறது. அதிலே பணியாற்றுகிற ஊழியர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், அதை இலாபகரமாக நடத்திக்கொள்ள முடியும், அதற்குத் தகுந்த அளவிலே உள்ள ஆலோசனைகளை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இதிலே நீண்ட விவாதம் கிடையாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது, அது சேவைத் துறை இல்லை என்பதுதான். (குறுக்கீடு) இராசேந்திரன் பேசுங்கள். நேரமில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அது சம்பந்தமாக ஒரு ஆராய்ச்சி நடத்தி அதைக் காப்பாற்றிக்கொள்ள முடிந்தால், அதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாதா?

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கூட்டத்தொடரின்போது இதைப் பற்றித் தனியாக ஒரு நாள் ஒதுக்கி, விவாதம் வைத்தக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான், மாண்புமிகு கருணாகரன் அவர்களுக்கு இப்போது பதில் அளித்தேன். அதாவது, உணவு தானியங்களை வழங்குவது என்பது ஒரு இன்றியமையாத சேவை. அதைத்தான் இந்த அரசு செய்து கொண்டிருக்கிறதே தவிர, நூற்பாலைகள் நடத்த வேண்டுமென்றோ, சர்க்கரை ஆலைகளை நடத்த வேண்டுமென்றோ அரசுக்கு எந்தக் கட்டாயமும் கிடையாது. அது இன்றியமையாத பணி இல்லை. ஆகவே, அதை அரசு செய்ய வேண்டுமென்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். இராசேந்திரன், பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள், இராசேந்திரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நூற்பாலைகளைப் புதியதாக நாங்கள் தொடங்கச் சொல்லவில்லை. ஏற்கெனவே ஒரு நோக்கத்திற்காக அரசாங்கம் உருவாக்கி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, விவாதத்தைத் திசை திருப்பாதீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் திசை திருப்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள், சேவைத் துறை என்று சொன்னீர்கள்; கூட்டுறவு நூற்பாலை என்பது சேவைத் துறை இல்லை; அதுதான் முதலமைச்சருடைய விளக்கம். இராசேந்திரன்



பேசுங்கள். (குறுக்கீடு) தனியாக நாள் ஒதுக்கி, இன்னொரு நாள் வைத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) இல்லை, சிவபுண்ணியம், உட்காருங்கள். இராசேந்திரன் பேசட்டும், அமைச்சர் பதிலுரை இருக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முதலமைச்சர் சொன்னதற்கு ஒரு விளக்கம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விவாதப் பொருளாக்க விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள், இதன்மீதுகூட பின்பு விரிவாக விவாதிக்கலாம் என்று. என்னுடைய கோரிக்கை, விவாதிப்பது என்பதைவிட கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் சம்பந்தப்பட்ட விஷயங்களை, அந்த ஊழியர்களுடைய கோரிக்கைகளை தொழிற்சங்கங்கள் அல்லது மற்றவர்களைக் கொஞ்சம் அழைத்துப் பேசி, அதிலே என்ன வாய்ப்பு இருக்கிறது என்பதைப் பற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது விவாதத்திற்குச் சம்பந்தமில்லாதது. திரு. இராசேந்திரன், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, வேண்டியதில்லை என்றால், தொழிலாளர்கள் என்ன ஆவார்கள் என்பதைப் பற்றி அக்கறை இல்லாமல் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராசேந்திரன் பேசுங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள், இராசேந்திரன் பேசுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில விளக்கங்களைக் கூறியிருக்கிறார்கள். அதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, 23 ஆண்டுகளாக தனி அதிகாரிகள் நிர்வாகத்திலே இருக்கின்ற இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடனடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபை மூலமாக நிர்வாகத்தை நடத்துவதற்கு தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் கருதுகின்றோம்.

அமைச்சர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் வள்ளல் பெருமான் அவர்கள் கூறியதற்குப் பதில் அளிக்கும்போது, நீதிமன்றத் தடை இருப்பதால் உடனடியாகத் தேர்தல்கள் நடத்த முடியவில்லை என்று ஓர் அறிவிப்பை அறிவித்தார்கள். அரசு அறிவித்த அறிவிப்பு என்பது கூட்டுறவுச்

சங்கங்களிலே புதியதாக, புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு தனி அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது என்ற சூழ்நிலையிலே, அதை எதிர்த்துத்தான் நீதிமன்றத்திலே இன்று வழக்கு இருக்கிறது என்ற சூழ்நிலையிலே, பழைய உறுப்பினர்களை வைத்து தேர்தல் நடத்துவதற்கு எந்தத் தடையும் இல்லை என்ற அடிப்படையிலே உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போலியான உறுப்பினர்கள் எல்லாம் அதிலே இருக்கிறார்கள் என்று இங்கே உறுப்பினர்களும் சுட்டிக்காட்டினார்கள். அதற்கிணங்கதான் அப்படிப்பட்டவர்கள் நீக்கப்பட வேண்டும், புதிய உறுப்பினர்கள் கூட்டுறவுத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்திட வேண்டும், விவசாயப் பெருங்குடி மக்களாக இருந்திட வேண்டும் என்கிற ஓர் எண்ணத்தின் அடிப்படையிலேதான் இந்த வழக்கு இன்னும் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடன் தேர்தலைச் சிறப்பாக அம்மா அவர்களுடைய அரசு நடத்தும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகத்திலே மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரி கூட்டுறவுச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு தமிழக அரசு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே வைப்பு நிதி என்பது வசூலிக்கப்பட்டு வந்த காலகட்டத்தில், இன்று 25 இலட்சம் ரூபாய் சொந்த நிதி வைத்திருக்கின்ற தொடக்க வேளாண்மை வங்கிகள் மட்டுமே வைப்பு நிதியை வசூலிக்கலாமென்ற அடிப்படையில், மாநில கூட்டுறவுப் பதிவாளர் அவர்கள் உத்தரவு வழங்கியதன் அடிப்படையில், இன்று அந்த 25 இலட்சம் சொந்த நிதி இல்லாத வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்க்ள், தாங்கள் பெற்ற வைப்பு நிதிகளை maturity -ஆன அந்தத் தொகைகளை திருப்பிக் கொடுக்க முடியாத...

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 இலட்சம் என்பது மாண்புமிகு அம்மா அவர்களுடைய



கவனத்திற்குச் சென்றதற்கு பின்னால், இப்போது 20 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது 20 இலட்சமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்ற அறிவிப்பினை அறிவித்திருக்கிறார்கள். ஆனால் maturity-ஆன தொகைகள் இன்று திருப்பி வழங்கப்படாத சூழ்நிலை பல்வேறு வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிறது என்ற அடிப்படையிலே அதை அவர்கள் உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல் ரிசர்வ் வங்கியினால் வழங்கப்படக்கூடிய வட்டி விகிதம் என்பது, மாநிலத்திலே உள்ள தலைமைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கப்பட்டு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு செல்லுகின்ற சூழ்நிலையிலே, ரிசர்வ் வங்கியினால் வழங்கப்படக்கூடிய வட்டி விவசாயிகளுக்குச் சென்றடையும்போது, அதிக வட்டி நிர்ணயம் செய்யக்கூடிய சூழ்நிலையிலே, தமிழ்நாட்டிலே இரண்டு அடுக்குமுறையை அதாவது நேரடியாக மாவட்ட கூட்டுறவு, மத்திய கூட்டுறவு வங்கிகளை, தலைமை கூட்டுறவு மத்திய வங்கிகளின் கிளைகளாக மாற்றுவதன் மூலமாக விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய வட்டியைக் குறைக்கக்கூடியதற்கான வாய்ப்பு இருக்கிறது என்ற அடிப்படையிலே அதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல்....

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டி விகிதங்களை இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர், அம்மா அவர்கள் 2 முறை குறைத்திருக்கிறார்கள். மேலும், இப்போது அறிவிப்பு வர இருக்கிறது. அந்த அறிவிப்பிலேயும் நல்ல ஆலோசனைகளை அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராசேந்திரன், இரண்டு மணித் துளிகளில் பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** அதேபோல் 1990 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கிய கடன்களுக்கு மத்திய அரசினால் 10,000 அளவுக்கு கடன் தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்ட அந்தச் சூழ்நிலையிலே, மத்திய அரசிடமிருந்து வரக்கூடிய விவசாய மறு முதலீட்டு நிதி என்பது கூட்டுறவு நிறுவனங்களுக்குக் காலம் கடந்து 4, 5 ஆண்டுகளுக்குப் பிறகாவது கிடைத்ததன் மூலமாக அந்தக் கூட்டுறவு வங்கிகள் பெரிய நஷ்டத்திற்கு ஈடுபட்டிருக்கக்கூடிய அளவிலே இருந்தன. அதன் காரணமாக, இன்று மத்திய அரசு அந்த இழப்புகளை எல்லாம் ஈடுகட்டக்கூடிய அளவுக்கு விவசாய மறு ஈட்டு நிதி, மறு முதலீட்டு நிதி என்ற அடிப்படையிலே மத்திய அரசு 60 பங்கு, மாநில அரசு 40 பங்கு என்ற அடிப்படையிலே கொடுப்பதற்கு தயாராக சென்ற ஆண்டு மத்திய அமைச்சர், நிதியமைச்சர் அவர்கள் அறிவித்தபோது, அதற்கான சில கன்டிஷன்களைப் போட்டதன் காரணமாக முறையாக கூட்டுறவு நிறுவனங்களிலே தனியார் நியமனம் இருக்கக் கூடாது. உடனடியாக நிருவாகக் குழுவை, கலைக்கப்பட்ட நிறுவனங்களுக்கு உடனடியாகத் தேர்தல்கள் நடத்த வேண்டுமென்ற அடிப்படையிலே சில விதிமுறைகளுக்கு உட்பட்டு அந்த அறிவிப்பை அறிவித்ததன் காரணமாக, தமிழக அரசு மத்திய அரசினுடைய நிதியைக் கோரிப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கை, துறை அதிகாரிகளினாலோ, தமிழக அரசினாலோ எடுக்கப்படவில்லை என்பதை நான் இந்தத் தருணத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் சென்ற ஆண்டு தமிழக அரசு அறிவித்த கூட்டுறவு நிறுவனங்களில் கடன் தொகையைச் செலுத்துவதற்கு one time settlement என்ற அடிப்படையிலே ஒரு அறிவிப்பை அறிவித்தார்கள். அந்தக் காலக்கெடு என்பது நீட்டித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று நான் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இப்போது தமிழகம் முழுவதும் 28 மாவட்டங்கள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், மீண்டும் ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு விவசாயிகள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 12-40*

அதே சமயத்திலே (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம், கூட்டுறவுக் கடனுக்கான வட்டித் தள்ளுபடி நிவாரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால், அதற்காக அணாவாரிச் சான்றிதழ் தயாரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துவதை, 28 மாவட்டங்களிலும் வறட்சி என்று அறிவிக்கப்பட்ட காலத்திலே அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பித்த அனைவருக்கும் தகுதியின் அடிப்படையிலே குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு உடனுக்குடன் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கி ஊழியர்கள் பிரச்சினை என்பது தீர்க்கப்படாத ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. அவர்களுடைய பிரச்சினைகளை அரசு ஆராய்ந்து சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்று இந்தக் காலக்கட்டத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மணியடிக்கப்பெற்றது) இதோ பேச்சை முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** அதேபோல் நியாய விலைக் கடைகள், பகுதி நேர நியாய விலைக் கடைகள் அமைப்பதற்கு விதிக்கப்பட்டிருக்கின்ற சில கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, அதிக தூரம் உள்ள இடங்களுக்கு பொதுமக்கள் சென்று ரேஷன் கடைகளிலே பொருட்கள் வாங்குவதால் காலதாமதம் ஏற்படுகிற காரணத்தினால், அப்படிப்பட்ட கிராமங்களைக் கண்டறிந்து, பகுதி நேர நியாய விலைக் கடைகளை அந்தப் பகுதிகளிலே திறப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் ஆக்கி, மாவட்ட கழகத்தினுடைய செயலாளர் ஆக்கி, வனத் துறையினுடைய அமைச்சராக்கி, அதற்குப் பின்னால் முதலாவதாக, இன்றைக்கு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையினுடைய மானியக் கோரிக்கையை இங்கே தாக்கல் செய்கிற ஒரு நல்லநிலையை எனக்கு ஏற்படுத்தித் தந்த அன்னையை வணங்குகிறேன்.

பிஞ்சுப் பருவத்திலே வரலாற்றின் வாசலுக்கு வந்த
பிரெஞ்சு தேசத்தின் ஜோன் ஆப் ஆர்க்;
இப்படியும் ஒரு இரும்புப் பெண்மணியோ என்று
இங்கிலாந்து வியக்க வைத்த மார்கரெட் தாட்சர்;
புடவை கட்டிய புயலாய், எதிரிகளைப் புறமுதுகிட வைத்த
ஜான்சி ராணி;
அனாதைகளின் சரணாலயமாய் தன்னை ஆக்கிக் கொண்ட
அன்னை தெரசா;
விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்காகத் தன்னையே உருக்கிக் கொண்ட
மேரி கியூரி;
சோதனைகளைச் சாதனைகளாக்கி,
எட்டுத் திக்கும் வெற்றிக் கொடி நாட்டி,
மக்கள் நெஞ்ச அரியணையில் வீற்றிருக்கும் தங்கத் தலைவியே;
தங்களை வீழ்த்த நினைப்பவர்களை மக்கள் நெஞ்சத்திலேயிருந்து
விரட்டியடித்த சக்தியின் அவதாரமே (மேசையைத் தட்டும் ஒலி)
பேச்சில் வல்லவர்கள் என்ற வாய்ச்சொல் வீரர்களை எல்லாம்
வாயடைக்க வைத்த இலக்கிய ஊற்றே;
எட்டுத் திக்கிலும் உள்ள பெண்கள் சாதித்த சாதனைகளை
ஒட்டுமொத்தமாய் சாதிக்க வந்திருக்கிற
சரித்திர நாயகி,
எங்களின் இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி



அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து எனது உரையைத் தொடங்குகின்றேன்.

தமிழ்நாட்டில் அனைவரும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு பெறுவதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே இந்த அரசின் இலக்கு என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடுபடும் துறையாக விளங்குகிறது.

குறிப்பாக, கிராமப் பொருளாதாரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுகள் நடத்தும் 28,060 நியாயவிலைக் கடைகள் மூலமாக, மாநிலத்தில் ஒரு கோடியே 60 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு, குடும்பத்தினருக்கு அத்தியாவசியப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. குடும்பங்களை வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவை, வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவை என பிற மாநிலங்களிலே பிரித்து இருக்கிறார்கள். ஆனால் நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் மக்களினுடைய நலனைக் கருதி அரிசி வேண்டும் என்போர், அரிசி வேண்டாம் என்போர் என இருவகைப்படுத்தி இளஞ்சிவப்பு நிற அட்டைகளும், மஞ்சள் நிற அட்டைகளும் வழங்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மக்களும் பொதுவாக ஏழையெளிய மக்கள் பயன்படும் விதத்தில் பொது விநியோகத் திட்டத்தைச் சீரமைக்கின்ற வகையில் முக்கியத்துவம் கொடுத்து, திட்டச் செயலாக்கத்தை முழுமையாக ஆய்வு செய்தார்கள்.

பிற்பகல் 12-45

1991-92 இல் இருந்த உணவு மானியத் தொகை ரூ.316 கோடி ஆகும். ஆனால், 2001-2002 இல் அத்தொகை ரூபாய் 1,240 கோடியாக உயர்ந்தது. இவ்வளவு நிதிச் சுமை இருந்தும் திட்டத்தின் முழுப் பயன் மக்களுக்குச் சென்று அடைவதிலே சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. அதற்குக் காரணம் முந்தைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தரம் குறைந்த நெல்லை ஆதார விலையுடன், ஊக்கத் தொகை கொடுத்து, தேவைக்கு மிஞ்சிய அளவில் வாங்கிச் சேகரித்த முறை, சேமிப்புச் சேதாரம் மற்றும் விநியோகத்தில் ஏற்படும் சீர்கேடுகள்

போன்றவையாகும். இவற்றைத் தீவிரமாக ஆய்வு செய்து எங்கெல்லாம் முறைகேடுகள் ஏற்பட்டனவோ, எங்கெல்லாம் அவை ஏற்பட வாய்ப்பு உள்ளதோ அவற்றைத் தடுக்க அம்மாவினுடைய அரசு சிறப்பான நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நியாய விலைக் கடைகளில் பொது மக்கள், குறிப்பாக ஏழையெளிய மக்கள் வாங்கும் பொருட்களின் தரம் செம்மையாக இருக்க வேண்டும் என்று அம்மா அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுரை வகுத்திருக்கிறார்கள். அதன்படி இவ்வரசு ஏழையெளிய மக்கள் வாங்குகிற அரிசியின் தரம் நல்லதாக இருக்க வேண்டும் எனக் கருதி அனைத்து நியாய விலைக் கடைகளிலும் தரமான அரசி வழங்குவதே இன்றைய நிலை என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அனைத்து நியாய விலைக் கடைகளிலும் திடீர் சோதனைகளை மேற்கொண்டு, தரம் குறைந்த அரிசி கண்டறியப்பட்டால், அவற்றை உடனுக்குடன் அகற்றி, தரமான அரசி வழங்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டு இருக்கிறது. நியாய விலைக் கடைகளில் அனைத்துப் பொருட்களும் தட்டுப்பாடின்றி அனைத்து நாட்களிலும், அரசு விடுமுறை நாட்களைத் தவிர, கிடைக்க வழிவகை செய்து, ஞாயிற்றுக் கிழமைகளிலும் நியாய விலைக் கடைகள் செயல்பட அம்மா அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள்.

அதேபோன்று பல்வேறு மாநிலங்களோடு நம்முடைய மாநிலத்தினுடைய அரிசியை ஒப்பிடுகிறபொழுது நம்முடைய மாநிலத்திலேதான் மிகக் குறைந்த விலையிலே கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் 50 காசிற்கு அரிசி வழங்கப்படுகிறது. அதிகமான விலையாக கிலோ ஒன்றுக்கு 6 ரூபாய்க்கு நம்முடைய மாநிலத்திலே அம்மா அவர்களுடைய அரசாலே தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. வறுமைக் கோட்டிற்கு மேல், கீழ் என்று மற்ற மாநிலங்களிலே எல்லாம் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஆந்திராவிலே வறுமைக் கோட்டிற்குக்கீழ் 5¼ ரூபாய் என்ற அளவிலேயும், அதிக விலையாக 9 ரூபாய் என்றும் விற்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் முதல் 8 கிலோவிற்கு 3.75-ம் இரண்டாவது பகுதிக்கு ரூ.6.15 என்கின்ற வகையிலே விற்கப்படுகிறது. அதேபோன்று அதிக விலையாக 9 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கேரளாவிலே வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு ரூ.6.20-க்குத்



தருகிறார்கள். அதேபோன்று அதிகமாக ரூ.8.90-க்குத் தரப்படுகிறது. மேற்கு வங்காளத்தில் ரூ.6.15 காசுக்குத் தரப்படுகிறது. அதேபோன்று 8 ரூபாய் வரை அதிகமான விலைக்குத் தரப்பட்டுக் கொண்டிருக்கிறது. இதன் மூலமாக தமிழகத்திலேதான் இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில் அரிசியை 3 ரூபாய் 50 காசுக்கு நம்முடைய அம்மா அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று 1-7-2002 முதல் கூப்பன் முறை அரிசி வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப அட்டையில் இடம் பெற்றுள்ள நபர்கள் கையொப்பமிட்டு—குடும்பத் தலைவரே சான்றொப்பமிட வேண்டும் என்ற நிலையை மாற்றி—அந்தக் குடும்பத்திலே இருக்கிறவர்கள் யார் வேண்டுமானாலும் வாங்கலாம் என்கின்ற நிலைமையை அம்மா அவர்கள் ஏற்படுத்தியதன் விளைவாக, இன்றையதினம் 16 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப கூப்பன் முறையிலே வாங்குவதற்கு வருவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் தவறான குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, பொய்ப் பட்டியல்கள் தயாரித்து அரிசி முறைகேடான முறையில் கடத்தும் வாய்ப்பு தற்போது தடுக்கப்பட்டது என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-50*

அதேபோன்று, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தேயிலைக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக அம்மா அவர்கள் சிறப்பான நடவடிக்கைகள் எடுத்தார்கள். கைத்தறி நெசவாளர்கள் துயர் துடைக்க வேண்டும் என்பதற்காக நல்ல நடவடிக்கையை எடுத்து 2002-2003-ல் 4,241 டன் ஊட்டி தேயிலையை விற்பனை செய்தார்கள். அதேபோன்று கைத்தறித் துணிகள் 20 கோடி ரூபாய்க்கு கைத்தறி வேட்டிகளும், சேலைகளும் நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு, நல்ல நிலையை ஏற்படுத்தித் தந்தார்கள். அந்தத் திட்டம் இன்றைக்குச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று நெல் கொள்முதல் திட்டத்தைப் பொறுத்தவரை இவ்வரசு நியாயவிலைக் கடைகளில் தரமான அரிசியை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு மைய அரசு வகுத்துள்ள பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தை 1-10-2002 முதல் செயல்படுத்தி வருகிறது. அவ்வாறு நெல் கொள்முதல் செய்ய மைய அரசு வகுத்துள்ள தரம் தொடர்பான வரையறைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசு நாடு முழுவதும் உணவு தானியங்கள், சமையல் எண்ணெய் போன்றவற்றை எந்தவிதமான கட்டுப்பாடுமின்றி வாங்குவதற்கும், விற்பனை செய்வதற்கும், கையிருப்பு வைத்துக்கொள்வதற்கும் வியாபாரிகளுக்கு வழிவகை செய்ய ஒரு நாடு தழுவிய ஆணையை வெளியிட்டது. அந்த ஆணை இன்றியமையாப் பண்டங்கள் சட்டம் 1955-ன் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இதுவரை மாநிலங்கள் கடைப்பிடித்து வந்த கட்டுப்பாடுகளைச் செயலற்றதாக்கிவிட்டது. இனிமேல் மாநில அரசுகள் மைய அரசின் முன் அனுமதி இல்லாமல் கட்டுப்பாடுகள் விதிக்க இயலாது. இதனை இவ்வரசு தீவிர பரிசீலனை செய்து மைய அரசின் ஆணையைச் செயல்படுத்த முடிவு செய்தது. இதன்படி 17-4-2003 முதல் இவ்வரசு ஆணையைப் பிறப்பித்துச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளதால் வணிகர்கள் எந்த உரிமமும் பெறத் தேவையில்லை. ஆயினும், வெளிச்சந்தையில் அத்தியாவசியப் பொருட்கள் விலைகளைத் தீவிரமாகக் கண்காணித்து, தேவைப்பட்டால் அவற்றை ஒழுங்கு செய்ய சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ள இவ்வரசு தயங்காது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல் கொள்முதல் நடப்பு சம்பா 2003 பருவம் 28-1-2003 முதல் துவக்கப்பட்டது. தற்போது நம்முடைய மாநிலத்தில் 339 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு இப்பருவத்தில் அதற்கான விலை கிரேடு 'ஏ' குவிண்டால் ஒன்றுக்கு ரூ.560-ம், பொது இரகம் குவிண்டாலுக்கு ரூ.530-ம் தரப்பட வேண்டுமென்று அறிவித்தார்கள். இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்களுக்கு, பணிந்து நான் தெரிவித்துக்கொள்வது; குறிப்பாக, தஞ்சை, நாகப்பட்டினம் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும் இங்கே அமர்ந்திருக்கிற காரணத்தாலே ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே வறட்சிப் பகுதியிலே இருக்கின்ற அவர்களுக்கு நிவாரணத்தை வழங்க வேண்டுமென்று அம்மா அவர்கள் எண்ணிக் கொண்டு, நீங்கள்



உங்களுடைய எண்ணங்களை எல்லாம் இந்தச் சட்டமன்றத்திலே சொல்லிக்கொண்டிருந்த நேரத்தில் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசுக்கு ஒரு நெருக்கடியைக் கொடுக்க வேண்டும் என்பதற்காக தமிழ்நாட்டைச் சார்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் டெல்லியில் சொல்லி இருக்கிறார். நுகர்பொருள் வாணிபக் கழகம் தமிழகத்திலே நடைபெறவில்லை. அவர்கள் சரியாக அங்கே பணியாற்றவில்லை, தஞ்சையிலேயும், நாகப்பட்டினத்திலேயும் அவர்கள் நெல்லை சரியாக வாங்கவில்லை, எனவே, அந்தத் தொகையைத் தர வேண்டாம் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒருவர் சொன்னார் என்ற குற்றச்சாட்டை இந்த மாமன்றத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னாலேதான் மாண்புமிகு அம்மா அவர்கள் 20 ரூபாயைத் தந்திட வேண்டுமென்று வைத்த வேண்டுகோளுக்கு இணங்க மத்திய அரசு செவி சாய்த்து அந்த 20 ரூபாயை இங்கே வழங்கியது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-55

அதேபோன்று விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை, தொடர்ந்து எடுத்து வருகிறார்கள். இந்தக் கொள்முதல் மூலமாக 1,40,580 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த மாநிலத்தில் செயல்படும் 118 தொடக்க வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இயக்கம் ஆகியவை விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு இடைத்தரகர்கள் தலையீட்டினைத் தடுத்து நியாயமாக விற்பனை செய்வதில் உதவி புரிந்தன.

அதேபோன்று, விவசாய நலன் காக்கின்ற இந்த அரசு, சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலன் எப்போதும் பாதிக்கப்படக்கூடாது என்று உறுதி பூண்டிருப்பதற்கு இணங்க, விவசாயிகளின் துயரத்தைத் துடைத்திடும் வகையில் வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்தது. இத்திட்டத்தின் மூலமாக 226.56 கோடி ரூபாயை—வட்டியையும் அபராத வட்டியையும்—தள்ளுபடி செய்தது. இவ்வரசால் 6,11,193 விவசாயப் பெருங்குடி மக்கள் இதன் மூலமாகப் பயன் அடைந்துள்ளார்கள். சட்டமன்றக் கூட்டத்தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் [illegible] என்று சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 50 கோடி ரூபாய் வட்டி இரத்து செய்யப்படும் என்பதை அறிவித்திருக்கிறார்கள்.



185075 31 P02 P02.48

அதேபோன்று, தேசிய வேளாண் பயிர்க் கடன் மூலமாக 2002-2003-ல் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியில் 11,739 விவசாயிகளுக்கு ரூ.2.65 கோடி அளவிற்கு இழப்பீடு வழங்கப்பட்டது என்பதை நான் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கூட்டுறவு மூலமாக 2002-2003-ல் பல்வேறு இனங்களின் அடிப்படையிலே குறுகிய காலக் கடனாக—வேளாண்மைக் கடன்—963 கோடி ரூபாயும், மத்திய காலக் கடனாக 94 கோடி ரூபாயும், நகைக் கடனாக 4,705 கோடி ரூபாயும் வீடுகட்டுவதற்காக 98 கோடி ரூபாயும் இந்தக் கூட்டுறவுத் துறையின் மூலமாக அம்மாவினுடைய அரசு வழங்கியிருக்கிறது என்பதைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு, விவசாயிகளின் நலன் கருதி பயிர் கடனுக்கு ரூ.25,000/-த்திலிருந்து ரூ.50,000/- வரை, 15-சதவீதத்திலிருந்து, 13 சதவீதம் ஆகவும், ரூ.50,000/-த்திற்கு மேல் உள்ளவர்களுக்கு 16-சதவீதத்திலேயிருந்து, 14 சதவீதமாகவும் வட்டி வீதத்தைக் குறைத்திருக்கிறது. மேலும் இந்தச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று அம்மா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோன்று, ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டத்தை அம்மா அவர்கள் அறிவித்ததன் மூலமாக 1,01,867 பயனாளிகள் 1,028 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்தின் மூலமாக பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதை நான் (மேசையைத் தட்டும் ஒலி) பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, பருவ மழை பொய்த்துப்போனாலும், தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய நீரின் பங்கை கர்நாடக அரசு காவிரியிலேயிருந்து, மேட்டூர் அணைக்குத் திறந்துவிடாவிட்டாலும் குறுவை பயிர் இடாத நிலையில், விவசாயிகள் தற்போது சம்பா மற்றும் தாளடி பயிர்களை இழந்த நிலையினை அறிந்து 'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான்' என்ற வள்ளுவர் வாக்குப்படி, பிறருடைய துன்பம், தன் துன்பம் என உணர்ந்து நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு, சென்னை மாவட்டத்தைத் தவிர, மாநிலத்தின் 28 மாவட்டங்களை வறட்சிப் பகுதிகளாக அறிவித்து, அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளைத் தந்திருக்கிறார்கள் என்பதையும், அதிலே 21 கோடி ரூபாயை அனைவரும் பாராட்டத்தக்க அளவிற்கு டெல்டா பகுதியிலே தந்தார்கள் என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



"வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழு மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பலகல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்".

என்ற பார் போற்றும் பாரதியின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் மாநிலத்தில் நிலவிய வறட்சியினைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் உணவுப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தை உறுதி செய்ய டெல்டா மாவட்டங்களில், நிலமற்ற வேளாண் தொழிலாளர் குடும்பங்களுக்கும் சிறப்பு மதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். சமைக்கப்பட்ட உணவிற்குப் பதிலாக அரிசி வழங்குவது உகந்ததாக இருக்கும் எனக் கோரிக்கைகள் வரப்பெற்றவுடன், இலவச உணவிற்காக ஏற்கெனவே பதிவு செய்துகொண்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 1-2-2003 முதல் 30 கிலோ அரிசியை வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலே தந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோன்று, ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம். அந்தத் திட்டம் தஞ்சை, திருவாரூர், பெரம்பலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டு ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிகோலப்பட்டது. இந்தத் திட்டத்தின் மொத்த முதலீடு ரூபாய் 45 கோடியாகும். இந்தத் திட்டத்தின்கீழ் மேலும் 2 மாவட்டங்களைச் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மகளிர் நலனுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். கூட்டுறவுத் துறை; மகளிர் பொருளாதார வளர்ச்சியை மையக் கருத்தாகக் கொண்டு, கூட்டுறவு வங்கிகள் வழங்கும் முன்னுரிமைக் கடனுக்கு 2002-2003-ல் ஒரு சதவீதம் வட்டி பெண்களுக்காகக் குறைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

சிரமைக்கப்பட்ட மகளிர் கடன்கள் சிறு வணிகக் கடன் மூலமாக 15 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாக வட்டி குறைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். அந்த அடிப்படையிலே மேலும் மகளிர் நலம் பேணப்படும் வகையில் உழைக்கும் மகளிருக்கும், மகளிர் தொழில் முனைவோருக்கும் வழங்கப்படும் கடனுக்கான வட்டி 15 சதவீதத்திலிருந்து 14 சதவீதமாகக் குறைக்கப்படுவதற்கு ஆணையிட்டுள்ளார்கள். மேலும், இது

அறிவிப்பிலே மேலும் குறைக்கப்பட விருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கந்துவட்டிக்காரர்களிடம் கடன்பட்டு நிதிச் சுமையிலேயிருந்து மீள முடியாமல் வறுமையில் வாடுகிற இட்லிக் கடை, பூ வியாபாரம், பழ வியாபாரம் போன்ற சிறு சிறு தொழில்கள் செய்து பிழைப்பு நடத்தி வந்த ஏழையெளிய மகளிர் வாழ்வை சீரமைக்கப்பட்ட மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தால் உயர்வடைய செய்த சிறப்பும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுக்குரியது என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்தத் திட்டத்தின் மூலம் நகர்ப்புறப் பகுதிகளில் 31-3-2003 வரை 64 ஆயிரத்து 976 நபர்களுக்கு 16 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. கிராமப்புறப் பகுதிகளிலே 65 கோடி ரூபாய் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டமாக பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிற மாண்புமிகு அம்மா அவர்கள் மகளிர் தொழில் முனைவோர் கடனுக்காக 5 இலட்சம் வரை, இதுவரை 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 14 சதவீத வட்டியில் சிறுதொழில் மற்றும் சேவை மையங்கள் தொடக்கக் கடன் வழங்கி வருகிறார்கள் என்பதையும், 414 மகளிர் தொழில் முனைவோருக்கு 290 இலட்சம் அளவிற்குக் கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, மாதச் சம்பளம் வாங்குகிற மகளிருக்கு மாத ஊதியம் பெறும் மகளிர் கடன் திட்டத்தின்கீழ் கூட்டுறவு வங்கிகள் 20,000 ரூபாய் வரை கடன்கள் தருகிற ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக 11 கோடி ரூபாய் அளிக்கப்பட்டு 6,500 மகளிர் இதுவரை பயன்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, மகளிர் பேறுகாலக் கடன் என்கின்ற ஒரு மகத்தான திட்டத்தை வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையிலே நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். அதிலே 2,000 ரூபாய் வரை அவர்கள் பெற இயலும் என்பதையும், 150 இலட்சம் அளவிற்கு இன்றையதினம் தமிழ்நாட்டில் அதைப் பெற்றிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அது மாத்திரம் அல்லாது, சென்னை மத்திய கூட்டுறவு வங்கி வட சென்னையிலுள்ள அரசு ஸ்டேன்லி மருத்துவமனைக்குத் தேவையான கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சமும், சென்னையிலுள்ள பாரதி மகளிர் கல்லூரிக்கு பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணவியருக்குக் கூடுதலாக இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூபாய் 10 இலட்சமும் மனமுவந்து தந்ததை மாண்புமிகு அம்மா அவர்கள் அங்கே சமர்ப்பித்தார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

அது மாத்திரம் அல்லாது, தமிழ்நாட்டில் ஏனைய மாநிலங்களுக்கு முன்னோடியாகக் கூட்டுறவுத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில் ஸ்ரீலங்காவிலேயிருந்து வந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும், உத்தரப் பிரதேசத்திலேயிருந்து வந்த உணவுத் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய சிறப்பான ஆட்சியைப் பாராட்டிவிட்டுச் சென்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-05

அதுமாத்திரம் அல்லாது, தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி பல்வேறு நிலைப்பாடுகளிலே இருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி 2001-ல் நபார்டு வங்கியினுடைய முதல் பரிசை நம்முடைய தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி பெற்றது என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோன்று, தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 1958 முதல் இயங்கி வருகிறது. அந்தச் சேமிப்புக் கிடங்குகளின் மூலமாக நம்முடைய மூலதனம் ரூபாய் 800 இலட்சம் ஆகும். இப்போது 2002-2003-ல் 350 இலட்சம் ரூபாய் இலாபத்தைப் பெறக்கூடிய சூழ்நிலையிலே இன்றைய தினம் அந்த நிறுவனம் இருந்து கொண்டு இருக்கிறது என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நுகர்வோர் இயக்கம் இன்று மக்களிடையே மிக வேகமாக வளர்ந்து வருகிறது. சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியைத் தலைவராகக் கொண்ட மாநில நுகர்வோர் குறை தீர் ஆணையத்தை மாநில அரசு சென்னையில் அமைத்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் மாவட்ட குறை தீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னை மாவட்டத்தில் தென் சென்னை பகுதி மக்களுக்கும், வட சென்னை பகுதி மக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் இரு மாவட்ட நுகர்வோர் குறை தீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறை தீர் மன்றங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இந்தத் துறையிலே புலனாய்வுப் பிரிவு ஒன்று சிறப்பாகச் செயலாற்றிக் கொண்டிருக்கின்றது. இங்கே பல கூட்டுறவுச் சங்கங்களில் முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையெல்லாம் மாற்றியமைக்கின்ற வகையிலே பல்வேறு திருத்தங்களையெல்லாம் இந்த அரசு கொண்டு வரவிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த கால ஆட்சியில் கூட்டுறவு வார விழா நடத்துவதற்கு ஒவ்வொரு ஆண்டும் 1 கோடி ரூபாய் அனைத்து மாவட்டங்களிலும் செலவு செய்யப்பட்டது. ஆனால், இப்போது மாநில அளவில் 10 இலட்சம் அல்லது 15 இலட்சம் வரை செலவிடப்பட்ட நிலையை மாற்றி மாண்புமிகு அம்மா அவர்கள் பொறுப்பேற்றவுடன் அது 50,000 ரூபாய்க்கு மிகாமலும், 25,000-த்திற்கு குறையாமலும் செலவிடப்பட வேண்டும் என்று இத்துறைக்கு ஆணையிட்டு 1 கோடி ரூபாய்க்கு மேலுள்ள செலவுகள், வீண் செலவுகள் அறவே நிறுத்தப்பட்டன என்பதை நான் இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முறைகேடுகள் பற்றி இங்கே உறுப்பினர்கள் எல்லாம் மிக ஆணித்தரமாகவே எடுத்து வைத்தார்கள். முறைகேடுகள் என்று சொல்கிறபோது, முறைகேடுகள் என்று சொன்னால், முறைகேட்டினுடைய மொத்த உருவம் தி.மு.க. என்பது நாடறிந்த உண்மை என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியில் கொப்பரைக் கொள்முதலில் நடந்த முறைகேடுகள், கூட்டுறவு வங்கியில் அதிக கட்டணங்கள், எரி வாயு உருளையில் இணைப்பு அளித்தது, அரசின் சத்துணவுத் திட்டத்திற்காகக் கூட்டுறவுகள் மூலம் பருப்பு கொள்முதல் செய்ததில் நடந்த முறைகேடுகள் எனப் பல்வேறு முறைகேடுகளை அவர்கள் செய்தார்கள் என்பதனை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, அவற்றிற்கெல்லாம் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு



வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 241 இனங்களில் காவல் துறையில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 186 நபர்களுக்கு தனி நீதிமன்றத்தில் தண்டனைகள் வழங்கப்பட்டுள்ளன. 990 மோசடி வழக்குகள் தற்போது நீதிமன்றத்தில் விசாரணைக்கு இருந்து வருகின்றன. 506 நபர்களுக்கு கூட்டுறவு சட்டப் பிரிவு 36-ன்படி நிரந்தர தகுதி நீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட நபர்கள் அனைவரும் கடந்த ஆட்சியின்போது கூட்டுறவுத் தலைவர்களாக, கூட்டுறவு நிர்வாக உறுப்பினர்களாக இருந்தவர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இது மாத்திரம் அல்ல. இன்னும் என்னென்ன குறைபாடுகள் என்று இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள். அந்த வகையிலேதான் மதுரை மாவட்டத்தில் மதுரை நகர கூட்டுறவு வங்கியிலே 20 கோடி ரூபாயும், தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 88 இலட்சம் ரூபாயும், கோவை மாவட்டத்தில், வையம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 44 இலட்சம் ரூபாயும், திருநெல்வேலி மாவட்டத்தில் பழைய பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 16 இலட்சம் ரூபாயும், தஞ்சாவூர் மாவட்டத்தில் மறுக்கம்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 10 இலட்சம் ரூபாயும், கடலூர் மாவட்டத்தில் புதுப்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 13 இலட்சம் ரூபாயும், தருமபுரி மாவட்டத்தில் ஓசூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் ஒரு கோடி ரூபாயும், வேலூர் விற்பனைப் பண்டகசாலையில் 21 இலட்சம் ரூபாயும், சிந்தாதிரிப்பேட்டை, சென்னையிலே 24 இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டம், வட குரும்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 16 இலட்சம் ரூபாயும், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கூட்டுறவு வங்கியில் 16 இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டம், மேல் ஒலக்கூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 17 இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டம், நாகந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 12 இலட்சம் ரூபாயும், என இப்படி பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றன. அவை குறித்து இன்றைக்கு வழக்குகள் தொடரப்பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-10*

இப்படிப்பட்ட குற்றங்களையெல்லாம் செய்திட்டவர்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றதற்குப் பின்னால், கூட்டுறவுச் சட்டத்திலே கடுமையான பல்வேறு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

பிரிவு 162-ன்கீழ் எவ்வளவு பெரிய குற்றங்களைச் செய்தாலும் 500 ரூபாய், குறைவான பணத்தைக் கட்டினால் போதும் என்றிருந்த நிலைமைகளையெல்லாம் மாற்றி, இன்றைக்கு 162 நீக்கப்படுகிற--உரிய பிரிவை ஏற்படுத்துகிற--நிலைமையை அம்மா அவர்கள் ஏற்படுத்த இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பணிந்து தெரிவித்துக்கொண்டு, பல்வேறு சீர்திருத்தங்களை இன்றையதினம் அம்மா அவர்கள் கொண்டு வந்துகொண்டிருக்கிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கூட்டுறவுச் சீர்திருத்தச் செம்மல் என்று நிரூபிக்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு திருத்தங்களை இன்றைக்குக் கொண்டு வந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு அறிவிப்புகளை அம்மா அவர்கள் தர வேண்டுமென்று பணித்திருக்கிறார்கள். அவற்றை இங்கே சொல்வதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

(1) குறுகிய காலப் பயிர்க் கடன்களுக்கான வட்டி 12 சதவீதம் முதல் 14 சதவீதம் என்று இருப்பதை 12 சதவீதமாகக் குறைத்து, உரிய காலத்திற்குள் கடனையும், வட்டியையும் திருப்பிச் செலுத்துபவர்களுக்கு, வட்டியில் மேலும் 1 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) நகைக் கடன் வட்டி வீதம் எல்லா கூட்டுறவு வங்கிகளிலும் ஒரே விதமாக 13 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகக் குறைக்கப்படும்.

(3) பேறு காலத்தில் நிதி வசதி இல்லாமல் இருக்கின்ற தாய்மார்களுக்கு கூட்டுறவு வங்கிகள் வாயிலாக ரூ.2,000/- வரை பேறுகாலக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இக்கடனுக்கான வட்டி விகிதம் 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதமாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



(4) நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், நீண்ட காலம் நிலுவையாய் உள்ள தொகையை வசூலிக்க வழி வகுக்கவும் ஒட்டுமொத்தக் கடன் தீர்வுத் திட்டம் (One Time Settlement) என்கிற திட்டத்தை அரசு முன்பு அறிவித்திருந்தது. அந்தத் திட்டத்தினை மேலும் விரிவுபடுத்துகிற வகையில் 30-6-2003 வரை நீட்டிக்கப்படும். (குறுக்கீடு) முதலில் அறிவித்தது 30-9-2002 வரை. இப்போது அம்மா அவர்கள், அதற்கு நிறைய வரவேற்பு இருக்கின்ற காரணத்தால், விவசாயப் பெருங்குடி மக்களெல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அதை மேலும் நீட்டிக்க வேண்டுமென்று, இத்திட்டத்தை 30-6-2003 வரை நீட்டிக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

(5) மக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் கூட்டுறவு வங்கிகள் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றன. எனவே, கடன் வழங்குதலை மேம்படுத்தி விரைவாக வழங்குவதற்கு ஏதுவாக கூட்டுறவு வங்கிகளைக் கணினிமயமாக்குவது அவசியமாகிறது. எனவே, அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும், நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளும் இவ்வாண்டு கணினிமயமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(6) விவசாயிகளுக்கும், விவசாயத் தொழில் சார்ந்த தொழில்களுக்கும் கூட்டுறவு வங்கிகள் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய் கடனாக வழங்கி வருகின்றன. இவ்வாறு கடன் வழங்குதலைக் காப்பீட்டுத் திட்டத்துடன் சேர்த்துச் செயல்படுத்தினால், கடன் கொடுத்த வங்கிக்கும், கடன் பெற்ற விவசாயிக்கும் பயனுள்ளதாகும் எனக் கருதப்படுகிறது. எனவே, கூட்டுறவு வங்கிகளில் இன்சூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்துவது குறித்த வழிமுறைகள் ஆராயப்படும்.

*பிற்பகல் 1-15*

(7) வங்கிகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் மூலம் பணம் வழங்குதல் காலத்தின் கட்டாயமாகிவிட்டது. சென்னையில் இந்த ஆண்டு 20 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரங்கள் (Automatic Teller Machines) அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*(8)* பணிபுரியும் பெண்களுக்கான கடன் அளவு 20,000/- ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(9)* இதைப்போன்றே தொழில் தொடங்க முனையும் பெண்களுக்குத் தற்போது வழங்கப்படும் கடன் ரூபாய் ஐந்து இலட்சத்திலிருந்து ரூபாய் பத்து இலட்சமாக உயர்த்தப்பட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(10)* பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வியை மாணவ/மாணவிகள் தொடர்வதற்கு ஏதுவாக நிதி வசதி அளித்து அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது இக்காலக்கட்டத்தில் மிகவும் அவசியம் எனக் கருதி, கூட்டுறவு வங்கிகள் மூலம் கல்விக் கடன், குறிப்பாக மாணவிகளுக்கு வழங்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. இதற்கான வட்டி விகிதம், திருப்பிச் செலுத்தக்கூடிய காலம் ஆகியவை குறித்து கல்வித் துறையுடன் கலந்து விரிவாக ஆலோசித்து பின் தக்க ஆணைகள் வழங்கப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(11)* இவ்வாண்டு கூட்டுறவுத் துறைக்கென ஒரு இணையதளம் (Website) ஏற்படுத்தப்படும். இதில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்களுக்கு அளிக்கப்படும் பயன்கள் குறித்த விவரங்களும், அவற்றை எவ்வாறு பெறவேண்டும் என்பதற்கான வழிமுறைகளும் இடம்பெறும்.

*(12)* இவ்வாண்டு ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் மேலும் இரண்டு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

*(13)* தமிழ்நாட்டில் 40 வட்டங்களில், இன்றியமையாப் பொருட்களை சேமித்து வைக்க நவீன சேமிப்புக் கிடங்குகள் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருட்களை சேமித்து வைப்பதற்காக ஆண்டிப்பட்டி மற்றும் கும்மிடிப்பூண்டி வட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் இரு செயல்முறைக் கிடங்குகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*(14)* தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலிருந்து 29 மாவட்டத் தலைநகரங்களிலும் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு



வருகின்றன. இதுவரை இவ்வலுவலகங்களுக்கு 21 மாவட்டங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. கரூர், சேலம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் மண்டல அலுவலகக் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வரும் நிதியாண்டில் (2003-2004) தேனி, திண்டுக்கல், நாகப்பட்டினம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் மண்டல அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் ரூபாய் 90 இலட்சம் மதிப்பீட்டில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அதேபோன்று 2003-2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிருஷ்ணகிரி, சேலம், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, கள்ளக்குறிச்சி, நீடாமங்கலம், ஆலங்குடி (புதுக்கோட்டை), திண்டுக்கல், சாத்தான்குளம், தென்காசி ஆகிய 10 கிடங்கு வளாகங்களில் அலுவலக அறைகள் கட்டப்படும்.

*(15)* தொழிலாளர் நலன் நாடி இந்த அரசு பெண்ணாகரம், பாலக்கோடு, ஓசூர், சேனாபதிபாளையம், கவுண்டம்பாளையம், திருவண்ணாமலை, சிதம்பரம் (கிடங்கு), சிதம்பரம் (நவீன அரிசி ஆலை), வெள்ளனூர், தூத்துக்குடி ஆகிய 10 கிடங்கு வளாகங்களில் சுமை தூக்குவோருக்கு ஓய்வு அறைகள் ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

*(16)* கட்டப்பட்டுள்ள சேமிப்புக் கிடங்குகளில் உணவுப் பொருட்களுடன் தற்சமயம் எண்ணெய் பேரல்கள் மற்றும் கோணிப்பைகள் வைக்கப்படுவதைத் தவிர்த்து, முழுமையாக உணவுப் பொருட்கள் சேமிப்புக்கு பயன்படுத்தும் வகையில் தனியாக கோணிப் பைகள் பாதுகாப்புக் கிடங்குகள் கட்டும் திட்டம் திருத்தணி, செங்கம், திருவண்ணாமலை, தர்மபுரி, குன்னூர், நீடாமங்கலம், திருச்சி, வேப்பந்தட்டை, தேனி, விருதுநகர் ஆகிய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 10 கிடங்கு வளாகங்களில் ரூபாய் 50 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(17)* தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு வளாகங்களில் தடங்கலின்றி வாகன இயக்கம் செய்வதற்கும், சிந்திய தானியங்களை இழப்பின்றி சேகரிப்பதற்கும் வசதியாக சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்க திட்டமிடப்பட்டு, 8 கிடங்கு வளாகங்களில் மிகவும் பயனுள்ள முறையில் செயல்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் தஞ்சாவூர், கும்பகோணம், திருவையாறு, மன்னார்குடி, விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி,

மதுராந்தகம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், திண்டுக்கல், சிவகங்கை, திருநெல்வேலி, தேனி, இராமநாதபுரம் ஆகிய 16 கிடங்கு வளாகங்களில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்படும்.

பிற்பகல் 1-20

(18) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கு வளாகங்கள், அலுவலகக் கட்டடங்கள், நெல் கொள்முதல் கட்டடங்கள் மற்றும் அரிசி ஆலைக் கட்டடங்களில் கூரைக் கசிவுகள், தரைச் சேதங்கள், சாலைகள் பழுதுபார்த்தல், பராமரிப்புப் பணிகள் ஆகியவற்றைச் சீரிய முறையில் நடத்தி முடிக்க நடப்பாண்டில் ரூ. 65 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

(19) சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள சில நியாய விலைக் கடைகளில் அதிக அளவில், ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன எனத் தெரிய வந்துள்ளதால், அவற்றின்மீது பரிசீலனை மேற்கொண்டு, அவைகளைப் பிரித்து தக்கதொரு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அம்மா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

(20) தற்சமயம் நுகர்பொருட்கள் கடைகளில் தரமாகவும், தடையின்றி நேரத்திலே வழங்கப்படுகின்றன. இதிலே எடை குறைகிறது என்கின்ற ஒரு குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. அந்தக் குறைபாட்டைப் போக்குகின்ற வகையில், முன்கூட்டியே எடையிட்டு, பையிலிடப்பட்ட நுகர்பொருட்களையும் வேண்டுவோர் பெற்றுக்கொள்ள ஒரு வாய்ப்பளிக்கவும், அதை மக்கள் விரும்பினால் விரிவுபடுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

(21) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மூலமாக கள்ளக்குறிச்சியில் ஒரு சேமிப்புக் கிடங்கும், தருமபுரியில் ஒரு சேமிப்புக் கிடங்குமாக இரண்டு சேமிப்புக் கிடங்குகள் ரூ. 180 இலட்சம் செலவில் கட்டப்படும்.

(22) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் திருநெல்வேலி சேமிப்புக் கிடங்கிலுள்ள 30 மெட்ரிக் டன் திறனுள்ள மின்னணு எடை மேடையை மேம்படுத்தி ரூ. 12 இலட்சம் செலவில் 60 மெட்ரிக் டன் திறன் கொண்ட எடை மேடையாக மாற்றியமைக்கப்படும்.



மேலும், தூத்துக்குடி துறைமுக சேமிப்புக் கிடங்கில் உயர் திறனுள்ள மின்னணு எடை மேடை ரூ.12 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

(23) நுகர்வோர் நலன் குறித்தும் இவ்வரசு பெரும் அக்கறை எடுத்து வருகிறது. ஊர்திகள் வடிவமைப்பு, சாலை வடிவமைப்பு, பாதுகாப்பு முதலியன மற்றும் இதனால் பாதிக்கப்படும் கட்டமைப்புக் கட்டணம் ஆகியவை நுகர்வோருக்குப் பெரிதும் கவலைக்கிடமளிப்பதாகும். அமெரிக்காவில் உள்ளது போல, தேசிய நெடுஞ்சாலைப் போக்குவரத்துப் பாதுகாப்பு குழுமம், கட்டமைப்பு ஆய்வகம் மற்றும் விபத்துத் தடுப்பு ஆய்வு வசதிகள், இவை தொடர்பான விஞ்ஞானக் கூடங்கள் ஆகியவற்றை சுமார் 10 கோடியிலிருந்து ரூ.20 கோடி வரையிலான செலவில் அமைக்க இந்தக் கட்டமைப்பு வளர்ச்சி மற்றும் கட்டுப்பாட்டுக் குழுமம் நுகர்வோர் நலன் நாடும் தன்னார்வ நிறுவனங்களுடன் கூட்டாக முயற்சி எடுத்து வருகிறது. இந்த ஆய்வகங்கள் ஊர்திகள் வடிவமைப்புக்கும், ஊர்திகள் உற்பத்தி நிறுவனங்களுக்கும் ஒரு முக்கிய உதவியாகும். இவற்றை சென்னைக்கு அருகிலேயே அமைப்பதற்கு அம்மா அவர்களுடைய அரசு, நிலங்களைத் தருவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வள்ளல்பெருமான் அவர்கள் பேசுகின்றபோது இட ஒதுக்கீடு பற்றிக் குறிப்பிட்டார்கள். கூட்டுறவு விதி 149 (3)-ன்படி கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் நியமனங்களில் இட ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படுகிறது. கூட்டுறவுத் துறையைப் பொறுத்தமட்டில், சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், சிறப்பு துணை விதிகள் அரசால் ஒப்புதல் செய்யப்பட்டு, பின்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். அப்போது இட ஒதுக்கீடு முறை கடைப்பிடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏழுமலை அவர்கள் குறிப்பிடுகிறபோது, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே செயலாளர்களைப் பணி மாற்றம் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். இந்த ஆணையை அரசு ஏற்கெனவே வெளியிட்டிருக்கிறது. ஆனால், உயர் நீதிமன்றம் அதற்குத் தடையாணை பிறப்பித்திருக்கிறது. அந்தத் தடையாணை நீக்கப்பட்டவுடன், அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் பேசுகின்றபோது, இங்கே மாதிரி சட்டத்தைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இந்த மாதிரி சட்டங்கள் இன்றையதினம் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு, அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை எல்லாம் தந்திருக்கிறீர்கள். அவைகளையெல்லாம் சிறப்பாக இந்த அரசு நிறைவேற்றும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

தமிழகத்தைத் தரணியில் ஓங்கச் செய்த தன்னிகரற்ற தங்கத் தலைவியே, அறிவுக்கும் திறமைக்கும் மதிப்புக் கொடுக்கும் அமுத ஊற்றே, அனைத்து மக்களுக்கும் தரமான அரிசி தந்திட்ட அன்னபூரணியே, மண் மகளின் பொறுமைக்கும், மலர் மகளின் திருவுக்கும் நன்மகளாம், கலைமகளின் நன்னறிவுத் திறனுக்கும் பெண் மகளாய் வந்துதித்த எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி உரையை நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின்மீது *238* வெட்டுப் பிரேரணைகளை உறுப்பினர்கள் தந்திருக்கிறார்கள். நல்ல யோசனைகளை உறுப்பினர்களெல்லாம் இந்த அவைமுன் எடுத்து வைத்துள்ளீர்கள். நான் சொன்ன விளக்கங்களையெல்லாம் ஏற்று, என்னுடைய பதிலுரையை ஏற்று, உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு தலைவர் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. மானியக் கோரிக்கை எண் *12*, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.



**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை. திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை. திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.924,40,03,000/-, மூலதனக் கணக்கில் ரூ.8,26,76,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.9,19,12,000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4-30*

*பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**(ஆ) கோரிக்கை எண் 17 — கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்**

**(இ) கோரிக்கை எண் 42 — சிறுதொழில்கள் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 16 — கைத்தறி, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை—கைத்தறி மற்றும் துணிநூல்**

**(ஆ) கோரிக்கை எண் 17— கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். இன்று மாலையில் எடுத்துக்கொள்ளவிருக்கும் மூன்று மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை அந்தந்த மானியக் கோரிக்கைகள்மீது தெரிவிக்கலாம்.

மானியக் கோரிக்கை எண் 17 கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை எண் 17-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.58,05,07,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 743, திரு. தி. வேல் முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4597, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5142, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5772, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6631, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7607, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7749, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8267, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் கிராமத் தொழில்கள் மற்றும்

எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4815, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6984 திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9058, திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 407, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிராமங்களில் வேலைவாய்ப்பை உருவாக்க கதர் கிராமத் தொழில்களை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8717, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், நாட்றாம்பள்ளி தொகுதிக்குட்பட்ட நாராயணபுரம், அலசந்தபுரம், திம்மாம்பேட்டை, புல்லூர், ஆவாரங்குப்பம், இராமநாயக்கன்பேட்டை, வடக்குப்பட்டு, எக்லாஸ்புரம், அம்பலூர் மற்றும் கொடையாஞ்சி ஆகிய பகுதிகளில் தென்னை மற்றும் பனை சார் தொழிற்கூடங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4690, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி தொகுதி, சித்தகண்ணி கிராமத்தில் மூடிக் கிடக்கும் கையுறை காகித அலகு தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6877, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிவகாசி தொகுதியில் மகளிர் சுய வேலைவாய்ப்பு குழுவினரால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களை அரசு கதர் மற்றும் கைவினைப் பொருள் வாரியத்தின் மூலம் கொள்முதல் செய்ய

வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8125, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் ஒரு புதிய கிராம கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.58,05,07,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (இ) கோரிக்கை எண் 42-சிறுதொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-சிறு தொழில்கள் துறை. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.63,87,05,000/- மூலதனக் கணக்கில் ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4409, திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5218, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- ரூ.63,87,05,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5554, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் ரூ.63,87,05,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5792, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2001, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8193, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8200, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8613, திரு. டி.கே. இராஜா.

***திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8653, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4896, திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000,/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7468, திரு. எம். [illegible], இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1308, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறை சட்டமன்ற தொகுதியில் சிறுதொழில்கள் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறு தொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4752, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டத்தில் பெருமுகை, கருகம்பத்தூர் கிராமப் பகுதிகளில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6209, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருப்பதால், அங்கு சிறு தொழிற்பேட்டை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5029, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கோவில்பட்டி தொகுதியில் தொழிற்சாலை தொடங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில்



ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5334, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல்லில் பூட்டு மற்றும் வாசனை திரவிய தயாரிப்பு தொழிற்சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4699, திரு. ப. அரசன்.

***திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலையில்லாத பட்டதாரிகள் சிறு தொழில்கள் தொடங்க வங்கிக் கடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.63,87,05,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7563, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6977, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிறுதொழில்களை ஊக்குவிக்க அரசு மேற்கொள்ள வேண்டிய உறுதியான நடவடிக்கைகள் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறுதொழில்கள் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.[illegible]/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

பிற்பகல் 1-35

## (ஈ) கோரிக்கை எண் 16-கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16-கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய மானியக் கோரிக்கை எண் 16-ன்கீழ், வருவாய்க் கணக்கில் ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 537, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4857, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5132, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5464, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5893*, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *6621*, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *7778*, திரு. டி.கே. இராஜா.

***திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8120*, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை--கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8265*, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை--கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4849*, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-- கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4781, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகாவில் உள்ள அரியூர் கூட்டுறவு நூற்பாலையை அரசு மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6213, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள பல கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்; பல மாதங்களாக சம்பளம் இல்லாமல் தொழிலாளர் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன; அவர்களுக்கு வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4997, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தமிழகத்தில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளை அரசு தனியாருக்கு வழங்கும் முடிவைக் கைவிட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4688, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கியிலுள்ள புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை முழுமையாக இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7608, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 410, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிராமங்களில் கைத்தறியை அதிக அளவில் உருவாக்கி அதன்மூலம் வேலைவாய்ப்பை ஏற்படுத்தி இளைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்த கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5343, செல்வி க. பாலபாரதி.

[2003 மே 7

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் தொகுதி, செட்டிநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில் உள்ள கள்ளிப்பட்டி கைத்தறி கூட்டுறவு நெசவாளர்களுக்குக் கடந்த 2 வருடங்களாக நெய்வதற்கான நூல் வழங்கவில்லை. உதவித் தொகையும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு நெய்வதற்கான நூலும், உதவித் தொகையும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6875, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விருதுநகர் மாவட்டத்தில் தேங்கியுள்ள கைத்தறி வேட்டி மற்றும் சேலை ஆகியவற்றை அரசு கொள்முதல் செய்து நெசவாளர்களின் துயர் துடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6985, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிட்டா நூல் மீதான கலால் வரியை இரத்து செய்ய மத்திய அரசிற்குத் தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2003 மே 7] [திருமதி எஸ். மகேஸ்வரி]

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். முதலில் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளும், மற்றும் சிறு தொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளும், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த அவையிலே ஆற்றிய உரையாகக் கருதி, அவைக் குறிப்பிலே பதிவு செய்யக் கோருகிறேன். இந்தத் துறைகளின் மீது, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துரைக்கும் கருத்துகள் குறித்தும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் புதியதாக எடுக்கப்படவுள்ள முடிவுகள் குறித்தும் இந்த அவையிலே எனது பதிலுரையிலே விளக்குகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் படிப்பதற்கு வசதியாக அவர்களுக்கு ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில், தமிழிலே கொடுக்கப்பட்டுள்ள

@ 330 முதல் 392 வரையிலான பக்கங்களில் இணைப்பு II மற்றும் III-ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் 7 மணித்துளிகள் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. இராம் பிரபு.

*பிற்பகல் 4-40*

***திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணி நூல் மானியக் கோரிக்கையில் எனது கருத்துகளைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய நிலையில் ஏழை கைத்தறி நெசவாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி பசியும் பட்டினியுமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தை இங்கே பதிய வைக்கிறார்கள். இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் நெசவாளர்களுடைய துயரங்களை எல்லாம் போக்கி இன்றைக்கு நல்லதொரு வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராம் பிரபு, மத்தியானம் சாப்பிட்டுவிட்டு வந்துவிட்டீர்கள் இல்லையா? (சிரிப்பு)

**திரு. இரா. இராம் பிரபு:** ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்று சொல்லுவார்கள். நம்முடைய மானத்தைக் காக்கும் உன்னத பணியினைச் செய்து கொண்டிருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்கள் இன்று பசியும் பட்டினியுமாகக் காட்சி அளிக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத்தான் அவர் விளக்கம் சொன்னார். மறுபடியும் அதையே சொன்னீர்கள் என்றால் எப்படி?

@ 393 முதல் 434 வரையிலான பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



**திரு. இரா. இராம் பிரபு:** இன்று பல கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. 80 விசைத்தறிகள் ஆலைகள் இயங்காமல் மூடிக் கிடக்கின்றன. மாண்புமிகு தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுடைய நூலுக்கு 10 சதவீதம் கலால் வரியை மத்திய அரசு விதித்துள்ளது. இதனால் நெசவாளர்கள் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளார்கள். இதனால் துணி உற்பத்தியும் குறைந்து காணப்படுகிறது. எனவே, தமிழக அரசு மத்திய அரசை வலியுறுத்தி 10 சதவீத கலால் வரியை,...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் உபயோகிக்கக்கூடிய அந்த நூலுக்கு மத்திய அரசானது வரி விதித்து இருக்கிறது. இந்த நெசவாளர்கள் மேல் உண்மையான அக்கறை கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு கடிதம் எழுதி இருக்கிறார்கள். உடனடியாக அந்த வரியினை நீக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையையும் அம்மா அவர்கள் மத்திய அரசிடம் தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கலால் வரியை இரத்து செய்வதற்கு மத்திய அரசை வலியுறுத்தி கடிதம் எழுதி உள்ளார்கள். மத்திய அரசு அந்தக் கலால் வரியை இரத்து செய்யும் வரை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாமன்றத்திலேயே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை மத்திய அரசுக்கு அனுப்பினால், அது மிக்க நல்லதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதற்கு அடுத்து நம்முடைய தமிழக அரசு சிட்டா நூலுக்கு 2 சதவீதம் வணிக வரி விதித்துள்ளது. பக்கத்து மாநிலமான ஆந்திர மாநிலத்திலே சிட்டா நூலுக்கு 2 சதவீதம் வரி கிடையாது. எனவே, இங்குள்ள நெசவாளர்களில் ஒருசிலர் ஆந்திரா சென்று நூல் வாங்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தில் உள்ள...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு கலால் வரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசி இருக்கிறார்கள். அதற்கு விளக்கத்தை என்னுடைய பதிலுரையிலே தருகிறேன் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு தமிழக ஏழை நெசவாளர்கள் உபயோகிக்கக்கூடிய அந்த நூலின்மீது வரி விதித்து இருக்கிறது. நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார்கள். 2003-2004 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் விசைத்தறிகள் உற்பத்தி செய்த துணிகள் மீது முதல்முறையாக 10 சதவீதம் கலால் வரியை விதித்ததைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் உள்ள சுமார் 4 இலட்சம் விசைத்தறியாளர்கள் இந்த வரி விதிப்பை எதிர்த்து 23-3-2003 முதல் தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

*பிற்பகல் 4-45*

இந்தியாவில் உள்ள மொத்த விசைத்தறிகளில் 25 சதவீதம் தமிழ்நாட்டில் மட்டுமே உள்ளன. சிறு முதலீட்டில் மாநிலமெங்கும் பரவலாக நடைபெற்று வரும் விசைத்தறி தொழில் இப்புதிய வரி விதிப்பால் பெருத்த பாதிப்புக்கு உள்ளானதையடுத்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், இத்தொழில் நலிவு அடைந்து விடாமல் பாதுகாக்கும் வகையில், மத்திய அரசு புதிதாக விதித்த 10 சதவீதம் கலால் வரி விசைத்தறித் தொழிலை பெரிதும் பாதிக்கும் என்றும், கலால் வரி செலுத்துவதை நெசவாளர்களுடைய விருப்பத்திற்கே, சென்ற ஆண்டைப்போல இந்த ஆண்டும் நடைமுறைப்படுத்துமாறும், அது முடியாதபட்சத்திலே, ஆண்டுக்கு ரூ. 1 கோடிக்குக் குறைவாக உற்பத்தி செய்யும் விசைத்தறிகளுக்கு முழுவதுமாக கலால் வரியிலிருந்து விதி விலக்கு அளிக்கக் கோரி மத்திய அரசுக்கு 28-3-2003 அன்று ஒரு கடிதத்தை அனுப்பினார்கள். இக்கடிதத்தில், தமிழ்நாட்டில் குடிசைத் தொழிலாகவும், குடும்பத் தொழிலாகவும் நடந்துகொண்டு வரும் சிறிய விசைத்தறிகள் பெரிய பாதிப்புக்கு உள்ளாவதை சுட்டிக்காட்டியது குறிப்பிடத்தக்கது. இது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆணையின்படி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய நிதி அமைச்சர் அவர்களைச் சந்தித்து விசைத்தறிகளுக்கு கலால் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர்.



அதுமட்டுமல்ல; சென்ற நிதியாண்டில் அனைத்துத் துறைகளுக்கும் மின் கட்டணத்தை உயர்த்தியபோதும், விசைத்தறிகளுக்கு உயர்த்திய மின் கட்டணத்தைத் திரும்பப் பெற்றார்கள். இந்த ஆண்டு புதிதாக மின் கட்டணம் உயர்த்தி அறிவிக்கப்பட்டபோதிலும் விசைத்தறிகளுக்கு மின் கட்டணம் உயர்த்தப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, மத்திய நிதி அமைச்சர் திரு. ஜஸ்வந்த் சிங் அவர்கள் கீழ்க்கண்ட சலுகைகளை 30-4-2003 அன்று நாடாளுமன்றத்திலே அறிவித்துள்ளார்கள்:

அதிகபட்சமாக ரூ.25 இலட்சம் மதிப்புள்ள துணிகளை உற்பத்தி செய்யும் விசைத்தறிகளுக்கு முதல் ரூபாய் 20 இலட்சம் வரை கலால் வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். அடுத்த ரூ.5 இலட்சம் மதிப்புள்ள உற்பத்திக்கு கலால் வரி செலுத்தப்பட வேண்டும். அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மதிப்புள்ள வணிகப் பெயரற்ற ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு ரூ.25 இலட்சம் வரை கலால் வரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்படும். அதற்கு மேலே உள்ள ரூ.5 இலட்சம் மதிப்புள்ள உற்பத்திக்கு கலால் வரி செலுத்தப்பட வேண்டும். ஆக, விசைத்தறி தொழில் நசிந்துவிடாமல் இருக்க, விசைத்தறியை நம்பியிருக்கும் பல இலட்சம் குடும்பங்களின் வாழ்வு சீர்கெடாமல் இருக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் சரியான தருணத்திலே மத்திய அரசின் கவனத்திற்கு இப்பிரச்சினையைக் கொண்டு சென்றதனாலேயே மத்திய அரசின் நிதி அமைச்சர் விசைத்தறிகளுக்கு இந்தச் சலுகைகளை அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பெருமளவு விசைத்தறியாளர்கள் திருப்திபடக்கூடிய இச்சலுகைகள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் தலையீட்டினால்தான் கிடைத்தது என்பதை இந்த மாமன்றத்திலே சுட்டிக்காட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சக்கணக்கான விசைத்தறியாளர்கள் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுக்கு என்றென்றும் நன்றிக் கடன்பட்டுள்ளார்கள் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அறிவித்த சலுகைகள் போதுமானதாக இல்லையென்றாலும், திரும்பத் திரும்ப மத்திய அரசை வலியுறுத்தி— ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசிடம் தெரிவித்த கோரிக்கையான விருப்ப வரி நடைமுறையினைத் தொடர வேண்டுமென்றும், அவ்வாறு முடியாதபட்சத்தில் ரூ.1 கோடி அளவிற்குள் உற்பத்தி செய்யும் விசைத்தறிதுணிகளுக்கு முழுவதும்

வரிவிலக்கு அளிக்க வேண்டுமென்றும் தொடர்ந்து வலியுறுத்துவோம் என இந்த அவையில் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராம் பிரபு அவர்கள் இந்த அவையிலே வலியுறுத்தி, நம்முடைய அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கை பற்றி சொன்னார்கள். என்னதான் இருந்தாலும்கூட N.D.A.-விலே அங்கம் வகிக்கக்கூடிய கட்சிகள் எல்லாம்கூட இப்போது இங்கே எதிர்க்கட்சி வரிசையிலே இருந்துகொண்டிருக்கின்றன. எங்களுடைய உறுப்பினர் வற்புறுத்துவது எல்லாம், மத்திய அரசை, எப்படி முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல 10 சதவீதம் இந்தக் கலால் வரியை முழுமையாக மத்திய அரசு நீக்க வேண்டுமென்று இந்த அவையிலேகூட ஒரு தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்து கட்சி வித்தியாசம் இல்லாமல் தமிழக மக்கள், தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்துணை எம்.எல்.ஏ.க்களும் இதை வற்புறுத்துகிறார்கள்...

*(உறுப்பினரின் செல்ஃபோன் மணி ஒலித்தது)*

....என்கிற ஓர் எண்ணத்தை நம்முடைய மத்திய அரசுக்கு வலியுறுத்துவதற்காக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எப்படியாவது அதை மீண்டும் தீர்மானமாகக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏன் இப்படி இடையிலே தொல்லைக்கு உள்ளாகிறீர்கள் என்று தெரியவில்லை? *(சிரிப்பு)* திரு. இராம் பிரபு, பேசுங்கள். *(குறுக்கீடு)*

*பிற்பகல் 4-50*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடுகையிலே, N.D.A.-விலே இருக்கக்கூடிய கூட்டணிக் கட்சிகள் எல்லாம், இதை வலியுறுத்த வேண்டுமென்ற வகையிலே எடுத்துச் சொன்னார்கள். கலால் வரியை இரத்து செய்ய வேண்டும் என்பதிலே N.D.A.-விலே அங்கம் வகிக்கிற பாட்டாளி மக்கள் கட்சி உறுதியாக இருக்கிறது. நம்முடைய தமிழக சட்டமன்றப் பேரவையில் எடுக்கக்கூடிய முடிவுகளுக்கு பாட்டாளி மக்கள் கட்சி துணை நிற்கும் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலால் வரியை முழுமையாக இரத்து செய்வதற்காக முயற்சிகளை எடுத்துக்கொண்டு இருக்கக்கூடிய நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் இப்போது சொன்னது எனக்குப் புரியவில்லை *(சிரிப்பு)*. பொதுவாக எனக்கு நல்ல புத்திக் கூர்மை உள்ளது என்று எல்லோரும் சொல்வார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் இப்போது பேசியது எனக்கு விளங்கவே இல்லை. இந்த 10 சதவீதம் கலால் வரியைப் போட்டது மத்திய அரசு. அந்த மத்திய அரசில் பாட்டாளி மக்கள் கட்சியும் அங்கம் வகிக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியின் அமைச்சர்கள் மத்திய அமைச்சரவையில் இருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது, மத்தியில் ஆதரித்துவிட்டு, இங்கே மாநிலத்தில் எப்படி எதிர்க்க முடியும்? தி.மு.க.—வுடன் சேர்ந்ததால் நீங்களும் இரட்டை வேடம் போடப் பழகிவிட்டீர்களா என்பதை விளக்க வேண்டும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, அதாவது அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு. 10 சதவீதம் கலால் வரி போட்டு இருக்கிறது என்றால் பாட்டாளி மக்கள் கட்சியும் சேர்ந்துதான் போட்டு இருக்கிறது என்றுதான் அதற்குப் பொருள். அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கலால் வரி விதித்து இருக்கிறது. அப்படி விதிக்கின்ற நேரத்திலே தமிழகத்திலே இருக்கக்கூடிய நெசவாளர்கள், விசைத்தறி உற்பத்தியாளர்கள் இந்தியா முழுவதும் இருக்கக்கூடியவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அப்படி பாதிப்பு உண்டாகிற நேரத்தில் பாட்டாளி மக்கள் கட்சி எந்த நேரத்திலும் சொல்லத் தவறியதில்லை. *(குறுக்கீடு)* முதலமைச்சருக்கு நான் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசும், பாட்டாளி மக்கள் கட்சியும் வேறல்ல. மத்திய அரசின் ஓர் அங்கம்தான் பாட்டாளி மக்கள் கட்சி. அப்படியானால், நெசவாளர்களின் நலனில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால், இந்த 10 சதவீதம் கலால் வரி விதித்ததை எதிர்த்து பாட்டாளி மக்கள் கட்சி, மத்திய அரசை விட்டு விலகத் தயாரா என்பதை மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவிக்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலால் வரி விதித்ததை விலக்கிக்கொள்ளச் சொல்லி வற்புறுத்தலாமே தவிர, கோரிக்கை வைக்கலாமே தவிர, அதற்காக விலக வேண்டிய அவசியம் இல்லை. (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர், மரியாதைக்குரிய மாண்புமிகு ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். N.D.A.-விலே இருக்கக்கூடிய கட்சிகளும் அதற்கு உட்பட வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். அந்தவகையிலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய ஆளும் கட்சி, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. N.D.A.-விலே இருக்கக்கூடிய கட்சிகளுக்கு அக்கறை இல்லை என்று பொருள் ஆகிவிடக்கூடாது. அந்த அடிப்படையில் சொன்னேன். ஆகவே முதலமைச்சருக்கு நான் திரும்பச் சொல்வது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, மணி, முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்கிறார்கள். மத்திய அரசு 10 சதவீதம் கலால் வரி விதித்து இருக்கிறது என்றால் பாட்டாளி மக்கள் கட்சி அதிலே அங்கம் வகிக்கிற காரணத்தால், பாட்டாளி மக்கள் கட்சி சேர்ந்துதான் அதை விதித்திருப்பதாகப் பொருள். ஆகவே மக்கள் கட்சியும் விலக்கிக்கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் அங்கே இருந்து விலகி வந்தால்தான் சரியாக இருக்கும். (குறுக்கீடு).

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடந்துகொண்டிருக்கிற இந்த விவாதத்திலிருந்து என்ன தெரிகிறது என்றால், கம்யூனிஸ்ட்களாகிய நாங்கள்



சொல்லிக்கொண்டு இருப்பது, திராவிட முன்னேற்றக் கழகமோ, பாட்டாளி மக்கள் கட்சியோ இப்படி மத்தியிலே அங்கம் வகித்துக்கொண்டு, மாநிலத்திலே இப்படிச் சொல்வது என்பது பொருத்தமற்றதாக இருக்கிற காரணத்தினாலே, நீங்கள் மத்திய அமைச்சரவையில் இருந்து விலகிவிடுங்கள் என்று சொல்கிறோம். ஆகவே, அந்த நிலையைச் சிந்திப்பதற்குரிய ஒரு வாய்ப்பாக இதை நாங்கள் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு பேசுங்கள் (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** இதற்கு விலக வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதுதான் உங்களுடைய கருத்து சொல்லிவிட்டீர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இப்படிச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விலக வேண்டிய அவசியம் இல்லை என்பது உங்களுடைய கருத்து. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இது முக்கியப் பிரச்சினை. வேறு பிரச்சினை என்றால் பேசாமல் விட்டுவிடலாம்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மத்திய அமைச்சரவையில் இருந்து விலக வேண்டிய அவசியம் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் மணி கூறுகிறார். அப்படியானால் அந்த மத்திய அரசு விதித்த கலால் வரியை எதிர்த்து இங்கே பேசக் கூடாது. அதற்கு உங்களுக்கு உரிமை இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். எல்லாக் கட்சிகளும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று சொல்கிறார். அதற்காக நாங்கள் எதிர்ப்பாக இருக்க முடியாது. ஒன்றாகச் சேர்ந்துதான்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, கட்சி என்பது ஒன்றுதான்.

**திரு. ஜி.கே. மணி:** விலக வேண்டும் என்று சொல்லியோ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சி என்பது ஒன்றுதான்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் மட்டும் இதைப் பேசவில்லை. நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரனும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசனும் இருவருமாக என்னைச் சந்தித்து, என்னிடம் ஒன்றாக வந்து, இதனை எதிர்த்து ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினரா, இல்லையா? உங்கள் பாட்டாளி மக்கள் கட்சி மத்திய அரசில் அங்கம் வகிக்கிறதா, இல்லையா? அங்கே ஆதரித்துவிட்டு, இங்கே எப்படி எதிர்க்க முடியும்?

*பிற்பகல் 4-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு, பேசுங்கள். (குறுக்கீடு) திரு. கணேசன், என்ன, சொல்லுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்கு, தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு பாதிப்பு வந்திருக்கிறது இந்தக் கலால் வரியிலே என்று உணர்ந்த பிறகு தமிழக அரசு - நம்முடைய முதலமைச்சர் அவர்கள் - கலால் வரியை இரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கடிதம், நீண்ட கடிதம் எழுதி இருக்கிறது. அதே வகையிலே தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதனை பாட்டாளி மக்கள் கட்சியும் உணர்ந்து, அந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் கேட்டதற்கு ஒன்றும் பதிலே வரவில்லை.

**திரு. ஐ. கணேசன்:** அதுதான். அதைச் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியிடம் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். காவிரிப் பிரச்சினைக்காக, அவர்களுடைய தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள், 'முதலமைச்சர் டெல்லிக்குச் செல்ல வேண்டும். அங்கேயே தங்கி இருக்க வேண்டும்; பிரதமரை வற்புறுத்த வேண்டும்; காவிரி நீரைப் பெற வேண்டும்' என்றெல்லாம் எனக்கு அறிவுரை வழங்கினார். அதையே நான் திருப்பிச் சொல்லுகிறேன்.



உங்கள் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் டெல்லிக்குச் செல்ல வேண்டும்; அங்கேயே தங்கி இருக்க வேண்டும்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கலால் வரியை இரத்து செய்யுமாறு பிரதமரை வற்புறுத்த வேண்டும்; அது நடைபெறவில்லை என்றால் நீங்கள் மத்திய அமைச்சரவையை விட்டு விலக வேண்டும். செய்யத் தயாரா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை தமிழ்நாட்டினுடைய உரிமைப் பிரச்சினை, உயிர்நாடிப் பிரச்சினை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இதிலே வேறு பிரச்சினைக்கே இடமில்லை. இதிலே முதலமைச்சர் அவர்கள் கேட்பது, நேரடியாகக் கேட்கிறார், அதாவது 10 சதவீதம் கலால் வரியை விதித்தது என்பது; பாட்டாளி மக்கள் கட்சியும் அங்கம் வகிக்கக்கூடிய மத்திய அரசு விதித்தது. ஆகவே, பாட்டாளி மக்கள் கட்சிக்கும் அதிலே பொறுப்பு உண்டு. 10 சதவீதம் கலால் வரியை நீங்களும் சேர்ந்துதான் விதித்தீர்கள் என்று பொருள். ஆகவே, அந்தக் கலால் வரியை இரத்து செய்ய வேண்டுமென்றால், நீங்கள் அதிலேயிருந்து விலகி வர வேண்டும். விலகி வந்தால்தான், இதைப்பற்றிப் பேசுவதற்கான உரிமை இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இதிலே உங்களுடைய பதில் என்ன? அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினைக்கு--ஒவ்வொரு பிரச்சினைக்கும் கூட்டணியிலே சேருவது, விலகுவது என்பது இந்த நாட்டிலே சாத்தியப்படாது. முதலமைச்சர் சொன்ன மாதிரி, காவிரிப் பிரச்சினை என்று சொன்னால், காவிரிப் பிரச்சினை நம்முடைய உயிர்நாடிப் பிரச்சினை. இந்த உயிர்நாடிப் பிரச்சினையிலே, 12-ம் தேதி திறக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை. இல்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் எப்போது தான் பிறருக்குக் கூறும் அறிவுரையைத் தானே பின்பற்றத் தயாராக இல்லையோ, எனக்கு அறிவுரை கூறுவதை இதிலிருந்து நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற 12 ஆம் தேதி, ஜுன் 12 ஆம் தேதி...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. பிரச்சினை அது இல்லை. *(குறுக்கீடு)* திரு. மணி, பிரச்சினை அது இல்லை. 10 சதவீதம் கலால் வரி என்பதுதான் பிரச்சினை.

**திரு. ஜி.கே. மணி:** *முக்கியமான பிரச்சினை. இதைச் சொல்வதில் தவறு இல்லை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு, பேசுங்கள். *(குறுக்கீடு)* திரு. இராம் பிரபு பேசுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, இல்லை, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. இரா. இராம் பிரபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராம் பிரபு, பேசுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு விதித்துள்ள இந்த 10 சதவீதம் கலால் வரியை இரத்து செய்வதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட இந்த நடவடிக்கைகளுக்கு எங்களுடைய காங்கிரஸ் கட்சி, நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு என்றும் துணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சரவர்கள் கேட்டதற்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். *(குறுக்கீடு)* நீங்கள் ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள். உங்களுடைய கட்சியைப்பற்றித்தான் கேட்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு, ஒவ்வொரு பிரச்சினைக்கும் விலகி வர முடியாது என்று சொல்லிவிட்டீர்கள். அதை நான் பதிலாக எடுத்துக்கொள்கிறேன். அவ்வளவுதான். திரு. இராம் பிரபு, பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** *காவிரிப் பிரச்சினை பற்றிச் சொல்கிறார்கள். காவிரிப் பிரச்சினையில் முதலமைச்சருக்குத்தான் பொறுப்பு இருக்கிறது.*





**திரு. இரா. இராம் பிரபு:** *நெசவாளர்கள் எளிதில் தொழில் செய்கின்ற வகையில் சிட்டா நூலுக்கு 2 சதவீதம் வணிக வரியை நம்முடைய தமிழக அரசு முழுமையாக இரத்து செய்து கொடுக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினை, காவிரிப் பிரச்சினை இல்லை. அந்தப் பிரச்சினையில் முதலமைச்சருக்கு உங்களுடைய தலைவர் அறிவுரை சொன்னார். ஆகவே, இந்தப் பிரச்சினையில் உங்களுடைய தலைவர் போராடத் தயாரா? டெல்லியிலே போய் உட்கார்ந்து இதற்காகப் போராடத் தயாரா என்று முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள். அதற்குப் பதில் ஏதாவது இருந்தால் நீங்கள் சொல்லுங்கள்.

*பிற்பகல் 5-00*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, தமிழ்நாட்டுப் பிரச்சினைகளுக்கு, பொது மக்கள் பிரச்சினைகளுக்கு, எங்கள் நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள், பிரதமரிடம் போவதிலோ அல்லது கோரிக்கை வைப்பதிலோ தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லாப் பிரச்சினைகளுக்கும் சரி. *(குறுக்கீடு)* இல்லை, இல்லை, அதே நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, அவர்களுக்கு அறிவுரைகள் சொல்கிறார்கள் என்று சொன்னால், சொல்கிறோம். தமிழ்நாட்டில் மக்களைக் காப்பதிலே...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிக்கு மத்திய அரசு விதித்த கலால் வரிக்கு இவர்களுடைய கட்சித் தலைவர் ஏதாவது ஆட்சேபனை தெரிவித்திருக்கிறாரா? இதுகுறித்து பாரதப் பிரதமரிடம் பேசியிருக்கிறாரா? இதை வாபஸ் வாங்குவதற்கு ஏதாவது அவர் நடவடிக்கை எடுத்திருக்கிறாரா என்பதுதான் நேரடியான கேள்வி.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் டாக்டர் அய்யா அவர்கள் பிரதமருக்குக் கடிதம் கொடுத்திருக்கிறார். மத்திய அமைச்சரை நேரில் சந்தித்திருக்கிறார். எங்கள் அமைச்சர்கள்,

எம்.பி.-க்கள் எல்லாம் கையெழுத்து போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, கூட்டணிக் கட்சியிலே இருக்கிறவர்களெல்லாம் சேர்ந்து எல்லா எம்.பி-க்களும் கடிதம் கொடுக்க வேண்டுமென்று அந்த முயற்சியும் செய்திருக்கிறார்கள். வேண்டிய முயற்சியைச் செய்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், உட்காருங்கள். திரு. இராம் பிரபு, பேசுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் நிலுவையாக இருந்த வட்டி மானியத் தொகை *31-12-1998* முதல் *31-12-2001* வரையுள்ள காலாண்டுகளுக்கு ரூ.27 கோடியே 50 இலட்சம் அரசு வழங்கியதற்கு கைத்தறி நெசவாளர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய நன்றியையும் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்த நிலுவைத் தொகையான வட்டி மானியத் தொகையை *2002* முதல் மிக விரைவில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் *60* வயதைக் கடந்த உறுப்பினர்களுக்கு முதியோர் ஓய்வூதியமாக ரூ.200/- வீதம் தமிழக அரசு வழங்கி வருகிறது. அந்த ஓய்வூதியத்தைப் பெறும் உறுப்பினர்களுக்கு அரசு இரண்டு நிபந்தனைகளை வழங்கியுள்ளது. அதாவது, ஓய்வூதியம் பெறுபவர்கள் *55* வயது முதல் *60* வயது வரை நெசவுத் தொழிலில் கண்டிப்பாக ஈடுபட்டிருக்க வேண்டும். மேலும் Group Insurance திட்டத்திலும் இருக்க வேண்டுமென்று இந்த இரண்டு நிபந்தனைகளை அரசு விதித்துள்ளது. இந்த இரண்டு நிபந்தனைகளையும் அரசு தளர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். ஏனென்றால், அனைத்து நெசவாளர்களும் இந்த ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் நிச்சயமாகப் பயனடைய மாட்டார்கள். *55* வயதைக் கடந்த எந்த நெசவாளரும் தொடர்ச்சியாக அவர்கள் *60* வயது வரை பணியில் இருப்பதற்கு, நெசவுத் தொழிலில் ஈடுபடுவதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுக்கு இந்த நிபந்தனைகளைத் தளர்த்தி, *60* வயது கடந்த எல்லா நெசவாளர்களுக்கும் ஓய்வூதியம் ரூ.200/-ஐ ரூ.500/- ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து, கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு தொழில் வாய்ப்பு வழங்கத் தேவையான கச்சாப் பொருளை உள்ளூரில் உள்ள கைத்தறித் துறை அலுவலகத்தின் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் இதுவரை வாங்கி வந்தார்கள். ஆனால் இன்றைய நிலையில் கைத்தறித் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவுப்படி கோவையில் National Handloom Development Corporation நிறுவனத்திடமிருந்து கச்சாப் பொருளை வாங்க வேண்டுமென்று உத்தரவு உள்ளது. இதனால் நடைமுறைச் சிக்கல்களும், கொள்முதல் செய்வதில் தாமதமும்.....

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர் சங்கங்களுக்கு வேண்டிய நூலை நம்முடைய 'கோ-ஆப்டெக்ஸ்' மூலமாக நாங்கள் பெற்றுத் தருகின்றோம். 'கோ-ஆப்டெக்ஸில்' இல்லாத நேரத்தில் இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தாங்களாகவே N.H.D.C. என்று சொல்லக்கூடிய National Handloom Development Corporation மூலம் வாங்குவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் கைத்தறி நெசவாளர்கள் இந்த கார்ப்பரேஷனிடமிருந்து கச்சாப் பொருளை வாங்குவதிலே மிகவும் சிரமம் உள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கடுத்து, நெசவாளர் குடியிருப்புகளில் ஆழ்துளைக் கிணறு மற்றும் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்துக் கொடுக்க, மத்திய அரசிடமிருந்து நம்முடைய மாநில அரசு நிதியுதவி பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் திருச்சி, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், காஞ்சிபுரம், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய *13* மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படவுள்ளது. ஆனால், என்னுடைய பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில், நெசவாளர் குடியிருப்புகளுக்கு இத்திட்டம் இல்லை.

பிற்பகல் 5-05

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சட்டமன்றத் தொகுதிக்கு வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அவருடைய கோரிக்கையை ஏற்று, தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையின்படி கண்டிப்பாக அங்கே ஆழ்துளைக் கிணறு அமைத்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராம் பிரபு, இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** முடித்துவிடுகிறேன். திரு. நாச்சிமுத்து முதலியார் என்பவருடைய முயற்சியால் இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நிறுவப்பட்டு, தமிழகத்திலே உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் உற்பத்தியாகும் துணிகளைக் கொள்முதல் செய்து வந்தது. இந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற காரணத்தின் அடிப்படையில் மத்திய ஜவுளித் துறை நிறுவனமான N.I.F.T. வசம் ஒப்படைக்கப் போவதாக கடந்த 30-4-2003 'தினமலர்' பத்திரிகைச் செய்தியைப் படித்த நம்முடைய தமிழகத்தினுடைய கைத்தறி நெசவாளர்கள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். இந்தச் சிறப்புமிக்க கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை நம்பியுள்ள இரண்டு இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்களில் வாழ்க்கையில் ஒளியேற்றும் வண்ணமாக கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை நம்முடைய தமிழக அரசு...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்து பத்திரிகையிலே ஒரு தவறான செய்தியாக வந்திருந்தது. அதனுடைய உண்மை சாரம் என்னவென்று சொன்னால், தமிழகத்திலே



இயங்கிக்கொண்டிருக்கக்கூடிய அந்த கோ-ஆப்டெக்ஸ் துறையில் விற்பனையை அதிகரிப்பதற்காக, அதை மேலும் ஒரு நல்ல நிறுவனமாக ஆக்க வேண்டுமென்ற ஒரு காரணத்தினாலே, அதற்கு உண்டான தொகையை மத்திய அரசு 50 சதவீதமும், மாநில அரசு 50 சதவீதமும் தருவதன் மூலமாக அதை மேலும் விரிவுபடுத்துவதற்காக N.I.F.T.-ன் மூலமாக நல்லதொரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்றுதான் நாங்கள் கோரியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. இரா. இராம் பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, எந்தவிதத்திலும் இந்தக் கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படாதவண்ணம் நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அவர்களின் நலனில் அக்கறைகொண்டு, அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இந்தக் கைத்தறி நெசவாளர்கள் 60 வயதை அடையும் முன்னர் இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு தமிழக அரசு வழங்கி வரும் ரூபாய் 50 ஆயிரத்தை ஒரு இலட்சமாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் கைத்தறி நெசவாளர்களுடைய குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் அடிப்படையில் 60 வயதை அடையும் முன்னர் இறந்துவிட்டால், அவரால் நியமனம் செய்த நபருக்கு 350 ரூபாயை 10 ஆண்டுகளுக்கு மட்டும் வழங்கி வருகிறது. இந்த 350 ரூபாயை ஆயிரம் ரூபாயாக உயர்த்தி, தொடர்ந்து அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். 1986 ஆம் வருடம்...... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. இரா. இராம் பிரபு:** முடித்துவிடுகிறேன். 1986 ஆம் வருடம் டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக் கட்டளை என்ற பெயரில் அறக்கட்டளையை நிறுவி, நெசவாளர்களின் குழந்தைகளுடைய மேற்படிப்பிற்கான பல உதவிகளை வழங்கி வந்தார்கள்.

அதன் அடிப்படையில் இன்று சிறந்த முறையிலே கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் இந்த நெசவாளர்கள் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கும், படித்த பட்டதாரிகளுக்கும் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைத்தறியைப் பாதுகாக்க இரக ஒதுக்கீடு அமல்படுத்த வேண்டும். கைத்தறிக்கு ஒதுக்கிய இரக ஒதுக்கீட்டை விசைத்தறியில் உற்பத்தி செய்யாமல் இருப்பதற்கு முத்தரப்புக் கமிட்டி அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, என்னுடைய மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம், அச்சங்குளம் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட உள்ளதாகக் கேள்விப்பட்டோம். அவ்வாறு கூட்டுறவு நூற்பாலைகள் மூடப்படுகின்ற நிலையில் அங்குள்ள நிரந்தரமான தொழிலாளர்களுக்கு பொது சேம நல நிதி மற்றும் கிராஜுவிட்டி போன்ற தொகைகள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது; கிடைக்கும். ஆனால், அங்கு 10 ஆண்டுகளுக்கு மேலாக N.M.R. ஆகப் பணிபுரிந்து கொண்டிருக்கக்கூடிய 40, 50 நபர்களுக்கு அரசு இழப்பீட்டுத் தொகையாக ஏதாவது தொகையை வழங்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கூட்டுறவு நூற்பாலையில் ஆதிதிராவிட மக்கள் மட்டுமே பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, நம்முடைய திருநெல்வேலி மாவட்டம், குறிப்பாக சங்கரன்கோவில் நகராட்சிப் பகுதிகளில் ஏழை கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். இவர்கள் பத்து ஆண்டுகளுக்கு முன்பாக ஊரக வளர்ச்சி வங்கிகளில் பண்ணைசாராக் கடன்களைப் பெற்றுள்ளார்கள். கடனைப் பெற்ற ஒவ்வொரு நெசவாளரும் குறைந்தபட்சமாக ஒரு தறிக்கு ரூபாய் ஐம்பது ஆயிரத்திற்கு மேல் பெற்றுள்ளார்கள்.

அதுமட்டுமல்ல, பண்ணைசாராக் கடன்களாகிய கறவை மாடு, டிராக்டர், கம்ப்ரசர், மினி வேன், கார் போன்றவற்றிற்கு ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெற்றுள்ளார்கள். இப்பகுதியில் மட்டுமல்லாமல், தமிழகம் முழுவதும் இதுபோன்ற பண்ணைசாராக்



கடன்களைப் பெற்றுள்ளார்கள். இப்போதுள்ள நிலைமையில் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் அந்தக் கடனாளிகள் உள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த ஏழைக் கடனாளிகளின் பரிதாப நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் வாழ்வில் ஒளியேற்றும்வண்ணமாக வட்டியையும், அபராத வட்டியையும் முழுமையாகத் தள்ளுபடி செய்து, அவர்களுடைய அசல் நிலுவைத் தொகையை வங்கிகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தவணை முறையில் திருப்பிச் செலுத்துவதற்கு ஒரு சிறப்பு ஆணை பிறப்பிக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* ஒரே ஒரு நிமிடம்.

*பிற்பகல் 5-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 7 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. இரா. இராம் பிரபு:** 2 கோரிக்கைகள்தான் இருக்கின்றன, முடித்துவிடுகிறேன். 1986 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதுபோன்று அபராத வட்டியையும், வட்டியையும் தள்ளுபடி செய்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன். நம்முடைய ஆதிதிராவிட நலத் துறையினுடைய அமைச்சர் மாண்புமிகு திரு. கருப்பசாமி அவர்களுக்குக்கூட அந்தப் பகுதியில் உள்ள நெசவாளர்களைப் பற்றி நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவரும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர். தன்னுடைய வாழ்க்கையைத் தொடங்கும்போது, அவர்களும் ஒரு கைத்தறி நெசவாளியாகத்தான் வாழ்க்கையைத் தொடங்கினார்கள் என்பதை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர ஆசைப்படுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. தவமணி.

**திரு. இரா. இராம் பிரபு:** ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லை, இன்னும் 6 பேர் பேச வேண்டும்.

**•திரு. க. தவமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை சட்டமன்ற

உறுப்பினராக்கி, ஆன்றோரும், சான்றோரும் அமர்ந்து சிறப்பித்த இந்த அவையிலே அமர வாய்ப்பளித்த மகத்தில் பிறந்து ஜகத்தை ஆளும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, எனது உரையைத் துவக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இருக்கும் வரை கூட்டுக்கொள்ளை அடித்துவிட்டு, குடும்பச் சுயநலனுக்காகக் கொள்ளை இலாபம் கண்டு, தமிழக நிதியைச் சூறையாடிவிட்டு தரம் மிக்க தமிழகத்தின் பொருளாதாரத்தினை நிலைகுலையச் செய்தவர்களின் நிதிச் சீர்கேட்டை மதிநுட்பத் திறமையால் சமாளித்து, சாமானியனைக்கூட பாதிக்காத அளவு நிதிநிலை அறிக்கையினைத் தந்த மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்துத் துறைகளிலும், அனைத்துத் தரப்பினரும் பயன்படக்கூடிய பல நல்ல திட்டங்களை அறிவித்தார்கள்.

'சின்ன சின்ன இழை பின்னிப் பின்னி வரும்
சித்திர கைத்தறிச் சேலையடி;

எங்கள் தென்னாட்டில் எந்நாளும்
கொண்டாடும் சேலையடி'

என்ற பாடலுக்கு ஏற்ப கைத்தறிப் பட்டு நெசவுத் தொழில் செய்து பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் பல இலட்சக்கணக்கான குடும்பங்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. இது பாரம்பரியமான கலை நுணுக்கம் பொருந்திய, புராதனமான குடிசைத் தொழிலாகும். ஒரு மோதிரத்திற்குள் நுழையக்கூடிய சேலைகளை உருவாக்கித் தயாரித்த வரலாறு தமிழக நெசவாளர்களுக்கு உண்டு. இன்று தமிழ்நாட்டில் ஏறத்தாழ 12 இலட்சம் நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த காலத்தில் தி.மு.க. அரசின் அலட்சியப்போக்கால் 392 கோடி ரூபாய் மதிப்புள்ள ஜவுளிகள் விற்பனையாகாமல் தேங்கியிருந்தன. கடுமையான நிதி நெருக்கடியால் பாதிக்கப்பட்டு பல பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூடக்கூடிய அபாய நிலையில் இருந்தன. ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் வேலை இழந்து வறுமையில் வாடிக் கொண்டிருந்தனர்.



அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றவுடன் தேங்கிக் கிடந்த ஜவுளிகளை விற்பதற்கும், நெசவாளர்கள் மீண்டும் வேலைவாய்ப்பு பெற்று சகஜ நிலைக்குத் திரும்பிடவும் போர்க்கால அடிப்படையில் பல நடவடிக்கைகளை எடுத்தார்கள். தேங்கிக் கிடந்த துணிகளை விற்பதற்கு 30 சதவீதம் தள்ளுபடி மானியம் வழங்கினார்கள். ஓராண்டு மற்றும் ஈராண்டுகளுக்கு மேற்பட்ட பட்டு, பருத்தி ஜவுளிகளுக்கு 35 முதல் 55 சதவீதம் வரை சிறப்புத் தள்ளுபடி செய்து வழங்கினார்கள். இதனால் பெருமளவிலே தேக்கம் குறைந்து நெசவாளர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், புடவைகளுக்குப் பெயர் பெற்ற காஞ்சிபுரத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த தேக்கம் ரூ.84 கோடி, அம்மாவின் சிறப்பான துரித நடவடிக்கையால் 31-12-2002 அன்று ரூ.30 கோடியாகக் குறைந்து, தற்சமயம் மேலும் குறைந்து வருகிறது.

இலவச வேட்டி, சேலைகள் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த 25,000 கைத்தறி நெசவாளர்கள் நலனைக் கருத்தில்கொண்டு புதிய திட்டத்தினை அம்மா அவர்கள் அறிவித்தார்கள்.

முதியோர் மற்றும் ஓய்வூதியம் பெறும் பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்திட 6,000 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. இலவசச் சீருடை வழங்கத் தேவையான துணிகள் தயாரிக்க 4,000 பேருக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எஞ்சிய 15,000 பேர்களுக்கும் மலிவு விலை வேட்டி, சேலைகள் தயாரிக்க வாய்ப்பு அளிக்கப்பட்டது.

சென்ற ஆண்டில் மட்டும் 35 இலட்சம் மலிவு விலை சேலைகளும், 14 இலட்சம் வேட்டிகளும் தயாரிக்கப்பட்டன. இதற்காக 47.41 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இன்று அனைத்து வேட்டி, சேலைகளும் உடன் விற்கப்பட்டு தீர்ந்துவிட்டன. இந்தத் திட்டம் இந்த ஆண்டும் தொடர்கிறது. இதற்கு இந்த ஆண்டில் 27.67 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அம்மாவின் சீரிய முயற்சியாலும், நடவடிக்கையாலும் இன்றைய இளைய தலைமுறையினருக்கிடையே குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்கிடையே கைத்தறி நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

நான் பாதுகாப்பாக உள்ளேன் என்பதை நிரூபித்தும் காண்பித்தார்கள். தமிழக வரலாற்றிலேயே இல்லாத அளவு தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் தலைவராக ஓர் இஸ்லாமிய சகோதரியை நியமித்தார்கள். அதைப்போலவே அரசின் பல்வேறு துறைகளிலும் சிறுபான்மையினருக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டது. இந்து ஆலயங்களைப் போல 350 தர்காக்களிலும் படிப்படியாக இலவச மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்த உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு அம்மாவின் இதுபோன்ற நடவடிக்கைகளால் எதிரிகளால் தொடுக்கப்பட்ட கணைகள் யாவும் கூர்மழுங்கி அம்மாவின் பொற்பாதங்களில் விழுந்து வணங்கின.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டிக் கிடந்த சமூக அவலங்களைச் சமன் செய்து, சீர் தூக்கிப் பார்த்து சமூக அவலங்களுக்குச் சாவு மணி அடித்து, இன, மதத்திற்கு அப்பாற்பட்டு, சமூக நல்லிணக்கத்தைப் பேணும் சமூகத் தலைவி எங்கள் அம்மா அவர்கள், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் காண விரும்பிய பெண்ணின் குலவிளக்கு; பேரறிஞர் அண்ணா காண விரும்பிய அறிவுசால் மேதை; வள்ளல் புரட்சித் தலைவர் அடையாளம் காட்டிய கருணை மேகம்; தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரம்; நாளைய இந்திய வானில் விடிவெள்ளியாகப் போகும் அன்பு அன்னை எங்கள் அம்மா. எங்கள் அம்மா அவர்கள் பொற்பாதம் தொட்டு வணங்கி அந்த அன்னைக்கும், தங்களுக்கும் இந்த கைத்தறி மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா.

***திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர், கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் என்னைப் பேசுவதற்கு அழைத்த தங்களுக்கும், தமிழினப் போராளி, சமூக நீதிக் காவலர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், எங்களுடைய பசுமைத் தாயகத்தின் சின்ன அய்யா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அண்ணன் ஜி.கே.எம். அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடம் கலால் வரியைக் குறைக்கக் கோரி உங்கள் தலைவர் ஏதாவது முயற்சி எடுத்தாரா என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டார்கள். மத்திய அரசு கலால் வரியை இரத்து செய்ய வேண்டுமென எங்களுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் அய்யா அவர்கள் மத்திய அரசிடம் பேசியுள்ளார். கடிதம் கொடுத்துள்ளார். எங்களுடைய பா.ம.க. M.P.-க்களை அனுப்பி நேரடியாக பாரதப் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி பெருக வேண்டுமென்று சொன்னால் பெருந் தொழில் வளர்வதோடு, நடுத்தரத் தொழில்களும், சிறு தொழில்களும் கூடுதலாகத் தொடங்கப்பட வேண்டும். சமீபத்தில் பெருந் தொழிற்சாலைகளும் தொடங்கப்படவில்லை. சிறு தொழில்களும் வளரவில்லை. சிறு தொழில்களை அதிக அளவில் தொடங்கினால்தான் உற்பத்தி பெருகும், வேலைவாய்ப்பு உருவாகும். பொருளாதாரம் மேம்பாடு அடையும், வருமானம் பெருகும், வறுமை ஒழியும். அதற்காக இந்த அரசிடம் என்ன திட்டம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களும்...

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 95 சதவீதம் சிறு தொழில் அலகுகளும் மற்றவை நடுத்தர மற்றும் பெருந் தொழில்கள் ஆகும். சிறு தொழில் வளர்ச்சி சென்ற ஆண்டு 10 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது என்பதைச் சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.கே. இராஜா:** அமைச்சருடைய பதிலுக்கு நன்றி! சிறு தொழில்கள் - கிராமப்புறத் தொழில் தொடங்க வேண்டுமென்று அந்தந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு தொழில் தொடங்க, வேலையில்லாத இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து மானியத்துடன்கூடிய கடன் வழங்கி ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக சிறு தொழில் வளர்ச்சிக்கு, கிராமப்புறத் தொழில் வளர்ச்சிக்கு இந்த ஆண்டு அரசின் புதிய திட்டம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாநில அளவில் *385* வட்டாரங்களில், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூபாய் *1* கோடி அளவில் வேளாண் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை உருவாக்கியுள்ளார்கள். அதன் அடிப்படையில் தம்பி இராஜா அவர்கள் முன் வந்தால் அம்மா அவர்கள் கண்டிப்பாக அதை நிறைவேற்றித் தருவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, கொள்கை விளக்கக் குறிப்புகளை எல்லாம் படிக்கவில்லையா?

**திரு. டி.கே. இராஜா:** கொள்கை விளக்கக் குறிப்புகளைப் படித்து விட்டுத்தான் பேசுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிலே நிறையத் திட்டங்கள் எல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளன.

**திரு. டி.கே. இராஜா:** புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக தொழில் துவங்க அனுமதி அளிக்கப்பட்ட *52* அலகுகளில் *12* அலகுகள்தான் உற்பத்தியைத் துவங்கியுள்ளதாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைதான் நான் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஓராண்டு காலத்திலே *52*-ல், *12*-க்குத்தான் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். மீதி *40* அலகுகளுக்கு இன்னும் அனுமதி வழங்கவில்லை, எப்போது வழங்கப்போகிறார்கள் என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *385*, வட்டாரங்களில் மனுக்கள் பரிசீலனையில் உள்ளன. இப்போது *56* மனுக்கள் மீது பரிசீலனை முடிந்து தொழில்கள் துவங்க உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-25*

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்களுக்கென தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையிலே



வெறும் ரூபாய் *50* இலட்சம்தான் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்படி *50* இலட்சம் ரூபாய் ஒதுக்கினால், தமிழ்நாடு எப்படி முதல் மாநிலமாக வளர்ச்சி அடைய முடியும்? சிறுதொழில் துறை மூலமாகப் பயிற்சி பெற்றோர், எத்தனை நபர்கள் சுயதொழில் ஆரம்பித்து வருவாயை ஈட்டிக்கொண்டு இருக்கிறார்கள்?

பேரவைத் தலைவர் அவர்களே; கரூர் மாவட்டம், ஆத்தூர் சிட்கோ தொழிற்பேட்டையில் விலைக்கு வாங்கப்பட்ட பிளாட்டுகளிலே தொழில் தொடங்க கால அவகாசம் வழங்கி, பத்திரங்களை உடனடியாக ஒதுக்கீட்டாளர்களுக்கு வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட *11* இரகங்களிலே கைத்தறி அல்லாத துணி ஆலைப் பிரிவு உற்பத்தியையோ, வியாபாரமோ செய்யாமல் இருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? டிமாண்ட் *17*-லே, பக்கம் *8*-லே குறிப்பிடப்பட்டுள்ள கதர் கிராமத் தொழிலுக்கு என உதவி மானியம், *2002-2003* ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு *225* இலட்சம் ரூபாய்; *2003-2004* ஆம் ஆண்டுக்கு திருத்திய மதிப்பீடு *239* இலட்சம் ரூபாய். இந்தத் தொகை *2001-2002* ஆம் ஆண்டில் ஒதுக்கீடான *960* இலட்சம் ரூபாயிலே நான்கில் ஒரு பங்குதான். இப்படி, குறைவாக ஒதுக்கீடு செய்தால் கிராமத் தொழிலான கதர்த் தொழில் எப்படி வளர்ச்சி அடையும்?

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோளை இங்கே நான் விடுக்க இருக்கின்றேன். தற்சமயம் மலிவு விலையிலே, ரூபாய் *40*/-லே வழங்கப்பட்டு வரும் சேலை தாய்மார்களுக்கு எட்டாத வகையிலே, நீளம் குறைவாக இருக்கிறது. எனவே, அந்தச் சேலையினுடைய நீளத்தை ஒரு மீட்டர் உயர்த்தி...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தச் சேலையானது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உற்பத்தி செய்த சேலையாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், பெண்களுக்குச் சரியாக ஐந்தரை மீட்டர்

நீளம் கொண்ட சேலையை நீங்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று எங்களுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) இன்று நல்ல தரமான சேலைகளை நாங்கள் உற்பத்தி செய்து கொடுத்துக் கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. டி.கே. இராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தரை மீட்டர் அளவுதான் குறைவாக இருக்கிறது. இன்னும் ஒரு மீட்டர் கூடுதலாக்கி விலையைக்கூட கொஞ்சம் ஏற்றிக்கொள்ளுங்கள் என்றுதான் தாய்மார்கள் சொல்கிறார்கள். அதனால்தான் நான் இங்கே சொல்ல வந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, உங்களுடைய துணைவியார் ரொம்ப உயரமானவர்களா? (சிரிப்பு) சேலை ஐந்தரை மீட்டர்தான் வழக்கமாக எடுப்பது.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு தலைவர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. பேரவைத் தலைவர் அவர்களே, பக்கம் 14-லே நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்குவதற்கு என ரூபாய் 2.50 கோடி வழங்கப்பட்டுள்ளது. முதியோர் 9,027 நபர்களுக்கு தலா ரூபாய் 200/- வீதமும், குடும்பங்கள் 458-க்கு தலா ரூபாய் 350/- வீதமும் மொத்தம் ரூபாய் 20 இலட்சமே வழங்கப்பட்டுளளது. மீதம் உள்ள 2.30 கோடி ரூபாய் எப்போது வழங்கப்படும் என்பதை அறியவிரும்புவதோடு, கைத்தறி நெசவாளர்களில் நலிந்து போனவர்களுக்கு....

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நெசவாளர்களுடைய சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் மூலமாக இருக்கக்கூடிய நெசவாளர்களுக்கு எல்லாம், நெசவாளர்கள் தான் ஈட்டும் கூலியிலே, ரூபாய்க்கு 8 பைசா வீதம் சந்தா செலுத்தினால், அதற்கு ஈடாக மாநில அரசு தனது பங்குக்கு ரூபாய்க்கு 4 பைசா வழங்குகின்றது.

மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் மைய அரசும், நெசவாளர்கள் ஈட்டும் கூலியிலே ரூபாய்க்கு 4 பைசா வீதம் தனது பங்காக வழங்கி வருகிறது. நெசவாளர்கள் பங்கு அரசுக் கருவூலத்திலே செலுத்தப்பட்டு வருகின்றது. அந்தத் தொகைக்கு மாநில அரசு 12 சதவீதம் வட்டி வழங்கி வருகின்றது. இதில் 7 சதவீதம் வட்டிதான் நெசவாளர்களுக்கு



நேரடியாக அவர்களது கணக்கிலே வரவு வைக்கப்படுகிறது. மீதி இருக்கக்கூடிய அந்த 5 சதவீதம் வட்டியில்தான் நெசவாளர்களுடைய முதியோர் ஓய்வூதியத் திட்டத்திற்கும், நெசவாளர் குடும்பங்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கும் மற்றும் நெசவாளர்களுடைய நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற நலத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*பிற்பகல் 5-30*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இராஜா அவர்கள் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கிராமப்புற வளர்ச்சிக்காக என்ன என்ன தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன என்ற விளக்கத்தைக் கேட்டார்கள். ஒட்டுமொத்தமாக 385 பிளாக்குகளில் 240 பிளாக்குகளுக்கு 363 மனுக்கள் ஆய்வு செய்யப்பட்டு, தகுதி உடையது எனக் கணக்கு எடுக்கப்பட்டு இருக்கின்றன. The Project is a viable project. எந்தத் தொழிலைத் துவக்கலாம் என்று ஆய்வு செய்து, அந்த அடிப்படையில் அந்த 363 கிராமப்புறத் தொழில்களுக்கு, விவசாயத்தை ஒட்டிய தொழில்களுக்கு, விவசாயப் பொருள்களை value added பொருள்களாக ஆக்கக்கூடிய—விவசாயிகளுக்கும் வருமானம், விவசாயத் தொழிலாளிகளுக்கும் வருமானம், அங்கு இருக்கின்ற Semi-skilled people-க்கும் வருமானம் என்ற நிலையிலே அவை தற்போது முடிவு செய்யப்பட்டு, T.I.I.C. நிறுவனம், நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் அதற்காக மாண்புமிகு அம்மா புரட்சித் தலைவி அரசு கொடுத்து இருக்கின்ற அந்த subsidy-யையும் பயன்படுத்தி இன்னும் சில மாதங்களில் அந்த எல்லா தொழில்களும் துவக்கப்பட இருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31-3-2003 முடிய விற்பனை செய்யப்பட்ட சேலை, வேட்டிகள் போக இன்னும் 9 இலட்சம் சேலைகளும், 5 இலட்சம் வேட்டிகளும் விற்பனையாகாமல் இருப்பது எப்போது விற்பனை செய்யப்படும்? தேவைக்கு அதிகமாகவும், தரத்தில் குறைவுள்ளதாகவும்....

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு

தவறான கருத்தை இங்கே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இன்றைக்கு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி இருக்கக்கூடிய அந்த மலிவு விலை வேட்டி, சேலையானது ஸ்டாக் இல்லாத நிலைதான் இன்று இருந்துகொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.கே. இராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதுவும் எனது கற்பனையாகச் சொல்லவில்லை. கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்துதான் குறிப்பு எடுத்துப் பேசுகிறேன். தவறான தகவலை நாங்கள் கொடுக்கவில்லை. தேவைக்கு அதிகமாகவும், தரத்தில் குறைவுள்ளதாகவும் கைத்தறித் துணிகள் தயாரிக்கப்படுவதால், விலையும் இல்லை, சந்தையும் இல்லை என்று கூறப்படுகிறது. அரசு இந்த வகையிலே நல்ல திட்டங்களைத் தீட்டி சமூகத்தில் பெரும் பகுதியாக உள்ள நெசவாளர்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். கைத்தறிப் பிரிவிலும் பெண்கள், குழந்தைகளுக்கான ஆயத்த ஆடைகள் தயாரிப்பதன் மூலமாக கைத்தறிகளுக்கு மறு வாழ்வு கொடுக்க முடியும். இவ்வகையில் அரசு என்ன திட்டம் வைத்திருக்கிறது? கைத்தறி அனைத்தையும் விசைத்தறிகளாக மாற்ற நீண்டகாலத் திட்டம் தீட்ட வேண்டும் என அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிக் குழந்தைகளுக்கான சீருடைத் துணிகள் கைத்தறி உற்பத்தி செய்யும் நிறுவனங்களிலிருந்து வாங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணையிட்டால்...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு வழங்கக்கூடிய அந்த இலவச சீருடையானது, கோ-ஆப்டெக்ஸ் மூலமாகத்தான் வாங்கப்படுகின்றது. அதைக்கூட நம்முடைய தாய் உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் அம்மா அவர்கள், இப்பொழுது தரம் வாய்ந்த துணியாக, அதாவது பாலியஸ்டர் கலந்த துணியாக உற்பத்தி செய்து தர வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பித்து இருக்கிறார்கள் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி.கே. இராஜா:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இலவசமாகக் கொடுக்கின்ற உடைகளைச் சொல்கிறார். நான் சொல்வது,



ஒட்டுமொத்தமாகப் பள்ளிச்சீருடைக்கு தமிழக அரசு கைத்தறி உடைகளை உடுத்த வேண்டுமென்று ஆணையிட்டால் கைத்தறி மேலும் வளர்ச்சி அடையும் என்ற நோக்கத்திலேதான் இதைச் சொல்லுகின்றேன். நெசவாளர்களுக்கு அரசு உதவுவதாகச் சொன்னாலும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை இரண்டு மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** ஐந்து நிமிடம் கொடுங்கள், தலைவர் அவர்களே. போன முறைகூடக் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. இன்னும் நான்கு பேர் பேச வேண்டும். இரண்டு மணித்துளிகளில் முடித்து விடுங்கள்.

**திரு. டி.கே. இராஜா:** நெசவாளர்களுக்கு அரசு உதவுவதாகச் சொன்னாலும் நெசவுத் தொழில் நலிந்து, நெசவாளர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிக்கொண்டு இருக்கிறது. கடந்த ஆண்டில் நெசவாளர்கள் கஞ்சித் தொட்டிக்குச் செல்லும் அவல நிலை ஏற்பட்டு, அவர்கள் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துகள் எல்லாம் யார் சொல்லி இங்கே சொல்கிறார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய அத்தனை கூட்டுறவுச் சங்கங்களிலும் இருக்கக்கூடிய துணிகளை உடனடியாக விற்பனை செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலே, தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களின் மூலமாக இன்று செயலாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக்கூடிய துணிகளை ஓராண்டுக்கு மேற்பட்ட துணிகளானாலும் சரி அல்லது ஈராண்டுக்கு மேற்பட்ட துணிகளானாலும் சரி, பருத்தித் துணிகளுக்கு 30 சதவீதத்திலிருந்து 45 சதவீதம் வரை தள்ளுபடி கொடுத்து இருக்கிறார்கள்.

அதுபோல, பட்டுச் சேலைகளுக்கு 45 சதவீதத்திலிருந்து 55 சதவீதம் வரை தள்ளுபடி மானியம் கொடுத்ததனாலே இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய, அந்தக் கூட்டுறவுத் துறைகளிலே சுமார் 571 கோடி ரூபாய்க்கு துணிகள் விற்பனை ஆகி இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-35*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, சற்று முன்பு, இந்த மலிவு விலை வேட்டி சேலைகளில் கிட்டத்தட்ட 9 இலட்சத்திற்கு மேல் விற்பனை ஆகாமல் இருக்கிறது; அதை எப்போது விற்பனை செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். 'ஸ்டாக்' இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லி, இந்தத் தவறான விவரத்தை எங்கிருந்து பெற்றீர்கள் என்று கேட்டபோது, இந்த விவரத்தைக் கொள்கை விளக்கக் குறிப்பில் இருந்துதான் பெற்றேன் என்றார். கொள்கை விளக்கக் குறிப்பில், 11 ஆம் பக்கத்தில், "கைத்தறி வேட்டி, சேலைகள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சரக்குத் தேக்கம் இல்லை என்ற நிலை உள்ளது" என்றுதான் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்தை இங்கே தெரிவித்திருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராஜா, ரொம்ப பழைய கொள்கை விளக்கக் குறிப்பு எதையும் படித்துவிட்டீர்களா? (சிரிப்பு)

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச வேட்டி, சேலைத் திட்டம் முடக்கப்பட்டுள்ளதால் ஏழைகளுக்கு ஏமாற்றமும், பாதிப்பும், அதேபோல நெசவாளர்களுக்குப் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே, மீண்டும் இலவச வேட்டி, சேலை வழங்கப்பட வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோல நெசவாளர்களுக்கு ஆந்திர மாநிலத்திலே விசைத்தறித் தொழிலுக்கென மின் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேயே தவறான தகவல் தரப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் சற்று முன்பு தெரிவித்தார். கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன இருக்கிறது என்பதை வாசித்துக் காண்பித்தேன். ஆகவே, தவறான கருத்தை இங்கே மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருந்தால் அதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி.கே. இராஜா:** நான் கூறிய கருத்து தவறாக இருந்தால் திருத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம். (சிரிப்பு)

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்திலே விசைத்தறித் தொழிலுக்கென மின் கட்டணச் சலுகை வழங்கப்படுகிறது. அதேபோல, தமிழகத்திலே குறைந்த மின் கட்டணம் வசூலிக்க வேண்டும். விசைத்தறித் தொழிலிலே பழைய விசைத்தறிகளைப் பயன்படுத்தி வருவதால் விசைத்தறியாளர்களுக்கு வாழ்விலே புத்துயிர் ஊட்ட நவீன தானியங்கி விசைத்தறிகள் மானிய விலையிலே வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் எல்லாம் நசிந்து, மூடுவிழா நடந்துகொண்டிருக்கின்றவேளையிலே அந்தக் கூட்டுறவு நூற்பாலையிலே பணிபுரிகின்ற சுமார் 6 ஆயிரம் ஊழியர்கள் தங்களுடைய எதிர்காலத்தை நினைத்து மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு முன்பு இந்து நாளிதழிலே கூட்டுறவு நூற்பாலைகள் தனியார்மயம் ஆக்கப்படும் என்ற செய்தி வந்த பிறகு அதிலே பணிபுரிகின்ற ஊழியர்கள் எல்லாம் மாற்று வேலை என்ன என்று தெரியாமல் முழித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே அவர்களுக்கு மாற்று வேலைக்கு உண்டான ஏற்பாட்டை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நட்டத்திலே ஓடுகிற அந்த ஆலைகள் எல்லாம் இலாபத்திலே இயங்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். *(மணியடிக்கப்பெற்றது)* அப்படி முடியாவிட்டால், ஆந்திர அரசு வழங்கியதுபோல பணித்தொகை வழங்க வேண்டும் அல்லது N.T.C. National Textile Corporation-ல் கொடுப்பதுபோல் வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். திரு. ரமணீதரன்.

**திரு. டி.கே. இராஜா:** இரண்டே நிமிடங்கள். தொகுதி பற்றிச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. தொகுதி பற்றி எல்லாம் ஒன்றும் கிடையாது. மானியக் கோரிக்கை மேல்தான் பேசலாம். *(குறுக்கீடு)* இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு பொது அறிவிப்பாகவே நான் தெரிவிக்க விரும்புகிறேன், கன்னிப்பேச்சு பேசக்கூடிய உறுப்பினர்கள் வேண்டுமானால் ஒரு மானியக்

கோரிக்கையிலே அவர்களுடைய தொகுதிப் பிரச்சினை, மற்ற மானியக் கோரிக்கைகளிலே பேச வேண்டிய பிரச்சினைகள் எல்லாவற்றையும் இணைத்துப் பேசலாம். பழகிய உறுப்பினர்கள், பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது, தொடர்புடைய மானியக் கோரிக்கையில் மட்டும்தான் பேச வேண்டுமே தவிர, அதிலே தொகுதி கோரிக்கை, மற்ற மானியக் கோரிக்கைகள் எல்லாவற்றையும் இணைத்துப் பேசுவது முறையற்றது. காலையிலே மிகப் பயிற்சி பெற்ற உறுப்பினர் கருணாகரன் அவர்கள் கூட்டுறவு மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது 'எங்களுடைய குளங்கள் தூர் வாரப்படவில்லை' என்று ஆரம்பிக்கிறார். ஆகவே, பயிற்சி பெற்ற உறுப்பினர்கள், பழகிய உறுப்பினர்கள் பேசுகிறபோது மானியக் கோரிக்கை தொடர்பாக மட்டுமே பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இராஜா, முடித்து விடுங்கள், திரு. ரமணீதரன்.

**திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணற்ற பெருமைகளை உள்ளடக்கிய தமிழகத்தில் இணையற்ற தலைவியும்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழனிசாமி, என்ன?

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் கருணாகரன் பேசிய விஷயத்தைச் சொன்னீர்கள். தொடர்ந்து என்னவென்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. அதனால்தான் சொல்லுகிறேன். எல்லோருக்கும்தான் சொல்லுகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** சம்பந்தப்பட்ட துறை தொடர்பில்லாமல் சிலர் பேசியதனுடைய விளைவாக உறுப்பினர் பேசுகின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படிப் பின்பற்றக்கூடாது. அது நல்ல மரபல்ல.

**திரு. ஜி. பழனிசாமி:** தாங்கள் சிலரை அனுமதித்ததனுடைய விளைவாக, சிலரை அனுமதிக்காததனால் வருகிற விளைவுதான் இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. எல்லோருக்கும் ஒரே நீதிதான். (குறுக்கீடு) எல்லோருக்கும் ஒரே நீதிதான். (குறுக்கீடு)



இல்லை, கருணாகரன், உங்களுக்காக வாதிட்டுவிட்டுப் போகிறார். Fees ஏதாவது இருந்தால் கொடுங்கள். திரு. ரமணீதரன் பேசுங்கள்.

*பிற்பகல் 5-40*

**•திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணற்ற பெருமைகளை உள்ளடக்கிய, தமிழகத்தின் இணையற்ற தலைவியும், மாதர்குல விளக்காய், "மங்கைய ராகப் பிறப்பதற்கே மாதவம் செய்திட வேண்டும் அம்மா" என்ற கவிச்சொல்லுக்கு, காப்பியமாக விளங்குகிற தலைவியும், கற்பனைக்கு எட்டாத, தொல்லைகள் வந்தபோதும் "பழையன கழிதலும் புதியன புகுதலும் கால வழுவல" என்ற தொல்காப்பியரின் வாக்கினை மெய்ப்பிக்கின்ற வகையில், காலத்திற்கொவ்வாத கற்பனை கலைஞர்களைக் கழித்துக்கட்டி புத்தம்புது மலர்களைப் பொறுக்கி எடுத்து, அரசு என்னும் மாலை தொடுத்து, தமிழகத்துக்குச் சூட்டி மகிழும் எம் அன்னையே! எம் திராவிடக் குலத் தலைவியே! எத்தனையோ பூங்காக்களைக் கொண்டு வந்தாலும், அவை விலை போகாமல், தொண்டர் கூட்டங்களைக் கூட்டி, ஊர் ஊராகச் சென்று, விலை கூவி, விற்றுவிட்டாலும் அல்லது விற்றதாகக் கணக்குக் காட்டினாலும், அதைவிட, உங்கள் இதய சிம்மாசனத்திலே வீற்றிருக்கும் தமிழக மக்கள்தான் உங்களுக்குப் பூங்கா தாயே! ஆம்! தாயே உங்கள் அரசாட்சிப் பூங்காவில் பூத்துக் குலுங்கும் பூக்களாக மகிழ்ச்சியோடு வாழ்பவர்கள்தானே தமிழக மக்கள். இதைவிட என்ன பூங்கா பெரிது தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரேக்க தத்துவ ஞானி, அரிஸ்டாட்டில் சொன்னார், "ஒரு நாட்டில் நல்ல சட்டங்கள் ஆளுகின்றன என்பதைவிட, நல்ல மனிதர்கள் ஆளுகிறார்கள் என்பதே பெருமை" என்றார். இப்புனித பூமியில், புடம்போட்ட தங்கமாக, பொற்றாமரைக் குளத்தில் உள்ள தங்கத் தாமரையாக விளங்கும் எங்கள் தலைவிக்காகத்தான், (மேசையைத் தட்டும் ஒலி) அரிஸ்டாட்டில் அன்றே சொன்னார். அது எவ்வளவு பெரிய சரித்திரச் சொல் என்பதற்கு உதாரணமாக வீற்றிருக்கிறார் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திர இந்தியாவில் வாழ்கிறோம் என்பது எங்களுக்குப் பெருமையல்ல. அம்மா, நீங்கள் வாழ்ந்த காலத்தில் நாங்களும் வாழ்கிறோம் என்பதே எங்களின் வாழ்நாளில், நான் மட்டுமல்ல, எங்கள் குடும்பமே நினைத்து மகிழும் பெருமையாகும்" எனக் கூறி என் உரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் கைத்தறித் துறையைச் சீர்கேடாக்கி கையாலாகாத துறையாக மாற்றிவிட்டார்கள். இந்த நிலையை மாற்றி கைத்தறித் துறைக்கு எண்ணற்ற திட்டங்களைக் கொடுத்து கைத்தறித் துறையிலும், கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கையிலும் ஒரு மறுமலர்ச்சியை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கினார் என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் ஒரு பெரிய அளவிலான பொருளாதாரச் செயல்பாடு கொண்ட தொழிலாகும். இத்தொழிலில் 4.29 இலட்சம் நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்த சுமார் 11.64 இலட்சம் நெசவாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு அம்மாவின் ஆட்சியில்தான் அதிகமாக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில்தான் ரூ.571.67 கோடிக்குக் கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இது சென்ற ஆண்டின் விற்பனையைவிட 16 விழுக்காடு கூடுதலாகும்.

2001-2002 ஆம் ஆண்டில் இலாபம் ஈட்டும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 320 ஆக இருந்தது. 2002-2003-ல் அதுவே 487 ஆக உயர்ந்திருக்கிறது. இது மாண்புமிகு அம்மாவின் ஆட்சித் திறமைக்குக் கட்டியம் கூறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அன்னியச் செலாவணியைப் பெருமளவு ஈட்டுகின்ற வகையில் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.23,785.60 கோடி மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இது 1997-98 ஆம் ஆண்டைவிட 65.11 சதவீதம் கூடுதல் வளர்ச்சியாகும் என்பதைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் தையல் மற்றும் இதர வேலை வாய்ப்புகளுக்கான பயிற்சி அளிக்க 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க



ரூபாய் 20 இலட்சம் நிதியை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள்.

அதேபோல் அதிக ஊதியம் ஈட்டுவதற்கு மதிப்பு கூடிய இரகங்களை உற்பத்தி செய்வதற்கான நெசவுத் திறன் பயிற்சி ஆண்டிப்பட்டி, வேலூர், சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை பகுதிகளைச் சேர்ந்த ஆயிரம் மகளிர் நெசவாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இலவச பள்ளிச் சீருடைத் திட்டத்தின்கீழ் 194 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 5,000 நெசவாளர்கள் தொடர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர். 13 மாவட்டங்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 50 நெசவாளர்கள் குடியிருப்புகள் கொண்ட இடங்களில் ரூ. 10,000/- மதிப்பில் நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தறியுடன் கூடிய வீடுகளைக் கட்டித் தர புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளதைக் கருத்தில் கொண்டுள்ள அந்த நெசவாளர்கள் குடும்பங்கள் என்றுமே புரட்சித் தலைவி அம்மாவிற்குக் கடமைப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி எண்ணற்ற நல்ல திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே கைத்தறி நெசவாளர்களுக்கும், கைத்தறித் துறைக்கும் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா, என்னுடைய தொகுதி விவசாயத்தை நம்பி இருக்கின்ற தொகுதியாகும். விவசாயத்தைப் பொறுத்தவரை ஒரு சில மாதங்கள்தான் வேலைவாய்ப்பு உள்ளது. மற்ற நாட்களில் வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகின்ற சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் படித்த இளைஞர்கள் தொழில் துவங்க தொழிற்பேட்டை அமைத்துக் கொடுத்து, ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க உதவிட வேண்டும் என மெத்தப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நிலவும் கடும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க கோபி-கெட்டி செவியூர், கோபி-மொடச்சூர் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றி தந்து உதவ வேண்டுமாய் மாண்புமிகு அம்மா அவர்களை மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கோபிசெட்டிப்பாளையம் நகரப் பகுதியில் மக்கள் தொகை அதிகமாக உள்ளதால் போக்குவரத்து நெரிசலைத் தடுக்க அமலா மேல்நிலைப் பள்ளியிலிருந்து பாரியூர் நஞ்சகவுண்டன்பாளையம் வழியாக ஒரு புறவழிச் சாலை அமைத்துத் தர வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-45*

அம்மா, என்னுடைய தொகுதியில் உள்ள சவண்டப்பூர்-அத்தாணி பவானி ஆற்றுப் பாலம் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. இந்தப் பாலம் சிதைந்து போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக உள்ளது. மற்றும் இரண்டு சர்க்கரை ஆலைகளின் கரும்பும், விவசாயத் தொழிலாளர்களும் இந்த வழியாகத்தான் செல்ல வேண்டும். மாண்புமிகு அம்மா அவர்கள் இன்னொரு பாலத்தைக் கட்டி, இருவழிப் பாதை அமைத்துத் தர வேண்டும் என மெத்தப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்து, நடைபெற்ற இடைத் தேர்தல்களில் எல்லாம் தோல்வி கண்டு, மக்களால் தூக்கி எறியப்பட்ட அரசியல் கட்சிகள் இந்திய அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவைப் பற்றிப் பேசுகின்றன.

நெல்லைச் சீமையில் தாமிரபரணி ஆற்றுப் பாலத்தின் மேல் ஊர்வலம் போன தலித் மக்களை அடித்து நொறுக்கி 17 பேர்களைக் கொன்று தாமிரபரணி ஆற்றில் வீசி எறிந்தார்களே!

நீலகிரி மாவட்டத்தில் ஊர்வலமாகச் சென்ற தேயிலைத் தோட்ட விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 30,000 பேரை காவல் துறையை ஏவிவிட்டு அடித்து விரட்டி, பத்தாயிரம் பேர்களைக் கைது செய்து கோவை மத்தியச் சிறையில் அடைத்தார்களே!

கோவை வீதியில் டிராஃபிக் போலீஸ் கான்ஸ்டபிள் அடித்துக் கொல்லப்பட்டபின், அது இந்து-முஸ்லீம் கலவரமாக மாறி அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் பிணமாகச் சாய்ந்தார்களே! ஆயிரக்கணக்கான பேர்கள் கைகள் வெட்டப்பட்டு, கால்கள்



துண்டிக்கப்பட்டு, இரத்த வெள்ளத்தில் கிடந்தார்களே! கடைகளுக்குத் தீ வைத்துக் கொளுத்தினார்களே! இராணுவம் வரவழைக்கப்பட்டு, காவல் துறை அதிகாரிகளின் குடும்பத்தைச் சார்ந்தவர்களே தங்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று சாலையில் அமர்ந்து போராடினார்களே! கொங்கு மண்டலத்தையே தீவிரவாதிகளின் கூடாரமாக மாற்றியவர்கள்; சிதம்பரம், கடலூர் பகுதிகளில் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்ட ஜாதிக் கலவரங்களால் அரிவாளால் வெட்டப்பட்டு, துப்பாக்கியால் சுடப்பட்டு, நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள், இப்படி ஜாதிக் கலவரத்தால், மதக் கலவரத்தால் தினமும் ஆயுதக் கலாச்சாரத்தை வளர்த்து நாட்டைச் சுடுகாடாக்கியவர்கள் இன்று சட்டம்-ஒழுங்கைப் பற்றிப் பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு கால அம்மாவின் ஆட்சியிலே ஜாதிக் கலவரங்கள் இல்லை, மதக் கலவரம் இல்லை, தீவிரவாதம் இல்லை, விடுதலைப் புலிகளின் வெறியாட்டம் இல்லை, (மேசையைத் தட்டும் ஒலி) வெடிகுண்டுக் கலாச்சாரம் இல்லை.

வாழ்கின்ற தலைமுறைக்கு மட்டுமல்ல, வாழவேண்டிய தலைமுறைக்கும் வாழ்வதற்குரிய வழிப்பாதையை அமைத்துக்கொடுத்து, தொலைநோக்குச் சிந்தனையோடு அமைதி காக்கும் ஆட்சியை அம்மா அவர்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பு இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

என்ற பாடலுக்கேற்ப ஒரு தாய் தன் குழந்தைக்குப் பாலை ஊட்டி, அன்போடும், பாசத்தோடும் எப்படி வளர்க்கின்றாளோ, அந்தத் தாயைப் போன்ற இறைவனை அவனுடைய பக்தர்கள் எவ்வாறு

[திரு. எஸ்.எஸ். ரமணீதரன்] [2003 மே 7

சிக்கெனப் பிடித்துக்கொண்டுவிட்டார்களோ, அதேபோன்று இந்த அன்பே உருவான, அறிவே உருவான, ஆற்றலே உருவான எங்கள் தாய், புரட்சித் தலைவியின் பாதங்களை நாங்கள் பற்றி (மேசையைத் தட்டும் ஒலி) அன்றாடம் தொழுது வணங்குகிறோம் எனக் கூறி, கைத்தறி மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்கள் பேசுகிறபோது, கூட்டுறவு நூற்பாலைகளினுடைய ஒட்டுமொத்த இழப்பு ** கோடி என்று நான் அவைக்குக் கூறினேன். அதற்கு ஒரு திருத்தத்தை அவையில் மேற்கொள்ள வேண்டுமென்று கோருகிறேன். கூட்டுறவு நூற்பாலைகளினுடைய ஒட்டுமொத்த இழப்பு 445.88 கோடி. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளினுடைய ஒட்டுமொத்த இழப்புக் கணக்கை இதில் கூறியதைத் தவறாகக் கூறிவிட்டேன். அதற்குத் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஒட்டித்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதை ** கோடி என்று கூறியதையும் திருத்திக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சருடைய திருத்தத்தை அவைக் குறிப்பில் மேற்கொள்ளலாம். செல்வி க. பாலபாரதி.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடனே இதைப்பற்றி விவாதமா? (குறுக்கீடு) செல்வி க. பாலபாரதி. (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, பேசுங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2003 மே 7]

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 8 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை கைத்தறி நெசவாளர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் இந்த மானியக் கோரிக்கையை மிகக் கவனமாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே, பேரறிஞர் அண்ணா அவர்கள் 'நெசவாளர்களுடைய வாழ்க்கை நூலைப் போன்றது' என்று குறிப்பிட்டார்கள். அந்த நூலை மிகப் பெரிய நூலாக ஆக்குவதும் சிரமம். அதே சமயத்தில் அது அறுந்துபோகாமல் பாதுகாக்க வேண்டிய கடமையும் நமக்கு முன்னால் இருக்கிறது என்பதை நான் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன்.

உலக அளவில் வர்த்தக் கொள்கை என்பது இந்திய நாட்டினுடைய கைத்தறியை, தறி ஓசையை இன்றைக்குக் கட்டுப்படுத்தக்கூடிய நடவடிக்கையாக மாறிக்கொண்டிருக்கிறது. உலக வர்த்தகத்தினுடைய, மத்திய அரசைக் கட்டுப்படுத்தக்கூடிய ஜவுளிக் கொள்கை வெள்ளமாக இன்றைக்கு இந்திய நாட்டினுடைய பல்வேறு மாநிலங்களிலும் நமது சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. இப்போது நாம் உற்பத்தி செய்யக்கூடிய துணிகளை வெளிநாடுகளில் " 'மினி ஸ்கர்ட்' போன்ற துணிகளை எல்லாம் வாங்கமாட்டோம், அதிலே குழந்தை உழைப்பாளர்களுடைய உழைப்பு இருக்கிறது" என்று ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி உலக வர்த்தகம் வாங்க மறுக்கிறது.

*பிற்பகல் 5-50*

இத்தகைய சூழ்நிலையிலேதான் நம்முடைய இந்திய நாட்டின் மத்திய பி.ஜே.பி. அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களுக்கும், விசைத்தறி நெசவாளர்களுக்குமான கொள்கையை அவர்கள் கடைப்பிடிக்கவில்லை; நிச்சயமாக கடைப்பிடிக்கவும் மாட்டார்கள். ஏன் என்றால், அந்த அரசாங்கம் அவர்களுக்கு விரோதமான அரசாங்கம் என்பது இந்த 4½ ஆண்டு காலத்திலே மிகத் தெளிவான ஒரு விஷயமாக இருக்கிறது. இத்தகைய சூழ்நிலையிலேதான் உலகத்தில் இன்றைக்கு எந்த நாட்டிலே மிகச் சிறந்த தொழில்நுட்பம் இருக்கிறதோ அதை காப்புரிமைச் சட்டத்தில் பதிவு செய்ய வேண்டும்; இல்லை என்றால் நூதனமாகத் திருடிக்கொள்கிறார்கள். காஞ்சி பட்டு என்பது நூறாண்டு காலப் பெருமைமிக்கது. அந்தக் காஞ்சிப் பட்டை காப்புரிமைச் சட்டத்தில் பதிவு செய்வதற்கான முயற்சியை நமது தமிழக அரசாங்கம் இந்திய

அரசாங்கத்திற்குக் கூறி நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்று சொன்னால், வெளிநாட்டு ஜவுளிகள் இன்றைக்கு இந்திய நாட்டிற்கு வரக்கூடிய சூழ்நிலையில் காஞ்சி பட்டை நாங்கள்தான் கண்டுபிடித்தோம் என்று இங்கேயே வந்து காஞ்சிக்கே பட்டு கொடுத்துவிடுவார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையை தமிழக அரசாங்கம் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கையை எடுத்து, காப்புரிமைச் சட்டத்தில் பதிய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைத்தவிர சென்னிமலை, ஈரோடு பகுதியில் அதிகம் தேவைப்படும் 2x17 நூல் கிடைப்பதில் பெரிதும் காலதாமதமாகின்றது. நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைக்காமல் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சி...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சென்னிமலைப் பகுதியிலே அந்த 2x17 என்று சொல்லக்கூடிய அந்த நூல் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். கூட்டுறவு நூற்பாலையின் மூலமாக அந்தப் பகுதிக்குத் தேவையான நூலை நாங்கள் இப்போது கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். ஒருசில நேரங்களில் கோ-ஆப்டெக்ஸில் இல்லாத நேரத்தில்தான் அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் நேரடியாக N.H.D.C. மூலமாக வாங்குவதற்கு நாங்கள் அவர்களுக்கு அத்தாட்சி கொடுத்து இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுக்கவில்லை என்று நானும் சொல்லவில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. இப்போது சொன்ன அந்த தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின்மூலம் நூல் கொள்முதல் செய்துகொள்ள அந்தத் துறையின் மூலமாகத் தங்கு தடையில்லாமல் வாங்குவதற்கான அனுமதிக்கு உத்தரவாதம் செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி இரகங்களுக்கு 30 சதவீதம் தள்ளுபடி மானியம் மீண்டும் குறைந்தபட்சம் 6 மாத காலத்திற்கு வழங்கி உதவிடக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதிலும் உள்ள நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்புகளுக்கு வழங்கவேண்டிய வட்டி மானியம், தள்ளுபடி மானியம் உள்ளிட்ட நிதி உதவிகளைக் காலதாமதம் இன்றி வழங்கிட வேண்டுகிறேன்.



கூட்டுறவு நெசவாளர்கள் இறந்தால் தற்போது ரூ.65 ஆயிரம் வழங்கப்படுகிறது. அது ரூ.1 இலட்சமாக வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு நெசவாளர்கள் Group Insurance திட்டத்தில் 60 வயது முதல் 80 வயது வரை உள்ள முதுமையான நெசவாளர்களுக்கு இப்போது ஓய்வூதியம் கிடைப்பதில்லை. அந்த முதியவர்களுக்கும் ஓய்வூதியம் கிடைப்பதற்கு, விதிகளைத் தளர்த்துவதற்கு இந்தத் துறையும், அமைச்சரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலைப் பாதுகாக்க இரக ஒதுக்கீட்டுச் சட்டத்தைக் கறாராக அமல்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திண்டுக்கல் அல்லது மதுரையில் கைத்தறி ஜவுளி ஏற்றுமதி மையம் அமைக்கப்பட்டால் அது உதவிகரமாக இருக்கும்.

திருவண்ணாமலை, கீழ்க்கொடுங்காளூர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் கடந்த காலத்தில் சுமார் 50 இலட்சத்திற்கு மேல் ஊழல் நடந்து, அது ஆரம்ப விசாரணையில் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு இன்று வரை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லையே, ஏன் என்ற கேள்வியையும் இந்தச் சபை முன்னால் நான் வைக்கின்றேன்.

திண்டுக்கல், பாரதிபுரம், நாகல் நகரிலுள்ள நெசவாளர்களுக்கு வீட்டுக்கான இடம் எடுக்கப்பட்டது. ஆனால் இன்னும் அத்தகைய வசதி செய்து கொடுக்கப்படவில்லை.

என் தொகுதியில் கள்ளிப்பட்டி, தாடிக்கொம்பு பகுதிகளில் கடந்த 2 வருட காலமாகக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து நூலே கிடைக்காமல் இன்றைக்கும் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி 3 முறை அந்தத் துறையினுடைய அதிகாரிகளுடைய கவனத்திற்கு நானும் சொல்லிவிட்டேன். இதுவரை அந்த மாவட்டத்தினுடைய அதிகாரிகள் அந்தக் கள்ளிப்பட்டிக்குச் செல்லவேயில்லை...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் தொகுதியைச் சேர்ந்த தாடிக்கொம்பு

பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில், தாடிக்கொம்பு தொழிலியல் மற்றும் தாடிக்கொம்பு மகாலட்சுமி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இரு சங்கங்கள் செயல்பட்டு வந்தன. இவற்றில் தாடிக்கொம்பு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டுவிட்டது. தாடிக்கொம்பு மகாலட்சுமி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் செயல் இழந்துள்ளது. எனினும், இச்சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரும் இப்பகுதியிலே புதிதாகத் துவங்கப்படவுள்ள அங்காள ஈஸ்வரி மற்றும் டாக்டர் அம்பேத்கர் மகளிர் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராகச் சேர முன்வரும்பட்சத்தில், அவர்களுக்குத் தேவையான நூல் அங்கு கண்டிப்பாக வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-55*

**செல்வி க. பாலபாரதி:** அமைச்சரின் அறிவிப்பிற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தமிழகத்தில் இலவச வேட்டி, சேலை வழங்கப்பட வேண்டும். அத்தோடு இப்போது மலிவு விலை சேலைகள், வேட்டிகள் ரேஷன் கடைகளில் விநியோகம் செய்யப்பட்டன. அநேகமாக தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்கள் கஞ்சித் தொட்டி நிகழ்ச்சியின் மூலமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். அரசும் சில நடவடிக்கைகளை எடுத்தது. அதைத் தொடர்ந்து கல்லூரி மாணவிகள் இதை ஓர் இயக்கமாகவே கடைப்பிடித்தார்கள். விருதுநகர் மாவட்டம் என்று நான் நினைக்கின்றேன்; ஒரு கல்லூரி முழுவதும் இருக்கக்கூடிய 3,000 மாணவிகளும், மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய இலட்சக்கணக்கான மாணவிகளும், ஆசிரியைகளும் அரசுக்கு உதவி செய்யக்கூடிய வகையில் 40 ரூபாய் சேலையை எடுத்து, மகிழ்ச்சியோடு வாங்கி உடுத்தினார்கள். சென்ற தீபாவளி 40 ரூபாய் தீபாவளியாகவே விளங்கியது என்று சொன்னால்கூட அது மிகையல்ல.

அப்படிப்பட்ட அந்த உணர்வு என்பது; பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்குப் பாதிப்பு வந்தபோது, அந்தத் துணிகளைத் தோளிலே தாங்கி விற்பனை செய்தார் என்று நாம் வரலாற்றிலே படிக்கிறோம். அதையே கல்லூரி மாணவிகளும், ஆசிரியைகளும், இன்னும் சொல்லப்போனால், தொலைக்காட்சியிலே செய்தி வாசிக்கக்கூடிய பெண்கூட 40 ரூபாய் சேலையில் வந்ததனால் அடுத்த நாள் டி.வி.யைப் பார்க்கக்கூடிய



பெண்களும் 40 ரூபாய் சேலையில் இருந்தார்கள். இது ஓர் இயக்கமாகவே மலர்ந்தது என்று சொல்லலாம். ஆகவே, அவர்களுக்கு இந்தச் சபையின் மூலமாகப் பாராட்டுத் தெரிவிக்க வேண்டும். இந்த 40 ரூபாய் சேலை, மலிவு விலை சேலை என்பதை மறந்து அவர்கள் தங்கள் உணர்வுகளிலிருந்து வாங்கினார்கள். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. தாங்கள் பேசியதற்கும் இதற்கும் ஒன்றும் சம்பந்தமே கிடையாது. அந்தக் கடைசி இரண்டு வாக்கியங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**செல்வி க. பாலபாரதி:** தவிர்க்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தனித் தேர்தல் ஆணையம் என்பது வைக்கப்பட வேண்டும். தனி அதிகாரிகள், கூடுதல் அதிகாரிகள், இவர்களுக்குச் செலவு ரூபாய் 5 இலட்சம் சம்பளமாகப் போகிறது. இதற்கும் கூட்டுறவுச் சங்கமே தர வேண்டியுள்ளது. தேவையற்ற பதவிகளை இரத்து செய்ய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய கே.எஸ்.பார்த்தசாரதி பட்டு நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், வங்கி அனுமதி, கோ-ஆப்டெக்ஸ் அனுமதி, காஞ்சி மாவட்ட கைத்தறித் துறை அனுமதி, அனைத்தும் பெற்று, கைத்தறித் துறையினுடைய இயக்குநர் அனுமதிக்காக வந்தால், ஓராண்டு காலமாக அந்த அனுமதி என்பது வழங்கப்படவில்லை. ஆகவே, புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்குவதற்கு துறையினுடைய அதிகாரிகள் உதவ வேண்டும். மிகக் காலதாமதமாகிறது என்ற வகையிலே அந்தப் பிரச்சினையைக் கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளிலே முடித்துக்கொள்ளுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** அதேபோன்று கோ-ஆப்டெக்ஸில் 10,000 ரூபாய்க்குச் சேலை வாங்கி 11,000 ரூபாய் உள்ளடக்கம் வைத்து விற்றால் போதுமானது. ஆனால், அதிகமாக, 14,000 ரூபாய் வரை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

விற்கப்படுகிறது. ஆகவே, கோ-ஆப்டெக்ஸ் என்றாலே நடுத்தர மக்கள், ஏழை மக்கள் அந்தப் பகுதிக்குச் செல்ல மறுக்கிறார்கள். ஓரிசா போன்ற மாநிலங்களில் பெண்கள் அணியக்கூடிய மேலாடைத் துணிகள் 90 சென்டிமீட்டர் உள்ள துணிகள் 35 ரூபாய்க்குக் கிடைக்கின்றன. ஆகவே, அவை மலிவு விலையில் கிடைப்பதனால் அதிகமாக விற்பனையும் ஆகிறது. நெசவாளர்களுக்கும் வேலை என்பது கிடைக்கிறது. அதுபோன்று, எந்தப் பகுதியில் என்ன விலைக்குக் கொடுக்க முடியும் என்று துறை கவனித்து அதற்கான உற்பத்தியைச் செய்வது என்பது...

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மக்கள் யாரும் கோ-ஆப்டெக்ஸுக்குச் சென்று துணிகள் வாங்குவதில்லை என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இன்று நம்முடைய இந்தியாவிலே இருக்கக்கூடிய (குறுக்கீடு) பயப்படுகிறார்கள் என்று சொல்கிறீர்கள். அதற்காகத்தான் சொல்கிறோம். யாரும் பயப்படவில்லை. ஆகையால்தான் இன்று அனைத்து மாநில அளவிலான சங்கங்களில் கோ-ஆப்டெக்ஸ் 244 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மட்டுமல்ல; தனியார் ஜவுளி நிறுவனங்கள் ஒரு சேலை எடுத்தால் இன்னொரு சேலை இலவசம் என்று சொல்கிறார்கள். ஒரு சேலையினுடைய விலையை இன்னொரு சேலையில் வைத்துவிடுகிறார்கள். அதுதான் உண்மை. எனவே சில நூதனமான வடிவங்களில் கிராமப்புற பெண்களையும் கவரக்கூடிய வகையில் கோ-ஆப்டெக்ஸ் திட்டமிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுதவிர, 40 ரூபாய் விலை உள்ள சேலை, வேட்டி, மாணவர்களுக்கான இலவச சீருடைக்கான மலிவு விலை நூல்கள் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து பெறப்படுகின்றன. நம்முடைய தமிழகத்தில் 14 கூட்டுறவு ஆலைகள் இயங்குகின்றன. அதுகூடத் தனியாருக்குக் கொடுக்கப்படும் என்று காலையிலே நீங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். தனியாருக்குக் கொடுத்துவிட்டால், நூலை



அதிக விலை கொடுத்து வாங்க வேண்டும். அப்படியானால், இலவச சீருடை என்பது எதிர்காலத்திலே இருக்குமா, இருக்காதா? அதேபோன்று இந்த மலிவு விலை சேலையும் இப்போது வழங்கிக் கொண்டிருக்கிறீர்கள், இதுவும் இருக்குமா, இருக்காதா என்ற கேள்வி எழுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியிலே பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

பிற்பகல் 6-00

**செல்வி க. பாலபாரதி:** ஆகவே, இந்த நூற்பாலைகளைத் தனியாருக்குக் கொடுக்க வேண்டியதில்லை என்ற கருத்தைத்தான் நாம் கூறுகின்றோம். கூட்டுறவு நூற்பாலை என்பது அத்தியாவசியமானது. மாணவர்களினுடைய இலவச சீருடைக்கும், கிட்டத்தட்ட 50 இலட்சம் கிலோ நூலை இந்த 14 கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்துதான் நாம் பெற்றுக்கொண்டிருக்கின்றோம். ஆகவே, இந்த நூலை எடுத்து கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகம் செய்யலாம். கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கக்கூடிய நெசவாளர்கள் நூலே கிடைக்கவில்லை என்று புலம்பிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நூற்பாலைகளைச் சரியாகப் பயன்படுத்தினால், அவர்களுக்கு மலிவான விலையிலே நூலும் கொடுக்க முடியும், வேலையும் கொடுக்க முடியும். அந்தத் தறியின் ஓசை அடங்காமல் பாதுகாப்பதற்கும் நம்மால் உறுதியாக முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு) செல்வி பாலபாரதி, பேசி முடித்துவிடுங்கள்.

**செல்வி க. பாலபாரதி:** ஒரே ஒரு கோரிக்கை தலைவர் அவர்களே, ஆகவே, அந்த வகையில் ஜனவரி 2003 வரை கோ-ஆப்டெக்ஸினுடைய நூல் விற்பனை என்பது 430 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாய். ஆனால் தனியார் மார்க்கெட்டில் விற்பனை செய்திருப்பது என்பது 652 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய். ஆகவே, தனியாருக்கு நூல் அதிகமாகக் கொடுக்கிறீர்கள். அதேசமயத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸுக்கும் குறைவாக நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள் என்பது இதன்மூலம் நிரூபணம் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்களை, வெளியிலே அதிகமாக விற்பனை செய்துவிட்டார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்பொழுது அம்மாவினுடைய அறிவுரையை ஏற்று, இங்கே கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தி செய்யக்கூடிய அந்தச் சேலைகளானாலும் சரி அல்லது மாணவர்களுக்கு இலவச சீருடைகளானாலும் சரி, பாலியஸ்டர் இழை கொண்டு செய்வதனாலே அதிலே ஒரு பகுதியை இப்பொழுது வெளி மார்க்கெட்டிலே விற்கக்கூடிய ஒரு நிலையிலே இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டி, தமிழகத்திலே நெசவாளர் மக்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழகத்திலே இருக்கக்கூடிய அந்த நெசவாளர்களுடைய தறி சத்தம் எப்பொழுதும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ.எஸ். கண்ணன். (குறுக்கீடு)

***திரு.. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் சொன்ன கோரிக்கையை மாண்புமிகு பாரதப் பிரதமர் செல்வன் வாஜ்பாய் அவர்களிடத்திலே சொல்லி நிறைவேற்றித் தருவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், நீங்களே உங்கள் தலைவரை வாரியிருக்கிறீர்கள் போல இருக்கிறதே? (சிரிப்பு)

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இங்கே எப்படி இடம் தரவில்லையோ, அதேமாதிரி மகளிர் மசோதாவிற்கு, பெண்களுக்கு இட ஒதுக்கீடு தரவேண்டுமென்ற விஷயத்தையும் 4½ ஆண்டு காலமாகக் கொடுக்கவேயில்லை. அந்த மசோதாவையே ஒப்பேற்றிவிட்டார்கள். ஆகவே, இதற்கு மேலே அவர்கள் வந்து என்ன சொல்லி, என்ன வாங்கித் தரப்போகிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். (சிரிப்பு)



***திரு. ஏ.எஸ். கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் கைத்தறி மற்றும் துணி நூல், பட்டு வளர்ச்சித் துறை மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்தில் 4½ இலட்சம் பதிவு செய்த சிறு, குறுந்தொழில்களும், பதிவு செய்யப்படாத 1 இலட்சம் சிறு, குறுந்தொழில்களும் இருக்கின்றன. இவை 32 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பைத் தருகின்றன என்று கொள்கைக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் இன்றைய பொருளாதார வளர்ச்சிக்கு சிறு தொழில் முதுகெலும்பாகவும், மூலை முடுக்கெல்லாம் பரவிக்கிடக்கிறது. உள்ளூரில் கிடைக்கின்ற கச்சாப் பொருள், தொழில் நுணுக்கம் ஆகியவற்றின் உதவியால் ஒட்டுமொத்தமாக உற்பத்தியில் 40 சதவீதமும், ஏற்றுமதியில் 35 சதவீதமாகவும் இந்த சிறு, குறுந்தொழில்கள் இன்றைக்குத் தன்னுடைய பங்கை வகிக்கிறது. ஆனால் கடந்த 6 ஆண்டு காலமாக சிறு, குறுந்தொழில்கள் நலிவடைந்து உள்ளதைப் பல்வேறு புள்ளி விவரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. இன்றைய சூழ்நிலையில், சிறு, குறுந்தொழில்களின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து தமிழக அரசு பல திட்டங்களைப் பொது பட்ஜெட்டிலே அறிவித்துள்ளது. கொள்கைக் குறிப்பிலும் சில திட்டங்கள் தரப்பட்டுள்ளன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறோம். ஆனால் அதேநேரத்தில் திட்டங்களை அறிவிப்பதோடு இல்லாமல் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-05

உலக வர்த்தக ஒப்பந்தம் நிபந்தனைகள் காரணமாக, சிறு தொழில்கள் முழுமையாக அழிந்து போகக்கூடும் என்ற அச்சம் உள்ளது. ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தியா மீண்டும் ஒரு காலனி நாடாக ஆக்கப்பட்டால் மட்டுமே, சிறு தொழில்களை அழிக்க முடியும். ஆனால், மத்திய அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் அச்சத்தை உருவாக்குகின்றன. காரணம், சிறு, குறுந்தொழில்களுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் 350-க்கும் மேலான உற்பத்திப் பொருட்களை உள்நாட்டு, பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது

என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மேற்காணும் மத்திய அரசினுடைய அவல நிலையைப் போக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு, குறுந்தொழில் செய்பவர்களைப் பகைத்துக்கொள்வோர் ஆட்சிப் பீடத்தில் நிலையாக இருக்க முடியாது என்பது கடந்த கால வரலாறு. நிச்சயமாக மத்திய அரசுக்கு இது பொருந்தும் என்று நான் நினைக்கிறேன். சிறு தொழில் என்றால் மாற்றாந்தாய் மனப்பான்மை என்ற நிலையை மாற்றியது இந்த அரசு என்று குறிப்பிடுவதில் தயக்கம் இல்லை. ஏனென்றால், அரசாணை 75-ஐ இரத்து செய்துவிட்டு, சிறு தொழில்களிடமிருந்து உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்வதில் 15 சதவீதம் விலைச் சலுகை வழங்க வகை செய்வதை வரவேற்கிறோம். ஆனால், இந்தக் கொள்முதல் குறித்த அரசாணை 75-ஐ அமல் செய்வதில் பல இலாகாக்களில் குழப்பங்கள் நிலவுகின்றன. அது அமைச்சர் அவர்களுக்கும், சம்பந்தப்பட்ட சிறு தொழில் அமைச்சர் அவர்களுக்கும், ஏன், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

மருந்துப் பொருள், போக்குவரத்து போன்ற துறைகளில் கொள்முதலில் குழப்பம் நிலவுகிறது. அதிகாரிகள் உத்தரவுகளை எதிர்த்து, தொழில் முனைவோர்கள் வழக்குகளைத் தொடுக்கின்ற ஒரு நிலையிருக்கிறது. பல உத்தரவுகளுக்குத் தடை உத்தரவும் வாங்கியிருக்கிறார்கள். கொள்கைரீதியாகச் சிறந்த முடிவை எடுத்து, தமிழக அரசு அமல்படுத்துவதைக் கண்காணிக்கவும், எந்தத் தரப்பில் தவறுகள் நடந்தாலும் தட்டிக் கேட்கவும் அமைப்பு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

3-5-2003 அன்றுகூட, ஆந்திர மாநில மருந்து நிறுவனம் ஒன்றுக்குச் சாதகமாக டிஎன்எம்சி. உத்தரவு அனுப்பியுள்ளது என்பதைப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஆதாரத்துடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியாவில் உள்ள முக்கிய நகரங்களில் உள்ள வசதிகளை ஆய்வு செய்து, தொழில் நடத்துவதற்கு ஏற்றதா என பரிந்துரைகளை வழங்கும் ஆய்வு ஒன்றை சி.ஐ.ஐ. நிறுவனம் நடத்தியுள்ளது. அதில் சென்னை முன்னிலை வகிக்கும் வாய்ப்பை இழந்துவிட்டது. காரணம், சாலை வசதி மேம்படுத்தப்பட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



இந்த அவசியத்தை உணர்ந்த மாண்புமிகு சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பதவியேற்ற இரண்டாம் நாளே, கடுமையான மழை பெய்தும்கூட, எங்கள் அம்பத்தூர் பகுதிக்கு நாங்கள் அழைத்தபோது, நேரில் பார்வையிட்டார். அங்கு சாலைகள் குண்டும் குழியுமாக இருப்பதையும், புழல் ஏரி போல் நீர் தேங்கிக் கிடப்பதையும் நேரடியாகப் பார்த்து, அம்பத்தூர் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள், சங்க நிர்வாகிகளின் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, அம்பத்தூர், கிண்டி தொழிற்பேட்டைகளிலுள்ள சாலைகளை மேம்படுத்த, தலா ஆறு கோடி, ஆறு கோடி ஒதுக்கி, ஆக, ஒட்டுமொத்தமாக 12 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதற்காக, இந்த நேரத்தில் அம்பத்தூர் தொழிற்பேட்டை தொழில் முனைவோர் சங்கத்தின் சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுத் துறையில் வங்கிகள் இன்றைக்கு சிறு, குறுந்தொழில்களுக்குக் கடன் வழங்குவதில் தயக்கம் காட்டுகின்றன. மத்திய அரசின் ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி, குறைந்தது ரூ.1 இலட்சத்திலிருந்து, ரூ.25 இலட்சம் வரையிலும் கொலாட்டரல் இல்லாமல், சொத்து ஜாமீன் இல்லாமல் கடன் வழங்கவேண்டுமென்று வழிகாட்டியுள்ளது. ஆனால், வங்கி அதிகாரிகள், ஏற்கெனவே வராத 1 இலட்சம் கோடி ரூபாய் கடனைக் காரணம் காட்டி, கடன் வழங்க மறுக்கிறார்கள். ஆனால், கடன் வாங்கி கட்டாமல் ஏமாற்றியவர்கள் யார் என்று பார்க்கின்றபோது, இன்றைக்கு மத்தியிலே பல அமைச்சர்களாக இருக்கின்ற பெரிய மனிதர்கள் என்று குறிப்பிட்டு எங்களால் சொல்லமுடியும். கடந்த சட்டமன்றக் கூட்டத்தின்போது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வங்கி அதிகாரிகளை அழைத்துப் பேசி, சரியான முடிவைக் காண்பதாகக் கூறியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறு, குறுந்தொழில்களைத் தொடங்குவதற்கு அடிப்படைத் தேவை மூலதனம். சிட்கோவும், என்எஸ்ஐசி. நிறுவனமும் தமிழகத்தில் கடன் வழங்கி வருகின்றன. சிட்கோ வெளியே உள்ள சிறு, குறுந்தொழில்களுக்குக் கடன் கொடுப்பதில்லை. பொதுத் துறை வங்கிகளும் இத்தகைய கடன்களை வழங்குவதில்லை. எனவே, குறுந்தொழில் நிறுவனங்களுக்கு credit guarantee

என்று ஒன்று வந்திருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனங்களிடம் பேசி, சிறு, குறுந்தொழில் முனைவோர்களுக்கு இந்தக் கடனை வாங்கித் தருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-10*

சிறு, குறுந்தொழில்கள் தொடங்குவதற்கு தமிழக அரசு 15 சதவீதம் மானியத்தைக் கடந்த காலத்தில் வழங்கி வந்தது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் அமலுக்கு வந்த பிறகு புதியதாகத் தொடங்கும் சிறு, குறுந்தொழில்களுக்கு 15 சதவீதம் மானியம் கிடைப்பதில்லை. எனவே, ஏற்கெனவே வழங்கி வந்த 15 சதவீத மானியத்தைப் புதியதாகத் தொடங்கும் சிறு, குறுந்தொழில்களுக்கு வழங்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சென்னையை அடுத்த திருமுல்லைவாயிலில் சிறு, குறுந்தொழில் முனையும் மகளிர் நிறுவனங்களுக்கு மொத்த விற்பனை, தவணை முறை விற்பனை, வாடகை முறை விற்பனை என்று மூன்று அம்சங்களாக தொழிற்கூட மனைகள் விற்கப்படுகின்றன. இதை வரவேற்கிறோம். திருமுல்லைவாயிலில் சிட்கோ தொழிற்பேட்டையில் குறுந்தொழில் செய்யும் உறுப்பினர்களுக்குத் தவணை முறையில், ஏற்கெனவே சிட்கோவில் உள்ள ஒரு விதியின்படி, 15 சென்ட்கள் ஒதுக்கீடு செய்து நீண்ட காலத் தவணையில் தருவதுடன், குறைந்தது 50 ஏக்கர் நிலத்தைக் குறுந்தொழில் முனைவோருக்கான 'டாக்ட்' சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று அன்போடு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தொழில் துறையில், தமிழகத்தில் உள்ள மத்திய, மாநில அரசு, தனியார் துறை, பன்னாட்டுத் தொழில் துறையினர் தங்களுக்கு வேண்டிய உதிரிப் பாகங்களை வாங்குகின்றபோது, அன்னிய நாடுகளிலிருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும் வாங்குகிறார்கள். மாறாக, தமிழகத்தில் உள்ள சிறு, குறுந்தொழில் நிறுவனங்களிலிருந்துதான் தங்களுக்குத் தேவையான உதிரி பாகங்களை வாங்க வேண்டும் என்ற சட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் இயற்ற வேண்டும். காரணம், ஆந்திர மாநிலத்திலும் மேற்காணும் சட்டம் உள்ளது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



தேசிய பங்கு முதலீடு—National Equity Fund—திட்டத்தின்கீழ் முதலீட்டுக் கடனாக, மானியத்துடன் ரூ.50 இலட்சம், மத்திய அரசு கடன் வழங்குகிறது. வட்டிச் சுமை அதிகமாக உள்ளதால், சிறு தொழில் முனைவோர் அக்கடனைப் பயன்படுத்த முடியாத நிலை இருக்கின்றது. ஆதலால், ஏற்கெனவே தமிழக அரசு அறிவித்துள்ள வட்டி மானியத்துடனான கடனை வாங்கும்போதே, அரசு மானியம் வழங்கும் என்றால், அந்தத் திட்டத்தின் நோக்கம் நிறைவேறும். மாண்புமிகு சிறு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மானியத்துடன்கூடிய ரூ.50 இலட்சம் கடனைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் முடித்து விடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** சிறு தொழில் நிறுவனங்கள் உலகச் சந்தையில் போட்டியிட தொழில் நுணுக்கத்தை மேம்படுத்த வேண்டும்; I.S.O. 9000 சான்றிதழ் பெற வேண்டும் என்று பரிந்துரைக்கப்படுகிறது. I.S.O. 9000 சான்றிதழ் பெற வேண்டுமென்றால், குறைந்தது ரூ.1,50,000 செலவாகிறது. இதற்காக மத்திய அரசின் மூலம் ரூ.75,000 மானியம் வழங்கப்படுகிறது. மீதமுள்ள தொகையை மாநில அரசு மானியமாக வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் முனைவோர்கள், டான்டியோ, டாக்ட் சங்கங்களின் கோரிக்கையை ஏற்று, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், சிறு குறுந் தொழில்களுக்கு வழங்கி வந்த கடன்களுக்கான வட்டி 25 சதவீதம் என்பதை 15 சதவீதமாகக் குறைத்துள்ளதற்காக சிறு தொழில் முனைவோர் சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

10 H.P. குறுந்தொழில் நிறுவனங்களுக்கு மின் கட்டணச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்று, 1995-ல் இதே ஆட்சி நடந்தபோது ஒரு அரசாணை கொண்டு வரப்பட்டது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக தமிழ்நாடு மின் வாரியம், பல்வேறு தேவையற்ற நிபந்தனைகளைப் போட்டு, அந்தச் சட்டத்தை நிறைவேற்றவிடாமல், சலுகையை அனுபவிக்கவிடாமல் தடுத்து நிறுத்தியது. ஒரு குறுந்தொழில் நிறுவனம், Tiny Enterprises என்று மாவட்டத் தொழில் மையத்தில் பதிவுச் சான்றிதழ் பெற்றிருந்தாலே, மேற்காணும் 10 H.P. வரையிலான மின்

கட்டணச் சலுகை கிடைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

உணவுப் பொருள், ரொட்டி, பிஸ்கெட், குழந்தைகள் விரும்பி உண்கின்ற திண்பண்டங்கள், சோடா, கலர் பானங்கள் போன்ற மேற்காணும் பொருள்கள் வர்த்தக ரீதியான பெயரில் விற்பனை செய்யப்படும்போது அவற்றிற்கு விற்பனை வரி விதிக்கப்படுகிறது. ஏற்கெனவே பன்னாட்டு நிறுவனங்களின் மூலம் நசுங்கிக் கிடக்கின்ற நம்முடைய குடிசைத் தொழில்கள், எச்.எல்.எல்., நெல்கோ போன்ற நிறுவனங்களுடன் போட்டிபோட இயலவில்லை. எனவே, நம்முடைய சிறு தொழில்களைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. எனவே, அதன்மீது சுமத்தியுள்ள 12 சதவீத வரியைப் பரிசீலித்து இரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் சிறு, குறு விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக புதிய மின்னணு ஏல மையம் அமைக்கும் அறிவிப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே அறிவித்தார்கள். ஆனால், இந்த மையம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. உடனடியாக நடவடிக்கை எடுத்திட முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறோம். ஊட்டி டீ இலை சுமார் 24 கோடி ரூபாய்க்கு விற்பனையாகியுள்ளது. இலாபம் முழுமையாக விவசாயிகளுக்குச் சேருவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறோம். தென் மாவட்டங்களில், இந்த ஊட்டி தேயிலைக்கு ஆதரவு பெருகிக்கொண்டு வருவதால், கூடுதலாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தில், (மணியடிக்கப்பெற்றது) முடித்து விடுகிறேன்.

*பிற்பகல் 6-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** முடித்துவிடுகிறேன். தமிழகத்தில் பட்டுப் புழு வளர்ப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படுகின்றது. ஆனால், பட்டுப் புழுவிலிருந்து பட்டு நூல் பிரித்தெடுக்கப்படுவதில் போதிய ஆராய்ச்சியும் கவனமும்



செலுத்தப்படுவதில்லை. அதனால், தமிழகத்தில் வளர்க்கப்படும் பட்டுப் புழுக்கள் எல்லாம் கர்நாடகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேற்காணும் நிலைமையைப் போக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பனைப் பொருள் விற்பனை பெருக, பல திட்டங்களைத் தந்திருக்கிறீர்கள்; வரவேற்கிறோம். ஆனால், அரசு விழாக்களில், கின்லே, பெப்ஸி, கோக் போன்ற பன்னாட்டுத் தயாரிப்புகளை அடுக்கி வைக்கிறீர்கள். இது நியாயம்தானா? மேற்காணும் நடவடிக்கை, பனைப் பொருட்களை விற்பனை செய்ய எந்த அளவுக்குப் பயன்படும் என்று சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ஆனால் அவை முனைப்போடு செயல்படவில்லை. காரணம், அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் உடந்தையாக உள்ளார்கள். கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள போலி உறுப்பினர்களை நீக்கிவிட்டு, உண்மையான உறுப்பினர்களை வைத்து தேர்தல் நடத்தி, உண்மையான பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழ்நாட்டிலே கைத்தறித் துறை முனைப்புடன் செயல்படவில்லை என்ற தவறான கருத்தை இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்று, தமிழகத்திலே, எங்களுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான், கைத்தறித் துறையானது நன்றாக, நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கூட்டுறவுச் சங்கங்களிலே சேர்க்கப்பட்ட அந்த போலி உறுப்பினர்களை நீக்கவில்லை என்று சொன்னார்கள். அம்மா அவர்களுடைய சீரிய ஆலோசனையின்பேரிலே, அன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சேர்க்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட போலி உறுப்பினர்களை நீக்கியிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. கைத்தறிக்கான தனி ஒதுக்கீடு 11 வகையான உற்பத்திகளும், அதையே சேர வேண்டுமென்று சட்டம் இயற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளை, கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து, விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். அதேநேரத்தில், அரசு ஊழியர்களுக்குக் கைத்தறித் துணிகள் வழங்கப்படுகின்றன; அதுபோல, பள்ளிச் சிறார்களுக்கும் அந்தக் கைத்தறித் துணிகளை விற்பனை செய்தால், விற்பனை மிகச் சிறப்பாக இருப்பதற்கு உதவிகரமாக இருக்கும். கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறைந்த வட்டியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன். (குறுக்கீடு) பேசி முடித்து விடுங்கள்.

**திரு. ஏ.எஸ். கண்ணன்:** கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறைந்த வட்டியில், அரசு நிதியுதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேற்காணும் மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த சபாநாயகர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைக் கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம், நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.என். இலட்சுமணன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பயிர்த் தொழிலுக்கு அடுத்தபடியாக இருப்பது நெசவுத் தொழில். நெசவுத் தொழிலாளிகள் இன்றையதினம் மிக்க துயரிலே இருக்கிறார்கள். தமிழக அரசு, ஓரளவு அவர்களுடைய துயரைத் துடைப்பதற்காக பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறது. அதற்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும் அந்த ஏழை நெசவாளர்களுக்குப் பாதுகாப்புத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இராஜாஜி அவர்கள், கைத்தறிக்கு 22 இரகங்களை ஒதுக்கி, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தார்கள். அது மெல்ல மெல்ல குறைந்து, இன்றையதினம் 11 இரகங்களை மட்டுமே கைத்தறி தயாரிக்கலாம் என்கின்ற நிலைக்குத் தாழ்ந்துவிட்டது. இந்த 11 இரகங்களைத் தவிர, வேறு இரகங்களை விசைத் தறியிலே தயாரிக்கலாம்.



இந்தக் கரை போட்ட வேட்டிகள் போன்றவற்றை எல்லாம் கண்டிப்பாகக் கைத்தறிக்கு ஒதுக்கினால், அந்த ஏழை நெசவாளர்களுக்கு நல்லதொரு வேலைவாய்ப்புக் கிடைக்கும். ஆகையினால், இந்த இரகங்களை அமல்படுத்த கண்டிப்பாக ஆவன செய்ய வேண்டும். தமிழக அரசு இதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியிலே, நூல் வினியோகம், உபகரணங்கள் வினியோகம் தரமாக இருக்கின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அது அடிக்கடி கூடுவதே இல்லை. ஆண்டுக்கு ஒருமுறைகூடக் கூடுவதில்லை என்று ஒரு புகார் எழுந்திருக்கிறது. ஆகையினால், அந்தக் குழு அடிக்கடி கூடி, கைத்தறியிலே உற்பத்தியாகின்ற துணிகளை தரமிக்க ஆடைகளாகத் தயாரிப்பதற்கு, தரத்தை உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-20*

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே உற்பத்தி செய்யக்கூடிய துணிகள் எல்லாம் நல்ல தரம் வாய்ந்த துணிகளாகவும், அதேபோல மக்களின் இரசனைக்கு ஏற்பவும் நீங்கள் உருவாக்க வேண்டுமென்று எங்களுக்குக் கட்டளை பிறப்பித்து, NIFT மூலமாக சுமார் 150 புதிய வகை டிசைன்களை நாங்கள் உருவாக்கி இன்று மக்களின் எண்ணங்களை நிறைவேற்றிக் கொண்டு இருக்கக்கூடிய அரசாக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு விளங்கிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. கைத்தறி தரம் உயர்ந்தால் தானாக விற்பனையாகும் என்பது உண்மை, நிதர்சனம். கூட்டுறவு சொசைட்டியில் உற்பத்தியாகிற கைத்தறி வேஷ்டி, 8 முழ வேஷ்டி 160 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதை யாரும் ஜாஸ்தி வாங்குவதில்லை தரம் சரியாக இல்லை என்று. ஆனால், அதையே மதுரையிலே தயாரிக்கின்ற சாரதி வேஷ்டிகள், கைத்தறி வேஷ்டிகள்

[திரு. கே.என். இலட்சுமணன்]

400-ல் இருந்து 600 ரூபாய்க்கு விற்கிறார்கள். அதற்கு டிமான்ட் இருக்கிறது. 100 வேஷ்டி கேட்டால், ஒரு வாரம், ஒரு மாதம் டைம் கொடு என்று கேட்கிறார்கள். ஆகையினால், தரம் இருந்தால் கண்டிப்பாக மக்கள் விரும்பி வாங்குகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு கூறிய கருத்தை ஓர் ஆண்டுக்கு முன்பாகவே தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்களுக்கு உத்தரவாகப் பிறப்பித்தார்கள். இங்கு மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல, மதுரையிலே தயாரிக்கக்கூடிய சாரதி வேஷ்டி என்பது 100 ஆம் நம்பர் நூலிலே உருவாக்கப்படுகிறது. அந்த வேஷ்டியை சுமார் 490 ரூபாய்க்கு இன்றைக்கு கடைகளில் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய அறிவுரையை ஏற்று, மதுரையிலே இருக்கக்கூடிய அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அதேபோன்ற வேஷ்டிகளை 325 ரூபாய்க்கு இப்போது நாங்கள் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்; இங்கே எங்களுடைய மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம்கூட அப்படிப்பட்ட வேஷ்டிகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்; அதுமட்டுமல்ல, அப்படிப்பட்ட வேஷ்டிகளை நீங்களும் வாங்கிக் கட்ட வேண்டுமென்ற ஒரு நோக்கத்திலே கோ-ஆப்டெக்ஸ் துறையின் மூலமாக உங்களுக்கு நாங்கள் கடிதமும் எழுதி இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. இலட்சுமணனையா நம்முடைய கட்சிக் கரை போட்ட வேஷ்டியைக் கட்டச் சொல்வது? (சிரிப்பு)

**திரு. கே.என். இலட்சுமணன்:** நான் இப்போது கட்டுகிற வேஷ்டி எல்லாம் மலிவு விலை 30 ரூபாய் வேஷ்டியைத்தான்; ரொம்ப அருமையாக இருக்கிறது. அனைவரும் அதையே வாங்கி உடுத்த வேண்டும். அதிலேகூட 2 கலர் கரை போட்ட வேஷ்டி



[திரு. கே.என். இலட்சுமணன்]

மலிவு விலை வேஷ்டி தயாரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கு மூலப் பொருட்கள் சொசைட்டி மூலம் விநியோகம் செய்து தரப்படுகிறது. அதன் தரம் சரியாக இருக்கிறதா என்பதைக் கண்காணிக்க குழுவும் இருக்கின்றது. அது சரியாகச் செயல்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசாங்க ஊழியர்கள், மதிய உணவு பெறுகின்ற குழந்தைகள், இவர்கள் கைத்தறி ஆடைகளை அதிகமாகப் பயன்படுத்துகின்ற வகையிலே திட்டத்தைத் தீட்டி, எந்த இரகம் எல்லாம் வேண்டுமென்று முன்கூட்டியே கைத்தறி சொசைட்டிகளுக்கு சொன்னால், அந்த இரகம், அந்தத் தரம் உள்ள ஆடைகளைத் தயாரித்துக் கொடுத்தால் விற்பனை அதிகமாகும்; நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறி நூல் வாங்கப்படுகின்றது. அதற்கு மத்திய அரசு 10 சதவீதம் கலால் வரி போட்டு அது இன்றையதினம் அமலிலே இருக்கின்றது. இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய டெக்ஸ்டைல்ஸ் மினிஸ்டர் திரு காசிராம் ராணா அவர்களைப் பார்த்து, இந்தமாதிரி 10 சதவீதம் கலால் வரி சிட்டா நூலுக்குப் போட்டு இருக்கின்றீர்கள். அந்த சிட்டா நூல்களைத்தான் கைத்தறி நெசவாளர்கள் வாங்கிப் பயன்படுத்துகின்றார்கள். ஏற்கெனவே அவர்கள் வேலைவாய்ப்பை இழந்திருக்கின்றார்கள், அவர்களுடைய முதுகிலே, வயிற்றிலே மீண்டும் அடிக்கலாமா என்றுகூட நான் கேட்டேன். அப்போது ஒரு புது விளக்கத்தை அவர்கள் கொடுத்தார்கள். அதைச் சரி என்று நான் ஒத்துக்கொள்ளவில்லை. ஆனால் தகவலுக்காகச் சொன்னால் நல்லது என்பதால் சொல்கிறேன்.

பிற்பகல் 6-25

கூட்டுறவு ஸ்பின்னிங் நூற்பாலையிலே இருந்தும், இதர நூற்பாலையில் இருந்தும் இரண்டு இரகங்களாகத் தயாரிக்கிறார்கள், சிட்டா நூல், கோன் நூல். அப்போது அந்தக் கோன் நூலைத் தயாரிக்கின்ற ஆலை முதலாளிகளுக்கு இந்த சிட்டா நூல்கள் இருக்கின்ற விலைக்குக் கொடுப்பது இல்லை. அதை வேறு விலைக்கு, அதிகமான விலைக்கு விற்கிறார்கள். ஆகையினால் அவர்களுடைய கோன் உற்பத்தி அதிக விலை அடக்கம் ஆகிறது. இப்போது என்ன செய்கிறார்கள் என்றால், சிட்டா நூலுக்கு அத்தகைய வரி இல்லாத காரணத்தாலே ஆலை

முதலாளிகள் எல்லாம் சிட்டா நூலை வாங்கிக் கொண்டு கோனாக அதைச் சுற்றி அதிக விலைக்கு விற்கின்றார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்காகத்தான் நாங்கள் அப்படிப் போட்டோம் என்றார். நெசவாளர்கள் பயன்படுத்துகின்ற நூலுக்கே அந்த 10 சதவீதம் கழிவைக் கொடுங்கள். கூட்டுறவு சொசைட்டியிலிருந்து, கோ-ஆப்டெக்ஸிலிருந்து அல்லது ஹேண்ட்லூம் ஹவுஸிலிருந்து கொடுத்தால் அப்போது அந்த 10 சதவீதம் கழிவை அவர்கள் மூலமாக நீங்கள் கொடுங்கள் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். 'கவனிக்கிறேன்' என்று சொல்லி இருக்கிறார்கள். கண்டிப்பாக அதற்காக நான் போராடுவேன் என்று இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு அமைப்புகளுக்கு குறைந்தபட்ச இடத்தை ஒதுக்கி சிறு சிறு குடில்கள்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'போராடுவேன்' என்ற சொல்லை மாண்புமிகு ஜி.கே. மணி அவர்கள்கூடப் பயன்படுத்தவில்லை. 'போராடுவேன்' என்று பி.ஜே.பி. உறுப்பினராகிய திரு. இலட்சுமணன் சொன்னதற்காக அவரை நான் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**திரு. கே.என். இலட்சுமணன்:** அம்மா அவர்களுக்கு மிக்க மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்களுடைய துயர் துடைக்கும் அம்மாவாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளங்குவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாடுபடும் கூட்டுறவு அமைப்பு பணியாளர்களுக்கு ஓர் அமைப்பை ஏற்படுத்தி அவர்களது வாழ்வும் சீராக இருக்குமாறு அரசு செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்றுமதி இரகங்கள் என்னென்ன என்று கண்டுபிடித்து, அந்த இரகங்களைத் தயார் செய்கின்ற அறிவுரையை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கினால், மிக அதிகமாக ஏற்றுமதி செய்கின்ற துணிகள் உற்பத்தியாகி, வெளிநாடுகளுக்கு அந்தத் துணிகள் ஏற்றுமதியாகி நெசவாளர்களுடைய துயர் துடைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுத்து



வரும் தள்ளுபடி மானியத்தைத் தொடர்ந்து வழங்கிட வேண்டுமென்றும், வட்டி மானியத் தொகையைத் தொடர்ந்து வழங்கிட வேண்டுமென்றும்—இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் அதைத் தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்று—கேட்டுக்கொள்கிறேன். வெளிநாட்டில் கைத்தறிக்கு நல்ல வரவேற்பு உள்ளது. அதை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பினை அளித்த மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**•மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் என்னிடம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுடைய ஒட்டுமொத்த இழப்பு என்ன என்று கேட்டார்கள். தற்போது, Director of Sugar அவர்களிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில் 'Cumulative losses of Co-operative and Public Sector sugar mills upto 2002-2003 is Rs.1,085 Crores 49 lakhs and it is likely to go upto Rs.1,200 Crores as on date' என்ற தகவலைத் தெரிவித்திருக்கிறார் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை ஆளும் தகுதி மிக்க தலைமையே! இருண்ட தமிழகத்திற்கு ஒளி தந்த தாயே! இடர்கோடி வந்ததைத் தவிர்த்து பகை முடித்த பைந்தமிழே! மக்கள் நலன் காப்பதில் யாருடனும் சமரசம் செய்து கொள்ளாத, மக்கள் ஆட்சியின் தத்துவமே, ஏழு தலைமுறைக்குச் சொத்து சேர்த்தும், ஆசை அடங்காதவர் மத்தியில் மாதம் ஒரு கோவிலுக்குத் தன் ஊதியத்தைக் கொடுக்கும் வள்ளலே! படைக்கலம் புகுந்து, பகலவனைப் பந்தாடி, சூரியனைச் சுட்டு வீழ்த்தும் தமிழ்மண் தந்திட்ட எங்கள் தமிழ்த் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சி என்ற சொல்லுக்குப் புத்தொளி தந்த உங்கள் முன் சிலர், தொல்காப்பியப் பூங்காவிலே தொலைந்து போனார்கள். அம்மா, நீங்கள் நலத் திட்டம் எனும் நல் காப்பியமாகி மக்கள் மனதிலே மறையா கல் வெட்டாவீர்கள் தாயே! நியூட்டன் தந்த மூன்றாம் விதியை இந்த அவையிலே முன் நின்று நடத்துகின்ற எங்கள் தாயே, தமிழே, தங்களை வணங்கி என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

[திரு. வி. சோமசுந்தரம்] [2003 மே 7

*பிற்பகல் 6-30*

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்டுபிடித்தது பருத்திப் பயிர் என்ற வகையில் மனித சமூகம் உடை உடுத்த காரணமாய் இருந்தது. இந்திய நெசவாளர்கள்தான் உலகிலேயே முதன்முதலாக மொகஞ்சதாரோவில்தான் பெண்கள் சேலை அணிந்தார்கள் என சரித்திரம் கூறுகிறது. அதுபோல சீக்கிய மத குருவான குருநானக்கின் வழிகாட்டியாக அமைந்தவர் கபீர்தாசர் ஆவார். கபீர்தாசர் ஒரு தறி நெசவாளி ஆவார். அதுபோல துங்கபத்திரா நதிக் கரையிலே உள்ள காம்புளி என்னும் நகரத்திலே பிறந்தவர், நேச நாயனார் ஆவார். சைவத் தமிழ்பாடும் 63 நாயன்மார்களிலே ஒருவரான இவரும் தறி நெசவாளர் ஆவார். இவர் தனது தறியிலே சிவனடியார்களுக்கு தினமும் உடுத்த ஆடை, நெய்து, தவறாது தானம் வழங்கும் பழக்கம் கொண்டவர் ஆவார். நம்முடைய தெய்வப் புலவர், தெள்ளு தமிழ் செப்புலமையோடு, குலத் தொழிலான தறியிலே சேலையும் நெய்தார். அந்த நெசவுத் தொழில் செய்தபோது

புவில் அயனும் புரந்தானும் பூவுலகைத்
தாவி அளந்தோனும், தாமிருக்க — நாவில்
இழை நச்சி நூல் நெருடும் ஏழையறிவேனோ
குழைநக்கும் பிஞ்ஞகன்தன் கூத்து.

என்பது வெண்பா. இப்பாடலின் மூலமாகத் திருவள்ளுவர் நெசவாளர் என்பது தெளிவாகிறது. அதனால்தான் திருக்குறள் மூலம் இந்த உலகத்தையே நெய்து விட்டார்கள்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

அரசியல் சாணக்கியர் என்று புகழ் பெற்றவர் கௌடில்யர் ஆவார். இவர் இயற்றியது பிரபலமான அர்த்த சாஸ்திரம் என்னும் அரசியல் நூல் ஆகும். இந்த நூலினுடைய சாரம் அரசனின் நீதி வழுவா நிலைமையைக் குறித்து விரிவாகச் சொல்வது ஆகும். கௌடில்யர் நெசவுக் கலைத் தொழில் பணியினை உயர்வாக மதித்தவர். இது மட்டுமின்றி, தறித் தொழிலுக்கு தனி ஒரு அமைச்சரையே அந்தக் காலத்திலேயே நியமனம் செய்வது என்பது குறிப்பிலே உள்ளது. அந்த வரலாற்றின் தொடர்ச்சியாக இன்று நெசவுத் தொழிலையும்,



2003 மே 7] [திரு. வி. சோமசுந்தரம்]

நெசவாளர்களுடைய துயர்களைப் போக்கிட நல்ல திட்டங்களையும் கொண்டு வந்தவர் அரசியல் சாணக்கியர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி) கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அதன்மூலம் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தத் தேவையான பல்வேறு சீரிய திட்டங்களைத் தீட்டி, முனைந்து செயல்படுத்தி வருவதிலே முதன்மையாக அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த மாமன்றத்திலே எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போது, முதன்மை மாநிலம் ஆக்குவது என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று பேசினார். அவர்கள் ஆட்சியை விட்டு இறங்கும்போது கஜானாவைக் காலியாக்கிவிட்டு பல்வேறு துறைகளிலே கடன்களை சுமத்திவிட்டு நாள் ஒன்றுக்கு 11 கோடி ரூபாய் வட்டி கட்டக்கூடிய நிலையிலே தமிழகத்தை விட்டுச் சென்றார்கள். கிராமத்திலே ஓட்டை உடைசல் ஈயம் இரும்பு பித்தளைக்கு பேரீச்சம் பழம் என்று சொல்வது போல, தமிழகத்தின் கஜானாவை ஓட்டையாக்கி, காலியாக்கி, உடைசலாக்கி, நசுக்கி, நொறுக்கிவிட்டுச் சென்றனர். இந்த நிலையில்கூட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உருவாக்குவேன் என அறிவித்து, செயல்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அம்மாவினுடைய ஆணைக்கிணங்க தமிழகத்தினுடைய கைத்தறி மற்றும் துணிநூல் தொழில் பல்வேறு இனங்களிலே, இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதில் பெருமையடைகின்றேன்.

*பிற்பகல் 6-35*

இந்தியாவிலே உற்பத்தியாகும் 310.11 கோடி கிலோ நூலில், 113.95 கோடி கிலோ அளவு நூல் தமிழகத்திலே உற்பத்தி செய்யப்பட்டு, இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் நூலின் மதிப்பு ரூ.6,320.83 கோடியாகும். இதில் தமிழகத்திலிருந்து சுமார் ரூ.2,500 கோடிக்கு நூல் ஏற்றுமதி செய்யப்பட்டு, இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பின்னலாடை ரூ.9,500 கோடியில் தமிழ்நாட்டிலிருந்து மட்டும் ரூ.4,500 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, தமிழகம் முதல் இடம் வகிக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நபார்டு வங்கியினால் இந்தியா முழுவதும் 2002-2003 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட அந்த நிதி உதவியிலே ரூ.608 கோடியிலே, தமிழகம் மட்டும் ரூ.411 கோடி அளவுக்கு நிதி உதவி பெற்று முதலிடம் வகிக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து மாநில அளவிலான சங்கங்களில் கோ-ஆப்டெக்ஸ் ரூ.244 கோடி அளவுக்கு விற்பனை செய்து இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, கடந்த ஆட்சிக் காலத்திலே கைத்தறித் தொழில் தமிழ்நாட்டில் மோசமான நிலையில் இருந்ததையும், கூட்டுறவு நூற்பாலைகள் மிகவும் நலிவுற்றதையும் 2001-2002 ஆம் ஆண்டிற்கான மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையிலே சுட்டிக்காட்டி, இதற்கான காரணங்களை ஆராய்ந்து, கைத்தறித் தொழிலையும், அதனைச் சார்ந்த நெசவாளர்களினுடைய வாழ்க்கைத் தரத்தினையும் மேம்படுத்தத் தேவையான திட்டங்களை வகுத்து, அதன் தொடர்ச்சியாக அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. கடந்த ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் கைத்தறிக்கென ரூ. 88.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கைத்தறி நெசவாளர்கள் மீது கொண்ட அக்கறையின் காரணமாக அந்தத் தொகையை ரூ.194.12 கோடியாக உயர்த்தி வழங்கி இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்களே, அந்தப் பழமொழிக்கேற்ப, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெசவாளர்களின்மீது வைத்துள்ள அன்புக்கு இதுவே சான்றாகும்.



பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் 1998 ஆம் ஆண்டு முதல், அதாவது, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து வழங்கப்படாமல் நிலுவையாக இருந்த வட்டி மானியத் தொகை ரூ.27.50 கோடியினை வழங்க அம்மா அவர்கள் கடந்த ஆகஸ்ட் 2002-ல் ஆணையிட்டதைத் தொடர்ந்து, வட்டி மானியத் தொகை ரூ.27.50 கோடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது. இதனால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களினுடைய நிதி ஆதாரம் உயர்ந்துள்ளது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இலவச வேட்டி, சேலை உற்பத்தித் திட்டத்தில் ஈடுபட்டு வந்த 25,000 நெசவாளர்களினுடைய துயர் துடைக்கவும், அவர்களுடைய நலனைக் கருத்திலே கொண்டும், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெசவாளர்களுக்குத் தலா 20 கிலோ வீதம் மூன்று முறை இலவச அரிசி வழங்க உத்தரவிட்டார்கள். அதன்படி ரூ.46.80 இலட்சம் மதிப்பிற்கு சுமார் 13,37,400 கிலோ அரிசி இலவசமாக நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

*பிற்பகல் 6-40*

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருந்த 18 இலட்சம் கைத்தறி சேலைகளையும், 9 இலட்சம் கைத்தறி வேட்டிகளையும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய இதய தெய்வம் அம்மா அவர்கள் ரூ.25 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தந்தார்கள். கைத்தறித் துறையின் சரித்திரத்திலே முதன்முறையாக 25 கோடியினை ஒரே காசோலையாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒருவர்தான் இதுவரை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2000-2001-லே மத்திய அரசிடமிருந்து பல்வேறு நலத் திட்டங்களுக்கு ரூ. 13 கோடி மட்டுமே நிதியுதவி பெற்றார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியினாலே, 2002-2003 ஆம் ஆண்டில் பல்வேறு நலத் திட்டங்களுக்காக 32 கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து அதிகமாக நிதியுதவி பெறப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

காவிரி நதிநீரின்றி வறட்சியால் வாடிய காவிரி டெல்டா பகுதி ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்காக தீபாவளிப் பரிசு வழங்கும் போதுகூட, நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு ரூ.1.42 கோடி மதிப்புள்ள துணிப் பைகளுக்குத் தேவையான துணிகளை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கொள்முதல் செய்ய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச வேட்டி சேலை திட்டத்தின்கீழ் வேட்டி சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த கைத்தறி நெசவாளர்களுக்கு வாழ்வளித்து, மாற்று வேலைவாய்ப்பு வழங்கும் முகத்தான், 'மலிவு விலை வேட்டி சேலைத் திட்டம்' என்ற ஒரு புதிய திட்டத்தினை 6-8-2002 அன்று சென்னையில் அறிமுகப்படுத்தி, தனது பொற்கரங்களால் விற்பனையைத் தொடங்கிவைத்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவின்படி இலவச வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் தேங்கியிருந்த 63 இலட்சம் சேலைகளும், 54 இலட்சம் வேட்டிகளும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டு அவை நியாய விலைக் கடைகள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக சேலை ஒன்று ரூ.40/-க்கும், வேட்டி ஒன்று ரூ.30/-க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அரசு இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.72.41 கோடியினை வழங்கியுள்ளது.

மலிவு விலை வேட்டி சேலைத் திட்டத்தினை 2003-2004 ஆம் ஆண்டுக்கும் தொடர்ந்து செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக 2003-2004 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.27.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 30-4-2003 தேதி வரையில் 55.43 இலட்சம் சேலைகள் மற்றும் 51.32 இலட்சம் வேட்டிகள் நியாய விலைக் கடைகள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக ரூ.37.57 கோடி மதிப்புக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மலிவு விலை வேட்டி சேலைகள் தரத்தினை உயர்த்த அம்மா அவர்களின் அறிவுரைக்கிணங்க, பருத்தி நூலுடன் பாலியஸ்டர்



இழை கலந்து உற்பத்தி செய்வதற்கு, சேலைகளில் 150 புதிய வடிவமைப்புகளையும், வேட்டியில் 11 புதிய வடிவமைப்புகளையும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தி சேலைகள் மற்றும் வேட்டிகள் பாலியஸ்டர் இழை கலந்து தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதைத் தவிர பருத்தி பாலியஸ்டர் கலந்த 'சல்வார் கமீஸ்' உற்பத்தியையும் சங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. கடந்த தி.மு.க. ஆட்சியில் நிருவாகச் சீர்கேட்டினால் கைத்தறித் துணிகள் பெருமளவில் தேக்கமடைந்தன. அதனை விற்பனை செய்ய பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இந்தச் சரக்குத் தேக்கத்தினைக் குறைப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு பல வழிகளில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இருப்புத் தேக்கத்தைக் குறைக்க பண்டிகைக் காலங்களில் மாவட்டம் தோறும் கண்காட்சிகள் மற்றும் சிறப்பு விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதுமட்டுமின்றி பெண்கள் கல்லூரிகளிலும், வெளி மாநிலங்களில் கண்காட்சிகள் மூலமும் சிறப்பு விற்பனை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலமாக ரூபாய் 557 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. மேலும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஓராண்டு மற்றும் ஈராண்டுகளுக்கு மேற்பட்ட பட்டு இரகங்களுக்கு முறையே 45 விழுக்காடு மற்றும் 55 விழுக்காடு சிறப்புக் கழிவும், பருத்தி இரகங்களுக்கு முறையே 30 விழுக்காடு மற்றும் 45 விழுக்காடு சிறப்புக் கழிவும் வழங்கி விற்பனை செய்ய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அரசு அனுமதி வழங்கியது. இச்சிறப்புக் கழிவின் மூலமாக 54.02 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டுத் துணிகளும், 6.58 கோடி ரூபாய் மதிப்புள்ள பருத்தித் துணிகளும், 31-3-2003 வரை விற்பனையாகி, சரக்குத் தேக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது.

பிற்பகல் 6-45

அதுமட்டுமல்ல. முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே இந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பட்டுச் சேலைகள் இருப்பின் மதிப்பு ரூபாய் 191 கோடியாக இருந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய திட்டங்களினாலே, பல்வேறு நடவடிக்கைகளினாலே இன்று அந்தச் சரக்கின் தேக்கம் ஒன்பது கோடியாகக் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, பருத்தி கூட்டுறவுச் சங்கங்களிலே சுமார் 184 கோடி ரூபாய் சரக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தேக்கத்திலே இருந்தது. அதை இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்று கோடியாகக் குறைத்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சரக்குத் தேக்கத்தினைக் குறைக்க பருத்தி இரகங்களுக்கும் அதுபோன்று 20 விழுக்காடு தள்ளுபடி மானியத்துடன் 15-9-2002 முதல் 31-1-2003 வரை கூடுதலாக 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்கி விற்பனை செய்ய அரசு அனுமதி வழங்கியது. இச்சிறப்புத் தள்ளுபடியின் மூலமாக 116.28 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். அம்மா அவர்களுடைய தீவிர நடவடிக்கைகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களிலே சரக்கு இருப்பு குறைந்தது. மீதமுள்ள சரக்கில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட சரக்குகளை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு அனுமதித்துள்ளது.

இந்த அரசு, துணித் தேக்கத்தினைக் குறைக்க மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் ரூபாய் 442.34 கோடியாக இருந்த சரக்கு இருப்பு, 1-4-2003-ல் ரூபாய் 259.54 கோடியாகக் குறைந்துள்ளது. இது இந்த அரசின் மிகப் பெரிய சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

கைத்தறித் துணி விற்பனையினை அதிகரிக்க மத்திய அரசின் நிதியுதவியுடன் பல்வேறு மாவட்டங்களிலே மாவட்ட அளவிலான கண்காட்சிகளை 2003-2004 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூபாய் 75 கோடி அளவிற்கு தள்ளுபடி மானியத் தொகை பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் அம்மா அவர்களுடைய அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை எந்த அரசாலும் கொடுக்கப்படாத வகையில் தள்ளுபடி மானியத் தொகை இந்த ஆண்டு 83 கோடி ரூபாயை இதய தெய்வம் அம்மா அவர்கள் இந்த நெசவாளர் மக்களுக்காகக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 1-8-2002 அன்று அறிவித்ததற்கிணங்க, நெசவாளர்களுக்கு குடும்ப ஓய்வூதியம் மற்றும் முதியோர் ஓய்வூதியம் வழங்குவதற்காக அரசு ரூ.2.50 கோடியினை விடுவித்துள்ளது.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளித்து, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியிலே ஈடுபடுத்தி வருகிறது. தற்போது 374 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே 23 ஆயிரத்திற்கு மேற்பட்ட தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியிலே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் நெசவாளர்கள் அதிகக் கூலி பெறுகின்றனர். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1999-2000 ஆம் ஆண்டில் இந்த ஏற்றுமதியானது ரூபாய் 25 கோடியாக இருந்தது. இப்போது டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியினாலே, அவருடைய நல்ல ஆலோசனையின்படி 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 146 கோடியாக அதிகரித்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 6-50

அதுமட்டுமல்ல, 2002-2003 ஆம் ஆண்டில் அது ரூபாய் 179 கோடியாக உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் துறையின் மூலமாக நடப்பாண்டில் கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை ரூபாய் 200 கோடியாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு மையம் மூலம் வடிவமைப்பு மற்றும் ஆடை அலங்காரத் தொழில் நுட்ப சிறப்புப் பயிற்சி அளிக்க 1,061 நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சிக்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூபாய் 13.83 இலட்சம் விடுவித்துள்ளது.

மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுய வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் தையல் மற்றும் இதர வேலைவாய்ப்புக்கான பயிற்சி அளிக்க 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூபாய் 20 இலட்சம்

தொகையினை விடுவித்துள்ளது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஏப்ரல் 2003 முதல் மேற்படி பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, இப்பயிற்சி 3 மாத காலங்களுக்குத் தொடர்ந்து நடைபெறும். இது தவிர கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் 1,000 மகளிர் நெசவாளர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்திலே உள்ள ஜக்கம்பட்டி மற்றும் டி.சுக்லாபுரம் பகுதிகளிலும், திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள சின்னாளம்பட்டி பகுதியிலும் 3 அனைத்து மகளிர் நெசவு உபத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் மார்ச் 2003-லிருந்து செயல்படத் துவங்கியுள்ளன. 2,000 சாதாரண விசைத்தறிகளை தறி ஒன்றுக்கு ரூபாய் 10 ஆயிரம் மதிப்பில் நவீனமயமாக்குவதற்கு விசைத் தறி பதிவு நிதியிலிருந்து ரூபாய் 1 கோடி செலவு செய்ய அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த 10 ஆயிரம் ரூபாயில் ரூபாய் 5 ஆயிரம் அரசு மானியமாக வழங்க்ப்படுகிறது.

கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகளைச் சீரமைக்க தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தி இருக்கிறது. தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் 4,773 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் தன் விருப்ப ஓய்விலே மொத்தம் ரூபாய் 45.02 கோடி பணப் பயனுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர். தன் விருப்ப ஓய்வுத் திட்டத்தினை மேலும் 2,543 தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்குச் செயல்படுத்த அரசு ரூபாய் 23.78 கோடியினை ஒப்பளிப்புச் செய்து, முதற்கட்டமாக ரூபாய் 2 கோடியினை 2002-2003 ஆம் ஆண்டில் விடுவித்துள்ளது. மேலும் கூட்டுறவு நூற்பாலைகளில் உள்ள தொழிலாளர்களுக்கு தன் விருப்ப ஓய்வுத் திட்டத்திற்காக ரூபாய் 82.48 கோடிக்கான கோரிக்கைகள் அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

பள்ளிச் சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தை நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்த மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். துணி இரகங்களை பாலியஸ்டர் இழை கலந்து உற்பத்தி செய்யவும் ஆணையிட்டுள்ளார்கள். இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் 5 ஆயிரம் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவும், நுகர்வோரின் மாறி வரும் இரசனைக்கேற்பவும் நெசவாளர் சேவை மையம், தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் தேசிய ஆடை அலங்காரத்



தொழில்நுட்ப நிறுவனம் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் புதிய வடிவமைப்புகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் மகளிரிடையே சேலை அணியும் பழக்கம் மாறி வருவதால் புதிய வடிவமைப்புகளுடன்கூடிய சல்வார் கமீஸ் இரகத் துணி வகைகளை உற்பத்தி செய்வதற்கு அதிக அளவு தறிகளை மாற்றம் செய்து உற்பத்தி துவக்கப்பட்டுள்ளது.

*பிற்பகல் 6-55*

தமிழகத்திலே 31-3-2003 ஆம் தேதி நிலவரப்படி 1,313 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 2.16 இலட்சம் தறியுடன் செயல்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.415.71 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்து, ரூ.571.67 கோடி மதிப்பிற்கு கைத்தறித் துணிகளை விற்பனை செய்துள்ளன. இது சென்ற ஆண்டு விற்பனையைவிட 16 விழுக்காடு கூடுதலாகும். முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்திலே தமிழகத்திலேயிருந்த கூட்டுறவுச் சங்கங்களிலே 320 கூட்டுறவுச் சங்கங்கள்தான் இலாபத்திலே இயங்கி வந்தன. ஆனால், இன்று எங்களுடைய தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியின் திறமையினாலே, இப்போது தமிழகத்திலே 2002-2003 ஆம் ஆண்டிலே 487 ஆக அது உயர்ந்துள்ளது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், வரும் ஆண்டுகளிலும் அனைத்து நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களும் இலாபத்திலே செயல்பட இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அறிவுரையின் மூலமாக அனைத்து நடவடிக்கைகளும் இந்த அரசு எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு நெசவுத் தொழிலில் பெரும் பிரச்சினைகள் ஏற்பட்டபோது, நெசவாளர்கள் துயரைத் துடைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பல்வேறு நிவாரண நடவடிக்கைகளை அறிவித்ததன் காரணமாக இன்றைய தினம் நெசவாளர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வாழ்ந்து வருகிறார்கள். நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் கடந்த ஆட்சிக் காலத்திலே சேர்க்கப்பட்ட 1,07,437 போலி உறுப்பினர்கள் நீக்கப்பட்டுள்ளனர். போலி உறுப்பினர்களை நீக்கியதன் மூலம் உண்மையான நெசவாளர்களுக்கு நலத் திட்டங்களின்

பயன்கள் முறையாகச் சென்றடைகின்றன. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 4 இலட்சம் விசைத்தறிகளில் 3.20 இலட்சம் விசைத்தறிகள் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகளாகும். இதில் 22,918 விசைத்தறிகள், 137 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ளன.

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 2002-2003ஆம் ஆண்டில் ரூ.11.18 கோடி மதிப்புள்ள விசைத்தறி துணிகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.14.24 கோடி மதிப்புள்ள விசைத்தறித் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கையாலும் நெசவாள மக்கள் இன்புற்று இருக்கக்கூடிய ஒரு நிலை இன்று தமிழகத்திலே நிலவிக் கொண்டிருக்கிறது. இந்த ஏழை நெசவாளர் பயன்படுத்தும் நூலின் மீதும், உற்பத்தி செய்யப்படும் துணியின்மீதும் விதிக்கப்பட்டுள்ள வரியினால் நெசவாளர்கள் படும் அல்லலைப் பற்றிக் கவலைப்படாத திரு. கருணாநிதி தன்னுடைய நூலை, விற்பனை செய்வதிலேயே குறியாக உள்ளார் என்பதை இந்த அவையே அறியும். மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தி.மு.க. அமைச்சர்கள் பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, நெசவாளர்களுடைய பிரச்சினைகளை அங்கே எடுத்துச் சொல்லத் தவறிவிட்டனர். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் நெசவாளர்களுடைய பிரச்சினைகளுக்கு அன்றும் சரி, இன்றும் சரி என்றும் உதவி செய்யக்கூடியவர்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் ஒட்டுமொத்தமாக குவிந்த நட்டம் 31-3-2003 ஆம் தேதி நிலவரப்படி ரூ.445.88 கோடியாகும். மேற்படி கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு, இவ்வாலைகளுக்கு மீண்டும் புத்துயிரூட்டி தொடர்ந்து இலாபத்தில் இயக்குவதற்கு வாய்ப்பில்லை என்பதால் ஆலைகளை மூடிவிட பரிந்துரை செய்துள்ளது. 31-12-2002 ஆம் ஆண்டு நடைபெற்ற அரசு மூலதனங்களைத் திரும்பத் பெறுதல் தொடர்பான கூட்டத்தில் இது குறித்து ஆலோசிக்கப்பட்டதில் இவ்வாலைகளுக்கு மீண்டும் புத்துயிரூட்ட பெருமளவு நிதி தேவைப்படும் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது. இது இந்த அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த ஆண்டில் ரூ.108.97 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து ரூ.244.66 கோடி மதிப்புள்ள துணிகளை விற்பனை



செய்துள்ளது. இது கடந்த ஆண்டின் விற்பனையவிட ரூ.55 கோடி ரூபாய் அளவிற்கு அதிகமாகும்.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழிலின் பெருமை வாய்ந்த கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உறுதுணையாக இருக்கும் பொருட்டு, சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, மைய அரசும், மாநில அரசும் சமமாகப் பகிர்ந்துகொள்ளும் வகையில் ரூ.50 கோடி மதிப்பீட்டிலான திட்டத்தினைச் செயல்படுத்தத் தேவையான திட்ட அறிக்கையை உருவாக்கித்தர சென்னையிலுள்ள தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம் NIFT கோரப்பட்டுள்ளது.

*பிற்பகல் 7-00*

தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் ISO 9002 சான்று பெற்ற நிறுவனம் ஆகும். கடந்த ஆண்டில் 48,751 மார்க்குகள் ஜரிகையினை உற்பத்தி செய்து ரூ.15 கோடி மதிப்பிற்கு விற்பனையை மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனம் 1982 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி அரசுக்கு ஈவுத் தொகையைச் செலுத்தி வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டில் ஈவுத் தொகையாக ரூ.17.20 இலட்சம் அரசுக்கு வழங்கியுள்ளது. இந்நிறுவனம் நடப்பு ஆண்டில் 72,000 மார்க்குகள் ஜரிகையை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு தொழில் நுட்ப அபிவிருத்திக் கழகத்தின் நிதியுதவியுடன் மேலும் 5 சிறப்பு நுண்ணிய வெள்ளி இழுவை இயந்திரங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை கடந்த ஆண்டில் ரூ.855.20 இலட்சம் அளவிற்கு வியாபாரம் மேற்கொண்டு தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி

உலகில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்து வாழும். குடிமக்கள், அரசன் செங்கோல் முறையை எதிர்பார்த்து வாழ்வார்கள் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப தமிழ்நாட்டில் வாழும் நெசவாளர் மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், என்னென்ன திட்டங்களைத் தரப் போகிறார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நல்ல வேளையிலே தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய புதிய அறிவிப்புகளை இப்பேரவையில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

அறிவிப்புகள்—(1) வேகமாக வளர்ச்சியடைந்து வரும் துணிநூல் தொழிலை மேம்படுத்திடவும். சீரிய முறையில் வழிகாட்டிடவும், அரசு ஒரு துணி நூல் தொழில்நுட்ப வல்லுநர் குழுவை (Textile Mission) அமைக்கும். இத்தொழிலை எதிர்நோக்கியுள்ள அனைத்துப் பிரச்சினைகளையும், தொழிலுக்கு புத்துயிர் ஊட்டத் தேவையான திட்டங்களையும், இதன்மூலம் வல்லுநர் குழு பரிசீலனை செய்யும். தமிழ்நாட்டின் துணித் தொழில் வளர்ச்சிக்கு புதிய தூண்டுதலாகப் பருத்தி உற்பத்தியிலிருந்து தொடங்கி, துணி பதனிடுதல் வரை முக்கியத்துவம் கொடுத்து, தொழில் நுட்ப மேம்பாடு குறித்த முயற்சிகள் எதிர்கால சூழ்நிலைக்கேற்ப சீராக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

(2) தமிழ்நாட்டிலுள்ள விசைத்தறி நெசவாளர்களின் துயர் துடைத்து, இத்தொழிலுக்குப் புத்துயிர் ஊட்ட, கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் அலுவலகத்தில் "விசைத்தறி வளர்ச்சிப் பிரிவு" (Powerloom Development Cell) அமைக்கப்படும்.

(3) மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியினாலே, மாநிலத்தில் விசைத்தறிகள் அதிகமுள்ள பகுதிகளில் 1,000 நாடா இல்லா விசைத்தறிகள் (Shuttleless looms) கொண்ட பூங்காக்கள்--ஒவ்வொன்றும் ரூ.75.00 கோடி மதிப்பில்--நான்கு உருவாக்கப்படும். முதல் பூங்கா பல்லடம் பகுதியில் அமைக்கப்படும். தொடர்ந்து ஆண்டிப்பட்டி, ஈரோடு மற்றும் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் இத்தகைய பூங்காக்கள் உருவாக்கப்படும். ஜவுளித் தொழில் மையங்களுக்கான உள் கட்டமைப்பு வசதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இது நிறைவேற்றப்படும்.

(4) மலிவு விலை சேலை வேட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஸ்வரண ஜெயந்தி கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தின் வாயிலாக 13 மாவட்டங்களில் உள்ள 25,000 நெசவாளர்களுக்கு கீழ்க்கண்ட வகைகளிலே பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(அ) நெசவுத் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துதல்;

(ஆ) சந்தை சூழலுக்கு ஏற்ற இரகங்களை உற்பத்தி செய்யத் தேவையான பயிற்சி அளித்தல்;



(இ) வியாபார நோக்குடைய திறமைகளை மேம்படுத்துதல்;

(5) மாறிவரும் சந்தை நிலவரத்தைக் கருத்தில் கொண்டும், மக்களின் இரசனைக்கு ஏற்பவும், கைத்தறி நெசவாளர்கள் உள்ள பகுதிகளில் பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் 1,000 புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்படும். இந்த புதிய வடிவமைப்புகள், அகமதாபாத்திலுள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்படும். இவற்றில் திரைச்சீலைகள், அலங்காரத் துணி வகைகள், படுக்கை விரிப்புகள், மேசை விரிப்புகள் போன்ற இரகங்களும் அடங்கும். மேலும், இளைய தலைமுறையினரின் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் சல்வார் கமீஸ் போன்ற இரகங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான நிதி, கூட்டுறவு ஒன்றியம், இலாபத்தில் செயல்படும் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும்.

(6) சந்தை நிலவரத்தை முன்கூட்டியே அறியவும், கைத்தறி துணிகளின் விற்பனையை மேம்படுத்தவும், சென்னையிலுள்ள கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் அலுவலகத்தில் "புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம்" ரூ.5.00 இலட்சம் மதிப்பில் அமைக்கப்படும்.

பிற்பகல் 7-05

(7) விளம்பரம் இல்லாத பொருள் விலை போகாது என்ற அறிஞர் அண்ணா அவர்களுடைய தத்துவத்தை ஏற்று, "லூம் வேர்ல்டு" என்ற வியாபார பெயரினைப் பிரபலப்படுத்தவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளின் விற்பனையை அதிகப்படுத்தவும், ரூபாய் 20.00 இலட்சம் செலவில் பல்வேறு இடங்களில் கண்காட்சிகள் நடத்தவும், விளம்பாம் செய்யவும் அரசு திட்டமிட்டுள்ளது.

(8) மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய முயற்சியினால் பட்டுச் சேலைகளில் உள்ள சரிகையின் தரத்தினை அறியவும், போலி சரிகையினைக் கண்டறியவும், ரூபாய் 25.00 இலட்சம் செலவிலே "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்' முதலாவதாக காஞ்சிபுரத்தில் நிறுவப்படும். மேலும், இந்த வசதி கோயம்புத்தூர் மற்றும் சேலம் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும்.

(9) அதிக அளவில் விற்பனை நடைபெறும் 15 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் ரூபாய் 12.00 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

(10) சென்னை, ஈரோடு மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கணினி வடிவமைப்பு மையங்களை ஏற்கெனவே தொடங்கியுள்ளது. இதனை விரிவுபடுத்தும் வகையில் கோயம்புத்தூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலே கணினி வடிவமைப்பு மையங்கள் தொடங்கப்படும்.

(11) நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள நுகர்வோரின் தற்போதைய தேவை, சந்தை நிலவரம் மற்றும் இரசனை ஆகியவற்றை ஆலோசனை தரும் நிறுவனத்தின் வாயிலாகக் கண்டறிந்து, நுகர்வோரின் இரசனைக்கேற்றவாறு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் சிறந்த இரகங்களைத் தயாரித்து விற்பனையை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

(12) நெசவாளர்களுடைய திறனை மேம்படுத்தி, வருமானத்தைப் பெருக்கும் வகையில் 1,000 நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்க கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

(13) மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய நல்லாசியுடன் ஆண்டிப்பட்டி பகுதியில் உள்ள நெசவாளர்களினுடைய நலனுக்காக ரூபாய் 6.00 இலட்சம் செலவில் சமூக நலக்கூடம் ஒன்று கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் கட்டித் தரப்படும்.

(14) வசதியற்ற நெசவாளர்களின் வாழ்வு மேம்பட, தமிழகமெங்கும் உள்ள சுமார் 10,000 நெசவாளர்களுக்கு தறிக்கூடங்கள் ரூபாய் 9.00 கோடி மதிப்பீட்டில் கட்டித் தரப்படும்.

(15) தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுவதால், நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ரூபாய் 35.00 இலட்சம் செலவில் 100 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

(16) பின்தங்கிய நிலையில் உள்ள ஏழை நெசவாளர்களுக்கு ரூபாய் 2.75 கோடி மதிப்பீட்டில் 400 தறிக்கூடத்துடன்கூடிய வீடுகள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)



கைத்தறி நெசவாளர்களுக்கு இந்த அரசு தன்னால் இயன்ற அனைத்தையும் செய்து வருவதுடன் இன்னும் பல அரிய திட்டங்களைச் செயல்படுத்த எண்ணியுள்ளது என்பதை மகிழ்வுடனும், மிகுந்த மன திருப்தியுடனும் கூற விழைகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்புகள், கைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு புதிய தெம்பையும் உற்சாகத்தையும் அளிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி அவர்கள் குறிப்பிட்ட, கடந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக கீழ்க்கொடுங்காளூர் நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திலே ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட விதி 81-ன்கீழ் விசாரணை முடிக்கப்பட்டு, வணிகக் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோல காஞ்சி பட்டினை மட்டுமல்லாது பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடிச் சேலை ஆகியவற்றை பூகோளக் குறியீட்டுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் துறையால் எடுக்கப்பட்டு வருகின்றன. பூகோளக் குறியீட்டுச் சட்டத்தின் விதிகள் மைய அரசால் அரசிதழில் இதுவரை வெளியிடப்படவில்லை. மைய அரசினால் விதிகள் வெளியிடப்பட்டதும், காஞ்சிபுரம் பட்டுச் சேலை, பவானி ஜமக்காளம் மற்றும் மதுரை சுங்குடிச் சேலை ஆகியவற்றைப் பதிவு செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் என்னுடைய கருத்துகளை முடிந்த அளவிற்கு எடுத்துரைத்திருக்கின்றேன். வெட்டுத் தீர்மானங்களைத் தந்த மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று உங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்வதுடன், கைத்தறி நெசவாளர்களின்பால் என்றென்றும் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியுடன் எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 7-10*

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பு, அறிவு, இரக்கம், ஈகை, நட்பு, நீதி, நேர்மை, நியாயம் என்று பட்டை தீட்டப்பட்ட பச்சை வைரமாகத் திகழ்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருப்பாதங்களுக்கு என் பணிவான வணக்கம்.

அம்மா, தங்களின் துணிச்சலும், ஆற்றலும் கண்டு உலகமே வியந்து பார்க்கிறது. வாள் வலிமையை விட, மன வலிமை சிறந்தது என எடுத்துக் காட்டியவர் நீங்கள். எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும் அத்தனையிலும் மனம் மாற்றம் அடையாமல் மத மாற்றச் சட்டத்தில் உறுதியாக நின்று காட்டியவர் நீங்கள். வீர நெஞ்சம் கொண்ட ஈர நெஞ்சுக்காரர் நீங்கள் என்பதற்கு அடையாளம்தான் உங்களின் இதயம் காப்போம் திட்டம், அன்னதானத் திட்டம். கருவறை முதல் மணவறை வரை பெண்களுக்குத் திட்டங்கள் வகுத்து விடிவெள்ளியாகத் திகழ்பவர் தாங்கள். நிலைகுலைய வைப்பதில் சிலருக்கு இன்பம், உண்மைக்குப் புறம்பாகப் பேசித் திரிவதிலே சிலருக்கு இன்பம், தொல்லைகள் புரிவதிலே சிலருக்கு இன்பம், ஏழைகளைச் சுரண்டுவதிலே சிலருக்கு இன்பம் இந்நிலையில் இன்பம் காணும் இவர்களுக்கிடையில் வாரி, வாரி வழங்குவதில்தான் அம்மா அவர்களுக்கு இன்பம். அத்தகைய சிறப்புடைய அம்மா அவர்களே தங்களை வணங்குகிறேன்.

வேலூர் மாவட்டத்தில் சிறிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, சிறுபான்மை மக்கள் அதிகம் வாழ்கின்ற வாணியம்பாடி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, ஊரகத் தொழில் துறை அமைச்சராகவும் பொறுப்பினைத் தந்த தங்களுக்கு என் உயிர் மூச்சு உள்ளவரை நன்றி விசுவாசம் உள்ளவனாக இருப்பேன் என்று கூறி மீண்டும் அம்மா அவர்களை வணங்கி என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

**சிறு தொழில்கள்**—தொழில் துறையில் இந்திய நாட்டிலேயே தமிழ்நாட்டை முதல் மாநிலமாக்க வேண்டும் என்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் கனவை நினைவாக்கிட புதியதோர் வளர்ச்சிப் பாதையை உருவாக்கிட மிகவும் உறுதுணையாக நிற்பது சிறு



தொழில், குறுந்தொழில் என்றால் மிகையாகாது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நமது நாட்டின் ஆணிவேரான விவசாயத்தை பலப்படுத்த வேண்டும்; ஊரகத் தொழில், ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டும்; ஊரகப் பகுதியில் உறைகின்ற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் வேளாண்சார் உணவு பதப்படுத்தும் தொழில்களைத் துவக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 'புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற புதிய திட்டம் ஒன்றை மலரச் செய்தார்கள். அந்தந்தப் பகுதியில் பயிராகும் பயன்தரும் வேளாண் பொருள்களை உபயோகித்து தமிழகத்திலுள்ள 385 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேலான முதலீட்டில் தொழில்களைத் தொடங்க இந்தத் திட்டம் வழிவகை செய்யும். இந்தத் திட்டத்தின்மூலம் தமிழகம் எங்கும் தொழில் வளர்ச்சி சம நிலையில் சீராகப் பரவ வாய்ப்பு ஏற்படும்; ஊரக இளைஞர்கள் மற்றும் பட்டதாரிகள் வேலை தேடி நகர்புறம் நாடுவது குறையும். இதுவரை 240 வட்டாரங்களில் ரூபாய் 297.65 கோடி மதிப்பீட்டில் 363 தொழில் திட்டங்கள் மாநில ஒருங்கிணைப்புக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவற்றில் 47 தொழில் திட்டங்கள் T.I.I.C. மற்றும் வங்கிகள் மூலமும், 9 தொழில் திட்டங்கள் சுய நிதியின் மூலமும் நிறைவேற்றப்பட்டு உள்ளன. இவற்றில் 30-4-2003 வரை 12 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் துவக்கி உள்ளன என்பதையும் மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதி ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு மானியமாக ரூபாய் 10 கோடியினை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள்.

*பிற்பகல் 7-15*

மகளிர் தொழில் முனைவோர் பயிற்சி; மகளிர் வருவாயைப் பெருக்கவும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், 5 இலட்சம் மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. தொழில் மற்றும் வணிகத் துறைக்கு ஆண்டு ஒன்றுக்கு 25 ஆயிரம் மகளிருக்கு பயிற்சி அளிக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்ற நிதியாண்டில் குறியீட்டிற்கும் அதிகமாகப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பயிற்சி அதிகப்படுத்தப்படவுள்ளது.

மகளிர் தொழில் பூங்கா மகளிருக்குத் தொழில் பயிற்சி கொடுத்து அவர்கள் தொழில் தொடங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் 5 இடங்களில் மகளிருக்காகத் தொழில் பூங்காக்களை அமைக்க திட்டமிட்டுள்ளார்கள். இதில் சென்னை அருகிலுள்ள திருமுல்லைவாயில் மற்றும் திருச்சியில் வாழவந்தான்கோட்டையில் நிலம் கையகப்படுத்தப்பட்டு மேம்பாட்டுப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. அதேபோல மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மகளிருக்கென 3 தொழில் பூங்காக்களை 2003-2004ஆம் நிதியாண்டில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

தேயிலை; நாடு முழுவதும் ஏற்பட்ட பசுந்தேயிலை விலை வீழ்ச்சியால் தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள் போராட்டத்தில் இறங்கியபோது சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அவர்களின்மீது அடக்குமுறை ஏவிவிடப்பட்டது. இதனால் தேயிலை சிறு விவசாயிகளிடையே அமைதியின்மையும், அதனைத் தொடர்ந்து சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையும் ஏற்பட்டது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தேயிலை விவசாயிகள் அல்லல்படுவதை அறிந்து, தேயிலை விவசாயிகளுக்கு புத்துணர்ச்சி ஊட்டி, புதுவாழ்வு அளிக்க முடிவு செய்தார்கள். இதன் விளைவாக தமிழ்நாடு அரசு 'ஊட்டி டீ' என்ற பெயரில் பொது விநியோக மையங்கள் மூலம் தேயிலைத் தூள் விற்பனையை 28-8-2001 முதல் அறிமுகப்படுத்தினார்கள். தற்போது அதன் விற்பனை மாதம் ஒன்றுக்கு 280 மெட்ரிக் டன் ஆக உயர்ந்துள்ளது. இது தவிர பொதுமக்களுக்கு 'ஊட்டி கோல்டு' என்ற புது இரக தேயிலை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாக ரூபாய் 1.5 கோடி முதலீட்டில் அமைக்கப்பட இருக்கிற எலக்ட்ரானிக் ஏல மையத்தின் கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அரசு விளிம்புத் தொகை ரூபாய் 5 இலட்சத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். அந்தப் புதிய ஏல மையம் விரைவில் செயல்பட உள்ளது.

ஏற்றுமதி குறித்த அனைத்துத் தகவல்களையும், வழிமுறைகளையும் வழங்கி தொழில் முனைவோரை ஊக்குவிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து மாவட்டத் தொழில் மையங்களிலும், இண்டர்நெட் வசதி செய்து தர உத்தரவிட்டுள்ளார்கள்.



கடனுடன் இணைந்த தொழில்நுட்ப SIDBI நிறுவனம் மேம்பாட்டுக்கான மூலதன மானியம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. வட்டி விகிதம் அதிக அளவில் இருப்பதால் சிறு தொழில் நிறுவனங்கள் இத்திட்டத்தில் பயன் அடைவதற்கு மிகக் குறைந்த அளவிலே ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் தொழில்நுட்ப மேம்பாட்டுக்காகவும், நவீனமயமாக்கலுக்காகவும், கடன் தொகைமீது வசூலிக்கப்படும் வட்டியில் ஒரு பகுதியை மாநில அரசு மானியமாக வழங்குகிறது. இந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் இரண்டு கோடியை ஒதுக்கியுள்ளார்கள். இந்தத் திட்டம் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படாத திட்டம் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய சம பங்கு நிதியின்கீழ் ரூபாய் 50 இலட்சம் வரையிலான கடன் தொகைக்கான வட்டியில் ஒரு பகுதியை மானியமாக வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் ஒரு கோடியை மானியமாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 7-20

சிறு தொழில் தொடங்குவதற்கு கூட்டுக் கடன் திட்டத்தில் கடன் தொகையான வட்டியில் ஒரு பகுதியை மானியமாக வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் ரூ.25 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளார்கள். சிறு தொழில் பிரிவிற்கு I.S.O. சான்றிதழ் பெறுவதற்குத் தரப்படும் கடன்மீது செலுத்தப்படும் வட்டித் தொகையில் ஒரு பகுதியை மானியமாக வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கைத்தறி கிராமத் தொழில் வாரியம்**—கதர் வாரிய பாலிவஷ்திரா மற்றும் பட்டு இரகங்கள் நீண்டகாலமாக விற்கப்படாமல் தேங்கி இருந்தன. மாண்புமிகு அம்மாவின் முயற்சியால் கதர் துணி இரகங்களுக்கும் கூடுதல் தள்ளுபடி அளிக்கப்பட்டு இதுவரை சுமார் ரூ.37 கோடி மதிப்பிற்கு கதர் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த ஜூலை திங்கள் 2002 ஆம் ஆண்டில் கடைகள் மூலம் வாரியத்தின் சோப்பு வகைகள் மற்றும் தேன் விற்பனை செய்ய ஒரு திட்டத்தினை அறிமுகம் செய்து வைத்தார்கள். மாண்புமிகு அம்மா

அவர்கள் சீரிய முயற்சியால் சோப்பு, தேன் வகைகள் அதிகமாக விற்பனையாகின்றன.

தமிழ்நாடு கதர் கிராம தொழில் வாரியம்—விளிம்புத் தொகைத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின்படி தொழில் முனைவோர்கள் தங்களது திட்ட அறிக்கையினுடன் வங்கியை அணுகி வட்டியுடன்கூடிய கடன் உதவி பெறலாம். அவ்வாறு பெறும் வங்கிக் கடனுக்கு 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது. இதுவரை ரூ.224.18 இலட்சம் விளிம்புத் தொகையாக 451 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்—பனைத் தொழில் வளர்ச்சிக்காக இந்தியாவிலே தமிழ்நாட்டில் முதன் முதலாக தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் என்ற ஓர் அமைப்பு மாண்புமிகு அம்மா அவர்களால் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. பனைத் தொழிலின் மூலம் சுமார் 6,00,000 பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் மனம்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் பெண்களால் அழகிய பனை ஓலைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருள்கள் அயல் நாடுகளுக்கும் முகவர் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

பட்டு வளர்ச்சித் துறை—மல்பரி பயிர் நிலத்தடி நீர் மற்றும் மழை நீரை நம்பியே பெரும்பாலும் சாகுபடி செய்யப்படுகிறது; அதிகம் மல்பரி பயிர் செய்யப்படும், தருமபுரி, ஈரோடு, வேலூர், சேலம், மற்றும் கோவை மாவட்டங்களில் பருவமழை போதுமானதாக இல்லை. மேலும், மத்திய அரசால் விதிக்கப்பட்ட இறக்குமதி வரி 35 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

பட்டுக் கூடு மற்றும் கச்சா பட்டின் விலை குறைந்தது. மேலும் சீனா பட்டு இறக்குமதியாலும், பட்டுத் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள், இறக்குமதி வரியினை 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்த மத்திய அரசினைக் கேட்டுக்கொண்டார்கள். மத்திய அரசும் இறக்குமதி வரியினை 40 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இதனால் பட்டுக் கூடுகளின் விலை ஏறுமுகமாக உள்ளது. எதிர்வரும் காலங்களில் மழை பெய்யும்



நிலையைப் பொறுத்து விவசாயிகள் மீண்டும் மல்பரி பயிரிடும் தொழிலுக்குத் திரும்புவார்கள் என நம்புகிறேன்.

தமிழ்நாடு கைத்திறன் தொழில் வளர்ச்சிக் கழகம்—இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை 2001-2002 ஆம் ஆண்டில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆய்வு செய்தபோது கோயில் சிறப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்த நிறுவனத்திற்கு உள்ள தனித்தன்மையை கருத்தில்கொண்டு, இந்து அறநிலையத் துறையில் உள்ள திருக்கோயில்களில் செய்யப்படவுள்ள அனைத்துச் சிறப்புப் பணிகளும் பூம்புகார் வசம் மட்டுமே ஒப்படைக்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பித்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் இந்த ஆணைகளின் அடிப்படையில் இந்நாள் வரை, இந்த நிறுவனத்தில் சுமார் ரூபாய் 75 இலட்சங்களுக்கான கோயில் சிறப்புப் பணிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் இதுபோன்ற பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்படும் நிலையில் உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-25

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியால் பூம்புகார் நிறுவனம் சென்ற வருடத்தைவிட ரூபாய் ஒரு கோடி விற்பனையை அதிகரித்துள்ளது. ஏற்றுமதி விற்பனை முதன் முதலாக ரூபாய் ஒரு கோடியை எட்டி சாதனை புரிந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கண் துஞ்சாமல், பசி நோக்காமல் என்றென்றும் சுறுசுறுப்பாய் இயங்கி தமிழகத்தை முதன்மை மாநிலமாக்க அயராது பாடுபடும் ஆன்ம நெஞ்சத்தின் அம்சமாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறையின் வளர்ச்சிக்காக கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை வெளியிட ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிறு தொழில் திட்டங்களுக்கான புதிய அறிவிப்புகள்**

(1) தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் அறிவிக்கையின் வகை III-A (1)-ன்படி 10 H.P. திறன்வரை மின் இணைப்புப் பெற்றுள்ள குறுந்தொழில் அலகுகளுக்கு மின் கட்டணம் சலுகை வீதத்தில் அளிக்கப்படுகிறது. இதுவரை சொந்தக் கட்டடங்களில் இயங்கி

வந்துள்ளவைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்தச் சலுகை இப்போது இடம் சொந்தமாகவோ வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ உள்ள குறுந்தொழில்களுக்கும் வழங்கப்படும். இதனால் 15,000 குறுந்தொழில் அலகுகள் பயன்பெறும். (மேசையைத் தட்டும் ஒலி)

(2) மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு சரியான விலை கிடைக்கவும், 'சேகோ-சர்வ்' மூலமாக விற்பனை செய்வதை ஊக்குவிக்கவும் சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவுப் பொருட்களுக்கு வசூலிக்கப்படும் தமிழ்நாடு பொது விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

(3) தேயிலை ஏல மையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு, ஏற்கெனவே அளிக்கப்பட்டு வந்த விற்பனை வரிச் சலுகைகள்-அதாவது தமிழ்நாடு பொது விற்பனை வரி 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகவும் மற்றும் மத்திய அரசின் விற்பனை வரி 4 சதவீதத்திலிருந்து 2 சதவீதமாகவும்-புதியதாக குன்னூரில் ஏற்படுத்தப்பட்ட 'டீ-செர்வ்' தேயிலை ஏல மையத்திற்கு மட்டும் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) மாநிலத்திலுள்ள சிறு தொழில் அலகுகளுக்கான 15 சதவீத விலை முன்னுரிமையை உறுதி செய்ய ஒப்பந்தப் புள்ளி ஆய்வுக் குழுவில் சிறு தொழில் துறையைச் சேர்ந்த ஒரு பிரதிநிதி பங்கேற்பார். அவர் ஒப்பந்தப் புள்ளியில் கலந்துகொண்டு இறுதி ஆணை பெற தகுதியுடைய சிறு தொழில் அலகுகளின் நலனைப் பாதுகாக்கும் வகையில் செயல்படுவார்.

(5) புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொடங்கப்படும் வேளாண்சார் மற்றும் உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கவும் தற்போது இயங்கிவரும் தொழில்களில் சிறு தொழில் அலகுகளை ஊக்குவிக்கவும், ஏற்றுமதி, உற்பத்தித் திறனில் மேம்பாடு மற்றும் சிறந்த மகளிர் தொழில் முனைவோருக்கான விருதுகள் மாநில அளவிலும்/மாவட்ட அளவிலும் 2003-2004 ஆம் ஆண்டு, அதாவது இவ்வாண்டு வழங்கப்படும்.





பிற்பகல் 7-30

(6) திருமுல்லைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள மகளிர் தொழிற் பூங்கா விரைவில் மாண்புமிகு அம்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்படும்.

(7) நமது மாநிலத்தில் தொடங்கப்படும் 5 மாநில மகளிர் தொழில் பூங்காக்கள் அரசு நிலங்களில் ஏற்படுத்தப்பட்டால் அந்த நிலத்திற்கான மதிப்பில் 50 சதவீதம் மட்டுமே சிட்கோவிடமிருந்து அரசு வசூலிக்கும். இதன் பயனை மகளிர் ஒதுக்கீட்டாளர்கள் அடைவார்கள்.

(8) சிட்கோ வசமுள்ள அனைத்து தொழிற்பேட்டைகளிலுள்ள மனைகள், கூடங்கள் விற்பனை பதிவு செய்யும்போது பத்திரப் பதிவுத் துறையால் வசூலிக்கப்படும் முத்திரைத்தாள் கட்டணம் முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இச்சலுகை முதல் முறையாக சிட்கோவிடமிருந்து கிரயப் பத்திரம் பெறும் ஒதுக்கீட்டாளருக்கு மட்டுமே அளிக்கப்படும்.

(9) சிட்கோ மனைகள் மற்றும் தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு முதன்முறையாக கிரயம் செய்யும்பொழுது பத்திரப் பதிவுத் துறையால் வசூலிக்கப்படும் 1 சதவீதம் பதிவுக் கட்டணத் தொகை சிட்கோ ஒதுக்கீட்டு ஆணையில் குறிப்பிட்டுள்ள விலையில் வசூலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(10) சிட்கோ மற்றும் தேசிய சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் இணைந்து நடத்தும் கூட்டுக் கடன் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்குக் குறுந்தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். 2003-2004 ஆம் ஆண்டில் 3 குறுந்தொழில் பேட்டைகள் தேனி மாவட்டத்திலும், வேலூர் மாவட்டத்தில் வாணியம்பாடி அருகிலும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் மயிலாடுதுறை அருகிலும் அமைக்கப்படும்.

(11) சிறுதொழில் அலகுகள் உற்பத்தி செய்யும் கழிவுகளைச் சுத்திகரிப்பு செய்ய சிட்கோ தொழிற்பேட்டைகளில் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு அரசு ஊக்குவிக்கும். இந்தத் திட்டம் அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சியால் நிறைவேற்றப்படும். இத்திட்டத்திற்கான செலவில் 25 சதவீதம் மாநில அரசு ஏற்கும்.

(12) குறுந்தொழில் அலகுகளும், மிகவும் உள்ளிட்ட பகுதிகளில் இயங்கி வரும் சிறு தொழில் அலகுகளும் தங்களது உற்பத்திப்

பொருட்களை அரசுத் துறை மற்றும் நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கான வாய்ப்புகள் உருவாக்க சிட்கோ இந்த அலகுகளுக்கு விருப்ப கொள்முதல் முகவராகச் செயல்படும். இந்த அலகுகளின் சார்பில் அரசுத் துறை மற்றும் நிறுவனங்கள் வெளியிடும் ஒப்பந்தப் புள்ளிகளில் இந்த அலகுகளின் பெயரிலேயே சிட்கோ பங்கேற்கும். ஒப்பந்தப் புள்ளி வழங்கல் ஆணையின்படி இந்த அலகுகளின் உற்பத்திப் பொருட்களை அனுப்புவதிலும், அதற்கான தொகையைப் பெற்று இந்த அலகுகளுக்கு வழங்குவதிலும் சிட்கோ உதவி செய்யும்.

(13) கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் உள்ள தொழில் கட்டமைப்பு வசதிகளை, ஒவ்வொன்றிலும் ரூபாய் ஆறு கோடி செலவில் மேம்படுத்தும் திட்டம் இவ்வாண்டில் செயல்படுத்தப்படும் என நிதிநிலை அறிக்கை உரையில் அறிவிக்கப்பட்டது. இவ்வாறு மேம்படுத்தப்பட்ட உள் கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து பராமரிக்கும் வகையில் மஹாராஷ்டிரா மற்றும் ஆந்திர பிரதேச மாநிலங்களில் நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பரிசீலித்தபின் ஒரு புதிய சட்டம் இயற்றப்படும். தொழில் கட்டமைப்பு வசதிகளைப் பராமரிக்க ஒவ்வொரு தொழிற்பேட்டையிலும் ஆணையம் உருவாக்கப்படும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஆணையம் இவற்றிற்கிடையே வருவாய்ப் பகிர்வு ஏற்படுத்தவும் இச்சட்டத்தில் வகை செய்யப்படும்.

(14) சிட்கோ தொழிற்பேட்டைகளில் மனைகள் மற்றும் தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு நிபந்தனைகளில் ஒதுக்கீட்டாளர்க்கு நன்மை பயக்கும் வகையில் கீழ்க்கண்டவாறு சலுகைகள் வழங்கப்படும்:—

(அ) ஒதுக்கீட்டு ஆணை பெற்றபின் செலுத்தப்படும் துவக்கத் தொகை செலுத்தும் கால அவகாசம் ஒரு மாதத்திலிருந்து இரண்டு மாதங்களாகவும், இறுதித் தொகை செலுத்தும் கால அவகாசம் மூன்று மாதங்களிலிருந்து ஆறு மாதங்களாகவும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 7-35

(ஆ) எல்லா தொழிற்பேட்டைகளிலும் மனைகளும், கூடங்களும் தவணை முறையில் விற்பனை மூலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

(இ) குறுந்தொழில்களுக்கான மனைகள் மற்றும் கூடங்கள் ஒதுக்கீட்டுத் தொகைக்கான வட்டி விகிதம் 17 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும், காலம் தாழ்த்தி செலுத்தப்படும் தவணைத் தொகைக்கான வட்டி 19 சதவீதத்திலிருந்து 17 சதவீதமாகவும் குறைக்கப்படும்.



(ஈ) குறித்த காலத்தில் தவணை செலுத்துவதை ஊக்குவிக்க, வட்டி வீதத்தில் 1 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும்.

(உ) குறித்த காலத்தில் உற்பத்தி தொடங்கும் அலகுகளுக்கு வட்டி மேலும் 1 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும்.

(ஊ) புதிய தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளுக்காகச் செலுத்தப்பட வேண்டிய துவக்கத் தொகை 25 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும், தற்போது இயங்கி வரும் தொழிற்பேட்டைகளில் உள்ள கூடங்களுக்கு மட்டும் துவக்கத் தொகையின் அளவு 25 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல், நிர்வாகக் கட்டணம், சென்னைப் பெருநகர் தவிர ஏனைய பகுதிகளில் உருவாக்கப்படும் புதிய தொழிற் பேட்டைகளுக்கு 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகக் குறைக்கப்படும்.

(எ) விற்பனை வாய்ப்புகள் குறைவாக உள்ள 40 தொழிற்பேட்டைகளில் மாதமொன்றிற்கு சதுர அடிக்கு ரூ.2/- வீதம், வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஏ) தொழில் முனைவோர் தங்கள் தொழில் அலகுகளில் அமைப்பு மாற்றம், பெயர் மாற்றம், உற்பத்திப் பொருள் மாற்றம், தொழில் மனைகள் மற்றும் கூடங்கள் மறு விற்பனை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான நெறிமுறைகள் எளிதாக்கப்படும்.

பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தொடர்பான புதிய அறிவிப்புகள்.

(1) (அ) உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகத்தை சாகுபடி செய்ய விவசாயிகளுக்குத் தேவைப்படும் அனைத்து உதவிகளும் அரசால் செய்யப்படும். இந்த உயர் விளைச்சல் இரகத்தைப் பயிரிட ஒரு ஏக்கருக்கு ஊக்கத் தொகையாக ரூ.500/- வீதம் 1,000 ஏக்கரில் உயர் விளைச்சல் மல்பரி சாகுபடி செய்ய ரூ.5.00 இலட்சம் ஊக்கத் தொகையாக இந்த ஆண்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சர்வதேச தரத்திற்கு இணையான பட்டு நூல் உற்பத்தி செய்யவும், அதன்மூலம் கூடுதல் வருவாய் பெறவும், இரு சுழற்சி இன

புழு வளர்ப்புத் தொழில்நுட்பம் குறித்து 1,000 விவசாயிகளுக்குப் பயிற்சி மற்றும் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்த ரூ.2.20 இலட்சம் செலவிடப்படும்.

(2) பட்டுப் புழு வளர்ப்பிற்கு ஏற்ற பகுதியான மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியைச் சார்ந்த கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் 520 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்கவும், மல்பரி நாற்றுகள் மற்றும் தளவாடங்கள் வாங்கவும் ரூ.13.95 இலட்சம் மானிய உதவிகள் நடப்பாண்டில் வழங்கப்படும்.

(3) கூடுதல் அறுவடை பெற தனி புழு வளர்ப்பு மனை கட்டவும், நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்யவும், நடப்பாண்டில் 470 பட்டு விவசாயிகளுக்கு மாநில அரசின் பங்கு ரூ. 66.25 இலட்சமும் மத்திய பட்டு வாரியத்தின் பங்கு ரூ. 66.25 இலட்சமும் சேர்த்து மொத்தம் ரூ.132.50 இலட்சம் மானிய உதவி அளிக்கப்படும்.

(4) நடப்பு நிதியாண்டில் பட்டுத் தர மேம்பாட்டுக் குழுக்களுக்குத் தோட்டப் பராமரிப்பு மற்றும் புழு வளர்ப்புக்குத் தேவையான இடு பொருட்கள் கொள்முதல் செய்திட சுழல் நிதி ரூ.20,000/- தோற்றுவிக்க சுவிஸ் அபிவிருத்திக் கழக நிதி உதவியுடன் 100 பட்டு தர மேம்பாட்டுக் குழுக்களுக்கு ரூ.10,000/- வீதம் ரூ.10.00 இலட்சம் வழங்கப்படும்

பிற்பகல் 7-40

(5) சாதாரண மக்களும் வாங்கக்கூடிய விலை குறைந்த கதர் பட்டுப் புடவைகளுக்கான உற்பத்தியினை ஊக்குவிக்கும் வகையில் ரூபாய் 2,000/- வரை மதிப்புள்ள பட்டுப் புடவைகளை உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு ஒரு புடவைக்கு ரூபாய் 25 வீதம் ஊக்கத்தொகையாக வாரியத்தால் வழங்கப்படும்.

(6) கடந்த ஆண்டு மும்பையிலுள்ள கதர் ஆணைக் குழுவிடமிருந்து 100 விழுக்காடு மானியமாக ரூபாய் 1.50 இலட்சம் நிதி உதவி பெற்று குறளகத்தில் உள்ள பிரதான கதர் அங்காடி கணினிமயமாக்கப்பட்டது போல் இந்த நிதியாண்டில் சேலம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகரங்களில் அமைந்துள்ள கதர் அங்காடிகளும் ரூபாய் 3.00 இலட்சம் செலவில் கணினிமயமாக்கப்படும்.



(7) ஜவ்வாது மலைப் பகுதியில் செயல்பட்டுக் கொண்டிருந்த தேன் பதப்படுத்தும் அலகு நட்டம் ஏற்பட்ட காரணத்தினால் மூடப்பட்டு அப்பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் தாங்கள் உற்பத்தி செய்த தேனை விற்பனை செய்ய முடியாமல் இன்னல்படும் இந்தத் தருணத்தில் அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜமுனாமரத்தூரில் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் தேன் பதப்படுத்தும் அலகு ஒன்று நிறுவப்படும்.

(8) மக்கள் எளிதாக வாங்கிப் பருகவும், பல இடங்களுக்குக் கொண்டு சென்று விற்பனை செய்ய வசதியாகவும், பதநீரை பாலிதீன் பைகளில் அடைத்து விற்க ஏதுவாக தேவைப்படும் இயந்திரங்கள் ரூபாய் 5.00 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு பதநீர் விற்பனை அதிகரிக்கப்படும்.

(9) மாதவரம் பனைப் பண்ணையில் நவீன முறையில் பனஞ்சீனி மிட்டாய் தயாரிக்க ரூபாய் 2.00 இலட்சம் செலவில் புதிய உபகரணங்களை வாங்கவும், இதன்மூலம் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் பனஞ்சீனி மிட்டாய் மற்றும் சாக்லேட் பொதுமக்களுக்கு எளிதாகக் கிடைக்கவும் வாரியம் நடவடிக்கை எடுக்கும்.

(10) பனைத் தொழிலில் ஈடுபடும் கைவினைஞர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவற்காக அவர்களுக்குத் தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும். முதற்கட்டமாக தருமபுரி மாவட்டத்திலுள்ள 200 பனைத் தொழில் கைவினைஞர்களுக்குப் பதநீரிலிருந்து பனை வெல்லம் தயாரிக்க தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் ரூபாய் 3.00 இலட்சம் செலவில் வாரியத்தால் வழங்கப்படும்.

(11) கைவினைப் பொருட்களின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கிலும், பூம்புகார் நிறுவனத்தின் கட்டமைப்பு வசதியைச் சீராக்க வேண்டியும், சுவாமிமலையில் பூம்புகாருக்கென விற்பனை நிலையம் ரூபாய் 30.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும். இதில் மாநில அரசின் பங்கு ரூபாய் 15.00 இலட்சமாகும். மீதமுள்ள ரூபாய் 15.00 இலட்சத்தை மைய அரசு ஏற்கும். அதேபோன்று, ஈரோட்டில் பூம்புகாருக்கென விற்பனை நிலையம் ஒன்று ரூபாய் 39.00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு இன்னும் இரண்டு மாத காலத்திற்குள் திறக்கப்பட இருக்கிறது. இதில் மாநில அரசு

ரூ.12.00 இலட்சமும், மைய அரசு ரூபாய் 12.00 இலட்சமும், பூம்புகார் நிறுவனம் ரூபாய் 15.00 இலட்சத்தையும் ஏற்கும்.

*(12)* தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் செயல்பட்டு வரும், குறிப்பாக மகளிர் தொழில் முனைவோர்களை உள்ளடக்கிய கைவினைப் பொருட்கள் சுய உதவிக் குழுக்களுக்கு உதவிடும் பொருட்டு, 2003-2004 ஆம் ஆண்டில் தனது கொள்முதல் கோட்பாடுகளின் ஒரு பகுதியாக இந்த நிறுவனம் சுய உதவிக் குழுக்களிடமிருந்து கலைப் பொருட்களை ரூபாய் 10.00 இலட்சம் மதிப்பிற்குக் கொள்முதல் செய்யும்.

*(13)* இந்த நிறுவனம் ஏற்றுமதியினை அதிகரிக்க மின்னணு வர்த்தகத் தொடர்புடைய வலைதளத்தினை மேம்படுத்தி இணையதள விற்பனை நிலையம் ஒன்றைத் தொடங்கும்.

*பிற்பகல் 7-45*

*(14)* தமிழகத்திலுள்ள முக்கிய கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவைப்படும் கைவினைப் பொருட்களைக் கிடைக்கச் செய்ய முக்கிய கோயில்களில் சிறப்பு விற்பனை நிலையங்களை ரூ.6.00 இலட்சம் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதல் கட்டமாக புகழ்பெற்ற வைணவத் திருத்தலமான அருள்மிகு அரங்கநாதர் திருக்கோயில், திருவரங்கம், அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயில், காஞ்சிபுரம், புகழ்வாய்ந்த சைவத் திருத்தலமான அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயில், திருவண்ணாமலை மற்றும் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளான பழனி, திருத்தணி, திருச்செந்தூர், பழமுதிர்சோலை, திருப்பரங்குன்றம் மற்றும் சுவாமிமலை ஆகிய திருக்கோயில்கள் வளாகங்களில் இத்தகைய சிறப்பு விற்பனை நிலையங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து, தங்களது மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்கள். அவ்வெட்டுத் தீர்மானங்களுக்குத் தேவையான விளக்கங்களை எனது பதிலுரையில் அளித்துள்ளேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த இரு மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (ஆ) கோரிக்கை எண் 17 — கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை — கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 17 — கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருத்தப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.58,05,07,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 42—சிறுதொழில்கள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42, சிறுதொழில்கள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜூ.

**திரு. எச்.எம். ராஜூ:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜூ அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.



**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சிறுதொழில்கள் துறை பற்றிய 12 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.63,87,05,000/- மூலதனக் கணக்கில் ரூ.2,13,53,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில்கள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (ஈ) கோரிக்கை எண் 16—கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16, கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை. திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. ப. அரசன், இருக்கையில் இல்லை. திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி

**செல்வி க. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.132,53,61,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.2,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (8-5-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

104. 2001-2002 ஆம் ஆண்டிற்கான காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

[2003 மே 7

105. 2001-2002 ஆம் ஆண்டிற்கான சேலம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

106. 2001-2002 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

107. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

108. 2001-2002 ஆம் ஆண்டிற்கான திருநெல்வேலி மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

331. மானியக் கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

332. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 'மக்கள் சாசனம்', 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

333. எரிசக்தித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

334. தொழில் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)



2003 மே 7]

335. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - கால்நடை பராமரிப்பு மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

336. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால் வளம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

337. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - மீன் வளம் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

338. மானியக் கோரிக்கை எண் 17 - பட்டு வளர்ச்சித் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சிக் வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறித் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

339. பட்டு வளர்ச்சித் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2002-2003. (தமிழ், ஆங்கிலம்)

340. மானியக் கோரிக்கை எண் 12 - சிறு தொழில்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

341. சிறு தொழில்கள் பற்றிய செயலாக்கத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

342. சிறு தொழில்கள் துறையின் "மக்கள் சாசனம்", 2003. (தமிழ், ஆங்கிலம்)

343. மானியக் கோரிக்கை எண் 16-கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

344. கைத்தறி மற்றும துணி நூல் பற்றிய செயல்முறைத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

## இணைப்பு I

*(16 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## கோரிக்கை எண் 12 - கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

### அத்தியாயம்-1

**முன்னுரை**

*1.1 தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய தான் உறுதி பூண்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். "அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே" இவ்வரசின் இலக்கு ஆகும். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக அத்தியாவசியப் பொருட்களைப் பெற வழிவகுக்கும் பொது விநியோகத் திட்டத்தை இத்துறை செயல்படுத்தி வருகிறது. மேலும் இந்தச் சீரிய முயற்சியில், பொதுமக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை மொத்தமாக கொள்முதல் செய்து, சேமித்து வைத்து பின் நியாய விலையில் அனைவருக்கும் மாநிலம் முழுவதும் செயல்படும் நியாய விலைக் கடைகள் வழியாக விநியோகிக்கும் உன்னத பணியை இத்துறை மேற்கொண்டுள்ளது.*

*1.2 மாநிலம் முழுவதும் பரவலாக உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வழியாக வேளாண்மைக் கடன் அளிப்பது மட்டுமின்றி, உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்ற வேளாண்மை இடுபொருட்களை உரிய நேரத்தில் அளித்தல் போன்ற பணிகளில் கூட்டுறவுத் துறை சிறந்து விளங்குகிறது.*

*1.3 தமிழ்நாட்டினை இந்தியாவிலேயே முதல் மாநிலமாக ஆக்குவதற்கு இவ்வரசு மேற்கொண்டு வரும் தளராத முயற்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆக்கபூர்வமான பங்கினைக் காட்டும் இத்துறையின் செயல்பாடுகள் பின்வரும் பக்கங்களில் விரிவாக விளக்கப்படுகின்றன.*

## அத்தியாயம்-2

### கூட்டுறவு—ஒரு கண்ணோட்டம்

2.1 தமிழ்நாட்டின் கிராமப் பொருளாதாரத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் வேளாண்மை, பால் உற்பத்தி, மீன்வளம், நெசவு, கைவினைப் பொருட்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சியில் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இச்சங்கங்கள் அதன் அங்கத்தினர்களுக்கு பொருட்களை உற்பத்திச் செய்ய கடன் வழங்குவதுடன் உற்பத்திச் செய்யப்பட்டப் பொருட்களைப் பதப்படுத்தி விற்பனை செய்யவும் உதவுகின்றன. மேலும் அவை அரசின் பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தவும் உதவுகின்றன. இயற்கைச் சீற்றத்தின் காரணமாக பயிர்கள் சேதமடையும்போது விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் வழங்கல், வேளாண் பொருட்களுக்கு விலை அளித்தல், பொதுமக்களுக்கு குறைந்த விலையில் இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்வதற்காக பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்துதல், விவசாயிகளுக்கு கடன் வழங்குதல் மற்றும் அவர்களது பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய அனைத்து நலத் திட்டங்களிலும் இச்சங்கங்கள் பங்கேற்கின்றன.

2.2 கூட்டுறவுச் சங்கங்கள் சீராக நடைபெற வேண்டுமெனில் அவற்றின் கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும், அதற்கு நிதியுதவி அளிப்பது அவசியம் என்பதையும் அரசு உணர்ந்துள்ளது. பொருளாதார வளர்ச்சி மற்றும் சமுதாய நீதி ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு கூட்டுறவுகள் ஒரு சிறந்த அமைப்பு என்ற கொள்கையை அரசு கடைபிடித்து வருகின்றது.

2.3 கூட்டுறவு இயக்கத்தில் பொதுமக்களும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் ஆகியோரின் நிர்வாகமும் பங்கு பெற வேண்டும் என்பது அடிப்படைத் தத்துவம் என்பதால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு முறையாக தேர்தல் நடத்துவதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்துள்ளது. அதேநேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் அதிகம் பேர் அங்கத்தினர்களாகச் சேர வேண்டும். அதுவும் உண்மையில் தகுதியுடையவர்களையே அங்கத்தினர்களாகச் சேர்க்கவேண்டும் என்பதில் அரசு மிகவும் உறுதியாய் இருக்கிறது. இதனைச் செயல்படுத்துவதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் புதிய பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதன்படி தனி அலுவலர்களுக்கும், செயல் அலுவலர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களில் புதிய அங்கத்தினர்களைச் சேர்ப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதனை



எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டு அவ்வழக்கு உயர் நீதிமன்றத்தின் ஆய்வில் உள்ளதால், கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. நீதிமன்றத்தில் வழக்கு முடிவானபின் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

2.4 பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்த நிலையிலோ அல்லது நட்டத்திலோ இயங்கி வருகின்றன என்பது கவலை அளிக்கக் கூடியதாய் இருக்கிறது. ஆகையால் அவற்றை நவீனப்படுத்தி அவற்றின் செயல்பாட்டினை மேம்படுத்துதலும் மற்றும் அவற்றின் அலுவலகச் செலவுகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருதலும் மிகவும் அவசியமான ஒன்றாகும். மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றை கணினிமயமாக்குவதற்கும் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் கிளைகளில் தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கும் அரசு எடுத்துள்ள நவீனமயமாக்கும் முயற்சியானது பொதுமக்களுக்கு அவை சீரிய சேவைகளைச் செய்வதற்கு உதவும். மேலும் அவர்களது வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளை அரசு மேற்கொண்டுள்ளது. கடந்த காலங்களில் கட்டுப்பாடு இன்றி பணியாளர்களை நியமித்ததால் பல கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தேவைக்கு அதிகமான பணியாளர்களைக் கொண்டுள்ளன. இதனால் அவற்றின் நிதிநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தேவைக்கேற்ப பணியாளர்களை நியமிக்கும் வகையில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை விதிகள் திருத்தப்பட வேண்டுமென அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே உள்ள துணை விதிகளுக்கு மாறாக பணியமர்த்தப்பட்டவர்களைப் பணிநீக்கம் செய்யவேண்டும் என்றும், துணை விதிகளே இல்லாத நிறுவனங்கள் புதிய துணை விதிகளுக்கு ஒப்புதல் பெறவேண்டும் எனவும் சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன்படி செயல்பட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால் மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கையினையும், பணியாளர்களின் சம்பள விகிதத்தினையும் சீர்செய்ய இயலும். கூட்டுறவுச் சங்கங்களில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை மிக அதிகமாய் உள்ள நேர்வுகளில், பணியாளர்கள் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்காக அரசு நிதி உதவி செய்கிறது. இத்தகைய நடவடிக்கைகளால் அலுவலகச் செலவு கட்டுப்படுத்தப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் சரிவர செயல்பட முடியும்.

2.5 கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் அதன் அலுவலர்கள் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகளின் தவறான செயல்களால் பாதிக்கப்படும்போது, அவ்வாறு தவறிழைத்தவர்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அவ்வாறு செய்தால் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் அங்கத்தினர்களின் நலனுக்காகவும், பெரும்பான்மையான பொதுமக்களின் நலனுக்காகவும் திறமையாகச் செயல்பட முடியும். கொப்பரை கொள்முதலில் நடந்த முறைகேடுகள், கூட்டுறவு வங்கிகள் மூலம் அதிகக் கட்டணங்களில் காஸ் இணைப்பு அளித்தது, அரசின் சத்துணவுத் திட்டத்திற்காக கூட்டுறவுகள் மூலம் பருப்பு கொள்முதல் செய்ததில் நடந்த முறைகேடுகள் போன்ற பல்வேறு ஊழல்களுக்கான புலன் விசாரணைகளை முடுக்கிவிட்டு விரைவில் அவற்றை முடிக்க அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதேபோல், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தின் விதி 81-இன் கீழ், அலுவலர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் புரிந்த பல்வேறு முறைகேடுகள் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கான விசாரணைகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

2.6 அரசு பெருமுயற்சிகள் மேற்கொண்டபோதிலும் சில நலிந்த கூட்டுறவுச் சங்கங்கள் மீட்க இயலாத நிலையில் உள்ளன என்பதை அரசு நன்கறியும். தறபோது ஒரு கூட்டுறவுச் சங்கத்தைக் கலைப்பதற்கு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்ட விதிகளின் முறைகளைப் பின்பற்றி கலைக்கவேண்டும். அடிக்கடி இவ்வாறு ஒரு பொருளாதார நிறுவனத்தை மூடி விடுவது கூட்டுறவுச் சங்கத்தினை நம்பி இருப்பவர்களைப் பாதிக்கும். எனவே, கூட்டுறவுச் சங்கங்களில் பெரும்பான்மை பங்குகள் அரசுக்கு சொந்தமாகயிருந்தால் அவ்வகையான கூட்டுறவுச் சங்கங்களை தனியார்மயமாக்கிவிடலாம் என அரசு முடிவு செய்துள்ளது. இது நற்போதைய அரசு எடுத்துள்ள மிக முக்கியமான கொள்கை முடிவாகும். இக்கொள்கை முடிவினைச் செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

2.7 இவை அனைத்தும் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த பொதுவான கொள்கை முடிவுகள் என்றாலும், கூட்டுறவுத் துறையின் நடவடிக்கைகள் மற்றும் இத்துறையால் நடைமுறைப்படுத்தப்படும் கொள்கைகள் தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன.



# அத்தியாயம்-3

## கூட்டுறவுக் கடன்

3.1 கூட்டுறவுத் துறையானது, பொதுமக்களுக்கு கடன் வழங்குதல், விவசாய விளைபொருட்கள், நுகர்வோர் பொருட்கள் ஆகியவற்றை விற்பனை செய்தல் மற்றும் பொது விநியோகத் திட்டம் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை விநியோகித்தல் போன்ற பணிகளைச் செய்யும் அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களையும் நிர்வகிப்பதுடன், கூட்டுறவுகளை மேம்படுத்துதல், கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி ஆகிய பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

3.2 சேமிப்பினை அதிகமாக்கி விவசாயிகளுக்கும் கிராம மக்களுக்கும் தேவைக்கேற்ப நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதே கூட்டுறவுக் கடன் அமைப்பின் நோக்கமாகும். கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் [illegible] திறமையாகவும் செயல்பட [illegible] இந்நோக்கத்தினை [illegible] இயலும். தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கடன் அமைப்பு [illegible] அடுக்குகளாகச் செயல்படுகிறது. [illegible] விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடனை வழங்குகிறது; மற்றொன்று [illegible] நீண்ட கால கடன் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. [illegible] நிலைகளில் இயங்கி வரும் கூட்டுறவு வங்கிகள் [illegible] கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் உதவி செய்கின்றன.

3.3 குறுகிய கால கூட்டுறவு கடன் கட்டமைப்பு மூன்று அடுக்குகளாக செயல்படுகின்றது. மாநில அளவில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி முதன்மை வங்கியாக செயல்படுகிறது. மாவட்ட அளவில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்படுகின்றன. கிராம அளவில் 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்குக் குறுகிய காலக் கடனை வழங்குகின்றன.

3.4 நீண்டகால கூட்டுறவு கடன் கட்டமைப்பு மாநில அளவில் ஒன்றாகவும், மண்டல அளவில் ஒன்றாகவும் இரண்டு அடுக்குகளாக செயல்படுகின்றது. மண்டல அளவில் உள்ள 181 தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மாநில அளவில் முதன்மை வங்கியாக செயல்படுகின்றது.

3.5 1980 ஆம் ஆண்டு வரை, அதாவது அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் தங்களது கவனத்தை ஊரகப் பகுதிகளுக்குத் திருப்பும் வரை,

கூட்டுறவு வங்கிகள்தான் விவசாயக் கடனில் பெரும்பங்கை அளித்து வந்தன. கடந்த பல ஆண்டுகளில் நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. வங்கிப் பிரிவுகளைப் பொறுத்தவரையில், வட்டார அளவிலான கிராம வங்கிகள் அமைக்கப்பட்டன. புதிய மாறுதலுக்குட்பட்ட வட்டி விகிதங்களைப் புகுத்தியது, மூன்றாவது தலைமுறை தனியார் வங்கிகள் தோன்றியது, எதிர் வரக்கூடிய சவால்களைச் சமாளிக்கும் வழியாக புதிய முறைகளைப் புகுத்தியது, தொடர்ந்து இயங்குவதற்காக வங்கிகளுக்கிடையேயான போட்டிகளைத் தீவிரப்படுத்தியது போன்ற பல பரிணாம வளர்ச்சிகள் காணப்பட்டன. ஆனால், கூட்டுறவு வங்கிகள் இத்தகைய மாறுதல்களைக் கண்டுகொள்ளவில்லை என்பதுடன் கடன் வழங்குவதிலும்கூட அவை மோசமான நிலையை அனுபவித்தன. இதன் விளைவாக, விவசாயக் கடன்களில் அவற்றிற்கிருந்த வணிகப் பங்கும் குறிப்பிடத்தக்க அளவு குறைந்தது.

3.6 முக்கியமாக, அனைத்துத் துறைகளிலும் வட்டி விகிதங்கள் மிகவும் குறைந்து வந்த நிலையிலும் கூட்டுறவு வங்கிகளால் விவசாயிகளுக்கு விவசாயப் பணிகளுக்காக வழங்கப்பட்ட கடனின் வட்டி விகிதம் குறையவில்லை. விவசாயத்திலுள்ள நிலையற்ற தன்மையே இதற்கான முக்கிய காரணமாக இருக்கலாம். ஆனால் கூட்டுறவுக் கடன் கட்டமைப்பின் செலவினைக் கண்டிப்பாய் குறைத்து அதன் பயனை விவசாயிகள் அடையும் வகையில் அவர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்குதல் தவிர்க்க முடியாததாகும். கடன்களின் வட்டி விகிதத்தைக் குறைப்பது சரிந்து கொண்டிருக்கும் கூட்டுறவுத் துறையின் வியாபார அளவினை நிமிர்த்த உதவும். கூட்டுறவுகள் மட்டும்தான் பிணையில்லாமல் பயிர்க் கடன்கள் வழங்குவதால் இது கூட்டுறவுகளையே நம்பியுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பயனளிக்கும். தங்களது செலவுகளைக் குறைத்துக்கொண்டு தேவையான நேரங்களில் கடன் வழங்கினால் பிற வங்கிகளால் போட்டி ஏற்படும் காலங்களில்கூட கூட்டுறவுகள் தங்களை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இவ்வாறு செய்யாதிருந்தால் கூட்டுறவு வங்கிகள் நீண்டகாலம் நிலைத்திருப்பது கடினமானதாகும்.

3.7 கூட்டுறவு வங்கிகள் தமது செலவினைக் குறைத்துக் கொள்ளவும், அவை சீராக நடைபெறவும் அரசு பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. மேலும் கூட்டுறவு வங்கிகளின் கடன் வழங்கும் பணியை அதிகமாக்கும் பொருட்டு அரசு கடன் வழங்கும்



நிறுவனங்களுக்கு பண்ணைசாராக் கடன் அளிக்க அனுமதி அளித்து, அதனால் அவை பெருமளவு வளர்ந்துள்ளன. இது கூட்டுறவு வங்கிகளின் பணித்திறனை மேம்படுத்துவதுடன், திரும்பிப் பெறப்படும் கடனின் அளவையும் அதிகரிக்கிறது. இந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் செலவினைக் குறைத்து சுலபமாகவும் திறமையாகவும் தங்களது கடன் வழங்கும் பணியினைச் செய்வதற்காக அவற்றின் கடன் கட்டமைப்பிற்குத் தேவையான மாற்றங்கள் செய்வது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

3.8 தொடக்கக் கடன் வழங்கும் வங்கிகளும், கூட்டுறவுச் சங்கங்களும் பல ஆண்டுகளாக, பல்வேறு காரணங்களினால் நட்டமடைந்து வந்துள்ளன என்பது அரசுக்குத் தெரியும். அத்தகைய நிறுவனங்களைக் கண்டறிந்து, அவற்றைப் புனரமைத்து, பின்னர் வலுப்படுத்துவது அரசின் தார்மீகக் கடமை ஆகும். எனினும், அவ்வாறு புனரமைக்க முடியாத நிறுவனங்களைத் தொடர்ந்து செயல்பட அனுமதிப்பதை விட அவற்றைக் கலைத்து விடுவதே சிறந்ததாகும். ஏனெனில், தங்களது பொறுப்புகளை அவை நிறைவேற்றாவிட்டால், கூட்டுறவுக் கடன் கட்டமைப்பினை முழுமையாக அது பாதிக்கும்.

3.9 மாநிலத்தில் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வரும் பலவித கூட்டுறவுக் கடன் அமைப்புகள் மற்றும் அவற்றின் நடைமுறை விவரங்கள் பற்றி பின்வரும் பத்திகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி**

3.10 மாவட்ட அளவில் இயங்கி வரும் மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பான தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி விவசாயக் கடன் வழங்குவதில் பெரும் பங்காற்றி வருகிறது. இவ்வங்கி 26-11-1905 ஆம் நாளன்று துவக்கப்பட்டது. விவசாயிகளுக்கு குறுகிய கால, மத்திய கால மற்றும் நீண்ட கால விவசாயக் கடன்களை வழங்குவதுடன், நெசவாளர்களுக்கும் குறுகிய காலக் கடன் வழங்குகிறது. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பணிகளுக்காக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறும் கடன் தொகையினை இவ்வங்கி நெறிப்படுத்தி வழங்குகிறது. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கும் மற்றும் அதன் உறுப்பினர் சங்கங்களுக்கும் நிதியுதவி வழங்குவதற்கு தனது சொந்த நிதியிலிருந்து இவ்வங்கி காசுக்கடனும் வழங்குகிறது.

3.11 இந்த வங்கி கூட்டுறவு சர்க்கரை ஆலை/நூற்பாலை ஆகியவைகளுக்கு பெருமளவு மூலதன மறு நிதியுதவி அளித்து அவற்றின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரிகிறது. ஏனைய தலைமைக் கூட்டுறவு அமைப்புகளுக்கும் நிதயுதவி அளித்து வருகிறது. இது தவிர சிறு தொழில்களுக்கும் பண்ணைசாராப் பணிகளுக்கும் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்கும் இவ்வங்கி கடன் உதவி அளிக்கிறது.

3.12 மாநிலத்திலுள்ள தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்த "தொடக்கக் கூட்டுறவு மேம்பாட்டு நிதி" என்னும் நிதி ஒன்று துவக்கப்பட்டுள்ளது. தலைமை வங்கியும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் இந்நிதிக்காக அவற்றின் நிகர இலாபத்திலிருந்து 5 சதவிகித்தை அளிக்கின்றன. இதுவரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பல்வேறு நோக்கங்களுக்காக 2095.51 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

3.13 இத்தலைமை வங்கியின் நிதிநிலைமை பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| i | பங்குமூலதனம் | 34.58 |
| ii | ஒதுக்கீடுகள் | 295.50 |
| iii | வைப்புத் தொகை | 2924.22 |
| iv | நிலுவையிலுள்ள கடன் | 1951.30 |
| v | நிகர ஆதாயம் (31-3-2003 அன்று உள்ளபடி) | 57.19 |

**மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள்**

3.14 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், அவை அமைந்துள்ள பகுதியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் மற்றைய கூட்டுறவுகளின் ஒரு கூட்டமைப்பு ஆகும். தற்போது இம்மாநிலத்தில் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் பங்கு மூலதனம், சேமநிதி மற்றும் வைப்பு நிதி ஆகிய சொந்த நிதி ஆதாரங்களிலிருந்தும், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து கடன் பெற்றும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு கடன் வழங்குகின்றன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இவ்வங்கிகளிடம் நிதியுதவி பெறுகின்றன.



3.15 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், வேளாண் சாரா தொழில்களான லாரிகள், பேருந்துகள், இடித்து தகர்க்கும் இயந்திரம், மண்வாரும் இயந்திரங்கள் ஆகியன வாங்குதல், வீடு கட்டுதல், மருத்துவர்கள் சொந்த மருத்துவமனை அமைத்தல், பொறியாளர்கள் சேவை மையங்கள் அமைத்தல் மற்றும் உறுப்பினர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி பயிலுதல் போன்ற நோக்கங்களுக்காகவும் கடனுதவி அளித்து வருகின்றன.

3.16 31-3-2003 அன்றுள்ளபடி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதிநிலைமை பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| i. | பங்கு மூலதனம் | 384.03 |
| ii. | ஒதுக்கீடுகள் | 556.09 |
| iii. | வைப்புத் தொகை | 7262.35 |
| iv. | நடைமுதல் | 9835.13 |

**தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்**

3.17 கிராமங்களில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களது உறுப்பினர்களின் விவசாயத்திற்கான குறுகிய கால வேளாண் கடன் தேவைகளை நிறைவு செய்கின்றன. இக்கடனை 12 முதல் 15 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். இவ்வங்கியின் அங்கத்தினர்களுக்கு விவசாயம் சார்ந்த தொழில்களான பால் பண்ணை அமைத்தல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்றவற்றிற்கும் இவ்வங்கிகள் மத்திய காலக் கடன்களையும் வழங்குகின்றன. இந்தக் கடன்களை 3 முதல் 5 ஆண்டுகளுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். தற்போது மாநிலத்தில் 4,595 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

3.18 10 ஏக்கர் வரை சொந்த ஜாமீன் பேரில் பதிவு செய்யப்பட்ட கரும்பு மற்றும் இதர பயிர்களுக்கு கடன் அளவுகளுக்கேற்ப பயிர்க் கடன் வழங்கப்படுகிறது. நெல், பருத்தி, நிலக்கடலை, மஞ்சள், எள், காய்கறி வகைகள், பூச்செடிகள் முதலான இதர பயிர்களுக்கும் நபர் ஜாமீன்

பேரில் 1,00,000 ரூபாய் கடன் வழங்கப்படுகின்றது. 10 ஏக்கருக்கு மேற்பட்ட பதிவு செய்யப்பட்ட கரும்புப் பயிர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு கடன் அளவுகளுக்கேற்ப சொத்து அடமானத்தின் பேரில் கடன் வழங்கப்படுகிறது. பிற பயிர்கள் சாகுபடிக்கு சொத்து அடமானத்தின் பேரில் 1,00,000 ரூபாய்க்கு அதிகமாகக் கடன் வழங்கப்படுகிறது.

3.19 இத்தொடக்க வங்கிகள், வேளாண் தொழில்களுக்கு மட்டுமல்லாது, வேளாண் நிலம் வாங்கவும், டிராக்டர்கள், பவர் டில்லர்கள் மற்றும் இதர வேளாண் உபகரணங்கள் வாங்கவும் கடன் வசதி அளிக்கின்றன. இவ்வங்கிகள், வீட்டுவசதிப் பொருட்கள், இரு சக்கர வாகனங்கள், டெம்போக்கள், டிரக்குகள், பேருந்துகள், கார்கள், ஜீப்புகள் வாங்கவும், வீடுகள் கட்டவும், பழுது பார்க்கவும், மருத்துவர், பொறியாளர்களுக்கு சேவை மையங்கள் துவக்கவும் தங்களது வைப்புத் தொகைகளைப் பயன்படுத்தி கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

3.20 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 31-3-2003 வரை 3164.93 கோடி ரூபாய் அளவிற்கு வைப்புத் தொகை நிதி திரட்டியுள்ளன.

**கடன் வழங்கு பணிகளில் முன்னேற்றம்**

3.21 கடந்த ஐந்தாண்டு காலத்தில் குறுகிய மற்றும் நடுத்தரக் கடன்கள் வழங்கும் பணியில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | குறுகிய காலப் பயிர்/சாகுப்படிக் கடன்கள் | | துணைத் தொழில்களுக்கான நடுத்தர வேளாண்மைக் கடன்கள் | | வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் (குறுகிய மற்றும் நடுத்தா) |
|---|---|---|---|---|---|
| | குறியீடு | சாதனை | குறியீடு | சாதனை | |
| 1998-1999 | 925.00 | 732.12 | 100.00 | 117.13 | 849.25 |
| 1999-2000 | 1050.00 | 879.04 | 100.00 | 111.73 | 990.77 |
| 2000-2001 | 1200.00 | 1049.26 | 110.00 | 69.06 | 1118.32 |
| 2001-2002 | 1200.00 | 1118.04 | 110.00 | 64.93 | 1182.97 |
| 2002-2003 | 1360.00 | 963.69 | 106.00 | 94.37 | 1058.06 |



3.22 பண்ணைசாரா தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்காக கடந்த ஐந்தாண்டு காலத்தில் வழங்கப்பட்ட கடன் அளவு பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் |
|---|---|---|
| 1998-1999 | 25.48 | 33.49 |
| 1999-2000 | 48.17 | 67.88 |
| 2000-2001 | 84.74 | 57.02 |
| 2001-2002 | 41.19 | 68.75 |
| 2002-2003 | 43.39 | 75.50 |

**தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி**

3.23 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அனைத்து தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் கூட்டமைப்பாகும். வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை வளர்க்கவும் ஊரக வளர்ச்சிக்கும் இவ்வங்கி நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது. மேலே கூறப்பட்டுள்ள குறிக்கோளை அடைவதற்காக இவ்வங்கி கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

1. கடனீட்டு பத்திரங்களை வெளியிடுதல்;

2. வைப்புத் தொகை பெறுதல்;

3. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஒப்புதலளித்துள்ள நோக்கங்களுக்காக தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்காக கடன் அளித்தல்; மற்றும்

4. தன்னைச் சார்ந்த தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை மேம்படுத்துதல், உதவி செய்தல் மற்றும் அவற்றின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

[2003 மே 7

3.24 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மாநில அளவிலான தனது 20 மண்டல அலுவலகங்கள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் வாயிலாக விவசாயிகளுக்கும் கிராமத்திலுள்ள தொழில் முனைவோர்களுக்கும் கடன் வசதி அளிக்கிறது.

3.25 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி விவசாய மற்றும் [illegible] சார்ந்த பணிகளான கிணறுகள் [illegible] பண்ணை [illegible] நிலம் [illegible] புதிய கிணறுகள் தோண்டுதல், பழைய கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற பாசன வேலைகளுக்கும் நீண்ட கால மற்றும் மத்திய கால கடன்களை வழங்குகிறது. இது [illegible] அமைத்தல், பண்ணை [illegible] இயந்திரமயமாக்குதல், வேளாண்மை சாரா பணிகள் மற்றும் பிற சிறு பாசன வேலைகளுக்கும் கடன் வழங்குகின்றது.

3.26 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி கீழ்க்கண்டவாறு கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்டுகிறது.

1. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மத்திய, மாநில அரசுகள் முதலீடு செய்யும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள்.

2. மாநில மற்றும் மைய அரசுகள் மற்றும் பிற நிறுவன முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள்.

31-3-2003 வரை சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்களில் முறையே [illegible] கோடி ரூபாய் மற்றும் 1092.99 கோடி ரூபாய் திருப்பி வழங்கப்பட வேண்டியுள்ளது.

3.27 31-3-2003 அன்றைய நிலவரப்படி வங்கியின் சொந்த நிதி ஆதாரம் 309.75 கோடி ரூபாய் ஆகும். இதன் விவரம் பின்வருமாறு:—

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | பங்கு மூலதனம் | 10.89 |
| 2 | சட்டரீதியான காப்பீடு | 6.71 |
| 3. | மற்ற காப்பீடுகள் (தவணை கடந்த கடனுக்கான காப்பீடு உட்பட) | 262.15 |
| | மொத்தம் | 309.75 |



2003 மே 7]

3.28 சாதாரண கடனீட்டுப் பத்திரங்கள் ஒவ்வொரு வரிசையிலும் முதிர்வடையும் போது, அவற்றை மீட்க ஏதுவாக, இவ்வங்கி, "கடனீட்டுப் பத்திர மீட்பு நிதி" என்னும் நிதி ஒன்றினை பராமரித்து வருகிறது. அந்நிதியில் 31-3-2003 அன்றைய தேதியில் 28.70 கோடி ரூபாய் உள்ளது.

**கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்**

3.29 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் விவசாயிகளுக்கு நீண்ட காலக் கடன்களை அளிக்கின்றன. இக்கடனை 5 முதல் 15 ஆண்டுகளுக்குள் திருப்பி அளிக்க வேண்டும். இவை விவசாயிகளுக்கு சிறு பாசனம், தோட்டப் பயிர்கள் வளர்த்தல் போன்ற வளர்ச்சிப் பணிகளுக்கும் மற்றும் கோழி வளர்த்தல், பால்பண்ணை அமைத்தல், பட்டுப்புழு வளர்த்தல் போன்ற பிற பணிகளுக்கும் திட்ட அடிப்படையில் கடன்கள் வழங்குகின்றன. இதற்கான நிதி ஆதாரத்தை இவை தலைமை வங்கியான தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து பெறுகின்றன. தற்போது இம்மாநிலத்தில் 181 தொடக்க வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

3.30 கடந்த ஐந்தாண்டு காலத்தில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் அளித்துள்ள நீண்டகாலக் கடன்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| ஆண்டு | வழங்கப்பட்ட கடன் அளவு (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 1998-1999 | 212.51 |
| 1999-2000 | 202.17 |
| 2000-2001 | 202.17 |
| 2001-2002 | 183.52 |
| 2002-2003 | 218.15 |

3.31 நிதி நிறுவனங்கள் கடன் வழங்குவதில் ஏற்பட்டுள்ள மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, பண்ணைசாரா துறைகளிலும் கடன் வழங்க தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**1. கைவினைஞர், கைத்தொழில் வல்லுநர் மற்றும் சிறுதொழில் முனைவோர்களுக்கு நிதி வசதி அளித்தல்**

3.32 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், கிராம கைவினைஞர், கைத்தொழில் வல்லுநர்கள் மற்றும் சிறுதொழில் முனைவோர் ஆகியோருக்கு பண்ணைசாராக் கடன்கள் வழங்கும் திட்டம் மூலம் 1990-91 முதல் நிதியுதவி அளித்து வருகின்றன. தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெறுவதற்கான தகுதிகளை முற்றிலும் கணக்கில் கொள்ளாமல் தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி 100 சதவிகிதம் மறுநிதி அளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ் மூன்று இலட்சம் ரூபாய் வரை தனிப்பட்ட கடனாகவும் பதினைந்து இலட்சம் ரூபாய் வரை ஒருங்கிணைந்த கடனாகவும் வழங்கப்படுகின்றன.

3.33. இத்திட்டத்தின்கீழ் 2002-2003-ஆம் ஆண்டில் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளால் ரூ.58.21 கோடி மதிப்புள்ள பண்ணைசாராக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**2. கிராமப்புறங்களில் சிறிய போக்குவரத்து வாகனங்கள் இயக்குபவர்களுக்கு கடன் வழங்குதல்**

3.34 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், தனியாருக்கும் பலபேர் கொண்ட குழுக்களுக்கும் கிராமப்புறங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கும் 16.2 டன்னுக்கு மேல் எடையில்லாத சரக்கு வாகனங்கள் மற்றும் ஆட்கள் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் வாங்குவதற்கு கடன் வழங்குகின்றன. இத் திட்டத்தின்கீழ் 85 சதவிகிதம் கடனாக வழங்கப்படும்.

**நகர்ப்புறக் கடன்**

3.35 தற்போது தமிழகத்தில் 125 நகரக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. அனைத்து நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகளும் தங்களுக்குத் தேவையான நிதி ஆதாரத்தை பொது மக்கள் மற்றும் தங்களது உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து வைப்புத் தொகைகளைப் பெற்றும், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்றும் திரட்டுகின்றன. இந்த நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள், குறிப்பிட்ட சில காரணங்களுக்காகக் கடன் வழங்குவதற்கு இந்நிதியைப் பயன்படுத்துகின்றன. சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் குடும்பத்தினருக்கு





வீட்டினை விரிவுபடுத்துதல் மற்றும் பழுதுபார்த்தல், சிறிய அளவிலான தொழில் மற்றும் குடிசைத் தொழில் அமைத்திடல் போன்றவற்றிற்கும் இவை கடன் வழங்குகின்றன. இந்திய தலைமை வங்கி நிர்ணயம் செய்துள்ள நெறிமுறைகளின்படி, இவ்வங்கிகள் வழங்கும் மொத்தக் கடன் தொகையில் 60 விழுக்காட்டிற்குக் குறையாமல் முன்னுரிமை துறைகளுக்கு வழங்கிட வேண்டும். 31-3-2003 அன்றுள்ளபடி நகரக் கூட்டுறவு வங்கிகளிடமுள்ள மொத்த வைப்புத் தொகை ரூ.2,955.16 கோடியாகும்.

**நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் பண்ணைசாராத் தொழில்களுக்கு கடன் வழங்குதல்**

3.36 நகரக் கூட்டுறவு வங்கிகள் பண்ணைசாராத் தொழில்களான குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கும் கடன் வழங்கி வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 31-3-2003 வரை 175.55 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 58,834 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**சில சிறப்புத் திட்டங்கள்**

**1. ஆதிதிராவிட இன மக்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்**

3.37 ஆதிதிராவிட இன மக்கள் அதிக அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் அங்கத்தினர்களாவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் பங்கு மூலதனத்திற்காக ரூ.200/- மானியமாக வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்பட்ட நிதியுதவியின் விவரம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | வழங்கப்பட்ட பணம் | பயனாளிகள் |
|---|---|---|
| 2001-2002 | 10.00 | 5,000 |
| 2002-2003 | 11.11 | 5,555 |

3.38 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு அவர்களது

[2003 மே 7

கடன் வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்காக பங்கு மூலதன உதவியாக 250 ரூபாய் வட்டியில்லாக் கடனாக வழங்கப்படுகிறது. இத்தொகையை ஐந்தாண்டுகளில் சரிசமமான தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 1992-93-லிருந்து 2001-2002 வரையிலான காலத்தில் 80,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு இரண்டு கோடி ரூபாய் உதவி வழங்கப்பட்டது. 2002-2003 ஆம் ஆண்டில் 16,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு நாற்பது இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

3.39. நகரக் கூட்டுறவு வங்கிகளிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு உதவி செய்வதற்காக தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஆதிதிராவிட அங்கத்தினருக்கும் 500 ரூபாய் வட்டியில்லா பங்கு மூலதனக் கடனாக வழங்கப்படுகிறது. இது அவர்களது கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும். இத்தொகையை ஐந்து சரிசமமான தவணைகளில் திருப்பித் தரவேண்டும். இத்திட்டத்தின்கீழ் 1992-93-லிருந்து 2002-2003 வரை 18,017 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு 90 இலட்சம் ரூபாய் உதவி வழங்கப்பட்டுள்ளது.

## 2. நலிந்த பிரிவினர்களுக்கு கடன் வழங்குதல்

3.40 மாநிலத்திலுள்ள நலிவுற்ற பிரிவினர்களின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் நெறிமுறைகளின்படி வழங்கப்படும் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு அளவிற்கு சிறு விவசாயிகளுக்கு, அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைந்த அளவு நன்செய் அல்லது புன்செய் நிலத்தின் சொந்தக்காரர்கள்/பயிரிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இருப்பினும் குறுகிய காலக் கடனில் 60 விழுக்காடு அளவிற்கும், நடுத்தர காலக் கடனில் 75 விழுக்காடு அளவிற்கும் நலிந்த பிரிவினர்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.41. கடந்த இரண்டாண்டுகளில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட குறுகிய கால மற்றும் நடுத்தர காலக் கடன்களின் அளவு பின்வருமாறு:



2003 மே 7]

(ரூபாய் கோடியில்)

| | | | சாதனை | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | விவரங்கள் | ஆண்டு | குறியீடு (விழுக்காடு) | நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்ட தொகை | வழங்கப்பட்ட மொத்த கடனின் விழுக்காடு |
| 1. | குறுகிய காலக் கடன் | 2001-2002 | 67 | 638.59 | 57.10 |
| | | 2002-2003 | 67 | 647.50 | 67.18 |
| 2. | நடுத்தரக் காலக் கடன் | 2001-2002 | 9.5 | 47.08 | 72.50 |
| | | 2002-2003 | 9.5 | 70.83 | 75.05 |

3.42 2002-2003ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 14 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 30 விழுக்காடும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் 31-3-2003 வரையில் முறையே 10.2 சதவிகிதமும், 14.9 சதவிகிதமும் வழங்கப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் இதே விகிதத்தில் இவர்களுக்கு கடன் வழங்கலாம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

3.43 கிராம மக்களுக்கு, குறிப்பாக சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினருக்கு கூட்டுறவுகள் நீண்ட காலக் கடன்களை வழங்கி வருகின்றன.

3.44 கடந்த ஐந்தாண்டுகளாக வழங்கப்பட்ட கடன்களின் விவரம் பின்வருமாறு:-

(ரூபாய் கோடியில்)

| வருடம் | வழங்கப்பட்ட மொத்த கடன் | நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் | வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடனின் விழுக்காடு |
|---|---|---|---|
| 1998-1999 | 212.51 | 41.83 | 19.7 |
| 1999-2000 | 202.17 | 48.44 | 24.0 |
| 2000-2001 | 202.17 | 49.86 | 25.0 |
| 2001-2002 | 183.52 | 40.03 | 22.0 |
| 2002-2003 | 218.15 | 51.53 | 23.6 |

### 3. மகளிர் வளர்ச்சிப் பிரிவு

3.45 ஒவ்வொரு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் மகளிர் வளர்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு, மகளிர் அவர்களது தொழிலிலோ அல்லது வணிகத்திலோ முதலீடு செய்வதற்கு கடன்பெற உதவி செய்கிறது.

### 4. மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்

3.46 மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளும், நகரக் கூட்டுறவு வங்கிகளும் 5 இலட்சம் ரூபாய் வரையில் 60 சம தவணைகளில் திரும்பச் செலுத்தும் வகையில் 13 சதவிகித வட்டியில் சிறு தொழில்கள் மற்றும் சேவை மையங்கள் தொடங்க கடன் வழங்கி வருகின்றன. இந்தப் புதிய மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம் 19-10-2001 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கடன் திட்டத்தின்கீழ் 31-3-2003 வரை 414 மகளிர் தொழில் முனைவோருக்கு 290.27 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

### 5. மாத வருமானம் பெறும் மகளிருக்கான கடன் திட்டம்

3.47 பணிபுரியும் மகளிருக்கான கடன் திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளாலும், நகரக் கூட்டுறவு வங்கிகளாலும் ரூ.20,000/- வரை கடனாக மாத சம்பளம் பெறும் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடன் பெறும் மகளிர் கடன் பெறவுள்ள வங்கியில் மூன்று ஆண்டிற்கு ஒரு தொடர் வைப்புக் கணக்கு தொடங்க வேண்டும். மேற்கண்ட கடன் 36 மாதத் தவணைகளில் 13 சதவிகித வட்டியில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 31-3-2003 வரையில் 6,500 மகளிர் பயனாளிகளுக்கு 1,124.93 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

### 6. கர்ப்பிணிப் பெண்களுக்கு கடன் வழங்கும் திட்டம்

3.48 இத்திட்டத்தின்கீழ் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவை மகளிருக்கு பேறுகாலக் கடனாக 2,000 ரூபாய் வரை





அளிக்கின்றன. 31-3-2003 வரை இத்திட்டத்தின்கீழ் 7,626 பெண்கள் 150.51 இலட்சம் ரூபாய் கடன் பெற்றுள்ளனர்.

### 7. சீரமைக்கப்பட்ட சேமிப்புடன் இணைந்த மகளிர் சிறுவணிகக் கடன் திட்டம்

3.49 1-1-1999 முதல் அமலில் இருந்து வந்த சேமிப்புடன் இணைந்த சிறுவணிகக் கடன் திட்டம் சீரமைக்கப்பட்டு, சீரமைக்கப்பட்ட சிறுவணிகக் கடன் திட்டத்தை 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அரசு அறிமுகம் செய்தது. இத்திட்டத்தின்கீழ் பூக்கள், காய்கறிகள், பழங்கள் முதலியவற்றை சிறிய அளவில் வியாபாரம் செய்வோர் மற்றும் பெட்டிக்கடை நடத்தும் மகளிர் குறைந்தபட்சமாக 100 ரூபாய் முதல அதிகபட்சமாக 5,000 ரூபாய் வரை கடன் வசதி பெறலாம்.

3.50 சென்ற ஆண்டு இத்திட்டம் சீரமைக்கப்பட்டபோது இத்திட்டத்திற்கான விதிமுறைகள் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளன:—

- இத்திட்டத்தின் கீழ் வசூலிக்கப்படும் சேவைக் கட்டணம் கைவிடப்படுகிறது.
- வட்டி வீதம் 18 சதவிகிதத்திலிருந்து 15 சதவிகிதமாக குறைக்கப்படுகிறது.
- பயனாளி திரும்பச் செலுத்தும் தொகையை சேமிப்புக் கணக்கில் வரவு வைப்பதை தவிர்த்து அவருடைய கடன் கணக்கில் வரவு வைக்கவேண்டும்.
- குறைந்து வரும் நிலுவை முறைப்படி (Reducing Balance) வட்டியைக் கணக்கிடவேண்டும்.
- தினந்தோறும் கடன் தொகையை செலுத்துவதைவிட அவர்கள் விரும்பினால் வாரத்தில் ஒருமுறை செலுத்தலாம்.
- வாங்கிய கடனை திரும்பிச் செலுத்தும் காலம் தற்போதுள்ள 118 நாட்களிலிருந்து 147 நாட்களாக நீட்டிக்கப்படுகிறது.
- இத்திட்டத்தின்படி 1,000 ரூபாய் கடன் வாங்கியிருந்தால் பயனாளிக்கு ரூ.146.80 நிகர சேமிப்பாக இருக்கும்.

[2003 மே 7

3.51 சீரமைக்கப்பட்ட சிறுவணிகக் கடன் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளில் 31-3-2003 வரையில் 64,976 நபர்களுக்கு 16.5954 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய ஊரக வளர்ச்சி வங்கிகளிடமிருந்து மறுநிதி பெற்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து, ஊரகப் பகுதிகளில், சுய உதவிக் குழுக்களுக்கு சிறுவணிகக் கடன் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது. இதுவரை, இவ்வங்கிகளில் 17,708 சுய உதவிக் குழுக்களுக்கு 6536.08 இலட்சம் ரூபாய் அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

## 8. நகைக் கடன்

3.52 பொதுமக்களுக்கு நிறுவனம் சாராக் கடன் வழங்க அமைப்புகள் ஏதும் இல்லாததால், மாநிலம் முழுவதும் உள்ள கூட்டுறவுகள், பொதுமக்கள் அதிலும் குறிப்பாக கிராமப்புற மக்களின் உடனடி கடன் தேவைகளை நிறைவு செய்வதற்காக நகைக் கடன்கள் வழங்குகின்றன. இந்த நகைக் கடன்களுக்கு அனைத்து கூட்டுறவு வங்கிகளிலும் ஒரே சீராக 13 சதவிகித வட்டி வசூலிக்கப்படுகிறது.

3.53 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் கீழ்க்கண்டவாறு கூட்டுறவு வங்கிகளால் நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | அளிக்கப்பட்ட கடன் (ரூபாய் கோடியில்) |
|---|---|
| 2001-2002 | 3977.27 |
| 2002-2003 | 4705.54 |

## 9. விவசாயி கடன் அட்டைத் திட்டம்

3.54 இவ்வரசு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் உருவாக்கப்பட்ட விவசாயி கடன் அட்டைத் திட்டத்தினை கடைப்பிடித்து வருகிறது. இத்திட்டம் வேளாண் தொழிலுக்கு தேவையான இடுபொருட்களை சிரமமின்றியும் சரியான விலையிலும் வாங்குவதற்கு ஏதுவாக தேவைப்படும் கடனை விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது. இத்திட்டம்



2003 மே 7]

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

3.55 31-3-2003 வரை தமிழ்நாட்டிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் 11,19,531 விவசாயிகளுக்கு விவசாயக் கடன் அட்டைகளை 814.74 கோடி ரூபாய் கடன் பெறும் வகையில் வழங்கியுள்ளது. இது தவிர இந்த அட்டைதாரர்களுக்கு காப்புறுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இந்தக் காப்புறுதி அட்டை வைத்திருக்கும் விவசாயிக்கு வங்கி மற்றும் விவசாயி ஆகியோரால் 2 : 1 என்ற விகிதத்தில் காப்பீட்டு தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டும். 2,54,793 பேர் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர்.

## 10. தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம்

3.56 மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட தேசிய வேளாண்மை காப்பீட்டுத் திட்டத்தை இம்மாநிலம் 2000 காரீப் பருவத்திலிருந்து கடைப்பிடித்து வருகிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

1. அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்கள் எவையேனும் இயற்கைச் சீற்றத்தாலோ, பூச்சிகளாலோ, நோயினாலோ அழிந்துவிடும் பட்சத்தில் அப்பயிர்களுக்கு காப்புறுதியும் நிதி உதவியும் அளித்தல்;

2. விவசாயிகள் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றவும், அதிக வீரியமுள்ள இடுபொருட்களைப் பயன்படுத்தவும், நவீன தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தவும் அவர்களை ஊக்கப்படுத்துதல்; மற்றும்

3. பண்ணை வரவுகளை, குறிப்பாக சிரமமான காலங்களில் கூட சீராக வைத்திருத்தல்.

3.57 இத்திட்டத்தில், கீழ்க்கண்ட விவசாயிகள் பங்கு பெறுவார்கள்:

(அ) அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களைச் சாகுபடி செய்து வேளாண் பருவகால நடவடிக்கைகளுக்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றவர்கள், அதாவது கடன் பெற்ற விவசாயிகள் கட்டாயமாகச் சேரவேண்டும்.

(ஆ) அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களைச் சாகுபடி செய்யும் கடன்பெறாத விவசாயிகள் இத்திட்டத்தில் தாங்களாக விருப்பப்பட்டுச் சேரலாம்.

[2003 மே 7

3.58 பயிர் அறுவடைச் சோதனைகள் அடிப்படையில் கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்ட விளைச்சல் மற்றும் குறிப்பிட்ட பருவத்தில் விளைச்சல் எவ்வாறிருக்கும் என்பதற்காகத் தேவையான எண்ணிக்கையில் பயிர் அறுவடைச் சோதனைகள் செய்யப்பட்டிருக்கும் கீழ்க்கண்ட பிரிவுகளில் உள்ள பயிர்கள் இத்திட்டத்தில் அடங்கும்:—

(அ) உணவு தானியப் பயிர்கள் (தானியங்கள், சிறுதானியம் மற்றும் பருப்பு)

(ஆ) எண்ணெய் வித்துக்கள்

(இ) கரும்பு, பருத்தி மற்றும் உருளைக்கிழங்கு (வருடாந்திர வணிக/தோட்டப் பயிர்கள்)

3.59 இத்திட்டத்தின்படி மாநில அரசு கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக நிதி உதவி அளிக்கவேண்டும்:

1. காப்புறுதித் தவணைக் கட்டண மானியம், நிர்வாகச் செலவு மற்றும் விளம்பரம் அளித்தல்;

2. பேரிழப்பு ஏற்பட்டு அதை சமாளிப்பதற்காக அமைக்கப்பட்ட நிதியத்திற்கு பங்களிப்பு; மற்றும்

3. ஈட்டுறுதி கேட்பு.

3.60 இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதாவது காரீப் 2000 முதல் ராபி (பிற பயிர்கள்) 2001-02 வரை, 17.18 கோடி ரூபாய் வழங்கப்பட்டு 72,154 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டின் முதல் பருவத்தில், அதாவது நெல்-1 (கார்/குறுவை/சொர்ணவாரி); 2002 பருவத்தில், 11,739 விவசாயிகளுக்கு ரூ.2,64,81,606.44 கேட்புகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 11. கடன் வசூல் பணி

3.61 எந்தவொரு கடன் நிறுவனமும் தாம் வழங்கிய கடன்களை தவணை தேதிக்குள் வசூல் செய்வதை தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். கூட்டுறவு கடன் நிறுவனங்களின் நிதிநிலைமை, கடன்களை தவணை தவறுவதற்கு முன்பாக வசூல் செய்வதை பொறுத்துத்தான் அமையும். தவணை தவறிய கடன் அளவினை



2003 மே 7]

கட்டுப்பாட்டுக்குள் வைக்காவிடில், கூட்டுறவுகள் தொடர்ந்து நிதிச்சுழற்சி செய்து வணிக விரிவாக்கம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டு அதனால் அவற்றின் செயல்பாடுகள் முடங்கிவிடும் சூழ்நிலைகள் உருவாகக் கூடும். தாம் பெற்ற கடனை தவணை தேதிக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களின் மனதில் ஏற்பட வேண்டும். அவ்வாறு ஏற்பட்டால்தான் அவர்களால் பருவகால வேளாண்மைத் தேவைகளுக்கு தொடர்ந்து மேலும் கடன் வசதி பெற இயலும். மேலும், தொடக்க கூட்டுறவு வேளாண்மைத் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் இலாபத்தில் இயங்கவும், நிலைத்து நிற்கவும் தவணை கடந்த கடன்களை அதிக அளவு வசூலிப்பது தேவையான ஒன்றாகும். வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்கள் அடிக்கடி நேருவதும் கடனை அப்போதைக்கப்போது செலுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் கடன் பெற்றவர்களுக்கு தோன்றாததும் தவணை கடந்த கடன்கள் அதிகமாவதற்கு முக்கிய காரணங்களாகும்.

3.62 கடந்த நான்கு ஆண்டுகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் கடன் வசூலில் ஏற்பட்ட முன்னேற்றம் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| தேதியன்று | கடன் நிலுவைத் தொகை | தவணை தவறிய நிலுவைத் தொகை | கேட்பில் தவணை தவறிய நிலுவையில் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-06-1999 | 3382.94 | 905.77 | 33.20 |
| 30-06-2000 | 3985.15 | 974.99 | 28.80 |
| 30-06-2001 | 4443.05 | 1157.70 | 31.40 |
| 30-06-2002 | 4861.49 | 1156.18 | 26.40 |

அதைப்போன்றே தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி [illegible]களில் தவணை கடந்த நிலுவைத் தொகைகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

[2003 மே 7

(ரூபாய் கோடியில்)

| தேதியன்று | கடன் நிலுவைத் தொகை | தவணை கடந்த நிலுவைத் தொகை | நிலுவை கேட்பில் தவணை கடந்த தொகையின் விழுக்காடு |
|---|---|---|---|
| 30-06-1999 | 907.31 | 233.46 | 53.0 |
| 30-06-2000 | 998.34 | 278.63 | 53.0 |
| 30-06-2001 | 1057.14 | 339.60 | 50.0 |
| 30-06-2002 | 1093.03 | 376.51 | 56.5 |

## 12. ஒட்டுமொத்த கடன்தீர்வுத் திட்டம் (One time settlement)

3.63 நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெற்றவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும், தவணை தவறிய கடன்கள் மற்றும் நீண்டகாலமாக உள்ள நிலுவைத் தொகைகளை வசூலித்திட வழிவகுக்கவும் ஒட்டுமொத்த கடன்தீர்வுத் திட்டம் என்ற திட்டத்தை அரசு அறிவித்தது.

3.64 இத்திட்டத்தின் கீழ் அபராத வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்வதோடு 1998 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் நாளன்று வட்டி உட்பட நிலுவைத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தீர்வு செய்யப்படும். தற்போது மாநிலத்தில் உள்ள வறட்சியினை கருத்தில் கொண்டு இத்திட்டச் செயலாக்கம் 31-3-2003 வரை அரசால் நீட்டிக்கப்பட்டது.

3.65 31-3-2003 வரை இத்திட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| கடன் விவரம் | தீர்வு பெறப்பட்டவை | | கடன் வசூல் | அளிக்கப்பட்ட நிவாரணம் |
|---|---|---|---|---|
| | கடன் பெற்றவர்கள் | தொகை | தொகை | தொகை |
| குறுகிய காலக் கடன் | 9692 | 729.76 | 662.33 | 274.01 |
| நகர வங்கி | 10327 | 443.46 | 147.66 | 67.26 |
| நீண்டகாலக் கடன் | 81848 | 8121.19 | 1729.59 | 687.58 |
| மொத்தம் | 101867 | 9294.41 | 2539.58 | 1028.85 |



2003 மே 7]

## 13. விவசாயிகளுக்கு நிதியுதவி

3.66 2002-2003 ஆம் ஆண்டு ஏற்பட்ட பருவ மாற்றங்களின் காரணமாக இம்மாநில விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கர்நாடக அரசு காவிரி தீர்ப்பாயத்தின் அறிவுரைகளைப் பின்பற்றாத காரணத்தால், ஜூன் மாதம் 12 ஆம் நாள் திறந்திருக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை செப்டம்பர் 6 ஆம் நாள்தான் திறந்து விடப்பட்டது. இவ்வாறு தண்ணீர் தாமதமாகத் திறந்துவிடப்பட்டதால் குறுவைப் பயிர் முழுவதுமாக பாதிக்கப்பட்டது. அத்துடன் விவசாயிகளின் துயரை மேலும் அதிகரிக்கும் வகையில் பருவமழை பொய்த்ததாலும், கர்நாடக அரசு உரிய அளவு தண்ணீரைத் தராததாலும் சம்பா பயிரும் பாதிக்கப்பட்டது. இந்த அரசு விவசாயிகளின் துயர் துடைக்க பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. சென்னை தவிர, மாநிலத்தின் 28 மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 28-3-2003 அன்று சட்டமன்றப் பேரவையில் உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறு மற்றும் குறு விவசாயிகள் சாகுபடி செய்த பயிர்கள் சேதமடைந்திருந்தால் அப்பயிர்க் கடனுக்கான வட்டி அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுமென அறிவித்தார்கள். இத்தள்ளுபடி காரணமாக அரசுக்கு சுமார் 50 கோடி ரூபாய் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3.67 இது தவிர மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இம்மாநில விவசாயிகள் வாங்கியுள்ள அனைத்து குறுகிய காலக் கடன்களையும் மத்திய காலக் கடன்களாக மாற்ற தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி அணுகப்படும் எனவும் அறிவித்துள்ளார்கள்.

## 14. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பங்கு மூலதனத்துக்கான கடன்

3.68 தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது தேசிய ஊரகக் கடன் நிதியிலிருந்து (நீண்ட காலக் கடன்) அளித்துள்ள ரூ.57.74 இலட்சத்தை மாநில அரசு பெற்று திண்டுக்கல், தேனி, திருவாரூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள 197 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு பங்குமூலதனக் கடனாக அளித்துள்ளது. இதனால் ஊரகப் பகுதி மக்கள் அதிக கடன் பெற இயலும்.

[2003 மே 7

## அத்தியாயம்-4

### ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

4.1 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் தேசியக் கூட்டுறவுக் கழகத்தால் தொடங்கப்பட்டு செயற்படுத்தப்படும் பரந்த நோக்குடைய திட்டமாகும். கூட்டுறவுச் சங்கங்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் அவற்றை வலுப்படுத்துதல் ஆகியன இத்திட்டத்தின் நோக்கமாகும். கூட்டுறவுச் சங்கத்தின் வளர்ச்சி என்பதைவிட பகுதி சார்ந்த வளர்ச்சியை எட்டுவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

4.2 இத்திட்டத்தின்கீழ் ஒரு மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளமைப்பு வசதிகளை உருவாக்குதல், வங்கிகளிலிருந்து நிதியுதவி பெறுவதற்கு பங்கு மூலதனத்தை அதிகரிக்க ஏதுவாக விளிம்புத்தொகை உதவி வழங்குதல், உறுப்பினர்களுக்கான கல்வி விளம்பரம் போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக முக்கியமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது.

4.3 2002-2003 ஆம் ஆண்டிற்கு முன்னர் விருதுநகர், தென்னாற்காடு, கோயம்புத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தேசியக் கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்த அரசு ஒப்புதலளித்தது. காஞ்சிபுரம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் இத்திட்டம் முடிவடையும் தருவாயில் உள்ளது.

4.4 2002-2003 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பெரம்பலூர் மற்றும் திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் தேசியக் கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| திருச்சிராப்பள்ளி | - | ரூ.1216.978 இலட்சம் |
| தஞ்சாவூர் | - | ரூ.1101.090 இலட்சம் |
| பெரம்பலூர் | - | ரூ.937.810 இலட்சம் |
| திருவாரூர் | - | ரூ.1222.440 இலட்சம் |



2003 மே 7]

4.5 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் தலைமையின்கீழ் இயங்கும் மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையின்கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் ஆகியன இத்திட்டத்தின் செயலாக்கத்தினை முறைப்படி கண்காணித்து வருகின்றன.

## அத்தியாயம்-5

### கூட்டுறவுகளின் வாயிலாக வேளாண் இடுபொருட்களை விநியோகித்தல்

5.1 தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் விவசாயக் கடன்கள் வழங்குவது மட்டுமல்லாமல் வேளாண் இடுபொருட்களை விநியோகம் செய்வதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

5.2 தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரசாயன உரங்கள் விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியன மொத்த விற்பனை நிறுவனங்களாக செயல்படுகின்றன. இந்நிறுவனங்கள், இரசாயன உரங்கள் மற்றும் விதைகள், பூச்சிமருந்துகள் போன்ற விவசாய இடுபொருட்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை மாநிலத்தில் உள்ள அனைத்து விவசாயிகளுக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளால் நடத்தப்படும் 5,678 சில்லரை விற்பனைக் கடைகள் மூலமும், 82 வேளாண் உற்பத்தி கூட்டுறவு உர விற்பனைச் சங்கங்கள் மூலமும் விநியோகம் செய்கின்றன. இப்பொருட்கள் சங்க அங்கத்தினர்களுக்கு அவர்கள் பயிர்க்கடனில் பொருட்பகுதியாகவும், மற்றும் அங்கத்தினர்கள் மற்றும் அங்கத்தினர் அல்லாதவர்களுக்கு ரொக்க விற்பனை மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகின்றன. துடியலூர் கூட்டுறவு விற்பனை சேவைச் சங்கம் மேற்சொன்ன மூன்று நிறுவனங்களின் விற்பனை நடவடிக்கைகளுக்கு துணைபுரிகிறது.

5.3 2002-2003 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் பிற இடுபொருட்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

[2003 மே 7

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | இரசாயன உரம் | விதை | பூச்சிக்கொல்லி மருந்துகள் | விவசாய உபகரணங்கள் |
|---|---|---|---|---|
| 2002-2003 | 127.78 | 2.27 | 1.48 | 0.35 |

## அத்தியாயம்-6

### கூட்டுறவு விற்பனை, பதனிடல் மற்றும் சேமிப்பு

6.1 இம்மாநிலத்தில் செயல்படும் தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ஆகியன தங்களது விவசாய அங்கத்தினர்களின் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு இடைத்தரகர்களின் தலையீட்டினைத் தடுத்து நியாயமான விலை கிடைப்பதற்கு ஏதுவாக அவற்றை பதனிட்டு சேமித்துவைத்து விற்பனை செய்வதில் உதவிபுரிகின்றன. மேலும் விவசாய உற்பத்திப் பொருட்களை ஏலம் விடுவதற்கும் அங்கத்தினர்களிடமிருந்து மொத்தமாக விலைக்கு வாங்கி அவற்றை நுகர்வோர்களுக்கு விற்பனை செய்வதற்கும் அவை ஏற்பாடு செய்கின்றன. விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை நட்டத்திற்கு விற்காமல் இருப்பதை உறுதிசெய்து வெளிச்சந்தையில் அவர்கள் தங்கள் பொருட்களை இலாபத்தில் விற்பதற்கு வழிவகைகள் செய்வதே கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் நோக்கமாகும்.

### தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

6.2 தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் பருத்தி, நெல், மிளகாய், சூரியகாந்தி விதை, கொத்தமல்லி, உளுந்து போன்ற விவசாய உற்பத்திப் பொருட்களை கொள்முதல் செய்கிறது. இவ்விணையம் விலைக்கட்டுப்பாடு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையத்தின் முகவராக செயல்பட்டுவருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் கட்டுப்பாட்டில் 118 தொடக்க கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அனைத்து மாவட்டங்களிலும் (தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக) செயல்பட்டுவருகின்றன. திருவாரூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகில்



2003 மே 7]

உள்ள பாமணி என்னும் இடத்தில் நிறுவப்பட்டுள்ள இவ்விணையத்தின் உரக்கலவை ஆலை நாளொன்றுக்கு சராசரியாக 120 டன்கள் என்.பி.கே. உரக்கலவையைத் தயாரிக்கிறது. இவ்விணையம் மேலும் 8 இடங்களில் உரக்கலவை மையங்களை நடத்திவருகிறது. இவ்விணையத்திற்கு 19 மண்டல அலுவலகங்கள் உள்ளன. இவ்விணையம் 27,640 டன்கள் கொள்திறன் கொண்ட 36 சொந்த கிடங்குகளையும் 12,100 டன்கள் கொள்திறன் கொண்ட 21 வாடகை கிடங்குகளை கூடுதலாகவும், சென்னை பேசின் பாலம் என்னுமிடத்தில் 1,350 டன்கள் கொள்திறன் கொண்ட ஒரு குளிர்பதன கிடங்கினையும், கோயம்பேடு மொத்த விற்பனை வளாகத்தில் 2,500 டன் கொள்ளளவு கொண்ட மற்றொரு குளிர்பதன கிடங்கினையும் நடத்திவருகிறது. மொத்த விற்பனை அமைப்பாகச் செயல்படும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிடமிருந்து வேளாண்பொருட்களை வாங்கி அவற்றினை நுகர்வோர் கூட்டுறவுகளுக்கு விற்பனை செய்கிறது.

### தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம்

6.3 தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் திருவாரூரில் செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் தேவையை இவ்விணையம் பூர்த்தி செய்கிறது. இவ்விணையம் ஓர் அச்சுக்கூடத்தையும் நடத்திவருகிறது. மேலும் இவ்விணையம் இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், விதைகள் மற்றும் விவசாய உபகரணங்கள் ஆகியவற்றை 14 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு விற்பனை செய்துவருகிறது. இவ்விணையம் அரசால் அங்கீகரிக்கப்பட்ட "ஆரூர் விதைகள்" என்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்று வருகிறது.

### நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம்

6.4 நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்ட விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்பட்டது. இக்கூட்டுறவுச் சங்கம் கலப்பு உரங்களைத் தயாரித்து அவற்றினை நியாயமான விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்கிறது. மேலும், அதன் 29 விற்பனை கூடங்கள் மூலம் அது விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை விநியோகித்து வருகிறது.

6.5 2002-2003 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையமும் மற்றைய விற்பனை இணையங்களும் விற்பனை செய்த விவசாய வேளாண் இடுபொருட்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பொருள் | அளவு (என்.பி.கே. டன்களில்). | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | இரசாயன உரங்கள் | 97699.657 | 127.78 |
| 2. | பாமணி உரக்கலவை உற்பத்தி (மெ.டன்னில்) | 5781.000 | 447.44 |
| 3. | பாமணி உரக்கலவை 17:17:17 விற்பனை (மெ.டன்னில்) | 4183.000 | 350.24 |
| 4. | பூச்சிமருந்து விநியோகம் | - | 148.12 |
| 5. | விதைகள் விற்பனை | - | 227.45 |
| 6. | விவசாய உபகரணங்கள் விற்பனை | - | 35.36 |

**வேளாண் விளைபொருட்கள் விற்பனை**

6.6 இம்மாநிலத்தில் 118 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. இவ்விற்பனைச் சங்கங்களின் முக்கிய நோக்கங்களாவன:—

1. தங்கள் எல்லைக்குட்பட்ட விவசாய அங்கத்தினர்களுக்கு வேளாண் இடுபொருட்களான விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்து போன்றவற்றை விநியோகம் செய்தல்; மற்றும்

2. விவசாய விளை பொருட்களின் போக்குவரத்து, பதனிடல், தரம் பிரித்தல் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்வதுடன் அவற்றை அங்கத்தினர்கள் மிகுந்த ஆதாயம் பெறும் வகையில் விற்பனை செய்வதற்கும் ஏற்பாடு செய்தல்.

67 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தமது செயல்பாடுகளை மேம்படுத்தி மேற்கண்ட நோக்கங்களை எய்துவதற்கு ஏதுவாக இச்சங்கங்களுக்கு விற்பனைக்கூடம், ஏலக்கூடம், உலர்கூடம், விவசாயிகளுக்கான ஓய்விடம், வண்டி நிறுத்துமிடம், லாரி நிறுத்துமிடம் போன்றவற்றை அமைப்பதற்கும், லாரி மற்றும் தரம் பிரிக்கும் கருவிகளை வாங்குவதற்கும் அரசு நிதி உதவி செய்கிறது. இவ்வாறு தமது விற்பனை நடவடிக்கைகளை அதிகரிப்பதற்காக மூன்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கு, ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் ரூ.4.30 இலட்சம் வீதம் ரூ.12.90 இலட்சம் 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

6.8 இத்திட்டத்தின்படி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்க்கப்படுகிறார்கள். கடன் பெற்ற உறுப்பினர்கள் கொண்டுவரும் வேளாண் விளைபொருட்களை அவர்கள் அதிக இலாபம் பெறும் வகையில், அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய விலைக்கு பகிரங்க ஏலம் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்து தருகின்றன. அவ்வாறு பெறப்படும் விற்பனைத் தொகையிலிருந்து, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்குச் சேரவேண்டிய கடன் தொகையைப் பிடித்தம் செய்து அவ்வங்கிகளுக்கு அவை செலுத்தி விடுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கான குறியீடு ரூ.2.20 கோடி என நிர்ணயிக்கப்பட்டதில், 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை வசூல் செய்த தொகை ரூ.2.43 கோடி ஆகும்.

**நுகர்வோர் கூட்டுறவுப் பண்டகசாலைகளுடன் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இணைப்பு**

6.9 ஒருபுறம் உற்பத்தியாளர்களின் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், மறுபுறம் நுகர்வோருக்கு அத்தியாவசியமான பொருட்களை நியாயமான விலையில் கிடைக்கச் செய்யவும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும், கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக செயல்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கான விற்பனைக் குறியீடு ரூ.20.80 கோடி என நிர்ணயிக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ரூ.27.74 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்களை நுகர்வோர் கூட்டுறவுகள் மூலம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

**விளைபொருட்களை ஈடாக பெற்று கடன் வழங்குதல்**

6.10 சந்தை விலை சாதகமாக நிலவும்போது தங்களது வேளாண் விளைபொருட்களை விற்று விவசாயிகள் நல்ல இலாபம் பெற ஏதுவாக, அதுவரை அவர்களது விளைபொருட்களை ஈடாகப் பெற்று அவர்களுக்குத் தேவையான கடன்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அளித்து வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 24 கோடி ரூபாயில்

2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை 20.19 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

**பதப்படுத்தும் அலகுகள்**

6.11 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள சில கூட்டுறவுச் சங்கங்கள் அரிசி அரைவை ஆலைகள், எண்ணெய் ஆலைகள், மாவு ஆலைகள், பருப்பு ஆலைகள் போன்ற பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இவ்வலகுகள் பதனிடுதல் வசதிகளை விவசாயிகளுக்கு குறைந்த செலவில் செய்து தருகின்றன. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் அரசின் மூலம் இவ்வலகுகளுக்கு பங்கு மூலதனமாகவும், கடனாகவும், நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 13,679 டன்கள் பொருட்கள் பதப்படுத்தப்பட்டுள்ளன.

**கிராமிய சேமிப்பு மற்றும் விற்பனைச் சங்கக் கிடங்குகள்**

6.12 தற்போதுள்ள கிடங்குகளின் எண்ணிக்கையும் அவற்றின் கொள்ளளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| எண்ணிக்கை | கிடங்குகளின் எண்ணிக்கை | கொள்ளளவு இலட்சம் மெட்ன்னில் |
|---|---|---|
| அ. ஊரக கிடங்குகள் | 5055 | 5.75 |
| ஆ. விற்பனைச் சங்கக் கிடங்குகள் | 261 | 1.33 |
| இ. நுகர்வோர் கிடங்குகள் | 50 | 0.31 |
| மொத்தம் | 5366 | 7.39 |



# அத்தியாயம்–7

## நுகர்வோர் கூட்டுறவுகள்

7.1 சில இன்றியமையா நுகர்வோர் பொருட்களில் தட்டுப்பாடு ஏற்படும் நேரங்களில் அவற்றின் இருப்புகளை உறுதி செய்வதற்கும், வெளிச்சந்தை விலைகள் அதிகமாய் இருக்கும் நேரங்களில் அவற்றை நியாயமான விலைகளில் விற்பனை செய்வதற்கும் ஏதுவாக இப்பொருட்களின் விற்பனையில் தலையிட்டு அரசுக்கும், மக்களுக்கும் உதவுவதே நுகர்வோர் கூட்டுறவுகளின் முக்கிய நோக்கமாகும். இம்மாநிலத்தின் நுகர்வோர் கூட்டுறவுகளின் கட்டமைப்பானது தலைமை நிலையில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும், தொடக்க நிலையில் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகளையும் கொண்ட மூன்றடுக்கு அமைப்பாக இயங்கி வருகிறது.

**தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

7.2 மாவட்ட மற்றும் தொடக்க அளவிலான நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலே தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தின் பணியாகும். ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படும்போதோ அல்லது ஒரு பொருளின் சில்லறை விற்பனை விலை உயர்ந்திருக்கும்போதோ, வணிக நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்காக இவ்விணையம் அப்பொருளை இறக்குமதி செய்தோ அல்லது மொத்தமாக வாங்கியோ அவற்றை போதுமான அளவு இருப்பு வைக்கிறது. கூட்டுறவுகளின் அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்வதில், இவ்விணையம் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொள்கிறது. இவ்விணையம் பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிகளை வாங்கி விற்பதற்கு ஏற்பாடு செய்வதுடன், கூட்டுறவு சங்க அச்சகங்களுக்குத் தேவையான தாள்களையும் வாங்கி விற்பனை செய்கிறது.

**நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள்**

7.3 தற்போது மாநிலத்தில் 35 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் இயங்கி வருகின்றன. நியாய விலைக் கடைகளை நடத்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் இப்பண்டகசாலைகள்,

கட்டுப்பாடற்ற பொருட்களையும் பொதுமக்களுக்கு விற்பனை செய்கின்றன. கடந்த ஆண்டுகளில் கட்டுப்பாடு பொருட்களை விற்பனை செய்ததற்கு குறைந்த அளவு விளிம்புத் தொகையே அனுமதிக்கப்பட்ட காரணத்தால், சில கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மிகவும் நலிவுற்ற நிலையில் உள்ளன. இவற்றைச் சீரமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களுக்கு நுகர்வோர் பொருட்களை நியாயமான விலைகளில் விற்பனை செய்து வருவது இக்கூட்டுறவு பண்டகசாலைகளின் மற்றொரு முக்கிய நடவடிக்கை ஆகும். 2002-2003 ஆம் ஆண்டில், இப்பண்டகசாலைகள் நுகர்வோர் பொருட்களை சில்லறை விற்பனை செய்த தொகை ரூ.2333.43 கோடி ஆகும்.

7.4 பிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவி புரியவும். 'கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு' என்னும் கொள்கையை நிலைநாட்டுவதற்காகவும், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமாக கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:-

(1) நீலகிரி மாவட்டத்தில் தேயிலை பயிரை உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகளின் துயர் துடைக்கவும், நீலகிரி தேயிலையின் விற்பனையை உயர்த்தவும் இண்ட்கோசர்வ் (INDCOSERVE) மூலம் பதப்படுத்தப்பட்ட தேயிலை, கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலமாக மாதம் ஒன்றுக்கு 250 டன்கள் விற்பனை செய்ய வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது. 2003 ஆம் ஆண்டு மார்ச் வரை 4,241 டன்கள் தேயிலை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

(2) கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் குளியல் சோப்பு மற்றும் சலவை சோப்பு போன்ற பொருட்களை உற்பத்தி செய்கின்றன. இவ்வாரியத்திற்கு உதவும்பொருட்டு இப்பொருட்கள் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலமும் விற்பனை செய்யப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 2003 ஆம் ஆண்டு மார்ச் வரை கூட்டுறவு கடைகள் மூலமாக ரூ.107.93 இலட்சம் மதிப்புள்ள காதி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.





(3) சேலை மற்றும் வேட்டி உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க, கைத்தறி சேலை மற்றும் வேட்டி ஆகியவற்றை கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய வேண்டும் என அரசு ஆணை வெளியிட்டது. சேலை ஒன்றின் விலை ரூ.40/-, வேட்டி ஒன்றின் விலை ரூ.30/- ஆகும். 6-8-2002 முதல் 31-3-2003 வரை ரூ.11.62 கோடி மதிப்புள்ள மலிவு விலை சேலைகளையும், ரூ.8.98 கோடி மதிப்புள்ள வேட்டிகளையும் (மொத்தம் ரூ.20.60 கோடி) கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்துள்ளன.

**இந்திய தயாரிப்பு அயல்நாட்டு மது விற்பனை:**

7.5 அரசால் ஏலம் விடப்படும் கடைகளின் மூலமாகவே பொதுவாக இந்தியத் தயாரிப்பு அயல் நாட்டு மது விற்பனை செய்யப்படுகிறது. சில நேரங்களில், கடைகளின் சொந்தக்காரர்கள் கூட்டாகச் சேர்ந்து கொண்டு, கடைகளின் ஏலத்தில் பங்கேற்பதில்லை. அனைவரையும் ஏலத்தில் பங்குகொள்ளச் செய்து அரசுக்கு வரவேண்டிய வருவாயினை பெருக்கிக் கொள்வதை உறுதி செய்யவும், மதுவின் சில்லறை விலைகள் ஏறாமாலிருக்கச் செய்வதற்கும், மதுக்கடைகளைத் திறப்பதற்கு கூட்டுறவு கடைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இம்மது வகைகளை கூட்டுறவுக் கடைகள் மூலம் விற்பனை செய்வது என்பது கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தொடக்க பண்டகசாலைகள் ஆகியவற்றின் நிதிநிலையினை மேம்படுத்துவதற்கும் உதவிபுரிகின்றன. 'டாஸ்மாக்' நிறுவனத்தால் விநியோகிக்கப்படும் மதுவகைகளை மட்டுமே இக்கடைகள் விற்பனை செய்து வருவதால் ஆயத்தீர்வை மூலம் அரசின் வருமானத்தைப் பெருக்க உதவிபுரிகிறது. 31-3-2003 வரை கூட்டுறவுச் சங்கக் கடைகள் மூலம் விற்பனை செய்த மதுவின் மொத்த மதிப்பு ரூ.8512.91 இலட்சம் ஆகும்.

7.6 இந்த ஆண்டு அரசு 1200 மதுபானக் கடைகளைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 200 கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கும் ஒதுக்கீடு செய்துள்ளது. இக்கடைகளை துவக்குவதற்கு இந்நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதுவரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 199 கடைகளையும், கூட்டுறவு சங்கங்கள் 225 கடைகளையும் துவக்கியுள்ளன. மீதமுள்ள கடைகளைத் துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[2003 மே 7

## அத்தியாயம்-8

### தனிவகைக் கூட்டுறவுச் சங்கங்கள்

**கூட்டுறவு அச்சகங்கள்**

8.1 தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின்கீழ் மொத்தம் 26 கூட்டுறவு அச்சகங்கள் இயங்கி வருகின்றன. இவை அனைத்தும் கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுப்பணிகளையும், அரசு அலுவலகங்கள் அரசு சார் நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சித் துறை அலுவலகங்கள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான அச்சுப் பணிகளையும் மேற்கொள்கின்றன.

8.2 31-3-2002 தேதிய நிலவரப்படி, கூட்டுறவு அச்சகங்களில் மொத்தம் 12,758 உறுப்பினர்கள் இருந்தனர். இவற்றின் செலுத்தப்பட்ட பங்குத்தொகை ரூ.1.72 கோடி ஆகும். 2002-2003 ஆம் ஆண்டிற்கு வியாபார இலக்கு ரூ.27.00 கோடியாக நிர்ணயிக்கப்பட்டது. அதில் 2003 மார்ச் வரையில் ரூ.21.27 கோடி எய்தப்பட்டுள்ளது.

**உப்புத் தொழிலாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள்**

8.3 ஏழை உப்புத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்துடன் உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இம்மாநிலத்தில் இயங்கி வரும் 10 உப்பு உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், 5 சங்கங்கள் தனியாக ஆதி திராவிட மக்களுக்காக மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன.

8.4 இச்சங்கங்களால் செயல்படுத்தப்படும் அயோடின் உப்பு தயாரித்தலை உள்ளடக்கிய பல்வேறு திட்டங்களுக்கு 'தாட்கோ' திட்டத்தின்கீழ் அரசால் நிதி உதவி அளிக்கப்படுகிறது.

**தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்**

8.5 தற்போது தமிழ்நாட்டில் 190 தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. பெரும்பாலான தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தர்மபுரி, சேலம், திருச்சி மற்றும் விழுப்புரம் ஆகிய மண்டலங்களில் உள்ளன. அதிக அளவிலான தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், ஒப்பந்த வேலைகளை



2003 மே 7]

உருவாக்கி, வேலைவாய்ப்பினை அளிப்பதன் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இச்சங்கங்களுக்குத் தேவையான பங்கு மூலதனம், நடைமுறை மூலதனம் மற்றும் விளிம்புத் தொகை அளித்தல் முதலான பல்வேறு இனங்களுக்கு மைய அரசு நிதி உதவி வழங்கி வருகிறது.

**இதர தனிவகைச் சங்கங்கள்**

8.6 முடிதிருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் போன்ற நலிந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடிதிருத்துவோர் மற்றும் சலவைத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்**

8.7 பெரும்பான்மையான பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. காடு மற்றும் நாட்டுப் பகுதிகளில் வாழும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த இச்சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை தொடங்கப்பட்டுள்ள 19 சங்கங்களில் 16 சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடியினர் மேம்பாட்டு திட்டப் பகுதிகளிலும் மீதமுள்ள மூன்று சங்கங்கள் மற்றைய பகுதிகளிலும் அமைந்துள்ளன. இச்சங்கங்களில் 78,602 பழங்குடியினரும், 7,181 பழங்குடியினரல்லாத மற்றவர்களும் அங்கத்தினர்களாக சேர்ந்துள்ளனர். இச்சங்கங்கள் குறுகிய கால மற்றும் மத்திய காலக் கடன்கள் தவிர வீட்டுவசதிப் பொருட்கள் வாங்குவதற்கான கடனையும் வட்டியின்றி அளிக்கின்றன. பழங்குடியினருக்கு கடன் அளிப்பது தவிர, பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக் கடைகள் வாயிலாக இன்றியமையாப் பொருட்களையும் வழங்கி வருகின்றன. இவை 101 கிராமக் கடைகளின் மூலம் இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. வனங்களில் உற்பத்தியாகும் சிறு பொருட்களை கொள்முதல் செய்து சேகரித்து விற்பனை செய்வதன் மூலம், உறுப்பினர்களுக்கு நியாயமான இலாபம் கிடைப்பதை இவை உறுதி செய்கின்றன.

8.8. இப்பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் (அரசால் அளிக்கப்படும்) எல்லாக் கடன்களுக்குமான வட்டி மானியம், கடன் வாங்கும் திறனை அதிகரிக்க பங்கு மூலதன மானியம் மற்றும்

[2003 மே 7

கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்கள் ஆகியவற்றை விநியோகம் செய்வதினால் கிடைக்கும் போக்குவரத்து மானியம் ஆகியவற்றினால் பயன் பெறுகிறார்கள்.

8.9. பெரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கடந்த நான்காண்டு கால நடவடிக்கைகளின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| ஆண்டு | கடன் வழங்கும் தொகை | வேளாண் விளைபொருள் கொள்முதல் | வேளாண் விளைபொருள் விநியோகம் | சிறு வனப் பொருள் சேகரம் | நுகர் பொருள் விநியோகம் |
|---|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. | 6. |
| 1999-2000 | 535.28 | 94.89 | 113.46 | 85.29 | 643.57 |
| 2000-2001 | 478.18 | 85.06 | 116.30 | 65.46 | 765.92 |
| 2001-2002 | 506.99 | 100.19 | 120.51 | 63.21 | 774.90 |
| 2002-2003 | 662.83 | 116.39 | 138.15 | 62.37 | 901.92 |

# அத்தியாயம்-9

## கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

9.1 கூட்டுறவு இயக்கம் செம்மையாக வளர வேண்டுமானால், கூட்டுறவுச் சங்கங்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கும் மற்றும் அலுவலர் அல்லாதவர்களுக்கும் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். மேலும் செய்தி மற்றும் விளம்பரத்தின் உதவியும் வேண்டும். இப்பணியினை மாநிலக் கூட்டுறவு ஒன்றியமும், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொள்கின்றன.

### தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்

9.2 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவிலான கூட்டுறவு ஒருங்கிணைப்பு அமைப்பாகும். கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியினை வளர்ச்சியடையச் செய்வது, கூட்டுறவு பற்றிய தகவல்களை பரவச்செய்தல் மற்றும் விளம்பரப்படுத்துதல் ஆகியன இவ்வொன்றியத்தின்



2003 மே 7]

பணிகளாகும். மேலும் கூட்டுறவின் தன்மையை மக்கள் உணரச் செய்தல், செய்தி மலர்கள் வெளியிடுதல், மக்களின் பங்களிப்பு மற்றும் சம்பந்தத்துடன் கூட்டுறவு இயக்கம் செம்மையாக வளர்வதற்கு கூட்டுறவு நிறுவனங்களின் பல்வேறு பிரிவுகளுக்கு உதவிபுரிவதும் இதன் பணியாகும். பத்திரிகைகள் வெளியிடுதல், பொருட்காட்சிகள் நடத்துதல், விளம்பரச் சுவரொட்டிகள், சிறுபடங்கள், படக்காட்சிகள் மூலமாக சுவரொட்டிகள், சிறுபடங்கள், படக்காட்சிகள் மூலமாக கூட்டுறவுக் கொள்கைகளையும் இவ்விணையம் விளம்பரப்படுத்துகிறது. அனைத்துத் தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள், மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் ஆகியன தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கத்தினர்களாவர்.

9.3 தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கீழ்க்கண்ட இரு நிதிகளை நிர்வகித்து வருகிறது:

(1) கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி; மற்றும்

(2) கூட்டுறவு கல்வி நிதி.

அங்கத்தினர் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படும் ஆண்டுச் சந்தா, பத்திரிகைகள் விற்பனை மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி வசூல் ஆகியவற்றின் வாயிலாக இவ்விணையம் தனது நிதி ஆதாரங்களை பெருக்கிக் கொள்கிறது.

### கூட்டுறவு பயிற்சி

9.4 தேசிய கூட்டுறவு பயிற்சிக் கழகத்தால் தமிழ்நாட்டில் சென்னையிலும், மதுரையிலும் இரு கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிறுவனங்களும், 20 கூட்டுறவு பயிற்சி நிறுவனங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு பயிற்சி நிறுவனங்களில் 11 நிறுவனங்கள் தன்னாட்சி நிறுவனங்கள் ஆகும். மீதமுள்ள 9 நிறுவனங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் தேனியில் ஒரு பயிற்சி நிறுவனம் துவக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கும், மாணவர்களுக்கும் கூட்டுறவு சம்பந்தமான பல்வேறு அடிப்படை பயிற்சிகளை அளித்து வருகின்றன. மேலும்

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கு அஞ்சல்வழிக் கல்வி வாயிலாக கூட்டுறவு படிப்பில் பட்டயம் வழங்க பயிற்சி அளிக்கின்றன. கூட்டுறவுத் துறையின் பணியாளர்களுக்கு சென்னை மற்றும் மதுரையிலுள்ள கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

9.5 1992-1993 ஆம் ஆண்டிலிருந்து இந்நிறுவனங்களில் அஞ்சல் வழி கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் சேர்வதற்காக மொத்தம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இடங்கள் 3,000. ஒவ்வொரு ஆண்டும் பட்டயப் படிப்பில் 7,000 மாணவர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

9.6 தர்மபுரி மாவட்டத்தில் பர்கூர், தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டை மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மூன்று தொழிற் பயிற்சி நிறுவனங்களும் படித்து வேலையற்று இருக்கும் இளைஞர்களுக்கு அவர்கள் சுய வேலை வாய்ப்பு தேடிக்கொள்ளும் வகையில் கீழ்க்கண்ட தொழில்நுட்பப் பிரிவுகளில் பயிற்சி அளிக்கின்றன:

(1) கணினியியல்,

(2) இயந்திரவியல்,

(3) மின்சாரம் மற்றும் மின்னணுவியல்

மேற்கண்ட மூன்று கூட்டுறவு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலமாக ஆண்டொன்றுக்கு சராசரியாக 300 மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறுகிறார்கள்.

9.7 சென்னையிலுள்ள நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிறுவனமும், மதுரையிலுள்ள கூட்டுறவு மேலாண்மை நிறுவனமும், பட்டம் பெற்ற மாணவர்களுக்கு, கூட்டுறவு மேலாண்மை பாடத் திட்டத்தில் உயர் பட்டயப் படிப்பு பயிற்சியினை 36 வாரங்களுக்கு அளிக்கின்றன. ஓர் ஆண்டில், 200 மாணவர்கள் இப்பயிற்சியினை மேற்கொள்கிறார்கள்.



# அத்தியாயம்-10

## 2003-2004 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

10.1 கிராமப்புறங்களிலுள்ள மக்கள், அதிலும் குறிப்பாக பெண்கள் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அதிக அளவில் கடன் பெற ஊக்குவிக்கும் வகையிலும், பொதுவிநியோக முறையின் உள் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்காகவும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் அலுவலகத்தில் கண்காணிப்பு சாதனங்களை மேம்படுத்த ஏதுவாகவும், 2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

### 1. தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்

10.2 கிராமப்புறங்களில் உள்ள நலிந்த பிரிவினரிடையே உள்ள பெண்கள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் கடன் வசதியை பெறுவதற்குத் தேவையான பங்கு மூலதனத்தை செலுத்துவதற்குக்கூட சிரமப்படுகின்றனர். உறுப்பினர் செலுத்தும் பங்கு மூலதனத்தைப் பொறுத்தே அவரது கடன் வாங்கக்கூடிய தொகை நிர்ணயிக்கப்படுகிறது. பெண் உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500/- வீதம் பங்கு மூலதனம் செலுத்த கடனாக வழங்குவதால் அவர்கள் விவசாய நோக்கங்களுக்காக வங்கியிலிருந்து மேலும் கடன் பெற முடியும். மற்றும் வேலைவாய்ப்பும் கிடைக்கும். இது அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும். அதனால் 2,000 பெண் உறுப்பினர்களுக்கு நிதியுதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.10 இலட்சம் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2. நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க ஏதுவாக வட்டியில்லாக் கடன் வழங்குதல்

10.3 நகர்ப்புறம் மற்றும் புறநகரைச் (Semi-Urban) சார்ந்த மக்களுக்கு வீட்டினை பழுதுபார்த்தல் அல்லது விரிவுபடுத்துதல், சிறு வணிகம் மற்றும் குடிசைத் தொழில்கள் ஆகியவற்றிற்காக நகரக் கூட்டுறவு வங்கிகள் கடன் வசதிகளை வழங்கி வருகின்றன. இவ்வாறான கடன்கள்

வழங்குவது உறுப்பினர்கள் செலுத்தும் பங்கு மூலதனத்தின் அளவினைப் பொறுத்தே உள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகளில் பெண் உறுப்பினர்கள் கடன் பெறுவதற்குத் தேவையான பங்கு மூலதனத்தைச் செலுத்த மிகவும் சிரமத்திற்குள்ளாவதால் இவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வாயிலாக நிதியுதவி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் இவர்கள் கூடுதலாக பங்குமூலதனம் செலுத்தி கடன் வாங்கும் தொகை அதிகரிக்கும். இந்தக் கடனுதவி ஒவ்வொரு உறுப்பினருக்கும் ரூ.500/- ஆக இருக்கும். இத்தொகை 5 வருடாந்திர சம தவணைகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். 2003-2004 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் 1,000 பெண்கள் பயனடைவார்கள்.

**3. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் பெண் உறுப்பினர்களுக்கு அவர்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்க வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

10.4 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் பெறுபவர்கள் அவர்கள் பெறும் கடன் தொகையில் 5 விழுக்காட்டினை பங்கு மூலதனமாகச் செலுத்த வேண்டும். இக்கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்களின் நீண்ட காலக் கடன் தேவைகளை நிறைவேற்றி வருகின்றன. ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்கள் பெரும்பாலும் வேலை இல்லாதவர்களாகவும், பொருளாதார நிலையில் நலிவடைந்தவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, இவர்கள் மேற்படி வங்கிகளிலிருந்து கடன் வசதியைப் பயன்படுத்துவதற்குத் தேவையான பங்கு மூலதனத்தைச் செலுத்த மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, பத்தாவது ஐந்தாண்டு காலத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 200 பெண் உறுப்பினர்களுக்கு தலா ரூ.1,000/- வீதம் வட்டியில்லாக் கடன் வழங்கி பங்கு மூலதனத்தைச் செலுத்த நிதியுதவி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடன் 5 வருடாந்திர சம தவணைகளில் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இதற்காக 2003-2004 ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ரூ.2.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**4. கூட்டுறவு வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு ஏதுவாக ஊனமுற்ற பெண்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குதல்**

10.5. கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வசதி அளிப்பதன் வாயிலாக உடல் ஊனமுற்றோருக்கு பொருளாதார ரீதியிலான நல்வாழ்வு அமைய ஊக்குவிப்பதில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. மேலும் பெரும்பாலான உடல் ஊனமுற்ற பெண்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளதால், அவர்களது பொருளாதார நிலை திருப்திகரமாக இல்லை. அவர்களின் பங்கு மூலதனம் அதிகரிக்க தற்போது வழங்கவுள்ள வட்டியில்லாக் கடன் திட்டம் அதிக அளவு கடன் பெற வழிவகுக்கும். எனவே, உடல் ஊனமுற்ற பெண்களின் வாழ்க்கைத்தரம் உயரும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் ரூ.500/- வீதம் 1000 உடல் ஊனமுற்ற பெண்கள் பயன்பெறும் வகையில் 2003-2004 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5. புதியதாக துவக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளுக்கான வட்டியில்லாக் கடன் மற்றும் மானிய உதவி**

10.6 இத்திட்டம் புதியதாக துவக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளுக்காக கீழ்க்கண்ட இனங்களுக்குச் செலவிடுவது பற்றியதாகும்.

(அ) வாடகை முன்பணம் செலுத்துவதற்காக ரூ.52.80 இலட்சம் வட்டியில்லாக் கடன் வழங்குதல்.

(ஆ) தளவாடச் சாமான்கள் போன்றவற்றை வாங்குவதற்காக ரூ.42.24 இலட்சம் மானியம் வழங்குதல்.

10.7 ஒவ்வொரு கடைக்கும் வாடகை முன்பணத்திற்கு வட்டியில்லாக் கடனாக ரூ.5,000/- மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காக ரூ.4,000/- என்ற வீதத்தில் 1056 புதியதாக துவங்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளுக்காக ரூ.95.04 இலட்சம் 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 7

**6. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான நிதியுதவி**

10.8 மாநிலத்தில் 118 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. விற்பனைச் சங்கங்களின் நோக்கங்களாவன:—

(அ) விவசாய இடுபொருட்களான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் முதலியவற்றை சங்க எல்லைக்குட்பட்ட விவசாய சங்கத்தினர்களுக்கு வழங்குவது; மற்றும்

(ஆ) அங்கத்தினர்களுக்குப் பயன்படும் வகையில் அவர்களுடைய விவசாய விளைபொருட்களை வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லுதல், பதப்படுத்துதல், தரப்படுத்துதல், விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு உதவுதல்.

10.9 மேற்கண்ட நடவடிக்கைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மேற்கொள்ள ஏதுவாக விற்பனைக்கூடம், ஏலக்கூடம், உலர்கூடம், விவசாயிகள் ஓய்விடம், வண்டிகள் நிறுத்துமிடம் ஆகியவை அமைப்பதற்கும், லாரி மற்றும் தரப்படுத்தும்' இயந்திரங்கள் வாங்குவதற்கும் அரசு நிதியுதவி அளிக்கிறது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சங்கத்திற்கும் தலா ரூ.4.30 இலட்சம் வீதம் 3 சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்க மொத்தம் ரூ.12.90 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. வட்ட அளவில் கிடங்குகள் கட்டுதல்**

10.10 பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களைச் சேமித்து வைக்கத் தேவையான கிடங்குகள் 40 வட்டங்களில் இல்லை எனத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இரு கிடங்குகள் கட்டுவதற்காக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்கு 2003-2004 ஆம் ஆண்டு ரூ.20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் சில்லரை விற்பனை நிலையங்கள் அமைத்தல்**

10.11 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களில் மண்ணெண்ணெயும் ஒன்றாகும். மற்ற அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை, சர்க்கரை ஆகியவைபோல் அன்றி மண்ணெண்ணெய்யை தனியாக வைத்து விநியோகம் செய்ய



2003 மே 7]

வேண்டியுள்ளது. மண்ணெண்ணெய் வழங்குவதில் உள்ள குறைபாடுகளைக் களைய அரசு பெரும் முயற்சி எடுத்த போதிலும் அளவு குறைவாக விநியோகித்தல் தொடர்ந்து வருவது கவலை அளிக்கக்கூடியதாக உள்ளது. இதுவரை அமைக்கப்பட்ட 285 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அளவு குறைவாக வழங்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு பெருமளவில் உதவி புரிந்துள்ளன. எனவே, இத்திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.90.00 இலட்சம் செலவில் 20 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காகும் செலவில் 50 சதவீதத்தை அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆகவே 2003-2004 ஆம் ஆண்டில் 20 மண்ணெண்ணெய் நிலையங்கள் அமைப்பதற்கு ரூ.45.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கு நிகரி (FAX) வசதி ஏற்படுத்துதல்**

10.12 கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய பணிகளான விவசாயக் கடன் வழங்குவது, விவசாய விளைபொருட்களை விற்பனை செய்வது, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் இன்றியமையாப் பொருட்களை விநியோகம் செய்வது போன்ற முக்கிய பணிகளைக் கண்காணிக்க கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மாவட்ட அளவிலான சார்நிலை அலுவலகங்களை அடிக்கடி தொடர்பு கொண்டு தேவையான விவரங்களை அவ்வப்போது சேகரிக்க வேண்டியுள்ளது. இவ்விவரங்களைக் காலதாமதமின்றி அனுப்புவதற்கு ஏதுவாக மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கு நிகரி (FAX) வசதி ஏற்படுத்துவது முற்றிலும் அவசியமாகும். எனவே, நிகரி வசதி இல்லாத அனைத்து மண்டல இணைப் பதிவாளர் அலுவலகங்களுக்கும் இவ்வாண்டு ரூ.6.15 இலட்சம் செலவில் நிகரி வசதி ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 7

## அத்தியாயம்-11

### உணவு மற்றும் பொது விநியோகத் திட்டம்

*11.1* மனிதனின் அடிப்படைத் தேவைகளில் "உணவு" முதன்மையானதாகும். எனவேதான், இதுநாள் வரையிலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற, "அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பு" அளிக்க வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையே தொடர்ந்து, *2003-2004* ஆம் ஆண்டிலும் அரசின் உணவுத் துறைக்கான கொள்கை ஆகும். இக்கொள்கை, கடந்த ஆண்டுகளில் ஒரே சீராக இருந்தாலும், இம்மாநிலத்திலிருந்து சத்துக்குறைவை அறவே ஒழிக்க அரசு உறுதி பூண்டுள்ளதால், தற்போது புதிய வடிவம் பெற்றுள்ளது. சமுதாயத்தில் அனைவருக்கும், எப்போதும், அவர்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் அவர்கள் வாங்கும் சக்திக்குட்பட்ட விலையில் போதிய அளவில் இன்றியமையாப் பொருட்களைக் கிடைக்கச் செய்வதும், சமுதாயத்தின் அடித்தள மக்கள் வாங்குகின்ற அளவுக்கு, வெளிச் சந்தையில் பொருட்களின் விலையை நிலை நிறுத்துவதும் அரசின் தலையாய பொறுப்புகளாகும்.

*11.2* பொது விநியோகத் திட்ட செயலாக்க முறைகள் மற்றும் *1955* ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்படி இடப்பட்டுள்ள ஆணைகள் ஆகியவை அரசின் கொள்கைகளை நிலைநாட்ட உதவும் கருவிகள் ஆகும். இன்றியமையாப் பொருட்கள் அனைத்துக் குடும்பங்களுக்கும் தேவைக்கேற்ப கிடைக்கச் செய்ய குடும்ப அட்டைகளை வழங்குதல், இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்தல், சேமித்து வைத்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்புதல், நியாய விலைக் கடைகளைத் திறத்தல் மற்றும் அப்பொருட்கள் அனைத்துக் குடும்பங்களுக்கும் கிடைக்கச் செய்தல் போன்ற செயல்முறைகள் பொது விநியோகத் திட்டத்தின்படி கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. இன்றியமையாப் பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கி, நியாய விலைக் கடைகள் மூலம் குறைந்த விலையில் மக்களுக்கு விற்பனை செய்வதால் அனைத்து மக்களும் ஒரே சீரான நியாய விலையில் பொருட்களை வாங்க அரசு வகை செய்கிறது. தனியார் விற்பனையாளர்களுக்கு வணிகம் செய்ய அனுமதி வழங்கி, அவர்கள் கையிருப்பு வைத்துக்கொள்ள வேண்டிய பொருட்களின் உச்ச அளவு போன்றவற்றைக் கட்டுப்பாட்டு ஆணைகள் மூலம் நிர்ணயம் செய்து கண்காணிப்பதன் மூலமும் இன்றியமையாப்



2003 மே 7]

பண்டங்களின் விலைவாசியைத் தொடர்ந்து, கவனமாகக் கண்காணிப்பதன் மூலமாகவும், விநியோகத்தில் ஏற்படும் இடர்பாடுகளை நீக்குவதற்கு உடனுக்குடன் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்வதன் வாயிலாகவும் வெளிச் சந்தையில் அப்பொருட்களின் விலை கண்காணிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது, பிற மாநிலங்கள் கடைப்பிடித்து வருவதைப்போன்று மைய அரசின் தடையில்லா வணிகக் கொள்கைக்கு ஏற்ப, நமது மாநிலத்திலும் உரிமம் பெறுதல் மற்றும் கையிருப்பு வைப்பதில் உச்சவரம்பு போன்ற கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

*11.3* இன்றியமையாப் பொருட்களைக் கொள்முதல் செய்வதும் சேகரித்து பாதுகாப்பாக வைத்திருப்பதும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பொறுப்பாகும். கூட்டுறவு அமைப்புகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் சில மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஆகியவற்றால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் மூலம் பொருட்கள் மக்களுக்கு வழங்கப்படுகின்றன. குடும்ப அட்டைகளை அச்சிட்டு வழங்கல், மாவட்டங்களுக்குத் தேவையான இன்றியமையாப் பொருட்களை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்தல், பொது விநியோகத் திட்டச் செயலாக்கத்தை மாநில அளவில் ஆய்வு செய்தல், கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயற்படுத்துதல், வாணிபம் செய்ய வணிகர்களுக்கு உரிமம் வழங்கல் போன்ற பணிகள் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையால் செய்யப்படுகின்றன.

*11.4* பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலையைவிட கொள்முதல் விலை கூடுதலாக உள்ளதால் அரசு மானியம் வழங்கி வருகின்றது. மாநில அரசு வழங்கிவரும் உணவு மானியம் சமாளிக்க முடியாத அளவிற்கு இருந்ததும், அதைச் சீரமைக்க வேண்டியதன் தேவையும் இரண்டு ஆண்டுகளுக்கு முன் இம்மாமன்றத்தின்முன் இவ்வரசு வைத்த வெள்ளை அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, பொது விநியோகத் திட்டச் செயலாக்க முறைகளைச் சீரமைக்க சில தலையாய நடவடிக்கைகளை கடந்த ஆண்டு இவ்வரசு மேற்கொண்டுள்ளது. வெவ்வேறு காலகட்டங்களில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் கொள்முதல் முறை, பொது மக்களுக்கு வழங்கப்படும் அளவு, விலை, அப்போதைய உற்பத்தி அளவு, விற்பனைக்கு வரும் அளவு, பொதுமக்களுக்கு வழங்கத் தேவையான அளவு, மக்களின் வாங்கும் சக்தி போன்றவற்றினை

அடிப்படையாகக் கொண்டது என்பதால் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்க இயலாது. உணவு தானியங்களை இம்மாநிலத்திலிருந்து வெளியில் கொண்டு செல்ல இருந்த தடையை நீக்கியதும், அரசு கடைப்பிடித்து வந்த விற்பனைக்கு உள்ள நெல் முழுவதையும் அரசுக்கே விற்பனை செய்ய வேண்டும் என்ற முறையைக் கைவிட்டதும் விவசாயிகள் தமது விளைபொருட்களை யாருக்கு வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் அவர்களுக்கு ஆதாயமான விலையில் விற்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஆண்டுகளில் பொதுவாக மக்களின் வருவாய் உயர்ந்துள்ளது. வேளாண்மை உற்பத்தி கூடுதலாகியுள்ளதையும் காணமுடிந்தது. கடந்த ஆண்டில் நிலவிய வறட்சியும், தண்ணீர்த் தட்டுப்பாடும் வேளாண்மை உற்பத்தியைக் குறைத்துள்ளது என்பதால் அரசு கொள்முதல் செய்ய போதிய நெல் விவசாயிகளிடமிருந்து கிடைக்கப் பெறவில்லை. ஆனால், நாடு தழுவிய அளவில் உணவுக் கையிருப்பு (அரிசி) போதுமான அளவு உள்ளதாலும், மைய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியின் அளவைக் கொண்டே பொது விநியோகத் திட்டத்தின் தேவையைச் சமாளிக்க இயலும் என்பதாலும் உணவுப் பொருள் தட்டுப்பாடு ஏதும் ஏற்படாது. இனிவரும் பக்கங்களில் குறிப்பிடப் பெறுகிற பொது விநியோகத் திட்டம் பற்றிய செயல்பாடுகளை இப்பின்னணியைக் கருத்தில் கொண்டு ஆய்வு செய்ய வேண்டும்.

**பொது விநியோகத் திட்டத்தின்படி வழங்கப்படும் பொருட்கள்:**

*11.5 1955* ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில், மைய அரசு ஆரம்ப கால கட்டங்களில் *65* பொருட்களை இன்றியமையாப் பொருட்களாக அறிவித்திருந்தது. பொருட்களின் நுகர்வு, அவற்றின் வெளிச் சந்தை விலை மற்றும் எளிதில் கிடைக்கும் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மைய அரசு, அவ்வப்போது ஆய்வு செய்து, அட்டவணையில் உள்ள பொருட்களின் எண்ணிக்கையைக் குறைத்து வருகிறது. தற்போது, அட்டவணையில் உள்ள பொருட்களின் எண்ணிக்கை *18* ஆகக் குறைந்துள்ளது. அவற்றில், பெரும்பாலானவை உணவு தொடர்புடையவை அல்ல. அரிசி, கோதுமை, சர்க்கரை, மண்ணெண்ணெய் ஆகிய இன்றியமையாப் பொருட்கள் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படுகின்றன.



*11.6* இவை தவிர, ஊட்டித் தேயிலையும் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது. இத்திட்டம், சிறுதேயிலை விவசாயிகள் துயர் துடைக்க அங்கு விளையும் தேயிலைக்கு தொடர்ந்து நல்ல விற்பனை விலை கிடைக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டமாகும். நமது மாநிலத்தில் சில மாவட்டங்களில் காணப்படும் முன்கழுத்துக் கழலை நோயினைப் போக்கிடும் வகையில், அயோடின் கலந்த உப்பும் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றது.

**குடும்ப அட்டைகள் வழங்குதல்:**

*11.7* நமது மாநிலத்தில், இன்றியமையாப் பொருட்கள் குடும்ப அட்டைகள் மூலம் வழங்கப்படுகின்றன. *1982* ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டைகள் மூலம் வழங்கப்படுகின்றன. அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டைகள் மூலம் விநியோகத்தை முறைப்படுத்துதல்) ஆணை மூலம் குடும்ப அட்டைகள் வழங்கும் பணி முறைப்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் உள்ள எல்லாக் குடும்பங்களும் குடும்ப அட்டை பெறத் தகுதி உடையவையாகும். *1997* ஆம் ஆண்டு மைய அரசு கொண்டு வந்துள்ள வறியோர் நலன்காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்படி குடும்பங்களின் வருவாய் மற்றும் இதர வாழ்க்கை வசதிகளின் அடிப்படையில் நாட்டில் உள்ள குடும்பங்கள் அனைத்தையும் வறுமைக் கோட்டிற்குக்கீழுள்ள குடும்பங்கள், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள் எனப் பாகுபாடு செய்து குடும்ப அட்டைகள் வழங்கப்பட வேண்டும். மேற்கூறிய திட்டத்தின்படி, *1997-1998* ஆம் ஆண்டில் கணக்கெடுக்கும் பணி நமது மாநிலத்தில் நடைபெற்றாலும் வருவாய் அடிப்படையில் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்கள்/வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பங்கள் என வகைப்படுத்தாது, அனைவருக்கும் பொதுவான பொது விநியோகத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரிசி வாங்க விரும்பும் குடும்பங்கள், அரிசி வாங்க விரும்பாத குடும்பங்கள் எனப் பாகுபாடு செய்து, அரிசி வாங்க விரும்பும் குடும்பங்களுக்கு இளஞ்சிவப்பு குடும்ப அட்டைகளும், அரிசிக்குப் பதிலாக மாற்றுப் பொருளை வாங்க விரும்பும் குடும்பங்களுக்கு மஞ்சள் நிற குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளன. மஞ்சள் நிற குடும்ப அட்டைதாரர்கள் அவரவர் விருப்பத்திற்கு ஏற்ப, மாதம் ஒன்றுக்கு அரிசிக்குப் பதிலாக *3* கிலோ சர்க்கரையோ அல்லது *5* லிட்டர் மண்ணெண்ணெய்யோ பெற்றுக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

11.8 குடும்ப அட்டைகள் வழங்கும் பணி ஒரு தொடர் பணியாகத்தான் உள்ளது. போலி குடும்ப அட்டைகளைக் கண்டறிந்து ஒழிப்பதும், புதிதாகக் தோன்றியுள்ள குடும்பங்களுக்கு தகுதியின் அடிப்படையில் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 31-03-2003 நிலவரப்படி புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| இளம் சிவப்பு அட்டைகள் (அரிசி அட்டைகள்) | 1,36,20,592 |
| மஞ்சள் அட்டைகள் (மண்ணெண்ணெய் அட்டைகள்) | 13,05,638 |
| மஞ்சள் அட்டைகள் (சர்க்கரை அட்டைகள்) | 11,25,458 |
| காக்கி அட்டைகள் (காவலர் அட்டைகள் — மண்ணெண்ணெய் மட்டும்) | 24,668 |
| மொத்தம் | 1,60,76,356 |

11.9 கடந்த ஓராண்டில் கண்டறியப்பட்ட போலி குடும்ப அட்டைகள், புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள், புழக்கத்தில் உள்ள மொத்த குடும்ப அட்டைகள் ஆகியவற்றின் மாவட்ட.வாரியான விவரங்கள் இணைப்பு-1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

11.10 அரிசிக்கான குடும்ப அட்டைகள் பெற்றுள்ள குடும்பங்களில், மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள 7.16 இலட்சம் குடும்பங்களில் உள்ளவர்கள் மைய அரசு அறிவித்துள்ள அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகள் ஆவார்கள். அக்குடும்பங்களின் குடும்ப அட்டைகளில் "AAY" என்று ஆங்கிலத்தில் முத்திரையிடப்பட்டிருக்கும். இக்குடும்பங்கள் நியாய விலைக் கடைகளில், மைய அரசு நிர்ணயித்துள்ள சில்லறை விற்பனை விலையிலும், அளவிலும் அரிசி பெற்றுக்கொள்ளலாம்.

11.11 போலி குடும்ப அட்டைகள் புழக்கத்தில் இருப்பது பொது விநியோகப் பொருட்களைக் கடத்த வழிவகை செய்வதுடன், தகுதி வாய்ந்த குடும்பங்களுக்குக் கிடைக்க வேண்டிய அளவில்



கிடைக்காதிருக்கவும் வழிகோலுகின்றது. இக்குறைபாடுகளைக் களையும் வகையில் அரசு, அரிசிக்கான குடும்ப அட்டைகள் பெற்றுள்ள குடும்பங்களில் அரிசி வாங்க விரும்புவோருக்கு அரிசி கூப்பன்களை வழங்கி, கூப்பன் அடிப்படையில் நியாயவிலைக் கடைகளில் அரிசி வழங்கும் செயல்முறையை 1-7-2002 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தியோதயா அன்னயோஜனா பயனாளிகள் உட்பட 120 இலட்சம் அரிசிக்கான குடும்ப அட்டைகள் வைத்துள்ள குடும்பங்கள் கூப்பன் பெற்றுள்ளனர். இச்செயல்முறையால் 16 இலட்சம் குடும்ப அட்டைகளை, பொய்ப் பட்டியல் தயாரித்து அரிசியைக் கடத்தும் முறைகேடான செயலுக்குப் பயன்படுத்தும் வாய்ப்பு தடுக்கப்பட்டுள்ளது. இதனால் உணவு மானியத்திலும் குறைவு ஏற்படும்.

**வழங்கல் அளவு**

11.12 கிடைக்கக்கூடிய பொருட்களை அனைவருக்கும் சமமாகப் பங்கிட்டு வழங்க வேண்டும் என்பதால், குடும்பத்திற்கான அரிசி வழங்கல் அளவு, குடும்ப நபர்களின் எண்ணிக்கைகளின் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் கீழ்க்கண்ட அளவிற்கு அரிசி வழங்கப்படுகிறது.

| குடும்ப அட்டைகளில் இடம் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை | வழங்கப்படும் அரிசியின் அளவு |
|---|---|
| வயது வந்த ஒருவருக்கு (ஒரு யூனிட்) | 12 கிலோ |
| வயது வந்த ஒருவர் + ஒரு குழந்தை (1+½ யூனிட்) | 14 கிலோ |
| வயது வந்த இருவர் அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் இரு குழந்தைகள் (இரண்டு யூனிட்) | 16 கிலோ |
| வயது வந்த இருவர் மற்றும் ஒரு குழந்தை அல்லது வயது வந்த ஒருவர் மற்றும் மூன்று குழந்தைகள் (2+½ யூனிட்) | 18 கிலோ |
| வயது வந்த மூவர் மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு (3 யூனிட் மற்றும் அதற்கு அதிகமாக) | 20 கிலோ |

11.13 நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை மேற்குறிப்பிட்ட வழங்கல் அளவுப்படி பெறத் தகுதியுடைய அளவைவிட கூடுதலாக 4 கிலோ அரிசி ஒவ்வொரு குடும்ப அட்டைதாரரும் மாதாமாதம் பெறத் தகுதியுண்டு.

[2003 மே 7

11.14 'அந்தியோதயா அன்ன யோஜனா' பயனாளிகளைப் பொறுத்த மட்டில் குடும்பத்திலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கில் கொள்ளாமல், அக்குடும்பங்கள் ஒவ்வொன்றும் மாதம் 35 கிலோ அரிசி பெறத் தகுதி பெற்றவையாகும்.

11.15 கோதுமை மற்றும் கோதுமைப் பொருட்கள் ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் அவர்கள் பெறத் தகுதியுடைய அரிசியின் அளவில் ஒரு பகுதியாகவோ அல்லது கூடுதலாகவோ அவ்வப்பொழுது நிர்ணயிக்கப்பட்ட அளவில் ஏப்ரல் 2000 ஆண்டுக்கு முன்பு வழங்கப்பட்டு வந்தது. கோதுமையை குடும்ப அட்டைதாரர்கள் விரும்பி வாங்காததால் கோதுமை தொடர்ந்து வழங்கப்படவில்லை. கோதுமை வாங்க விரும்பும் குடும்ப அட்டைதாரர்களின் வசதிக்காக அவர்கள் பெற்றுவரும் அரிசியுடன் கூடுதலாக, மாநகரங்கள் மற்றும் மாவட்ட தலைமையிடங்களிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 10 கிலோ அளவிலும், பிற பகுதிகளிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு 5 கிலோ அளவிலும் ஆகஸ்ட், 2002 முதல் மீண்டும் கோதுமை வழங்கப்பட்டு வருகின்றது.

11.16 சர்க்கரையைப் பொறுத்தமட்டில், ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு 500 கிராம் என்ற அளவின் அடிப்படையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ஒன்றுக்கு மொத்த அளவாக 2 கிலோவிற்கு மிகாமல் சர்க்கரை வழங்கப்படுகிறது. பொது விநியோகத் திட்டத்தின்படி, அரிசி வாங்குவதற்கு விரும்பாமல் சர்க்கரை வாங்குவதற்கு விருப்பம் தெரிவித்த மஞ்சள் நிற குடும்ப அட்டை உள்ள குடும்பங்களுக்கு அக்குடும்பங்களுக்குரிய அளவுடன் கூடுதலாக 3 கிலோ சர்க்கரை வழங்கப்படுகிறது.

11.17 ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள எரிவாயு உருளையின் எண்ணிக்கைக்கேற்ப பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மண்ணெண்ணெய் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:



2003 மே 7]

| இடங்கள் | எரிவாயு உருளை இணைப்பு இல்லாத குடும்பங்கள் | ஒரு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் | இரண்டு எரிவாயு உருளை இணைப்பு உள்ள குடும்பங்கள் |
|---|---|---|---|
| | | (லிட்டரில்) | |
| சென்னை மாநகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள், மாவட்டத் தலை நகரங்கள் | 10 | 3 | - |
| ஏனைய நகராட்சிகள் | 6 | 3 | - |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 5 | 3 | - |
| ஊரகப் பகுதிகள் | 3 | 3 | - |
| **நீலகிரி மாவட்டம்** | | | |
| மாவட்டத் தலைநகரம் | 15 | 3 | - |
| ஏனைய நகராட்சிகள் | 15 | 3 | - |
| நகரியம் மற்றும் பேரூராட்சிகள் | 10 | 3 | - |
| கிராமப் பகுதிகள் | 5+5** | 3 | - |

11.18 அரசுக் கல்வி நிறுவனங்கள், அரசு மருத்துவமனைகள் போன்றவற்றிற்கும், சமையலுக்காகவும், விளக்கு எரிப்பதற்காகவும் மொத்த அனுமதி அட்டைகள் (Bulk permits) மூலம் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இம்மாநிலத்தில் செயல்படுகிற ஏழு கடற்படைப் பிரிவுகளுக்கும், சமையலுக்காகவும், இன்ன பிற தேவைகளுக்காகவும் ஒவ்வொரு மாதமும் 200 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

**(1998 முதல் தற்காலிக ஒதுக்கீடாக வழங்கப்படுகின்றது)

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் என்ற ஊரில் உள்ள கடற்கரைப் பாதுகாப்புப் பிரிவிற்கு ஒவ்வொரு மாதமும் 300 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது.

## பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் பொருட்களின் தேவையான அளவுகள்

11.19 கடந்த சில மாதங்களில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் பொது மக்கள் வாங்கியுள்ள அரிசி மற்றும் கோதுமை ஆகியவற்றின் ஒட்டுமொத்த நுகர்வுகளின் அடிப்படையிலும் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை குடும்ப அட்டைதாரர்கள் பெறத் தகுதியுள்ள அளவையும் கருத்தில் கொண்டு கணக்கிடப்பட்ட இப்பொருட்கள் ஒவ்வொரு மாதமும் தேவைப்படும் அளவு பின்வருமாறு:

(மெட்ரிக் டன்களில்)

| | |
|---|---|
| அரிசி | 2,25,000 |
| கோதுமை | 5,000 |
| சர்க்கரை | 25,500 |
| மண்ணெண்ணெய் | 73,000 (கிலோ லிட்டரில்) |

11.20 இவை தவிர, மாதந்தோறும் நியாயவிலைக் கடைகளின் மூலமாக சுமார் 300 மெட்ரிக் டன் அளவில் ஊட்டி தேயிலையை விற்பனை செய்ய அரசு நோக்கம் கொண்டுள்ளது. அயோடின் கலந்த உப்பு விற்பனைக்கு அளவு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

11.21 நியாயவிலைக் கடைகளிலிருந்து குடும்ப அட்டைதாரர்கள் 2001-2002 ஆம் ஆண்டு மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் பெற்ற அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் மொத்த நுகர்வு அளவு விவரங்கள் இணைப்பு-2-ல் அளிக்கப்பட்டுள்ளன.



## பொருட்கள் கிடைக்கப்பெறும் அளவும், தேவையை பூர்த்தி செய்ய கொள்முதல் செய்யும் முறைகளும்

11.22 தற்பொழுது மைய அரசின் தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டு வரும் அரிசியைக் கொண்டே பொது விநியோகத் திட்டத்தின் ஒட்டுமொத்த அரிசி தேவை ஈடுசெய்யப்பட்டு வருகிறது. முந்தைய ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் உற்பத்தி, விற்பனைக்கு வருவது, பொது விநியோகத்திற்கான தேவை, மைய அரசு ஒதுக்கீடு ஆகியவற்றைப் பொறுத்து வணிகர்களிடமிருந்து கட்டாயமாக நெல் மற்றும் அரிசி கொள்முதல் செய்யும் முறை (லெவி முறை), விவசாயிகளிடமிருந்து விற்பனைக்கு கொண்டுவரக்கூடிய நெல் முழுவதையும் அரசே கொள்முதல் செய்தல் (ஏகபோக கொள்முதல்) மற்றும் இணைக் கொள்முதல் ஆகிய மூன்று செயல்முறைகளில் ஏதேனும் ஒன்றையோ அல்லது இரண்டையோ கடைப்பிடிப்பது மூலமாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. முன்னாளில், இம்மாநிலத்தில் நிலவிய நெல் உற்பத்தியில் இருந்த பற்றாக்குறை பின்னால் நீங்கிவிட்டது. இதனால் 25-01-1992 முதல் வணிகர்களிடமிருந்து கட்டாயமாக நெல்/அரிசி கொள்முதல் செய்யும் செயல்முறை நிறுத்தப்பட்டுவிட்டது. இச்செயல்முறை, 1974 முதல் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இம்முறையில் வணிகர்கள் தமது விற்பனை இடங்களுக்கு கொண்டு செல்லும் முன்னர் அரசுக்கு அவ்வப்போது அரசால் வரையறுத்த அளவிற்கு நெல்/அரிசியை செலுத்திவிட்டு மீதியை விற்க வேண்டும். 1985 ஆம் ஆண்டு முதல் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவரும் நெல் முழுவதையும் அரசுக்கே விற்க வேண்டும் என்ற முறை பின்பற்றப்பட்டு வந்தது. பின்னர், அதனை மாற்றி 1-5-1993 ஆம் ஆண்டிலிருந்து இணைக் கொள்முதல் செயல்முறையை அரசு செயல்படுத்தி வந்தது. ஆனாலும், 1996-1997 ஆம் ஆண்டில் ஓரிரு பருவங்களில் நெல் விளைச்சல் மிகக் குறைவாக இருந்ததால், அவ்வாண்டில் விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வந்த நெல் முழுவதையும் அரசே கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டது. நாடு முழுவதும் நெல் விளைச்சல் மிகுதியாகி மைய அரசிடம் கையிருப்பு மிகுதியாக உள்ளதையொட்டி, மத்திய அரசு கட்டுப்பாடற்ற வணிகத்தைச் செயல்படுத்த மாநில அரசுகள் ஊக்குவிக்க வேண்டும் என வலியுறுத்தி வந்தன. இக்கொள்கையின் அடிப்படையில், விளைந்த நெல்லை மாநிலத்தைவிட்டு வெளியே வாணிக நோக்குடன் கொண்டு செல்ல வணிகர்களிடமிருந்து 100 விழுக்காடு அரசு நெல் கொள்முதல் செய்கின்ற முறையை இவ்வரசு

*11-09-2001* முதல் விலக்கிக்கொண்டது. மைய அரசு வரையறுத்த குறைந்த அளவு ஆதார விலையை (Minimum Support Price) கடைப்பிடித்து இந்திய உணவுக் கழகத்திற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் முறையில் நெல் கொள்முதல் செய்து வருகிறது. இந்திய உணவுக் கழகம் நிர்ணயித்துள்ள தரக்கட்டுப்பாட்டிற்கு ஏற்ப நெல் கொள்முதல் செய்து இந்திய உணவுக் கழகத்திற்கு சொந்தமாக்கப்படுகின்றது. அதனை மைய அரசு, மாநில அரசுக்கு தமது ஒதுக்கீட்டில் ஒரு பகுதியாக அளிக்கும். நாடு முழுவதும் பரவலாக பல மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

*11.23* *1998* ஆம் ஆண்டுக்கு முன்பு, மைய அரசு மாநிலத்தின் தேவைக்கும் மிகக் குறைவாக அரிசி ஒதுக்கி வந்தது. பின்னர், அந்த ஒதுக்கீடு கணிசமாக உயர்ந்து தற்பொழுது சுமார் *4.9* இலட்சம் மெட்ரிக் டன் அரிசி மாதந்தோறும் கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டு வருகின்றது:

(மெட்ரிக் டன்களில்)

| | |
|---|---|
| வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களுக்கான ஒதுக்கீடு | *3,05,665* |
| வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களுக்கான ஒதுக்கீடு | *1,45,196* |
| அந்தியோதயா அன்ன யோஜனா | *25,002* |
| இதர நலத் திட்டங்கள் | *19,116* |
| மொத்தம் | *4,94,979* |

*11.24* மேற்கண்டவாறு மைய அரசுத் தொகுப்பிலிருந்து வழங்கப்படுகின்ற அரிசியின் அளவு பொது விநியோகத் திட்டத்தின்படி, மக்களுக்கு வழங்க வேண்டிய அரிசியின் மொத்த அளவைவிட கூடுதலாகவே உள்ளது. மைய அரசு வகுத்துள்ள தரக்கட்டுப்பாட்டினை முழுமையாக கடைப்பிடிக்காமல் தேவைக்கு மேல் கொள்முதல் செய்து அதன் விளைவாகத் தரம் குறைந்த அரிசியை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவது என்பது சரியானதல்ல. விவசாயிகள் தங்களது விளைபொருளை யாருக்கு வேண்டுமானாலும்





அவர்களுக்கு ஆதாயமான விலையில் விற்கும் சுதந்திரம் இருப்பதாலும், அதேபோன்று வணிகர்களுக்கும் தாம் கொள்முதல் செய்த தானியங்களை எங்கு வேண்டுமானாலும் தடையின்றிக் கொண்டு சென்று விற்பதற்கு உரிமையுள்ளதாலும் உணவு தானியங்கள் தங்கு தடையின்றி வரப்பெற்று வெளிச்சந்தையில் எல்லா இடங்களிலும் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

*11.25* மேலே குறிப்பிட்டவாறு மாறுபட்ட சூழ்நிலையிலும் பொது மக்களுக்கு தரமான உணவு தானியங்களை வழங்க வேண்டும் என்ற அரசு கொள்கை கடைப்பிடிக்கப்படுவதாலும், இதுகாறும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நெல் கொள்முதல் திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு அதன் விளைவாக மைய அரசு வகுத்துள்ள பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம் (Decentralised Procurement System) *01-10-2002* ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி வழக்கம்போல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் காவிரிப் பாசனப் பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் ஏற்படுத்தியும், மற்ற இடங்களில் வட்டக் கிடங்குகள் மூலமும் மைய அரசின் சார்பாக நெல்லைக் கொள்முதல் செய்கிறது. அவ்வாறு நெல் கொள்முதல் செய்யும்போது, மைய அரசு வகுத்துள்ள தரம் தொடர்பான வரையறைகளைத்தான் கடைப்பிடிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மைய அரசு நிர்ணயித்துள்ள ஆதார விலை மட்டுமே அளிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கொள்முதல் செய்யும் நெல்லை அரிசியாக அரைவை செய்து கிடங்கில் சேமித்து வைத்து நியாயவிலைக் கடைகளுக்கு சென்றடைய ஏற்பாடு செய்ய வேண்டும். இத்திட்டப்படி நெல் கொள்முதல் மூலம் கிடைக்கும் அரிசியில் இம்மாநில பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் அளவு அரிசிக்கு மைய அரசு வரையறுத்துள்ள பொருளாதார விலைக்கும் மைய அரசின் பொது விநியோக வழங்கல் விலைக்கும் இடையேயுள்ள விலை வித்தியாசத் தொகையை மைய அரசு மாநில அரசுக்கு வழங்கும். பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அளவைவிட மேற்கூறிய புதிய திட்டத்தின்படி நெல் கொள்முதல் மூலம் கிடைக்கும் அரிசியின் அளவு குறைவாக இருக்குமானால், மீதியை, மைய அரசுத் தொகுப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் அளவுக்கு மேல் கொள்முதல் செய்யப்பட்டால் கூடுதல் அளவை மைய அரசின் தொகுப்பிலேயே சேர்த்துவிட வேண்டும்.

[2003 மே 7

*11.26* சாதாரண இரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.530, என்றும் கிரேடு 'ஏ' இரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.560 ஆகவும் மைய அரசு நெல்லின் ஆதார விலை நிர்ணயம் செய்துள்ளது. மாநிலத்திற்குள்ளேயே நெல்லை கொள்முதல் செய்து அரிசியாக அரைவை செய்வதன் மூலமாக கிடைக்கக்கூடிய அரிசியின் பொருளாதார விலை கீழ்க்கண்டவாறு மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

| | கொள்முதல் செய்து திறந்தவெளி சேமிப்பில் வைத்திருந்தால் | கொள்முதல் செய்து நிரந்தர சேமிப்பு நிலையங்களில் வைத்திருந்தால் |
|---|---|---|
| | (ரூபாய் குவிண்டால் ஒன்றுக்கு) | |
| கிரேடு 'ஏ' இரகம் | 986.52 | 998.34 |
| சாதாரண இரகம் | 938.43 | 950.24 |

*11.27* நமது மாநிலத்தில் உள்ள வறட்சியால் 2002 குறுவைப் பருவத்தில் எதிர்பார்த்த அளவிற்கு நெல் கொள்முதல் செய்ய முடியவில்லை. இதே நிலைதான் நடப்பு சம்பா 2003 பருவத்திலும் தொடர்கிறது. எனவே, பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தினால் கிடைக்க வேண்டிய பயன்கள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கப்படுவதில் இதுகாறும் எடுக்கப்பட்டு வந்த அரிசி அளவினைவிட கூடுதலாக எடுக்கப்பட்டு பொது விநியோகத் திட்டத்தில் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகிறது.

*11.28* பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டப்படி, நெல் கொள்முதல் செய்யும்பொழுது ஆதார விலையுடன் சிறப்பு வறட்சி நிவாரண தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20/-ஐ 1-10-2002 முதல் அனுமதித்து, அதனை 1-1-2003 முதல் நிறுத்தியது. விவசாயிகளின் நலன் கருதி இந்தச் சிறப்பு வறட்சி நிவாரணத் தொகையைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பதோடு இரட்டிப்பாக்கி தொடர்ந்து குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40/- ஆக வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரத பிரதமருக்கு கோரிக்கை விடுத்ததால் மத்திய அரசு சிறப்பு வறட்சி நிவாரணத் தொகையாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20/-ஐ 30-06-2003 வரை தொடர்ந்து வழங்க அனுமதித்துள்ளது.



2003 மே 7]

*11.29* கோதுமையைப் பொறுத்தமட்டில், பொது மக்கள் அதிகமாக விரும்பாததால் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களுக்காக மைய அரசு ஒதுக்கீடு செய்யும் அரிசி முழுவதையும் மாநில அரசு ஏற்கெனவே எடுத்துக்கொள்ள முன்வந்துள்ளது. எனவே, பொது விநியோகத் திட்டத்தின்படி வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள குடும்பங்களுக்கென மைய அரசு கோதுமையை ஏப்ரல் 2000 ஆம் ஆண்டு முதல் ஒதுக்கீடு செய்வதில்லை. பின்னர், மைய அரசு பொது விநியோகத் திட்டத்திற்காக வழங்கும் கோதுமையின் விலையைக் குறைத்ததாலும் கோதுமை வாங்க விரும்பும் குடும்பங்களின் நலனையும் கருத்தில் கொண்டு, வறுமைக்கோட்டிற்கு மேலுள்ள குடும்பங்களுக்காக வழங்கும் கோதுமையின் விலையின் அடிப்படையில் ஆகஸ்ட் 2002-லிருந்து ஒவ்வொரு மாதமும் 10,000 மெட்ரிக் டன் ஒதுக்கீடு பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மக்கள் கோதுமையை அதிகமாக விரும்பாததன் காரணமாக தற்போது கோதுமையின் நுகர்வு அளவு மைய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ள ஒதுக்கீட்டைவிடக் குறைவாகவே உள்ளது.

*11.30* பொது விநியோகத்திற்குத் தேவையான சர்க்கரை, மைய அரசு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையின் மூலமாகவும், தமிழ்நாடு கூட்டுறவுச் சர்க்கரை இணையத்திடமிருந்து வாங்கப்படும் லெவி அல்லாத சர்க்கரையின் மூலமாகவும் ஈடுசெய்யப்படுகிறது. மைய அரசு மதிப்பீடு செய்தபடி, இம்மாநிலத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ளவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, மைய அரசு, ஒதுக்கீடு செய்கிற சர்க்கரையின் அளவு மாதம் ஒன்றுக்கு சராசரியாக 10,820 மெட்ரிக் டன்கள் ஆகும். இதற்கு முன்பு வெளிச் சந்தையில் சர்க்கரையின் விலை கூடுதலாக இருந்ததால் குடும்ப அட்டைதாரர்கள் பெற்றுக் கொண்ட சர்க்கரையின் நுகர்வு கூடுதலாக இருந்தது. எனவே, லெவி அல்லாத சர்க்கரையை வாங்கி மீதம் உள்ள தேவை நிறைவு செய்யப்பட்டது. தற்பொழுது சர்க்கரையின் வெளிச் சந்தை விலை சரிந்து வருவதால், குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் சர்க்கரையை வாங்குவதற்கு அதிக ஆர்வம் காட்டுவதில்லை.

*11.31* மண்ணெண்ணெயைப் பொறுத்தமட்டில் பொது விநியோகத் திட்டத்திற்காக மைய அரசு ஒதுக்கீடு செய்கிற அளவிற்குள் மக்களுக்கு வழங்குவதைத் தவிர வேறு வழியில்லை. மைய அரசு, தாம் வழங்கும் மண்ணெண்ணெய் அளவை, ஆண்டுக்காண்டு, இம்மாநிலத்திலுள்ள

[2003 மே 7

குடும்பங்களுக்கு வழங்கப்பெறும் சமையல் எரிவாயு உருளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்பக் குறைத்துக் கொண்டே வருகிறது. மைய அரசு, 1-4-2002 முதல் ஒவ்வொரு மாதமும் 62,398 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கி வந்தது. ஆனால் 1-04-2003 முதல் மாதமொன்றுக்கு 60,144 கிலோ லிட்டராக குறைத்து வழங்கி வருகிறது. அது பொது விநியோகத் திட்டத்தில் பகிர்ந்தளிக்கப்பட்டு வருகிறது. மைய அரசு வழங்குகிற அளவைக் கூடுதல் ஆக்கும்படி மைய அரசிடம் அனுப்பப்பட்ட கோரிக்கை ஏற்கப்படவில்லை.

11.32 ஊட்டித் தேயிலைத் தூளும், அயோடின் கலந்த உப்பும் அதிகமாகவே கையிருப்பில் உள்ளது. தேவைப்படுகிற தேயிலைத் தூள் முழுவதையும் இண்ட்கோசர்வ் நிறுவனம் அளித்து வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அளிக்கத் தேவையான அயோடின் கலந்த உப்பு முழுவதையும் தமிழ்நாடு உப்பு நிறுவனம் வழங்குகிறது.

**பொது விநியோகத் திட்ட வழங்கல் விலையும், உணவு மானியமும்:**

11.33 வறியோர் நலன்காக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் மைய அரசு அளிக்கின்ற அரிசியின் விலை வறுமைக்கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.5.65-ம், வறுமைக் கோட்டிற்கு மேலுள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.8.30-ம் ஆகும். இதற்கு மேல் கூடுதலாக அட்டைதாரர்களிடம் இருந்து நிர்வாகச் செலவுகளுக்காக ஒரு கிலோ அரிசிக்கு 50 பைசா வசூலித்துக்கொள்ள மைய அரசு அனுமதி அளித்துள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நெல் கொள்முதல் செய்து கிடைக்கின்ற அரிசியின் அடக்க விலை ஒரு கிலோவுக்கு ரூ.12/- ஆகும். 01-01-2000 முதல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருப்பவர்கள்/மேல் இருப்பவர்கள் என்ற பாகுபாடு இன்றி அரிசி தேவைப்படுகின்ற அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒரு கிலோவிற்கு ரூ.3.50 என்ற விலையில் மாநில அரசு வழங்கி வந்தது. நிலவிவரும் நிதி நெருக்கடியையும் அதே வேளையில் ஏழை மக்கள் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, குடும்ப அட்டைதாரர்கள் ஒவ்வொருவரும் வாங்கும் அரிசியின் முதல் 10 கிலோ அரிசியின் விலையை ஏற்கெனவே உள்ள விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்றும், பெற தகுதியுள்ள மீதமுள்ள அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.6.00 என்றும், 01-10-2002 முதல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. அரிசியின் அடக்கவிலை அல்லது மைய அரசு என்ன விலைக்கு வழங்குகிறதோ அந்த விலைக்கும், மாநில அரசு என்ன விலைக்கு



2003 மே 7]

குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குகிறதோ அந்த விலைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. 'அந்தியோதயா அன்ன யோஜனா' குடும்பங்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்படி அளிக்கப்பெறும் அரிசிக்கான விலை ரூ.3/- என்று மைய அரசு வரையறுத்துள்ளது.

11.34 வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கான கோதுமையை ஒரு கிலோ ரூ.6.10 என்ற விலைக்கு மைய அரசு வழங்குகிறது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அதை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கான விலை, ஜூலை 2002-லிருந்து ஒரு கிலோவுக்கு ரூ.7.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் மானியச் செலவு ஏதுமில்லை.

11.35 பொது விநியோகத் திட்டத்தின்கீழ் விற்பனை செய்யப்படும் சர்க்கரையின் சில்லறை விற்பனை விலையை மைய அரசு முடிவு செய்கிறது. மைய அரசின் இவ்விலையை மாநில அரசு 09-03-2002 முதல் பின்பற்றி வருகின்றது. அந்த விலை தற்பொழுது கிலோவுக்கு ரூ.13.50 ஆகும். குடும்ப அட்டைதாரர்களுக்கு லெவி அல்லாத சர்க்கரையைக் கூடுதலான விலைக்கு வாங்கி மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு அளிக்கும் போது மைய அரசு வரையறுத்த விலைக்கும் மாநில அரசு வாங்கிய விலைக்கும் உள்ள வேறுபாட்டுத் தொகையை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

11.36 01-03-2002 முதல் மண்ணெண்ணெய்யின் விலையை மைய அரசு உயர்த்தியதால் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் லிட்டர் ஒன்றுக்கு ரூ.9.00 முதல் ரூ.9.60 என்ற விலையில் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். வறுமையில் உள்ள நலிவுற்ற மக்களின் நலனைக் கருதி அந்த விலையை ரூ.8.40/-லிருந்து ரூ.9.00/-க்கு விற்பனைச் செய்யப்பட வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். ஒரு லிட்டருக்கு 60 பைசா வீதம் ஏற்படும் வித்தியாசத் தொகை, மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11.37 இண்ட்கோசர்வ் நிறுவனம் 100 கிராம் ஊட்டி தேயிலையை ரூ.7.50 என்ற விலைக்கு விற்கிறது. அது பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ரூ.9.00-க்கு விற்கப்படுகிறது. விளிம்புத் தொகை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், கூட்டுறவுச் சங்கங்களாலும் நிர்வாகச் செலவுகளுக்காக பகிர்ந்து கொள்ளப்படுகின்றது. பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அயோடின் கலந்த உப்பு ஒரு கிலோ

ரூ.2.50-க்கு விற்கப்படுகிறது. இவைகளால், அரசுக்கு மானியச் செலவு இல்லை.

11.38 மாநில அரசு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கும் விலைக்கும், மைய அரசு அத்திட்டத்தின்படி விற்கின்ற விலை/கொள்முதல் விலைக்கு உள்ள வித்தியாசத் தொகை, லெவி அல்லாத சர்க்கரை வாங்கி குடும்ப அட்டைதாரர்களுக்கு குறைந்த விலைக்கு வழங்கப்படும் பொழுது ஏற்படும் வித்தியாசத் தொகை, மண்ணெண்ணெய் விலைகளில் வித்தியாசத் தொகை (Differential Cost) இவையே உணவு மானியத்தின் கூறுகள் ஆகும். 1980-81-ல் ரூ.1.81 கோடியாக இருந்த உணவு மானியம் 2001-2002-ல் சமாளிக்க இயலாத அளவிற்கு ரூ.1,540 கோடியாக உயர்ந்தது. இதன் விளைவாக 01-10-2002 முதல் பொது விநியோகத் திட்ட அரிசியின் விலை முதல் 10 கிலோக்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.3.50 என்றும் குடும்ப அட்டைதாரர்கள் பெறத் தகுதியுள்ள மீதி உள்ள அரிசிக்கு ஒரு கிலோவுக்கு ரூ.6.00 என்றும் திருத்தி அமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இதுவே மிகக் குறைவான விலையாகும். அரிசிக்கூப்பன் முறையைக் கொண்டு வந்தது, பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தைக் கடைப்பிடித்தது, பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அரிசியின் விலையை மாற்றியமைத்தது போன்ற சீரமைப்பு நடவடிக்கைகளின் பயனாக உணவு மானியத் தொகை ஓரளவு குறையும் என்று நம்பப்படுகிறது.

11.39 கடந்த சில ஆண்டுகளில் அரசு அளித்துள்ள மொத்த உணவு மானியம் 1980-1981 முதல் 2003-2004-க்கான விவரம் இணைப்பு-3-ல் அளிக்கப்பட்டுள்ளது.

11.40 2003-2004 ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீட்டில் உணவு மானியமாக ரூ.600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**சேமிப்புக் கிடங்குகள்**

11.41 இன்றியமையாப் பொருட்கள் தட்டுப்பாடின்றி நியாயவிலைக் கடைகளில் கிடைக்கும் வகையில், அவைகள் ஒவ்வொரு மாதமும் முன்னதாகவே கொள்முதல் செய்யும் இடங்களிலிருந்து போதிய அளவில் கொண்டு செல்லப்பட்டு வட்டக் கிடங்குகள் போன்றவற்றில் சேமித்து வைக்கப்படுகின்றன.





11.42 பொது விநியோகத் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டு வரும் கிடங்கு வசதி விவரம் பின்வருமாறு:

| வ. எண் | நிறுவனம் | எண்ணிக்கை | கொள்ளளவு டன்களில் |
|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 168 | 6,33,845 |
| 2. | தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 67 | 6,34,479 |
| 3. | மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனம் | 16 | 5,22,954 |
| 4. | இந்திய உணவுக் கழகம் | 9 | 5,42,680 |
| | மொத்தம் | 260 | 23,33,958 |

**வழங்கு மையங்கள்**

11.43 கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஆகியன நடத்தும் நியாய விலைக் கடைகள் இவற்றின் வழியாக குடும்ப அட்டைதாரர்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. நமது மாநிலத்தில் நியாய விலைக் கடைகளை நடத்த தனியாருக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. அரசு வகுத்த வரையறைகளுக்கு இணங்க நியாயவிலைக் கடைகளைத் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. வசிக்கக் கூடிய இடத்திற்கும் நியாயவிலைக் கடைக்கும் இடையிலான தூரம் 2 கிலோ மீட்டருக்கு மேல் இருக்கக் கூடாது. மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் 800 குடும்ப அட்டைகளுக்கு குறையாமலும், 1,000 குடும்ப அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். மற்ற பகுதிகளில் ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறையாமலும் 800 அட்டைகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். இருந்தாலும் மிகுந்த தேவைகளைக் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், பழங்குடிகள் வாழ்கின்ற பகுதிகளிலோ, இனக் கலவரங்கள் ஏற்படக்கூடிய பகுதிகளிலோ மேற்குறிப்பிட்ட வரையறைகள் பொருந்தாவிட்டாலும் நியாயவிலைக் கடைகளைத் திறக்க முடியும். ஒரு குடியிருப்புப் பகுதியோ/சிற்றூரோ நியாயவிலைக் கடையிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவுக்கப்பால்

இருந்து ஒரு முழுநேர நியாயவிலைக் கடை திறப்பதற்குத் தேவையான அளவு மக்கள் அப்பகுதியில் வசிக்காவிட்டாலும் வாடகையில்லாத கட்டடமும் வியாபாரக் கூட தளவாடங்களும் கிடைத்தால் அப்பகுதிக்கான நியாயவிலைக் கடை, ஒரு பகுதிநேரக் கடையை திறக்க இயலும். பொது விநியோகத் திட்டத்தில் சமுதாயப் பங்கேற்பு குறிப்பாக, பெண்கள் பங்கேற்பு இருக்கும் வகையில் பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் புதிய நியாயவிலைக் கடைகள் திறக்கவும் இருக்கின்ற நியாயவிலைக் கடைகளை அவைகளுக்கு மாற்றவும் இந்த அரசு ஊக்கம் அளித்து வருகின்றது. மலைப்பகுதிகள் மற்றும் போக்குவரத்து வசதி குறைந்த தொலைதூர கிராமங்களில் உள்ள மக்களின் நலனுக்காக நடமாடும் நியாய விலைக் கடைகள் நடத்தப்படுகின்றன.

11.44 இம்மாநிலத்தில் 31.03.2003 அன்று நிலவரப்படி இயங்கி வரும் 28,060 நியாயவிலைக் கடைகளின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நடத்தும் நிறுவனம்/ அமைப்பு | முழு நேரம் | பகுதி நேரம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | 1,092 | 55 | 1,147 |
| 2. | கூட்டுறவுச் சங்க பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுகள் | 21,722 | 4,520 | 26,242 |
| 3. | மற்ற கூட்டுறவுகள் (மீன் வளம்/தோட்டத் தொழிலாளர் போன்றன) | 152 | 8 | 160 |
| 4. | பெண்கள் குழுக்கள் | 317 | 158 | 475 |
| 5. | கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படுகிற நடமாடும் நியாயவிலைக் கடைகள் | 36 | — | 36 |
| | மொத்தம் | 23,319 | 4,741 | 28,060 |

11.45 31.03.2003 அன்றைய நிலவரப்படி மாவட்டவாரியான நியாயவிலைக் கடைகள் விவரம் இணைப்பு-4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

11.46 அரசின் நோக்கம், ஒவ்வொரு வருவாய் கிராமத்திலும் ஒரு நியாயவிலைக் கடையாவது இருக்க வேண்டும் என்பதாகும். மேற்காணும் பட்டியலில் இருந்து மிகப் பெரும்பான்மையான வருவாய் கிராமங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகள் உள்ளன என்று அறியலாம். ஊரகப் பகுதிகளில் 500 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களில் 800 குடும்ப அட்டைகளுக்குக் குறைவாகவும் இருந்தால் நியாயவிலைக் கடைகள் நடத்துவது பொருளாதார அடிப்படையில் சரிப்பட்டு வராது. இருப்பினும் எல்லாப் பகுதிகளையும் அத்தியாவசியப் பண்டங்கள் சென்றடைய வேண்டும் என்பதற்காக குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைகள் வரையறுக்கப்பட்டதை விட குறைவாகக் கொண்ட 20,000 நியாயவிலைக் கடைகள் இம்மாநிலத்தில் நடத்தப்படுகின்றன. அந்த நியாயவிலைக் கடைகளை நடத்துவதால் ஏற்படும் இழப்பினை அரசு மானியமாக அளித்து வருகின்றது. எல்லா மக்களும் வசதியாக அத்தியாவசியப் பொருட்களைப் பெறும் வகையில் ஒவ்வொரு வாரமும் வாராந்திர விடுமுறை நாள் வெள்ளிக்கிழமை தவிர மற்ற எல்லா நாட்களிலும் நியாயவிலைக் கடைகள் செயல்படுகின்றன.



11.47 மண்ணெண்ணெய் நியாயவிலைக் கடைகள் மூலமாக மட்டுமல்லாமல், சேமித்து வைத்தல் மற்றும் அளவிடுவதிலுள்ள இடர்பாடுகள் மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதில் காலதாமதம் ஆகியவற்றைக் குறைக்கும் வகையில், கூட்டுறவுச் சங்கங்களும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் 288 இடங்களில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் அமைத்து அவற்றின் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகின்றது.

**பொது விநியோகத் திட்டத்தினை மேலாய்வு செய்தல்**

11.48 பொது விநியோகத் திட்டம் இன்னும் பயன் தரும் வகையில் திறமையாகவும் வெளிப்படையாகவும் செயல்படுவதற்காகவும், நல்ல முறையில் செயல்பட தொடர்புடைய அலுவலர்கள்/பணியாளர்களைப் பொறுப்பாக்கும் முறையிலும், உணவுப் பொருள் வழங்கல், வருவாய் மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் நியாயவிலைக் கடைகளை மாதாமாதம் ஆய்வு செய்வதற்கான படிவங்களும் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆய்வுகளின் போது நியாய விலைக் கடைகளில் விற்கப்படும் பொருட்கள் சரியான அளவுடன், தரம் உள்ளவையாக வழங்கப்படுகின்றனவா என்றும், வரையறுக்கப்பட்ட நேரங்களில் கடைகள் செயல்படுகின்றனவா என்றும், மண்ணெண்ணெய் மொத்த வணிகம் செய்வோர் வணிகம் செய்யும் இடங்கள் பற்றியும்.

ஆய்வு செய்யப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் நியாயவிலைக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டது பற்றிய விவரங்கள் இணைப்பு-5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

11.49 கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், காவல் துறை தலைவர் (குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு) ஆகியோருடன் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர், பொது விநியோகத் திட்டத்தின் செயல்பாடு பற்றி மாதம் இருமுறை ஆய்வு செய்கிறார்.

11.50 மாவட்டங்களில் பொது விநியோகத் திட்ட செயற்பாடுகள் பற்றிய ஆய்வு அறிக்கைகள் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரிடமிருந்து வரப்பெற்று மாண்புமிகு கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உள்ள நியாயவிலைக் கடைகளின் செயல்பாடு பற்றி உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், கூட்டுறவுச் சங்க பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோரிடமிருந்து வரப்பெறுகிற ஆய்வு அறிக்கைகளும் மாண்புமிகு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களால் மாதந்தோறும் ஆய்வு செய்யப்படுகின்றன. ஏழை மக்களுக்கு இன்றியமையாப் பொருட்கள் தரமாகவும், தட்டுப்பாடின்றியும் கிடைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டினை தொடர்ந்து கண்காணித்து வருகின்றார்கள்.

11.51 பொது விநியோகத் திட்டம் பற்றிய மாவட்டம், வருவாய் கோட்டம் மற்றும் ஊராட்சி அளவிலான செயல்பாடு பற்றிய கருத்துரை அளிக்கும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொது மக்களின் பிரதிநிதிகளும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் சார்பாளர்களும் அக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

11.52 பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், மாநகராட்சிகளின் மேயர்கள் மற்றும் உறுப்பினர்கள், நகராட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மாவட்ட ஊராட்சிகள்/ஊராட்சி ஒன்றியங்கள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் உறுப்பினர்கள் ஆகியோர் தமது எல்லைகளில் உள்ள நியாயவிலைக் கடைகளைப் பார்வையிட்டு குறைபாடுகள் ஏதும் காணப்பட்டால் மாவட்ட, வருவாய் கோட்ட அளவில் உள்ள குழுக்களுக்குத் தெரிவிக்கலாம்.





11.53 குடும்ப அட்டைதாரர்களின் நலனுக்காக வறியோர் நலன்காக்கும் பொது விநியோகத் திட்டம் பற்றிய மக்கள் சாசனம் (Citizen's Charter) வெளியிடப்பட்டுள்ளது.

11.54 பொது மக்கள் கூறும் குறைபாடுகளைக் களைய உரிமை பெற்ற மற்றும் மேல்முறையீடுகளை ஆய்வு செய்யும் அலுவலர்கள் பற்றி விவரம் அறியும் உரிமைச் சட்டத்தின்படி அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

### பொது விநியோகத் திட்டம் பற்றிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் குழு

11.55 2001-2002 நிதியாண்டில் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு அரசால் அமைக்கப்பட்ட பொது விநியோகத் திட்டம் பற்றிய சட்டமன்ற உறுப்பினர்கள் குழு, வருவாய் அடிப்படையில் குடும்பங்களை பாகுபாடு செய்ய வேண்டும் என்ற கருத்தை தெரிவித்துள்ளது. மைய அரசால் வெளியிடப்பட்ட 2001-இன் பொது விநியோகத் திட்ட கட்டுப்பாட்டு ஆணைப்படியும் மாநில அரசுகள் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளோர், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளோர் என்று பாகுபாடு செய்ய வேண்டும். ஆனால், அப்படி பாகுபாடு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட வேண்டிய வருவாய் வரம்பு குறித்த ஏற்கத்தக்க அளவுகோலை மைய அரசு அறுதியிடவில்லை. அதே சமயத்தில், மைய அரசு 48.63 இலட்சம் குடும்பங்களுக்கு வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ளோருக்கான அரிசியை அது தாமே கருதியவாறு வழங்கி வருகின்றது. இந்நிலையில் பொது விநியோகத் திட்டத்தின்படி விலை குறைத்து வழங்கப்படுகிற நுகர்பொருட்களை பெறுவதற்கு உண்மையிலேயே தகுதியுள்ளவர்கள் எவரும் இழந்து விடக்கூடாது என்பது மாநில அரசின் உறுதியான கருத்து என்பதால் வருவாய் அடிப்படையை மாநில அரசின் தாமே முடிவு செய்து கொண்டு வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களை, மைய அரசு ஏற்கத்தக்க வகையில் அறுதியிட இயலவில்லை. எனவே, எல்லாருக்குமான பொது விநியோகத் திட்டம் (Universal PDS) நமது மாநிலத்தில்

[2003 மே 7

தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆயினும், வறியோர் நலன்காக்கும் பொது விநியோகத் திட்டப்படி (Targeted PDS) மைய அரசு வழங்கும் விலைக்கு மிகவும் குறைவாகவே நமது மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தின்படி அரிசி வழங்கி, வறியோர் நலன் பாதுகாக்க வகை செய்யப்பட்டுள்ளது.

11.56 பொருட்களை வழங்குவதற்கான கூப்பன் முறையைப் பின்பற்ற வேண்டும் என்பது சட்டப் பேரவை உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் மற்றொரு பரிந்துரை ஆகும். அது அலுவலர் குழுவின் பரிந்துரையும் ஆகும். அரசு அப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு, 01-07-2002 முதல் அரிசிக்கான கூப்பன் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அத்தியாயம்-12

### கட்டுப்பாட்டு ஆணைகளைச் செயல்படுத்துதல்

12.1 பொதுமக்களுக்கு நியாய விலையில் இன்றியமையாப் பொருட்கள் கிடைக்கச் செய்யவும், பதுக்கல், கள்ளச்சந்தை போன்றவற்றைத் தடுக்கவும், மைய அரசு 1955 ஆம் ஆண்டில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தை இயற்றியது.

12.2 மேலும் இன்றியமையாப் பொருட்கள் பொதுமக்களுக்கு நியாய விலையில் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கத்தில், அப்படிப்பட்ட பொருட்களைப் பதுக்குதல், கள்ளச் சந்தையில் விற்று கொள்ளை ஆதாயம் பெறுதல் போன்றவற்றிலிருந்து தடுப்பதற்காகவும், மேலும் சமூக விரோதிகள், கள்ள வியாபாரிகள் மற்றும் கள்ளச் சந்தைக்காரர்கள் போன்றவர்களால் பொதுமக்கள் சுரண்டப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அத்தியாவசியப் பொருட்களை (தரம் மற்றும் அளவுகளை) பராமரித்துக்கொள்ளும் பொருட்டு 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ் மாநில அரசு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள உணவுத் துறை தொடர்பான கட்டுப்பாட்டு ஆணைகள் பின்வருமாறு:—

1. 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

2. 1977 ஆம் ஆண்டு பயறு வகைகள் (சேமிப்பு மற்றும் கட்டுப்பாடு) ஆணை.



2003 மே 7]

3. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (இருப்பு, விலைகளைக்காட்டி வைத்தல் மற்றும் கணக்குகளைப் பராமரித்தல்) ஆணை.

4. 1977 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (தர நிர்ணயம்) ஆணை.

5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரை (வணிகத்தை முறைப்படுத்துதல்) ஆணை.

6. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல் (எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு) ஆணை.

7. 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு அட்டவணைப்படுத்தப்பட்ட பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

8. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு நெல், அரிசி கொள்முதல் (லெவி) ஆணை.

9. 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பொருட்கள் (வணிகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

10. 2000 ஆம் ஆண்டு சமையல் எரிவாயு (வழங்கல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல்) ஆணை.

11. 1993 ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (பயன்படுத்துவதில் கட்டுப்பாடு மற்றும் உச்ச விலை நிர்ணயம்) ஆணை.

12. 1998 ஆம் ஆண்டு மோட்டார் ஸ்பிரிட் மற்றும் அதிவேக டீசல் (வழங்குதல் மற்றும் விநியோகத்தை முறைப்படுத்தல் மற்றும் முறைகேடுகளைத் தடுத்தல்) ஆணை.

13. 1998 ஆம் ஆண்டு சமையல் எண்ணெய்களை உறையிடுதல் (ஒழுங்குமுறை) ஆணை. (நல்லெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் தேங்காய் எண்ணெய் ஆகியவற்றிற்கு 31-12-2003 வரை விலக்களிக்கப்பட்டுள்ளது.)

14. 2000 ஆம் ஆண்டு நாப்தா (கையகப்படுத்துதல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

15. 2000 ஆம் ஆண்டு சால்வென்ட், ரேபினேட் மற்றும் சிலாப் (கையகப்படுத்துதல், விற்பனை, சேமித்து வைத்தல் மற்றும் உந்தூர்திகளில் பயன்படுத்துவதைத் தடுத்தல்) ஆணை.

*12.3* உணவுப் பொருள் வழங்கல் துறை மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட கட்டுபாட்டு ஆணைகளைப் பயன்பெறத்தக்க வகையில் செயல்படுத்தி வருகின்றனர். கள்ளத்தனமான வியாபாரிகள், கடத்தல்காரர்கள் மற்றும் சமூக விரோதிகள் இன்றியமையாப் பொருட்களைப் பதுக்குவதிலிருந்து தடுப்பதற்காக, இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் அரசால் வெளியிடப்படும் பலதரப்பட்ட கட்டுப்பாட்டு ஆணைகள், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையால் கடுமையாகச் செயல்படுத்தப்படுகின்றன.

*12.4* மத்திய அரசு, குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் விற்பனை உரிமம், இருப்பு, உச்சவரம்பு மற்றும் எடுத்துச் செல்வதற்கான தடை நீக்க ஆணை 2002, என்ற ஓர் ஆணையை *15-2-2002* அன்று பிறப்பித்துள்ளது. அதன்படி நெல்/அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்கள், சர்க்கரை, சமையல் எண்ணெய் வித்துக்கள், சமையல் எண்ணெய் ஆகியவற்றை வியாபாரிகள், எந்த அளவிலும் வாங்கவும், இருப்பு வைக்கவும், விற்கவும், எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லவும் அனுமதி/உரிமம் ஏதும் தேவையில்லை. இம்மாநில அரசு, மைய அரசின் ஆணையைச் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. அதன்படி மைய அரசின் ஆணையை தமிழ்நாடு அரசிதழில் மறு வெளியீடு செய்ய ஆணையிட்டுள்ளது. இதனால் வியாபாரிகள் உரிமம் மற்றும் அனுமதி போன்ற கட்டுப்பாடுகளின்றி எந்த அளவிற்கு வேண்டுமானாலும் இந்தப் பொருட்களை வாங்குவதற்கும், இருப்பில் வைத்துக்கொள்வதற்கும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கும், விற்பனை செய்வதற்கும் வகை செய்கிறது. இவ்வரசு, வெளிச் சந்தையில் இன்றியமையாப் பொருட்களின் விலை மற்றும் பொருட்கள் கிடைத்தல் ஆகியவைகளைக் கவனமாகக் கண்காணிக்கும். வெளிச் சந்தையில் விலையைக் கட்டுப்படுத்தி வைக்க மீண்டும் கட்டுப்பாடுகள் விதிக்க எப்பொழுதாயினும் தேவை ஏற்பட்டால் அப்பொழுது மைய அரசின் அனுமதி கோரப்படும்.

*12.5 2003* ஆம் ஆண்டிற்கான குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் கொள்கைகளும், திட்டங்களும் கீழ்க்கண்டவாறு:

அ. சமீப காலத்தில் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஈ-மெயில் ஐடி (E-Mail-ID) பொது மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. தவிர, உள்ளூர் கேபிள் டி.வி. மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலகங்களின் தொலைபேசி எண்கள் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட்டு குற்றங்கள் கண்டுபிடிப்பதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.





ஆ. போலி குடும்ப அட்டைகளைக் கண்டுபிடிக்கவும், பொது விநியோகத் திட்டப் பொருட்களைக் கடத்துவதைத் தடுக்கும் நோக்கத்துடன், அனைத்து பிரிவு அலுவலர்களை இணைத்து மாதம் இருமுறை சிறப்பு அதிரடிச் சோதனை நடத்தப்படும்.

இ. மோட்டார் வாகனங்களில் வெளிச் சந்தை மண்ணெண்ணெய் உபயோகப்படுத்துபவர்கள் மீது தனி கவனம் செலுத்தப்படும்.

ஈ. சமீபகாலமாக நகரத்தில் திரவ எரிவாயு நிரப்பும் நிலையங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. தவறான முறையில் உபயோகப்படுத்தப்படும் இடங்கள் கண்காணிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும்.

உ. கலப்பட உணவுப் பொருட்கள் மனித உயிருக்குத் தீமையை விளைவிப்பதாலும், உணவுப் பொருட்கள் கலப்படத்தில் விருதுநகர் மாவட்டம் கரும்புள்ளி பகுதியாகக் கருதப்படுவதாலும், மேற்படி கலப்படப் பொருட்களின் தீமையை மக்களிடையே உணர்த்தும்பொருட்டு உள்ளூர் கேபிள் டி.வி. மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

ஊ. பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் மண்ணெண்ணெய் பதுக்குபவர்கள் மற்றும் கடத்துபவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அவர்கள் கள்ளச் சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவார்கள்.

எ. உணவுப் பொருட்கள் மற்றும் எரிபொருள் ஆகியவற்றில் எவ்வித கலப்படமும் செய்வதையும் கண்டுபிடிப்பதே குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையில் அடிப்படை செயலாகக் கருதப்படுகிறது.

*12.6* இன்றியமையாப் பொருட்கள் சட்டம் மற்றும் கட்டுப்பாட்டு ஆணைகளின்கீழ் குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைப்பற்றப்பட்ட மற்றும் பறிமுதல்

[2003 மே 7

செய்யப்பட்ட பொருட்கள் குறித்த விவரங்கள் இணைப்பு-6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# அத்தியாயம்-13

## நுகர்வோர் நல நடவடிக்கைகள்

13.1 மக்களிடையே சமீப காலங்களில் நுகர்வோர் உரிமைகள் குறித்து அதிக விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. நாடு முழுவதும் தாராளமயமாக்கப்பட்ட வணிகக் கொள்கை தற்பொழுது நடைமுறையில் உள்ள சூழ்நிலையில், நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஒரு சமூக இயக்கமாக உருவாக வேண்டும் என்ற தேவையினை அரசு உணர்ந்து, நுகர்வோர் உரிமைப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் கல்வி தொடர்பான நடவடிக்கைகளுக்கு ஊக்கம் அளித்து வருகிறது. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் அலுவலகத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் கூட்டம் நடத்தப்படுகிறது. பொதுத் துறை நிறுவனங்களிலும், வேறு பல துறைகளிலும் நுகர்வோருக்கு ஏற்படும் இன்னல்கள், குறைகள் கண்டறியப்பட்டு, அவை களையப்படுவதற்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகள் இக்கூட்டத்தின் வாயிலாக வழங்கப்படுகின்றன. நுகர்வோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. எடுத்துக்காட்டாக, கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்வகையில், தேசிய சேவைத் திட்டத்தின்கீழ் கல்லூரி மாணவர்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு பற்றிய பயிற்சி அளிக்கப்படுகிறது. நுகர்வோர் பாதுகாப்பு குறித்த செய்திகள், விளக்கங்கள் அடங்கிய சிறு கையேடுகள், புத்தகங்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 15 ஆம் நாளில் "உலக நுகர்வோர் உரிமைகள்" தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நாளில் நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்து கருத்தரங்கம், பொருட்காட்சி ஆகியவை அரசு சார்பில்



2003 மே 7]

நடத்தப்படுகின்றன. இந்த ஆண்டு 15-3-2003 அன்று தேனி மாவட்டத்தில் உலக நுகர்வோர் உரிமைகள் தினம் கொண்டாட மாநில அரசு ரூ.1.50 இலட்சம் வழங்கியுள்ளது.

## நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்

13.2 நுகர்வோருக்கு ஏற்படும் குறைகளை விரைவாகவும், செலவில்லாமலும் களைவதற்கு 1986ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தில் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தின்படி தேசிய அளவில் தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையம், மாவட்ட அளவில் மாவட்ட குறைதீர் மன்றங்கள், மாநில அளவில் மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையம் ஆகிய மூன்றடுக்கு முறை கொண்ட நீதிமுறைச் சார்புடைய அரசு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்ட மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை மாநில அரசு சென்னையில் அமைத்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் மாவட்டக் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை மாவட்டத்தில் (1) தென்சென்னை பகுதி மக்களுக்கும் (2) வடசென்னை பகுதி மக்களுக்கும் பயன்படும் வகையில் இரு மாவட்டக் குறைதீர் மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக, தமிழ்நாட்டில் தற்போது 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த 30 மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களில் 18 மன்றங்கள் தனித்தியங்கக் கூடியவை (Independent Forum). 6 மன்றங்கள் சேர்ந்து இயங்கக் கூடியவை. தனித்தியங்கும் குறைதீர் மன்றத்தில் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவர் தலைவராகவும், வேறு இருவர் உறுப்பினர்களாகவும் உள்ளனர். அருகருகே அமைந்துள்ள இரு மாவட்டங்களுக்கும் சேர்த்து ஒரு நுகர்வோர் குறைதீர் மன்றம் என்ற வீதத்தில், 6 நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சேர்ந்தியங்கும் இரு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு ஒருவர் தலைவராக இருப்பார்.

13.3 தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள் மற்றும் சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள் பற்றிய விவரம் வருமாறு:—

[2003 மே 7

**தனித்தியங்கும் குறைதீர் மன்றங்கள்**

01 சென்னை-தெற்கு
02 சென்னை-வடக்கு
03 திருச்சிராப்பள்ளி
04 ஈரோடு
05 மதுரை
06 விருதுநகர்(இருப்பிடம்) ஸ்ரீவில்லிப்புத்தூர்
07 கன்னியாகுமரி (இருப்பிடம்) நாகர்கோவில்
08 கோயம்புத்தூர்
09 நீலகிரி
10 கடலூர்
11 தஞ்சாவூர்
12 நாகப்பட்டினம்
13 தேனி
14 திருவள்ளூர்
15 பெரம்பலூர்
16 கரூர்
17 திருவாரூர்
18 நாமக்கல்

**சேர்ந்தியங்கும் குறைதீர் மன்றங்கள்**

01 வேலூர் மற்றும் திருவண்ணாமலை
02 சேலம் மற்றும் தர்மபுரி
03 காஞ்சிபுரம் மற்றும் விழுப்புரம்
04 திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை
05 சிவகங்கை மற்றும் இராமநாதபுரம்
06 திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி

13.4. தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்கள் தனியாருக்குச் சொந்தமான கட்டடங்களிலும், சில மாவட்ட நீதிமன்ற வளாகங்களிலும், சில மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலும் செயல்பட்டு வருகின்றன. மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கென தனியாக சொந்தக் கட்டடம் கட்டும் பணியில் மாநில அரசும், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையமும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. முதற்கட்டமாக, செங்கற்பட்டில்



2003 மே 7]

இயங்கிவரும் நுகர்வோர் குறைதீர் மன்றத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. குறைதீர் மன்றங்கள் நல்லமுறையில் செயல்படுவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்துதர வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, நுகர்வோர் தொடர்பான வழக்குகள் அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள சென்னை (தெற்கு), சென்னை (வடக்கு), திருச்சிராப்பள்ளி, மதுரை, கடலூர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய ஏழு மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களுக்கு ரூ. 13.20 இலட்சம் செலவில் கணினிகள் வாங்குவதற்காக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தவிர, மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்திற்கு ஜெராக்ஸ் இயந்திரம் வாங்க ரூ.68,780/-, ஃபேக்ஸ் (Fax) இயந்திரம் வாங்க ரூ.29,000/- அரசு அனுமதி அளித்துள்ளது.

13.5. 2002 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் டிசம்பர் வரை மாநில குறைதீர் ஆணையத்திலும், மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றங்களிலும் பதியப்பெற்ற மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் இணைப்பு-7 மற்றும் இணைப்பு-8-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## அத்தியாயம்-14

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

14.1 முற்றிலும் அரசுக்குச் சொந்தமானதாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

14.2 இதன் நோக்கங்களாவன: கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்துதல், தேவையான இடங்களுக்கு உணவு தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்கள் மற்றும் எல்லாவித மதுபானம் உட்பட அத்தியாவசியமற்ற பொருட்களைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், அரசின் நலன் பயக்கும் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் அதற்குத் தேவையான மூலதனம், நிதி ஆதாரங்கள் தேடுதல், தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மைச் சேவைகள், அறிவுரை உதவி போன்ற பணிகளைச் செய்தல் ஆகியவை.

14.3 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒரு மண்டலம் வீதம் 30 மண்டல அலுவலகங்களும், சென்னை நகரத்தில் (சென்னை-தெற்கு மற்றும் சென்னை-வடக்கு) என்ற

[2003 மே 7

இரு மண்டல அலுவலகங்களும் இயங்கி வருகின்றன. இந்த மண்டல அலுவலகங்கள் முதுநிலை மண்டல மேலாளர்/மண்டல மேலாளர்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இக்கழகத்தின் மொத்தப் பணியாளர்கள் சுமார் 11,048 ஆகும்.

*14.4.* தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முக்கியமான பணிகள் பின்வருமாறு:

(அ) விவசாயிகள் குறைந்த விலையில் நெல்லை விற்பதைத் தடுக்க பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின்படி நேரடிக் கொள்முதல் நிலையங்கள் வாயிலாக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்தல்.

(ஆ) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தேவைப்படின் அவ்வப்போது நியமிக்கப்படும் சுமார் 300 தனியார் அரைவை முகவர்கள் மூலம் நெல்லை அரைத்தல்.

(இ) மைய அரசால் மத்தியத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி, கோதுமை மற்றும் சர்க்கரை ஆகியவற்றை பொது விநியோக முறையின்கீழ் விநியோகம் செய்வதற்காக எடுத்தல்.

(ஈ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதியோர் ஓய்வூதியத் திட்டம், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை விடுதிகள், காவல், தியணைப்பு மற்றும் சிறைத் துறை அலுவலர்களுக்கு பொது விநியோக முறையின்கீழ் பொருட்கள் வழங்குதல், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் சென்னை மற்றும் சில பகுதிகளில் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளில் விற்பது போன்ற பல்வேறு திட்டங்களுக்கான, பொது விநியோகத் திட்டத்தில் சேராத பருப்பு, சமையல் எண்ணெய் போன்ற பொருட்களை வாங்குதல்.

(உ) 3 பெட்ரோல்/டீசல் பங்குகள் மற்றும் 6 எரிவாயு யூனிட்டுகளை நடத்துதல்.

(ஊ) 1,147 நியாய விலைக் கடைகளை நடத்துதல்.



2003 மே 7]

(எ) பொது விநியோகப் பொருட்களை நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுகள் நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலம் விநியோகித்தல் மற்றும் கட்டுப்பாடற்ற பொருட்களை அரசு நலத்திட்டங்களுக்கும் கழகத்தால் நடத்தப்படும் அமுதம் அங்காடிகளுக்கும் விநியோகித்தல்.

(ஏ) மத்திய அரசு அறிவித்துள்ள நலத்திட்டங்களான சம்பூர்ண கிராமீன் ரோஜ்கார் யோஜனா, அன்னபூர்ணா திட்டம், அந்த்யோத்யா அன்னயோஜனா திட்டம் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(ஐ) சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோரின் துயர் துடைக்க 'இன்ட்கோசர்வ்' நிறுவனத்திடமிருந்து தேயிலையை வாங்கி பொது விநியோக முறையின் கீழ் இக்கழகம் விநியோகிக்கிறது.

(ஒ) கைத்தறி நெசவாளர் துயர் துடைக்க கோ-ஆப்டெக்ஸிலிருந்து மலிவு விலை சேலை மற்றும் வேட்டிகளைப் பெற்று கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சில்லரை அங்காடி மூலம் விற்பனை செய்கிறது.

(ஓ) இக்கழகம் 199 இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுக்கடைகளை நடத்துகிறது.

(ஔ) 2002 தீபாவளியை முன்னிட்டு, காவிரி பாசனப் பகுதி மாவட்டங்களைச் சார்ந்த நிலமற்ற மற்றும் சிறு விவசாயத் தொழிலாளர்களுக்கு அரசு வழங்கிய தீபாவளிப் பரிசுக்காக அரிசி, சர்க்கரை, பச்சைப்பயறு, மஞ்சள், கடுகு, மிளகாய் வற்றல் ஆகிய பொருட்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்பட்டன.

(க) வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும் 30 கிலோ அரிசியை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விநியோகிக்கிறது.

(கா) தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், பொதுச் சந்தையில் கேழ்வரகு, மக்காச்சோளம், கடலைப்பருப்பு, வெல்லம் ஆகியவற்றைக் கொள்முதல் செய்து, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் ஊட்டச்சத்து உருண்டை தயாரிக்கும் கூட்டுறவு இணையங்களுக்கு வழங்குகிறது.

[2003 மே 7

**கொள்முதல்**

14.5 காவிரிப் பாசனப் பகுதிகளான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், கடலூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஒவ்வோர் ஆண்டும் சம்பா மற்றும் குறுவைப் பருவங்களில் விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. குறுவை 2002 பருவத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 68 நேரடி கொள்முதல் நிலையங்களைத் திறந்தது. ஆனால், நெல் ஏதும் வராத காரணத்தால் கொள்முதல் செய்யப்படவில்லை. சம்பா 2003 பருவத்திற்கும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின் கீழ் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.

**பதப்படுத்துதல்**

14.6 கொள்முதல் செய்யப்படும் நெல் பல மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் 23 நவீன அரிசி ஆலைகள் மற்றும் தேவைப்பட்டால் சில விதிமுறைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டு நியமிக்கப்படும் தனியார் அரைவை முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைத்து அரிசியாக்கப்படுகிறது.

**அமுதம் பல்பொருள் அங்காடிகள்**

14.7 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 30 அமுதம் பல்பொருள் அங்காடிகளை சென்னை மற்றும் கடலூர் பகுதிகளில் நடத்தி வருகிறது. அரிசி, மளிகை, எண்ணெய், அழகுச் சாதனங்கள் போன்றவை இந்த பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் இவ்வங்காடிகளின் விற்பனை 20 கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கட்டுமானப் பிரிவு**

14.8 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கட்டுமானப் பிரிவு ஒன்று இயங்கி வருகிறது. இப்பிரிவு செயற் பொறியாளர் தலைமையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ்நிலை அலுவலர்களின் உதவியுடன் இயங்கி வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 135 வட்டங்களில் 168 விஞ்ஞான முறை சேமிப்புக் கிடங்குகளைக் கட்டியுள்ளது.



2003 மே 7]

14.9 தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சொந்தக் கிடங்குகள் மற்றும் அவற்றின் கொள்ளளவு ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

**சேமிப்புக் கிடங்குகளின்**

| | |
|---|---|
| எண்ணிக்கை | 168 |
| கொள்ளளவு | 633845 |

14.10 காவிரிப் பாசன மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை 100 டன்கள் கொள்ளளவுள்ள கிடங்கு, உலர்களம், சாக்கு வைக்குமிடம் மற்றும் அலுவலக அறை ஆகிய அடிப்படை வசதிகளுடன் கூடிய 203 நேரடிக் கொள்முதல் நிலையங்களைக் கட்டியுள்ளது.

**நிதி**

14.11 இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 35 கோடியாகும். செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 33.19 கோடியாகும். 1972-73 ஆம் ஆண்டில் ரூ. 12 கோடியாக இருந்த இந்நிறுவனத்தின் வியாபார அளவு 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 29.44 கோடியை எட்டியுள்ளது.

## அத்தியாயம்-15

### தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

15.1 அரசால் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கும் மற்றும் உணவு தானியங்களுக்கும் விஞ்ஞான முறைப்படி இட வசதி அளித்தல், இடைத்தரகர்களை நீக்கியும் சேதாரங்களைத் தவிர்த்தும் ஒழுங்கு முறையான விற்பனைக்கு ஏற்பாடு செய்தல் போன்ற நோக்கங்களை செயற்படுத்த தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது 1957 ஆம் ஆண்டில் வேளாண் உற்பத்தி (வளர்ச்சி மற்றும் சேமிப்பு) நிறுவனம் சட்டம், 1956-ன்படி தோற்றுவிக்கப்பட்டது. ஆயினும் மேற்படி சட்டமானது சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டம், 1962 என மாற்றியமைக்கப்பட்டது. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது கடந்த 1958 ஆம் ஆண்டு முதல் தனது சேமிப்புப் பணியை மேற்கொண்டு வருகிறது.

[2003 மே 7

**நிர்வாகக் கட்டமைப்பு**

*15.2* தற்போது இந்நிறுவனமானது தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரின் தலைமையில் கிண்டியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. மேலும் இந்நிறுவனமானது கடலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், மேட்டுப்பாளையம், சேலம், திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் 7 மண்டல அலுவலகங்களை ஏற்படுத்தி அந்தந்த மண்டல மேலாளர்கள் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

**15.3 நடவடிக்கைகள்**

அ. இந்நிறுவனம் தமிழ்நாடு முழுவதும் 67 சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்தியுள்ளது.

ஆ சந்தை நிலவரத்தை ஆய்வு செய்து இருப்பிட வசதி தேவைப்படும் இடங்களை உறுதி செய்து அதற்கேற்ப நிலங்களை வாங்கி கிடங்கு வசதியினை ஏற்படுத்தி சேமிப்பு இழப்பினைக் குறைத்திடுதல்.

இ. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு மாற்றக்கூடிய சேமிப்புக் கிடங்கு பற்றுச்சீட்டுகள் மூலம் வங்கிகளில் கடன் வசதியினைப் பெற ஏற்பாடு செய்தல்.

ஈ. சரக்குகளை ஏற்றி இறக்கும் பணியின் ஒப்பந்ததாரர்களை நியமித்து சரக்கு வைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்தல்.

உ. இந்நிறுவனமானது பூச்சித் தடுப்புப் பணியும் மேற்கொண்டு வருகிறது.

ஊ. சேமிப்புக் கிடங்கினைக் கையாளவும், நிர்வகிக்கவும் ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

**இருப்பு வைப்புக் கொள்ளளவு அதன் பயன்பாடு**

*15.4* தமிழ்நாட்டின் 67 இடங்களில் செயல்பட்டு வரும் இந்நிறுவனக் கிடங்குகளின் இடவசதியினை விவசாயிகள், உர உற்பத்தியாளர்கள், இந்திய உணவுக் கழகம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தமிழ்நாடு மாநில பாடநூல் நிறுவனம், தமிழ்நாடு மருத்துவக் கழகம், தமிழ்நாடு மாநில விற்பனை இணையம், தேசிய எண்ணெய் வித்து



2003 மே 7]

நிறுவனம், தொலைத் தொடர்புத் துறை, உர உற்பத்தி நிறுவனங்கள், சிமெண்ட் பயன்படுத்தும் அரசுத் துறைகள் மற்றும் தனியார் சரக்கு வைப்பாளர்கள் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு சேமிப்பு நிறுவனத்தின் கொள்ளளவுத் திறன் மற்றும் அதன் பயன்பாட்டு விவரம் பின்வருமாறு:

**சேமிப்புக் கிடங்குகளின்**

| | |
|---|---|
| எண்ணிக்கை | 67 |
| கொள்ளளவு | 6,34,479 |
| சராசரி இருப்பு விகிதம் (நவம்பர் 2002 வரை) | 80% |

**புதிய வியாபாரம்**

*15.5* கோவிந்தராஜா மில்ஸ் என்ற நிறுவனமானது அருப்புக்கோட்டை சேமிப்புக் கிடங்கில் பஞ்சுப் பொதிகளை இருப்பில் வைத்திட இடவசதியினை புதிதாக உபயோகப்படுத்தியுள்ளது.

**இதர விவரங்கள்**

*15.6* திரு. எஸ்.வி.எஸ். இராகவன் தலைமையிலான குழுவின் பரிந்துரைப்படி திண்டுக்கல், மேட்டுப்பாளையம், வேலூர் மற்றும் விழுப்புரம் சேமிப்புக் கிடங்குகளில் இயந்திரம் மூலம் சரக்குகளை ஏற்றி இறக்குதல், அட்டிபோடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்செயல் திட்டமானது கூலியாட்கள் மூலம் சரக்குகளை ஏற்றி இறக்கும் பணியில் பெருமளவில் கால விரயத்தைத் தவிர்க்கவும் மற்றும் சேமிப்புக் கிடங்குப் பணியினை மேலும் திறம்பட செயல்படவே மேற்கொள்ளப்பட்டதாகும்.

*15.7* தவிர தூத்துக்குடி துறைமுகத்தின் விரிவாக்கம் மற்றும் சரக்கு வைப்பாளர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய கூடுதலாக 5,000 சதுர மீட்டர் நிலமானது நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் தூத்துக்குடி துறைமுகத்திடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டது.

[2003 மே 7

**இதர விரிவாக்கப் பணிகள்**

15.8 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனமானது சேமிப்புப் பணியைத் தவிர இதர பணியான பூச்சித் தடுப்பு பணியிலும் ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பொது மக்கள் அதிகம் உபயோகித்திடும் இடங்களை சிற்றுண்டி சாலைகள், தனியார் கிடங்குகள், மருத்துவமனைகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு பூச்சித் தடுப்புப் பிரிவு மூலம் கரையான், எலித் தொல்லையினைக் கட்டுப்படுத்தி வருகிறது. மேலும் கட்டுமானப் பணிக்கு முன்னரும் பின்னரும் கட்டடங்களில் ஏற்படும் கரையான் தொல்லையினை அறவே நீக்கிடவும், பூச்சிகள், கொசுத்தொல்லைகளிலிருந்து விடுபட பொதுவான பூச்சித் தடுப்புப் பணியும் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவன மற்றும் இதர நிறுவன ஊழியர்களுக்கும் விஞ்ஞான முறைப்படி சேமிப்பினை மேற்கொள்ளும் பயிற்சிகளை அளிக்கிறது.

**நிதி**

15.9 இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆதார மூலதனம் ரூ.800 இலட்சமாகும். தற்போது செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 761 இலட்சமாகும். இந்நிறுவனத்தில் தமிழ்நாடு அரசும் மற்றும் மத்திய சேமிப்புக் கிடங்கும் 50:50 பங்குதாரர்களாக உள்ளனர்.

**ஈவுத்தொகை**

15.10 கடந்த 2001-2002 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட்ட ரூ.761 இலட்சம் பங்கு மூலதனத் தொகையில் ஈவுத்தொகையாக ரூ. 76.10 இலட்சம் இயக்குநர் குழுவால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனமானது கடந்த 2001-2002 ஆம் நிதியாண்டில் ரூ. 352.60 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. நிகழும் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.350 இலட்சம் இலாபம் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கட்டுமானப் பணிகள்**

15.11 பட்டுக்கோட்டையில் பல்வேறு உபயோகிப்பாளர்களின் இடவசதியினைப் பூர்த்தி செய்ய 500 மெடன். கொள்ளளவில் 4 (நான்கு) சிறிய கிடங்குகள் கட்டப்பட்டு ஜனவரி 2003 முதல் செயல்பட்டு வருகின்றன. மேலும் எதிர் வரும் 2003-2004 ஆம் ஆண்டில் தூத்துக்குடி துறைமுக வளாகத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 5000 சதுர மீட்டர் நிலத்தில் கூடுதலாகக் கிடங்கு கட்டவும், தருமபுரியில் இந்திய உணவுக் கழகத்தின் தேவையைப் பூர்த்தி செய்யவும், கள்ளக்குறிச்சியில் உர நிறுவனங்களின் இடவசதி தேவையைப் பூர்த்தி செய்யவும் கிடங்குகள் கட்ட முடிவு எடுக்கப்பட்டுள்ளது.



2003 மே 7]

**கணிப்பொறிமயமாக்குதல்**

15.12 தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பயனாக கணிப்பொறிமயமாக்கும் பணியினை இந்நிறுவனத்தில் மேற்கொண்டு தலைமை அலுவலகத்திற்கும், 7 மண்டல அலுவலகங்களுக்கும், 67 சேமிப்புக் கிடங்குகளுக்கும் கணிப்பொறி வழங்கப்பட்டுள்ளது.

15.13 2002-2003 ஆம் ஆண்டில் அனைத்து சேமிப்புக் கிடங்குப் பணியினையும் கணிப்பொறி மூலம் மேற்கொள்ளும் மென்பொருள் வடிவமைக்கப்பட்டு அனைத்துக் கிடங்குகள், மண்டல அலுவலகங்களையும் இணைய தளம் மூலம் தலைமை அலுவலகத்துடன் இணைக்கும் பணியினை மேற்கொள்ளும் முயற்சி நடைபெறுகிறது.

**பயிற்சிப் பிரிவு**

15.14 தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் கணிப்பொறி பயிற்சி, கிராமங்களில் செயல்படும் கிடங்குப் பணிகள் குறித்த பயிற்சி, இருப்பு வைப்பு, நிர்வாகம் குறித்த பயிற்சி ஆகிய பயிற்சிகள் அவ்வப்போது அளிக்கப்படுகின்றன.

## அத்தியாயம் - 16

### நிறைவுரை

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சாதாரண மனிதனின் நலம் பேணுவதில் நேரிடையாக ஈடுபட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சரின் ஆக்கபூர்வமான தலைமையின் கீழும், தமிழ்நாட்டு மக்களின் ஆதரவோடும், இத்துறை பொதுமக்கள் நலம் காக்க தான் ஆற்றும் பணிகளில் இன்னும் கூடுதலான ஆர்வத்தோடு, விடாது பாடுபடும் என்று இப்பேரவையில் உறுதியளிக்கப்படுகிறது.

[2003 மே 7

# இணைப்பு–1

## கடந்த ஓராண்டில் கண்டறியப்பட்ட போலி குடும்ப அட்டைகள், புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகள் மற்றும் புழக்கத்திலுள்ள மொத்த குடும்ப அட்டைகள் ஆகியவற்றின் மாவட்டவாரியான விவரங்கள்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | 2002–2003 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்ட போலி குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | 2002–2003 ஆம் ஆண்டில் புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | 31–03–2003 அன்று நிலவரப்படி புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | சென்னை வடக்கு | 13262 | 4204 | 827730 |
| 2 | சென்னை தெற்கு | 10472 | 2685 | 802428 |
| 3 | காஞ்சிபுரம் | 1350 | 757 | 492935 |
| 4 | திருவள்ளூர் | 947 | 276 | 390761 |
| 5 | வேலூர் | 7055 | 665 | 794080 |
| 6 | திருவண்ணாமலை | 5868 | 2192 | 527726 |
| 7 | விழுப்புரம் | 1810 | 192 | 755200 |
| 8 | கடலூர் | 4603 | 230 | 555219 |
| 9 | தர்மபுரி | 1797 | 0 | 624682 |
| 10 | சேலம் | 7374 | 540 | 787543 |
| 11 | நாமக்கல் | 10933 | 0 | 421503 |
| 12 | ஈரோடு | 4082 | 343 | 801636 |
| 13 | கோயம்புத்தூர் | 5863 | 1625 | 1214857 |
| 14 | நீலகிரி | 2844 | 663 | 216270 |
| 15 | கரூர் | 308 | 255 | 273241 |
| 16 | பெரம்பலூர் | 2609 | 380 | 318665 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 17348 | 611 | 625524 |
| 18 | தஞ்சாவூர் | 2730 | 0 | 546120 |
| 19 | திருவாரூர் | 943 | 153 | 288888 |
| 20 | நாகப்பட்டினம் | 2223 | 1307 | 350451 |
| 21 | புதுக்கோட்டை | 1150 | 317 | 325719 |
| 22 | திண்டுக்கல் | 485 | 18 | 470139 |
| 23 | தேனி | 398 | 57 | 300530 |



2003 மே 7]

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 24 | மதுரை | 2774 | 274 | 727941 |
| 25 | சிவகங்கை | 241 | 459 | 311633 |
| 26 | விருதுநகர் | 5466 | 489 | 462274 |
| 27 | இராமநாதபுரம் | 457 | 260 | 298800 |
| 28 | தூத்துக்குடி | 4603 | 299 | 417844 |
| 29 | திருநெல்வேலி | 3810 | 2194 | 706018 |
| 30 | கன்னியாகுமரி | 3672 | 1282 | 439999 |
| | மொத்தம் | 127477 | 22727 | 16076356 |

# இணைப்பு–2

## 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாதமும் குடும்ப அட்டைதாரர்களால் நுகர்வு செய்த அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் விவரங்கள்

*(மண்ணெண்ணெயை தவிர அனைத்தும் மெட்ரிக் டன்களில்)*

| வ. எண் | மாதம் | அரிசி (AAY உட்பட) | | சர்க்கரை | | மண்ணெண்ணெய் (கிலோ லிட்டரில்) | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2001–2002 | 2002–2003 | 2001 2002 | 2002–2003 | 2001–2002 | 2002–2003 |
| (1) | | (2) | (3) | (3) | (4) | (5) | (6) |
| 1. | ஏப்ரல் | 166546 | 186997 | 23546 | 20374 | 75233 | 62848 |
| 2. | மே | 168417 | 187626 | 24057 | 20441 | 70340 | 62246 |
| 3. | ஜூன் | 171019 | 190158 | 24165 | 19672 | 69162 | 62365 |
| 4. | ஜூலை | 180477 | 185703 | 23621 | 19613 | 67913 | 62146 |
| 5. | ஆகஸ்ட் | 185209 | 182177 | 23807 | 18486 | 67955 | 62334 |
| 6. | செப்டம்பர் | 188431 | 193162 | 23598 | 18420 | 66697 | 61766 |
| 7. | அக்டோபர் | 191997 | 170533 | 23482 | 17979 | 66470 | 62126 |
| 8. | நவம்பர் | 194249 | 166899 | 24220 | 15269 | 66872 | 61452 |
| 9. | டிசம்பர் | 193438 | 176750 | 21469 | 13835 | 65744 | 60919 |
| 10 | சனவரி | 186993 | 175408 | 21937 | 11543 | 66487 | 62169 |
| 11. | பிப்ரவரி | 184784 | 170547 | 21557 | 9737 | 65841 | 61751 |
| 12. | மார்ச் | 189816 | 165923 | 18992 | 8651 | 63939 | 61951 |

[2003 மே 7

## இணைப்பு–3

**1980-1981 முதல் 2003-2004 ஆம் ஆண்டு வரையிலான மொத்த உணவு மானிய விவரம்**

| வ.எண் (1) | ஆண்டு (2) | ரூபாய் கோடியில் (3) |
|---|---|---|
| 1. | 1980–1981 | 1.81 |
| 2. | 1981–1982 | 23.99 |
| 3. | 1982–1983 | 51.68 |
| 4. | 1983–1984 | 79.00 |
| 5. | 1984–1985 | 83.90 |
| 6. | 1985–1986 | 79.00 |
| 7. | 1986–1987 | 65.00 |
| 8. | 1987–1988 | 117.61 |
| 9. | 1988–1989 | 184.53 |
| 10. | 1989–1990 | 208.79 |
| 11. | 1990–1991 | 219.31 |
| 12. | 1991–1992 | 316.00 |
| 13. | 1992–1993 | 361.00 |
| 14. | 1993–1994 | 335.00 |
| 15. | 1994–1995 | 317.00 |
| 16. | 1995–1996 | 615.00 |
| 17. | 1996–1997 | 874.00 |
| 18. | 1997–1998 | 905.00 |
| 19. | 1998–1999 | 907.00 |
| 20. | 1999–2000 | 1145.00 |
| 21. | 2000–2001 | 1540.00 |
| 22. | 2001–2002 | 1240.00 |
| 23. | 2002–2003 | 1240.00 |
| 24. | 2003–2004 | 600.00 |



2003 மே 7]

## இணைப்பு–4

**31-03-2003 அன்றைய நிலவரப்படி மாவட்ட வாரியாக நியாயவிலைக் கடைகளின் விவரம்**

| வ. எண். | மாவட்டம் | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் | | கூட்டுறவு | | ஏனைய கூட்டுறவு | | மகளிர் நியாயவிலைக் கடைகள் | | நடமாடும் நியாயவிலைக் கடைகள் | மொத்தம் | ஒட்டு மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முழு | பகுதி | முழு | பகுதி | முழு | பகுதி | முழு | பகுதி | முழு | பகுதி | முழு | பகுதி |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 | சென்னை வடக்கு | 215 | 0 | 436 | 2 | 10 | 0 | 0 | 0 | 0 | 661 | 2 | 663 |
| 2 | சென்னை தெற்கு | 125 | 0 | 462 | 2 | 3 | 0 | 0 | 0 | 0 | 590 | 2 | 592 |
| 3. | காஞ்சிபுரம் | 30 | 0 | 803 | 414 | 2 | 0 | 30 | 19 | 0 | 865 | 433 | 1298 |
| 4 | திருவள்ளூர் | 7 | 0 | 711 | 179 | 1 | 0 | 0 | 6 | 0 | 719 | 185 | 904 |
| 5 | வேலூர் | 41 | 0 | 1141 | 413 | 0 | 0 | 15 | 0 | 3 | 1200 | 413 | 1613 |
| 6 | திருவண்ணாமலை | 3 | 0 | 1057 | 229 | 0 | 0 | 3 | 8 | 1 | 1064 | 237 | 1301 |
| 7 | விழுப்புரம் | 0 | 0 | 1563 | 257 | 0 | 0 | 22 | 0 | 3 | 1588 | 257 | 1845 |
| 8 | கடலூர் | 0 | 0 | 1112 | 134 | 3 | 1 | 8 | 0 | 0 | 1123 | 135 | 1258 |
| 9 | தர்மபுரி | 57 | 1 | 864 | 426 | 0 | 0 | 0 | 30 | 1 | 922 | 457 | 1379 |
| 10 | சேலம் | 0 | 0 | 1039 | 181 | 0 | 0 | 11 | 0 | 5 | 1055 | 181 | 1236 |
| 11 | நாமக்கல் | 36 | 0 | 547 | 133 | 0 | 0 | 6 | 0 | 0 | 589 | 133 | 722 |
| 12 | ஈரோடு | 15 | 0 | 902 | 213 | 0 | 0 | 28 | 0 | 2 | 947 | 213 | 1160 |
| 13 | கோயம்புத்தூர் | 62 | 0 | 1212 | 256 | 30 | 0 | 0 | 76 | 5 | 1309 | 332 | 1641 |
| 14 | நீலகிரி | 23 | 0 | 241 | 23 | 35 | 0 | 23 | 0 | 8 | 330 | 23 | 353 |
| 15 | கரூர் | 2 | 0 | 336 | 125 | 0 | 0 | 7 | 1 | 0 | 345 | 126 | 471 |
| 16 | பெரம்பலூர் | 3 | 0 | 433 | 159 | 0 | 0 | 1 | 7 | 0 | 437 | 166 | 603 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 19 | 0 | 798 | 156 | 0 | 0 | 0 | 6 | 1 | 818 | 162 | 980 |
| 18 | தஞ்சாவூர் | 0 | 0 | 853 | 170 | 1 | 0 | 14 | 0 | 0 | 868 | 170 | 1038 |
| 19 | திருவாரூர் | 0 | 0 | 566 | 63 | 0 | 0 | 5 | 0 | 0 | 571 | 63 | 634 |
| 20 | நாகப்பட்டினம் | 0 | 0 | 565 | 31 | 17 | 0 | 23 | 0 | 0 | 605 | 31 | 636 |
| 21 | புதுக்கோட்டை | 17 | 0 | 670 | 177 | 0 | 0 | 6 | 1 | 0 | 693 | 178 | 871 |
| 22 | திண்டுக்கல் | 16 | 0 | 640 | 118 | 0 | 0 | 9 | 1 | 2 | 667 | 119 | 786 |
| 23 | தேனி | 0 | 0 | 372 | 34 | 1 | 0 | 13 | 0 | 0 | 386 | 34 | 420 |
| 24 | மதுரை | 28 | 0 | 931 | 93 | 3 | 0 | 15 | 0 | 0 | 977 | 93 | 1070 |
| 25 | சிவகங்கை | 19 | 0 | 583 | 24 | 5 | 0 | 1 | 0 | 0 | 608 | 24 | 632 |
| 26 | விருதுநகர் | 25 | 0 | 628 | 117 | 0 | 0 | 12 | 0 | 0 | 665 | 117 | 782 |
| 27 | இராமநாதபுரம் | 19 | 0 | 477 | 31 | 0 | 0 | 17 | 0 | 2 | 515 | 31 | 546 |
| 28 | தூத்துக்குடி | 76 | 6 | 607 | 116 | 0 | 0 | 0 | 3 | 0 | 683 | 125 | 808 |
| 29 | திருநெல்வேலி | 196 | 42 | 752 | 197 | 5 | 2 | 21 | 0 | 3 | 937 | 241 | 1178 |
| 30 | கன்னியாகுமரி | 98 | 6 | 421 | 47 | 36 | 5 | 27 | 0 | 0 | 582 | 58 | 640 |
| | மொத்தம் | 1092 | 55 | 21722 | 4520 | 182 | 8 | 317 | 158 | 36 | 23319 | 4741 | 28060 |

## இணைப்பு–5

### 2002-2003 ஆம் ஆண்டில் நியாயவிலைக் கடைகள் ஆய்வு செய்யப்பட்டது குறித்த விவரம்

(எண்ணிக்கையில்)

| வ. எண் | மாதம் | ஆய்வு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை | அளவு குறைவு | போலிப் பட்டியல் | கூடுதல் | குறைவு |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | ஏப்ரல் | 32920 | 795 | 9217 | 889 | 8175 |
| 2. | மே | 29332 | 507 | 15601 | 635 | 7153 |
| 3. | ஜுன் | 28616 | 992 | 11054 | 907 | 5106 |
| 4. | ஜுலை | 27912 | 693 | 5209 | 762 | 4861 |
| 5. | ஆகஸ்ட் | 31173 | 279 | 6107 | 780 | 6792 |
| 6. | செப்டம்பர் | 32576 | 359 | 7351 | 556 | 7949 |
| 7. | அக்டோபர் | 28353 | 633 | 6119 | 408 | 6286 |
| 8. | நவம்பர் | 30576 | 626 | 6598 | 327 | 8082 |
| 9. | டிசம்பர் | 31700 | 1118 | 7551 | 533 | 9058 |
| 10. | சனவரி | 29233 | 1244 | 4833 | 416 | 7198 |
| 11. | பிப்ரவரி | 25506 | 740 | 3086 | 348 | 6247 |
| 12. | மார்ச் | 30143 | 893 | 8823 | 539 | 10345 |
| | மொத்தம் | 358040 | 8879 | 91549 | 7100 | 87252 |



## இணைப்பு–6

### 2002–2003ஆம் ஆண்டில் உணவு பொருள் வழங்கல் துறை மற்றும் குடிமைப் பொருள் மற்றும் குற்ற புலனாய்வு துறையினரால் கைப்பற்றப்பட்ட மற்றும் உணவு பொருள் வழங்கல் துறையால் பறிமுதல் செய்யப்பட்ட இன்றியமையாப் பொருட்களின் அளவு மற்றும் மதிப்பின் விவரம்

| வ. எண் | பொருட்கள் | கைப்பற்றப்பட்டது: உணவு பொருள் வழங்கல் துறை | | கைப்பற்றப்பட்டது: குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுத் துறை | | பறிமுதல் செய்யப்பட்டது: உணவு பொருள் வழங்கல் துறை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அளவு குவிண்டாலில் | மதிப்பு ரூபாயில் | அளவு குவிண்டாலில் | மதிப்பு ரூபாயில் | அளவு குவிண்டாலில் | மதிப்பு ரூபாயில் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1. | பொது விநியோகத் திட்ட அரிசி | 4875 | 3997777 | 7514 | 8898648 | 12244 | 11751261 |
| 2. | வெளிச் சந்தை அரிசி | 154 | 291906 | – | – | 3 | 3106 |
| 3. | நெல் | – | – | – | – | 355 | 149850 |
| 4. | மண்ணெண்ணெய் (லிட்டரில்) | 80708 | 772273 | 133097 | 1996545 | 243519 | 2864828 |
| 5. | பெட்ரோல் (லிட்டரில்) | 2647 | 78166 | 13773 | 383409 | 8056 | 231924 |
| 6. | டீசல் (லிட்டரில்) | 7763 | 155665 | 127086 | 2398797 | 37315 | 532991 |
| 7. | சமையல் எரிவாயு உருளைகள் | 382 | 269600 | 3244 | 9755100 | 2263 | 4487617 |
| 8. | ஏனையவை | – | 592416 | – | 16712952 | – | 2239097 |
| | மொத்தம் | | 6161303 | | 40145451 | | 22260674 |

| | | | |
|---|---|---|---|
| சோதனைகளின் எண்ணிக்கை | 3868 | 6169 | |
| கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | 16 | 253 | |

**மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் 2002 சனவரி முதல் டிசம்பர் வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**

| மாதம் | மேல்முறையீட்டு மனு | | | | அசல் மனு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொடுக்கப் பட்டவை | தீர்ப்பு வழங்கப் பட்டவை (முந்தைய நிலுவையும் சேர்த்து) | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு பாதகமாக | தொடுக்கப் பட்டவை | தீர்ப்பு வழங்கப் பட்டவை (முந்தைய நிலுவையும் சேர்த்து) | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு பாதகமாக |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| சனவரி | 60 | 35 | 10 | 25 | 12 | 5 | 0 | 5 |
| பிப்ரவரி | 100 | 39 | 10 | 29 | 10 | 6 | 0 | 6 |
| மார்ச் | 95 | 30 | 10 | 20 | 20 | 4 | 1 | 3 |
| ஏப்ரல் | 135 | 71 | 15 | 56 | 5 | 6 | 0 | 6 |
| மே | 80 | 43 | 10 | 33 | 10 | 5 | 1 | 4 |
| ஜூன் | 90 | 117 | 20 | 97 | 9 | 7 | 3 | 4 |
| ஜூலை | 85 | 28 | 15 | 13 | 12 | 8 | 4 | 4 |
| ஆகஸ்ட் | 80 | 28 | 18 | 10 | 9 | 5 | 0 | 5 |
| செப்டம்பர் | 150 | 35 | 10 | 25 | 9 | 18 | 0 | 18 |
| அக்டோபர் | 38 | 22 | 10 | 12 | 23 | 18 | 0 | 18 |
| நவம்பர் | 100 | 36 | 10 | 26 | 21 | 19 | 5 | 14 |
| டிசம்பர் | 46 | 32 | 15 | 17 | 7 | 16 | 6 | 10 |
| மொத்தம் | 1059 | 516 | 153 | 363 | 147 | 117 | 20 | 97 |



**இணைப்பு–8**

**மாவட்ட நுகர்வோர் குறைதீர் அமைப்புகளில் 2002 சனவரி முதல் டிசம்பர் வரை தொடுக்கப்பட்ட மற்றும் தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை**

| மாதம் | தொடக்கத் தில் நிலுவையில் உள்ளவை | தொடுக்கப் பட்டவை | மொத்தம் | தீர்ப்பு வழங்கப் பட்டவை | நுகர் வோருக்கு சாதகமாக | நுகர் வோருக்கு எதிராக |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| சனவரி | 6406 | 311 | 6717 | 320 | 185 | 135 |
| பிப்ரவரி | 6397 | 392 | 6789 | 478 | 305 | 173 |
| மார்ச் | 6311 | 275 | 6586 | 349 | 198 | 151 |
| ஏப்ரல் | 6237 | 346 | 6583 | 295 | 173 | 122 |
| மே | 6288 | 237 | 6525 | 242 | 104 | 138 |
| ஜூன் | 6283 | 245 | 6528 | 272 | 145 | 127 |
| ஜூலை | 6256 | 303 | 6559 | 336 | 172 | 164 |
| ஆகஸ்ட் | 6223 | 313 | 6536 | 192 | 95 | 97 |
| செப்டம்பர் | 6344 | 276 | 6620 | 295 | 134 | 161 |
| அக்டோபர் | 6325 | 354 | 6679 | 325 | 181 | 144 |
| நவம்பர் | 6354 | 366 | 6720 | 398 | 216 | 182 |
| டிசம்பர் | 6322 | 440 | 6762 | 520 | 289 | 231 |
| மொத்தம் | | 3858 | | 4022 | 2197 | 1825 |

# இணைப்பு – II

*(137ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 17—கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை–கதர் கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

### பட்டு வளர்ச்சித் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

1.1 தமிழ்நாட்டை ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக விளங்கச் செய்ய அனைவருக்கும் ஆரோக்கியமான, வளமான வாழ்வு அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதே தமிழக அரசின் கொள்கையாகும். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டத்தினை செயல்படுத்தும்போது இத்தொலைநோக்கினை அடைய முடியும். 15 அம்சங்களில் 7 அம்சங்கள் வேலைவாய்ப்பினை வழங்கக்கூடிய விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப்புற தொழிலான பட்டு வளர்ச்சித் துறையின் செயல்பாடுகளுக்கு தொடர்புடையதாகும். அவை,

(அ) தொடர் பசுமைப் புரட்சி - அதிக மகசூல் தரும் மல்பரி இரகங்களை சாகுபடி செய்தல்.

(ஆ) நீர்வளப் பாதுகாப்பு - பாசன நீரைப் பாதுகாக்க சொட்டு நீர்ப்பாசன அமைப்பை நிறுவுதல்.

(இ) வாழ்வாதாரப் பாதுகாப்பு - வேலைவாய்ப்பு உருவாக்கம்.

(ஈ) எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.

(உ) பாலினநேர்மை நெறி - பாலினப் பாகுபாட்டை நீக்கி பட்டு வளர்ச்சிப் பணிகளில் பெண்களை ஈடுபடுத்துதல்.

(ஊ) ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை - ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகிய வகுப்பினரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.



(எ) அதிவிரைவு தொழில்நுட்ப முன்னேற்றம் - விஞ்ஞானிகளுக்கும் விவசாயிகளுக்கும் இடையே உள்ள இடைவெளியை நீக்கி தொடர்பு ஏற்படுத்துதல்.

1.2 மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு என பல்வேறு வகையான செயல்பாடுகளில் பட்டு வளர்ச்சித் துறை ஈடுபட்டு வருகின்றது. அவை,

(அ) உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களைப் பயிரிட விவசாயிகளை ஊக்குவித்தல்.

(ஆ) மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்பு போன்ற தொழில்களில் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தல்.

(இ) புழுவளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பிற்கு தனியான புழு வளர்ப்பு மனைகள் கட்டுவதற்கு உதவியளித்தல்.

(ஈ) நோயற்ற தரமான பட்டு முட்டைகள் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல்.

(உ) அதிகப்படியான பட்டுக் கூடுகள் உற்பத்திக்கு புதிய தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்கச் செய்தல்.

(ஊ) தனியார் பட்டு நூற்பு மையங்களை நிறுவ உதவி அளித்தல்.

(எ) மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப்பாசன அமைப்புகளை நிறுவ உதவி அளித்தல்.

(ஏ) பட்டுக்கூடு, கச்சாப்பட்டு விற்பனைக்கு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்.

(ஐ) பட்டு ஆராய்ச்சி மையங்களின் மூலம் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை, பட்டு விவசாயிகளை கடைப்பிடிக்கச் செய்தல்.

1.3 தீவிர பட்டு அபிவிருத்தித் திட்டம் நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்ட பயன்கள் ஊக்குவிப்பதாக அமைந்ததாலும், கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இத்தொழில் முக்கியத்துவம் பெற்றிருந்ததாலும் அரசு இத்தொழிலை பெரிய அளவில் மேம்படுத்த திட்டமிட்டது. மேற்கண்ட இலட்சியத்தினை அடைய முதல் படியாக

பட்டு வளர்ச்சித் துறை தனித்துறையாக தோற்றுவிக்கப்பட்டு 1.4.1979 முதல் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதன் பின்னர் இத்தொழிலுக்கு நிதி உதவிகள் பின் தொடர் ஆண்டுகளில் கணிசமாக உயர்த்தப்பட்டது. தனித் துறையாக அமைக்கப்பட்ட பின்னர் உள்கட்டமைப்பு வசதிகளான பட்டு விதைப் பண்ணைகள், பட்டு முட்டை வித்தகங்கள், விதைக்கூடு அங்காடிகள், பட்டுக்கூடு அங்காடிகள், விவசாயிகள் பயிற்சி மையங்கள், தொழில் நுட்ப சேவை மையங்கள், பட்டு நூற்பு மையங்கள், பட்டு முறுக்கேற்றும் மையங்கள், பட்டு பரிமாற்றகம் போன்றவை பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் நிறுவப்பட்டன. அவை—

(அ) வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டம்,

(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்,

(இ) மேற்கு தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்,

(ஈ) ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்,

(உ) சுவிஸ் கூட்டுறவு அபிவிருத்தித் திட்டம்,

(ஊ) உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் மற்றும் பல.

துறையின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த 6 மண்டல அலுவலகங்கள் மற்றும் 26 உதவி இயக்குனர் அலுவலகங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. பணியாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்க ஓசூரில் ஒரு பட்டுப் பயிற்சி பள்ளியும், கச்சாப்பட்டினை கொள்முதல் செய்ய காஞ்சிபுரத்தை தலைமை இடமாகக் கொண்ட காஞ்சிபுரம் பட்டு பரிமாற்றகமும் செயல்பட்டு வருகின்றன. மேலும் காஞ்சிபுரத்திலுள்ள “டான்சில்க்” கூட்டுறவு இணையம் கச்சாப்பட்டினை கொள்முதல் செய்து மாநிலத்திலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து வருகிறது.

1.4 தமிழ்நாடு, கச்சாப்பட்டினை பெருமளவு உபயோகிக்கும் மாநிலமாகும். மாநிலத்தில் கச்சாப்பட்டின் தேவை 1500 மெட்ரிக் டன்கள் ஆகும். 2002-2003ஆம் ஆண்டில் பருவ மழை பொய்த்து, தொடர்ச்சியான வறட்சி நிலவி, நீர்ப்பாசன வசதிகள் பாதிக்கப்பட்டன. பட்டு இறக்குமதி வரி 35 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக



குறைக்கப்பட்டதால் சீனப் பட்டு குறைவான விலைக்கு கிடைக்கப்பெற்றதால் சீனப் பட்டின் வரத்து அதிகரித்தது. மேற்கண்ட காரணங்களால் உள்நாட்டில் கச்சாப்பட்டு மற்றும் பட்டுக்கூட்டின் விலை குறைந்து பட்டு விவசாயிகளின் பொருளாதார நிலைமை பாதிக்கப்பட்டது. பல் விவசாயிகள் மல்பரி சாகுபடியை விடுத்து மற்ற சாகுபடிக்குச் சென்று விட்டதால் மல்பரி பரப்பு குறைந்து, குறைந்தளவு சாதனை அடையப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைகளிலிருந்து மீளுவதற்கு பட்டு வளர்ச்சித் துறை, பட்டு ஆராய்ச்சி மையங்களால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தி மாநிலத்தில் உற்பத்தித் திறனை அதிகரிக்க பல்வேறு வகையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## 2. அரசின் 15 அம்ச திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள்

2.1 தொடர் பசுமைப் புரட்சி - அதிக மகசூல் தரும் மல்பரி இரகங்களை சாகுபடி செய்தல்.

மாநிலத்தில் உயர் விளைச்சல் தரும் “வி1” மல்பரி இரகத்தை சாகுபடி செய்து பண்ணை உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். “வி1” இரக மல்பரி இலையில் ஊட்டச் சத்து நன்றாக உள்ளதால் இருசுழற்சியின புழு வளர்ப்பிற்கு மிக ஏற்றதாக உள்ளது.

2.2 தரமான கச்சாப் பட்டினை உற்பத்திச் செய்ய கூடுதல் உற்பத்தித் திறன் கொண்ட இருசுழற்சியின புழு வளர்ப்பை மாநிலத்தில் ஊக்குவித்தல்.

2.3 2003-2004ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் 1000 ஏக்கரில் உயர் விளைச்சல் மல்பரி இரகங்களை சாகுபடி செய்ய திட்டமிடப் பட்டுள்ளது.

2.4 1999-2000ஆம் ஆண்டில், மத்திய பட்டு வாரியமும் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவனமும் இணைந்து ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் பரிசோதனை அடிப்படையில் 18 விவசாயிகளால் இருசுழற்சியின புழு வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. இருசுழற்சியின புழு வளர்ப்பின் செயலாக்கம் நன்றாக இருந்ததால் பல விவசாயிகள் இருசுழற்சியின புழு வளர்ப்பினை மேற்கொண்டனர். 2002-2003ஆம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் சத்தியமங்கலம், தர்மபுரி மாவட்டத்தில் ஓசூர், கிருஷ்ணகிரி மற்றும் பாப்பிரெட்டிப்பட்டி

[2003 மே 7

ஆகிய 4 தொழில்நுட்ப சேவை மையங்கள் ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு நிறுவன உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு இருசுழற்சியின புழு வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றனர். மாநிலத்தில் 4.20 இலட்சம் இருசுழற்சியின முட்டைத் தொகுதிகள் வளர்க்கப்பட்டு 187.10 மெட்ரிக் டன் இருசுழற்சியினப் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**3. நீர்வளப் பாதுகாப்பு – பாசன நீரைப் பாதுகாக்க சொட்டுநீர்ப் பாசன அமைப்பை நிறுவுதல்.**

பாசன நீரை சிக்கனமாக, பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு சொட்டு நீர்ப் பாசனமே சிறந்த தொழில்நுட்பமாகும். இம்முறை மல்பரி செடிகளுக்கு ஏற்றதாகும். பாசன நீர் வீணாகாமல் ஒவ்வொரு செடிக்கும் போதுமான அளவு தண்ணீரை கொடுக்கும் திறன் கொண்டதாகும். வழக்கத்தில் உள்ள பாசன முறையுடன் ஒப்பிடுகையில் சொட்டு நீர்ப்பாசன முறையில் 30 சதவிகித தண்ணீரை சேமிக்க முடியும். 2003-2004ஆம் ஆண்டில் 400 ஏக்கர் மல்பரி தோட்டங்களில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**4. வாழ்வாதாரப் பாதுகாப்பு – வேலைவாய்ப்பு உருவாக்கம்.**

பட்டு வளர்ப்புத் தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமப்புற குடிசைத் தொழில் என்பதால் மிகப்பெரிய வேலைவாய்ப்பினை உருவாக்க இயலும். ஒரு ஏக்கர் மல்பரி தோட்டத்தின் மூலம், மல்பரி சாகுபடி செய்தல், பட்டுப்புழு வளர்த்தல், பட்டு நூற்பு, பட்டு நெசவு மற்றும் பதனிடுதல் போன்ற செயல்பாடுகளில் வருடம் முழுவதும் 5 நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பினை உருவாக்க முடியும். சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பட்டுக்கூடுகள் உற்பத்தி செய்வதன்மூலம் குறிப்பிட்டக் காலத்தில் வருமானம் கிடைப்பதை உறுதி செய்கிறது. 2003-2004ஆம் ஆண்டில் 1000 ஏக்கரில் மல்பரி சாகுபடி செய்து 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க திட்டமிடப்பட்டு உள்ளது.



2003 மே 7]

**5. பட்டு விவசாயிகளுக்கு எழுத்தறிவு மற்றும் தொழில்நுட்ப அறிவு – பயிற்சியளித்தல்**

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மைசூரிலுள்ள மத்திய பட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் உருவாக்கிய தொழில்நுட்பங்களை கடைப்பிடித்து இருசுழற்சியின புழு வளர்ப்பு விரிவாக்கத்தினை வலுப்படுத்தும் திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத்தொழில்நுட்பத்தினை கடைப்பிடிக்க விவசாயிகளுக்கு, சீரான புழுப்பொரிப்புக்கு முட்டை அடைகாத்தல், இளம்புழு வளர்ப்பு, முதிர்ந்த புழு வளர்ப்பு, பட்டுக்கூடு கட்டுதல், கூடு அறுவடை செய்தல் மற்றும் பட்டுக் கூடுகளை அங்காடிக்கு விற்பனைக்கு கொண்டு செல்லுதல் போன்றவை குறித்து பயிற்சி வழங்குதல் வேண்டும். இருசுழற்சியின புழு வளர்ப்பு வெற்றிகரமாக நடைபெறும் பகுதிகளுக்கு விவசாயிகளை நேரில் அழைத்துச் சென்று காண்பித்து அவர்கள் கடைப்பிடிக்கும் தொழில்நுட்பங்களை பின்பற்றச் செய்ய வேண்டும். விவசாயிகளிடையே விழிப்புணர்வு முகாம் நடத்தி புதிய தொழில்நுட்பங்களையும், குறிப்பிட்ட காலங்களில் மல்பரியைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் பட்டுப் புழுவைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் தெரிவித்திட திட்டமிடப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் நிதியாண்டில் 1000 விவசாயிகளுக்கு பயிற்சியும், விழிப்புணர்வு முகாமும் நடத்தி அவர்களது திறமையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**6. பாலின நேர்மைநெறி–பாலின பாகுபாட்டை நீக்குதல்**

பட்டுத் தொழில் கிராமப்புற குடிசைத் தொழில் என்பதால் பட்டுப் புழு வளர்ப்பு மற்றும் தோட்டப் பராமரிப்பில் மகளிரின் ஈடுபாடு அதிகமாகும். பட்டுப் புழு வளர்ப்பில் கிராமப்புற மகளிரின் பணி 60 சதவீதமாக உள்ளது. அரசு வழங்கும் வெவ்வேறு திட்ட உதவிகளில் ஒவ்வொரு ஆண்டும் மகளிருக்கு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டில் பின்வரும் விவரப்படி மகளிர் பயனாளிகளுக்கு உதவியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது:

[2003 மே 7

| வ.எண் | திட்ட செயல்பாடுகள் | மகளிர் பயனாளிகள் (எண்ணிக்கை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | உயர் விளைச்சல் மல்பரி இரக சாகுபடி | 300 |
| 2 | இருசுழற்சியின புழு வளர்ப்பில் பயிற்சி அளித்தல் | 40 |
| 3 | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ நிதியுதவி | 40 |
| 4 | தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட நிதியுதவி | 60 |
| 5 | நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் செய்ய நிதியுதவி | 60 |
| | மொத்தம் | 500 |

**7. ஒடுக்கப்பட்ட மக்களுக்கான புதிய அணுகுமுறை – ஆதி திராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்**

மாநிலத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவு மக்களின் வறுமையை ஒழிப்பதற்காக அவர்களுக்கு நிதி உதவி வழங்க பட்டு வளர்ச்சித் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆதிதிராவிடர்/பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அவர்களுக்கு சிறப்புத் திட்டங்களை இத்துறை செயல்படுத்தியுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களின் மூலம் ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகிய ஒடுக்கப்பட்ட பிரிவினர்களுக்கு உதவியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



2003 மே 7]

| வ.எண் | திட்ட விவரம் | பயனாளிகள் (எண்ணிக்கை) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | உயர் விளைச்சல் மல்பரி இரக சாகுபடி | 600 |
| 2 | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவ உதவியளித்தல் | 50 |
| 3 | தனியாக புழு வளர்ப்பு மனை கட்ட நிதி உதவி | 50 |
| 4 | நவீன புழு வளர்ப்பு தளவாடங்கள் கொள்முதல் செய்ய நிதி உதவி | 50 |
| 5 | இருசுழற்சியின புழு வளர்ப்பில் பயிற்சி அளித்தல் | 50 |
| | மொத்தம் | 800 |

**8. அதிவிரைவு தொழில்நுட்ப முன்னேற்றம்–விஞ்ஞானிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே உள்ள இடை வெளியை நீக்கி தொடர்பு ஏற்படுத்துதல்.**

8.1 1996-97 ஆம் ஆண்டு, உற்பத்தித் திறனை அதிகரித்து தரமான பட்டினை உற்பத்திச் செய்ய "இருசுழற்சி இன புழு வளர்ப்பு தொழில் நுட்ப அபிவிருத்தித் திட்டம்" செயல்படுத்தப்பட்டது. "இருசுழற்சி இன புழு வளர்ப்பு தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்ட" சாதனையை அடிப்படையாகக் கொண்டு இருசுழற்சி இன புழு வளர்ப்பு தொழில்நுட்ப திட்டத்தினை ஊக்குவித்திடவும் பரவலாக்கவும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவன தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் இருசுழற்சி இன புழு வளர்ப்பு திட்டம் செயல் படுத்தப்பட்டது. கோபிசெட்டிப்பாளையம் பகுதி விவசாயிகள், இருசுழற்சி இனப் பட்டுப் புழுவளர்ப்பு தொழில்நுட்ப முறைகளை செயல்முறையில் கடைப்பிடித்து, நிரூபிக்கப்பட்டு, இரு சுழற்சி இன பட்டுப் புழு வளர்ப்பு அறுவடை மூலம் அதிக வருமானம் அடைந்தனர்.

8.2 இருசுழற்சியின புழு வளர்ப்பு வெற்றி குறித்து விவசாயிகளிடமிருந்து தெரிய வந்தமையால் இத்திட்டத்தினை மிகப் பெரிய அளவில் மாநிலத்தில் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது. இம்மாநிலத்தில் தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூர், பாப்பிரெட்டிப்பட்டி, கிருட்டிணகிரி மற்றும் ஈரோடு மாவட்டத்திலுள்ள சத்தியமங்கலம் ஆகிய நான்கு தொழில்நுட்ப சேவை மையங்கள் மூலம் "இருசுழற்சியின புழு வளர்ப்பு விரிவாக்கத்தை வலுப்படுத்துதல் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தொழில்நுட்ப சேவை மையம், இளம்புழு வளர்ப்பு மையம், பட்டுப் பயிற்சி பள்ளி, விதைப் பண்ணைகள் மற்றும் பட்டு வித்தகங்கள் ஆகியவற்றிற்கு தளவாடங்கள் விநியோகம் செய்து வலுப்படுத்தப்படவுள்ளது. இருசுழற்சியின பட்டுக் கூடு உற்பத்தியை அதிகரிக்க ஒவ்வொரு ஆண்டும் அதிக விவசாயிகள் ஈடுபடுத்தப்படுவர்.

**9. அரசு அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம்.**

9.1 பட்டு நூற்பாளர்கள் தாங்கள் உற்பத்திச் செய்யும் பட்டினை விற்பனை செய்யும் மையம்தான் பட்டு பரிமாற்றகமாகும். மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டினை விற்பனை செய்திட அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்தில் தோற்றுவிக்கப்பட்டு 9.1.1991 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பட்டு நூற்பாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த பட்டினை விற்பனைக்காக அண்ணா பட்டு பரிமாற்றகத்திற்கு கொண்டு வருகின்றனர். விற்பனைக்கு கொண்டு வரப்படும் அனைத்து பட்டு நூல் தொகுதிகளும் முதலாவதாக பட்டு தரத்தினை அறியும் பொருட்டு காஞ்சிபுரத்திலுள்ள "பட்டு பதனிடுதல் மற்றும் சோதனை மையத்தில்" பரிசோதிக்கப்படுகிறது. பட்டுத் தரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு பட்டு நூல் தொகுதிக்கும் அடிப்படை விலை நிர்ணயிக்கப்படுகிறது. பின்னர் பட்டு நூல் தொகுதிகள் ஏலத்திற்கு வைக்கப்படுகிறது. டான்சில்க், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு முறுக்கேற்றுபவர்கள் மற்றும் இதர பட்டு உபயோகிப்பாளர்கள் ஏலத்தில் பங்கு கொள்கின்றனர். பட்டு நூற்பாளர்களுக்கு உடனடியாக பட்டு நூலுக்குரிய தொகை வழங்க பரிமாற்றகம் உறுதி செய்கிறது.

9.2 அண்ணா பட்டு பரிமாற்றகத்தின் செயல்பாடுகள், பட்டு நூற்பு தொழிலை நிலைப்படுத்தி தொழில் முனைவோர்களை நூற்புத் தொழிலில் அதிக முதலீடு செய்ய ஊக்குவித்துள்ளது. நிதி வசதி



அளிப்பவர், தரகு முகவர் போன்ற இடைத்தரகர்களை நீக்கிவிட்டு, தமிழகத்தில் பட்டு உற்பத்தியாளர் மற்றும் பட்டு உபயோகிப்பாளர்களிடையே நேரடி தொடர்பினை அண்ணா பட்டு பரிமாற்றகம் ஏற்படுத்தியுள்ளது.

9.3. பட்டு விற்பனையாளர் மற்றும் பட்டு வாங்குவோர்களிடமிருந்து பட்டு கொள்முதல் செய்யப்படும் தொகையில் 0.75 சதவீதம் லெவி கட்டணமாக பட்டு பரிமாற்றகத்தில் வசூலிக்கப்படுகிறது. வசூலிக்கப்பட்ட தொகை பட்டு அபிவிருத்தி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியில் செலுத்தப்பட்டு பின்னர் பட்டுத் தொழில் அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படுகிறது.

9.4 2002-2003 ஆம் ஆண்டில் 200 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு கொள்முதல் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 136.80 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டு பட்டு விற்பனையாளர் மற்றும் பட்டு வாங்குவோர்களிடமிருந்து லெவி கட்டணமாக ரூ.20.00 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**10. டான்சில்க், காஞ்சிபுரம்.**

10.1. "டான்சில்க்" ஒரு தலைமைக் கூட்டுறவு பட்டு விற்பனை இணையமாக 17-4-1978-ல் பதிவு செய்யப்பட்டு 9-9-1978 முதல் காஞ்சிபுரத்தில் செயல்பட்டு வருகிறது. பட்டு இணையம் அதனுடைய அமைப்பில் தனித் தன்மையாக உள்ளது. அதில் பட்டு உற்பத்தியாளர்கள் மற்றும் பட்டு உபயோகிப்பாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். கச்சாப்பட்டு மற்றும் முறுக்கேற்றிய பட்டினை கொள்முதல் செய்து உறுப்பினர்களாகிய பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அதிக அளவில் பட்டினை உபயோகிக்கும் கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு விற்பனைச் செய்வதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

10.2 டான்சில்க், அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் மூலமாக பட்டு நூற்பாளர்களிடமிருந்து பட்டினை கொள்முதல் செய்து பாவாகவும், ஊடையாகவும் தயாரித்திட பட்டினை பட்டு முறுக்கேற்றும் உறுப்பினர்களுக்கு விநியோகிக்கிறது. அவ்வாறு தயாரான பட்டு, பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கதர் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு தேவைக்கேற்ப விநியோகிக்கப்படுகிறது. அரசாணை (நிலை) எண் 174, கைத்தறி, கைவினைப் பொருட்கள்,

[2003 மே 7

துணி நூல் மற்றும் கதர்த் துறை, நாள் 24-12-1985-ன்படி மாநிலத்திலுள்ள அனைத்து பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் டான்சில்க் மூலம்தான் அவர்களுக்குத் தேவையான பட்டினை கொள்முதல் செய்ய வேண்டும். அரசாணை (நிலை) எண் 206, கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த் துறை, நாள் 29-10-1997-ன்படி ஆரம்ப பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் நடைபெறும் ஏலத்தில் நேரடியாக கலந்து கொள்ளவும் மற்றும் டான்சில்க்கில் தங்களுக்குத் தேவையான பட்டினை தடையின்றி வாங்கிக் கொள்ளவும் அரசு அனுமதித்துள்ளது. அண்ணா பட்டு பரிமாற்றகத்தில் பட்டு உபயோகிப்பாளர்கள் கொள்முதல் செய்யாத பட்சத்தில் டான்சில்க்கே கச்சாப் பட்டினை அடிப்படை நிர்ணய விலையில் கொள்முதல் செய்து பட்டு விற்பனைக்கு ஆதரவாக செயல்படுகிறது.

10.3 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பட்டு முறுக்கேற்றும் உறுப்பினர்களின் நலனுக்காகவே இணையம் செயல்பட்டு வருகிறது. தற்போது, இவ்விணையத்தில் 522 உறுப்பினர்கள் உள்ளனர். இவ்விணையத்திற்கு உறுப்பினர்கள் பங்கு மூலதனத் தொகையாக ரூ.155.30 இலட்சமும், தமிழக அரசு முதலீடாக ரூ.1.70 இலட்சமும் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு மூலமாக தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம், புதுடில்லியிலிருந்து ரூ.15.50 இலட்சம் மீட்டுக் கொள்ளத்தக்க பங்கு மூலதன நிதி உதவி பெற்றுள்ளது. மத்திய அரசின் தேசிய பட்டு நூல் வங்கி மூலமாக ரூ.117.49 இலட்சம் பங்கு மூலதனமாக பெறப்பட்டுள்ளது. இணையத்திற்கு காஞ்சிபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, காஞ்சிபுரம் ரூ.150.00 இலட்சம் காசுக் கடனாக அனுமதித்துள்ளது.

10.4 2002-3003 ஆம் ஆண்டில் இணையம் ரூ.2868.54 இலட்சம் மதிப்புள்ள 269.44 மெட்ரிக் டன் பட்டு நூல் விற்பனை செய்துள்ளது. 31-3-2002 முடிய இணையத்தின் நிகர இலாபம் ரூ.2.17 இலட்சம். நடப்பாண்டில் ரூ.14.05 இலட்சம் உத்தேசமாக இலாபம் ஈட்டியுள்ளது.

**11. பட்டு வளர்ச்சி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி**

11.1 உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்ட தேசிய பட்டு வளர்ச்சித் திட்ட செயலாக்கத்தின்போது நிதி வருவாய் அதிகரிக்கும் பொருட்டு ஒரு கிலோ பட்டுக்கூட்டிற்கு லெவி



2003 மே 7]

கட்டணமாக வசூலிக்கப்பட்ட 10 பைசாவை அதிகரிக்கச் செய்யவும் அவ்வாறு வசூலிக்கப்படும் கட்டணத்தை துறையின் வளர்ச்சிப் பணிகளுக்கு பயன்படுத்த உலக வங்கியால் கருத்துத் தெரிவிக்கப்பட்டது. அரசு தலைமைச் செயலாளரின் தலைமையின் கீழுள்ள அதிகாரம் கொண்ட குழுவால் 2-12-1989-ல் கலந்தாலோசிக்கப்பட்டு பட்டு வளர்ச்சி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி அமைத்து அதில் பட்டுக் கூடு மற்றும் கச்சாப் பட்டின் விற்பனைத் தொகையில் 0.75 சதவீதம் விற்பனையாளர் மற்றும் வாங்குவோர்களிடமிருந்து வசூலிக்கப்படும் லெவி கட்டணத்தை செலுத்தவும் ஆலோசனை வழங்கப்பட்டது. தற்போது லெவி கட்டணம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டது வருகிறது.

11.2 மார்ச்-2003 முடிய ரூ.823.53 இலட்சம் லெவி கட்டணம் வசூலிக்கபட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. ரூ.235.93 இலட்சம் பட்டு வளர்ச்சி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதிக்குழுவிடம் ஒப்புதல் பெறப்பட்டு தமிழக அரசிடமிருந்து அரசாணை பெறப்பட்டு பட்டுத் தொழில் அபிவிருத்திக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டு உள்ளது.

## 12. 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள்

### பகுதி வளர்ச்சித் திட்டங்கள்

### (அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் 1981-82 ஆம் ஆண்டு முதல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2002-2003ஆம் ஆண்டில் 60 பயனாளிகள் பயன்பெற ரூ.2.36 இலட்சத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 2003-2004ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு கீழ் குறிப்பிட்டுள்ள நிதி உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது:

(அ) ஒவ்வொரு பயனாளிக்கும் 50 சதவீத மானிய விலையில் மல்பரி நாற்றுக்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பயனாளியும் 1210 மல்பரி நாற்றுக்கள் நடவு செய்திட ரூ.605/- வீதம் நாற்று மானியமாக வழங்கப்படும்.

[2003 மே 7

(ஆ) பட்டுத் தொழில் சிறப்பாக நடைபெறும் பகுதிகளில் கண்டுணர்தல் பயிற்சி அளிக்க ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் பயிற்சித் தொகையாக ரூ.250/- வழங்கப்படும்.

(இ) நோய் தடுப்பு மருந்துப் பொருட்கள் மற்றும் உயிர் உரங்கள் கொள்முதல் செய்ய ஒவ்வொரு பயனாளிக்கும் ரூ. 160/- வழங்கப்படும்.

(ஈ) ரூ.1,000/- மதிப்புள்ள பிளாஸ்டிக் சந்திரிகைகள் கொள்முதல் செய்ய ஒவ்வொரு பயனாளிக்கும் 50 சதவீத மானியம் வழங்கப்படும்.

(உ) ரூ.1,500/- மதிப்புள்ள தண்டு அறுவடை முறை புழு வளர்ப்புத் தாங்கிகள் அமைக்க ஒவ்வொரு பயனாளிக்கும் 50 சதவீத மானியம் வழங்கப்படும்.

2003-2004 ஆம் ஆண்டில் 60 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஆ) மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்.**

மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் கீழ்க்காணும் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:—

(அ) கோயமுத்தூர்

(ஆ) திண்டுக்கல்

(இ) தேனி

(ஈ) விருதுநகர்

(உ) திருநெல்வேலி

2002-2003 ஆம் ஆண்டில் 500 பயனாளிகளுக்கு ரூ.11.70 இலட்சம் மதிப்பீட்டில் பட்டு வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

2003-2004 ஆம் ஆண்டிலும் கீழ்க்காணும் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:



2003 மே 7]

(அ) 50 சதவீத மானிய விலையில் மல்பரி நாற்றுக்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பயனாளிக்கும் 1,360 மல்பரி நாற்றுக்கள் கொள்முதல் செய்ய ரூ.680/- மானியமாக வழங்கப்படும்.

(ஆ) ஒவ்வொரு விவசாயிக்கும் பயிற்சி உதவித் தொகையாக ரூ. 250/- வழங்கப்படும்.

(இ) பிளாஸ்டிக் சந்திரிகைகள் கொள்முதல் செய்யவும், தண்டு அறுவடை முறை புழு வளர்ப்புத் தாங்கிகள் நிறுவுவதற்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 1,250/- மானியமாக வழங்கப்படும்.

**13. பட்டு-2000 திட்டங்கள்**

13.1 2002-2003 ஆம் ஆண்டில் "பட்டு-2000" திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த ரூ.70.10 இலட்சங்கள் அரசு அளித்துள்ளது.

13.2 2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் திட்டங்கள் பட்டு-2000 திட்டத்தின்கீழ் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

(அ) பயனுள்ள வகையில் மருந்தடிப்புச் செய்ய 120 அழுத்த விசைத் தெளிப்பான்கள் ஒவ்வொன்றும் ரூ. 25,000/- வீதம் கொள்முதல் செய்ய உதவி அளிக்கப்படும். இதற்கான தொகையை தர மேம்பாட்டுக் குழுவும், சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிறுவனமும் சமமாக ஏற்கும். மொத்தத் தொகையான ரூ. 30.00 இலட்சத்தில் 50 சதவீத தொகையான ரூ.15.00 இலட்சத்தை சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிறுவனம் ஏற்கும்.

(ஆ) தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்களுக்குத் தேவையான இரசாயன உரங்கள், முட்டைத் தொகுதிகள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்கள் போன்ற நுகர் பொருட்களைக் கொள்முதல் செய்ய மூலதனத் தொகைக்குச் சமமாக அரசு பங்குத் தொகை உதவியாக ஒரே ஒரு முறை வழங்கப்படும். ஒவ்வொரு தர மேம்பாட்டுக் குழுவிற்கும் ரூ.20,000/- சுழல் நிதித் தொகை தேவைப்படும். இவற்றில் ரூ.10,000/- வீதம் 100 தர மேம்பாட்டுக் குழுக்களுக்குரிய ரூ. 10.00 இலட்சத்தை சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிறுவனம் ஏற்கும்.

[2003 மே 7

(இ) பட்டுப் புழு வளர்ப்பில் நடைமுறைப்படுத்தப்படும் மேம்பட்ட தொழில்நுட்ப உத்திகளை தர மேம்பாட்டுக் குழு உறுப்பினர்கள் அறிந்து, பின்பற்றி உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதற்காக பட்டுத் தொழில் வளர்ச்சி அடைந்துள்ள பகுதிகளுக்கு குழு உறுப்பினர்களை நேரில் அழைத்துச் சென்று, கண்டுணர்தல் பயிற்சி அளிக்கப்படும். 500 குழு உறுப்பினர்களுக்குத் திறன் அபிவிருத்திக்கான பயிற்சி அளிக்கப்படும். இதற்குத் தேவைப்படும் ரூ.7.80 இலட்சத்தை சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிறுவனம் ஏற்கும்.

(ஈ) சர்க்கா நூற்பாளர்களின் சிரமத்தினைக் குறைக்க மின் மோட்டார் பொருத்திய சர்க்கா அமைத்திட ஓர் அலகிற்கு ரூ.10,000/- வீதம் 40 அலகுகளுக்குரிய ரூ.4.00 இலட்சத்தை சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிறுவனம் ஏற்கும்.

(உ) உற்பத்தியாகும் பட்டு உபபொருட்களின் தரத்தினை நிலைப்படுத்தும் முறையினை அறிய பெங்களூரிலுள்ள மத்திய பட்டு நூல் தொழில்நுட்ப ஆராய்ச்சி மையத்தில் பட்டு நூற்பாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். தொழில் முனைவோருக்குப் பயிற்சிக் கட்டணம், உணவு மற்றும் தங்கும் வசதி ஆகிய செலவினங்களுக்கு மொத்தம் ரூ.0.70 இலட்சத்தை சுவிஸ் அபிவிருத்தி மற்றும் கூட்டுறவு நிறுவனம் ஏற்கும்.

பட்டு-2000 திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ.39.50 இலட்சமாகும்.

### 14. கிரியா ஊக்கித் திட்டங்கள்

14.1 மாநிலத்தில் தரமான பட்டு உற்பத்தியை அதிகரிக்க மத்திய பட்டு வாரியம், கிரியா ஊக்கித் திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த நிதி உதவியளித்து வருகிறது. அவை,

(அ) சொட்டு நீர்ப் பாசன அமைப்பினை நிறுவ நிதி உதவியளித்தல்.

(ஆ) விவசாயிகளுக்கு நவீன புழு வளர்ப்புத் தளவாடங்களைக் கொள்முதல் செய்ய நிதி உதவியளித்தல்.

(இ) தனியாக புழு வளர்ப்பு மனை அமைக்க நிதியுதவி அளித்தல்.

(ஈ) தரமான நோய்த் தடுப்பு மருந்துப் பொருட்களைக் கொள்முதல் செய்ய நிதி உதவி அளித்தல்.

(உ) பலமுனை பட்டு நூற்பு ஏனங்களை நிறுவ நிதி உதவி அளித்தல்.

(ஊ) இளம் புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க நிதி உதவி அளித்தல்.



2003 மே 7]

கிரியா ஊக்கித் திட்டத்திற்கான தொகையினை மத்திய பட்டு வாரியம், மாநில அரசு, பயனாளிகள் 25:25:50 என்ற விகிதாச்சாரப்படி ஏற்பர்.

14.2 2003-2004 ஆம் ஆண்டில் பட்டு வளர்ச்சி மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியிலிருந்து மாநில அரசின் பங்குத் தொகை பெறப்பட்டு, கீழ்க்கண்ட கிரியா ஊக்கித் திட்டங்களைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது:—

| வ.எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | அலகு எண்ணிக்கை (3) |
|---|---|---|
| 1 | சொட்டு நீர்ப்பாசன அமைப்பு நிறுவுதல் | 400 ஏக்கர் |
| 2 | தனியாக புழு வளர்ப்பு மனை கட்டுதல் | 470 எண்ணிக்கை |
| 3 | நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் கொள்முதல் | 470 எண்ணிக்கை |
| 4 | தரமான நோய் தடுப்பு மருந்து பொருட்கள் "எப்1" விவசாயிகளுக்கு விநியோகம் | 350 எண்ணிக்கை |
| 5 | இளம்புழு வளர்ப்பு மையம் அமைத்தல் | 2 எண்ணிக்கை |

### 15. 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

2003-2004 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இயல்பு குறியீட்டினை அடையத் திட்டமிடப்பட்டுள்ளது:—

(அ) 1000 ஏக்கரில் உயர் விளைச்சல் தரும் மல்பரி இரகங்களைச் சாகுபடி செய்தல்.

(ஆ) 130.00 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகளை வளர்த்தல்.

(இ) 5850 மெட்ரிக் டன் பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்தல்.

(ஈ) 700 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்தல்.

[2003 மே 7

(உ) 5000 நபர்களுக்கு கூடுதலாக வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.

**16. நிதித் தேவை**

மேலே குறிப்பிட்ட இயல்பு குறியீட்டினை அடைய 2003-2004ஆம் ஆண்டில் தொடர் திட்டங்களுக்காகவும், புதிய திட்டங்களுக்காகவும் மொத்த நிதி ஒதுக்கீடு 2456.03 இலட்சமாகும்.

நிதி ஒதுக்கீடு விவரம் கீழ்வருமாறு:

| வ.எண் (1) | திட்டம் விவரம் (2) | | நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|---|
| 1 | திட்டப் பணிகள் | பகுதி-1 | 175.30 |
| | | பகுதி-2 | 7.20 |
| 2 | திட்டம்சாராப் பணிகள் | | 2206.26 |
| 3 | மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 2.36 |
| 4 | மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் | | 25.41 |
| 5 | பட்டு-2000 திட்டம் | | 39.50 |
| | மொத்தம் | | **2456.03** |

**தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-இன்படி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக உருவாக்கப்பட்டது. ஊரகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஊரகத் தொழில் வளர்ச்சி அவசியமாகிறது. இதனைக் கருத்திற்கொண்டு கிராமப்புறங்களில் பெருவாரியான வேலை வாய்ப்பினை ஏற்படுத்திட உருவாக்கப்பட்டதே கதர் கிராமத் தொழில் வாரியம். 1960-ல் வாரியம் தொடங்கப்பட்டதிலிருந்தே கடந்த



2003 மே 7]

40 ஆண்டுகளாக கிராமத் தொழில்களில் வளர்ச்சியைப் பெருக்கிட இவ்வாரியம் பெரும்பணி செய்து வருகிறது. நேரடியாக வேலை வாய்ப்பினை அளிப்பதோடு மட்டுமல்லாமல், கிராமப் பகுதிகளில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்து, இதன் மூலமாகவும், மறைமுகமாக வேலை வாய்ப்பினையும் உருவாக்கி வருகிறது.

**நிர்வாகம்**

கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-இன் படி கதர் வாரியம் ஒரு சட்ட ரீதியான அமைப்பாக இயங்கி வருகிறது. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் மற்றும் அரசினால் நியமிக்கப்பட்ட அலுவலர்களை அங்கத்தினர்களாகக் கொண்ட ஒரு கமிட்டி மூலம் வாரியத்தின் முக்கியக் கொள்கை முடிவுகள் அனைத்தும் எடுக்கப்படுகின்றன. நான்கு மண்டல அலுவலகங்கள் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் உதவி இயக்குநர் தலைமையில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இது தவிர, பட்டுத் தொழில் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக இணை இயக்குநர் (பட்டு) அலுவலகம் ஒன்று கும்பகோணத்தில் இயங்கி வருகிறது.

**1. கதர்**

**(அ) கதர் மற்றும் பாலிவஸ்திரா**

கதர் உற்பத்தி, வாரியத்தால் தொன்று தொட்டு நடைமுறைபடுத்தி வரும் செயலாகும். இப்பிரிவில் செய்யப்படும் உற்பத்திச் செயல்கள் அனைத்தும் கையினால் செய்யப்படுவதால் கிராமப்புறத்தில் உள்ள கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படுகிறது. நூல் நூற்கும் பணி மற்றும் நெசவுப் பணி பெரும்பாலும் பெண்களைக் கொண்டே நடைபெற்று வருகிறது. இத்தொழில் நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயம் போன்றவற்றை உள்ளடக்கியதாகும். நூற்புப் பணிகள் அனைத்தும் வாரியத்தின்கீழ் செயல்படும் 204 கிராமிய நூற்பு நிலையங்கள் மூலமாகவும், நெசவுப் பணிகள் முழுவதும் 79 நெசவு மையங்கள் மற்றும் 29 நேபாளி தறி அலகுகள் மூலமாகவும் செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு பெற்ற 20,000 கைவினைஞர்களில் 12,500 பேர் கிராமப்புற பெண்கள் ஆவர். கதர்த் துணி வகைகளில் பெரும்பாலும் வேட்டிகள், சட்டைத் துணிகள், துண்டுகள், படுக்கை விரிப்புகள், போர்வைகள்,

[2003 மே 7

சீருடைத் துணிகள் மற்றும் இதர இரகங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ.8.00 கோடி மதிப்பில் கதர் இரகங்கள் உற்பத்தி செய்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. விற்பனை செய்ய இயலாமல் இருப்பில் உள்ள கதர் இரகங்களை வெளிச் சந்தையில் விரைவில் விறபனை செய்திட ஏதுவாக ஆயத்த ஆடைகள் மற்றும் மகளிர்க்கான சுடிதார் வகைகளாக மாற்றப்படுவதால் சந்தையில் அவை நல்ல முறையில் ஏற்கப்பட்டு வருகின்றன.

### (ஆ) கதர்ப் பட்டு

கதர் பட்டுச் சேலைகள் உற்பத்தியும் இவ்வாரியத்தினால் தொன்று தொட்டுச் செயல்படுத்தப்படும் மற்றுமொரு செயல்பாடாகும். வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக புதிய வடிவமைப்பு மற்றும் பல வண்ணங்களுடன் கூடிய பட்டுப் புடவைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வாடிக்கையாளர்களின் இரசனைக்கேற்ப ரூ.2,000/- முதல் ரூ.10,000/- வரை மதிப்புள்ள புடவைகளை உற்பத்தி செய்து வருகிறது. சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சுருக்கம் விழாத மற்றும் அச்சிடப்பட்ட பட்டுப் புடவைகளுக்கு வாடிக்கையாளர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கப்பெற்றுள்ளது. பட்டு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் அவர்கள் உற்பத்திக்குத் தேவையான பட்டு, சரிகை மற்றும் இதர தேவையான பொருட்கள் தடையின்றி வழங்கப்பட்டு தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டுப் புடவைகளுக்கு உரிய கூலி தங்கு தடையின்றி முறையாக வழங்கப்பட்டு வருகிறது. நெசவாளர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ரூ.2,000/- வரையிலான மதிப்புள்ள புடவைகள் உற்பத்தி செய்யும் நெசவாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ஒரு சேலைக்கு ரூ.25/- வீதம் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் நெசவாளர்களுக்கு, கூடுதலாக வேலைவாய்ப்பு அளிக்க முடியும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டிற்கு பட்டு உற்பத்திக் குறியீடாக ரூ.27.00 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### (இ) கதர் மற்றும் பட்டு இரகங்களுக்கு வழங்கப்படும் தள்ளுபடி

வாரியத்தால் தயாரிக்கப்படும் கதர்த் துணி மற்றும் பட்டு இரகங்களை வெளிச் சந்தையில் விற்பனை செய்வதில் கடும் போட்டி நிலவுவதால்



2003 மே 7]

கதர் மற்றும் பட்டு விற்பனை வெகுவாக பாதிக்கப்படுகிறது. இந்த கடும் போட்டி விலையிலும் கதர்ப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச்செய்யும் நோக்கத்துடன் அரசு மற்றும் கதராணைக் குழு தள்ளுபடி வடிவில் நிதி ஆதாரத்தினை வழங்குகிறது. தள்ளுபடி மானியம் ஒவ்வொரு ஆண்டும் அரசு மற்றும் மும்பை கதர் ஆணைக் குழுவினால் வழங்கப்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் கதர்த் துணிகளுக்கு 30 சதவீதமும், பட்டு இரகங்களுக்கு 20 சதவீதமும் ஆண்டு முழுவதும் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டது. கதர் வாரியத்திற்கு அளிக்கப்படும் தள்ளுபடி சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் பொருந்தும். இவ்வகையில் அரசு தள்ளுபடி மானியத் தொகையாக 2003-2004 ஆம் ஆண்டில் சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ரூ.5.00 கோடியும், கதர் வாரியத்திற்கு ரூ.2.00 கோடியும் ஒதுக்கியுள்ளது. அரசும், கதராணைக் குழுவும் 30 சதவீத தள்ளுபடியைப் பங்கீடு செய்துகொள்கின்றன. பொதுவாக, பட்டு இரகங்கள் நீங்கலாக, கதர் இரகங்கள் அனைத்திற்கும் ஆண்டு முழுவதும் 10 சதவீதம் தள்ளுபடியாக கதராணைக் குழு வழங்குகிறது. இக்காலத்தில் மாநில அரசு பட்டு இரகங்களுக்கும் சேர்த்து 20 சதவீதம் தள்ளுபடி வழங்குகிறது. இருப்பினும் கதர் இரகங்களுக்கு கூடுதல் சிறப்புத் தள்ளுபடியாக 10 சதவீதம் குறிப்பிட்ட 108 நாட்களுக்கு கதர் ஆணைக் குழுவினால் வழங்கப்படுகின்ற காலத்தில் அரசு வழங்குகின்ற 20 சதவீதம் தள்ளுபடிக்குப் பதிலாக 10 சதவீதமாக வரையறுக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

### (ஈ) நூற்போர்/நெய்வோர்களுக்கான நலத் திட்டம்

கதர் வாரியம் கதராணைக் குழு நிபந்தனைகளுக்கு உட்பட்டு கைவினைஞர்களுக்கான நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நூற்போர்/நெய்வோர் பெற்று வரும் ஊதியத்தில் 12 சதவீதம் கைவினைஞர்கள் பங்காகவும், அதற்கு இணையான பங்கினை வாரியமும் வழங்கி அவர்களின் நல நிதி கணக்கில் வைக்கப்படுகிறது. இந்த நிதியில் இருந்து நூற்போர்/நெய்வோர்களின் படிப்பு, திருமணம் மற்றும் முக்கிய நிகழ்வுகளுக்கு நிதியுதவி அளித்து வருகிறது. மேலும் நூற்போர் மற்றும் நெய்வோர்களுக்கு வழங்கும் கூலியின் மீது 10 சதவீதம் ஊக்கத் தொகையாகவும் வாரியம் வழங்கி வருகிறது. நூற்போர்/நெய்வோர் இறக்க நேரிட்டால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு குடும்ப நலத் திட்டத்தின்கீழ் ரூ.20,000/- வழங்கும் ஒரு சமூக நலப் பாதுகாப்புத் திட்டம் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2003 மே 7

## 2. கிராமத் தொழில்கள்

### (அ) தச்சு மற்றும் கருமாரத் தொழில்

இவ்வாரியம் பழமை வாய்ந்த தொழிலான தச்சு மற்றும் கருமாரத் தொழிலை நடத்தி வருகின்றது. அரசு அலுவலகங்கள், அரசு சார்பு நிறுவனங்களான கழகங்கள் மற்றும் நகராட்சிகள் ஆகியவைகள் இத்தொழிலுக்கு முக்கிய வாடிக்கையாளர்கள்.

வாரியம் மூன்று பெரும் தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகளை முறையே சென்னை, கிண்டி தொழிற்பேட்டையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் பேட்டையிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில திருப்பூரிலும், இதர மாவட்டங்களில் 6 சிறு அலகுகளையும் இயக்கி வருகின்றது. தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் மாநிலக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வருகின்றனர்.

### (ஆ) தோல்

தோல் ஷுக்கள், காலணிகள் மற்றும் இதர தோல் பொருட்களை வாரியம் உற்பத்தி செய்து வருகின்றது. அம்பத்தூர், பெரம்பூர், பல்லாவரம் மற்றும் இதர மாவட்டங்களில் இயங்கி வரும் தோல் அலகுகளின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும். காவல், சிறை மற்றும் தீயணைப்புத் துறைகள் முக்கியமான வாடிக்கையாளர்கள் ஆவார்கள். தோல் பொருட்கள் உற்பத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அனைத்து தொழிலாளர்களும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்தவர்கள். மாநிலம் முழுவதும் பரவியுள்ள பல்வேறு விற்பனை நிலையங்கள் மூலமாக காலணி பொருட்களை வாரியம் விற்பனை செய்து வருகிறது.

### (இ) உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்

வாரியம் நடைமுறைப்படுத்தி வரும் தொழில்களில் சோப்புத் தொழில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 38 சோப்பு அலகுகள் இயங்கி வருகின்றன. வாரியம் குளியல் சோப்புகள், சலவை சோப்புகள், டிடெர்ஜென்ட் பவுடர்கள் ஆகியவைகளை உற்பத்தி செய்து வருகிறது. இந்தத் தரமான பொருட்கள் வெளிச் சந்தையில் உள்ள சோப்பு வகைகளை விட விலை மலிவாகவும், பொது மக்களால் விரும்பி வாங்கக் கூடியதாகவும் உள்ளன. வாரியம் தனது உற்பத்தியில் புதிய பொருட்களை அளிக்க வேண்டி மூலிகை மூலப் பொருட்களைக்கொண்டு



2003 மே 7]

உற்பத்தி செய்யப்பட்ட ஷாம்புவினை புதியதாக விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இதனுடன் வாரியத்தால் அறிமுகப்படுத்தப் பட்ட பாத்திரம் துலக்கும் சோப்புக் கட்டி சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் சோப்புத் தொழில், வணிக ரீதியாக முன்னேற்றம் அடைந்துள்ளது. 2002 ஆம் ஆண்டு ஜுலை திங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் சோப்பு வகைகளை விற்பனை செய்யும் ஒரு திட்டத்தினை அறிமுகம் செய்துவைத்துள்ளார்கள். இதன் மூலம் வாரிய சோப்புக்களுக்கான தேவை மிகவும் அதிகரித்து 2002-2003 ஆம் ஆண்டின் உற்பத்தி இருமடங்காக அதிகரித்துள்ளது. கடந்த 2001-2002 ஆம் ஆண்டு ரூ.207.19 இலட்சமாக இருந்த சோப்பு உற்பத்தி 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.502.42 இலட்சம் அளவிற்கு உயர்ந்துள்ளது. வாரியம் அண்மையில் ஹெர்பல் கை கழுவும் திரவம், எழில் ஷாம்பூ மற்றும் சுகப்பிரியா வலி நிவாரணத் தைலம் ஆகியவைகளை பொது மக்களின் தேவைக்கேற்ப சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. வாரியம் பொதுமக்களைக் கவரும் வகையில் கண்கவரும் மேலுறைகளில் சோப்புகளை உறையிலிட்டு விற்பனை செய்ய உத்தேசித்துள்ளது.

### (ஈ) தேனீ வளர்ப்பு

தேனீ வளர்ப்பும் வாரியத்தின் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். "கதர் வாரியத் தேன்" பொது மக்களிடையே நல்ல நம்பிக்கையையும், ஆதரவையும் பெற்றுள்ளது. வாரியத்தினால் கொள்முதல் மற்றும் உற்பத்தி செய்யப்படும் தேனானது மத்திய பரிசோதனைக் கூடத்தில் வெவ்வேறு வகையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இதனால் அவற்றின் தரம் உறுதிப்படுத்தப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அம்சி என்ற இடத்தில் இயங்கும் வாரியத்தின் தேன் பதப்படுத்தும் அலகின் மூலம் "ஏ" கிரேடு தேன் உற்பத்தி செய்யப்படுகிறது. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் அரசு மலை சாதியினருக்கு இலவசமாக தேன் பெட்டிகளை வழங்குவதற்கு நிதியுதவி வழங்கி வருகிறது. கூட்டுறவு நியாய விலைக் கடைகளிலும் தேன் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதன் மூலம் தேனுக்கான தேவை கணிசமான அளவில் உயர்ந்து, அதனால் தேனின் உற்பத்தியும்

அதிகரித்துள்ளது. 2001-2002ஆம் ஆண்டில் ரூ.20.10 இலட்சமாக இருந்த தேன் கொள்முதல் 2002-2003ஆம் ஆண்டில் ரூ.38.99 இலட்சமாக உயர்ந்துள்ளது. 2003-2004ஆம் ஆண்டில் ரூ.56.40 இலட்சம் மதிப்புள்ள 120 மெட்ரிக் டன் தேனை கொள்முதல் செய்ய வாரியம் உத்தேசித்துள்ளது. வெளிச் சந்தை விற்பனைக்கு அனுப்பப்படும் தேன் இதுவரை கண்ணாடி பாட்டில்களில் நிரப்பப்பட்டு வந்தது. இதுபோன்ற பொருட்கள் வெளிச் சந்தையில் ஆடம்பரமான பிளாஸ்டிக் பாட்டில்களிலும் கிடைப்பதினால் வாரியமும் அதுபோன்று பிளாஸ்டிக் பாட்டில்களில் தேனை நிரப்பி, விற்பனைக்கு அறிமுகப்படுத்தி உள்ளது. இந்த மாற்றத்தினால் கதர் வாரியத்தின் தேனுக்கான தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**(உ) கைமுறை காகிதம்**

கைமுறை காகிதத் தொழில் வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடித் திட்டமாக விளங்குவதற்கு காரணம் அனைத்து பணிகளும் கையினால் செய்யப்படுவதாகும். இத்தொழிலின் மூலம், முக்கியமாக காகித வகைகள், கோப்பு அட்டைகள், காகித உறைகள், காகிதப் பைகள் மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி ஊதியம் வழங்கப்படுகிறது. தென்னக இரயில்வே, அரசு அலுவலகங்கள், மத்திய அரசு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்கள் இக்காகிதப் பொருட்களை வாங்கி வரும் வாடிக்கையாளர்களில் முக்கியமானவர் ஆவர். ஆண்டு முழுவதும் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளித்திடும்பொருட்டு வாரியம் அனைத்து தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

**(ஊ) மண்பாண்டம்**

மாநிலத்தில் மண்பாண்டத் தொழில் தொன்றுதொட்டு செயல்படுத்தப்பட்டு வரும் ஒன்றாகும். வாரியத்தின்கீழ் நான்கு மண்பாண்ட அலகுகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வலகுகளின் மூலம் மெருகேற்றப்பட்ட சாதனங்கள் மற்றும் மண்பாண்டப் பொருட்கள் தயாரிக்கப்பட்டு நல்ல ஆதரவுடன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள அனைத்து கதர் அங்காடிகளிலும் பீங்கான் மற்றும் அழகு மண்பாண்ட பொம்மைகள் விற்பனை செய்யப்படுகின்றன.





**3. வணிகம்**

கதர் வாரியம் உற்பத்தி செய்யும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் மாநிலம் முழுவதும் அமைந்துள்ள கதர் அங்காடிகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்றைய தேதியில் வாரியத்தின்கீழ் இயங்கும் 172 கதர் அங்காடிகள், 10 கிராம சில்பா அலகுகள் மற்றும் ஒரு தோல் பொருட்கள் விற்பனை நிலையம் மூலமாக இப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. கதர் வாரிய உற்பத்திப் பொருட்களை பொதுமக்களிடையே புகழடையச் செய்திட வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இதற்கென வாரியம் இணைய தளம் www.khadikraft.com ஒன்றை துவக்கியுள்ளது. விற்பனையை ஊக்குவிக்கும் பொருட்டு விற்பனைப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வாரியம் சென்னை உற்பத்தித் திறன் குழுவின் மூலமாகப் பயிற்சி அளித்துள்ளது. இத்துடன் வாரிய உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதுடன், சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் பொருட்களையும் விற்றபின் தொகை வழங்கும் முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேலும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாகத் தயாரிக்கப்படும் பொருட்களும் கதர் அங்காடிகள் மூலமாக வியாபாரக் கழிவு வழங்கும் முறையில் விற்பனை செய்யப்படுவதால், இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயனடைந்து வருகின்றன.

**4. நவினப்படுத்துதல்**

தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இந்தக் காலத்தில் அண்மைக்கால தொழில்நுட்ப முன்னேற்றத்தினை இவ்வாரியம் பின்பற்றி இருப்புக் கணக்குகளை கணினியில் அறிமுகப்படுத்தி பகுத்தாய்வு செய்து வருகிறது. ஒருங்கிணைந்த தேசிய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு வழங்கிய ரூ.1.50 இலட்சம் மானியத்தின் மூலம் குறளகத்தில் உள்ள கதரங்காடி கணினிமயமாக்கப்பட்டுள்ளது. விற்பனை, இருப்பு மற்றும் இதர விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதனால் வாரியத்தின் இருப்பு மற்றும் விற்பனை நிலைமைகள் தவறாமல் கண்காணிக்கபட்டு வருகின்றன. அது மட்டுமில்லாமல், 15 மாவட்டங்களில் உள்ள உதவி இயக்குநர்களுக்கு கணினி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக தகவல் முறைகள் மற்றும் பல்வேறு

புள்ளி விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதால், வாரிய அளவில் தேவைப்படும் விவரங்கள் துரிதமாகவும், துல்லியமாகவும் பெறுவதற்கு ஏதுவாகிறது. 2003-2004ஆம் ஆண்டு கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு நிதியுதவியுடன் மாநகராட்சிப் பகுதிகளிலுள்ள முக்கிய கதர் அங்காடிகளை கணினிமயமாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மும்பை கதர் கிராமத் தொழில்கள் ஆணைக் குழு நிதியுதவியுடன் ரூ.3.17 இலட்சம் செலவில் கோயம்புத்தூர் கதர் அங்காடி புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 5. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இன மக்களுக்கு பல்வேறு தொழில்கள், குறிப்பாக தோல் மற்றும் தேனீ வளர்ப்புத் தொழில்களில் வேலை வாய்ப்பினை இவ்வாரியம் உருவாக்கித் தருகிறது. வாரியம் தனது சொந்த நிதியிலிருந்தும், அரசு வழங்கும் குறிப்பிட்ட திட்டங்களின் கீழ் வழங்கும் நிதியினைக்கொண்டும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. மூங்கில் மற்றும் பிரம்பு பொருட்கள் உற்பத்தி, தச்சு மற்றும் கருமாரத் தொழில் உற்பத்தி மற்றும் தேனீ வளர்ப்பு ஆகியவை இத்திட்டத்தின்கீழ் அடங்கும். ஆதிதிராவிடர் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, தோல், பிரம்பு, மூங்கில், தச்சு மற்றும் கருமார் போன்ற பல்வேறு தொழில்களில் சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை 37,317 ஆதிதிராவிட மக்கள் பயனடைந்துள்ளார்கள். ஒருங்கிணைந்த பழங்குடியின மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தேனீ வளர்ப்புத் தொழில் மூலம் பழங்குடியின குடும்பத்தினர் பயன் அடைகிறார்கள். இதுவரை வாரியம் 8,397 பழங்குடியின பயனாளிகளுக்கு உதவியுள்ளது.

### 6. விளிம்புத் தொகை திட்டம்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அளிக்கப்பட்ட மானியத்திலிருந்து ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் "விளிம்புத் தொகை திட்டத்தைச்" செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்தின்கீழ் தொழில் முனைவோருக்கு கிராமப்புறங்களில் தொழில் தொடங்க திட்ட மதிப்பீட்டுத் தொகையில் அதிகபட்சமாக 30 விழுக்காடு வரை மானியமாக வழங்கப்படுகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையம்





116 கிராமத் தொழில்களை இந்த திட்டத்தின்கீழ் தகுதியுள்ளதாகத் தெரிவு செய்துள்ளது. இதுவரை ரூ.224.18 இலட்சம் விளிம்புத் தொகையாக 451 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பயனாளிகள் அனைவரும் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர்கள்.

### 7. வாரியத்தின் நிதி நிலை

வாரியத்தின் நிதி ஆதாரம் இரண்டு பிரதான தலைப்பின்கீழ் வரப்பெறுகிறது. அவை அரசிடம் இருந்து பெறப்படும் மானியம் மற்றும் துறை வரவினம் ஆகியவையாகும். வாரிய துறை வரவினமானது கதர் மற்றும் கிராமப் பொருள் விற்பனை, கட்டடங்களிலிருந்து பெறப்படும் வாடகை மற்றும் இதர இனங்களை உள்ளடக்கியதாகும். துறை வரவினங்கள் வாரிய அலகுகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்திக்காகத் தேவைப்படும் மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்யவும், அதற்கான கூலி வழங்கி உற்பத்தி சம்பந்தப்பட்ட இதர முக்கியமான செலவுகளை மேற்கொள்ளவும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழக அரசிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மானியம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மானியமானது நிகர செலவு மானியம், தள்ளுபடி மானியம் மற்றும் இதர குறிப்பிட்ட பகுதி-2 திட்டங்களுக்காக வழங்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டுக்கு கதர் வாரியத்திற்கு மானியமாக அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்துள்ளது:

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | விவரம் | தொகை |
|---|---|---|
| 1 | நிகர செலவு மான்யம் | 2400.00 |
| 2 | தள்ளுபடி-கதர் வாரியம்<br>சான்றளிக்கப்பட்ட நிறுவனங்கள் | 200.00<br>500.00 |
| 3 | தணிக்கை கட்டணம் | 239.00 |
| 4 | இதர இனங்கள் | 10.04 |
| | மொத்தம் | 3349.04 |

[2003 மே 7

கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணைக் குழுவைப் பொறுத்தவரை தள்ளுபடி வழங்குவதுடன் கிராமப்புற வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் விளிம்புத் தொகை வழங்கப்படும் திட்டத்தை செயல்படுத்த நிதி உதவி செய்து வருகிறது. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் வாரியம் மேற்கொண்டு வருகிறது. தமிழக அரசானது வாரியத்தின் விற்பனையை அதிகரிக்கவும், அதனால் வாரியச் செயல்பாடுகளை முன்னேற்றமடையச் செய்யவும் அவ்வப்போது போதுமான நிதி மற்றும் இதர உதவிகளை அளித்து வருகிறது.

## தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்

1. தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான வளங்களைக் கொண்டு, பனைத் தொழில் வளர்ச்சிக்கும் அவைகளின் மேம்பாட்டிற்கும் மையமாக அமைந்துள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாடு, பனைத் தொழில் வளர்ச்சியில் முதன்மையாக உள்ளது. இந்தியாவிலுள்ள சுமார் 8.59 கோடி பனை மரங்களில் தமிழ்நாட்டில் 5.20 கோடி பனை மரங்கள் உள்ளன. பனை மரம் தமிழ்நாட்டின் "மாநில மரம்" ஆகும்.

2. மாநிலத்தில் பனைத் தொழில் வளர்ச்சிக்காக இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முதலாக "தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்" என்ற பெயரில் ஒரு தனி வாரியம் தமிழ்நாடு சட்டம் (15) 1994-ன்படி அமைக்கப்பட்டு 6-1-1995 முதல் சென்னையை தலைமையிடமாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

3. பனைப் பொருட்களுக்குச் சந்தையில் போட்டி ஏற்படுத்துவது தொடர்பாக வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் பனைப் பொருட்கள் உற்பத்தி செய்தல், அதற்குத் தேவையான தொழில் நுட்பங்கள் அளித்தல், பனைப் பொருள் வளர்ச்சிக்குத் தேவையான ஆராய்ச்சிகள் செய்து பனைப் பொருட்களை முழுமையாகப் பயன்படுத்தி, பனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள பனைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் போன்றவை இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோள்களாகும்.



2003 மே 7]

4. தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம், நேரடியான வியாபாரத்தில் ஈடுபடவில்லை. 996 ஆரம்ப பனை வெல்ல கூட்டுறவுச் சங்கங்களும் (பனை ஓலை தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) 8 மாவட்ட பனை வெல்ல விற்பனை கூட்டுறவுச் சம்மேளனங்கள் மற்றும் ஒரு தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியவை நேரடியாக பனைப் பொருட்கள் உற்பத்தி மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த அமைப்புகள் மூலமாகவும், மாநிலமெங்கும் உள்ள கதர் அங்காடிகள் மற்றும் விற்பனை அங்காடிகள் மூலமாகவும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

5. தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியத்திற்குத் தனியாக வரவு செலவுத் திட்டம் இல்லை. இவ்வாரியத்தின் செலவினம் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய வரவு செலவுத் திட்டத்தில் அடங்குகிறது.

6. இவ்வாரியத்தின் நலத் திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சரின் 15 அம்சத் திட்டங்களில்

(அ) தொடர் பசுமைப் புரட்சி,

(ஆ) உணவுப் பாதுகாப்பு,

(இ) வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும்

(ஈ) சூழல் பாதுகாப்பு

ஆகிய திட்டங்களை உள்ளடக்கிய திட்டங்களாக உள்ளன.

7. பனைத் தொழிலில் தற்போது பல்வேறு வகையான பனைவகை உண்பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு, பாம் சாக்லட் வகைகள், பதப்படுத்திய நுங்கு, பனம்பழ ஜாம் வகைகள், மற்றும் உண்ணாப் பொருட்களான பனை ஓலைப்பொருட்கள், பனைநார் பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்து, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

### (அ) உற்பத்தி

2003-2004 ஆம் ஆண்டிற்கு மாநில இணையம்/மாவட்ட சம்மேளனங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலகுகளுக்கு பனைப் பொருட்கள் உற்பத்திக் குறியீடாக ரூ.1230.00 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) விற்பனை**

பனைப் பொருட்களை விற்பனை செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2003-2004 ஆம் ஆண்டிற்கு ரூ. 1430.00 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்களை விற்பனை செய்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**(இ) வேலைவாய்ப்பு**

பனைத் தொழிலில் சுமார் ஆறு இலட்சம் கைவினைஞர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகின்றனர். பதநீர் இறக்குதல், பனை வெல்லம் தயாரித்தல், பனந்தும்பு அடித்தல், ஈச்சங்கூடைகள் முடைதல் ஆகிய பனைத் தொழில்களில் சுமார் 30,000 ஆதிதிராவிட இனத்தை சார்ந்த கைவினைஞர்கள் ஈடுபட்டுள்ளனர்.

## 8. பனந்தும்பு மற்றும் பனை ஓலைப் பொருட்கள் ஏற்றுமதி

பனந்தும்பு தமிழ்நாட்டிலிருந்து அமெரிக்கா, இங்கிலாந்து, பெல்ஜியம், பிலிப்பைன்ஸ், ஜப்பான், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் மற்றும் தூத்துக்குடியில் உள்ள ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் பனந்தும்பு ஏற்றுமதிப் பிரிவின் மூலம் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 100.00 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பினை ஏற்றுமதி செய்திடத் திட்டமிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் மணப்பாடு, திருவள்ளூர் மாவட்டத்தில் பழவேற்காடு, வேலூர் மாவட்டத்தில் அடுக்கம்பாறை, சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை ஆகிய பகுதிகளில் பெண் கைவினைஞர்களால் அழகிய பனை ஓலைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பொருட்கள் அமெரிக்கா, லண்டன், பிரான்சு, ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, கனடா, ஜப்பான் மற்றும் நெதர்லாந்து போன்ற அயல்நாடுகளுக்கு முகமைகள் மூலமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.



## 9. பனைத் தொழிலில் பயிற்சிகள்

கடலூரில் உள்ள தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மண்டல பனைப் பொருட்கள் பயிற்சி மையத்தின் மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்கு பனைத் தொழில் பயிற்சி மையத்தின் மூலம் கிராமப்புற கைவினைஞர்களுக்குப் பனைத் தொழில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பனை மரங்கள் மண் அரிப்பைத் தடுத்து இயற்கை வளத்தைப் பாதுகாக்கிறது. பனைப் பொருட்கள் தூய்மை கேடற்றவை மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்தவை ஆகும். எனவே, தொலைநோக்கு கண்ணோட்டத்துடன் பனை மரங்கள் வளர்த்து பாதுகாப்பது தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தவும், பனைத் தொழில் வளர்ச்சிக்கும், அதனடிப்படையில் கிராமப் புறத்திலுள்ள இலட்சக்கணக்கான பனைத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் மூலம் வகை செய்யப்படுகின்றன. கிராமப்புறங்களில் உள்ள பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுப்பதும், பனைத் தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கை மேற்கொள்வதும் தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் குறிக்கோளாகும். சிறிய அளவு மூலதனத்துடன் உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி சுற்றுப்புற சூழலுக்கு உகந்தவாறு நாள்தோறும் மக்கள் வாங்கிப் பயன்படுத்தும் மற்றும் விரைவில் விற்பனையாகும் பனைப் பொருட்களை உற்பத்தி செய்தும், அதன் மூலம் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் இத்திட்டங்கள் வகை செய்கின்றன.

### தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

1. பூம்புகார் என்ற பெரும் புகழுடன் அறியப்படும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கைவினைஞர்களுக்குச் சந்தை வாய்ப்பு உதவியினை ஏற்படுத்தித் தருவதையும், தமிழகத்தின் பாரம்பரியக் கலைகளை மேம்படுத்தி, பேணிக் காப்பதனையும் முக்கியக் குறிகோளாகக்கொண்டு அரசால் 1973 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மாநிலத்தில், கைவினைப் பொருட்கள் துறையின் தலைமையிடமாக இந்நிறுவனம் கடந்த 29 ஆண்டுகளாகத் திறமையுடன் செயலாற்றி வருகிறது.

## 2. தற்போதைய நடவடிக்கைகள்

இந்நிறுவனத்தின் தற்போதைய நடவடிக்கைகள் பின்வருவனவாகும்:

அ. விற்பனை

ஆ. உற்பத்தி

இ. சிறப்புக் கோயில் திட்டங்கள் நிறைவேற்றுதல்

மேலே கண்டுள்ள நடவடிக்கைகளில் 2002-2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### அ. விற்பனை

இந்நிறுவனம், தனது முக்கியக் குறிக்கோளான கைவினைஞர்களுக்கு சந்தை வாய்ப்பு, கீழே விவரிக்கப்பட்ட 16 பூம்புகார் விற்பனை நிலையங்கள் மூலமாகவும், நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடத்தும் கண்காட்சிகளில் விற்பனை செய்வதன் மூலமும் நிறைவேற்றி வருகிறது.

**தமிழ்நாட்டிலுள்ள விற்பனை நிலையங்கள்**

| | |
|---|---|
| 1 | பூம்புகார் விற்பனை நிலையம், 108, அண்ணா சாலை, சென்னை-600 002. |
| 2 | பூம்புகார் விற்பனை நிலையம், கலைமகள் இல்லம், சன்னதி தெரு, கன்னியாகுமரி-629 702. |
| 3 | பூம்புகார் விற்பனை நிலையம், கடற்கரை சாலை, மாமல்லபுரம்-603 104. |
| 4 | பூம்புகார் விற்பனை நிலையம், 874, பெரிய கடை வீதி, கோயம்புத்தூர்-641 001. |
| 5 | பூம்புகார் விற்பனை நிலையம், 48, காமிஸரி பஜார், வேலூர்-632 004. |
| 6 | பூம்புகார் விற்பனை நிலையம், சூப்பர் மார்க்கெட் வளாகம், கமர்சியல் ரோடு, ஊட்டி-643 001. |



| | |
|---|---|
| 7 | பூம்புகார் விற்பனை நிலையம், இரயில் நிலைய சாலை, தஞ்சாவூர்-613 001. |
| 8 | பூம்புகார் விற்பனை நிலையம், 7, கச்சேரி சாலை, ஈரோடு-638 001. |
| 9 | பூம்புகார் விற்பனை நிலையம், மேற்கு பொலிவார் சாலை, சிங்காரத்தோப்பு, திருச்சி-620 008. |
| 10 | பூம்புகார் விற்பனை நிலையம், 2, கோட்டை பிரதான சாலை, சேலம்-636 001. |
| 11 | பூம்புகார் விற்பனை நிலையம், முங்கம்மாள் சத்திர கட்டடங்கள், (இரயில்வே சந்திப்பு எதிரில்) 12 மேற்கு வெளி வீதி, மதுரை-625 001. |
| 12 | பூம்புகார் விற்பனை நிலையம், 139, நெல்லையப்பர் நெடுஞ்சாலை, திருநெல்வேலி-627 001. |

**வெளி மாநில விற்பனை நிலையங்கள்**

| | |
|---|---|
| 1 | பூம்புகார் விற்பனை நிலையம் 104/105, பிரிகேட் சாலை, பெங்களூர்-560 001. |
| 2 | பூம்புகார் விற்பனை நிலையம், சி-1, ஸ்டேட் எம்போரியா காம்ப்ளெக்ஸ், பாபா கரக் சிங் மார்க், இர்வின் சாலை, புதுடெல்லி-110 001. |
| 3 | பூம்புகார் விற்பனை நிலையம், கடை எண் 21-22, முதல் தளம், சிஐடி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், 2 காரியாஹாட் சாலை, கொல்கத்தா-700 068. |
| 4 | பூம்புகார் விற்பனை நிலையம், அண்ணா ஆர்கேட், 152, மறைமலையடிகள் சாலை, பாண்டிச்சேரி-605 001. |

[2003 மே 7

1973-1974 இல் ரூ.50.00 இலட்சத்திற்கு விற்பனையை ஆரம்பித்த இந்த நிறுவனம் படிப்படியாக வளர்ந்து, 2002-2003 இல் தனது விற்பனையை ரூ.1280.00 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

தனது தீவிர விற்பனைக் கோட்பாடுகளைத் தொடர்ந்து செயல்படுத்தியதாலும், கோயில் திட்டங்களைத் திறனுடன் நிறைவேற்றியதனாலும் 2002-2003 இல் இந்நிறுவனம் தனது விற்பனையை சென்ற ஆண்டு விற்பனையுடன் ஒப்பிடும்போது ரூ.100.00 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் விற்பனை பின்வருமாறு:—

| ஆண்டு | விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 1280.95 |
| 2000-2001 | 1370.65 |
| 2001-2002 | 1179.88 |
| 2002-2003 | 1280.00 |
| 2003-2004 | 1475.00 (திட்டமிடப்பட்டது) |

2002-2003 இல் இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனை ஊக்குவிக்கும் விதமாக அமைந்துள்ளது. மேலும் இந்நிறுவனம் முதன்முதலாக ரூ.1.00 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதி விற்பனை செய்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் ஏற்றுமதி விற்பனை பின்வருமாறு:—

| ஆண்டு | ஏற்றுமதி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 63.54 |
| 2000-2001 | 55.12 |
| 2001-2002 | 89.87 |
| 2002-2003 | 100.00 |
| 2003-2004 | 125.00 (திட்டமிடப்பட்டது) |



2003 மே 7]

**ஆ. உற்பத்தி**

நாட்டிலுள்ள கைவினைப் பொருட்கள் நிறுவனங்களிலேயே தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மட்டுமே கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு சொந்த உற்பத்தி நிலையங்களைக் கொண்டுள்ள ஒரே நிறுவனமாகும்:

| | |
|---|---|
| 1 | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம், நாச்சியார்கோவில், தஞ்சாவூர் மாவட்டம். |
| 2 | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம், எண் 52, வடக்குத் தெரு, சுவாமிமலை, தஞ்சாவூர் மாவட்டம். |
| 3 | பூம்புகார் பித்தளை கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம், தொழிற்பேட்டை, மதுரை. |
| 4 | பூம்புகார் சந்தன மரச் சிற்பங்கள் உற்பத்தி நிலையம், 54-55, சிட்கோ தொழிற்பேட்டை, கச்சராபாளையம் சாலை, கள்ளக்குறிச்சி. |
| 5 | பூம்புகார் கலைப் பொருட்கள் உற்பத்தி நிலையம், இரயில் நிலைய சாலை, தஞ்சாவூர். |
| 6 | பூம்புகார் கற்சிற்ப நிலையம், கடற்கரைச் சாலை, மாமல்லபுரம். |
| 7 | பூம்புகார் பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் உற்பத்தி நிலையம், வாகைக்குளம், மன்னார்கோயில் அஞ்சல், அம்பாசமுத்திரம் (வழி) திருநெல்வேலி மாவட்டம். |

மேற்கூறிய உற்பத்தி நிலையங்களில், தனித்திறம் மற்றும் செயல்திறம் வாய்ந்த கைவினைஞர்களை இந்நிறுவனம் ஈடுபடுத்தி பல்வேறு கலைப் பொருட்களைச் சிறந்த தரத்துடனும், வேலைப்பாடுகளுடனும் உற்பத்தி செய்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் இந்நிறுவனத்தின் உற்பத்திச் செயல்பாடுகள் வருமாறு:

[2003 மே 7

| வருடம் | உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1999-2000 | 235.50 |
| 2000-2001 | 263.21 |
| 2001-2002 | 203.58 |
| 2002-2003 | 184.00 |
| 2003-2004 | 222.00 (திட்டமிடப்பட்டது) |

**இ. பயிற்சி**

மேலே கண்ட உற்பத்தி நிலையங்கள் சிலவற்றில் உற்பத்தி செயல்பாடுகளைத் தவிர, கைத்திறக் கலைகளை அழியாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட கலைகளில், போதுமான எண்ணிகையில், கைவினைஞர்கள் எப்போதும் இருப்பதை உறுதி செய்யும் வகையில், கைவினைஞர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. தற்சமயும், சுவாமிமலையில் உலோக சிற்ப உற்பத்தியில் 3 ஆண்டு சான்றிதழ் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய பயிற்சிக்கு கீழ்க்கண்டபடி பயிற்சி உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது.

| வருடம் | ரூபாய் (மாதம் ஒன்றிற்கு) |
|---|---|
| முதல் வருடம் | 500.00 |
| இரண்டாம் வருடம் | 750.00 |
| மூன்றாம் வருடம் | 1000.00 |

பயிற்சித் தொகை வழங்குவதற்கான நிதி ஆதாரம், ஒரு பகுதி தமிழக அரசின் நிதி உதவியிலும், மீதம் இந்நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் பெறப்படுகிறது.

**ஈ. சிறப்புத் திட்டங்கள்**

உற்பத்திச் செயல்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துகின்ற வகையில் இந்நிறுவனம், தனது அனுபவம், தனித்தன்மை மற்றும் கட்டமைப்பு ஆகியவற்றைக்கொண்டு, அதிக வாய்ப்புள்ள சிறப்புத் திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் முனைந்து செயல்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள அனைத்து கைவினைப் பொருட்கள் நிறுவனங்களிலேயே, தமிழ்நாடு



2003 மே 7]

கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் ஒன்று மட்டுமே, இம்மாதிரியான சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான தனித் தன்மை பெற்றுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இந்நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள பல சிறப்புத் திட்டப் பணிகளில் கோயில் தேர்கள், மரம், வெள்ளி, தங்கத்தினாலான இரதங்கள், கொடிமரம், வாகனங்கள், பித்தளை அலங்கார வரிசைக் கிராதிகள், பித்தளை உண்டியல்கள், வெள்ளித் தகட்டு வேலை ஆகியவை அடங்கும்.

இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை 2001-2002 ஆம் ஆண்டில் ஆய்வு செய்யும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோயில் சிறப்புப் பணிகளை நிறைவேற்றுவதில் இந்நிறுவனத்திற்கு உள்ள தனித்தன்மையை வெகுவாகப் பாராட்டி, இந்து அறநிலையத் துறையின்கீழ் உள்ள திருக்கோயில்களில் செய்யப்பட உள்ள அனைத்து சிறப்புப் பணிகளும் பூம்புகார் வசம் மட்டுமே ஒப்படைக்கப்பட வேண்டும் என ஆணை பிறப்பித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் இந்த ஆணையின் அடிப்படையில் இந்நிறுவனத்திற்கு சுமார் ரூ.75.00 இலட்சங்களுக்கான கோயில் சிறப்புப் பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அதிகப்படியான இதுபோன்ற பணிகளுக்கான ஆணைகள் வழங்கப்படும் நிலையில் உள்ளன.

2001-2002 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் ரூ.45.00 இலட்சங்கள் மதிப்பிற்கு மட்டுமே சிறப்புக் கோயில் திட்டங்களை நிறைவேற்றியது. ஆனால், 2002-2003 ஆம் ஆண்டில், இதில் இந்நிறுவனம் தனிக் கவனம் செலுத்தியதால், ரூ.112.00 இலட்சம் மதிப்பிற்கு சிறப்புத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட சில முக்கியத் திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | சிறப்புத் திட்டத்தின் பெயர் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | ஸ்ரீசைலம் ஸ்ரீபிரம்மாரம்ப மல்லிகார்சுன ஸ்வாமி கோயிலுக்கு அலங்கார பித்தளை வரிசை கிராதிகள் செய்து வழங்கியது | 9.45 |

| வ.எண் | சிறப்புத் திட்டத்தின் பெயர் | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2 | பன்னாரி ஸ்ரீ மாரி அம்மன் திருக்கோயிலுக்கு தங்க இரதப் பணியில் மரவேலை செய்து வழங்கியது | 2.50 |
| 3. | ஸ்ரீ ஸ்ரீநிவாச நிகேதன் டிரஸ்ட், சென்னைக்கு தங்க இரதம் செய்யும் பணியில் மர மற்றும் தாமிர வேலை செய்து வழங்கியது | 7.80 |
| 4 | சிவன்மலை, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு 11'3" உயரத்தில் மரத்தேர் செய்து வழங்கியது | 17.76 |
| 5 | ஹைதராபாத் ஸ்ரீ பெத்தம்மா கோயிலுக்கு பித்தளை அலங்கார வரிசைக் கிராதிகள் செய்து வழங்கியது | 10.90 |
| 6 | ஸ்ரீ காளஹஸ்தியில் உள்ள ஸ்ரீ காளஹஸ்தீஸ்வர சுவாமிவாரி கோவிலுக்கு பித்தளை அலங்கார வரிசைக் கிராதிகள் செய்து வழங்கியது (63 நாயன்மார்கள்) | 12.46 |
| 7 | திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரி அம்மன் திருக்கோயிலுக்கு மரத்தேர் பழுதுபார்த்து வழங்கியது | 2.49 |
| 8 | மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு தங்க இரதப் பணியில் தங்க ரேக் ஒட்டும் பணி நிறைவேற்றியது | 3.42 |
| 9 | பெரியபாளையம் அருள்மிகு பவானி அம்மன் திருக்கோயிலுக்கு 8 மரக் கதவுகள் செய்து வழங்கியது | 9.98 |

2002-2003 ஆம் ஆண்டு சிறப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதின் மதிப்பினை அதிகரித்ததோடு அல்லாமல், ரூ.120.00 இலட்சங்கள் மதிப்பிற்கு, பல்வேறு திட்டங்களுக்கான ஆணைகளை இந்நிறுவனம் கைவசம் வைத்துள்ளது. இவை 2003-2004-ல் முடிக்கப்பட்டுவிடும்.



தற்போது கைவசம் உள்ள ஆணைகளில், தாரமங்கலம், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு 18' உயரமுள்ள மரத்தேரும், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் உள்ள வெள்ளி அம்பல நடராசர் சன்னதிக்கு வெள்ளிக் கவச வேலையும், மயிலாப்பூரிலுள்ள அருள்மிகு முண்டகக்கண்ணி அம்மன் திருக்கோயிலில் உள்ள அம்மன் சன்னதி கதவிற்கு வெள்ளித் தகடு வேயப்படும் பணியும், பெங்களூரில் உள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர் கோயில் டிரஸ்ட்டிற்கு வெள்ளித் தேரும், ஸ்ரீகாளஹஸ்தியில் உள்ள ஸ்ரீகாளஹஸ்தீஸ்வர சுவாமி திருக்கோயில் அம்மன் சன்னதிக்கு வெள்ளித் தகட்டு வேலை போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

மேற்கூறியவை தவிர, இந்நிறுவனம், சிறப்புத் திட்டங்களுக்கு மேலும் அதிக ஆணைகளைப் பெறத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டு அதற்கான பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

### 3. பூம்புகார் விருது

கைவினைஞர்களிடையே உள்ள அதிகப்படியான படைக்கும் திறன் மற்றும் சிறந்த செயல்திறனை வெளிக் கொணர இந்நிறுவனம், ஆண்டுதோறும் பூம்புகார் விருது போட்டியினை நடத்திவருகிறது. இத்திட்டத்தின்கீழ், கலை மற்றும் கவின் பொருட்கள் களத்தினைச் சார்ந்த மேம்பட்டவர்கள் அடங்கிய நீதிபதிகளின் குழுவினால் ஐந்து மிகச் சிறந்த கலைப் பொருட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெற்றி பெற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் ரொக்கத் தொகையாக ரூ.5000/-, 40 கிராம் எடையுள்ள ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவை பரிசாக வழங்கப்படுகின்றது. இத்துணைச் சிறப்பு வாய்ந்த கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில், அரசு பூம்புகார் விருதினை, மாநில விருதாக அங்கீகரித்துள்ளதன் வாயிலாக, பரிசு பெற்றவர்கள், மைய அரசால் வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையான ரூ.1000/-ஐ சம்பந்தப்பட்ட நபர்கள் 60 வயதை எட்டியவுடன் பெறத் தகுதி உடையவர் ஆகிறார்கள்.

### 4. பங்கு மூலதன அமைப்பு

இந்த நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.4.00 கோடி.

31-3-2003 ஆம் நாளில் இந்நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட மூலதனக் கட்டமைப்பு பின் வருமாறு:

| வ. எண் | விபரம் | தொகை (ரூ. இலட்சத்தில்). |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 176.693 |
| 2. | மத்திய அரசு | 116.000 |
| 3. | தனியார் கைவினைஞர்கள் மற்றும் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 0.704 |
| | **மொத்தம்** | **293.397** |

**5. மத்திய அரசு நிதி உதவி**

2002-2003 ஆம் ஆண்டில் மத்திய அரசு ரூ.2.40 இலட்சங்களை கீழ்க்கண்ட திட்டத்திற்கு அனுமதித்து உள்ளது:

| திட்டத்தின் பெயர் | ஏற்கப்பட்ட தொகை | இந்திய அரசின் பங்கு | | நிறுவன பங்கு | |
|---|---|---|---|---|---|
| | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| ஹைதராபாத்/ சண்டிகார் ஆகிய இரண்டு இடங்களில் கண்காட்சிகள் | ரூ. 3.20 இலட்சம் | ரூ. 2.40 இலட்சம் | 75 | ரூ 0.80 இலட்சம் | 25 |

**6. 15 அம்சத் திட்டத்தினைச் செயல்படுத்துதல்**

அரசின் 15 அம்சத் திட்டத்தினை செயல்படுத்துவதன் ஒரு பகுதியாக இந்நிறுவனம் கைவினைஞர்களிடம் இருந்து கலைப் பொருட்கள் கொள்முதல் செய்வதில் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த கைவினைஞர்களுக்கும் மற்றும் மகளிருக்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. அதேபோன்று இந்நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சித் திட்டங்களிலும் தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது.



**7. 2002-2003 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள்**

**(அ) கைத்திறக் கலைகளுக்கான பயிற்சி மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல்**

இந்நிறுவனம், தனது வளர்ச்சி நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும் மற்றும் கைவினைஞர்களின் பாரம்பரியத் தொழிற்திறனை மேம்படுத்துவதற்கான குறிக்கோளினை நிறைவேற்றவும் தமிழகத்தின் முக்கிய கலைகளான பித்தளை மற்றும் வெண்கலப் பொருட்கள் மற்றும் கற்சிற்பங்கள் உற்பத்தியில் இரண்டு கருத்தரங்குகளை நடத்தியுள்ளது. இந்தக் கருத்தரங்குகள் மூலம் 30 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர். இதைத் தவிர, பெங்களூர் மண்டல வடிவமைப்பு மற்றும் தொழில் நுட்ப மேம்பாட்டு மையத்தின் பங்கேற்புடன் மரசிற்பக் கலையில் ஒரு வடிவமைப்பு மற்றும் மேம்பட்ட பயிற்சி மற்றும் கருத்தரங்கும் கள்ளக்குறிச்சியில் நடத்தப்பட்டது. இதன் மூலம் சுமார் 15 கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர்.

**(ஆ) பெண்களுக்கான சிறப்பு கைவினைப் பொருட்கள் கண்காட்சி நடத்துதல்**

சில நிர்வாகக் காரணங்களினால் சென்னையில் பெண்களுக்கென நடத்தப்படவிருந்த சிறப்புக் கைவினைப் பொருள் கண்காட்சி 2002-2003 நிதியாண்டு இறுதிக்குள் நடத்த இயலவில்லை. ஆகவே, அடுத்த நிதி ஆண்டில் இக்கண்காட்சியை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

**(இ)** செலவினங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் அரசு ஆணை நிலை எண் 158, நிதி (பொதுத் துறை நிறுவனங்கள்) துறை, நாள் 13-5-2002-இல் காணும் அறிவுரைகளின்படி, இந்நிறுவனம், தன்னார்வமாக பணியிலிருந்து ஓய்வுபெறும் திட்டத்தைச் செயலாக்கியது. இதன் மூலம் மொத்தம் இருந்த 258 ஊழியர்களில் பல பதவிகளில் இருந்து 45 ஊழியர்களை இத்திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் 31-12-2002 அன்று தன்னார்வப் பணி ஓய்வு அளித்துள்ளது. இந்த நடவடிக்கைகளினால் இந்நிறுவனம் சம்பளம் மற்றும் இதர படிகள் தலைப்பின்கீழ் ஆண்டிற்கு ரூ.50.00 இலட்சம் சேமிக்கும்.

[2003 மே 7

**(ஈ) மழை நீர் சேகரிப்பு**

நிறுவனத்திற்குச் சொந்தமான கட்டடங்கள் உள்ள இடங்களில் மழைநீர் சேகரிக்க வேண்டிய கட்டமைப்பு ஏற்படுத்தும் திட்டத்தை அரசின் அறிவுரைகளுக்கேற்ப இந்நிறுவனம் செயல்படுத்தியது. இந்நிலையத்திற்கு தமிழ்நாட்டில் 13 இடங்களில் சொந்த கட்டடங்கள் உள்ளன. அவற்றில் சென்னை, திருநெல்வேலி, திருச்சி மற்றும் சேலம் ஆகிய இடங்களிலுள்ள சொந்தக் கட்டடங்களில் உள்ளூர் குடிநீர் வாரிய அலுவலகங்களின் வழிகாட்டுதலின்படி மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் விரைவில் இதற்கான ஏற்பாடு செய்யப்படும்.



2003 மே 7]

## இணைப்பு III

**(137 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)**

## கோரிக்கை எண் 42-சிறுதொழில்கள் துறை

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறு மற்றும் குறுதொழில் துறைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நமது நாட்டில் 34 இலட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் உள்ளன. இவற்றின் மூலம் 192 இலட்சம் பேருக்குமேல் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. நமது நாட்டின் மொத்த உற்பத்தியில் 40 விழுக்காடு சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் கிடைக்கிறது. மேலும், நமது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 35 விழுக்காடு சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் செய்யப்படுகிறது. சிறுதொழில் நிறுவனங்கள் மூலமான நிலையான முதலீடு ரூ.84,329 கோடியாகும். தமிழ்நாட்டில், இதுவரை, 4.41 இலட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றின் முதலீடு ரூ.13,000 கோடியாகும். சுமார் 32.15 இலட்சம் பேருக்கு இவை வேலைவாய்ப்பு அளித்து வருகின்றன.

மைய அரசின் வழிகாட்டுதலின்படி, தளவாடங்கள் மற்றும் இயந்திரங்கள் வகையிலான முதலீட்டின் மதிப்பு ரூ.100 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், அத்தொழில் சிறுதொழில் எனப்படும். அதே போல் ரூ.25 இலட்சம் வரை தளவாடங்கள் மற்றும் இயந்திரங்களின் மதிப்பு இருப்பின் அது குறுதொழில் என வகைப்படுத்தப்படுகிறது. சிறுதொழில்களைப் பாதுகாக்கும் பொருட்டு உற்பத்தி செய்யும் பொருட்களில் 674 இனங்களை சிறுதொழில் நிறுவனங்கள் மட்டுமே உற்பத்தி செய்வதற்கென மைய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், அரசு செய்யும் கொள்முதல்களைப் பொறுத்தவரையில் 358 இனங்கள் பிரத்தியேகமாக சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்கப்பட வேண்டுமென்று விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறுதொழில்கள் ஊக்குவிக்கப்பட்டால்தான் நமது மாநிலத்தின் தொழில் துறை வளர்ச்சியடையும், உற்பத்தி பெருகும்

என தொலைநோக்குப் பார்வையுடன் **மாண்புமிகு முதலமைச்சர்** தலைமையில் இந்த அரசு பல்வேறு கொள்கை முடிவுகளை வகுத்துள்ளது. இதனால், மாநிலத்தில் தொழில் துறை குறிப்பிடத்தக்க அளவு வளர்ச்சியடைந்துள்ளது.

இந்த அரசால் மேற்கொள்ளப்பட்ட சில குறிப்பிடத்தக்க கொள்கை முடிவுகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன:-

### சிறுதொழில்களுக்கு அரசு கொள்முதலில் விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமையை மீண்டும் வழங்குதல்

சிறுதொழில்களுக்கு பல ஆண்டுகளாக அளிக்கப்பட்டு வந்த விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமைகள் அரசு ஆணை நிலை 75, நிதித் துறை நாள் 19-2-1997 வாயிலாக விலக்கிக் கொள்ளப்பட்டதன் காரணமாக ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பினால், முந்தைய காலங்களில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி வெகுவாகக் குறைந்தது. அரசு இவ்வாணையை விலக்கிக்கொண்டு 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டத்தில் திருத்தம் செய்து, சிறுதொழில் நிறுவனங்களுக்கு விலை மற்றும் கொள்முதல் முன்னுரிமையை கீழ்க்கண்டவாறு மீண்டும் வழங்கியது.

**(i) விலை முன்னுரிமை**

தமிழ் நாட்டில் உள்ள சிறுதொழில் அலகுகளுக்கு 1-12-2001 முதல், அரசு கொள்முதல்களில் 15 விழுக்காடு விலை முன்னுரிமை வழங்கப்படுகிறது.

**(ii) கொள்முதல் முன்னுரிமை**

குறிப்பிட்ட இனங்கள் சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்கென தனியாக ஒதுக்கீடு செய்துள்ள இந்திய அரசின் கொள்கை இம்மாநிலத்திலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து மட்டுமே வாங்கப்படவேண்டிய 358 இனங்கள் 1-12-2001 முதல் திறந்த ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் வாங்கப்பட வேண்டும் என அரசு ஆணையிட்டுள்ளது.



### தேயிலைப் பிரச்சினை

நாடு முழுவதும் பசுந்தேயிலையின் விலை வீழ்ச்சி அடைந்தது. நீலகிரி மாவட்டத்தில், பசுந்தேயிலையின் விலை வீழ்ச்சியால் தேயிலை பயிரிடும் சிறு விவசாயிகளிடையே ஏற்பட்ட இடர்பாடுகளை நீக்குவதற்காக தமிழ்நாடு அரசு "ஊட்டி டீ" என்ற பெயரில் பொது விநியோக மையங்கள் மூலம் தேயிலைத் தூள் விற்பனையை அறிமுகப்படுத்தியது. தொடக்கத்தில் மாதம் ஒன்றுக்கு 200 மெட்ரிக் டன் என்ற அளவில் விற்கப்பட்ட தேயிலைத் தூள், தற்போது மாதம் ஒன்றுக்கு 280 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது. இதன் மூலம் சிறுதேயிலை பயிரிடுவோரின் பசுந்தேயிலைக்கு நியாயமான விலை கிடைக்கிறது.

மேலும் தேயிலை ஏலத்தை வெளிப்படையான முறையில் நடத்துவதற்கு, தமிழ்நாடு அரசின் ஒப்புதலுடன், கூட்டுறவு அமைப்பின்கீழ் "டீ சேர்வ்" என்ற தேயிலை ஏல மையம் குன்னூரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சங்கம், 28-8-2002 அன்று பதிவு செய்யப்பட்டு அது வியாபாரத்தைத் துவக்க, 31-1-2003 அன்று தேயிலை வாரியம் உரிமம் வழங்கியுள்ளது. தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி விரைவில் ஏலம் நடத்த முனைப்புடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### இணையதளம் மூலம் தற்காலிக சிறுதொழில் சான்றிதழ் வழங்கல்

புதிதாக சிறுதொழில் துவங்க, மாவட்டத் தொழில் மையங்கள் மூலம் சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். இதனைக் கொண்டு வங்கிக் கடன், சட்டபூர்வ அனுமதி மற்றும் மின் இணைப்பு ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் பெறலாம். தற்காலிகச் சான்றிதழை எளிதில் விரைந்து பெற ஏதுவாக, தற்போது ரூ.50/- சேவைக் கட்டணமாக செலுத்தி, அரசு ஒப்புதல் அளித்த இணையதள மையங்களில் நேரடியாகப் பெறலாம். இத்திட்டம், **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 12-9-2002 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை சுமார் 12,231 சான்றிதழ்கள் இணையதளம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

### ஏற்றுமதி சேவை மையம்

ஒவ்வொரு மாவட்டத் தொழில் மைய அலுவலகத்திலும் ஏற்றுமதி சேவை மையத்தை ஏற்படுத்த அரசாணை எண் 53, சிறுதொழில்

(எஸ்.ஐ.எப்.I) துறை, நாள் 5-12-2002 இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித்தலைவர் இம்மையத்தின் தலைவராகச் செயல்படுவார். இம்மையம் ஏற்றுமதியை மேம்படுத்தவும், ஏற்றுமதியில் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கவும் உதவி புரிகிறது. ஏற்றுமதி குறித்த அனைத்துத் தகவல்களையும், வழிமுறைகளையும் சிறுதொழில் முனைவோருக்கு இம்மையம் வழங்கும். சிறுதொழில் ஏற்றுமதியைப் பெருக்க மாநில அளவில் ஏற்றுமதி மையம் அமைக்கப்பட உள்ளது. இம்மையம் விரைவில் செயல்படத் துவங்கும்.

## புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், ஊரகப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தவும் வேளாண்சார்/உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற புதிய திட்டம் ஒன்றை அரசு ஆணை எண் 32, சிறுதொழில் துறை, நாள் 28-6-2002இல் அறிவித்தது. இத்திட்டம், மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்தந்தப் பகுதிகளில் விளையும் வேளாண் பொருட்களை உபயோகித்து, குறைந்தபட்சம் ரூபாய் ஒரு கோடி மற்றும் அதற்கு மேல் முதலீட்டில் தொழில்களைத் தொடங்க இத்திட்டம் வகை செய்யும். இத்திட்டத்திற்கு மூலதன மானியம் மற்றும் பிற மானியங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ரூ.25 இலட்சம் முதலீட்டில் 4 தொழில்கள் அமைக்க முடியும். இதுவரை காட்டாமணக்கிலிருந்து உயிரி எரிபொருள், மற்றும் மரவள்ளிக்கிழங்கிலிருந்து 'எதில்-ஆல்கஹால்' தயாரித்தல், தென்னை நார் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்தல், மலரிலிருந்து எண்ணெய் எடுத்தல், மூலிகை மருந்து தயாரித்தல், பழம் மற்றும் முந்திரி பக்குவப்படுத்துதல், தேங்காய் ஓட்டிலிருந்து ஆக்டிவேட்டட் கார்பன் தயாரித்தல் போன்ற புதுமையான திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை மொத்தத்தில் 363 தொழில் திட்டங்களுக்கு மாநில அளவிலான உயர்நிலைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இவை 240 வட்டாரங்களில் ஏற்படுத்தப்படும். 31-3-2003 வரை 43 தொழில் திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் நிதி ஒப்புதல் அளித்துள்ளன. இவை தவிர மேலும் 9 தொழில் திட்டங்களை சுய நிதியின் மூலம் துவங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 52 அலகுகளில் 12 அலகுகள்



உற்பத்தியை துவக்கியுள்ளன. இதனால் ஊரக மக்களுக்குப் பெருமளவில் வேலை வாய்ப்பு கிடைக்கும். கிராமங்கள் முன்னேற்றமடையும்.

## புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

### (அ) இலவம்பஞ்சு பயிரிடுவோர் தொழில் கூட்டுறவுச் சங்கம், தேனி மாவட்டம்

தேனி மாவட்டம், தங்கம்மாள்புரம் கிராமத்தில் இப்புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்தப்பட்டு 21-6-2002 முதல் வியாபார நடவடிக்கையைத் துவங்கியுள்ளது. இலவம்பஞ்சு ஒவ்வொரு ஆண்டும், குறிப்பிட்ட காலத்தில் மட்டும் அறுவடை செய்யப்படுகிறது. இச்சங்கம் இதுவரை இலவம்பஞ்சு பொருட்களைக் கொள்முதல் செய்து ரூ.15.66 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

இச்சங்கத்தினால் 416 உறுப்பினர்கள் பயனடைந்துள்ளார்கள். இலவம்பஞ்சு பொருட்களைச் சேமித்து வைப்பதற்கு ரூ.64.70 இலட்சம் மதிப்பில் கிடங்கு கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளது.

### (ஆ) முந்திரி பக்குவப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், தேனி மாவட்டம்

இப்புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கம் தேனி மாவட்டம், தங்கம்மாள்புரத்தில் பதிவு செய்யப்பட்டு 21-6-2002 அன்று தனது வியாபார நடவடிக்கையைத் துவக்கியுள்ளது. இதில், 274 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

### (இ) தங்க நகை தயாரிப்பாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கம், கோயம்புத்தூர்

இந்தப் புதிய சங்கம் 27-2-2002 அன்று பதிவு செய்யப்பட்டு, இதற்கான விற்பனைக் கூடம் மற்றும் தொழிற் கூடம் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

### (ஈ) முந்திரி பக்குவப்படுத்தும் தொழிற் கூட்டுறவுச் சங்கம், ஜெயங்கொண்டம், பெரம்பலூர் மாவட்டம்

இப்புதிய தொழிற் கூட்டுறவுச் சங்கம் 27-1-2003 அன்று பதிவு செய்யப்பட்டு, உறுப்பினர்கள் சேர்க்கும் பணி நடந்தேறி வருகிறது.

[2003 மே 7

**(உ) சிதம்பரம் தாமிர நகைகள் தயாரிப்போர் தொழிற்கூட்டுறவுச் சங்கம்**

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தாமிர நகை தயாரிப்போருக்கு சேவை செய்யும் நோக்கோடு, இச்சங்கம் 17-3-1999 அன்று பதிவு செய்யப்பட்டு, தற்போது 103 உறுப்பினர்களுடனும், ரூ.1.16 இலட்சம் பங்கு மூலதனத்துடனும் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் சங்கிலி தயாரிக்கும் அலகு அமைத்து விரிவாக்கம் செய்வதற்கான அரசாணை எண் 55, சிறுதொழில் (சி.தொ.ஏ) துறை, நாள் 20-12-2002 இன்கீழ் சங்கத்தின் பங்கு மூலதனத்தில் அரசின் பங்கேற்பாக ரூ.2.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. திட்டத்தில் அனுமதிக்கப்பட்டவாறு இயந்திரங்கள் கொள்முதல் செய்து, விரைவில் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையும், சிறுதொழில்களின் தற்போதைய நிலையும்**

உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையினால் உருவாக்கப்பட்ட உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் மற்றும் தனியார்மயமாக்கல் கொள்கைகளினால், சிறுதொழில் நிறுவனங்கள், உலகச் சந்தையிலும், உள்நாட்டுச் சந்தையிலும் பலத்த போட்டியினைச் சந்தித்து வருகின்றன. எவ்விதக் கட்டுப்பாடுமின்றி, அநேக உற்பத்திப் பொருட்கள் இந்தியாவிற்கு வந்தவண்ணம் உள்ளன. எனவே, உலகச் சந்தையில் போட்டியிட்டு நிலைத்து நிற்க, தரமான பொருட்களை ஏற்ற விலையில் சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்ய வேண்டும். தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு சிறுதொழில் நிறுவனங்கள் வழக்கொழிந்த பழைய தொழில் நுட்பங்களை ஒதுக்கி, நமது நாடு மற்றும் உலக அளவில் பயன்படுத்தப்படும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். இத்துடன் தரப்பரிசோதனை, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான வசதிகளையும் உருவாக்க வேண்டும். அவற்றைப் பயன்படுத்துவதற்குத் தொழிலாளர்களின் தொழில்நுட்பத் திறனை அதிகரிப்பதற்குத் தேவையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

மேலே கூறப்பட்ட செயல்பாடுகள் மூலம், சிறுதொழில் நிறுவனங்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, போட்டியிடுவதற்கான திறனை அதிகரிக்க இயலும். மேலும், தேவையான பொதுக் கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்த முடியும். தொழில்நுட்ப மேம்பாடு,



2003 மே 7]

நவீனமயமாக்கல், தரப்பரிசோதனை, நிலையான உற்பத்திப் பொருள் காட்சிக் கூடங்கள், வெளிச்சந்தை விவரம், உற்பத்திப் பொருட்கள் குறித்த தகவல், மனித வள தன்னாற்றல் மேம்பாடு ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு அரசு ஊக்குவிக்கும். தேவையான நேரத்தில் தலையிட்டு, மேலே கண்ட அனைத்து செயல்பாடுகளுக்கும் உதவி புரியும் நோக்கோடு கீழ்க்கண்ட மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அரசு முடிவு செய்துள்ளது.

1. அரசு மற்றும் தனியார் கூட்டு முயற்சிகள் மூலம் தொழிற்பேட்டைகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.
2. ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் தொழில் குழுமங்களை மேம்படுத்துதல்.
3. தேவையான பொது வசதிகளை உருவாக்குதல்.
4. தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனமயமாக்கலை ஊக்குவித்தல்.
5. மனித வளம் மற்றும் திறனை மேம்படுத்துதல்.
6. வெளிச்சந்தை விற்பனையை மேம்படுத்த உதவி செய்தல்.
7. ஆய்வுக்கூட வசதிகளை மேம்படுத்துதல்

இவற்றின் அடிப்படையில் இணைப்பில் கண்ட பகுதி-II திட்டங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும்.

இத்துறையின் மூலம் தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்கள் பின்வருமாறு:-

**தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

ஐந்து இலட்சம் மகளிரைத் தொழில்முனைவோராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 2001-2002 முதல் 2005-2006 வரை ஒவ்வொரு ஆண்டும் 25,000 மகளிர் வீதம் 1,25,000 மகளிர் இத்துறை மூலம் பயிற்சி பெறுவர்.

2002-2003 ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த 11,000 மகளிர் மற்றும் தொழில்நுட்பத் தகுதி பெற்ற 9,000 மகளிர் பயிற்சி பெறுவர். பயிற்சி பெற்றோர் அனைவரும் சிறுதொழில் தொடங்க

ஊக்குவிக்கப்படுவர். இவர்களைத் தவிர பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 5000 பேர் பயிற்சி பெறுவர். இது வரை இவ்வாண்டில் சுமார் 22,500 மகளிர் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர்.

**பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டம்**

இத்திட்டம் மைய அரசு உதவியுடன் அக்டோபர் 2, 1993 முதல் செயல்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், அரசு அங்கீகாரம் பெற்ற/ஒப்புதல் பெற்ற நிறுவனங்களில் தொழிற் பயிற்சி பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தில், ஆதிதிராவிடர், பழங்குடியின வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு 22.50 விழுக்காடு ஒதுக்கீடும், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடும் அளிக்கப்படுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில், மாநிலத்தில் 20,000 பேருக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 35,024 விண்ணப்பங்கள் வங்கிகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 14,765 நபர்களுக்கு, ஒப்புதல் அளிக்கப்பட்ட சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின் மதிப்பு சுமார் ரூ.66 கோடியாகும்.

**தொழில்முனைவோர் மேம்பாட்டு நிறுவனம்**

இந்நிறுவனம் சென்னையில் 2001 முதல் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தொழில் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி சார்ந்த பணிகளையும் பல்வேறு சுய வேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோர்களுக்கு பயிற்சியளிக்கும் மையமாகச் செயல்பட்டு வருகிறது.

**பயிற்சி நிலையங்கள்**

திண்டுக்கல், கிண்டி, மற்றும் விருதாசலம் ஆகிய இடங்களில் தொழிற் கருவி பொறியியல், குளிர்பதனம், கண்ணாடி மற்றும் பீங்கான் சார்ந்த தொழில் நுட்ப பயிற்சியினைத் தொழிற் பயிற்சிக் கூடங்கள் மூலமாக தொழில் வணிகத் துறை அளித்து வருகிறது.





**தொழில்முனைவோருக்கான வசதிகள்**

**ஒற்றைச் சாளர முறை**

சிறுதொழில் தொடங்க வேண்டுமெனில் மாசு கட்டுப்பாட்டு வாரியம், உள்ளாட்சி அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சித் துறை, தீயணைப்புத் துறை, சுகாதாரத் துறை, தமிழ்நாடு மின்சார வாரியம் முதலான துறைகளிடமிருந்து பல்வேறு அனுமதிகளை முன்னதாகப் பெற வேண்டியுள்ளது. இந்த அனுமதிகளைப் பெறுவதில் ஏற்படும் சிரமங்களையும் காலதாமதங்களையும் தவிர்ப்பதற்காக ஒற்றைச் சாளர முறையினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தேவையான அரசுத் துறை அனுமதிகள் அனைத்தும் பெறுவதற்கு மாவட்டம்தோறும் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் ஒற்றைச் சாளரக் குழு இயங்கி வருகிறது. இக்குழு மாதம் ஒரு முறை கூடி தொழில்முனைவோருக்குத் தேவையான அனுமதிகளை விரைவில் பெற்றுத்தர உதவி புரிகிறது. தொழில்முனைவோர் திட்டங்களைச் செயல்படுத்தும்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில், இதுவரை, 776 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 676 விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

**சிறுதொழில் நிறுவனங்களுக்கு தாமதமாகப் பணம் செலுத்துவதைத் தடுக்கும் சட்டம்**

கொள்முதல் செய்பவர்களால், சிறுதொழில் நிறுவனங்களுக்கு தாமதமாக பணம் செலுத்தப்படுவதைத் தடுக்க, கோவை, திருச்சி, மதுரை மற்றும் சென்னை ஆகிய நான்கு இடங்களில் தொழில் வணிக இயக்குநரைத் தலைவராகக் கொண்ட மண்டலத் தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தீர்ப்பாயங்கள் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் சிறுதொழில் நிறுவனங்கள் மற்றும் கொள்முதல் செய்பவர்களின் முறையீடுகளை விசாரித்து நிலுவைத் தொகை வழங்கிட ஆணை வழங்குகிறது. 2002-2003இல் ரூ.406.45 இலட்சங்களுக்கான 107 வழக்குகளின்மீது இத் தீர்ப்பாயங்கள் தீர்ப்பளித்துள்ளன.

[2003 மே 7

**மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகள்**

தமிழகத்தில் கீழ்க்கண்ட 8 இடங்களில் மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டு, தொழில் முனைவோருக்கு அவர்தம் தேவைகளுக்கேற்ப மேம்படுத்தப்பட்ட மனைகளும், தொழிற்கூடங்களும் வழங்கப்படுகின்றன.

1. டாக்டர் விக்ரம் சாராபாய் இன்ஸ்ட்ரானிக் எஸ்டேட், சென்னை-41.
2. மேம்படுத்தப்பட்ட மனைகள் தொழிற்பேட்டை, பெருங்குடி, சென்னை-96.
3. காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்.
4. கோயம்புத்தூர்
5. சேலம்
6. ஓசூர்
7. திருச்சி
8. மதுரை

**பரிசோதனைக் கூடங்கள்**

சிறுதொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள், உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றைப் பல்வேறு சட்டப்பிரிவுகளின்படி பரிசோதனை செய்து சான்று பெற வேண்டியுள்ளது. இவற்றைத் தனியார் சோதனை நிறுவனங்கள் மூலம் சோதனை செய்ய அதிகப்படியான கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. சலுகைக் கட்டண வீதத்தில், தரமான சோதனைகளை இந்நிறுவனங்கள் மேற்கொள்ள, இத்துறை, மின் மற்றும் மின்னணுப் பரிசோதனைக்கு ஓசூர் மற்றும் திருவள்ளூரில் உள்ள காக்களூர் ஆகிய இடங்களிலும், இரசாயனப் பொருட்களைச் சோதனை செய்ய சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலும் சோதனைக் கூடங்ளை நிறுவியுள்ளது.

**சிறுதொழில் வாரியம்**

சிறுதொழில் நிறுவனங்களின் குறைகளைத் தீர்ப்பதற்காகவும் சிறுதொழில்களை மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை



2003 மே 7]

பரிந்துரைப்பதற்காகவும் சிறுதொழில் வாரியம் ஒன்று தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாரியம் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது. தலைமைச் செயலரை துணைத் தலைவராகக் கொண்ட இவ்வாரியத்தில் சிறுதொழிற் சங்கங்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியம் 6 மாதங்களுக்கு ஒரு முறை கூடி, கலந்துரையாடி, சிறுதொழில்களுக்குத் தேவையான கொள்கை முடிவுகளையும், அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கான வழி முறைகளையும் ஆராய்ந்து அரசிற்குப் பரிந்துரை செய்து வருகிறது.

**மாநில வங்கிக் குழு மற்றும் வங்கிகளுக்கான மாநில வங்கிகள் இடை உட்குழு**

வங்கிகளிலிருந்து சிறுதொழில் முனைவோர் கடன் பெறுவதில் எதிர்கொள்ளும் இடர்பாடுகளையும் மற்றும் அவை சார்ந்த பிரச்சினைகளையும் கேட்டறிந்து உதவ மாநில வங்கிக் குழு மற்றும் வங்கிகளுக்கான மாநில வங்கிகள் இடை உட் குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

**புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் மானியங்கள்**

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் துவக்கப்படும் சிறுதொழில் நிறுவனங்களுக்குக் கீழ்க்கண்ட சிறப்பு மானியங்கள் வழங்கப்படுகின்றன.

தோட்டப்பயிர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், கயிறு மலர்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், மற்றும் தென்னை நார் மற்றும் உணவு பதப்படுத்துதல் சார்ந்த தொழில்கள் உள்ளிட்ட வேளாண்சார் தொழில்களுக்கு இம்மானியம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்:

(அ) மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும், மேற்கண்ட வகையான தொழில்கள் துவங்கப்படும். இத்தொழில்களுக்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் தளவாடப் பொருட்களின் முதலீட்டில் 15% (அதிகபட்சமாக ரூ.15 இலட்சம்) சிறப்பு மூலதன மானியமாக வழங்கப்படும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் இம்மானியத்தை அரசிடம் இருந்து பெற்று வழங்கும்.

[2003 மே 7

(ஆ) இத்திட்டத்தின் மூலம் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு மூன்று ஆண்டுகளுக்கு, முறையே 30%, 20% மற்றும் 10% மின் கட்டண மானியம் வழங்கப்படும்.

(இ) இந்நிறுவனங்கள் செய்யும் மின்னாக்கி முதலீட்டில் 15% (அதிகபட்சமாக ரூ.5 இலட்சம்) மானியமாக வழங்கப்படும்.

(ஈ) இந்நிறுவனங்கள் 50 சதவீதத்திற்கு மேல் பெண் தொழிலாளர்களைக் கொண்டிருப்பின், முதலீட்டில் 5% (அதிகபட்சமாக ரூ.5 இலட்சம்) கூடுதல் மானியமாக வழங்கப்படும்.

**சிறுதொழில் வளர்ச்சியில் தொழிற் கூட்டுறவின் பங்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சிறுதொழில் வளர்ச்சியை ஒரு கூட்டுறவு இயக்கமாகச் செயல்படுத்தி வருகின்றன. இச்சங்கங்கள் தமது உறுப்பினர்களுக்கு மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து வழங்கி, உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதோடு, இவை சார்ந்த பிற சேவைகளையும் செய்கின்றன. மாநிலம் முழுவதும் 327 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 63,150 உறுப்பினர்கள் உள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டில் சுமார் ரூ.260.38 கோடி மதிப்புள்ள பொருட்களை இவை விற்பனை செய்துள்ளன.

**இண்ட்கோசர்வ்**

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறுதேயிலை பயிரிடுவோரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்காக 16 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத் தொழிற்சாலைகளில் 20,860 உறுப்பினர்கள் உள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.41.41 கோடி மதிப்புள்ள தேயிலைத் தூள் விற்பனை செய்துள்ளனர். மேலும், இச்சங்கம் சிறுதேயிலை விவசாயிகள் விளைவிக்கும் பச்சைத் தேயிலையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான இடுபொருட்களை வழங்குவதிலும் தேயிலை பயிரிடும் நவீன முறைகள் குறித்த பயிற்சியை அளிப்பதிலும் உதவி புரிகின்றது. தேயிலை விலை வீழ்ச்சியின் காரணமாக உருவாகியுள்ள கடுமையான சூழ்நிலையைச் சரி செய்ய இண்ட்கோசர்வ், சிறுதேயிலை விவசாயிகளின் தேயிலையை வாங்கி, பதப்படுத்தி, தரம் உயர்த்தி, பொது விநியோக முறையின் மூலம் "ஊட்டி டீ" எனும் பெயரில் விற்பனை செய்து அதிகபட்ச விலை கிடைக்க வழி செய்கிறது.



2003 மே 7]

இத்திட்டம் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களால் 28-8-2001 அன்று துவக்கி வைக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் ரூ.2.52 கோடி மதிப்புள்ள சுமார் 280 மெட்ரிக் டன் "ஊட்டி டீ" விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிறுவனம், வெளிச்சந்தையில் விற்பனை செய்ய "ஊட்டி கோல்டு" என்ற சிறப்பு இரகத்தைத் தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது. தற்போது சென்னை, சேலம், ஈரோடு, கோவை, கரூர், மதுரை, திருச்சி, விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய 10 மாவட்டங்களில் இந்த வகைத் தேயிலைத் தூள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எஞ்சிய மாவட்டங்களிலும் இத்தேயிலைத் தூள் விரைவில் விற்பனை செய்யப்படும்.

**சேகோசர்வ்**

தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மிகச் சிறந்த முன் உதாரணமாக "சேகோசர்வ்" நமது மாநிலத்தில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் சுமார் 700 சிறு மற்றும் நடுத்தர சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு ஆலைகளுக்கு ஆதரவு அளித்து வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.129.47 கோடி மதிப்புள்ள உற்பத்திப் பொருட்களை இச்சங்கம் விற்பனை செய்துள்ளது. இது, நமது நாட்டின் மொத்தத் தேவையில் 80 விழுக்காடு எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

**கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கம்**

நமது மாநிலத்தில் 65 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. ரூ.5.59 கோடி செலுத்தப்பட்ட மூலதனத்துடனும், 10,102 அங்கத்தினர்களையும் கொண்டு இச்சங்கங்கள் இயங்கி வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை ரூ.7.99 கோடியாகும். ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சி திட்டத்தின்கீழ் 21 கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

2002-2003 ஆம் ஆண்டிற்கான விற்பனை வளர்ச்சி உதவித் தொகையில், மாநில அரசின் பங்காக கயிறு தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.25.00 இலட்சம் வழங்க அரசாணை எண் 13, சிறு தொழில் (சி.தொ.ஏ) துறை, நாள் 13-3-2003 இல் ஆணையிடப்பட்டுள்ளது.

[2003 மே 7

**தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி**

தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி 1961 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இவ்வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டு அரசு பங்கு மூலதனத்துடன் இயங்கி வருகிறது. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களின் கடன் தேவையை நிறைவு செய்யும் வகையில் இவ்வங்கி செயல்பட்டு வருகிறது. நபார்டு வங்கியின் மறுநிதியுதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி அளிப்பதற்கு, பாரத ரிசர்வ் வங்கி இவ்வங்கிக்கு அங்கீகாரம் அளித்துள்ளது.

இவ்வங்கி தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிப்பதோடு அரசு ஊழியர்/தனி நபர்களுக்கு நுகர்வோர் கடன், பொதுமக்களுக்கு வீடு கட்ட கடன் மற்றும் வீடு/நகை அடமானத்தின் பேரில் கடன் ஆகிய சேவைகளையும் செய்து வருகிறது.

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ)**

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் (சிட்கோ) தமிழகத்தில் சிறுதொழில்களை மேம்படுத்தி, ஊக்கப்படுத்தும் நோக்கத்தோடு தமிழக அரசின் நிறுவனமாக 1970 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நிறுவப்பட்டது. சிட்கோ 39 தொழிற்பேட்டைகளை மேம்படுத்தி உள்ளது. 35 அரசு தொழிற்பேட்டைகளுக்கு முகவராகவும் இருந்து வருகிறது. இதுவரையில் சிட்கோ 3,865 மனைகளை மேம்படுத்தி உள்ளது. இது தவிர 4,222 தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது. மேலும் 200 முதல் 600 சதுர அடி வரை அளவுகள் கொண்ட 1,841 குறுதொழிற்கூடங்களையும் கட்டியுள்ளது.

இந்நிறுவனம் 2002-2003 இல் நிறைவேற்றிய திட்டங்கள் மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுக்கான திட்ட விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**தொழிற்பேட்டைகள்**

சிட்கோ 2002-2003 இல் ரூ.5.14 கோடி மதிப்புள்ள 176 மனைகளையும் ரூ.7.37 கோடி மதிப்புள்ள 77 தொழிற்கூடங்களையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

சிட்கோ நிறுவனம் ரூ.54 இலட்சம் மதிப்பீட்டில் 75 மனைகளை திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் மகளிருக்கென மேம்படுத்தி, 71 மனைகளை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், சென்னை அருகில் உள்ள திருமுல்லைவாயிலிலும், திருச்சி மாவட்டத்தில் உள்ள வாழவந்தான்



2003 மே 7]

கோட்டையிலும் மகளிருக்கென இரண்டு புதிய தொழிற் பூங்காக்கள் துவக்கப்பட்டு, மேம்பாட்டுப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

இந்நிறுவனம் மதுரை, சேலம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மகளிருக்கென மூன்று தொழிற்பூங்காக்களை 2003-2004 ஆம் ஆண்டில் உருவாக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

**மூலப் பொருள் உதவி**

மூலப் பொருட்களை சிறுதொழில் நிறுவனங்களுக்கு விநியோகம் செய்வது சிட்கோவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். தரமான பொருட்களைத் தயாரிக்க தரமுள்ள மூலப் பொருட்கள் இன்றியமையாததாகும். சிட்கோ, முக்கிய உற்பத்தியாளர்களிடமிருந்து மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து அவற்றைத் தேவையான சிறுதொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்து வருகிறது.

2002-2003 இல் விற்பனை விவரங்கள் கீழ்வருமாறு:—

| பொருட்களின் விவரம் | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| இரும்பு மற்றும் எஃகு | 6227 | 11.92 |
| மெழுகு | 1280 | 4.40 |
| காகிதம் | 1214 | 4.89 |
| பொட்டாசியம் குளோரேட் | 26 | 0.09 |

2003-2004-ல் கீழ்க்கண்ட மூலப் பொருட்களை விநியோகம் செய்ய சிட்கோ உத்தேசித்துள்ளது:—

| பொருட்களின் விவரம் | அளவு (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| இரும்பு மற்றும் எஃகு | 7500 | 15.00 |
| மெழுகு | 3000 | 9.99 |
| காகிதம் | 1250 | 5.00 |
| பொட்டாசியம் குளோரேட் | 30 | 0.12 |

மேலும் இந்திய எண்ணெய் நிறுவனம் அரசுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தார்ப் பொருட்களை விற்பனை செய்ய சிட்கோவை விநியோகதாராக நியமித்துள்ளது.

**விற்பனை உதவித் திட்டம்**

சிட்கோ, தனது விற்பனை உதவித் திட்டத்தின்கீழ் பதிவு செய்த சிறுதொழில் நிறுவனங்களுக்கு விற்பனை ஆணை பெற்றுத்தர, அரசுத் துறை மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களால் விளம்பரப்படுத்தப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்கிறது. இத்திட்டத்தின்கீழ், 2810 நிறுவனங்கள் சிட்கோவில் பதிவு செய்துள்ளன. 2002-2003 இல் ரூ.88.00 இலட்சம் மதிப்புள்ள சிறுதொழில் நிறுவனங்களின் பொருட்களான விளையாட்டுப் பொருட்கள், இரசாயனக்கூட உபகரணங்கள், குளோரினேட்டர், பிளீச்சிங் பவுடர், தோல் பொருட்கள், கழிவுப்பஞ்சு, ஸைன் போர்டு ஆகியவை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**ஏற்றுமதி உதவித் திட்டம்**

சிட்கோ நிறுவனம், சிறுதொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை ஏற்றுமதி செய்ய இணைய தளத்தின் மூலம் விளம்பரப்படுத்தி உதவி புரிந்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், இதுவரையில் 95 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில் மற்றும் குறுதொழில்கள் குறித்த புள்ளிவிவரங்களை மின்னணு முறையில் தொகுக்கும் பணியில் சிட்கோ முனைந்துள்ளது. இதனால், சிறுதொழில் நிறுவனங்கள் மின்னணு மூலம் வணிகத்தில் ஈடுபடவும் உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரத்தில் தங்களது போட்டியிடும் திறனைக் கூட்டவும் இயலும்.

**தேசிய சிறுதொழில் நிறுவனம் மற்றும் சிட்கோ நிறுவனம் கூட்டுக் கடன் திட்டம்**

இந்நிறுவனம், தேசிய சிறுதொழில் நிறுவனத்திடம் குறுதொழில் நிறுவனங்களுக்கு ரூ.25 இலட்சம் வரையில் கூட்டுக் கடன் திட்டத்தின்கீழ் கடனுதவி வழங்க உடன்பாடு செய்துள்ளது. இத்திட்டம் மனையின் விலை, கட்டட மதிப்பு, இயந்திரங்களின் மதிப்பு, நடைமுறை மூலதனம் ஆகிய அனைத்திற்கும் கடன் வழங்கும் அரிய திட்டமாகும். இக்கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 14.5% வட்டியாக



வசூலிக்கப்படும். இக்கடனுக்கு ஈட்டுப் பிணையம் செலுத்தத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**புதிய முயற்சிகள்**

**மாவட்ட ஒற்றைச் சாளர குழுமத்தோடு ஒருங்கிணைந்து செயல்படுதல்**

இந்நிறுவனம், மாவட்ட ஒற்றைச் சாளர குழுமத்துடன் ஒருங்கிணைந்து தொழிற்பேட்டையில் துவக்கப்படும் சிறுதொழில் நிறுவனங்களுக்குத் தேவையான அரசு அனுமதிகளைப் பெற்றுத்தர முனைப்புடன் செயல்படுகிறது.

**தற்பொழுதுள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளுக்கு அடிப்படை வசதிகளைப் புதுப்பித்துத் தருதல்**

சிட்கோவின் தொழிற்பேட்டைகளில் கட்டமைப்பு வசதிகள் நீண்டகாலப் பயன்பாட்டினால் பாதிப்படைந்துள்ளன. இவையனைத்தும் பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சியினால் (Public Private Partnership) புதுப்பித்து மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, 2003-2004ஆம் ஆண்டில் கிண்டி மற்றும் அம்பத்தூர் தொழிற்பேட்டைகளில் இக்கூட்டு முயற்சியின் கீழ் கட்டமைப்பு வசதிகள் புதுப்பித்து மேம்படுத்தப்படும். நீர் நிலைகள் அசுத்தப்படாமல் இருக்க தொழிற்பேட்டைகளில் "பொதுக் கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள்" அமைக்க சிட்கோ நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் "பொது வணிக மையம்" போன்றவற்றை அமைப்பதற்கும் சிட்கோ நடவடிக்கை எடுத்து வருகிறது.

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தொழில் மற்றும் வணிகத் துறையினால் மாநிலம் முழுவதும் பரவலாக நிறுவப்பட்ட 64 சிறு தொழிற்கூடங்களைக் கொண்டு டான்சி உருவாக்கப்பட்டது. உதிரி பாகங்களை இணைத்து கடிகார உற்பத்திக் கூடம், சாராவி மூலப் பொருட்கள் உற்பத்திக் கூடம், ஆழ்குழாய் கைபம்புகள் உற்பத்திக் கூடம் மற்றும் இயந்திர கருவிகள் உற்பத்திக் கூடம் ஆகியவைகளைப் பின்னர் டான்சி நிறுவியது. டான்சியின் கட்டமைப்பு வசதிகளை தனியார் தொழில் முனைவோர்கள் தாராளமாகப் பயன்படுத்தியதன் மூலம் டான்சி

நமது மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் சிறப்பான சேவை செய்து வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மாநிலத்தில் தொழில் துறை நடவடிக்கை குறைவாக இருந்த நிலையில் டான்சி முன்னோடியாக டை காஸ்ட்டிங், போர்ஜிங், இனாமல்டு வயர், வார்ப்பட பொருட்கள், தோல் பதனிடுதல், தோல் பொருட்கள், மின்சார கருவிகள், இயந்திரக் கருவிகள், உயர்கட்டுமானப் பொருட்கள், துத்தநாக முலாம் பூசுதல், அறைக்கலன்கள் போன்ற பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்து பல்வேறு துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்தது. டான்சியின் அந்நடவடிக்கை அதுபோன்ற தொழிற்சாலைகள் மாநிலத்தில் நிறுவப்படுவதற்கு முன்னோடியாக அமைந்தது.

மேலே குறிப்பிட்டுள்ள தொழில்களில் தனியார் மற்றும் பிற துறையினர் போதிய அளவில் காலப்போக்கில் ஈடுபட்டுள்ள நிலையில் டான்சி அத்தொழில்களில் ஈடுபடுவதிலிருந்து படிப்படியாகக் குறைத்துக்கொண்டது. தற்பொழுது, 26 உற்பத்திக் கூடங்கள் மற்றும் 6 செயல்பிரிவுகள் மட்டுமே டான்சியின் கீழ் மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வருகின்றன.

உயர்கட்டுமானப் பொருட்கள், நுண் அலைக் கோபுரங்கள் மற்றும் உயர் அழுத்த மின்கடத்தி கோபுரங்களுக்குத் தேவையான துத்தநாக முலாம் பூசிய கோபுரப் பாகங்கள், மரம் மற்றும் எஃகுப் பொருள்களால் ஆன அறைக்கலன்கள், துத்தநாக முலாம் பூசுதல், ஆழ்குழாய் பம்புகள் மற்றும் கைப்பம்புகள், காஸ்கெட் ஷெல்லாக், பிக்சர் வார்னிஷ் போன்ற சாராவியை (ஸ்பிரிட்) மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், கடிகாரம் உருவாக்குதல் போன்ற பலவகை செய்பொருட்கள் டான்சியின் உற்பத்தி வகைகளில் உள்ளன.

பலவகையான பெயிண்ட்களை உற்பத்தி செய்யும் தமிழ்நாடு வர்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும். (டான்பாப்) நிறுவனம் டான்சியின் துணை நிறுவனமாகும்.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 6 இடங்களில் டான்சியினுடைய விற்பனைக் கூடங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநில/மத்திய அரசுத் துறைகள், அரசு சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களுக்குத்



தேவையான பல்வேறு பொருட்களையும் சேவையையும், கடந்த நாற்பது வருடங்களாக டான்சி வழங்கி வருகிறது.

துத்தநாக முலாம் பூசப்பட்ட மின்கடத்தி மற்றும் நுண் அலைக் கோபுரங்கள், பல வகையான உயர்கட்டுமானங்கள், துத்தநாக முலாம் பூசுதல், ஆழ்குழாய் கைபம்புகள், தரமிக்க அறைக்கலன்கள் முதலிய பொருட்களை உற்பத்தி செய்வதில் டான்சி தனித்தன்மை பெற்று விளங்குகிறது.

நமது அரசின் சமூக நலத் திட்டப் பணிகளில் டான்சி சிறப்பாக அரசுக்கு உறுதுணையாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, சத்துணவுத் திட்டம், கரும்பலகைத் திட்டம், வறட்சிப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க ஆழ்குழாய் கைபம்புகள் நிறுவுதல் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தி செய்து வழங்குதல் ஆகிய சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. டான்சி இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், பாரத மிகு மின் நிறுவனம், ஹிந்துஸ்தான் வானூர்தி இயல் நிறுவனம், பாரத மின்னணுவியல் நிறுவனம் போன்ற நிறுவனங்களுக்கு உயர் தொழில்நுட்பமிகு பாகங்களை உற்பத்தி செய்து கொடுத்து வருகிறது.

கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேச மின்சார வாரியங்களுக்குத் துத்தநாக முலாம் பூசப்பட்ட கோபுரங்கள் உற்பத்தி செய்து வழங்கிட ஆணை பெற்றுள்ளது. இதேபோன்று மற்ற மாநிலங்களிலும் ஆணைகள் பெற முனைப்புடன் செயல்பட்டு பிற மாநிலங்களிலும் தன் வியாபாரத்தைப் பெருக்க முயற்சித்து வருகிறது. டான்சி 2002-2003ஆம் ஆண்டில், தனியார் துறையிலுள்ள டாட்டா டெலிசர்வீசஸ், ரிலையன்ஸ் இன்ஃபோகாம் போன்ற நிறுவனங்களுக்குத் தொலைத் தொடர்பு கோபுரங்களை உற்பத்தி செய்து மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நிறுவிக் கொடுத்துள்ளது.

[2003 மே 7



2003 மே 7]

## இணைப்பு

### பகுதி II திட்டங்கள்-2003-2004

| வ. எண் | திட்டத்தின் பெயர் | இறுதிநிலை செலவு (ரூபாய் இலட்சத்தில்) | 2003-2004இல் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பொது வசதிகள் மற்றும் நவீன கருவிகள் மையம், கோயம்புத்தூர் | 1050.00 | 121.00 |
| 2. | உற்பத்திப் பொருட்கள் காட்சி மற்றும் தர ஆய்வு மையம், அம்பத்தூர், சென்னை | 100.00 | 10.00 |
| 3. | மூலப்பொருள் மற்றும் உர வங்கி, திருச்சி | 100.00 | 10.00 |
| 4. | தொழில்நுட்பம் மற்றும் நிதி பற்றிய கலந்தறிதல் மற்றும் உதவி | 100.00 | 100.00 |
| 5. | புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்ட பயனீட்டாளர்களுக்கான மேலாண்மை செயல்முறை தொழில்நுட்பம் உள்பட தொழில் முனைவோர் பயிற்சி | 30.00 | 9.00 |
| 6. | 28 மாவட்டத் தொழில் மையங்கள், மண்டல இணை இயக்குநர் அலுவலகம், சென்னை மற்றும் இயக்குநர் அலுவலகங்களில் தொழில் தகவல்களை ஒருங்கிணைத்து ஏற்றுமதி வழிகாட்டிப் பிரிவு தொடங்க இணைய வலை/ தொடர்பு அமைத்தல் | 1.00 | 1.00 |
| 7. | தொழில் வணிக இயக்ககத்திற்கு நகல்எடுக்கும் இயந்திரம் வாங்குவதற் குரிய ஒதுக்கீடு | 2.10 | 2.10 |
| 8. | காக்களூர் மத்திய மின் பொருள் சோதனைக்கூடம்-நவீனப்படுத்துதல் மற்றும் எனர்ஜி மீட்டருக்கான கூடுதல் சோதனை வசதிகளை ஏற்படுத்தி வலுப்படுத்துதல் | 100.00 | 50.00 |
| 9. | காக்களூர் மத்திய மின்பொருள் சோதனைக்கூடத்தில் உற்பத்தியாளர்கள் மற்றும் தரநிர்ணய பணியாளர்களுக்கான பயிற்சித் திட்டம் | 11.00 | 11.00 |
| 10. | கிண்டி, சென்னை-32-ல் உள்ள இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகத்திற்கு காலிப்ரேஷன் மையம் அமைத்தல் | 20.00 | 20.00 |
| 11. | விருத்தாசலத்தில் பீங்கான் தொழில்நுட்பக் கல்லூரியில் ஆய்வகக் கட்டடம் கட்டுதல் | 12.50 | 12.50 |
| 12. | விருத்தாசலத்தில் பீங்கான் தொழில் நுட்பக் கல்லூரியில் திருத்தப்பட்ட பாடத்திட்டத்தை செயல்படுத்துதல் | 10.00 | 10.00 |
| 13. | நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் மேம்பாட்டுக்கான ஏல மையம் அமைத்தல் | 5.00 | 5.00 |
| | மொத்தம் | 1541.60 | 361.60 |

[2003 மே 7

## சிறுதொழில்கள் துறை—வரவு செலவுத் திட்ட மதிப்பீடு
## கோரிக்கை எண்-42

(ரூபாய் இலட்சத்தில்)

| கணக்குத் தலைப்பு | 2002-03 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2002-03 திருத்திய மதிப்பீடு | 2003-04 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|
| 2407 மலைத் தோட்டப் பயிர்கள் | — | 10.00 | 0.01 |
| 2425 கூட்டுறவு | — | — | 5.00 |
| 2851 கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் | 2893.29 | 3321.80 | 4800.36 |
| 2852 தொழில்கள் | 426.56 | 380.45 | 503.89 |
| 2885 தொழில்கள் கனிமப் பொருட்கள் குறித்த ஏனைய செலவுகள் | 1000.00 | 1000.00 | 970.00 |
| 3451 தலைமைச் செயலகம் பொருளாதாரப் பணிகள் | 101.56 | 99.66 | 107.81 |
| 4425 கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | — | 10.00 | 10.00 |
| 4551 மலைப் பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 15.00 | 20.00 | 0.01 |
| 4[illegible]1 கிராமத் தொழில்கள் சிறு தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | 37.15 | 15.00 | 203.52 |
| 6851 கிராமத் தொழில்கள் சிறு தொழில்களுக்கான கடன்கள் | — | — | 100.00 |
| மொத்தம் | 4473.56 | 4856.91 | 6700.60 |



2003 மே 7]

## இணைப்பு IV

(138 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## கோரிக்கை எண் 16—கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை—கைத்தறி மற்றும் துணி நூல்

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004

**1. முன்னுரை**

தமிழ்நாட்டின் துணித்தொழில் தேசிய மற்றும் மாநில பொருளாதாரத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றது. இது தொழில் வளர்ச்சியில் முன்னோடியாகத் திகழ்வதுடன் மாநிலத்தில் அதிக வேலைவாய்ப்பும் வழங்குகிறது. துணித்தொழிலின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு சில மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு திகழ்கின்றது.

துணித்தொழிலின் பல்வேறு பிரிவுகள், பெருமளவு நூற்பை மையமாகக் கொண்டும், தொழிலாளர்களின் முக்கியத்துவத்தை உள்ளடக்கியும் இருக்கின்ற காரணத்தால் தமிழ்நாட்டில் துணித்தொழில் பெருமளவில் தனியார் பிரிவைச் சார்ந்தே உள்ளது. மாநிலத்திலுள்ள நூற்பாலைகளில் சுமார் 2.17 இலட்சம் தொழிலாளர்கள் உள்ளனர். மேலும், 11.64 இலட்சம் கைத்தறி தொழிலாளர்களும் மற்றும் 7.98 இலட்சம் விசைத்தறி தொழிலாளர்களும் மறைமுகமாக இத்தொழிலைச் சார்ந்துள்ளனர். மேலும், ஆயத்த ஆடை, பின்னலாடை மற்றும் பதனிடும் தொழிலில் பல இலட்சம் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் கூட்டு நெசவு ஆலைகள் (23) குறைந்த அளவில் இருப்பதால், பரவலாக்கப்பட்ட விசைத்தறி மற்றும் பின்னலாடைப் பிரிவினர் நெசவுத் தொழிலை பெருமளவு ஈடு செய்கின்றனர். திருப்பூர் பகுதியில் பெருமளவில் நடைபெறும் பின்னலாடை தொழிலின் உற்பத்தி தேசிய உற்பத்தியில் 26% அளவுக்கு உள்ளது. பின்னலாடைத் தொழிலின் மூலம் மேற்கொள்ளப்படும் மொத்த விற்பனையான ரூ.9500.00 கோடியில், ரூ.4,500.00 கோடி அளவிற்கு திருப்பூரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இது நாட்டின் மொத்த துணித் தொழில் ஏற்றுமதியில் 56 சதவீதம் ஆகும். பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 4.00 இலட்சம் விசைத்தறிகளைக் கொண்ட தமிழ்நாடு, மகாராஷ்ட்ரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக, நாட்டின் இரண்டாவது இடத்தில் உள்ளது.

[2003 மே 7

தமிழ்நாட்டில் கூட்டுறவு மற்றும் தனியாரிடம் உள்ள கைத்தறி நெசவாளர்கள் சுமார் 40 மில்லியன் மீட்டர் துணியை உற்பத்தி செய்கின்றனர். இது நாட்டின் மொத்த உற்பத்தியில் 11 சதவீதம் ஆகும். எனவே, நூற்புத் தொழில், கைத்தறி, விசைத்தறி மற்றும் பின்னலாடைத் தொழில் நான்கும் இம்மாநில துணித் தொழிலின் 4 தூண்களாக உள்ளன.

துணித்தொழில் தற்சமயம் மிகுந்த சிரமமான காலத்தைச் சந்தித்து வருகிறது. குறைந்து வரும் பஞ்சு உற்பத்தியினால் அதிகரித்து வரும் பஞ்சு விலை, உயர்ந்து கொண்டிருக்கும் கூலி மற்றும் இதர மூலப்பொருள்களின் விலை, அதிக வட்டியுடன் கூடிய நிதி, விற்பனை மற்றும் இலாப விகிதத்தில் சரிவு ஆகியவையே தற்போதைய பின்னடைவுக்கு முக்கியமான சில காரணங்களாகும். மேலும், துணி மற்றும் நூல், தேவைக்கு அதிகமாக உற்பத்தியாகிறது. நூற்புத் திறன் மற்றும் நூல் உற்பத்தியின் வளர்ச்சி காரணமாக தேவை மற்றும் உற்பத்திக்கிடையே பொருந்தாத்தன்மை ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட காரணங்களுடன் நீண்ட நாட்களாக தொழிலில் உள்ள மந்த நிலையும் இணைந்ததே தொழிலில் தற்போது ஏற்பட்டுள்ள பெருத்த பின்னடைவிற்குக் காரணமாகும். இவற்றுடன் 2005 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உலக வர்த்தக ஒப்பந்தமும் இணையும்போது, இத்தொழில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மிகத் தீவிர சவால்களையும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

தாராளமயமாக்கப்பட்ட சந்தையில் எண்ணிலடங்கா வாய்ப்புகள் இருந்தபோதும், உள்நாட்டு சந்தையை நிலையிழக்கச் செய்யும் ஏற்றுமதிப் பொருளாதார முனைப்பு நாடுகளின் அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இறக்குமதியால் ஏற்படும் பாதிப்புகள் ஏற்கெனவே அறிய வந்துள்ள நிலையில், இனிவரும் காலங்களில் இவ்வித பாதிப்புகள் அதிகரிக்கும் சூழ்நிலையில், உள்நாட்டு தொழில்களை குறிப்பாக, பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளை வலுப்படுத்த தகுந்த நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுக்கவில்லையெனில் பெரும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படும்.



2003 மே 7]

**2. துறை**

நிலையினை கைத்தறி, நெசவாளர்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துவதும், கைத்தறி, விசைத்தறி மற்றும் துணிநூல் பிரிவுகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துவதும் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முக்கிய நோக்கங்களாகும்.

மாநிலத்தில் உள்ள கூட்டுறவின்கீழ் செயல்படும் நெசவுத் தொழில் சார்ந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்படி கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையர் செயற்பதிவாளராக செயல்படுகிறார். "மாநிலத்தின் துணிநூல் அதிகார ஆணைக்குழு"வாக செயற்படுவதன் வாயிலாக நூற்பாலைகள், துணிநூல் ஆலைகள், பின்னலாடைப் பிரிவு, கைத்தறி மற்றும் விசைத்தறி பிரிவுகள் நன்முறையில் செயல்பட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையருக்கு உள்ளது. அனைத்துப் பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வதும், நூல் மற்றும் துணியினை நியாயமான விலையில் உற்பத்தி செய்து உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதும், உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகளின் விற்பனையினை அதிகரிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்குவதும் இத்துறையின் பொறுப்புகளாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் மற்றும் இதர மூலப் பொருட்களை விநியோகிப்பதும், உற்பத்தி செய்யப்பட்ட துணி வகைகளை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலமும், "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்கள் மற்றும் இதர விற்பனை நிலையங்கள் மூலமும் விற்பனை செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிறப்புக் கவனம் செலுத்தும் பொறுப்பும் இத்துறைக்கு உள்ளது. நூல் கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கோடு கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் நலனுக்கென பல்வேறு நலத்திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் 18 சரக கைத்தறி மற்றும் துணிநூல் இணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்கள் மூலமாக செயல்படுத்தும் பணியினையும் ஆணையரகம் மேற்கொண்டு வருகிறது.

இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிறுவனங்களின் விபரம் பின்வருமாறு:

* 1313 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
* 137 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
* 18 கூட்டுறவு நூற்பாலைகள்
* தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்), சென்னை.
* தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.
* தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்
* தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.
* தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோவை.
* தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை.

## 3. கைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் ஒரு பெரிய அளவிலான பொருளாதார செயல்பாடு கொண்ட தொழிலாகும். இத்தொழிலில், 4.29 இலட்சம் நெசவாளர் குடும்பங்களில், சுமார் 11.64 இலட்சம் நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள 1.97 இலட்சம் நெசவாளர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 31-3-2003இல் 1313 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2.16 இலட்சம் கைத்தறிகள் செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள தறிகள், கூட்டுறவு அமைப்பைச் சாராதவர்களான கூட்டுறவு அல்லாத அமைப்பின்கீழ் உள்ளன. மொத்தமுள்ள 1313 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில், 1125 பிரதம கைத்தறி பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும், 103 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும், 85 பிரதம கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களாகவும் உள்ளன. கைத்தறி நெசவாளர்கள் பெருமளவில் வசித்து வரும் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. மைய மற்றும் மாநில அரசுகள் செயல்படுத்தும் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள்





அனைத்தும் பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக நெசவாளர்களை சென்றடைகின்றன. 2002-03 ஆம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் ரூ.415.71 கோடி மதிப்புள்ள 841.70 இலட்சம் மீட்டர் கைத்தறி துணிகள் உற்பத்தி செய்து ரூ.500 கோடி விற்பனை குறியீட்டிற்கு ரூ.571.67 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டு விற்பனையைவிட 16% கூடுதலாகும்.

2001-02 ஆம் ஆண்டில் 320 ஆக இருந்த இலாபம் ஈட்டும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 2002-03இல் 487 ஆக உயர்ந்துள்ளது.

கைத்தறி தொழிலின் முக்கிய மூலப் பொருளான சிட்டா நூல் தேவைக்கு அமைப்பு சார்ந்த நூற்பாலைகளை வெகுவாக சார்ந்துள்ளது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூலைத் தடையின்றி பெறுவதற்கு மாநில அரசு உறுதி செய்துள்ளது.

மத்திய அரசு 2002-03ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலே, சிட்டா நூலுக்கு கலால் வரி விதித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 31-3-2003 முடிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ.752.60 இலட்சம் அளவிற்கும் தனியார் துறையிலுள்ள நெசவாளர்கள் ரூ.1464.33 இலட்சம் அளவிற்கும் செலுத்திய கலால் வரி தொகையினை திரும்பப்பெற்று பயனடைந்துள்ளனர்.

## 4. விசைத்தறித் தொழில்

தமிழ்நாட்டில் விசைத்தறித் தொழில் மக்களின் துணித் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது. விசைத்தறிகளில் காடா மற்றும் மெருகேற்றிய பலதரப்பட்ட துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்துறையில் துணி வகைகள் உற்பத்தி செய்வதுடன் அதிக வேலைவாய்ப்புகளும் ஏற்படுகிறது. நாட்டின் ஏற்றுமதி வருவாயைப் பெருக்குவதில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது.

இந்தியாவிலுள்ள 16.66 இலட்சம் விசைத்தறிகளில் நான்கில் ஒரு பங்கு தமிழ்நாட்டில் உள்ளது. தமிழ்நாட்டிலுள்ள 4.00 இலட்சம் விசைத்தறிகளில் 3.20 இலட்சம் பதிவு செய்யப்பட்ட விசைத்தறிகள் ஆகும். இதில் 137 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 22,918 விசைத்தறிகளும் அடங்கும். இந்தியாவில் 2002-03இல் (டிசம்பர் 2002 முடிய) விசைத்தறிகள் மூலம் நெய்யப்பட்ட மொத்த

உற்பத்தியான 19,915 மில்லியன் சதுர மீட்டரில் தமிழ்நாட்டில் மட்டும் ஏறக்குறைய 5,380 மில்லியன் சதுர மீட்டர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் விசைத்தறிக்குரிய பெரும் பிரச்சினை இங்குள்ள தறிகள் மிகவும் பழமை வாய்ந்த சாதா தறிகளாக இருப்பதே ஆகும். ஒரு சில விசைத்தறிகள் பகுதி தானியங்கி விசைத்தறிகளாகவும் அல்லது தானியங்கி விசைத்தறிகளாகவும் உள்ளன. மேலும், இவை பெரும்பான்மையாக பருத்தியை முதன்மை மூலப் பொருளாகப் பயன்படுத்தி (செயற்கை இழை நூல்களை விட) உற்பத்தியை மேற்கொள்கின்றன. தரம் உயர்ந்த துணிகளை அதிக அளவில் உற்பத்தி செய்தால் மட்டுமே, வளர்ந்து வரும் உலகச் சந்தையில் ஏற்றுமதியில் முக்கிய அங்கம் வகிக்கும் சீனா, கொரியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளை எதிர்கொள்ளவும், உள்நாட்டில் நீடித்து நிற்கவும் இயலும்.

## 5. துணித் தொழில்

### அ. ஜவுளி ஆலைகள்

இத்தொழில் தமிழக துணித்தொழிலின் முதுகெலும்பாக அமைந்துள்ளது பெரும்பாலான ஆலைகள் தனியார் நிறுவனங்களாகவும் பருத்தி நூற்பு ஆலைகளாகவும் உள்ளன. இந்தியாவில் உள்ள 1860 பெரிய மற்றும் நடுத்தர ஆலைகளில் 850 ஆலைகள் தமிழ்நாட்டில் மட்டும் உள்ளன. இவற்றுள் 97% நூற்பு ஆலைகளாகவும், மற்றவை கூட்டு நெசவு ஆலைகளாகவும் உள்ளன. இதுபோன்று, இந்தியாவிலுள்ள 1046 சிறிய ஆலைகளில் 828 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன. இவற்றின் மொத்த கதிர் திறன் 38.33 மில்லியன் கதிர்கள் ஆகும். அகில இந்திய அளவில் தமிழ்நாடு 58% ஜவுளி ஆலைகளையும் 39% நிறுவப்பட்ட கதிர் திறனையும், 37% மொத்த நூல் உற்பத்தியையும் கொண்டுள்ளது. பருத்தி நூல் உற்பத்தி மற்றும் பருத்தி அல்லாத நூல் உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக உள்ளது. நூல் உற்பத்தி தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு வருகிறது. நாட்டின் மொத்த நூல் ஏற்றுமதியான ரூ. 6320.83 கோடியில், 40 விழுக்காடு அளவிற்கு ரூ.2500 கோடி மதிப்புள்ள பருத்திநூலினை ஏற்றுமதி செய்ததன் மூலம் தமிழ்நாடு இந்தியாவிலேயே நூல் ஏற்றுமதியில் முதன்மை மாநிலமாக விளங்குகிறது.





சமீப காலமாக ஜவுளித் தொழிலில் ஏற்பட்ட பின்னடைவின் காரணமாக ஆலைகள் நலிவுற்றும், மூடப்பட்டும் வருகின்றன. ஜவுளி ஆணையர், மும்பை அவர்களின் 30-11-2002 தேதிய அறிக்கையின்படி நாட்டிலுள்ள 469 மூடப்பட்ட ஆலைகளில் (பெரு ஆலைகள்) தமிழகத்தில் 105 ஆலைகள் மூடப்பட்டுள்ளன. புதுடில்லி தொழில் மற்றும் நிதி சீரமைப்பு வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட நாட்டிலுள்ள 646 நலிவுற்ற ஆலைகளில் 30-4-2002 தேதிய நிலவரப்படி, 126 ஆலைகள் தமிழ்நாட்டில் உள்ளன.

### ஆ. கூட்டுறவு நூற்பாலைகள்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சிட்டா நூலையும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கோன் நூலையும் நியாயமான விலையில் நல்ல தரத்துடன் தடையின்றி வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்துடன் 18 கூட்டுறவு நூற்பாலைகள் தமிழ்நாட்டில் 1958 முதல் 1985 ஆம் ஆண்டு வரையிலான கால கட்டத்தில் 4.70 இலட்சம் கதிர் திறன்களுடன் ஆரம்பிக்கப்பட்டன.

இருப்பினும், அதிக தொழிலாளர் ஊதியம், இயந்திரங்களை நவீனப்படுத்தாதது, குறைந்த உற்பத்தித் திறன், பிற மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்ததினால் அதிகரித்த பஞ்சு விலை ஆகிய காரணங்களினால் இவ்வாலைகள் நீண்ட காலமாகவே இலாபகரமாக இயங்கவில்லை. இன்றைய நிலவரப்படி இவ்வாலைகள் ஒட்டுமொத்தமாக மாதமொன்றுக்கு சுமார் ரூ. 3.00 கோடி நட்டத்தில் இயங்கி வருகின்றன.

துறையின் செயல்பாடுகள் குறித்து 13-07-2001 அன்று ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், ஆலைகளின் செயல்பாடுகள் குறித்து முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்பு இவ்வாலைகளைத் தனியார் மயமாக்கலாம் எனத் தெரிவித்தார். இதன் அடிப்படையில், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் ஒரு குழுவினை அரசு அமைத்தது. குழுவின் பரிந்துரையின் பேரில், அனைத்து கூட்டுறவு ஆலைகளையும் ஆய்வு செய்ய ஆணையிடப்பட்டது.

ஆய்வு அலுவலர்கள், இவ்வாலைகளை மீண்டும் புத்துயிரூட்டி தொடர்ந்து இலாபத்தில் இயக்குவதற்கு வாய்ப்பில்லை என்பதால்,

ஆலைகளை மூடிவிட பரிந்துரை செய்தனர், 18 கூட்டுறவு நூற்பாலைகளின் ஒட்டுமொத்த குவிந்த நட்டம் 31-3-2003 ஆம் தேதி அன்று ரூ.445.88 கோடிகளாகும்.

31-12-2002 அன்று நடைபெற்ற அரசு மூலதனங்களைத் திரும்பப்பெறுதல் தொடர்பான, அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்காண்பொருள் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டதில், இவ்வாலைகளை மீண்டும் புத்துயிரூட்ட பெருமளவு நிதி தேவைப்படும் எனக் கருத்து தெரிவிக்கப்பட்டது.

## 6. ஆடைகள் மற்றும் பின்னலாடைத் தொழில்

தமிழகத்தின் ஜவுளித் தொழிலில் ஆடைத் தொழில் வளர்ந்து வருகின்ற பிரிவாகும். பின்னலாடைத் தொழிலில் பெற்ற வளர்ச்சியைத் தொடர்ந்து தமிழகம் சிறந்த ஆயத்த ஆடைத் தொழில் மையமாக உருவாகி வருகிறது. அந்நியச் செலாவணி பெருமளவு ஈட்டி, நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பதால் இத்தொழில் மாநிலத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டு ரூ. 23,785.60 கோடி மதிப்புள்ள ஆயத்த ஆடைகள் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது, 1997-98 ஆம் ஆண்டு ஏற்றுமதியான ரூ. 14,405.70 கோடியை விட 65.11 சதவிகிதம் கூடுதல் வளர்ச்சி ஆகும்.

## 7. பதனிடும் தொழில்

புதிய வகைகளை உருவாக்குவதற்கு எண்ணற்ற வாய்ப்புகளை கொண்டதாகவும், பொருட்கள் முழுத் தன்மை அடைய முக்கிய பங்கு வகிப்பதாகவும் உள்ள பதனிடும் தொழில் தரம், மதிப்பு மற்றும் முழுத் தன்மை ஆகியவற்றை நிர்ணயம் செய்கிறது. ஆனால், தமிழ்நாட்டில் இத்துறை பல கூறுகளாகப் பிளவுபட்டுள்ளது. இதனைப் பெரும்பாலும் பின்வரும் நான்கு பிரிவுகளாக கொள்ளலாம்.

* கையினால் பதப்படுத்தப்படும் முறையைக் கையாளும் பிரிவுகள்.
* கையினாலும் மற்றும் சில இனங்களில் மின்சக்தி மூலமாக பதனிடும் ஆலைகள்.
* மின்சக்தியை பயன்படுத்தி பதனிடும் ஆலைகள்.
* கூட்டு ஆலை அல்லது பகுதி கூட்டு ஆலைகளுடன் இணைந்த பதனிடும் பிரிவுகள்.



மேற்குறிப்பிட்ட பிரிவுகளில் பயன்படுத்தும் தொழில்நுட்பம் பெரும்பாலும் பழமை வாய்ந்ததாகவும், குறைபாடுகளுடனும் உள்ளது. எனவே, பதனிடுதல் தரம் குறைந்ததாகவும், சீரற்றதாகவும் அமைந்துள்ளது. தரமான மற்றும் கூடுதலான வேலைத்திறன் இவ்வாலைகளில் காண்பது அரிதாக உள்ளது.

## 8. தொழிலின் மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

பெருமளவில் வருவாயையும், வேலைவாய்ப்பையும் அளிப்பதால் மாநிலத்தில் துணித்தொழில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. நெசவாளர்களின் நலனுக்காகவும் தொழிலின் வளர்ச்சிக்காகவும் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

### 8.01 அமைச்சரவை துணைக் குழு அமைத்தல்

கைத்தறி நெசவாளர்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கவும், கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வழிமுறைகள் குறித்து ஆலோசனை வழங்கவும் மற்றும் கைத்தறி தொழிலின் பாதிப்புக்கு காரணமான பொதுவான பிரச்சினைகளை ஆராயவும் ஆகஸ்ட் 2002 இல் அமைச்சரவை துணைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது.

### 8.02 மலிவு விலை வேட்டி சேலை திட்டம் - அறிமுகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் வேட்டி, சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த கைத்தறி நெசவாளர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பு வழங்கும் முகத்தான் 2002-03ஆம் ஆண்டில் "மலிவு விலை வேட்டி சேலை திட்டம்" என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்திரவுப்படி, இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 63 இலட்சம் சேலைகளும் 54 இலட்சம் வேட்டிகளும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்பட்டது. அவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட சேலைகள் மற்றும் வேட்டிகளில், 20 இலட்சம் சேலைகள் மற்றும் 4 இலட்சம் வேட்டிகள் ஓய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு வழங்குவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது போக எஞ்சியுள்ள சேலை வேட்டிகளை நியாயவிலைக் கடைகள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம்

சேலை ஒன்றினை ரூ.40/-க்கும், வேட்டி ஒன்றினை ரூ.30/-க்கும் விற்பனை செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முடிவு செய்யப்பட்டது. 06-08-2002 அன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மலிவு விலை வேட்டி சேலை விற்பனை தொடங்கி வைக்கப்பட்டது. 31-3-2003 வரை கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி சேலைகள் அனைத்தும் கொள்முதல் செய்யப்பட்டு, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சரக்கு தேக்கமில்லை என்ற நிலை உள்ளது. அரசு இத்திட்டத்திற்கென 2002-03ஆம் நிதியாண்டில் மொத்தம் ரூ.72.41 கோடியினை ஒப்பளிப்பு செய்தது.

31-3-2003 வரையில் 54 இலட்சம் சேலைகள் மற்றும் 49 இலட்சம் வேட்டிகள் நியாயவிலைக் கடைகள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக ரூ. 36.38 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 8.03 மலிவு விலை வேட்டி சேலைகளின் தரத்தினை உயர்த்துதல்

அரசின் அறிவுரைக்கிணங்க, பருத்தி நூலுடன் பாலியஸ்டர் இழை கலந்து உற்பத்தி செய்வதற்கு, சேலைகளில் 150 புதிய வடிவமைப்புகளையும், வேட்டிகளில் 11 புதிய வடிவமைப்புகளையும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அறிமுகப்படுத்தியது. 2002-03ஆம் ஆண்டில் 35 இலட்சம் சேலைகளும் 14 இலட்சம் வேட்டிகளும் பருத்தி நூலுடன் பாலியஸ்டர் நூல் கலந்து உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. 31-03-2003 இல் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் 15,75,700 சேலைகளும், 6,62,750 வேட்டிகளும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவை தவிர, பருத்தி பாலியஸ்டர் கலந்த சல்வார் கமீஸ் இரக உற்பத்தியையும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்டு வருகிறது. திட்டமிட்டபடி சேலை, வேட்டிகளை உற்பத்தி செய்வதற்கு துறை அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

### 8.04 பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸில் சரக்கு இருப்பினை குறைக்க மேற்கொண்ட நடவடிக்கை விபரம்

இந்த அரசு பொறுப்பேற்றபோது கைத்தறி துணிகள் பெருமளவில் தேங்கி இருந்ததால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவ்விருப்பினை குறைப்பதற்காக அரசு பல



வழிகளில் நடவடிக்கை மேற்கொண்டது. இருப்பு தேககத்தைக் குறைக்க பண்டிகை காலங்களில், மாவட்டங்கள் தோறும் கண்காட்சிகள் மற்றும் சிறப்பு விற்பனைகள் மேற்கொள்ளப்பட்டது. அதுமட்டுமின்றி, கல்லூரிகளிலும், வெளிமாநிலங்களிலும் சிறப்பு விற்பனை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் இருப்பிலிருந்த ஓராண்டு மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பட்டு இரகங்களுக்கு முறையே 45% மற்றும் 55% சிறப்புக் கழிவும், பருத்தி இரகங்களுககு முறையே 30% மற்றும் 45% சிறப்புச் கழிவும் வழங்கி விற்பனை மேற்கொள்ள ஆகஸ்ட் 2002 இல் அரசு அனுமதி வழங்கியது. சங்கங்களிலுள்ள சரக்குத் தேக்கத்தினை குறைக்க, பருத்தி இரகங்களுக்கு ஏற்கெனவே வந்த 20% தள்ளுபடி மானியத்துடன் 15-9-2002 முதல் 31-1-2003 முடிய கூடுதலாக 10% சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கி விற்பனை செய்ய அரசு அனுமதி வழங்கியது. மேறகண்ட நடவடிக்கைகளின் மூலம் 2002-03 ஆம் ஆண்டில் ரூ. 57.67 கோடி மதிப்புள்ள கைத்தறி துணிகள் விற்பனையாகியுள்ளன.

மேறகாண் நடவடிக்கைகளின் மூலம் சரககிருப்பினை குறைந்தது போக மீதமுள்ள சரக்கிருப்பில் மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட சரக்குகளை ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு அனுமதித்துள்ளது.

### 8.05 நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்துதல்

கைத்தறி மற்றும் துணிநூல் துறை ஏற்றுமதிக்கு முக்கியத்துவம அளித்து, நெசவாளர்களை ஏற்றுமதி இரக உறபத்தியில் ஈடுபடுத்தி வருகிறது. தற்போது 374 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 23,000-க்கும் மேறபட்ட தறிகள் ஏற்றுமதி இரக உறபத்தியில் ஈடுபட்டுள்ளன. சங்கங்களின் மூலம் படுக்கைவிரிப்புகள், திரைச்சீலைகள், மேசை விரிப்புகள், சமையலறை துணி வகைகள், டர்க்கி துண்டுகள், சிறு கைத்துண்டுகள் மற்றும் ஏப்ரன் போன்ற இரகங்கள் தயார் செய்து ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி (Deemed Export) செய்யப்படுகிறது. ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுவதன் மூலம் நெசவாளர்கள் அதிக அளவில் கூலி பெறுகின்றனர்.

2002-03 ஆம் ஆண்டில் ரூ. 175.00 கோடிக்கு ஏற்றுமதி விற்பனைக்கான குறியீடு நிர்ணயிக்கப்பட்டதில் ரூ. 179.00 கோடி மதிப்பிற்கு கைத்தறி துணிகள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

[2003 மே 7

## 8.06 வட்டி மானியத் திட்டம்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட வேண்டிய வட்டி மானியத் தொகை 1998 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படாமல் இருந்ததால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மிகுந்த இடர்ப்பாட்டிற்கு உள்ளாயின. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1-8-2002 அன்று கைத்தறி நெசவாளர்களுக்கான பல்வேறு நிவாரண உதவிகளை அறிவிக்கையில், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) நிலுவையாக இருந்த வட்டி மானியத் தொகையும் வழங்கப்படும் என அறிவித்தார்கள். அதன்படி, 31-12-1998 முதல் 31-12-2001 உள்ள காலாண்டுகளுக்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) வழங்கப்பட வேண்டிய வட்டி மானிய நிலுவைத் தொகை ரூ. 27.50 கோடியினை அரசு விடுவித்து வழங்கியது. இதனால் சங்கங்களின் நடைமுறை மூலதனம் அதிகரித்து, சங்கங்களின் நிதிச் செயல்பாட்டினை மேம்படுத்த பேருதவியாக இருந்தது.

## 8.07 நெசவாளர் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 1-8-2002 அன்று அறிவித்ததற்கிணங்க, நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் (மாதம் ரூ.200/-) மற்றும் குடும்ப ஓய்வூதியம் (மாதம் ரூ.350/-) வழங்குவதற்காக ரூ.2.50 கோடி மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 2002-03ஆம் ஆண்டில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் 9,027 நெசவாளர்களும், குடும்ப ஓய்வூதியத் திட்டத்தில் 458 நெசவாளர் குடும்பங்களும் பயனடைந்தனர்.

## 8.08 நெசவுத் திறன் மற்றும் வடிவமைப்புத் திறனை மேம்படுத்த நெசவாளர்களுக்கான சிறப்பு பயிற்சி

சென்னையிலுள்ள தேசிய ஆடை வடிவமைப்பு மையம் மூலம் வடிவமைப்பு மற்றும் ஆடை அலங்காரத் தொழில்நுட்ப சிறப்பு பயிற்சி அளிக்க 1,061 நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பயிற்சிக்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ. 13.83 இலட்சம் விடுவித்துள்ளது. தேசிய ஆடை வடிவமைப்பு மையம் முதற்கட்டமாக 55 நெசவாளர்களைக் கொண்டு 10-3-2003 முதல் இப்பயிற்சியினை துவக்கியுள்ளது.



2003 மே 7]

## 8.09 மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி

மகளிர் கைத்தறி நெசவாளர்கள் சுயமாக வேலை செய்து வருவாய் ஈட்டும் வகையில் தையல் மற்றும் இதர வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி அளிக்க 5,000 மகளிர் கைத்தறி நெசவாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மகளிர் கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ரூ. 20.00 இலட்சம் தொகையினை விடுவித்துள்ளது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் ஏப்ரல் 2003 முதல் மேற்படி பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு இப்பயிற்சி மூன்று மாத காலங்களுக்குத் தொடர்ந்து நடைபெறும்.

## 8-10 கைத்தறித் துணிகள் இரக மாற்றம்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 13-7-2001 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், கைத்தறி நெசவாளர்களின் தொழில்நுட்பத்தினை மேம்படுத்தும்பொருட்டு ஒரு திட்டத்தினை வடிவமைக்க அரசு 2001 ஆம் ஆண்டில் ஒரு குழுவினை அமைத்து குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், 10,000 தறிகளை இரக மாற்றுதலுக்கு உட்படுத்த அரசு ஆணையிட்டது. அவற்றுள் 5,000 தறிகள் விலைமதிப்புமிக்க இரக உற்பத்திக்கும், மீதமுள்ள 5,000 தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்திக்கும் மாற்றுவதற்கு ஆணையிடப்பட்டது. இதன் அடிப்படையில் 11,000 தறிகள் இரக மாற்றுதலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

## 8.11 அனைத்து மகளிர் நெசவு உபதொழில் கூட்டுறவுச் சங்கம் அமைத்தல்

தேனி மாவட்டத்திலுள்ள சக்கம்பட்டி மற்றும் டி. சுப்புலாபுரம் பகுதிகளிலும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள சின்னாளப்பட்டி பகுதியிலும் மூன்று "அனைத்து மகளிர் நெசவு உபதொழில் கூட்டுறவுச் சங்கங்கள்" அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்கள் மார்ச் 2003 இல் இருந்து செயல்படத் துவங்கியுள்ளன.

## 8.12 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஒப்படைத்தல்

நல்வாழ்வு செறிவுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட 45 ஆரம்ப சுகாதார நிலையங்கள், சுகாதாரத் துறை மற்றும் நகராட்சி நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது.

### 8.13 நெசவாளர் குடியிருப்புகளில் ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைத்தல்

திருச்சி, திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், காஞ்சிபுரம், ஈரோடு மற்றும் சேலம் ஆகிய 13 மாவட்டங்களில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 50 நெசவாளர் குடியிருப்புகள் கொண்ட இடங்களில் ரூ.10,000/- மதிப்பில் நீர்த் தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட 13 மாவட்டங்களிலும் தெரிவு செய்யப்பட்டுள்ள 50 நெசவாளர் குடியிருபபுகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பதற்கு ரூ.17.50 இலட்சம் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

### 8.14 விசைத்தறிகளை நவீனமயமாக்குதல்

2000 சாதாரண விசைத்தறிகளை, தறி ஒன்றுக்கு ரூ.10,000/- மதிப்பில் நவீனமயமாக்குவதற்கு விசைத்தறி பதிவு நிதியிலிருந்து ரூ.1.00 கோடி செலவு செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவற்றில் ரூ.5,000/- அரசு மானியமாகவும், எஞ்சிய ரூ.5,000/- தறி உரிமையாளர்களின் பங்காகவும் இருக்கும். தமிழ்நாட்டில் விசைத்தறிகள் நிறைந்த 10 பகுதிகளில் பயனாளிகள் கண்டறியப்பட்டு, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### 8.15 ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைத்தல்

சென்னைக்கருகில் உள்ள இருங்காட்டுக்கோட்டை மற்றும் திருப்பூரில் ஆயத்த ஆடை பூங்காக்கள் அமைக்க மத்திய அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. மதுரையில் ஆயத்த ஆடை பூங்கா அமைப்பது தொடர்பான இடம் தெரிவு செய்வது குறித்தான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.16 இலவச பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம்

இலவச பள்ளிச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், 2001-2002 ஆம் ஆண்டில் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்கு ரூ. 39.30 கோடி மதிப்புள்ள 130.19 இலட்சம் மீட்டர் இலவசச் சீருடைத் துணிகள் வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, 2002-03 ஆம் கல்வியாண்டில் 24.62 இலட்சம் மீட்டர் இலவசச் சீருடைத் துணிகள் கீழ்க்காணும் துறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.



| வ. எண் | துறை | அளவு (மீட்டர் இலட்சத்தில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | ஆதிதிராவிடர் நலத் துறை | 20.09 | 607.54 |
| 2. | பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை. | 1.12 | 33.95 |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை | 3.41 | 103.40 |
| | **மொத்தம்** | **24.62** | **744.89** |

இலவச பள்ளிச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 194 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 5000 கைத்தறி நெசவாளர்கள் தொடர் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

2002-03 ஆம் ஆண்டில் இத்திட்டத்தினைத் தொடர்ந்து செயல்படுத்தவும் 120.03 இலட்சம் மீட்டர் துணி இரகங்களை பாலியஸ்டர் இழை கலந்து உற்பத்தி செய்யவும் அரசாணை வெளியிடப்பட்டது.

### 8.17 கடாக் மற்றும் வெங்கடகிரியில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில பயிலும் தமிழக மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்

கடாக் மற்றும் வெங்கடகிரியில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் 3 ஆண்டு கைத்தறி தொழில்நுட்பப் பட்டயப் படிப்பினை பயிலும் தமிழக மாணவர்களுக்கு 2002-03ஆம் கல்வி ஆண்டு முதல் உதவித் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்கென தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய நிதியிலிருந்து ரூ.81,000/- வழங்க அரசு அனுமதித்துள்ளது.

## கைத்தறி தொழில்களின் வளர்ச்சி மற்றும் நலனுக்கென கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மேற்கொண்ட நடவடிக்கைகள்

### 8.18 1,000 மகளிர் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்

அதிக ஊதியம் ஈட்டுவதற்கு வழி செய்யும் வகையில் மதிப்புகூடிய இரகங்களை உற்பத்தி செய்வதற்கான நெசவுத் திறன் மற்றும் தொழில்

[2003 மே 7

நுட்பத்தில் ஆண்டிப்பட்டி, வேலூர், கோயம்புத்தூர், சேலம் மற்றும் மதுரை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1,000 மகளிர் நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

### 8.19 மதுரை மற்றும் ஈரோட்டில் கணினி வடிவமைப்பு மையங்கள் அமைத்தல்

கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான வடிவமைப்புகளை உருவாக்குவதற்கு மதுரை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் கோ-ஆப்டெக்ஸ் கணினி வடிவமைப்பு மையங்களை அமைத்துள்ளது.

### 8.20 ராஞ்சி, டேராடூன், ராய்ப்பூர் மற்றும் போபால் ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களை அமைத்தல்

போபால் மற்றும் ராஞ்சி ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. மேலும், டேராடூன் மற்றும் ராய்ப்பூரில் விரைவில் விற்பனை நிலையங்கள் துவக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 8.21 சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு விற்பனை நிலையத்தில் "தங்களின் சேலைகளை தாங்களே வடிவமைக்கும் திட்டத்தினை" அறிமுகப்படுத்துதல்

சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு விற்பனை நிலையத்தில் 14-6-2002 அன்று "தங்களின் சேலைகளை தாங்களே வடிவமைக்கும் திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு நுகர்வோர் தங்களுக்குத் தேவையான வடிவமைப்புகளை கணினி மூலம் தாங்களே தேர்ந்தெடுத்து வடிவமைக்கின்றனர்.

### 8.22 தேசிய அலங்கார ஆடை வடிவமைப்பு நிறுவனம், சென்னை மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனம், பெங்களூர் உதவியோடு புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துதல்

பட்டு மற்றும் பருத்தி துணிவகைகளில் புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக தேசிய அலங்கார ஆடை வடிவமைப்பு நிறுவனம், சென்னையிலிருந்து 110 புதிய வடிவமைப்புகளும், தேசிய வடிவமைப்பு நிறுவனம், பெங்களூரிலிருந்து 50 புதிய வடிவமைப்புகளும் பெறப்பட்டு, சந்தையில் விரைவாக விற்பனையாகக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்வதற்காக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.



2003 மே 7]

### 8.23 விசைத்தறி துணிவகைகளை விற்பனை செய்வதற்கென பிரத்தியேக விற்பனை நிலையம் துவக்குதல்

சென்னை புரசைவாக்கம் பகுதியில் விசைத்தறி துணிவகைகளை விற்பனை செய்வதற்கென பிரத்தியேக கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம் 19-2-2003 அன்று துவக்கப்பட்டுள்ளது.

## 9. 2003-04 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்

வேகமான வளர்ச்சிக்கு மாநிலத்தின் இரண்டாவது முக்கிய தொழிலான ஜவுளித் தொழில் அரசினால் இனங்காணப்பட்டுள்ளது. மாநில அரசின் 2003-04 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் இத்தொழிலில் உள்ள இடர்ப்பாடுகளைக் களைய சீரிய முயற்சி மேற்கொள்ளப்படும் என அரசு தெரிவித்துள்ளது. இத்தொழிலில் உள்ள சில குறைபாடுகளினால் உற்பத்தித் திறன், தரம் மற்றும் விலையில் போட்டியிடும் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது ஜவுளித் தொழிலில் உள்ள அனைத்துப் பிரிவுகளிலும் காணப்படும் தொழில்நுட்பப் பின்னடைவே இதன் முக்கிய காரணம். இக்காரணத்தினால் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஜவுளித் தொழிலில் உள்ள போட்டியாளர்களால் வெகுவாக இவர்கள் பாதிக்கப்பட்டு இத்தொழிலுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. தமிழக ஜவுளித் தொழில் அனைத்துத் தொழில் முன்னேற்றங்களையும் தன்னகத்தே விரைவில் ஏற்படுத்திக் கொண்டு மறு கட்டமைப்புச் செய்து பிற போட்டியாளர்களைச் சந்திக்க தயார் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

மேலும் தமிழகம் தனது ஜவுளித் தொழிலுக்குத் தேவையான பருத்தி உற்பத்தித் தேவைக்கேற்ப இல்லாமல் மிகவும் குறைந்து இருப்பதனால் பிற மாநிலங்களையும், பிற நாடுகளையும் சார்ந்துள்ளது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை சவாலினை எதிர்கொள்ள இத்தொழிலுக்குப் புத்துயிரூட்ட துணிநூல் தொழில்நுட்ப வல்லுனர் குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும், தொழில்நுட்பத் திறனை ஏற்றுக் கொள்ளுதல், மேம்படுத்துதல் ஆகியவை ஊக்குவிக்கப்பட்டு உலக சந்தையில் உள்ள சவால்கள் எதிர்கொள்ளப்படும் ஏற்றுமதி தொடர்புடைய நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ள இடங்களில் அரசு அடிப்படை வசதிகளுக்காக சிறப்புக் கவனம் செலுத்த உள்ளது. தொழில்நுட்ப மேம்பாட்டுத்

திட்டம் (TUF) மற்றும் ASIDE உட்பட இதர திட்டங்களின்கீழ் உள்ள நிதி வசதிகள் கூட்டு நியாயமாட்டு மத்திய அரசின் நிதி மேற்காணும் திட்டங்களுக்கு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளப்படவுள்ளது.

ஒட்டுமொத்த சமச்சீரான வளர்ச்சியினை அடையவும், கீழ்க்கண்ட நிகழ்வுகளை எதிர்கொள்ள சரியான சூழலை ஏற்படுத்தவும் அரசு கிரியா ஊக்கியாகச் செயல்பட உத்தேசித்துள்ளது:

1. தாராளமயமாக்கலுக்குப் பிறகு எதிர்கொள்ள வேண்டிய அச்சுறுத்தல்களும் சவால்களும்
2. தகுதி வாய்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான நடைமுறை மூலதனம் மற்றும் அதிகபட்சமான வட்டி விகிதத்துடன் கூடிய கடன் சுமையில் இருந்து மீளத் தேவையான நிதி வளத்தை ஏற்படுத்துதல்
3. உற்பத்தித் திறன் மற்றும் தர மேம்பாட்டிற்காக தொழில் நுட்பத் தரத்தினை மேம்படுத்துதல்
4. ஆலைகள், விசைத்தறிகள் மற்றும் நெசவு சார்ந்த பதனிடுதல் ஆகியவற்றுக்கு அடிப்படை வசதியினை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.

மேற்கூறிய செயல்பாடுகளுக்கு பத்தாவது ஐந்தாண்டு திட்ட நிதிகளும் மற்றும் புதிய செயல் திட்டங்களும் பயன்படுத்திக் கொள்ளப்படும்.

## 9.01 இயந்திரங்களின் இயக்கத் திறன் மற்றும் தொழிலாளர் உற்பத்தித் திறன் மேம்படுத்துதல்

நவீன நிர்வாகம், உற்பத்தி முறைகள், நவீன இயந்திரங்களைப் பராமரித்தல், நவீன சாயமிடும் முறைகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்தல், ஏற்றுமதி குறித்த பயிற்சி ஆகியன தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாகும். இது அனைத்துத் தொழில்களுக்கும் பொருந்தும். எனவே, தொழிலின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது மிகவும் அவசியமாக உள்ளது. மூலப்பொருளின் செலவினத்தை அதிகரிக்காமல் தர விழிப்புணர்வு மற்றும் தரத்தினை அதிகப்படியாக வலியுறுத்தி ஒட்டுமொத்தத் தரத்தினை மேம்படுத்துவது மிகவும் அவசியமாக உள்ளது.





இத்தொழிலில் தன்னிறைவு அடைய ஏதுவாக, தொழில்நுட்பப் பயிலகங்களுடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டு தொழிலுக்குத் தேவையான தொழிலாளர் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களைப் பயிற்றுவிப்பதும், மறு பயிற்சி அளிப்பதும் அவசியமாகிறது. மத்திய அரசின் பல்வேறு திட்டங்களின்கீழ் உள்ள நிதியினைப் பயன்படுத்தி கிராமப்புற ஆண் மற்றும் பெண்களுக்கு பயிற்சி அளித்து தொழிலுக்குத் தேவையான பயிற்சி பெற்ற பணியாளர்கள் கிடைப்பதற்கான சூழல் உருவாக்கப்படும்.

கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேல் தொழிலக இயந்திரவியல் மற்றும் மனித வள மேம்பாட்டில் சேவை புரிந்துவரும் தென்னிந்திய மில்கள் சங்கம் ஜவுளித் தொழிலுக்கான அனைத்துக் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பயிலகம் ஒன்றை நிறுவ முன்வந்துள்ளது. இப்பயிலகம் தொழிலாளர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு (பொருத்துநர் மற்றும் மின் பணியாளர்) பயிற்சி அளிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கும். இம்முயற்சியில் அரசு அவர்களுக்கு உறுதியாக துணைபுரியும்.

## 9.02 நூற்பாலைகள்

பருத்தி நூற்பு ஆலைத் தொழில் தமிழக ஜவுளித் தொழிலுக்கு முதுகெலும்பாக இருப்பதுடன் பருத்தி நூல் உற்பத்தியில் இம்மாநிலத்தை முன்னோடி மாநிலமாக ஆக்கி உள்ளது. எனவே, இத்தொழில் மாநிலத்தில் மிக முக்கியமானதாகும். ஜவுளித் தொழில் தமிழ்நாட்டில் 2.17 இலட்சம் தொழிலாளர்களைக் கொண்ட மிகப் பெரிய ஒருமுகப்படுத்தப்பட்ட தொழிலாகும். ஒரு தொழிலாளியைச் சார்ந்து 5 நபர்கள் என்னும் சாதாரண வீதத்தில் கணக்கிட்டால் சுமார் 12.50 இலட்சம் நபர்கள் இத்தொழிலைச் சார்ந்து இருப்பர். எனினும், தமிழக நூற்பு ஆலைத் தொழில் கடந்த சில ஆண்டுகளாக தேவைக்கு அதிகமான உற்பத்தி, தொழில்நுட்பப் பின்னடைவு காரணமாக சிரமங்களைச் சந்திக்க நேர்ந்தது. இதன் விளைவாக இத்தொழிலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

அமைப்பு சார்ந்த நூற்பாலைகள் நலிவடைவதும், மூடப்படுவதும் கவலை அளிக்கக்கூடிய ஒன்றாகும். அமைப்பு சார்ந்த கூட்டு நெசவு ஆலைகளில் ஏற்பட்ட கட்டமைப்பு மாற்றங்கள் ஜவுளித் தொழில் நலிவுறுவதற்கும், பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறி தொழில் வளர்ச்சி

[2003 மே 7

அடைவதற்கும் முக்கிய காரணமாகும். மேலும் ஆலைகள் நலிவுற்றது/மூடப்பட்டதற்கு நவீனப்படுத்தப்படாததால் ஏற்பட்ட குறைந்த உற்பத்தித் திறன், தேவை குறைந்தது மற்றும் ஏற்றுமதி சந்தையினை விரிவுபடுத்த இயலாதது, மூலப்பொருள் செலவினம் அதிகரித்தது, சரியான நேரத்தில், சரியான அளவு நடைமுறை மூலதனம் பெறுவதில் உள்ள சிரமங்கள் ஆகியவை காரணங்களாகும்.

புத்துயிரூட்ட வாய்ப்புள்ள ஆலைகளை எதிர்நோக்கி உள்ள பிரச்சினைகள்:—

1. நவீனப்படுத்துதல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு.
2. உற்பத்திப் பொருளின் தரத்தினை மேம்படுத்துதல்.
3. மிகவும் பழமையான இயந்திரங்கள் மற்றும் அதிகப்படியான கதிர்களைக் குறைத்தல்.
4. உற்பத்திச் செலவினத்தைக் குறைத்தல்.

**9.02 (அ) நவீனப்படுத்துதல், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்திப் பொருளின் தரத்தினை மேம்படுத்துதல்**

உற்பத்தியில் இயந்திரங்களின் உற்பத்தித் திறன் மிகவும் முக்கிய அம்சமாகும். இயந்திரங்கள் முன்னுரிமை அடிப்படையில் நவீனமயமாக்கப்பட வேண்டும். மேலும், தொழில்நுட்பத் திறன் இத்தொழிலில் ஒட்டுமொத்தமாக உயர்த்தப்பட வேண்டும். மத்திய அரசின் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி இவ்வசதிக்காகப் பயன்படுத்தப்படும்.

**9.02 (ஆ) மிகவும் பழைய இயந்திரங்கள் மற்றும் அதிகப்படியான கதிர்களைக் குறைத்தல்**

பல்வேறு திட்டங்களின்கீழ் புதிய மற்றும் நவீன இயந்திரங்கள் பெறும் ஆலைகள் அவற்றில் உள்ள பழைய மற்றும் குறைந்த உற்பத்தித் திறன் உள்ள இயந்திரங்களைக் கழித்துக் கட்ட வேண்டும் மேலும், இன்றைய நிலவரப்படி மாநிலத்தில் பெரும்பாலான நிறுவப்பட்ட கதிர்கள் செயலிழந்துள்ளன. எனவே, கட்டாயமாக பழைய இயந்திரங்களைக் கைவிடுதல், இலாபகரமாக இயங்க இயலாத ஆலைகளை மூடுதல் போன்ற செயல்களை மேற்கொள்ள தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.



2003 மே 7]

**9.02 (இ) மூலப்பொருள் (பருத்தி) செலவினத்தைக் குறைத்தல்**

ஜவுளித் தொழிலில் பருத்தி மிக முக்கியமான இழையாதலால் தொழிலின் பொதுவான வளர்ச்சிக்கும், குறிப்பாக ஆலைகளின் வளர்ச்சிக்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. 1997-98இல் 2.47 இலட்சம் ஹெக்டேர்களாக இருந்த பருத்தி சாகுபடி 1999-2000 ஆம் ஆண்டில் 1.85 இலட்சம் ஹெக்டேர்களாகக் குறைந்து, 2001-02 ஆம் ஆண்டில் 2.00 இலட்சம் ஹெக்டேர்களாக உயர்ந்துள்ளது. தமிழ்நாட்டின் ஆண்டுத் தேவையான 170 கிலோ கொண்ட சுமார் 65 இலட்சம் பேல்களில் சுமார் 5 இலட்சம் பேல்கள் மட்டுமே தமிழகத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது. இது தமிழகத்தின் தேவையில் 10 சதவிகிதத்திற்கும் குறைவானதாகும். பருத்தி தொழில்நுட்பக் குழு திட்டத்தின்கீழ் பருத்தி சாகுபடி பரப்பளவினை அதிகரித்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் பருத்தி மற்றும் விதைகளின் தரத்தினை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள விவசாயத் துறை ஊக்குவிக்கப்பட வேண்டும்.

**9.03 பதனிடும் தொழில்**

துணித் தொழிலின் ஓர் அங்கமான பதனிடும் பிரிவு நவீனப்படுத்தப்படாமல் உள்ளது. அதனால், தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து பெற்ற நிதியுதவி எதிர்பார்த்ததைவிட மிகவும் குறைவாகவே உள்ளது.

இத்துறையை மேம்படுத்த அரசு கீழ்க்கண்ட உதவிகளைச் செய்யும்:—

* சுற்றுப்புறச் சூழலுக்கேற்பவும், பன்னாட்டு தர நிர்ணயத்திற்கேற்பவும் துணிகளைப் பதனிடும் நவீன ஆலைகளை நிறுவுதல்.
* கணினி மூலம் வடிவமைத்தல், கணினி மூலம் நிறங்கள் பொருத்தம் பார்த்தல், பல்வேறு தரப் பரிசோதனை வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவற்றை பன்முகப்படுத்தப்பட்ட நெசவு மையங்களுக்கு விரிவுபடுத்துதல்.
* உலகத் தரம் நிர்ணயம் தொடர்பான ஐ.எஸ்.ஓ. 9000 (தரம்) ஐ.எஸ்.ஓ.14000 (சுற்றுச்சூழல்) ஆகிய தகுதிகளைப் பெற தேவையான உதவிகளை வழங்குதல்.

தீங்கு விளைவிக்காத சுற்றுச்சூழலுக்கு உகந்த சாயப்பொருள்கள் மற்றும் இயற்கை சாயங்கள் உற்பத்தி செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உரிய முக்கியத்துவம் அளித்து மின் சக்தி சேமிப்பிற்கும் வழிவகை செய்யப்படும். உள்ளூரில் தொழில் அமைப்புகள், மத்திய அரசின் ஆராய்ச்சி நிறுவனங்கள், மாநில அரசின் பல்வேறு துறைகள் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் இவற்றுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மையமாக கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரகம் செயல்படும்.

## 9.04 தகவல் தொழில்நுட்பத்தை உபயோகப்படுத்துதல்

ஜவுளித் தொழில் மூலப்பொருள்கள் தெரிவு, தரக்கட்டுப்பாடு, வாடிக்கையாளர் சேவை, சந்தை ஆய்வு ஆகிய அனைத்து செயல்களும் ஒருங்கிணைந்து செயல்பட தகவல் தொழில்நுட்பம் முக்கியமான சாதனமாகும். இவ்வசதியினை ஜவுளித் தொழில் முழுமையாகப் பெற்றுக்கொள்ள அனைத்து முயற்சிகளையும் மாநில அரசு மேற்கொள்ளும்.

## 9.05 விற்பனை யுக்திகள்

தொழில்நுட்ப மேம்பாட்டிற்கு இணையாக ஜவுளித் தொழில் நூற்பு ஆலைகள் உட்பட பாரம்பரியமாகக் கடைபிடித்து வரும் சந்தை முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. மாநில அரசு, மத்திய அரசின் உதவியுடன் சந்தை ஆராய்ச்சி பிரிவுகளை அமைத்து உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும்.

## 9.06 பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறி தொழிலை நவினப்படுத்துதல்

விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகளின் தரத்தை உயர்த்துதல் மற்றும் உற்பத்தியினைப் பெருக்குதல் ஆகியவற்றுக்கு தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே விசைத்தறித் தொழிலின் முக்கிய கொள்கை ஆகும். உலக மயமாக்கலால் அதிக அளவில் பாதிக்கப்படும் விசைத்தறியாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்குரிய நல்வாழ்வுத் திட்டங்களை அளிப்பதும் கொள்கைகளில் ஒன்றாகும்.

அதிக அளவு விசைத்தறிகள் கொண்ட பகுதிகளை உருவாக்கி அவற்றை தொழில்நுட்ப மேம்பாட்டுடன்கூடிய சிறப்பு வாய்ந்த மையங்களாக உருவாக்கத் தேவையான விசேட முயற்சிகள்



மேற்கொள்ளப்படும். ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள், இந்த மையங்கள் வளர்ச்சி நிலையை எய்திட இவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் வகையில் பிரத்யேகமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். விசைத்தறி ஏற்றுமதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (PDEXCIL) மூலம் அமைக்கப்பட உள்ள நாடா இல்லா விசைத்தறி நெசவு பூங்காவிற்கு ஊக்கம் அளிக்கப்படும்.

நவீனமயாக்குவதற்குத் தேவையான நிதி உதவியினை தொழில்நுட்ப மேம்பாட்டு நிதியிலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 9.07 புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம் அமைத்தல்

கைத்தறி துணி வகைகளின் விற்பனையினை மேம்படுத்தவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் போட்டியிடவும், ஏற்றுமதியினை அதிகரிக்கவும் 2003-04ஆம் ஆண்டில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையில் புள்ளி விவர மற்றும் சந்தை நிலவர நுண்ணாய்வு மையம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 2003-04ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் ரூ. 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.08 "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்களுக்கு உதவித்தொகை

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகளின் விற்பனையினை அதிகரிக்கும் ஓர் உத்தியாக "லூம் வேர்ல்டு" என்ற பெயரில் சிறப்பு வகை விற்பனை நிலையங்கள் சென்னை அண்ணா நகர், கோயம்புத்தூர், மற்றும் ஈரோட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவை நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

"லூம் வேர்ல்டு" என்ற வியாபார பெயரினை பிரபலப்படுத்த பல்வேறு பகுதிகளில் கண்காட்சிகள் "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. 2003-04 ஆம் ஆண்டில் முக்கியமான 5 இடங்களில் கண்காட்சிகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. "லூம் வேர்ல்டு" விற்பனை நிலையங்களை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் கண்காட்சிகள் நடத்தவும் மற்றும் விளம்பரங்கள் செய்யவும் 2003-04 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தின்கீழ் ரூ. 20.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 7

## 9.09 மாவட்ட அளவிலான கண்காட்சிகள் நடத்துதல்

கைத்தறித் துணி விற்பனையினை அதிகரிக்க மத்திய அரசின் நிதியுதவியுடன் பல்வேறு மாவட்டங்களில், மாவட்ட அளவிலான கண்காட்சிகளை 2003-04 ஆம் ஆண்டில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 9.10 மலிவு விலை வேட்டி சேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களுக்கு ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் சிறப்புத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மலிவு விலை வேட்டி சேலைத் திட்ட துவக்கத்தின்போது, இத்திட்டம், நெருக்கடியான சூழ்நிலைக்குத் தீர்வு காண்பதற்காக ஏற்படுத்தப்பட்ட தற்காலிகத் திட்டமாகும் என அறிவித்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அரசு இத்திட்டத்திற்கென சலுகைகளையும் மானியங்களையும் நீண்ட காலத்திற்கு வழங்க இயலாது எனவும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை இதற்கான நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அறிவுரை வழங்கினார். வெளிச்சந்தையில் விரைவாக விற்பனையாகக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்யவும், மதிப்பு கூடிய துணிகளை உற்பத்தி செய்யவும் நெசவாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும், நெசவாளர்கள் புதிய நெசவு வகைகளை கையாளத் தேவையான நிதி உதவி ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெறப்பட வேண்டும் எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

தமிழகத்தின் 13 மாவட்டங்களில் பரவலாக உள்ள 25,000 கைத்தறி நெசவாளர்கள் கிராமப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்வதால், அந்நெசவாளர்களை வெளிச்சந்தையில் விரைவாக விற்பனையாகக்கூடிய இரகங்களையும், மதிப்பு கூடிய துணிகளையும் உற்பத்தி செய்ய ஊக்குவித்து, ஸ்வர்ண ஜெயந்தி கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் அங்கமான சிறப்புத் திட்டத்தின்கீழ் திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும். இத்திட்டம் கைத்தறி மற்றும் துணிநூல் ஆணையரால் செயல்படுத்தப்படும். தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு நிறுவனம் (NIFT) சென்னை இத்திட்டத்திற்கான ஆலோசகராக செயல்படும். இத்திட்டம் 2003-04 ஆம் நிதியாண்டில் செயல்படத் துவங்கும்.



2003 மே 7]

## 9.11 மலிவு விலை வேட்டி சேலைத் திட்டம்

மலிவு விலை வேட்டி சேலைத் திட்டத்தின்கீழ் ஈடுபட்டுவரும் கைதத்தறி நெசவாளர்களுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் உரிய பயிற்சி அளித்து மாற்று இரக உற்பத்திக்கு மாற்றம் செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன், ஒரு இரகத்திலிருந்து இன்னொரு இரகம் உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் பயிற்சியினை முடிக்கத் தேவையான கால இடைவெளியைக் கருத்தில் கொண்டு அரசு, மலிவு விலை வேட்டி சேலைத் திட்டத்தினை 2003-04 ஆம் ஆண்டிற்கும் தொடர்ந்து செயல்படுத்த முடிவு செய்துள்ளது. இத்திட்டத்திற்காக 2003-04 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.27.67 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9.12 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நெசவாளர்களை அதிக அளவில் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி, 2003-04 ஆம் ஆண்டில் ரூ.200.00 கோடி மதிப்பிற்கு ஏற்றுமதியாளர்கள் மூலம் ஏற்றுமதி (Deemed Export) விற்பனையினை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# 10. துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் மற்றும் 2003-04 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டங்கள்

## 10.01 தள்ளுபடி மானியத் திட்டம்

கைத்தறி பிரிவினரின் நிலையினை கருத்தில் கொண்டும் மற்றும் கைத்தறித் துணிகளின் விலையில் சாதகமற்ற நிலையின் காரணமாகவும் அரசு கைத்தறி துணிகளின் விற்பனைக்கு தள்ளுபடி மானிய உதவி வழங்கி வருகின்றது. இது கைத்தறி நெசவாளர்களைக் கடுமையான போட்டியிலிருந்து மறைமுகமாக தடுப்பதற்கு ஒரு வழியாகவும் மற்றும் கைத்தறித் துணிகளின் விற்பனைக்கு சந்தையில் ஏற்படக்கூடிய மந்த நிலையினைப் போக்கவும் வழி வகுக்கின்றது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 சதவிகிதம் தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது. அதாவது பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 சதவிகிதம் இதில் எது குறைவோ அத்தொகை, பருத்தி இரகங்கள் உருப்படி ஒன்றுக்கு ரூ.100/- அல்லது

[2003 மே 7

20 சதவிகிதம் இதில் எது குறைவோ அத்தொகைக்கு அரசு தள்ளுபடி வழங்க அனுமதித்துள்ளது. மாநில அரசின் கொள்கையின்படி மத்திய அரசினால் தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டத்தின்கீழ் "விற்பனை ஊக்குவிப்பு" (தள்ளுபடி மானியம்) இனத்திற்கு வழங்கப்படும் தொகையினைவிட கூடுதலாக ஆகும் செலவினத்தை மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

*2002-03* ஆம் ஆண்டில் தள்ளுபடி மானியத் தொகையாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும் ரூ.*75.00* கோடி வழங்கப்பட்டுள்ளது. *2003-04* ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில தள்ளுபடி மானியம்/ விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்திற்கென மொத்தம் ரூ.*83.00* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இதில் ரூ.*26.00* கோடி திட்டம் சாரா தலைப்பிலும், ரூ.*57.00* கோடி திட்டத் தலைப்பிலும ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.)

## 10.02 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதனம் வழங்குதல்

தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கியின் (நபார்டு) மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கிக்கும் சலுகை வட்டி விகிதத்தில் நிதியுதவி வழங்கப்பட்டது. தற்போது பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) வழக்கமான வட்டி விகிதங்களிலேயே நடைமுறைமூலதனம் வழங்கப்படுவதால் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 3 சதவிகித வட்டி மானியம் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) ஒரு சதவிகித வட்டி மானியம் அரசினால் நேரிடையாக வழங்கப்பட்டு வருகிறது.

*2003-04* ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு அடையாள ஒதுக்கீடாக ரூ.*1,000/-* ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*2002-03* ஆம் ஆண்டுக்கு தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்டு) பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கும் (கோ-ஆப்டெக்ஸ்) ஆகியவற்றிற்கு ரூ.*412.73* கோடி அளவிற்கு காசுக்கடன் அனுமதித்துள்ளது.



2003 மே 7]

## 10.03. 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டம்

மத்திய ரிசர்வ் வங்கியின் கைத்தறி நிதியுதவித் திட்டத்தின்கீழ், பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை வசூலிக்க வாய்ப்பில்லாத நிலையால் ஏற்படும் இழப்பில் *90* விழுக்காடு அரசினால் ஈடுசெய்யவும், மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குப் பொறுப்புறுதி வழங்கும் நோக்கத்துடனும், 90 விழுக்காடு இழப்பு பொறுப்புறுதித் திட்டத்தினை *1956*இல் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

*2003-04* ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், இத்திட்டத்திற்காக அடையாள ஒதுக்கீடாக ரூ.*1,000/-* ஒதுக்கப்பட்டுள்ளது.

## 10.04 தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா திட்டம்

மைய அரசு நெசவாளர்களின் நலனையும், கைத்தறியின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு ஒருங்கிணைந்த "தீன்தயாள் ஹத்கர்கா புரோட்சகான் யோஜனா" என்ற புதிய திட்டத்தினை *1-4-2000* முதல் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் அடிப்படை வசதிகள், உள்கட்டமைப்பு வசதிகள், வடிவமைப்பு உள்ளீடு, விளம்பரம், விற்பனை ஊக்கத்தொகை மற்றும் கைத்தறி நிறுவனங்களை வலுப்படுத்தல் போன்ற பல்வேறு இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. மேற்படி நிதியுதவியினை மத்திய மற்றும் மாநில அரசுகள் *50:50* என்ற விகிதாச்சார அடிப்படையில் வழங்குகின்றன.

*2002-03* ஆம் ஆண்டில் மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் ரூ.*472.07* இலட்சத்தினை அனுமதித்து, அதில் முதல் தவணையாக ரூ.*235.53* இலட்சத்தினை விடுவித்துள்ளது. மேலும், *2001-02* ஆம் ஆண்டிற்குரிய இரண்டாம் தவணையான ரூ.*91.59* இலட்சத்தினையும் மத்திய அரசு விடுவித்துள்ளது. ஆகமொத்தம் ரூ.*327.12* இலட்சத்தினை *2002-03* ஆம் ஆண்டில் மத்திய அரசு விடுவித்துள்ளது.

*2003-04*ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தின்கீழ் ஐந்து இனங்களுக்கு (விற்பனை ஊக்குவிப்பு இனம் தவிர) ரூ. *220.01* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2003 மே 7

## 10.05 கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

கூட்டுறவு நெசவாளர்களுக்கென 1975-76 ஆம் ஆண்டு முதல் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நெசவாளர்கள் தாம் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 8 பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாகச் செலுத்தினால், அதற்கு ஈடாக மாநில அரசு தனது பங்காக ரூபாய்க்கு 4 பைசா வழங்குகின்றது. மைய சிக்கன நிதித் திட்டத்தின்கீழ் மைய அரசும், நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ரூபாய்க்கு 4 பைசா வீதம் தனது பங்காக வழங்கி வருகின்றது. மேற்கூறப்பட்ட சந்தா தொகை அரசுக் கருவூலத்தில் செலுத்தப்பட்டு வருகின்றது. இந்தத் தொகைக்கு மாநில அரசு 12 விழுக்காடு வட்டி வழங்கி வருகின்றது. இதில் 7 விழுக்காடு வட்டி நெசவாளர்களுக்கு நேரிடையாக நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மீதி 5 விழுக்காடு வட்டி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம், நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் மற்றும் நல்வாழ்வு செறிவுத் திட்டம் போன்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்த பயன்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தில் 31-3-2003 தேதியில் 75,565 உறுப்பினர்கள் உள்ளனர்.

2003-04 ஆம் ஆண்டில் 3,000 தகுதி வாய்ந்த நெசவாளர்களை இத்திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாகச் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2003-04 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மாநில அரசின் 4 சதவிகித பங்குத் தொகைக்கென ரூ. 280.04 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.06 மைய சிக்கன நிதித் திட்டம்

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திற்கு இணையாக மைய சிக்கன நிதித் திட்டத்தினை 1985-86 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் செலுத்தும் ரூபாய்க்கு 8 பைசா சந்தாவுடன் மாநில அரசுக்கு இணையாக மத்திய அரசும் தனது பங்காக 4 பைசா சந்தா தொகை வழங்குகின்றது. இத்திட்டமானது வைப்பு நிதிக் கணக்கின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவின்கீழ் உள்ள நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர். 2002-03 ஆம் ஆண்டில் மைய சிக்கன நிதித் திட்டத்திற்காக ரூ. 210.00 இலட்சம் மத்திய அரசு வழங்கியுள்ளது.

2003-04 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் மைய நிதித் திட்டத்திற்காக ரூ.290.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2003 மே 7]

## 10.07 கைத்தறி நெசவாளர்கள் குழு/சுய காப்பீட்டுத் திட்டம்

குழு காப்பீட்டுத் திட்டம் 1992-93 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மைய அரசு ஒரு நெசவாளருக்கு ரூ.40/- வீதம் காப்பீடு பிரிமியம் வழங்குகிறது. நெசவாளர்கள் 60 வயதினை அடையும் முன்னர் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு இத்திட்டத்தின்கீழ் காப்பீட்டுத் தொகையாக ரூ.50,000/- மாநில அரசால் வழங்கப்படுவதுடன், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் கருணைத் தொகையாக ரூ. 15,000/- வழங்கப்படுகிறது. குழு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 31-3-2003 தேதியில் 75,665 உறுப்பினர்கள் உள்ளனர்.

2002-03 ஆம் ஆண்டில் 301 நெசவாளர்களின் வாரிசுதாரர்களுக்கு காப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ.150.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2003-04 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 150.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.08 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

தமிழகத்தில் உள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாகவும், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினர்களாகவும் உள்ளவர்களுக்காக, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் என்ற திட்டத்தினை 1-4-1997இல் அறிமுகப்படுத்தி, மாநில அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 60 வயது பூர்த்தியான நெசவாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.200/- வீதம் முதியோர் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட நிதிக்கு வழங்கப்படும் 5 சதவீத வட்டித் தொகையிலிருந்து முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

2002-03 ஆம் ஆண்டிற்கு முதியோர் ஓய்வூதியமாக ரூ.270.00 இலட்சம் மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் 9,027 நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தினை 2003-04 ஆம் ஆண்டிற்கும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2003 மே 7

**10.09 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்**

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கான நலத் திட்டமாக, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் குடும்ப ஓய்வூதியத் திட்டம் என்ற திட்டத்தினை அறிமுகப்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும். இத்திட்டத்தினை 1-1-1992-இல் மாநில அரசு அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திலுள்ள நெசவாளர் 60 வயதிற்கு முன்னர் இறக்க நேரிட்டால் அவரது நியமனதாரருக்கு இத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.350/- வீதம் 10 ஆண்டுகளுக்கு நெசவாளர் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

2002-03 ஆம் ஆண்டில் 458 நெசவாளர் குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.20.00 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஓய்வூதியமானது சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 5 சதவிகித வட்டி தொகையிலிருந்து வழங்கப்படுகிறது.

2003-04 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**10.10 நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம்**

நெசவாளர்களுக்கு தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் 1979-80 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86 ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்தில் மத்திய அரசும் பங்கு பெற்று வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் தறிக்கூடத்துடன் கூடிய வீடு ஒன்று கட்ட வழங்கப்படும் நிதி உதவி விவரம் பின்வருமாறு:—

| விவரம் | கிராமப்புறம் (ரூ.) | நகர்ப்புறம் (ரூ.) |
|---|---|---|
| மாநில அரசு மானியம் | 7,000 | 7,000 |
| மைய அரசு மானியம் | 18,000 | 20,000 |
| ஹட்கோ கடன் | 40,000 | 40,000 |
| பயனாளி பங்கு | 3,000 | 5,000 |
| **மொத்தம்** | **68,000** | **72,000** |



2003 மே 7]

2002-03 ஆம் ஆண்டிற்கு 344 தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டுவதற்கு ரூ. 63.38 இலட்சத்தினை மத்திய அரசு அனுமதித்து அதில் முதல் தவணையாக ரூ. 31.69 இலட்சத்தினை விடுவித்துள்ளது.

2003-04 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. 100.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.11 தறிக்கூடம் அமைக்கும் திட்டம்**

தறிக்கூடத்துடன் கூடிய வீடுகள் கட்டும் திட்டம் நீங்கலாக, நெசவாளர்கள் பணிபுரியும் இடங்களின் சூழலை மேம்படுத்தும் வகையில் நெசவாளர் குடியிருப்புகளில் தறிக்கூடம் அமைக்கும் திட்டத்தினை 1997-98 ஆம் ஆண்டு முதல் 100 சதவிகித மானியத்துடன் மத்திய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் ஒரு தறிக்கூடம் அமைப்பதற்கு வழங்கப்படும் நிதியுதவியின் விவரம்:

| விவரம் | கிராமப்புறம் (ரூ.) | நகர்ப்புறம் (ரூ.) |
|---|---|---|
| மைய அரசு மானியம் | 7,000 | 10,000 |
| பயனாளி பங்கு | 2,000 | 4,000 |
| **மொத்தம்** | **9,000** | **14,000** |

2002-03 ஆம் ஆண்டில் 5,240 தறிக்கூடங்கள் அமைப்பதற்கு ரூ. 377.48 இலட்சத்தினை மத்திய அரசு அனுமதித்து, இதில் முதல் தவணையாக ரூ. 188.74 இலட்சத்தினை விடுவித்துள்ளது.

2003-04 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ.60.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10.12 கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு செறிவுத் திட்டம்**

நெசவாளர்களுக்கு நெசவுத் தொழிலால் ஏற்படக்கூடிய நோய்களுக்கான சிகிச்சை செலவுத் தொகையினை ஈடு செய்யும் வகையில் 1992-93 ஆம் ஆண்டில் மத்திய அரசு நல்வாழ்வு செறிவுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. மாநில அரசும் 2001-02 ஆம்

ஆண்டு முதல் இத்திட்டத்தில் பங்கேற்று மைய அரசால் வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகைக்கு ஈடான தொகையினை வழங்கி வருகிறது. இதற்கானச் செலவினம் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட நிதிக்கு வழங்கப்படும் 5 சதவிகித வட்டித் தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மருத்துவச் செலவினம், கண் பரிசோதனை மற்றும் கண்ணாடி வாங்குதல், மகப்பேறு உதவி, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைக்கான ஈட்டுத் தொகை, குடிநீர் வசதி மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்து வழங்குதல் போன்ற இனங்களுக்காக இத்திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

*2002-03* ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மைய அரசு ரூ. *100.41* இலட்சத்தினை விடுவித்துள்ளது.

*2003-04* ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ரூ. *60.00* இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.13 டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்குதல்

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள கைத்தறி நெசவாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி அவர்களை மேல்நிலைக் கல்வி பயில்வதில் ஊக்குவிக்கும் பொருட்டு டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை *1986* ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இந்த அறக்கட்டளையை நிறுவ கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தமது பொது நிதி மற்றும் பொது நல நிதியிலிருந்து நன்கொடை வழங்கின. இத்தொகை நிரந்தர வைப்பில் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையைக் கொண்டு மேற்படி உதவித் தொகை வழங்குவதற்கானச் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

## 10.14 இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு உதவித் தொகை

சேலத்திலுள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பப் பயிலகத்தினால் நடத்தப்படும் 3 ஆண்டு கைத்தறி தொழில்நுட்பப் பட்டயப் படிப்பிற்கு மாணவ, மாணவியர்களை தேர்வு செய்யும்போது நெசவாளர்களின்



குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. தமிழக அரசு மாணவ, மாணவியர்களுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகை வழங்கி வருகிறது:

முதலாம் ஆண்டு ரூ. *400/-* மாதமொன்றுக்கு

இரண்டாம் ஆண்டு ரூ. *450/-* மாதமொன்றுக்கு

மூன்றாம் ஆண்டு ரூ. *500/-* மாதமொன்றுக்கு

இதனைத் தவிர, அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ரூ.*60/-* புத்தகம் வாங்குவதற்கென மாதமொன்றுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இரண்டாம் ஆண்டு மாணவ, மாணவியர்களுக்கு சுற்றுலா செல்வதற்கு ரூ.*200/-* ஆண்டொன்றுக்கு அளிக்கப்படுகிறது. தற்போது, இந்தக் கல்வி உதவித் தொகை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

## 10.15 சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

கைத்தறித் துணி வகைகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், அயல்நாட்டுச் சந்தையில் கைத்தறித் துணி விற்பனையினை விரிவுபடுத்தவும் தமிழ்நாடு அரசு தமிழ் நாட்டிலுள்ள சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை *1975* ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது.

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கேடயங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்க அரசு இத்திட்டத்திற்கான தொகையை ரூ.*30,000/-*லிருந்து ரூ.*50,000/-* ஆக உயர்த்தியுள்ளது.

*2003-04* ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.*50,000/-* ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 10.16 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

புதிய வடிவமைப்பினை ஊக்குவிக்கும் வகையில் புதிய வடிவமைப்பினை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் அரசால் செயல்படுத்தப்பட்டு

[2003 மே 7

வருகிறது. சிறந்த வடிவமைப்புக்கு கீழ்க்கண்டவாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதல் பரிசு | ரூ.5,000 |
| இரண்டாம் பரிசு | ரூ.3,000 |
| மூன்றாம் பரிசு | ரூ.2,000 |

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலம் எளிதில் விற்பனையாகக்கூடிய இரகங்களில் புதிய வடிவமைப்புகள் கிடைப்பதோடு, ஏற்றுமதிக்கும் புதிய வடிவமைப்புகள் கிடைக்கின்றன. இத்திட்டத்திற்கானச் செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு வளர்ச்சி மற்றும் கல்வி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

## 11. கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

கைத்தறி நெசவாளர்களையும், கைத்தறித் தொழிலையும் விசைத்தறியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாக்க கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985-இல் மத்திய அரசினால் இயற்றப்பட்டு, அனைத்து மாநில அரசுகளால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் அடிப்படையில் 11 இரகங்கள் கைத்தறியில் மட்டுமே உற்பத்தி செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட 11 இரகங்கள் விவரம் பின்வருமாறு:

1. சேலை, 2. வேட்டி, 3. டவல், கம்சா மற்றும் அங்கவஸ்திரம், 4. கைலி, 5. கேஸ், பெட்சிட், பெட்கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் 6. ஜமக்காளம், டர்ரி அல்லது டர்ரட், 7. டிரஸ் மெட்டீரியல், 8. பாரக் பிளாங்கெட், கம்பள் அல்லது கம்பளீஸ் 9. ஷால், லோய், மப்ளர், பங்கி, 10. உல்லன் டுவீடு, 11. சத்தர், மேக்லா/பானக்.

இந்த கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டத்தை முனைப்புடன் தமிழ்நாட்டில் செயல்படுத்த பிரத்தியேக அமலாக்கப்பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு துணை இயக்குநர் / அமலாக்க அலுவலர் அலுவலகமும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உதவி அமலாக்க அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.



2003 மே 7]

## 12. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைத்தல்

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழிலில் பெருமைவாய்ந்த இடம் கொண்டிருந்த கோ-ஆப்டெக்ஸ் தொடர்ந்து அடுத்தடுத்த ஆண்டுகள் நட்டமடையத் துவங்கி தனது ஸ்திரத் தன்மையை இழந்தது. தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உறுதுணையாக இருக்கும் பொருட்டு பிரதான விற்பனை நிறுவனமான கோ-ஆப்டெக்ஸை வலுப்படுத்துதல் அவசியமாகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தோடு பின்னிப்பிணைந்து உள்ளதாலும், நெசவாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கு பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வலுவோடு நிலைத்திருக்க வேண்டியுள்ளதாலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தைச் சீரமைத்தல் அரசின் முக்கியப் பணியாகிறது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் செயல்பாடுகளைச் செம்மையடையச் செய்வதற்கு (அ) விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல் (ஆ) புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதனை விளம்பரப்படுத்துதல், (இ) ஏற்றுமதியை வலுப்படுத்துதல், (ஈ) சரியான அளவில் மனித ஆற்றலை அமைத்தல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மைய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்துகொள்ளும் வகையில் ரூ.50.00 கோடி மதிப்பீட்டிலான திட்டத்தினைச் செயல்படுத்த தேவையான திட்ட அறிக்கையை உருவாக்கித் தர சென்னையிலுள்ள தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம் கோரப்பட்டுள்ளது.

## 13. மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

### அறிவிப்பு [பத்தி எண் 15 (vi)]

"வாழ்வாதாரப் பாதுகாப்பு" அனைவருக்கும் வேலை வாய்ப்பு, தேர்ச்சி பெறாத் தொழிலாளர்களை தேர்ச்சி பெற்ற நிலைக்குக் கொண்டுவருதல், கிராமப்புற பண்ணை மற்றும் பண்ணைசாரா வேலை வாய்ப்பிற்கும் சிறு அளவில் கடன் பெறுகின்ற சிறிய தொழில்களுக்கும் ஒருங்கிணைந்த தனிக் கவனம் செலுத்துதல்;"

**துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

கைத்தறி மற்றும் துணிநூல் துறையானது ஏற்றுமதிக்கு முக்கியத்துவம் அளித்து நெசவாளர்களை ஊக்கப்படுத்தி ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி வருகின்றது. கடந்த 2001-02 ஆம் ஆண்டில் 265 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 15,000-க்கும் மேற்பட்ட தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டு ரூ.146.25 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதியாளர்கள் மூலமாக ஏற்றுமதி (Deemed Export) செய்யப்பட்டது.

இத்துறை தற்போது அதிக அளவு நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி வருகிறது. 2002-03 ஆம் ஆண்டில் 374 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 23,000-க்கும் மேற்பட்ட தறிகள் ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. நெசவாளர்களை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களுக்கு அதிக அளவில் கூலி கிடைப்பதுடன் தொடர்ந்து வேலை வாய்ப்பும் கிடைக்கப்பெறுகின்றது.

2002-03 ஆம் ஆண்டில் ரூ.179.00 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகள் ஏற்றுமதியாளர்கள் மூலமாக ஏற்றுமதி (Deemed Export) செய்யப்பட்டது.

அதிக அளவு தறிகளை ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபடுத்தி 2003-04 ஆம் ஆண்டில் ரூ.200.00 கோடி அளவிற்கு ஏற்றுமதி விற்பனையினை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 14. 2003 ஆம் ஆண்டு ஆளுநர் உரையின் அறிவிப்புகளைத் தொடர்ந்து துறையால் மேற்கொள்ளப்படவுள்ள செயல் திட்டங்கள்

**அறிவிப்பு**

"கைத்தறி இரகங்களின் விற்பனை வாய்ப்புகளுக்கு ஏற்ற நவீனமயமாக்கல் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்."

**செயல் திட்டங்கள்**

* நுகர்வோரின் மாறி வரும் இரசனைக்கேற்ப, அதிக மதிப்புள்ள இரகங்கள் மற்றும் ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்ய, நெசவாளர்களின் தொழில் திறனை மேம்படுத்த, இத்துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதனால், நெசவாளர்களுக்கு அதிகக் கூலி கிடைப்பதுடன், சந்தையில் அதிக அளவில் துணிகளை விற்பனை செய்ய வழிவகுக்கின்றது.



* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் போட்டியிட ஏதுவாக, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணி வகைகளின் தரத்தினை மேம்படுத்த துறை திட்டமிட்டுள்ளது.
* சந்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்பவும், நுகர்வோரின் மாறிவரும் இரசனைக்கேற்பவும், நெசவாளர் சேவை மையம், தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் போன்ற நிறுவனங்களின் உதவியுடன் புதிய வடிவமைப்புகளை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.
* தற்சமயம் மகளிரிடையே சேலை அணியும் பழக்கம் மாறி வருவதால், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய சல்வார் கமீஸ் இரக துணிவகைகளை உற்பத்தி செய்வதற்கு அதிக அளவு தறிகளை மாற்றம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
* உயர் வருவாய் மக்களின் தேவைகளுக்கு ஏற்ற இரகங்களை உற்பத்தி செய்ய துறை திட்டமிட்டுள்ளது.

## 15. 2003-2004 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

"கைத்தறி மற்றும் துணிநூல்" மானியக் கோரிக்கை எண் 16-இன் கீழ், 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.13253.63 இலட்சம் பின்வரும் விவரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

(ரூ. இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| அ. | திட்டம் சேராதது | 3662.38 |
| ஆ | மாநிலத் திட்டம் | 2792.27 |
| இ. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 506.21 |
| ஈ. | மத்திய மற்றும் மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 6170.04 |
| உ. | தலைமைச் செயலக பொருளாதாரப் பணிகள் | 122.73 |
| | **மொத்தம்** | **13253.63** |

[2003 மே 7

### இ. தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை லிமிடெட், காஞ்சிபுரம் ஓர் அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனமாகும். பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தரமான சரிகையை உற்பத்தி செய்து வழங்கும்பொருட்டு 1974 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் நிறுவப்பட்டது. இந்நிறுவனம் சர்வதேச தரச்சான்று 9002 பெற்ற நிறுவனமாகும்.

2002-2003 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் 48,751 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து 54,476 சரிகை மார்க்குகளை விற்பனை செய்து ரூ.29.62 இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது. இந்நிறுவனம் பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து 3,082 சரிகை மாதிரிகளை பெற்று பரிசோதனை செய்துள்ளது.

இந்நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் சரிகையினை வெளிச்சந்தை விலைக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்யவும் சூரத், சரிகை உற்பத்தியாளர்களைச் சார்ந்திருப்பதை பெரும் அளவில் குறைக்கவும், சரிகை உற்பத்திக்கு தேவையான மூல கச்சாப் பொருளான வெள்ளி இழை தயாரிக்கும் பிரிவை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டத்தின் ஒரு முன்னோடித் திட்டமாக என்.எப்.டி.டி.சி., ஐதராபாத் எனும் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் அமைத்துள்ளது. இவ்வெள்ளி இழை தயாரிக்கும் திட்டம் வெற்றியடைந்துள்ளதால் வியாபார நோக்கில் இத்திட்டத்தினை மேற்கொள்ள மத்திய அரசின் விஞ்ஞானம் மற்றும் தொழிலியல் ஆராய்ச்சி துறையின் அனுமதியை எதிர்நோக்கி ரூ.60.00 இலட்சம் மூலதனச் செலவில் கூடுதலாக சிறப்பு நுண்ணிய வெள்ளி இழை இழுவை இயந்திரங்கள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் இந்நிறுவனம் மூல கச்சாப்பொருள் (வெள்ளி இழை) தயாரித்தலில் தன்னிறைவு அடையும்.

இந்நிறுவனம் 1982 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி அரசின் மூலதனப் பங்கிற்கு இலாப ஈவுத் தொகையினை 1990-1991 ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. 2001-2002 ஆம் ஆண்டிற்கான ஈவுத் தொகை ரூ.17.20 இலட்சம் அரசுக்கு வழங்கியுள்ளது.

#### சரிகை ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்

* 2003-2004 ஆம் ஆண்டில் 72,000 சரிகை மார்க்குகளை உற்பத்தி செய்து ரூ.2000.00 இலட்சம் அளவிற்கு விற்பனையை உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.



2003 மே 7]

* 2003-2004 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப அபிவிருத்திக் கழகத்தின் நிதி உதவியுடன் மேலும் 5 சிறப்பு நுண்ணிய வெள்ளி இழுவை இயந்திரங்களை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது.
* மேலும் கூடுதலாக ஐந்து சிறப்பு நுண்ணிய இழை இழுவை இயந்திரங்களை நிறுவி ஐதராபாத்தில் உள்ள என்.எப்.டி.டி.சி. நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியினைப் பெற்று பொறியியல் தொழில்நுட்பத்தினை மேம்படுத்துவதன் மூலம் வெள்ளி இழை உற்பத்தியினை (ஆலையின் சொந்த உற்பத்தி) உயர்த்துவதற்கு தமிழ்நாடு சரிகை ஆலை திட்டமிட்டுள்ளது.

### ஈ. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை கூட்டுறவு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு 1973 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இவ்வாலை தமிழகத்தில் கூட்டுறவு அமைப்பின்கீழ் செயல்படும் ஒரே பதனிடும் ஆலையாகும். இவ்வாலை ஐ.எஸ்.ஓ.9002 சான்றிதழ் பெறுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாலையின் பதனிடும் திறன் மாதம் ஒன்றுக்கு 15.00 இலட்சம் மீட்டர்கள் ஆகும். அரசுத் திட்டமான, பள்ளி குழந்தைகளுக்கான இலவச சீருடைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் துணிகளை இவ்வாலை பதனிட்டு வழங்குகிறது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் வழிகாட்டு நெறிமுறைகளுக்கிணங்க கழிவு நீர் வெளியேற்றும் தொட்டியினை இவ்வாலை அமைத்துள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் இவ்வாலையின் மொத்த வியாபாரம் ரூ.855.20 இலட்சம் ஆகும்.

#### துணிநூல் பதனிடும் ஆலையின் எதிர்காலத் திட்டங்கள்

இவ்வாலை 2003-2004 ஆம் ஆண்டில் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தின்கீழ் கடன் பெற்று ஏற்கெனவே உள்ள பதனிடும் இயந்திரங்களை நவீனப்படுத்துவதற்கு தேவையானத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இவ்வாலை மேலும் ஒரு சாயமிடும் ஜெட் இயந்திரத்தைப் பொருத்தி [illegible] துணிகளுக்கு சாயமிடும் திறனை ஒரு மாதத்திற்கு 5.00 இலட்சம் மீட்டரிலிருந்து 8.00 இலட்சம் மீட்டர் துணிகளாக அதிகப்படுத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

[illegible stamp]

[2003 மே 7

**உ. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்**

நலிவடைந்த மற்றும் மூடப்பட்ட ஆலைகளை ஏற்று நடத்தி புத்துயிர் அளிப்பதையும், விசைத்தறிக்கூடங்கள் நிறுவுவதையும், கூட்டுறவு நூற்பாலைகளுக்குத் தொழில்நுட்ப சேவை வழங்குவதையும், விசைத் தறிக்கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் விசைத்தறித் துணிகளை விற்பனை செய்வதையும் நோக்கமாகக் கொண்டு 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது 3 விசைத்தறிக் கூடங்களையும், ஒரு தானியங்கி விசைத்தறிக் கூடத்தையும், செயலிழந்த சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலையை நிர்வகிப்பதும் இதன் செயல்களாக உள்ளன. இக்கழகம் பொதுத் துறை நிறுவனங்களான இந்திய இரயில்வே, மின்சார வாரியம், போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றுக்குச் சீருடைகளை வழங்கி வருவதுடன் மதிய உணவு திட்டத்தின்கீழ் தேவைப்படும் பள்ளி சீருடை துணி உற்பத்தியையும் நிறைவேற்றி வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.1788.75 இலட்சங்கள் மதிப்பிற்கு விற்பனை மேற்கொண்டுள்ளது.

**ஊ. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்) கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினைச் சீராக்கும்பொருட்டு 1994 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இவ்விணையத்தின் உறுப்பினராகவுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான, தரமான பஞ்சினை, நியாயமான விலையில் பல வெளி மாநில கூட்டுறவு இணையங்கள் மூலமாகவும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும் வாங்கி விநியோகிப்பதே இணையத்தின் முக்கிய நோக்கமாகும்.

கூட்டுறவு நூற்பாலைகள் மிகுந்த நிதி நெருக்கடியில் இயங்கி வந்தமையால், பஞ்சு நிலுவைத் தொகையினை இணையத்திற்கு திருப்பிச் செலுத்த இயலவில்லை. எனவே, 2002-2003 ஆம் ஆண்டில் இணையம் பஞ்சு கொள்முதல் செய்ய இயலவில்லை. இணையம் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவிகளையும் செய்து வருகிறது. மேற்படி சேவைகளுக்காக கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து [illegible] ணமாக 0.5 சதவிகிதம் வசூலிக்கப்படுகிற[illegible]

185015
சென்னை-600 008